



மன மெய்யியல்
ரஹ்மத் ராஜகுமாரன்


PHILOSOPHY OF MIND
RAHMATH RAJAKUMARAN









NOTES-:

IT'S BEST TO USE A PENCIL

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ





இந்த பதிவு முன்னுரையில் முதலில் “மனம் என்றால் என்ன” என்பது பற்றி விரிவாக காணலாம். மனம் குறித்து நிறைய தொடர் பதிவுகள் எழுதி என் தளத்தில் பதிந்துள்ளேன். இருந்தாலும் மன மெய்யியல் என்ற இந்தத் துறையும் சொல்ல வேண்டும் என்று தொடங்கி தொடர் மன மெய்யியல்,

மனம் என்பது இதயத்தில் காணப்படுவதாக பலர் கூறுகின்றனர். ஆனால், அது உண்மையல்ல, மனமானது மூளையுடன் தொடர்புடையது என்கிறார்கள் உளவியலாளர்கள்

நாம் ஐம்புலன்களால் உணர்பவற்றை மூளையே சிந்தித்து மனதின் செயற்பாடுகளை வெளிக்கொண்டு வருகின்றது. இது மூளையுடன் சம்பந்தப்பட்டது என தற்காலத்தில் மூளை நரம்பியல் ஆய்வுகளில் கூட நிரூபிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக மனம் என்பது நம் அனுபவங்கள் மூலமும், சமூக தாக்குதல்கள் மூலமும் மற்றும் நம்முடைய பரிணாம பயணத்தின் மூலமும் வடிவமைக்கப்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

மனமானது நான்கு பணிகளை செய்யும்போது நான்கு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

1. மனம்: சந்தேகம் எழும்போது மனதிற்கு மனம் என்ற பெயர். எதையும் உறுதியாக தீர்மானிக்க இயலாத குழப்பிய மனநிலை இது ஆகும்.

2. சித்தம்: பார்த்தவைகள், கேட்டவைகள், உணர்ந்தவைகள் என வாழ்க்கையில் பெறுகின்ற அனுபவங்கள் அனைத்தும் பதிவுகளாக மனதில் சேமிக்கப்படுகிறது. அந்த சேமிப்பு நிலையமாக திகழும் மனது சித்தம் எனப்படுகிறது.

3. புத்தி: ஒரு விடயத்தில் குழம்பிய நிலையில் உள்ள, சேமிப்பு நிலையமான சித்தத்தில் உள்ளவற்றை கொண்டு தெளிவடைதல். ஒருவேளை சித்தத்தில் தகவல் ஏதும் இல்லையென்றால், எவ்வாறு அந்த விடயத்தில் தெளிவடையும் மனமே புத்தி ஆகும்.

4. அகங்காரம்: மேற்கூறிய மூன்று படிநிலைகளின் மூலமாக ஒருவரை அல்லது ஒருப்பொருளை அறியும்போது அதாவது நான் என்ற உணர்வாக நிகழும்போது மனம் அகங்காரம் எனப்படுகிறது.

நவீன மனவியலாளர்கள் மனதை இன்னும் கூட விரிவாக சொல்லப்பட வேண்டி உருவாக்கப்பட்ட தத்துவம்தான் "மன மெய்யியல் " என்பது மனதின் தன்மை, மனம் சார்ந்த தொடர்புகள், மனச்செயற்பாடுகள், மனப்பொருள், நனவு நிலை மற்றும் பௌதீக உடல், மூளை இவற்றுக்கிடையேயான உறவுப் பற்றி கற்கும் மெய்யியலின் ஒரு பகுதி ஆகும்.

உளவியல் அல்லது மனோதத்துவம் சமூக அறிவியற் துறைகளுள் ஒன்றாகும். உளவியற் செயற்பாடுகள், நடத்தைகள் ஆகியவை பற்றிய அறிவியற் கல்வி ஆகும்.

மன அழுத்தம் என்பது :நமது தினசரி வாழ்க்கையில் ஒரு மாற்றத்தையே அல்லது நாம் சமாளிக்கும் திறமைக்கு சவாலாக மனதில் ஏற்படுகின்ற விரும்பத்தகாத உணர்வு மன அழுத்தம் எனப்படும்.

மன அழுத்தத்தின் வெளிப்பாடுகள் :--

கோபம்

பயம்

வெறுப்பு

கவனமின்மை

கவலை

சந்தேகம்

மன அழுத்தத்திற்கான காரணிகள்

வாழ்வில் திடீரென ஏற்படும் எதிர்மறையான மாற்றம்.

நிர்ப்பந்தம்.

முரண்பாடுகள்.

கௌரவம்.

ஒப்பிடும் மனப்பான்மை.

எதார்த்தமில்லாத இலக்குகள்.

உறவு முறைகளில் விரிசல்.

ஒன்றுக்கு மேற்பட்ட ஆசைகள்.

மன அழுத்தத்தை குறைக்கும் வழிகள்

செய்யும் தொழிலை முழு ஈடுபாட்டுடன் செய்தல்.

அடுத்தவர் உணர்வுகளை மதித்தல்.

சுய ஒழுக்கம்.

தியானம்.

திறந்த மனதோடு ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை.

எளிதில் கோபப்படாதிருத்தல்.

சுயநலமின்றி செயற்படுதல்.

நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்ளல்.

இசைப் பாடல்களை இரசித்தல்.

இத்தனையும் கலந்து சொல்வதற்கு ஏதுவாக முன்னாள் நாம் படித்த சூஃபிக் கதைகள், நீதிக்கதைகள், தென்னாலி ராமன் கதைகள், நன்னெறி கதைகள், முல்லா நசிருத்தீன் கதைகள், ஜக்கிவாசுதேவ், சுகபோனந்தா, ஓஷோ போன்ற இன்னும் நிறைய புத்தகங்கள், .. (படத்தை பார்க்கவும்) (லைப்ரரியில் எடுத்த புத்தகங்கள் படத்தில் காட்டப்படவில்லை).போன்ற புத்தகங்களில் சொல்லப்பட்ட கதைகளை இஸ்லாமிய

விளக்கத்துடன் சொல்ல வேண்டும் என்ற காரணத்திற்காக புஹாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களையும் பயன்படுத்தி, மனமெய்யியல் பதிவின் ஒவ்வொன்றிலும் இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகளை சொல்லி அநேக கட்டுரைகளை நிறைவு செய்துள்ளேன்.

இந்த சின்ன சின்ன புத்தகங்களையெல்லாம் ரயிலில், பஸ்ஸில் பிரயாணம் போகும்போது, நான் உட்கார்ந்து இருக்கும் இருக்கைக்கு தேடி வந்து பெரிய புத்தகக் கட்டை கொண்டுவந்து தருவார்கள்.


விலை ரூ 10 க்கு நான் விரும்பி தேர்ந்தெடுத்த இப்புத்தகங்கள்தான் அநேக எனது தொடர் பதிவுகளுக்கு உதவியிருக்கின்றன. அதே மாதிரி இந்த மெய்யியல் தொடர்பதிவுகளுக்கு இவைகள் ஏகமாக உதவியதில் அதை விற்பனை செய்த அந்த முகமறியாத அந்த சிறுவர்களை நன்றியுடன் இத்தருணத்தில் நினைவு கூறுகிறேன்.

ரஹ்மத் ராஜகுமாரன்

CALL - 9443446903
9360181033

மன மெய்யியல் **1**

(மனம் வாயிலாக பதிவு செய்யும் உடல் !)



உடல் என்பது எலும்பும் சதையும் ரத்தமும் நரம்பும் மட்டுமல்ல. மனத்தின் தன்மை ஒவ்வொரு உடல் அணுவிலும் உறைந்து இருப்பவை. இதைத்தான் மன மெய்யியல் என்கின்றனர்

எல்லா உடல் நோய்களுக்கும் மனம் ஒரு பெரும் காரணம் என இன்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்து வருகிறார்கள். மனத்தின் பங்கு இல்லாமல் உடலில் எதுவும் நிகழாது என்று கூறலாம். அது நேரடியாகவோ மறைமுகமாகவோ இருக்கலாம். முழுமையாகவோ குறைவாகவோ இருக்கலாம். நிச்சயம் மனத்தின் பங்களிப்பு உண்டு.

இதை Placebo Effect என்று சொல்வார்கள் அதாவது வெறும் தண்ணீரை மிக வீரியம் மிக்க மருந்து என்று கூறிக் கொடுக்கும் போது நோய் சரியாவதைப் பல முறை நிரூபித்துள்ளார்கள்.

அதேபோல நோய் பயத்தினாலும் எதிர்மறையான அணுகு முறையாலும் நல்ல சிகிச்சை கூடப் பலன் அளிக்கத் தாமதமாகிறது. இதை Nocebo Effect என்பார்கள்.

நம்பிக்கை சார்ந்த மாற்று சிகிச்சை முறைகள் எல்லாமும் முதலில் நோயாளியை மனதளவில் நன்கு போஷிக்கின்றன. பெரும் ஆறுதல் வார்த்தைகள் அங்கு அளிக்கப்படுகின்றன. ஆழ்மன அளவில் நோய் சரியாகும் என்ற நம்பிக்கையை விதைக்கின்றன.

இவ்வாறு பலன் அடைந்தவர்களின் சாகசக் கதைகளைக் காண வைக்கின்றன. இவை அனைத்தையும் மனம் வாயிலாக உடல் பதிவு செய்து கொள்கிறது.

அதனால்தான் நம் மேல் மனத்தில் தர்க்கரீதியாக ஒப்புக்கொள்ள முடியாத வழிமுறைகளைக்கூட, ஆழ்மன நம்பிக்கைகள் மூலம் ஒப்புக்கொள்கிறோம். அதன் பலன்களை உணரும்போது தர்க்கத்தைக் கழற்றி வைத்துவிட்டு நிவாரணத்தை மட்டும் ஏற்றுக்கொள்கிறோம்!

இதற்கு நேரெதிரான ஒன்றையும் அடிக்கடி பார்க்கிறோம். பெரும்பான்மையோருக்கு வெற்றிகரமாக நிவாரணம் தரும் ஒரு மருத்துவச் சிகிச்சை கூடச் சிலருக்குப் பலன் அளிப்பதில்லை. அதனால்தான் எந்த வைத்தியரும் எந்த நோய்க்கும் உறுதியான வாக்குறுதி தருவதில்லை.

காரணம் உடல் என்பது எலும்பும் சதையும் ரத்தமும் நரம்பும் மட்டுமல்ல. மனத்தின் தன்மை ஒவ்வொரு உடல் அணுவிலும் உறைந்து இருப்பவை. மனம் அந்த மருந்தை குணமாக்கும் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும்.

உணர்வின் தன்மையால் உடல் எப்படியெல்லாம் மாறும் என்பதற்கு வைத்தியச் சான்றுகள் எல்லாம் தேவையில்லை. தினசரி வாழ்க்கையில் ஆயிரம் அனுபவங்களை நாமே காண்கிறோம். நல்ல பசியுடன் சாப்பிடும்போது சாம்பாரில் செத்த பல்லி கிடப்பதாகச் சொல்கிறார் நண்பர். குடலைப் புரட்டிக் கொண்டு வாந்தி வருகிறது. பின்னர் நண்பர் ‘எல்லாம் கிண்டலுக்கு’ என்று ஆயிரம் சொல்லியும் உணவு உண்ண முடியவில்லை.

நெருங்கிய உறவினர் இறந்தவுடன் இரவு முழுக்கத் தூக்கமில்லை. இப்படி ஒவ்வொரு உணர்வும் உடலை மாற்றி அமைத்துக்கொண்டே இருக்கின்றன. மகிழ்ச்சி உடலை இலகுவாக்குகிறது. அழுத்தமும் நெருக்கடியும் உடலை நோய்களுக்குத் தயார்படுத்துகின்றன.

உணர்வுகள் நோய்களைக் உருவாக்குகின்றன என்பது உண்மை என்றால், அந்த நோய்களை குணப்படுத்தும் ஆற்றலும் உணர்வுகளுக்கு உண்டு என்பது உண்மைதானே! அப்படி என்றால் உடல் தன்மையைச் சீராக்க அதற்கேற்ற உணர்வு நிலைகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

உணர்வுகளைத் தோற்றுவிக்கும் எண்ணங்களை தேர்ந்தெடுத்து கையாள வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், மனம் ஏற்படுத்தும் சேதாரத்தை மனத்தைக் கொண்டே நிவர்த்தி செய்துகொள்ள முடியும். இந்தச் சுயச் சிகிச்சைக்கு மனப் பயிற்சி அவசியமாகிறது.

இறைவன் பத்ரு யுத்தகளத்தில் மன உணர்வை யுக்தியாக பயன்படுத்தி இறை நம்பிக்கையாளர்களுக்கு வெற்றி தருகிறான்.

اِنَّ فِىْ ذٰ لِكَ لَعِبْرَةً لِّاُولِى الْاَبْصَارِ قَدْ كَانَ لَـكُمْ اٰيَةٌ فِىْ فِئَتَيْنِ الْتَقَتَا فِئَةٌ تُقَاتِلُ فِىْ سَبِيْلِ اللّٰهِ وَاُخْرٰى كَافِرَةٌ يَّرَوْنَهُمْ مِّثْلَيْهِمْ رَاْىَ الْعَيْنِ وَاللّٰهُ يُؤَيِّدُ بِنَصْرِهٖ مَنْ يَّشَآءُ

(போர்க்களத்தில்) சந்தித்துக் கொண்ட இரு கூட்டத்தினரிலும் திட்டமாக (உங்கள் குறைவான கூட்டம் தோல்விக்குரிய) அடையாளமாக உங்களுக்கிருந்தது.

(அவ்விரு கூட்டத்தினரில் உண்மை விசுவாசிகளாக உங்கள்) ஒரு கூட்டத்தினர், அல்லாஹ்வின் பாதையிலும், மற்றொன்று நிராகரித்துக் கொண்டிருக்கும் கூட்டத்தினர்; (முஸ்லிம்களை எதிர்த்தும்) போரிட்டுக் கொண்டிருந்தனர்,

(நிராகரித்துக் கொண்டிருந்தோர்) அவர்களை (முஸ்லிம்களை)த் தங்களை விட இரு மடங்காகக் கண் பார்வையால் கண்டனர். அன்றி, அல்லாஹ், தான் நாடியவரை தனது உதவியைக் கொண்டு பலப்படுத்துகின்றான். (அகப்) பார்வையுடையவர்களுக்கு இதில்

நிச்சயமாக உணர்வுப் படிப்பினை உண்டு (குர்ஆன் : 3:13)

மன மெய்யியல் 2

(டென்ஷன்)



இன்றைய காலச்சூழ்நிலையில் மனிதன் இயற்கை சார்ந்த வாழ்வியலைத் தொலைத்துவிட்டு, இயந்திர கதியில் இயங்கிக் கொண்டிருக்கின்றான். இந்த வேக வாழ்வின் விளைவாக மனிதனுக்கு கிடைத்தவை- சோர்வு, சோகம், எரிச்சல், கோபம்.இதற்கு ‘டென்ஷன்’, ‘டிப்ரஷன்’, ‘மனஉளைச்சல்’ என்று உளவியல் வல்லுனர்கள் பெயரிட்டு வகைப்படுத்துகின்றனர்.

ஒருமுகப்படுத்தப்படாத சிந்தனைகளால் இயல்பு நிலைமாறி மனம் அலைபாயத் தொடங்கும். இதனால் அட்ரனலின் என்ற சுரப்பி அதிகமாக சுரக்கத் தொடங்கும். சரியாய் இயங்கிக் கொண்டிருந்த மூளை இதனால் தடுமாறத் தொடங்கும். மூளையின் மாறுபட்ட செயலால் நரம்பு மண்டலங்களிடையே கட்டளைகள் சரிவர கிடைக்கப் பெறாமல் நரம்பு தளர்ச்சியும் உண்டாகிறது.

நரம்புகள் விம்மிப் புடைக்கும் அளவுக்குச் சில நிகழ்ச்சிகள் நம்மை டென்ஷனாக்கி விடுகின்றன சமயத்தில் படபடப்பு உச்சக்கட்டத்துக்குப் போய் கைகால்களெல்லாம் உதற ஆரம்பித்து விடுகின்றன! எல்லாவற்றுக்கும் காரணம் டென்ஷன் !

ஒரு போாசிரியர் ஒருவர் மாற்றலாகி வேறு ஊரிலிருக்கும் கல்லூரிக்குப் போகிறார்.

அவரை வழி அனுப்புவதற்காக அவருடன் பணிபுரியும் நான்கு பேராசிரியர்களும் ரயில் நிலையத்துக்கு வந்திருக்கிறார்கள். ரயில் புறப்பட கொஞ்சம் நேரம் இருக்க.. பேராசிரியர்கள் -பிளாட்பாரத்தில் நின்று ஜாலியாகப் பேச ஆரம்பிக்கிறார்கள்.

பேச்சு -சுவாரஸ்யத்தில் ரயில் நகர ஆரம்பித்துவிட்டதையும் அவர்கள் கவனிக்கவில்லை சடாரெனப் படபடப்பு வந்துவிடுகிறது. 'எந்த கம்பார்ட்மெண்ட்டில் ஏறினாலும் பரவாயில்லை... அடுத்த ஸ்டேஷனில் சரியான கம்பார்ட்மெண்ட்டுக்கு வந்துவிடலாம்' என்று நெரிசலில் முட்டிமோதி நான்கு பேராசிரியர்கள் எப்படியோ ரயிலேறி விடுகிறார்கள்.

ஆனால், கையில் பெட்டி படுக்கையுடன் இருந்த ஒரு பேராசிரியரால் மட்டும் ரயிலில் ஏற முடியவில்லை! அவரைப் பார்த்துப் பரிதாபப்பட்ட போர்ட்டர் ஒருவர், "கவலைப்படாதிங்க ஸார்! பத்து நிமிடத்தில் இன்னும் ஒரு ரயில் இருக்கிறது. அதிலே நீங்கள் போய்விடலாம்" என்று ஆறுதல் வார்த்தைகள் சொல்கிறார்.

அதற்கு அந்தப் பேராசிரியர், "அடுத்த பத்து நிமிடத்தில் இன்னொரு ரயில் இருப்பது எனக்குத் தெரியும். ஆனால், நான் என்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. என் சக பேராசிரியர்களை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது.

காரணம், அவர்கள் என்னை வழியனுப்ப வந்தவர்கள். ஆனால், இங்கே ஏற்பட்ட அமளி துமளியில் அவர்கள் ரயிலில் ஏறிவிட்டார்கள் பயணிக்க வேண்டிய நான் பிளாட்பாரத்தில் நிற்கிறேன் !" என்றார்.

இப்படித்தான் படபடப்பும் டென்ஷனும் சாதாரண விஷயங்களைக் கூட நம் கண்ணிலிருந்து மறைத்து விடுகின்றன! நாம் பதட்டத்தில் இருக்கும்போது, எத்தனை கஷ்டப்பட்டு ஒரு வேலையைச் செய்தாலும் சரி, அதனால் ஏற்படும் பலன் பெரும்பாலும் பூஜ்யமாகத்தான் இருக்கும்!

இந்த மன அழுத்தங்களுக்கெல்லாம் திருக்குர்ஆன் மிக அழகிய தீர்வுகளைச் சொல்லித்தருகிறது. முதலாவதாக தொழுகையைச் சொன்னது:

‘எத்தகைய கஷ்டத்திலும் நீங்கள் பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள்’ குர்ஆன் (2:45).

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த பிரச்சினை வந்தாலும் தொழுகையை நோக்கி விரைந்து வருவார்கள்.

பத்ர் யுத்தம், மிக சொற்பமான வீரர்கள். போதுமான ஆயுதங்கள் இல்லை. இருக்கிற ஆயுதமும் பழுதுபட்டது. எதிர்கொள்ள வேண்டியது மிக பலம் பொருந்திய வீரர்கள் நிரம்பிய எதிர் படை. தோற்றால் இஸ்லாம் மொத்தமாக அழிந்துவிடும் ஆபத்து.

எத்தனை மன உளைச்சல் மாநபிக்கு. கலக்கம் கொள்ளவில்லை. அன்று இரவு முழுவதும் நின்று தொழுதார்கள். இறைவன் அருளால் சூரியன் உதித்தான்; இன்னல்கள் அகன்றன. இஸ்லாம் இவ்வுலகம் முழுவதும் ஒளி சிந்தி மிளிர்ந்தது.

தொழுகையைத் தொடர்ந்து துஆவை கற்றுத் தருகிறது திருக்குர்ஆன். பிரச்சினைகள் இல்லாதவன் என்று ஒருவனுமே இல்லை. எல்லோருக்கும் அவரவர் சக்திக்கு ஏற்றார் போல் பிரச்சினைகளின் அளவுகள் உள்ளன. ஆனால் அந்த பிரச்சினைகள் பகிரப்படாமல் ஒன்றன் மேல் ஒன்று படியத் தொடங்கும்போது மன அழுத்தம் மேலோங்குகிறது.

‘உண்மை தான். ஆனால் என்னுடைய பிரச்சினைகளை யாரிடம் சென்று பகிர்ந்து கொள்வது? உறவினரா?, நண்பனா? அங்கே அவனுக்கே ஆயிரம் பிரச்சினைகள் இருக்கிறதே?’.

அதற்கு அல்லாஹ் சொல்கின்றான்: ‘என்னிடம் வாருங்கள் என்று’.

இரவின் கடைசி பகுதியில் கீழ்வானத்தில் வந்து அல்லாஹ் மனிதர்களிடம் சொல்கிறான்...

‘என்னிடம் வாருங்கள், உங்கள் துக்கங்களைச் சொல்லுங்கள், உங்களுக்கு வேண்டியதை கேளுங்கள், அள்ளித் தர நான் காத்திருக்கிறேன். என் கஜானா என்றுமே குறைந்து விடுவதில்லை. ஆரோக்கியம் வேண்டுமா ? ஐஸ்வர்யம் வேண்டுமா ? எல்லாம் என் வசமே. கேளுங்கள் தருகிறேன்’ என்கின்றான்.

அந்த அல்லாஹ்விடம் நம் இரு கைகளை ஏந்தி கேட்பதன் மூலம் நம் மனக்குறைகளை ஒப்படைப்போம். அவன் மனநிம்மதியைத் தருவான். அல்லாஹ்விடம் பகிர்ந்து கொள்ளும் போது பரிகாரம் நிச்சயம் உண்டு.

அடுத்து திருக்குர்ஆன் கூறுகிறது:

‘நேர்வழி பெறும் அவர்கள் எத்தகையோர் என்றால் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள். மேலும் அல்லாஹ்வை நினைவு கூர்வதால் அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன. அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டு தான் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்க’ (13:28).

அல்லாஹ்வை 'திக்ரு' செய்யுங்கள். இதயங்கள் அமைதி பெறும். மன அழுத்தங்கள் குறைய மனிதன் எந்த நிம்மதியை, அமைதியை நாடுகின்றானோ அது இருக்கும் இடத்தை அடையாளம் காட்டும்.

அல்லாஹ்வை 'திக்ரு' செய்தல் என்பது இறைவனை துதித்தல், தியானித்தல், நினைவு கூர்தல், அவனிடம் வேண்டுதல் என்ற பல பொருளில் வரும். எந்தப் பெயரில் அழைத்தாலும் 'திக்ர்' என்ற இதயத்தின் உயிரோட்டம், மனிதனை அல்லாஹ்விடம் நேரடித் தொடர்பில் கொண்டு சேர்க்கும். அல்லாஹ்வின் நினைவுகளால் நிரம்பிய நெஞ்சில் மன அழுத்தத்திற்கு எங்கே இடம் இருக்கும்?

ஒரு கூட்டம் அல்லாஹ்வை திக்ரு செய்வதற்காக அமர்ந்துவிட்டால் வானவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்வார்கள். அல்லாஹ்வின் அருள் அங்கே பொழிய ஆரம்பிக்கும். அல்லாஹ்வும் அவர்களை நினைவு கூர்வான். (முஸ்லிம்)

எனவே குர்ஆனை சிரத்தையோடு ஓதுங்கள். மனங்களில் நிம்மதி நிறைவதை உணர்வீர்கள். நாளை மறுமையில் அல்லாஹ்வின் அர்ஸின் நிழல் கிடைக்கும். நிம்மதி மட்டும் கிட்டிவிட்டால் மனங்கள் பேதலிக்க வழியே இல்லாமல் ஆகிவிடும்.

மன மெய்யியல் 3

(மனோதிடம்)



நமது அறிவு என்பது ஓர் எறும்பு என்றால், உலக வாழ்க்கை யானை போன்றது. யானையின் காலுக்கடியில் கிடக்கும் எறும்பால் யானையை என்றுமே முழுமையாகப் பார்த்துவிட முடியாது! யானையின் ஒரு பகுதியைத்தான் பார்க்க முடியும்.

அதுபோல எறும்பின் பார்வையைப் போல நமது அறிவு கூர்மையானதாக இருக்கலாம். ஆனால், வாழ்க்கையில் இருக்கும் அத்தனை புதிர்களுக்கும் நம் அறிவைக் கொண்டு மட்டும் விடை தேடிவிட முடியாது!

இப்படிச் சொல்வதால் யார் நம்மை மிதித்தாலும், உதைத்தாலும், 'மிதியடியைப் போல சும்மா இருக்க வேண்டும்' என்று அர்த்தம் அல்ல. ஆங்கிலத்தில் Assertive என்று ஒரு வார்த்தை உண்டு இல்லையா? இந்தக் குணம் உடையவர்கள். தனது உரிமைகளை விட்டுக் கொடுக்கமாட்டார்கள். தனது அதிகாரத்துக்கும் உரிமைக்கும் உட்பட்ட பகுதிகளை அந்நியர்கள் ஆக்கிரமிப்பதை ஏற்கமாட்டார்கள்.

நாம் இந்தக் குணத்தோடுதான் இருக்க வேண்டும். என்ன சோதனைகள் வந்தாலும் எதிர்கொள்ள வேண்டும். ஆனால், அந்தப் போராட்டத்தின் முடிவு எப்படிப்பட்டதாக இருந்தாலும் 'இதுதான் வாழ்க்கை! இதுதான் உலகம்' என்று ஏற்றுக்கொள்கிற பக்குவம் வத்துவிட்டால் 'எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது?" என்ற கேள்வி எழாது. சுயபச்சாதாபம் வராது- துயரத்தின் வேதனை தாக்காது!

வாழ்க்கை என்பது என்ன? வாழ்க்கை என்பது ஓர் அனுபவம். ஆளுக்கு ஆள் மாறுபடும். சுகமோ துக்கமோ அனுபவம் நம்மை பலப்படுத்துகிறது. காயப்படுத்துகிறது. சிரிக்க வைக்கிறது. அழவைக்கிறது. முடிவில் இதில் வாழ்க்கை எது என்று சிந்திக்க வைக்கிறது.

இறைவனால் இவ்வுலகில் படைக்கப்பட்ட மற்ற ஜீவராசிகளுக்கு வாழ்க்கையை பற்றிய ஆராய்ச்சி எதுவுமில்லை. விலங்குகள் தற்கொலை செய்து கொள்வதுமில்லை. காரணம் அவைகளுக்கு முடிவை பற்றிய பயமில்லை. அந்த வகையில் அறியாமை ஒரு வரம்.

தான் அறிவாளி என்று கர்வப்படும் மனிதனால் வாழ்க்கையில் ஜெயிக்க முடிவதில்லை. காரணம் அறிவு மட்டும் வாழ்க்கைக்கு போதாது. அதற்கு மேலும் ஒன்று தேவைப்படுகிறது.

அது என்ன..? தன்னம்பிக்கை மனோபலம் உள்ளவனுக்கு மட்டுமே அது சாத்தியமாகும்.

வாழ்க்கையை பற்றி தீர்மானமான விளக்கம் எதுவும் இல்லாவிட்டாலும், வாழ்க்கையின் பிரச்சினைகளுக்க மனோபலம் ஒன்று மட்டுமே தீர்வாக அமைகிறது. ஒவ்வொருவரின் வாழ்க்கை அனுபவங்களே அவர்களின் வழிகாட்டி அனுபவங்களிலிருந்து அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படி கற்றுக் கொண்டவன் ஜெயிக்கிறான். கற்றுக் கொள்ளாதவன் தவிக்கிறான்.

ஒரு ஜெர்மனிய பழமொழி, "அனுபவம் என்ற பள்ளியில் மூடன் எதையும் கற்றுக் கொள்ளமாட்டான்"என்கிறது. அப்படி கற்றுக் கொள்ளாதவரை வாழ்க்கை அவனுக்கு வசப்படாது"

' எனக்கு ஒரு பிரச்சனை '

என்று ஒருபோதும் சொல்லாதீர்கள்

பிரச்சனை என்று சொன்னால் ,

கவலையும், பயமும்

கட்டாயம் வரும்.

' எனக்கு ஒரு சவால் '

என்று சொல்லிப் பாருங்கள்

தைரியமும், தன்னம்பிக்கையும்

தானாகவே வரும்.

நபி (ஸல்) அவர்கள் மக்களிலேயே அழகானவர்களாகவும் மக்களிலேயே வீரமிக்கவர்களாகவும் மக்களிலேயே தாராள மனமுடையவர்களாகவும் இருந்தார்கள்.

“(ஒரு முறை, மதீனாவின் மீது பகைவர்கள் படையெடுத்து வருகிறார்கள் என்று வதந்தி பரவவே) மதீனாவாசிகள் பீதிக்குள்ளானார்கள். அப்போது அவர்களை நபி (ஸல்) அவர்கள் முந்திச் சென்று, குதிரையில் ஏறி (மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் எதிரியை எதிர்கொள்ளப்) புறப்பட்டார்கள்;

மேலும், “இந்தக் குதிரையைத் தங்கு தடையின்றி வேகமாக ஓடக் கூடியதாகக் கண்டேன்” என்று கூறினார்கள்.
- அனஸ் பின் மாலிக் (ரலி), நூல்: புகாரி-2820

அந்த நிலையை அடைய இந்தப் பிரார்த்தனை உங்களுக்கு உதவலாம்:

'ஆண்டவா! என்னால் எதையெல்லாம் மாற்ற முடியுமோ அதை மாற்றக்கூடிய வலிமையை எனக்குக் கொடு!

என்னால் மாற்ற முடியாதவை எவை என்று கண்டுகொள்கிற அறிவை எனக்குக் கொடு!

என்னால் மாற்ற முடிந்தது. மாற்ற முடியாதது - இவை இரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பகுத்தறிந்து புரிந்து கொள்கிற பக்குவத்தை எனக்குக் கொடு!"

மன மெய்யியல் 4

(இன்பமும், துன்பமும் இரண்டற கலந்ததுதான் வாழ்க்கை)



துன்பம், மகிழ்ச்சி இந்த இரண்டுமே ஒன்றுதான்! மகிழ்ச்சி எப்படி ஓர் அனுபவமோ, அதேபோல் துயரமும் அனுபவமே! ஆனால், மனதிலே அமைதியும் தெளிவும் இல்லாத மனிதர்களுக்கு மகிழ்ச்சி கூடச் சோகமானதாகப் போய்விடும்!

அவர் நடுத்தரப் பிரிவைச் சேர்ந்தவர். அவருக்கு ஆறு பெண்கள்! எல்லோருமே கல்யாண வயதை அடைந்தவர்கள். 'ஆறு பெண்களுக்கும் எப்படித் திருமணம் செய்து வைப்பது..?' என்று கவலைப்பட்டுக் கவலைப்பட்டே அவருக்கு ஒரு நாள் மாரடைப்பு வந்துவிடுகிறது. அவரை மருத்துவமனையில் சேர்க்கிறார்கள்,

அந்த நேரம் பார்த்து, அவர் வாங்கி வைத்திருந்த ஒரு பரிசுச் சீட்டுக்குப் பத்து லட்ச ரூபாய் விழுகிறது! இந்த மகிழ்ச்சியான செய்தியை அவரிடம் சொன்னால், அவருக்கு மீண்டும் மாரடைப்பு வந்துவிடுமோ' என்று பயந்த மனைவி, டாக்டரிடம் இந்தச் செய்தியைத் தன் கணவரிடம் பதமாகச் சொல்லச் சொல்கிறாள்!

டாக்டர், மனோதத்துவ முறையில் காஷுவலாக அவளது கணவரிடம் பேச்சை ஆரம்பிக்கிறார்.

"உங்களுக்கு லாட்டரியில் ஒரு லட்சம் பரிசு விழுந்தால் என்ன செய்வீர்கள்...?"

"நான் என் மூத்த பெண்ணுக்குத் திருமணம் செய்துவிடுவேன்."

"சரி, இரண்டு லட்சம் விழுந்தால்.?"

"இரண்டாவது பெண்ணுக்கும் கல்யாணம் முடித்து விடுவேன்.."

"சரி.. பத்து லட்சம் விழுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்!"

"எனக்கெல்லாம் எங்கே டாக்டர் பத்து லட்சம் விழும்.? அப்படி ஒருவேளை விழுந்தால், சத்தியமாக உங்களுக்கு இரண்டு லட்சம் தந்துவிடுவேன்!"

எதிர்பாராத இந்த இன்ப அதிர்ச்சியில் டாக்டருக்கு ஹார்ட் அட்டாக் வந்து இறந்துவிட்டார்!

மகிழ்ச்சி எப்படி ஒரு சுவையோ, அதேமாதிரி துயரமும் ஒரு சுவை! இந்தச் சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்வது கஷ்டமாகக்கூட இருக்கலாம்!

நான் சிறுவனாக இருந்தபோது என் அம்மா, பாகற்காயை விரும்பிச் சாப்பிடுவார். அப்போது, கசப்பான ஒரு பொருளை அம்மா எப்படி ரசித்துச் சாப்பிடுகிறார் என்று எனக்கு ஒரே குழப்பம்...

ஆனால், மனதுக்குப் பிடித்துவிட்டால் இனிப்பு என்பது எப்படி ஒரு சுவையோ, அதேபோல கசப்பும் ரசிக்கக்கூடிய ஒரு சுவைதான் என்பதை இப்போது உணர்ந்துகொண்டேன்!

சிறுபிள்ளையாக இருக்கும்போது, 'இனிப்பு ஒன்றுதான் சுவை, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு எல்லாம் சுவை இல்லை' என்று நமக்கு நாமே முடிவெடுத்துக்கொண்டு, சிந்தனையின் கதவுகளை மற்ற சுவைகளுக்கு இடம் தராமல் எப்படி மூடிவிடுகிறோமோ அதேமாதிரிதான் இந்த விஷயமும்.

மகிழ்ச்சி மட்டும்தான் நல்ல உணர்ச்சி, மற்றது எல்லாம் வெறுக்கத்தக்க உணர்ச்சிகள் என்று எண்ணி, வாழ்க்கையில் நாம் அநேக உணர்ச்சிகளுக்குக் கதவைத் திறப்பதில்லை!

வலிகள் இல்லா வாழ்க்கை ஏது ?

வழிகள் இல்லா வலிகள் ஏது ?

ஆனால் இறைவன் இன்பமும் துன்பமும் நிறைந்ததுதான் மனித வாழ்க்கை என்று திருக்குர்ஆனில் இறைவன் 'துன்பத்துடன் இன்பம்

துன்பத்துடன் இன்பம் ' என்று திருப்பித் திருப்பி இரண்டு தடவை அழுத்தம் திருத்தமாக சொல்கிறான் என்றால் இது சிந்தைக்குரிய விஷயம்தானே !

فَإِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا ۙ

ஆதலின் நிச்சயமாகத் துன்பத்துடன் இன்பம் இருக்கிறது.

(அல்குர்ஆன் : 94:5)

اِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا

நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது.

(அல்குர்ஆன் : 94:6)

சில பல ஏற்ற இறக்கங்களை கண்டதும் வாழ்க்கை முடிந்து போனது போல் உடைந்து போகாதே ! தண்ணீர் தடையை கண்டதும் புதிய தடத்தை அது உருவாக்கி விடுகிறது !

எவரும் வாழ்நாள் முழுவதும் இன்பமாகவே வாழ்ந்தார் என்று வரலாறு கிடையாது. அல்லது ஒருவர் ஆயுள் முழுவதும் துன்பமாகவே வாழ்ந்தார் என்ற சரித்திரமும் கிடையாது.

மனித வாழ்க்கை ஒரு புத்தகத்தைப் போன்றது. ஒரு பக்கம் துன்பமும், மறுபக்கம் இன்பமும் நிறைந்தது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று மனிதனுக்கும் இன்பம்-துன்பம் என இரு பக்கங்கள் உண்டு.

இன்பமே இல்லாத வாழ்க்கை நரக வாழ்க்கை. துன்பமே இல்லாத வாழ்க்கை சொர்க்க வாழ்க்கை.

“சொர்க்கவாசிகள் சொர்க்கத்தில் நுழைந்தபின்னர் பொது அறிவிப்பாளர் ஒருவர், ‘இனி நீங்கள் இன்பத்துடன் தான் இருப்பீர்கள்; ஒருபோதும் துன்பம் அடையமாட்டீர்கள்’ என்று அறிவிப்புச் செய்வார் என நபி (ஸல்) கூறினார்கள்”- அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி)

துன்பம் என்பது ஒருவகை வலியினால் ஏற்படும் சோகமான ஒரு உணர்வலை. அது தோல்வியால் வரலாம்; நஷ்டத்தால் ஏற்படலாம்; பயத்தால், விருப்பமானதை இழப்பதினால் கூட வரலாம்.

துன்பத்தை சந்திக்கும் ஒருவர் சகஜமான நிலைக்கு அப்பாற்பட்டு யாரிடமும் பேசாமல் மவுனமாகி விடுவார். தனிமையை விரும்புவார். மனஅழுத்தம் ஏற்பட்டு இளைப்பாற ஓய்வெடுப்பார். அடக்க முடியாமல் அழுவார். இவருக்கு அப்போது தேவை மன ஆறுதலான நாலு வார்த்தைகள் தான்.

துன்பத்தில் ஆறுதல் கூறும் அழகிய வார்த்தை என்பது வலி நிவாரணி போன்றது. வலிகள் இருந்தாலும் இந்த வார்த்தையால் மூளை வலியை உணராமல் செய்து விடும்.

நீ துன்பத்தில் தவிக்கும்போது ஆறுதல் கூறுபவர் நீ விரும்பும் நபராக இருக்கமாட்டார். உன்னை விரும்பும் நபராக இருப்பார்.

துன்பத்தில் கூறப்படும் அழகிய ஆறுதல் வரிகள் உள்ளன. அவை வருமாறு:

‘இறைவன் உமக்கு மகத்தான சன்மானம் வழங்கட்டுமாக! அவன் அழகிய ஆறுதலை அளிக்கட்டுமாக! மரணித்தவருக்கு மன்னிப்பை வழங்குவானாக!’ - இவை அனைத்தும் நபி (ஸல்) அவர்கள் பயன்படுத்திய அழகிய ஆறுதல் வரிகள்.

‘இறைவன் உமக்கு கருணை பொழியட்டும்! துன்பத்திலிருந்து உம்மை விடுவிக்கட்டும்! உமது துன்பத்தை அகற்றிவிடட்டும்! என்பது போன்ற வார்த்தைகளையும் பயன்படுத்த வேண்டும்.

உசாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் நபி (ஸல்) அவர்களிடம் இருந்தோம். அப்போது அவர்களுடைய புதல்வியரில் ஒருவருடைய (ஸைனப் (ரலி) அவர்களுடைய) தூதுவர் அங்கு வந்தார். ஸைனப் உடைய புதல்வர் இறக்கும் தறுவாயில் இருப்பதாகச் சொல்லி, ஸைனப் அழைப்பதாகத் தெரிவித்தார்.

நபி (ஸல்) அவர்கள், “நீ ஸைனபிடம் சென்று, “அல்லாஹ் எடுத்துக் கொண்டதும் அவனுக்குரியதே! அவன் கொடுத்ததும் அவனுக்குரியதுதான். ஒவ்வொன்றுக்கும் அவனிடம் ஒரு குறிப்பிட்ட தவணை உண்டு. ஆகவே, (அல்லாஹ்விடம் அதற்கான) நன்மையை எதிர்பார்த்து பொறுமையாக இருக்கச்சொல்” என்று சொல்லி அனுப்பினார்கள். (நூல்: புகாரி)

‘ஒருவர் துன்பத்தில் சிக்குண்டவருக்கு ஆறுதல் கூறினால், துன்பப்பட்டவருக்குக் கிடைக்கும் நன்மையைப் போன்றே ஆறுதல் கூறுபவருக்கும் கிடைக்கும்’ என நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர்: இப்னு மஸ்ஊத் (ரலி), நூல்: திர்மிதி).

‘ஒரு இறைநம்பிக்கையாளர் துன்பத்தில் சிக்கிய தமது சகோதரருக்குப் பொறுமையும், ஆறுதலும் கூறி அவரைத் தேற்றினால், அவருக்கு மறுமை நாளில் இறைவன் சங்கை எனும் ஆடையை அணிவிப்பான் என நபி (ஸல்) கூறினார்கள்’

(முஹம்மத் பின் அம்ர் பின் ஹஸம் (ரலி), நூல்: இப்னுமாஜா)

துன்பத்தில் சிக்குண்டவரை சாதி, மத, இன, நிற, மொழி, தேசியம் பாராமல் அவருக்கு ஆறுதல் கூறுவது நபியின் வழிமுறையாகும்.

நபி (ஸல்) அவர்கள், நோய்வாய்ப்பட்டு மரண தருவாயில் இருக்கும் ஒரு யூத சிறுவனின் வீட்டுக்கே சென்று ஆறுதல் கூறிவிட்டு வந்த நிகழ்வு நெகிழ்ச்சியைத் தருகிறது.

‘ஒருவர் துன்பத்தில் சிக்குண்டவருக்கு ஆறுதல் கூறினால், துன்பப்பட்டவருக்குக் கிடைக்கும் நன்மையைப் போன்றே ஆறுதல் கூறுபவருக்கும் கிடைக்கும்’ என நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர்: இப்னு மஸ்ஊத் (ரலி), நூல்: திர்மிதி).

துன்பத்திற்கு ஏது சாதி, மதம்,

ஆறுதலில் உள்ளது மனிதநேயம்.

மன மெய்யியல் 5

கணவன்- மனைவி உறவு



'கணவன் மனைவி உறவு எப்படி இருக்க வேண்டும்?" என்பது பற்றி காமசூத்ராவில் வாதஸ்யாயனர் என்ன சொல்லியிருக்கிறார். தெரியுமா ?

கேட்பதற்கு ஒருமாதிரியாக இருந்தாலும், வாத்ஸ்யாயனர் பார்வையில் கணவன் மனைவிக்குமிடையே காமத்தில்தான் உறவு ஆரம்பிக்கிறது. இதில் அடுத்த கட்டம், ஒருவர் மீது ஒருவர் காட்டும் அக்கறை! மூன்றாவதாக, இருவருக்குமிடையே மலரும் நட்பு !

நட்பு என்று ஏன் சொன்னார் என்றால் தூய நட்பில்தான் சம்பந்தப்பட்ட இருவரும் சமமாக இருப்பார்கள் எந்த ஒருவரும் மற்றவரைவிடத் தான் உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்று எண்ண மாட்டார்கள் ஒருவரை ஒருவர் கவிழத்துவிடத் திட்டமிட மாட்டார்கள்

கணவன்-மனைவிக்கிடையே நடபு மலரும்போது, இருவருமே தங்களின் உறவைப் புனிதமானதாக எண்ணிப போற்றுவார்கள். காப்பாற்றுவார்கள்!

இதில் கடைசிக் கட்டம் கருணை! கருணையின் மூலாதாரப் பொருள் மன்னிப்பு! கணவன்-மனைவி யாராக இருந்தாலும் சின்னச் சின்னத் தவறுகள் செய்வது இயற்கை.

ஒருவர் செய்யும் தவறை, மற்றவர் மன்னிக்கும் நிலைதான் இல்லற வாழ்வின் இறுதியான உன்னத நிலை! இந்த நிலையை அடையும்போதுதான் கணவன்-மனைவி உறவு முழுமை பெறுகிறது!

இதைக் காட்டிலும் இஸ்லாம் ஒரு படி மேலே போய் கணவன்-மனைவி உறவை உன்னதப்படுத்துகிறது !

'எந்த முஃமினான கணவனும் தன் மனைவியை கோபப்பட்டு பிரிந்துவிட வேண்டாம். அவளின் ஒரு குணம் உன்னை வெறுப்படையச் செய்தால், மறு குணம் உன்னை திருப்தியுறச் செய்யும்' என்கிறார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

வாழ்க்கைக்கு கணவன்-மனைவி உறவு முக்கியமானது. குடும்பத்திற்கு அடிநாதமாக இருந்து தாங்குபவர்கள் கணவன்-மனைவி தான் என்று கூறலாம்.

'கணவன்-மனைவிக்கு ஆடையாகவும், மனைவி-கணவனுக்கு ஆடையாகவும் இருக்கின்றனர்' என்று திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது.

ஆடைகள் மனிதனின் வெட்கத்தலங்களை மறைத்து அவர்களை பாதுகாக்கின்றது. அதுபோல ஒருவருக்கொருவர் பாதுகாவலர்களாக இருக்க வேண்டும் என்பதைத்தான் இஸ்லாம் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

கதீஜா (ரலி) இறந்து பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்டன. அப்போது மக்கா வெற்றி கொள்ளப்படுகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா நகரினுள் நுழைகிறார்கள். அங்கு குழுமியிருக்கிற அனைவரும் நபி அவர்களை தங்கள் வீட்டில் விருந்தினராக தங்குமாறு அன்பு அழைப்பு விடுக்கின்றார்கள்.

நபி அவர்களோ 'கதீஜாவின் கப்ருக்கு (கதீஜாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தின்) அருகே எனக்குக் கூடாரம் அடியுங்கள்' என்று அறிவிக்கின்றார்கள்.

பதினான்கு ஆண்டுகள் கடந்த பின்பும் தனது மனைவி கதீஜா அவர்களின் மேல் நபியவர்கள் வைத்திருந்த அன்பை வெளிப்படுத்துகிறது இச்சம்பவம்.

அன்பு, பாசம், நேசம், கருணை, பரிவு, விட்டுக்கொடுத்தல், அரவணைத்து செல்லுதல், குற்றம், குறை காணாது தவிர்த்தல், மனம் விட்டு பேசுதல் இவைகள்தான் கணவன்-மனைவி இடையே நெருக்கத்தையும், மன பிணைப்பையும் ஏற்படுத்தும்.

கால மாற்றத்தினூடே இவைகள் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருகிறது. சிறு, சிறு பிரச்சினைகள், கருத்து மாறுபாடுகள் காலப்போக்கில் பெரிய பிரிவினையை ஏற்படுத்தி விடுகிறது.

இதில் கோபம் தான் முக்கிய பங்காற்றுகிறது. எதற்கெல்லாம் கோபப்பட வேண்டும் என்று வரையறை இல்லாமல் சாதாரண விஷயங்களுக்குக் கூட கோபத்தில் வார்த்தைகளை விட்டு மீண்டும் அதை அள்ள முடியாமல் பிரிந்து வாழ்கிறார்கள் பலர்.

'கண்ணியமானவன், சங்கையானவன் மனைவிக்குக் கண்ணியம், சங்கை செய்வான். சாபத்திற்குரியவன் மனைவியை கேவலப்படுத்துவான்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். மனைவியை கேவலப்படுத்துபவன் சாபத்திற்கு உரியவன் என்பதே இதன் பொருள்.

தனது மனைவியை ஒருவர் எப்படி நேசிக்க வேண்டும் என்பதற்கு ஒரு சிறு உதாரணம் இது. தன் மரணப்படுக்கையில் அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறியது நாம் கனவில்கூட நினைத்து பார்க்க முடியாது.

சித்தீக் நாயகம் கூறினார்கள் 'என் மரணத்திற்கு பிறகு என் ஜனாஸாவை (உடலை) என் மனைவி அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) குளிப்பாட்ட வேண்டும்'.

‘ஏன்?’ என்று கேட்டார்கள் தோழர்கள்.

‘என் இதயத்துடன் நெருக்கமானவள் என் மனைவி. அவள் அதைச் செய்தால் எனக்கு பிடித்தமானதாக இருக்கும்’ என்று பதிலளித்தார்கள்.

தனது இறுதி சடங்கைக் கூட தனது மனைவி செய்ய வேண்டும் என்று விரும்பும் அளவிற்கு தனது மனைவியை நேசித்தார்கள் அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள்.

ஒவ்வொரு மனிதரும் ஏதாவது ஒரு வகையில் தவறுகள் செய்யக் கூடியவர்கள் தாம். ஆணும் பெண்ணும் இதில் விதி விலக்கல்ல.

மனைவி தன் கணவனுக்காகவும், அவன் குடும்பத்திற்காகவும் எத்தனையோ நன்மைகளை, தியாகங்களை செய்திருந்தாலும், அவள் அறிந்தோ, அறியாமலோ செய்த சிறு தவறுகளால் கோபப்பட்டு அவசர முடிவுகளை எடுத்து இறுதியில் பிரிவை நோக்குகிறார்கள்.

மனைவி இத்தனை நாள் தனக்கு செய்த உபகாரங்களை கணவன் கொஞ்சம்கூட நினைத்து பார்ப்பதில்லை.


‘எந்த முஃமினான கணவனும் தன் மனைவியை கோபப்பட்டு பிரிந்துவிட வேண்டாம். அவளின் ஒரு குணம் உன்னை வெறுப்படையச் செய்தால், மறு குணம் உன்னை திருப்தியுறச் செய்யும்’ என்கிறார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

அன்பும், கருணையும் இருக்கும் இடத்தில் பகைமைக்கும், பிரிவினைக்கும் வேலை இல்லை. மனைவி என்பவள் குடும்பத்தை தாங்கும் அஸ்திவாரம்.

அவள் மீது காட்டப்படும் அன்பும், பரிவும், கண்ணியமும் மனைவி எனும் அஸ்திவாரத்தை பலப்படுத்தும். அது கட்டிடம் எனும் குடும்பத்தை மகிழ்ச்சியிலும், அமைதியிலும் நிலைத்திருக்கச் செய்யும்.

மன மெய்யியல் 6

(அவனிடமே பேசுங்கள்)



குறைவாகப் பேசவேண்டும். அதிகமாகக் கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆண்டவன் தமக்கு ஒரு வாயையும் இரண்டு காதுகளையும் கொடுத்திருக்கிறான்.

ஆனால் நம்மில் பலருக்கு உலகிலேயே இனிமையான ஓசை நம் சொந்தக் குரல்தான்! அதனால்தான் பலர் தாங்கள் பேசும் வார்த்தையில் அர்த்தம் இருக்கிறதோ இல்லையோ ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள் !

‘ஒரு அடியான் அல்லாஹ் திருப்தியுறும் வார்த்தையைக் கூறுகிறார். (ஆனால்) அதனுடைய சக்தியைப் பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை. இதன் காரணமாக அல்லாஹ் அவனுடைய அந்தஸ்த்தை உயர்த்துகிறான்.

இன்னொரு மனிதன் அல்லாஹ்வின் கோபத்திற்குரிய வார்த்தையை பேசுகிறான். (ஆனால்) அவன் அதனுடைய சக்தியை எண்ணிப் பார்ப்பதில்லை. இதன் காரணமாக அல்லாஹ் அவனை நரகத்தில் எறிகிறான்’ அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), புகாரி.

இது தேவையா ?

மேலைநாட்டுச் சித்தாந்தத்திலும் சரி, நமது முன்னோர்கள் சொன்ன முக்கிய தத்துவங்களிலும் சரி 'கேட்பது' என்பதற்கு நிறைய முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்! மற்றவர் பேசுவதை நாம் கேட்க வேண்டும் என்றால், முதலில் நாம் பேசுவதை நிறுத்த வேண்டும். ஆனால், நமக்குத்தான் அது பிடிக்காதே!

" கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்

தோட்கப் படாத செவி".418)

கேள்வியறிவால் துளைக்கப் படாத செவிகள், (இயற்கையான துளைகள் கொண்டு ஓசையைக்) கேட்டறிந்தாலும் கேளாத செவிட்டுத் தன்மை உடையனவே என்கிறார் திருவள்ளுவர்.

இறைவனும் கூட தான் பேசுவதில்லை. ஆனால், பக்தர்களின் பேச்சை கேட்கவே விரும்புகிறான் !

பெண்மணி ஒருத்தி கைகளைக் குவித்துக் கண்களை மூடி மேரி மாதாவை நோக்கிப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள். அதைப் பிரார்த்தனை என்றுகூடச் சொல்ல முடியாது. 'எனக்கு அது வேண்டும். இது வேண்டும் எனக் கடவுளிடம் விண்ணப்பப் பட்டியல் படிப்பது மாதிரி இருந்தது அவளின் நீண்ட பிரார்த்தனை!

புகழ்பெற்ற ஓவியர் மைக்கேல் ஏஞ்செலோ, அவளைக் கேலிசெய்வதற்காக மறைவிலே நின்றுகொண்டு, "பிதாகுமாரனான யேசு பேசுகிறேன். பக்தையே, உனது பக்தியை மெச்சினோம்! உனக்கு என்ன வேண்டும்” என்று கேட்க

அந்தப் பெண்மணி, ”சும்மா இருங்கள் ஜீசஸ் நான் உங்கள் தாயிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். தொந்தரவு செய்யாதீர்கள்" என்றாளாம்!

அதாவது, பேசுவதில் ஒருவருக்கு ஆர்வம் வந்துவிட்டால் எதற்குப் பேசுகிறோம் என்ற நோக்கம்கூடப் பின்னால் தள்ளப்பட்டுவிடுகிறது. பேசுவதால் கிடைக்கக்கூடிய மகிழ்ச்சிக்காகவே பலர் முடிவில்லாமல் பேசுகிறார்கள்!

பேசுவதை நிறுத்திக்கொண்டு, அடுத்தவர் பேசும் பேச்சைக் கேட்டாலும் அதைச் சரியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது, அதைவிட முக்கியமானதாக இருக்கிறது !

மன்னர் ஔரங்கசீப் அவர்களிடம் உதவிப் பெறுவதற்காக ஒருவர் பள்ளிவாசலில் வெகுநேரமாய் காத்திருக்கின்றார்.

தொழுகை நேரம் நெருங்கி விட்டது. மன்னர் அவர்களும் வந்து விட்டார். இந்த நபர் ஓடிச் சென்று மன்னரிடம் முறையிடுகின்றார்.

"மன்னர் அவர்களே நான் பலரிடம் கேட்டும் யாரும் உதவிப் புரியவில்லை, நான் பலவித கஷ்டங்களால் வாழ்க்கையில் சஞ்சலப்பட்டு கொண்டிருக்கிறேன். நீங்கள் உதவி செய்து நல்வழிக் காட்டுங்கள்" என வேண்டுகிறார்.

கூர்ந்து கேட்ட மன்னர் அவர்கள் தொழுகைக்கு நேரமாச்சி, தொழுகை முடிந்த பின் இதே இடத்தில் மீண்டும் என்னை சந்திக்கவும் என சொல்லி அவசரமாக மன்னர் ஔரங்கசீப்

அவர்கள் தொழுகைக்கு சென்று விடுகிறார்.

தொழுகை முடிந்ததும் மன்னர் அதே இடத்திற்கு வந்து உதவிக் கேட்ட அந்த ஆளை தேடுகிறார். அவரைக் காணவில்லை.

உடனே தனது பணியாளர்களை அழைத்து அவரை தேடிக்கண்டுபிடித்து அழைத்து வரும்படி ஆணையிட, அவர்கள் ஓடிச்சென்று வேறு இடத்தில் நின்றுக் கொண்டிருந்த அந்த நபரை அழைத்து வந்து மன்னரிடம் விடுகின்றனர் ..

மன்னர் அவரை பார்த்து எங்கே சென்றீர் ? உமக்கு என்ன உதவி வேண்டும் ? என கேட்க, அந்த நபர்

"இப்போ உங்க உதவி எனக்கு வேண்டாம் மன்னா" என்று அவர் சொல்ல,

மன்னர் திடுக்கிட்டு, தொழ போகும்போது உதவி கேட்டீர், தொழுது விட்டு வந்து நானே உம்மை அழைத்து உதவ முன் வரும்போது வேண்டாம் எனகிறீரே என்ன காரணம்?!'

"மன்னா தொழுகை முடிந்ததும் உங்களை பள்ளிக்குள் பார்த்தேன். எல்லா செல்வங்களும், அதிகாரங்களும் பெற்று இந்த மண்ணை ஆளுகின்ற மன்னராகிய நீங்கள்,இறைவனிடத்தில் கையேந்தி கண்மூடி அமர்ந்து இருந்த போது....அதைக்கண்ட எனக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டது.

இப்பேற்பட்ட மன்னர் இறைவனிடமே உதவி கேட்கும்போது நாம் ஏன் மனிதர்களிடம் கேட்க வேண்டும்? நாமும் இறைவனிடம் கேட்போமே! என்று என்னை நானே மாற்றிக் கொண்டேன் மன்னா'' என்றதும் மன்னரின் கண்கள் கலங்கின..மனதும் கலங்கியது.

உடனே அவரை மரியாதை கலந்த பார்வை பார்த்து விட்டு,

"நண்பரே உமது எண்ணம் உண்மையாகட்டும், மேலும் உறுதியாகட்டும் ! மனிதர்கள் புரியும் உதவிக்கு அளவு உண்டு. ஆனால் அல்லாஹ் புரியும் உதவிக்கும், அருளுக்கும் அளவே

கிடையாது, யாராக இருந்தாலும் அல்லாஹ்விடம்தான் உதவி தேடியாக வேண்டும். கடைசி வரை இதையே கடைபிடியும்."

என்று கூறி அப்போது தன் கைவசம் இருந்தவற்றை அவரின்

கையைப் பிடித்து வற்புறுத்தி அவரிடம் கொடுத்து விட்டு, மன்னர் இறை சிந்தனையோடு நகர்கிறார்.

அந்த நபரோ இறைவனிடம் கையேந்த பள்ளிக்குள் செல்கிறார். ''இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லை என்று சொல்லுவதில்லை..."

திருக்குர்ஆனில் இறைவன் இப்படி கேட்கச் சொல்கிறான்

" (இறைவா!)உன்னையே நாங்கள் வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்.(குர்ஆன் : 1:5)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

"நாம் மனிதனைப் படைத்தோம். அவனது உள்ளத்தில் எழுகின்ற ஊசலாட்டங்களைக் கூட நாம் அறிகின்றோம். அவனது பிடரி நரம்பை விடவும் அதிகமாக நாம் அவனிடம் நெருக்கமாக இருக்கின்றோம்." (அல்குர்ஆன்: 50:16)

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

'உங்கள் செருப்பின் வார் அறுந்தாலும் அல்லாஹ்விடம் கேளுங்கள்' (ஆதாரம்: புகாரி)

இவற்றிலிருந்து எதையும் நேரடியாக அல்லாஹ்விடம் கேட்க வேண்டும் என்பதையே இஸ்லாம் வலியுறுத்துகிறது என்பதைப் பார்க்கின்றோம். இது ஒரு வகையில் மனிதனுக்குத் தரப்பட்ட கௌரவம் என்று நாம் கருத வேண்டும்"

மன மெய்யியல் 7

(ஒவ்வொரு பிரச்சனையும் மாறுவேடத்தில் வந்த வாய்ப்பு)



நீண்ட நாட்களாக வேலை தேடித்தேடிச் சோர்ந்து போன ஓர் இளம் பட்டதாரி அவன் ! பல வருடங்களுக்குப் பிறகு பத்திரிகை ஆபீஸ் அவனுக்கு 'நிருபர்' வேலை கிடைத்தது! பயபக்தியோடு முதல் நான் வேலைக்குப் போகிறான்!

பத்திரிகை ஆசிரியர் அவனை அழைத்து, "இன்று சுதந்திர தினம் நமது துறைமுகத்தில் கப்பல் படையைச் சேர்ந்த போர்க்கப்பல் ஒன்று வந்திருக்கிறது.அதில்,சுதந்திர தினம் கொண்டாடுகிறார்கள். அங்கு போய் செய்தி சேகரித்து வா" என்று இவனை அனுப்பி வைக்கிறார்.

முதல் நாள் முதல் அஸைன்மெண்ட் ! அதனால், ஆசிரியர் சொன்ன அடுத்த நிமிடமே துறைமுகம் நோக்கி ஓடுகிறான்.

அன்று மாலை சுதந்திர தினச் செய்தி சேகரிக்க கோட்டை, கலெக்டர் ஆபீஸ், கட்சி ஆபீஸ் என்று நாலா திசைகளுக்கும் போன மற்ற சக நிருபர்கள் அவரவர் சேகரித்த செய்திகளை வேகவேகமாக எழுதுகிறார்கள்.

ஆனால், நம்முடைய இளைஞன் மட்டும் செய்தி எதுவும் எழுதாமல், சோகமாக உட்கார்ந்திருக்கிறான்! இதைப் பார்த்த சக நிருபர் ஒருவர் "நீ ஏன் எதுவும் எழுதவில்லை?" என்று பரிவோடு கேட்கிறார்.

நம்முடைய இளைஞன், "என் கெட்டகாலம், நான் மாவு விறகப் போனால் காற்றடிக்கிறது! உப்பு விற்கப் போனால் மழை பெய்கிறது! என முதல் நாள் 'அஸைன்மெண்ட்'டே பெரிய பிரசனைக்கு உள்ளாகிவிட்டது.

கப்பல் படையில் நடக்கும் சுதந்திரதின நிகழ்ச்சிகளை கவர் செய்யச் சொல்லித்தான் ஆசிரியர் என்னை அனுப்பினார். என் கஷ்ட காலம்... கப்பலில் எந்தக் கொண்டாட்டமும் நடக்கவில்லை! 'செய்தி இல்லை' என்று ஆசிரியரிடம் எப்படிச் சொல்வது என்று பயமாக இருக்கிறது" என்று புலம்ப ஆரம்பித்தான்.

'அப்படியா! கப்பலில் சுதந்திர தினக் கொண்டாட்டம் ஏன் நடக்கவில்லை?" சக நிருபர் சளைக்காமல் கேட்டார்.

"கப்பலில் ஓட்டை இருந்திருக்கிறது. சுதந்திர தின ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்ததால், இதை யாரும் கவனிக்கவில்லையாம். திடீரென்று ஓட்டை பெரிதாகிக் கடல் தண்ணீர் குபுகுபுவென புகுந்து கப்பலே மூழ்கும்படி ஆகிவிட்டது. அதைத் தடுப்பதற்கு பெரிய படையே பாடுபட்டது. இப்படியிருக்க. சுதந்திர தின கொண்டாட்டம் எப்படி நடக்கும்?"

சக நிருபர் ஷாக் அடித்த மாதிரி எழுந்து நின்றுவிட்டார்! "அடப்பாவி! இதுதானே முதல் பக்கச் செய்தியாக வரவேண்டும் என்று சொல்லிக்கொண்டே முழு விவரங்களைத் திரட்ட அந்த சக நிருபர் ஓடினார்.

ஆக... 'பிரச்னை' என்று நினைத்து இளைஞன் சோர்ந்து உட்கார்ந்தானே, அது அவன் தன் திறமையை நிரூபிக்கக் கிடைத்த தங்கமான வாய்ப்பு. அதைத்தான் கோட்டை விட்டிருக்கிறான் !

வாழ்க்கை என்பது நிகழ்ச்சி நிரல்படி பட்டியலிட்ட சம்பவங்களின் ஊர்வலம் இல்லை! அது எதிர்பாராமல் வருகிற வாய்ப்புகளின் ஊர்வலம் ! ஒவ்வொரு பிரச்னையும் நமக்குக் கிடைக்கிற ஒரு வாய்ப்புதான்.

நபி (ஸல்) தங்களது தோழர்களுடன் பத்ரு யுத்த கைதிகளைப் பற்றி ஆலோசித்தார்கள்.

அப்போது அபூபக்ர் (ரழி) அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! இவர்கள் நமது தந்தை வழி உறவினர்கள். நமது சகோதரர்கள் மற்றும் நெருக்கமான குடும்பத்தார்கள்.

எனவே, (இவர்களை கொலை செய்யாமல்) இவர்களிடம் (ஃபித்யா) ஈட்டுத்தொகை பெற்றுக் கொண்டு இவர்களை விடுதலை செய்வோம். நாம் வாங்கும் ஈட்டுத்தொகை இறை நிராகரிப்பாளர்களை இனி எதிர்ப்பதற்கு நமக்கு உதவியாக இருக்கும்.

அதிவிரைவில் அல்லாஹ் இவர்களுக்கு நேர்வழி காட்டக் கூடும். அப்போது இவர்களும் நமக்கு உதவியாளர்களாக மாறுவர்" என்று கூறினார்கள்.


அபூபக்ர் (ரழி) அவர்கள் கூறியதையே நபி (ஸல்) அவர்கள் ஏற்று கைதிகளிடம் ஈட்டுத்தொகைப் பெற்று உரிமையிட்டார்கள். ஈட்டுத் தொகை ஆயிரம் வெள்ளி நாணயங்களிருந்து நான்காயிரம் வெள்ளி நாணயங்கள் வரை நிர்ணயிக்கப்பட்டது.

மக்காவாசிகள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். மதீனாவாசிகளுக்கு எழுத, படிக்கத் தெரியாது. எனவே, ஈட்டுத் தொகை கொடுக்க இயலாத மக்கா கைதிகள் மதீனாவைச் சேர்ந்த பத்து சிறுவர்களுக்கு எழுத, படிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டனர். அவ்வாறு சிறுவர்களுக்கு நன்கு எழுத, படிக்கக் கற்றுக் கொடுத்தவுடன் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்."

நபி (ஸல்) அவர்கள் யுத்த கைதிகளின் பிரச்சனையை பெரும் வாய்ப்பாக மாற்றிக்கொண்டார்கள்.

மன மெய்யியல் 9

(அன்புமயமானவன்)



நமது வாழ்க்கை பல நேரம் பயத்திஸ்தான் கரைகிறது !

வீட்டிலிருக்கும் இருட்டை விரட்டுவதற்காக ஒருவன், வாளி வாளியாக இருட்டை மொண்டு கொண்டுவந்து வீதியில் கொட்டிக் கொண்டிருந்தானாம்.

எத்தனை ஆண்டுகள் இப்படி இருட்டை கொட்டினாலும் , இருட்டைச் சுற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தால் இருட்டை வெளியேற்ற முடியாது! ஒளி இல்லாமை என்பதுதான் இருட்டு அதனால் ஒரு சின்ன விளக்கை ஏற்றி வைத்தால், இருட்டு ஓடிவிடும்

பயமும் இருட்டு மாதிரிதான் ! அன்பு இல்லாமைதான் பயம்! அன்பு என்ற விளக்கை ஏற்றி வைத்தால், பயம் மறைந்துவிடும்! புரியவில்லை என்றால் அன்பின் ஒருவகையான, காதலை எடுத்துக் கொள்ளுங்கள்! காதல் எப்படி மலர்கிறது ? ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருவர்மீது இன்னொருவர் கொள்ளும் நம்பிக்கையில்தானே காதல் பிறக்கிறது!

ஒரு பெண்ணின்மீது ஆணுக்கோ அல்லது ஆணின் மீது. பெண்ணுக்கோ நம்பிக்கை வராவிட்டால், அங்கே காதல் என்ற அன்பு கிடையாது!

சூஃபி இலக்கியத்தில் வரும் முல்லா நஸ்ருதீனின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொன்னால், இந்தத் தத்துவம் உங்களுக்குச் சுலபமாக விளங்கக்கூடும்.

முல்லா நஸ்ருதீனுக்கு அன்று காலையில்தான் திருமணம் நடந்தது. அன்றிரவு நதியைக் கடந்து, மறுகரைக்கு முல்லா நஸ்ருதீனும் அவரது இளம் மனைவியும் உறவினர்களோடு படகில் போய்க் கொண்டிருந்தார்கள்.

அப்போது திடீரென்று புயல் அடித்தது. நதியிலே வெள்ளம் கரை புரண்டது, இவர்கள் பயணித்துக் கொண்டிருந்த படகு பேயாட்டம் ஆடியது. மணப்பெண் உட்படப் படகில் இருந்த அத்தனை பேரையும் மரண பயம் தொற்றிக்கொண்டது!

ஆனால், முல்லா மட்டும் பயமேதும் இல்லாமல் இருந்தார். இதைப் பார்த்த புது மணப்பெண், “உங்களுக்குப் பயமாக இல்லையா.?" என்று கணவரை ஆச்சரியத்தோடு கேட்டாள்.

அதற்கு முல்லா நஸ்ருதீன் பதில் சொல்லாமல் தன் இடுப்பிலே செருகியிருந்த கத்தியை எடுத்து மனைவியின் குரல்வளையைக் குத்துவது போல் ஓங்கினார்.

மனைவியின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை! அப்போது முல்லா நஸ்ருதீன் தன் மனைவியைப் பார்த்து, "கத்தி என்றால் உனக்குப் பயமாக இல்லையா.?” என்று கேட்டார்.

அதற்கு அவரது மனைவி “கத்தி வேண்டுமானால் அபாயகரமானதாக இருக்கலாம். ஆனால், அதைப் பிடித்துக் கொண்டிருப்பவர், என்மீது அளவுகடந்த அன்பு வைத்திருக்கும் என் கணவர், அதனால் நான் பயப்படவில்லை." என்றாள்.

"அதேபோலத்தான் எனக்கும். இந்த அலைகள் வேண்டுமானால் ஆபத்தானதாக இருக்கலாம். ஆனால், இதை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ் அன்புமயமானவர். அதனால் எனக்குப் பயம் இல்லை." என்றாராம் முல்லா நஸ்ருதீன்,

முல்லா நஸ்ருதீனுக்கு அல்லாஹ் மீது நம்பிக்கை இருந்தது. அதனால் அன்பு இருந்தது. அல்லாஹ் மீது அவருக்கு நம்பிக்கை இல்லையென்றால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லையென்றால், படகில் பயணித்த மற்றவர்களைப் போல முல்லா நஸ்ருதீனும் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்திருப்பார்.

இதே உண்மையை தம் வாழ்க்கையிலும் பொருத்திப் பார்க்கலாம். நமக்குப் பயம் ஏற்படுகிறது என்றால், நம் மீதே நமக்கு நம்பிக்கை இல்லை என்றுதான் பொருள்!

நான் கடவுளுக்குப் பயந்தவன்..' என்று பலர் சொல்வதை கேட்டிருக்கிறோம். இது அபத்தமானது. கடவுளிடம் நாம் செலுத்த வேண்டியது அன்புதானே தவிர, பயம் இல்லை!

"உபநிஷத்துகள் சொல்லும் மிகப்பெரிய விஷயமே, ' பயம் இல்லாமல் இரு' என்பதுதான்..." என்று சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார்.

மரண பயம் பற்றி தாகூர் சொல்லும்போது :

"நீ இந்தப் பூமியிலே வந்து பிறப்பதற்கு முன்னதாகவே உனக்காக உன் தாயின் இரண்டு தனங்களிலும் பாலைச் சுரக்க வைத்தவன் இறைவன். நீ இறந்த பின்னும் உனக்காக இன்னொரு உலகத்தையேகூட அவன் படைத்து வைத்திருக்கக்கூடும்! அதனால் நம்பிக்கையோடு இரு." என்கிறார்.

பயப்படுபவர்களுக்கெல்லாம் ஒரே ஒரு விஷயம்தான் சொல்ல முடியும். எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுங்கள்.. தவறில்லை. ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற கற்பனைகளில் இப்போது பயப்படுவதால், உங்கள் மகிழ்ச்சிதான் பாழாகும் ! எனவே ஒவ்வொரு நொடியிலும் மகிழ்ச்சியாக வாழுங்கள் !

- மனசே, ரிலாக்ஸ் ப்ளீஸ்! -சுவாமி சுகபோதானந்தா பதிவிலிருந்து..

மன மெய்யியல் 11

(செத்தும் சாட் செய்யும் காதலி !)

"மனம் என்கிறோம், எண்ணம் என்கிறோம், இரண்டும் ஒன்றே தான். ஆனால் ஏன் அதை எண்ணம் என்று சொல்கின்றோமென்றால் ...?

மனம் இயங்கும்போது நான்கு வகைக் கணிப்பாக இயங்குகின்றது - காலமாக, தூரமாக, பருமனாக, வேகமாக. எந்த இயக்கத்திலே, எந்தப் பொருளைப் பற்றி, நினைத்தாலும் காலம், தூரம், பருமன், வேகம் என்ற நான்கு பரிமாணத்திலே தான் மனம் இயங்குகின்றது.

இந்த நான்கு பரிமாணத்தைக் கணக்கிடுவதாலே, *கணக்கிடுதல்* என்ற சொல் எண்ணுதல் என்று வந்து, அந்த எண்ணுதலிருந்து எண்ணம் என்பதாகவே வந்தது. ஆகையினாலே மனத்துக்கு எண்ணம் என்ற பெயரும் உண்டாயிற்று".- வேதாத்திரி மகரிஷி

நம் எண்ண அலைகளுக்குப் பலம் உண்டு. எதைப் பற்றி அதிகம் நினைக்கிறோமோ அது தொடர்பான நிகழ்வுகளை, மனிதர்களைச் சந்திக்க வேண்டியது இருக்கும்.

நம் எண்ண அலைகளுக்கு ஏற்பச் சம்பவங்களும் தொடர்ந்துகொண்டு இருப்பதே எண்ணம் போல வாழ்க்கை என அழைக்கப்படுகிறது.

எண்ண அலைகளுக்கு எப்போதுமே பலம் அதிகம். நம் எண்ண அலைகள் எதிரில் உள்ளவரின் மனநிலையை மாற்றும் திறன் கொண்டது.

எதிர்மறையான சிந்தனைகள் கொண்டு இருந்தால் தவறாகவும், நேர்மறை சிந்தனைகள் கொண்டு இருந்தால், சரியாகவும் நடக்கும்.

தவறாகவே யோசித்துக்கொண்டு இருந்தால், கெட்டதே நடக்கும். நல்லதையே நினைத்தால், நல்லதே நடக்கும்.

இதையே 'என்ன நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்' என்கிறார் புத்தர்."

இதுபற்றிய நவீன கம்ப்யூட்டர் இக்காலத்தில் நடந்த ஒரு நிகழ்வு ஒன்றை சொல்கிறேன்.

கனடாவின் பிராட்ஃபோர்டு பகுதியைச் சேர்ந்தவர் பார்பியூ ஜோஸ்வா, இவர் கடந்த 2010ம் ஆண்டு ஜெஸ்ஸிக்கா என்ற பெண்ணை பார்த்தார். இருவருக்கும் பிடித்திருந்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்தனர். இவர்கள் இருவரும் 2012ம் ஆண்டு வரை ஒன்றாக வாழ்ந்தனர்.

இந்நிலையில் ஜெஸ்ஸிக்காவிற்கு திடீரென லிவரில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. மேலும் தன் வாழ்வில் நடந்த சில விஷயங்களை படிப்படியாக மறக்க துவங்கினர்.

டாக்டர்களிடம் இது குறித்த சிகிச்சைக்கு செல்லும் போது, அவர் மிக அரிய வகை வியாதியால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அந்த வியாதி முதலில் ஞாபகங்களையெல்லாம் மறக்கச் செய்து பின் அவரை உள்ளிருந்தே கொன்று விடும் என்பதாக கூறினார்.

இறுதியாக 2012ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜெஸ்ஸிக்கா இந்த மண்ணை விட்டு மறைந்துவிட்டார்.

ஜெஸ்ஸிக்கா மறைந்த பின்பு ஜோஸ்வா மிகவும் கஷ்டப்பட்டார் ஜெஸ்ஸிக்காவை விட்டு பிரிந்ததை அவரால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

இந்நிலையில் மெதுவாக அதிலிருந்து மீண்டு வந்து கொண்டிருந்தார். இந்நிலையில் கடந்த டிசம்பர மாதம் ஜோஸ்வா ஒரு டெக்னாலஜி நிறுவனத்தில் பணியில் சேர்ந்துள்ளார்.

அந்நிறுவனத்தில் ஒரு வெப் சைட்டில் தனியங்கி சாட் பாட் ஒன்றை அவரே உருவாக்கினார் . அதில் ஒருவர் இதற்கு முன்னர் சேட் செய்ததை பதிவேற்றம் செய்திருந்தால், அவர்கள் எப்படியெல்லாம் சாட் செய்வார்கள், எந்தெந்த நேரத்திலெல்லாம் எப்படியெல்லாம் ரியாக்ட் செய்வார்கள் என்பதையெல்லாம் உணர்ந்து, அடுத்து அவர்களை போலவே சாட் செய்யும் திறனை அந்த சாட் பாட் பெற்றது.

இதையடுத்து ஜோஸ்வா தனது மறைந்த காதலி ஜெஸ்ஸிக்காவிடம் பேஸ்புக்கில் பேசியதையும், ஜெஸ்ஸிக்காவின் குரல் லயத்துடன் இதில் அப்லோடு செய்து ஜெஸ்ஸிக்காவின சேட்பாட்டை தானே உருவாக்கினார்.

தன் காதலி இறந்து 8 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் அவருடன் சாட் செய்யும் வாயப்பை இதன் மூலம் பெற்றார் ஜோஸ்வா, தற்போது அந்த சேட் பாட்டையே தனது காதலியாக நினைத்து அதனுடன் நேரம் செலவிட்டு சாட் செய்து வருகிறார். காதலி ஜெஸ்ஸிக்காவும் புதுப்புது விஷயங்களையெல்லாம் பேசி தன் காதலன் ஜோஸ்வாவை சந்தோஷப்படுத்துகிறார் .

நவீன கம்ப்யூட்டர் காலத்தில், "செத்தும் சாட் செய்கிறார் என் அன்பு ஜெஸ்ஸிக்கா " என்று பெருமைபடுகிறார் ஜோஸ்வா .

கண்ணதாசன் சாந்தி நிலையம் என்ற திரைப்படத்திற்கு எழுதிய ஒரு பாடல் என் ஞாபகத்திற்கு வருகிறது.

" பூமியில் இருப்பது வானத்தில் பறப்பதும்

அவரவர் எண்ணங்களே

இருக்கும் இடம் எதுவோ

நினைக்கும் இடம் பெரிது

போய் வரும் உயரமும்

புதுப்புது உலகமும்

அவரவர் உள்ளங்களே


நெஞ்சினில் துணிவிருந்தால்

நிலவுக்கும் போய் வரலாம் "

(இறந்த பின்னும் காதலியோடும் சாட் செய்யலாம். எல்லாம் மனம் செய்யும் மாயம்)

மன மெய்யியல் 12

(சிரிப்புத் தியானம்)



இப்போது சொல்லுங்கள் ! உங்களின் அதிகபட்சத் திறன் எப்போது வெளிப்படும் கவலையாக இருக்கும்போதா..மகிழ்ச்சியாக இருக்கும்போதா ?

மகிழ்ச்சியாக இருக்கும்போது! கரெக்டா ?

சரிரி. எப்படி மகிழ்சியாக இருப்பது மகிழ்ச்சியாக இருப்பதற்கு முதல் தேவை சிரிப்புவாய் விட்டு சிரிக்க வேண்டும். விலா எலும்பு சுளுக்கும் வரை சிரிக்க வேண்டும்!'

Laughing Buddda - வைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும். சீன நாட்டில் மூன்று பௌத்த துறவிகள் இருந்தார்கள். புத்தருக்குப் போதி மாத்தடியில் ஞானம் பிறந்தது மாதிரி, இந்தத் துறவிகளுக்கு சந்தோஷமாக நான்கு பேர் கூடி நின்று சிரித்ததைப் பார்த்தபோது ஞானம் பிறந்ததாம்!

சிரிப்பதைக்கூட ஒருவகை தியானமாகச் செய்ய முடியும் என்று இவர்கள் பிறகு கண்டறிந்தார்கள்! இதற்கு Laughing Meditation என்று பெயரும் கொடுத்தார்கள்! வாழ்நாள் முழுவதும் வாய்விட்டுச் சிரிப்பதன் மகத்துவத்தை இவர்கள் உலகம் முழுதும் பரப்பினார்கள்

ஒருநாள், இந்த மூன்று பௌத்த துறவிகளில் ஒருவர் மூப்படைந்து மரணம் அடைந்தார்! இறந்துபோன துறவிக்கு இரண்டு பக்கமும் மற்ற இரு துறவிகளும் உட்கார்ந்து சிரிக்க ஆரம்பித்தார்கள்.

இதனால் கோபம் கொண்ட ஊர்க்காரர்கள் சிலர். இரு துறவிகளைத் திட்ட ஆரம்பிக்கவும் அந்தத் துறவிகள் சொன்னார்கள். சிரிப்பின் மகத்துவத்தைப் புரிய வைப்பதற்குத்தான் இவர் தன் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார்!

கடைசியில் இவர் இறந்து போனதற்காக நாங்கள் அழுதால் அது பொருத்தமாக இருக்காது. அதனால் இறப்பதற்கு முன்பு இவர் விருப்பப்பட்டுக் கேட்டுக் கொண்டபடிதான் நாங்கள் சிரிக்கிறோம்” என்றார்கள். ஊரார் ஓரளவு சமாதானம் அடைந்தார்கள்.

இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கான நேரமும் நெருங்கியது! வாழ்நாள் முழுதும் தான் சிரித்துக்கொண்டிருந்ததால் என்னிடமிருந்த எல்லா அசுத்தத்தையும் சிரிப்பு வெளியேற்றி விட்டது. அதனால், நான் இறந்த பிறகு உடலைத் தண்ணீரால் சுத்தப்படுத்தாதீர்கள்' என்று அந்தத் துறவி சொல்லியிருந்தார்.

ஆகவே, இறந்துபோன துறவியின் உடலை அப்படியே சுடுகாட்டுக்குக் கொண்டு சென்று தீ வைத்தார்கள். அந்தச் சமயம் 'படபட என்று பட்டாசுகள் வெடித்தன! ஆம், தான் இறந்த பிறகு எல்லோரையும் திகைக்க வைத்து பிறகு 'அட இப்படி ஒரு துறவியா! என்று மக்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காகவே அந்தத் துறவி தன் ஆடைகளில் பட்டாசுகளை மறைத்துக்கொண்டு இறந்து போயிருக்கிறார்! இந்தத் துறவியின் பெயர்தான் Laughing Budda!

முகத்துக்கு பவுடா, லிப்ஸ்டிக், ஐ ஷேட், கண்மை என்று என்ன வேண்டுமானாலும் போடுங்கள்... ஆனால், இவை அத்தனையும் ஒரே ஒரு புன்னகைக்கு ஈடாகுமா? அதனால்தான் சொல்கிறேன். முகத்துக்குச் சிரிப்பைவிட சிறந்த காஸ்மடிக் கிடையாது!

ஓரளவே அறிமுகம் ஆன உங்களில் நான்கு பேர், சேர்ந்து உட்கார்ந்து ஏதாவது ஜோக்குக்கு நன்றாகச் சிரித்துப் பாருங்கள்! நான்கு பேருக்கும் ஒரு புது உறவு உண்டாகும்!

சிரிப்பு புதிய நட்பைத் தேடி தருவது மட்டுமல்ல, பழைய நட்பைப் பலப்படுத்தவும் செய்யும்!

"வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பது வெறும்

என்று அமெரிக்க மருத்துவமனைகள் உணர ஆரம்பித்துவிட்டன! இப்போது சில அமெரிக்க மருத்துவமனைகளில் Humour Nurses என்றே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்! நோயாளிகளைச் சிரிக்க வைப்பதுதான் இவர்களின் வேலை!

கோபம், சோகம், சோம்பல் என்று எதுவந்தாலும் அதுபோன்ற சமயங்களில். ஏதாவது ஒரு நல்ல நகைச்சுவைத் துணுக்கைப் படித்துவிட்டு வாய்விட்டுச் சிரியுங்கள்!

வாய்விட்டுச் சிரிக்கும் அளவுக்கு இந்த நகைச் சுவைத் துணுக்கில் பெரிதாக ஏதும் இல்லையை என்று சொல்லாதீர்கள். சாதாரண நகைச்சவைத் துணுக்காக இருந்தாலும் அதைச் சாக்காக வைத்துப் பெரிதாக வாய்விட்டுச் சிரியுங்கள்.

சிரிக்கும்போது உடம்பில் ரசாயன மாற்றும் நடக்கும் அதில் கவலை, சோகம் என்று அத்தனையும் கரைந்து போகும். மலை உச்சியிலிருந்து வரும் அருவியில் குளித்த மாதிரி உடம்பு புத்துணர்ச்சி பெறும்.

முல்லா நசுருத்தீன் என்பவர் 13ம் நூற்றாண்டில் சல்ஜூக் பேரரசில் வாழ்ந்த சூஃபிய விகடன் ஆவார். இவர் தற்போதய துருக்கி நாட்டில் வாழ்திருக்கக் கூடும்.

இவர் மக்களிடையே மிகவும் புகழ் பெற்ற ஞானியும் மெய்யியலாலரும் ஆவார். இவர் நகைச்சுவை மிக்க துணுக்குகளுக்கும் சிறுகதைகளுக்கும் புகழ் பெற்றவர்.

இவர் ஆயிரக்கணக்கான கதைகளில் வருகின்றார். பல கதைகளில் இவரின் நகைச்சுவை மிக்க விகடம் புலப்பட்டாலும் பெரும்பான்மையான கதைகளில் இவரே நகைப்புக்குள்ளாகிறார்.

முல்லா கதைகளைப் படித்துப் பாருங்கள். சிரித்துக்கொண்டே இருப்பீர்கள் . கவலையின் நேரத்தில் முல்லா உங்களை கவலைப்பட மறக்கச் செய்து சிரிக்க வைப்பார்.

இவரின் கூற்றுகள் சிலவேலையில் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றினாலும், இவர் உண்மையில், முட்டாள்தனமானவர் அல்ல, இறை ஏவுதலால் ஞானத்தையே சிரிப்பின் மூலம் சிந்திக்க வைத்தவர்.

மன மெய்யியல் 13

(கொடுப்பதில் கிடைக்கும் ஆனந்தம், பெறுவதில் இல்லை)



ஹஜரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுவது :

ஒரு மனிதர் , ஸஹாபி ஒருவருக்கு ஆட்டுத் தலை ஒன்றை அன்பளிப்பாக அனுப்பி இருந்தார் .அந்த ஸஹாபி , என்னுடைய இன்ன நண்பர் என்னை விட அதிகத் தேவை உள்ளவராகவும் , பெரும் குடும்பஸ்தராகவும் இருக்கிறார் என்று எண்ணி அந்த ஆட்டுத் தலையை அந்த நண்பருக்கு அனுப்பி வைத்தார்.

அவர் தனக்கு வந்த ஆட்டுத் தலையை மற்றொரு நண்பருக்கு அனுப்பி வைத்தார் . அவ்வாறே. அந்த ஆட்டுத் தலை ஏழு வீடுகளுக்குச் சென்று சுற்றி விட்டு , முதல் ஸஹாபியின் வீட்டுக்கே வந்து சேர்ந்தது !

இச்சம்பவத்தின் மூலம் பொதுவாக அந்த ஸஹாபாக்கள் ஏழைகளாக , தேவை உடையவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதும் , ஒவ்வொருவரும் தன்னுடைய தேவையை விடப் பிறருடைய தேவையை முதன்மையானதாகக் கருதி இருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது .

"தனக்குப் போய்தான் தானம் " என்ற சொற்றோடரை இச்சம்பவம் பொய்யாக்கி இருக்கிறது !

கொடுப்பதில் கிடைக்கும் ஆனந்தம் பெறுவதில் இல்லை. பசித்திருக்கும் ஒருவனுக்கு உன் உணவைக் கொடுப்பதால், நீ பலவீனமாகிவிடுவதில்லை. பலம்தான் பெறுகிறாய்' என்று புத்தர் மிக அழகாக இதைக் குறிப்பிட்டார்.

உணவு மட்டுமல்ல. அன்பும் அப்படித்தான், அன்பை அளவிடாமல் வழங்குவதில் கிடைக்கும் ஆனந்தத்துக்கு ஈடு, இணை இல்லை. இதை வார்த்தைகளாகப் பார்ப்பதைவிட செயலாக்கிப் பாருங்கள். அதன் முழுமையான உண்மையை அனுபவம் உங்களுக்கு உணர்த்தும்.

இரண்டாம் உலக யுத்தம் நடந்த காலம், ஜெர்மனியில் ஒரு சிறை முகாம் மேற்கொண்டு கைதாகிறவர்களை அடைத்து வைப்பதற்கு இடம் போதாத சூழ்நிலை.

கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க சிறை அதிகாரிகள் திட்டமிட்டார்கள். ஒவ்வொரு கைதிக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டது. தினம்தோறும் குலுக்கல் முறையில் சில எண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அந்த எண்களுக்குரியவர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள்.

ஒரு நாள் அப்படி அழைக்கப்பட்ட ஒரு கைதிக்கு சாக விருப்பமே இல்லை. அவன் அழுதுகொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். கைதாகியிருந்த ஒரு பாதிரியார்.அவனை நெருங்கி புன்னகையுடன் தோளில் தட்டிக் கொடுத்தார்.

"சகோதரனே ! நீ வாழ விரும்புகிறாய். வாழு. அந்த எண்ணுக்குரியவனாக நான் மரணமேடைக்குப் போகிறேன்" என்றார்.

கிடைத்த வாய்ப்பையும் முன்வந்த நபரையும் பயன்படுத்திக்கொள்ள அந்தக் கைதி துணிந்தான். அன்று மரண தண்டனையிலிருந்து அந்த கைதியானவன் தப்பினான்.


யுத்தம் முடிந்து அனைவரும் விடுவிக்கப்பட்டு, பல ஆண்டுகள் அந்த கைதியானவன் உயிரோடிருந்தான். ஆனால், யாரோ போட்ட பிச்சைதான் தன் உயிர் என்பதை நினைத்து நினைத்து அவன் வெட்கப்படாத நாளில்லை.

மரணமேடைக்கு கம்பீரமாகப் போன பாதிரியாரின் சந்தோஷம். உயிரோடிருந்தும் இறுதிவரை அவனுக்குக் கிட்டவில்லை.

தன்னையே இன்னொருவனுக்காக விட்டுக் கொடுத்த பாதிரியார் ஆயுள் ரீதியாக குறைவாகவே வாழ்ந்தார். ஆனால் முழுமையாக வாழ்ந்துவிட்டார். ஆயுளை நீடித்துக் கொண்டும், அவன் குறைவாகவே வாழ்ந்து முடித்தான்.

மன மெய்யியல் 14

(கவலையை விடுங்கள் இந்த நொடியில் முழுமையாக வாழுங்கள்)



இந்த கணம்..இந்த வினாடி... இதுதான் நிலையானது இந்த வினாடியை யாருமே நம்மிடம் இருந்து பிரிக்க முடியாது. ஆனால் ' 'இந்த கணத்தை ' இதோ நம்மை கடந்து போய்க் கொண்டிருக்கும் இந்த வினாடியே நம்மில் பலர் முழுமையாக அனுபவிப்பதில்லை என்பதுதான் நெஞ்சை சுடும் உண்மை.

நீங்கள் மன அழுத்தத்திலிருந்தால், இறந்தகாலத்தில் இருக்கிறீர்கள்.

நீங்கள் கவலையிலிருந்தால், எதிர்காலத்தில் இருக்கிறீர்கள்.

நீங்கள் மன அமைதியிலிருந்தால், நிகழ்காலத்தில் வாழ்கிறீர்கள்.'

லாவோ ட்ஸு (Lno Tzu)

வீட்டில் இருக்கும்போது, ஆபிஸைப் பற்றிச் சிந்திக்கிறோம். சாப்பிடும்போதுகூட நமது சிந்தனை சாப்பாட்டில் இருப்பதில்லை. குளிக்கும்போது கூட ஆண்டவன் நமக்குக் கொடுத்திருக்கும் அற்புதமான உடம்பை நாம் பார்த்து ரசிப்பதில்லை. அது இன்றைய தேதிக்கு எந்தப் பிரச்னையும் இல்லாமல் இருப்பதை எண்ணி சந்தோஷப்படுவதில்லை. அப்போதுகூட இலக்கில்லாமல் பறக்கும் பறவையாக மாறி எங்கேயோ சிறகடிக்கிறது!

இதனால் ஏற்படும் விளைவு என்ன என்று சிந்தித்துப் பாருங்கள்! எதைப் பற்றியோ சிந்தித்துக் கொண்டு ரோட்டில் வாகனம் ஓட்டினால் விபத்து ஏற்படுகிறதே..அதே மாதிரி விபத்துகள் நம் வாழ்க்கையில் வெவ்வேறு விதமாக நடந்துவிடும்.

இப்படி நான் சொல்வதால், இறந்தகாலத்து நினைவுகளைப் புறக்கணிக்கச் சொல்லவில்லை. வருங்காலத்தைப் பற்றித் திட்டம் போட வேண்டாம் என்றும் தடுக்கவில்லை.

ஆவி பறக்கும் சூடான ஃபில்டர் காபியைச் ருசித்து ருசித்து அதன் ஒவ்வொரு துளியையும் நாக்கின் சுவை மொட்டுகளால் உணர்ந்து சாப்பிடுவதைப் போலத்தான் ஆண்டவன் நமக்கு அளித்திருக்கும் வாழ்க்கையையும் விநாடி விநாடியாக அனுபவிக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

வாழ்க்கை என்பது காபியைவிடப் பல ஆயிரம் மடங்கு சுவையானது. காபியின் முதல் 'சிப்' புக்கும் இரண்டாவது 'சிப்'புக்கும் அதிக வித்தியாசம் இருப்பதில்லை ஆனால், வாழ்க்கையில் ஒரு விநாடியைப் போல அடுத்த விநாடி இருப்பதில்லை. ஒவ்வொரு விநாடியும் வித்தியாசமானது.

ஒரே நதியில் நீ இரண்டு முறை குளிக்க முடியாது” என்று ஜென் புத்திசத்தில் ஒரு பழமொழி உண்டு. அதாவது, நதியில் ஓர் இடத்தில் ஓடுகிற நீர், அடுத்த விநாடி வேறு இடத்துக்கு மாறி விடுவது மாதிரி வாழ்க்கையும் விநாடிக்கு விநாடி மாறிக்கொண்டே இருக்கிறது

ஜென் துறவி ஒருவரை தூக்கிலிட உத்தரவிட்ட அரசன்

அவரை அழைத்து ,"உனக்கு இன்னமும் இருபத்து நான்கு மணி நேரம் தான் இருக்கிறது நீ அதை எப்படி வாழப்போகிறாய்.?

இதைக் கேட்டு சிரித்தவாறு துறவி சொன்னார் :

"எப்பொழுதும் வாழ்வது போல் கணத்துக்கு கணம் வாழ்வேன். என்னைப் பொறுத்தவரையில் இந்தக் கணத்துக்கு மேலே எதுவும் கிடையாது. ஆகவே எனக்கு இன்னும் 24 மணி நேரம் இருந்தால் என்ன...? 24 வருடம் இருந்தால் தான் என்ன..? இதில் எந்த வித்தியாசமும் இல்லை .

நான் எப்போதுமே கணத்துக்கு கணம் வாழ்ந்து வந்திருப்பதால் இந்தக் கணமே எனக்கு அதிகம்தான் இதில் 24 மணி நேரம் என்பது எனக்கு மிக அதிகம் இந்த ஒரு கணம் போதும்" என்றார்.

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَالَّذِيْنَ هَادُوْا وَالصَّابِـُٔـوْنَ وَالنَّصٰرٰى مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَعَمِلَ صَالِحًـا فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களிலும், யூதர்களிலும், சாபியீன்களிலும், கிறிஸ்தவர்களிலும் எவர்கள் உண்மையாகவே அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்கின்றார்களோ அவர்களுக்கு நிச்சயமாக யாதொரு பயமுமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (குர்ஆன் : 5:69)

மன மெய்யியல் 15

(உனக்குள்ள சிறப்பைப் பற்றி நீ அறிவாயா ?)



ஆண் பெண் சிறியவர் பெரியவர் என்று அது யாராக இருந்தாலும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு மாபெரும் சக்தி புதைந்து கிடைக்கிறது.

கோடை காலம், இலையுதிர் காலம், வசந்த காலம், மழை காலம் என்று பூமிக்கு வேண்டுமானால் பருவ காலங்கள் மாறி மாறி வரலாம் ஆனால் சூரியனுக்கு எந்த பருவமும் கிடையாது. அதுபோல் உடம்புக்கு தான் குழந்தை பருவம் இளமை பருவம் வயோதிக பருவம் எல்லாம். ஆனால் மனசுக்கு எந்த பருவம் கிடையாது.

நாம் நம் மனதை எந்தக் காலகட்டத்திலும் துடிப்புடனும்,

மகிழ்ச்சிடனும் வைத்துக் கொள்ள முடியும்.

...இதையெல்லாம் பேசுவதற்கும், கேட்பதற்கும் நன்றாக இருக்கிறது ஆனால் இது சாத்தியமா என்பது தானே உங்கள் கேள்வி ?

நூறு சதவிகிதம் சாத்தியம். ஆனால் இதற்கு நாம் பயிற்சி பெற வேண்டும். நிறைய விஷயங்களை பார்க்க வேண்டும். நிறைய விஷயங்களை கேட்க வேண்டும்.

என்ன சொல்கிறீர்கள் ? எல்லோருக்கும் தான் கண்களும் காதுகளும் இறைவன் கொடுத்தாக கூறுகிறான்

قَلِيْلًا مَّا تَشْكُرُوْنَ قُلْ هُوَ الَّذِىْٓ اَنْشَاَكُمْ وَجَعَلَ لَـكُمُ السَّمْعَ وَالْاَبْصَارَ وَ الْاَفْـــِٕدَةَ

(நபியே!) நீங்கள் கூறுங்கள்: அவன்தான் உங்களை படைத்து உங்களுக்குச் செவிகளையும், கண்களையும், உள்ளங்களையும் கொடுத்தவன். (அவ்வாறிருந்தும்) நீங்கள் வெகு சொற்பமாகவே (அவனுக்கு) நன்றி செலுத்துகின்றீர்கள். (குர்ஆன் : 67:23)

எல்லோரும் தான் பார்க்கிறார்கள். கேட்கிறார்கள். ஆனால் எல்லோருமா மகிழ்ச்சியாகவும், துடிப்புடனும் இருக்கிறார்கள் ? என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றும்.

சிந்தித்துப் பாருங்கள். எல்லோரிடம் தான் பேனா, பென்சில் இருக்கிறது. ஆனால் எல்லோருமோ எழுத்தாளராகவும், ஓவியராகவும் இருக்கிறோம் ? பேனாவும், பென்சிலும் எப்படி ஒரு கருவியோ அது மாதிரி தான் கண்களும் காதுகளும் !

பேனாவையும் ,பென்சிலையும் பயன்படுத்தத் தெரிந்தால்தான் அவன் ஓவியன். அதே மாதிரி கண்களும் காதுகளும் வெறும் கருவிகள் தான் இவற்றை சரியான வகையில் பயன்படுத்தினால் தான் மகிழ்ச்சி...துடிப்பு...சந்தோஷம்...

எதையெல்லாம் நினைத்து சந்தோஷப்படலாம் என்பதை விட்டுவிட்டு எதையெல்லாம் நினைத்து கஷ்டப்படலாம் வருத்தப்படலாம் என்று தேடித் தேடி பார்த்து கஷ்டப்படும் நபர்கள் நம்மில் அநேகர் உண்டு.

அவனுக்கு கார், பங்களா, தோட்டம் துறவு, அழகான மனைவி.. என்று நிறைய இருக்கிறதே அது போன்று எனக்கு இல்லையே என்று வருத்தப்படாதீர்கள். பாசத்தை உன் மீது கொட்டும் அன்பான மனைவி இருப்பது உனக்கு தெரியவில்லையே !

நபி அவர்களின் தோழர் ஹழ்ரத் உமர் அவர்கள் சிலரோடு மதினா நகரில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்போது தெருவில் ஒரு மனிதன் படுத்துக்கிடந்தான். அவன் தொழுநோயாளியாகவும், அழுக்கேறிய ஆடைகளோடும், உண்ண உணவில்லாமல், கை, கால் இல்லாத முடமாக இருந்தான்.

ஹழ்ரத் உமர் அவர்கள் அவனருகே நெருங்கி, தங்கள் தோழர்களைப் பார்த்து "இந்த மனிதனிடம் ஏதாவது இறைவனின் அருட்கொடை இருக்கிறதா?' எனக் கேட்டார்கள்.

அதற்கு "இவனிடம் அவ்வாறு யாதென்றும் தென்படவில்லையே' என்று தோழர்கள் பதிலளித்தனர். அப்போது, ஹழ்ரத் உமர் அவர்கள், "இம்மனிதன் சிரமமில்லாமல் மல, ஜலம் கழிக்கிறானே! அது அல்லாஹ்வுடைய அருளல்லவா?' என்று கூறினார்கள்.

ஈராக் நாட்டில் கூஃபா என்ற ஊரில் நடுப்பகல் தொழுகையை நிறைவேற்றுவதற்காக ஒருவர் தனது இல்லத்திலிருந்து பள்ளிவாசலை நோக்கி கிளம்பினார். வெயில் சூடு அதிகமாக இருந்தது.

வெயில் சூட்டிலிருந்து பாதுகாத்துக்கொள்ள தனக்கு ஒரு செருப்பு இல்லையே என்ற சிந்தனையோடு முன்னே பார்த்தால், அங்கே மற்றொரு மனிதர் கால்களே இல்லாமல் தவழ்ந்து செல்வதைப் பார்த்து கலங்கி,

"இறைவா! நான் உன்னிடம் என் கால்களுக்கு செருப்புக் கேட்டேன்; ஆனால் இங்கே ஒருவர் கால்களே இல்லாமல் இருக்கிறாரே!' என கண்ணீரோடு கூறிக்கொண்டார். நாம் சிந்திக்க வேண்டிய விஷயம்.

இறைவன் நம் எல்லோருக்கும் ஏராளமான சந்தோஷத்தை வழங்கியிருக்கிறான். ஆனால் எது பிறரிடத்தில் உள்ளதோ அதுதான் சந்தோஷம் என நினைத்து நம்மில் உள்ளதை அனுபவிக்கத் தெரியாமல் ஆகிவிடுகிறோம்

மன மெய்யியல் 16

(மனசின் கள்ளத் துரோகி சந்தேகம்)



வேலைக்குப் போய்விட்டு வீடு திரும்பிய முல்லாவின் ஆடையில் நீளமான ஒரு கறுப்பு முடியைப் பார்க்கிறாள் அவரது மனைவி. அவ்வளவுதான். பூகம்பமே வெடிக்கிறது.

"உனக்கும் ஒரு இளம்பெண்ணுக்கும் தொடர்பு இருக்கிறது!" என்று அவன் முல்லாவிடம் சண்டை பிடிக்கிறாள். “ஜன நடமாட்டம் நிறைந்த சந்தையின் வழியாக வந்தேன். அப்போது என் ஆடையில் இந்த முடி எப்படியோ ஒட்டியிருக்கும்!" - முல்லா பதில் சொல்கிறார்.

மனைவி அதை நம்பவில்லை. கண்ணீர் விட்டு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுகிறாள். அடுத்த நாள் வேலையிலிருந்து வீடு திரும்பிய முல்லாவின் ஆடையில் ஒரு நரைத்த முடி!

"ஐயையோ..! நேற்று இளம் பெண்... இன்று தலை நரைத்த பெண்ணா? காமாந்தகா! உன்னால் என் வாழ்க்கையே பாழாய்ப் போய்விட்டது" என்று தரையில் விழுந்து புரண்டு அழுகிறாள்.

அதற்கு அடுத்த நாள் வீடு திரும்பும்போது முல்லாவுக்கு மனைவியின் நினைவு வருகிறது. ஆடைகளை நன்கு உதறிவிட்டு வீட்டுக்குள் வருகிறார்.

முல்லாவின் மனைவி இவரின் ஆடைகளைப் பரபரவென்று சோதனை போடுகிறாள். எந்த முடியும் கிடைக்கவில்லை. 'அப்பாடா- தப்பித்தோம்' என்று முல்லா நிம்மதிப் பெருமூச்சுவிடப் போன சமயம்.

"அடப்பாவி..! போயும் போயும் இன்று ஒரு மொட்டைத் தலைப் பெண்ணின் வீட்டுக்கா போய் வந்தாய்.." என்று சொல்லி, முதல் இரண்டு நாட்களைவிட அதிகச் சத்தமாக அழ ஆரம்பித்தாள் முல்லாவின் மனைவி.

நபி (ஸல்) அவர்கள், 'உங்கள் சக மனிதர்கள் மீது சந்தேகம் கொள்ளாதீர்கள்' என்றார்கள். சந்தேகம் என்பது பொய்க்குச் சமம். நீங்கள் வேறொரு நபரை ஏதேனும் தவறு செய்ததாக நீங்கள் சந்தேகித்தால், உங்கள் சந்தேகத்திற்கு ஆதரவாக மறுக்க முடியாத ஆதாரம் உங்களிடம் இல்லை என்றால், நீங்கள் பொய்யைச் செய்கிறீர்கள்

சந்தேகங்களால் வாழ்வை தொலைத்தவர்கள்தான் எத்தனை எத்தனை. சந்தேகங்களால் துண்டாடப்பட்ட நட்புகள் தான் எத்தனை எத்தனை. சந்தேகங்களால் பிரிந்துவிட்ட தம்பதிகள்தான் எத்தனை எத்தனை. சந்தேகத்தால் உடைந்த குடும்பங்கள்தான் எத்தனை எத்தனை. இந்த சந்தேகங்களின் உண்மைத் தன்மையை உரசிப்பார்த்தால் பெரும்பாலும் எல்லாம் வெறும் ஊகங்களாகவே இருந்திருக்கும். எதுவும் உண்மையாக இருந்திருக்காது.

பொதுவாகவே சந்தேகங்கொள்வது தடுக்கப்படவில்லை. மாறாக மிக அதிகமாக சந்தேகங்கொள்வதும் எல்லாவிதமான சந்தேகங்களைப் பின்பற்றுவதும்தான் தடுக்கப்பட்டுள்ளன.

காரணம் இதுதான்: அதாவது, அடுத்தவரைக் குறித்து எவ்வித காரண காரியமும் இன்றி சந்தேகப்படுவது அல்லது மற்றவர்களைப்பற்றி கருத்துக் கூறும்போது, எப்போதும் தவறான சந்தேகத்திலிருந்தே ஆரம்பிப்பது, அல்லது வெளிப்படையாக எவர்களின் நிலை, அவர்கள் நல்லவர்கள்; கண்ணியமானவர்கள் என்று காட்டுகிறதோ அவர்களின் விஷயத்தில் தவறாகச் சந்தேகிப்பது.

இதேபோன்று ஒரு மனிதனுடைய சொல்லிலோ செயலிலோ நன்மைக்கும் தீமைக்கும் சமவாய்ப்பு இருக்கும்போது, நாம் வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் அவனைத் தீயவன் என்றே கருதுவதும் பாவச்செயலாகும்.

இறைவன் கூறுகின்றான்: “இறைநம்பிக்கை கொண்டவர்களே, அதிகமாக சந்தேகம் கொள்வதைத் தவிர்த்துவிடுங்கள். ஏனெனில், சில சந்தேகங்கள் பாவமாக இருக்கின்றன”. (திருக்குர்ஆன் 49:12)

இறைத்தூதர் (ஸல்) அவர்களது வாழ்வில் நடைபெற்ற ஒரு சிறிய நிகழ்வு, நம்மில் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டிய உயரிய நாகரிகத்தைக் கற்றுத்தருகிறது. சந்தேகங்களாலும் உறுதியற்ற தகவல்களாலும் நமது நிம்மதியையும் அடுத்தவர் நிம்மதியையும் கெடுத்துவிடக் கூடாது எனும் பாடத்தைச் சொல்லித்தருகிறது.

நபி (ஸல்) அவர்களின் துணைவியார் ஸபிய்யா (ரலி) அவர்கள் கூறியதாவது:

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ரமலானில் இறுதிப் பத்து நாட்களில் இஃதிகாஃப் (இறைவனுக்காக இறைத்தூதர் காட்டிய வழிமுறையில் குறிப்பிட்டகாலம் பள்ளிவாசலில் தங்கும் ஒருவகை வழிபாடு) இருந்தபோது அவர்களைச் சந்திக்க நான் சென்றேன். சிறிது நேரம் அவர்களுடன் பேசிவிட்டு எழுந்தேன்.

அப்போது நபி (ஸல்) அவர்களும் என்னுடன் எழுந்து வந்தார்கள். உம்மு சலமா (ரலி) அவர்களுடைய வீட்டு வாசலுக்கு அருகில் பள்ளிவாசலின் தலைவாயிலை நான் அடைந்தபோது அன்சாரிகளில் (மதீனாவாசிகள்) இருவர் கடந்து சென்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு அவ்விருவரும் முகமன் (சலாம்) கூறினர்.

அப்போது அவ்விருவரிடமும் நபி (ஸல்) அவர்கள், “சற்று நில்லுங்கள், இவர் (என் மனைவி) ஸபிய்யா பின்த் ஹுயை அவர்கள்தான்” என்று கூறினார்கள்.

அவ்விருவரும் ஆச்சரியத்துடன், “அல்லாஹ் தூய்மையானவன் (ஸுப்ஹானல்லாஹ்), அல்லாஹ்வின் தூதரே! (தங்களையா சந்தேகிப்போம்!)” என்றனர்.

அப்போது நபி (ஸல்) அவர்கள், “நிச்சயமாக சைத்தான் மனிதனின் ரத்த நாளங்களில் ஊடுருவியிருக்கின்றான்; உங்கள் உள்ளங்களில் தவறான எண்ணத்தை அவன் விதைத்துவிடுவானோ என நான் அஞ்சினேன்” எனக்கூறினார்கள். (நூல்: புகாரி)

எனது அருமை மனைவியிடம்தான் நான் உரையாடிக் கொண்டிருக்கின்றேன் என்பதை அவ்விரு தோழர்களையும் அழைத்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தன்னிலை விளக்கம் கொடுக்காமல் இருந்திருந்தால் என்னவாயிருக்கும் என்பதை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். தேவையற்ற பின்விளைவுகள், புரளிகள், மனவேதனைகள் ஏற்பட்டிருக்கும்.


அவ்விருவரில் யாரேனும் ஒருவர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஏதோ ஒரு பெண்மணியுடன் பேசிக்கொண்டிருக்கின்றார் என்று எவரேனும் ஒருவரிடம் சொன்னால்கூட போதும், அவ்வளவுதான்... பின்னர் அந்த செய்திக்குக் கால் முளைத்து கை முளைத்து ஊதிப் பெரிதாக்கப்பட்டு, தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டிருக்கும். ஆகவேதான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் முளையிலேயே அதனைக் கிள்ளி எறிகின்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பிறிதொரு தடவை இவ்வாறு கூறினார்கள்: “ஆதாரமில்லாமல் அடுத்தவரைச் சந்தேகப்படுவது குறித்து உங்களை நான் எச்சரிக்கின்றேன். ஏனெனில், சந்தேகம் கொள்வது மிகப்பெரிய பொய்யாகும்”. (நூல்:புகாரி)

அல்லாஹ் கூறுகின்றான்: “இறைநம்பிக்கை கொண்டவர்களே! தீயவன் ஒருவன் ஏதேனும் ஒரு செய்தி உங்களிடம் கொண்டு வந்தால், அதன் உண்மைநிலையை நன்கு விசாரித்துத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் தெரியாத்தனமாக ஏதேனும் ஒரு கூட்டத்தினர்க்கு தீங்கிழைத்துவிட்டுப் பின்னர் உங்கள் செயலுக்காக வருந்தும் நிலை ஏற்பட்டுவிடக் கூடாது”. (குர்ஆன் 49:6)

மன மெய்யியல் 17

("நீ ஒன்பது முறை எழுந்தவன்")



வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கும் வெற்றியை விட தோல்வி அதிக உத்வேகத்தை அளிக்கக் கூடிய சக்தி கொண்டது. வாழ்நாள் முழுவதும் கிடைக்கும் அனுபவங்களைத் தோல்வி மிக எளிதாக வாழ்க்கையைக் கற்றுக்கொடுத்து விடுகிறது !

அது ஷூ தயாரிக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனம். தனது கம்பெனியின் ஷூக்களுக்குக் குறிப்பிட்ட ஓர் ஆப்பிரிக்க நாட்டில் எவ்வளவு 'டிமாண்ட்' இருக்கிறது என்று தெரிந்துகொள்ள கம்பெனி முதலாளி, அந்த நாட்டுக்கு ஒரு மானேஜரை அனுப்பினார்.

போன வேகத்திலேயே தனது நாட்டுக்கு திரும்பிப் பறந்து வந்த மானேஜர், "அந்த நாட்டில் நாம் ஷூக்களையே விற்க முடியாது..' என்று ரிப்போர்ட் கொடுத்தார்!

"ஏன்..? என்று கேட்டதற்கு அவர் சொன்ன பதில் அந்த நாட்டில் யாருமே ஷூ அணிவதில்லை !

முதலாளி 'முடியாது' என்ற வார்த்தையை சுலபமாக ஏற்றுக் கொள்ளும் ரகம் கிடையாது. அதே ஆப்பிரிக்க நாட்டுக்கு இன்னொரு மானேஜரை அனுப்பினார். அந்த நாட்டுக்குப் போய் ஸ்டடி செய்த இரண்டாவது மானேஜர், சந்தோஷத்தில் துள்ளி குதித்துக்கொண்டு முதலாளியின் அறைக்குள் ஓடிவந்து சொன்னார்.

"நமது கம்பெனியின் ஷூக்களுக்கு அங்கே மிகப்பெரிய மார்க்கெட் இருக்கிறது

"எப்படி..? என்று அவரிடம் முதலாளி கேட்டார்.

அதற்கு இரண்டாவது மானேஜர் சொன்ன பதில் அந்த நாட்டில் யாருமே ஷூ அணியதில்லை.

இதிலிருந்து நாம் படிக்கவேண்டிய பாடம் இதுதான்! பொதுவாக எல்லா அனுபவங்களையும் இரண்டே வகையாகத்தான் பிரிக்க முடியும்.

ஆட்படும் அனுபவம் எதுவாக இருந்தாலும், அதிலிருந்து ஏதாவது ஒரு பாடம் படிக்க வேண்டும் அது சிறப்பான அனுபவம்

எந்த அனுபவத்திலிருந்து அவன் பாடம் எதுவுமே கற்றுக்கொள்ளவில்லையோ, அது - மோசமான அனுபவம்!

மின்சார விளக்கைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன் தனது முதல் முயற்சியிலேயே வெற்றியைத் தொட்டுவிடவில்லை. ஏறக்குறைய ஆயிரம் சோதனைகளுக்குப் பிறகுதான் அவர் 'பல்ப்' கண்டுபிடித்தார்.

நீங்கள் ஆயிரம் சோதனை செய்தீர்கள்... அதில் 999 சோதனைகள் தோல்வியடைந்தன. ஒன்றே ஒன்றுதான் வெற்றி பெற்றது' இல்லையா ?" என்று அவரிடம் யாரோ ஒருமுறை கேட்டார்கள்.

அதற்கு எடிசன் சொன்னார் : "முதல் 999 சோதனைகளிலும் நான் எதுவுமே கண்டுபிடிக்கவில்லை என்று யார் சொன்னது..? ஒரு பல்ப்பை உருவாக்கத் தவறாக முயற்சி செய்வது எப்படி என்று இந்த 999 சோதனைகளிலிருந்து தான் கற்றுக் கொண்டேனே! "

எழுந்து நடந்தால்,இமய மலையும் நமக்கு வழி கொடுக்கும்.


உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் நம்மை சிறை பிடிக்கும்

" பத்தாவது முறையாகக் கீழே விழுந்தவனைப் பார்த்து பூமி முத்தமிட்டு சொன்னது. "நீ ஒன்பது முறை எழுந்தவன்" என்று...

விழுவதெல்லாம் எழுவதற்கு தானே தவிர விழுந்து அழுவதற்கு அல்ல, என்பதை தோல்விகள் நமக்கு சொல்லும் பாடம்.

மன மெய்யியல் 18

(நியூட்டனின் மூன்றாம் விதி)



அடுத்தவர்களுக்குக் கெடுதல் நினைக்காத வகையில் மனதைப் பழக்கப் பழக்க நம் வாழ்வில் ஓர் ஆச்சரியம் நிகழ்வதை நாம் பார்ப்போம்.

பௌதிகத்தில் நியூட்டனின் மூன்றாம் விதி என்றொரு விதி உண்டு. `ஃபார் எவ்ரி ஆக்ஷன் தேர் ஈஸ் ஆன் ஈக்வல் அண்ட் ஆப்போசிட் ரியாக்ஷன்' என்கிறது அந்த விதி. (For every action there is an equal and opposite reaction) அதாவது ஒவ்வொரு செயல்பாட்டுக்கும் அதற்குச் சமமான எதிர்ச் செயல்பாடு உண்டு என விளக்குகிறது அது. நியூட்டன் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்த விதி அது.

யோசித்துப் பார்த்தால் இது பௌதிகம் சார்ந்த விஞ்ஞான விதி மட்டுமல்ல. இது நம் அனைவரது வாழ்விலும் ஊடுருவியிருக்கும் நமது வாழ்வியல் சார்ந்த விதியும் கூட.

நாம் எதைச் செய்கிறோமோ அதுவே நமக்குத் திரும்ப வருகிறது. நாம் கெட்டதைச் செய்தால் கெட்டது வரும். நல்லதைச் செய்தால் நல்லது வரும். நம் செயல்கள் அனைத்தும் சுவரில் எறிந்த பந்தைப் போன்றவை. அவை நம்மை நோக்கிய திரும்பி வரும். நம்

செயல்களின் விளைவுகளிலிருந்து நாம் ஒருபோதும் தப்பவே இயலாது.

வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினையறுப்பான்!' என்று பெரியவர்கள் சொல்வது இந்த விதியைப் பற்றியதுதான். ஆனால் இந்த விதி உடனே செயல்படுவதில்லை. இன்று பிறர்க்குக் கெடுதலைச் செய்து வாழ்வதில் ஒருவர் ஆனந்தம் காணலாம். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அத்தகைய கெடுதல் அதைச் செய்தவருக்கே திரும்ப வந்துசேரும் என்பது உறுதி.

இன்று நான் ஒருவருக்கு (நல்லது, கெட்டது,) செய்வதை நாளை இன்னொருவர் எனக்கு செய்வார். இதைத்தான் வாழ்க்கை ஒரு வட்டம் என்று சொல்வார்கள்

ஒரு ஊரில் ஒரு குயவன் அவன் தாய், மனவி, மற்றும் மகனுடன் வாழ்ந்து வந்தான். குயவனின் மனைவிக்கு அவளது மாமியாரைப் பிடிக்கவில்லை. அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பத் துணிந்தாள். குயவனை தினமும் அவனது அம்மாவை பக்கத்தில் ஒரு வீட்டில் குடியமர்த்தும் படி சொன்னாள்.

வெகு நாட்கள் குயவன் அவள் சொன்னதை காதிலேயே போட்டுக் கொள்ளாமல் இருந்தான்.மனைவி விடாமல் நச்சரித்தாள். அவனது அம்மாவிற்குத் தனியாக இருந்தால் ஒரு குறையும் வராது என்றும், அவரது சாப்பாட்டுத் தேவையைத் தான் கவனித்துக் கொள்வதாகவும் சொன்னாள்.

ஒரு நாள் குடியானவனுக்கு நச்சரிப்புத் தாங்க முடியவில்லை. அம்மாவைப் இருபது அடி தள்ளியிருந்த ஒரு வீட்டில் குடியமர்த்தினான்.

மனைவி மாமியாரிடம் குயவன் செய்த தட்டு ஒன்றைக் கொடுத்து, வேளாவேளைக்குத் தன் வீட்டுக்குத் தட்டை எடுத்து வந்தால் அதில் உணவு நிரப்பித் தருவதாகவும், அதை மாமியார் அவர் வீட்டுக்கு எடுத்துச் சென்று மகிழ்ச்சியாகச் சாப்பிடலாம் என்றும் கூறினாள்.

மாமியாருக்கு இது அவமானமாகத் தோன்றினாலும், தன் மகனுக்காக வாயைத் திறக்காமல் மருமகள் வழியில் வாழ்ந்து வந்தாள்.

பேரனுக்குப் பாட்டி வீட்டை விட்டுப் போனது அறவே பிடிக்கவில்லை. அவன் அம்மாவுக்குத் தெரியாமல் சில சமயம் பாட்டி வீட்டிற்குச் சென்று விளையாடுவான்.

அவன் வளர வளர குயவன் மண்பாண்டம் செய்வதைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான். சில சமயம் குயவன் வேலை செய்யாத போது அவனது இயந்திரத்தை மகன் இயக்கிப் பார்க்க ஆரம்பித்தான்.

ஒரு நாள் மகனுக்கு அப்பாவைப் போலவே மண்பாண்டம் செய்ய வந்தது. மிகச் சிறு வயதிலேயே அவன் அப்பாவின் தொழிலைக் கற்றுக் கொண்டான்.

அவன் முதல் முதலில் தன் அம்மாவுக்கு அருமையான தட்டு ஒன்றைச் செய்தான். அதை அவன் அம்மாவிடம் கொடுத்த போது அவள் மகனின் திறமையை நினைத்து பெருமைப் பட்டாள். தனக்கு அவன் முதலில் பொருள் செய்து கொடுத்ததை எண்ணி அளவில்லா மகிழ்ச்சி அடைந்தாள்.

தனது சிறிய மகனை இவ்வாறு கேட்டாள்: "மகனே! நீ செய்த தட்டு மிக அருமை. எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எத்தனையோ பாண்டங்கள் இருக்கும் போது ஏன் எனக்கு ஒரு தட்டைச் செய்து தர வேண்டும் என்று உனக்குத் தோன்றியது?"

மகன் குழந்தைத் தனமாகச் சொன்னான்: "அம்மா! ஒரு நாள் நான் அப்பாவைப் போலக் கல்யாணம் செய்து கொள்வேன். அப்போது நீ பாட்டியைப் போல பக்கத்து வீட்டுக்குப் போய் விடுவாய் அல்லவா. அப்போது உனக்கு என் மனைவி தினமும் சாப்பாடு கொடுக்க ஒரு தட்டு வேண்டுமல்லவா! அதைத்தான் உனக்கு நான் இப்போது செய்து கொடுத்தேன்"

மன மெய்யியல் 19

(வாழ்க்கையின் அர்த்தம்தான் என்ன ?)



வாழ்க்கைத் தத்துவத்தைத் தேடி புறப்பட்ட இளைஞன், நெல் அறுவடை செய்யும் உழவனிடம் போய், "வாழ்க்கையின் அர்த்தம் தான் என்ன ?" என்று கேட்டான்.

" எனக்குத் தெரியாது. அறுவடை செய்து கழனியில் கொடுத்தால் கூலி தருவாங்க என் குடும்பத்தினர் பசிக்கு அது உதவும்.

தூரத்தில் ஆடு மேய்க்கும் இடையரிடம் போய், "வாழ்க்கையின் அர்த்தம் தான் என்ன ?" என்று கேட்டான்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. கழனி காட்டில் ஆடு மேய்த்துவிட்டு கொட்டகையில் அடைத்தால், நாலு பணம் தருவாங்க என் குடும்ப வாழ்க்கைக்கு அது போதும் !

ஆட்டை அறுத்து பிரியாணி செய்யும் சமையல்காரரிடம் போய் "வாழ்க்கையின் அர்த்தம் தான் என்ன ?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாது. கல்யாண பந்தி சாப்பாடு செய்தால், பணம் கிடைக்கும் அது போதும் என் வாழ்க்கைக்கு" என்றான்.

கல்யாண விருந்தில் நம்ம இளைஞனுக்கும் பிரியாணி உணவு பரிமாறப்பட்டது. அந்த பிராணி உணவில் உழவன், இடையன் , சமையல் காரனின் வாழ்க்கை அர்த்தமாகி இருந்தது .

فَلۡيَنۡظُرِ الۡاِنۡسَانُ اِلٰى طَعَامِهٖۤ

மனிதன் தன்னுடைய உணவை (அது எங்கிருந்து எவ்வாறு வருகின்றது என்பதைச்) சிறிது கவனித்துப் பார்க்கவும். (குர்ஆன் : 80:24)

உண்டு முடித்து வெளியே வரும் போது, பந்தி வாசலில் திருவோடு ஏந்திய பித்தன் ஒருவர் அவர் பாட்டிற்கு ஒரு பாட்டுப் பாடினார்.

" அவனவன் செய்த செயலுக்கு அங்கேயே கூலி கொடுத்தாச்சி !

வாழ்க்கையின் அர்த்தம் தேடி வந்தவனுக்கு ஒரு வாய் சோற்றில்

ஞானம் கிடைச்சாச்சி ! "

நம்ம இளைஞனுக்கு வாழ்க்கையின் அர்த்தம் புரிந்து போனது.

வாழ்க்கை எல்லாவற்றையுமே தன்னிடத்தில் வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், புதிது புதிதாக ஒரு கூட்டணி உருவாகும்போதுதான், அந்தக் கூட்டணியில் இருந்தவை இத்தனை நாட்கள் தனித்தனியாக இருந்ததற்கான பொருள் என்னவென்று விளங்கும் என்பதை அவன் புரிந்துகொண்டான்.

கடவுள் நம் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறார். நமக்கு என்ன தேவையென்றால் ஒரு புதிதான, சரியான கூட்டணி.

வாழ்க்கைக்கு என்ன பொருள் என்று இப்போது உங்களுக்குப் புரிந்துவிட்டதா?

இறைந்து கிடக்கும் சொற்களைத் திரட்டி எடுத்து புதுக் கூட்டணி அமைத்து ஒரு கவிதையை உருவாக்குங்கள். கவிதை உருவானபோதும் சொற்கள் அகராதியில் அங்கேயேதான் இருக்கும்.

உதிர்ந்து கிடக்கும் எண்களை எடுத்து ஒரு புதிய கணக்கை உருவாக்க முயற்சி செய்யுங்கள். புதிய கணக்கு இங்கே உருவானபோதும் பழைய எண்கள் அங்கே அதன் மதிப்பை ஒன்றும் இழந்து விடாது.

கொட்டிக் கிடக்கும் வண்ணங்களைக் குழைத்துக் கூட்டணி அமைத்து புதியதோர் ஓவியத்தை உருவாக்குங்கள். புதிய ஓவியம் இங்கே உருவான போதும் அங்கே இருக்கும் வண்ணங்கள் ஒன்றும் நிறமிழந்து போகாது.

இவையெல்லாம் சின்னச் சின்ன முயற்சிகள்தானே என்று அலட்சியமாகக் கருதாதீர்கள். சின்னச் சின்ன முயற்சிகள்தான் பெரிய பெரிய முயற்சிகளுக்கு அடித்தளமாக அமையும்.

சின்ன பிண்டத்தில் உள்ளதுதான் அண்டத்தில் உள்ளது. பெரிய அண்டத்தில் உள்ளதுதான் சின்ன பிண்டத்திலும் உள்ளது.

உங்களால் உருவாக்கப்பட்டவை, மற்றவர்களுக்கு அளிக்கும் ஆனந்தத்தைக் காணும்போது உங்களுடைய வாழ்க்கைக்கு என்ன பொருள் என்பது உங்களுக்கே விளங்கிவிடும் !

நீங்கள் வாழும் வாழ்க்கையின் அர்த்தம் உங்களுக்கு புரிந்திருக்கும் என நினைக்கிறேன்.

மன மெய்யியல் 20

(விழிப்புணர்வு - Awareness)



வீதியில் வாகனத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறீர்கள். வாகனத்தை முன்னே பார்த்து ஜாக்கிரதையாகத்தான் ஒட்டுகிறேன் என்றாலும் உங்களுக்குப் பின்பக்கமாக என்ன வருகிறது என்று விழிப்புணர்வு இல்லையென்றால்,நீங்கள் துன்பப்படப் போகிறீர்கள் என்று அர்த்தம்.

சர்க்கஸ் விளையாட்டில் விழிப்புணர்வு அவசியம் கர்ணம் தப்பினால் மரணம். விழிப்புணர்வு மட்டுமே அங்கே பேணப்படுகிறது.

Philosophy என்ற ஆங்கில வார்த்தையைத் தமிழில் 'தத்துவம்' என்று சொல்லலாம். சம்ஸ்கிருத மொழியில் இதற்கு 'தரிசனம்' என்று பெயர் ஆம் - 'பார்ப்பது' என்று பொருள்.

பார்ப்பதற்கு என்னவெல்லாம் தேவை? கண்கள் மட்டும் இருந்தால் போதுமா? விழிகள் இருந்தால் போதாது. 'விழிப்பு உணர்வு தேவை' என்கிறார் பகவான் கிருஷ்ணர்! இங்கு பார்ப்பது என்ற அந்தப் பார்வை அகப்பார்வையை குறிப்பிடுகிறார்.

இந்த விழிப்புணர்வு இருந்தால்தான்,1) பொருட்கள், 2) மனிதர்கள் 3) நாம், இந்த மூன்றையும் எப்படி வித்தியாசப்படுத்திப் பார்ப்பது என்பது நமக்குப் புலப்படும்.

'எத்தனை வீடு வைத்திருக்கிறாய்' அது எவ்வளவு மதிப்பு'" 'என்ன கார் வைத்திருக்கிறாய்' எத்தனையாவது ஆண்டு மாடல்?" என்றுதான் பொருட்களைப் பற்றிப் பேசும்போது குறிப்பிடுவோம்

மேலும். பொருட்கள் எல்லாமே கருவிகள், அதனால், பொருட்களைக் கணித ரீதியாக பார்க்கவேண்டும். பொருட்களைக் கருவியைப் போலத்தான் பார்க்க வேண்டும்! பயன்படுத்த வேண்டும்!.

சரி, அடுத்து மனிதர்களை எப்படிப் பார்ப்பது பொருடகளைப் பார்க்கப் பயன்படுத்தும் அதே அளவுகோலை வைத்து மனிதர்களைப் பார்க்கக்கூடாது. அன்புள்ள அப்பா, பாசமுள்ள அம்மா, நேசம் மிகுந்த சகோதரி, நன்றிமிக்க நண்பன் என்று மனிதர்களைப் பார்க்கும்போது உறவுமுறை என்ற அன்புதான் இங்கே அளவுகோல்!

ஆனால், நடைமுறையில் நாம் என்ன செய்கிறோம்?

கருவியாகப் பயன்படுத்த வேண்டிய வீடு, நான் பார்த்து பார்த்து கட்டிய வீடு, எனக்குப் பிடித்த கார், என் பிரியமான டி.வி. போன்ற பொருட்கள் மீது உறவுமுறை வைக்காத குறையாக, உணர்வு ரீதியாகப் பற்றுதல் வைக்கிறோம்.

அன்பு வைக்கவேண்டிய அம்மா, அப்பா. மனைவி, குழந்தைகள், சகோதரன், நண்பர்கள் போன்ற மனிதர்களை, நமக்கு வேண்டியவற்றை நிறைவேற்றித் தரும் கருவிகளாக பயன்படுத்துகிறோம்!

பொருட்களைக் கணித ரீதியாகப் பார்க்கவேண்டும் மனிதர்களை அன்போடு பார்க்க வேண்டும். சரி.

மூன்றாவதாக நாம் -நம்மை நாமே உள்நோக்கிய பார்ப்பது எப்படி? நம்மை எப்படிப் பார்ப்பது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், 'நாம்' என்று நாம் குறிப்பிடும் உடம்பு என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நமது உடம்பில் மூன்று உடம்புகள் உண்டு. முதலாவது ஸ்தூல சரீரம் சதையாலும் எலும்புகளாலும் ஆன உடம்பு' இரண்டாவது. சூட்சும சரீரம் அதாவது நமது அறிவு, சிந்தனை, எண்ணங்கள் ஆகியவற்றை

உள்ளடக்கியது நாம் கடைசியாக எஞ்சி நிற்பது காரண சரீரம் தமிழில் விழிப்பு உணர்வு (Awareness) என்று சொல்லலாம்.

பார்த்தீர்களா? இப்போது நாம் ஆரம்பித்த இடத்துக்கே வந்துவிட்டோம் பிரச்னையை எதிர்கொள்ள நமக்குத் தேவை 'பார்வை'' பார்ப்பதற்குத் தேவை அந்த பார்வைதான் 'விழிப்பு உணர்வு''

உங்கள் உயிர் ஏதோவொன்றிற்காக எல்லா நேரமும் ஏங்கிக் கொண்டே இருக்கிறது. அது குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைய வேண்டும் என்கிற ஏக்கம். அதை நோக்கி விழிப்புணர்வோடு நகர்கிறீர்களா? விழிப்புணர்வின்றி நகர்கிறீர்களா? என்பதுதான்

விழிப்புணர்வில்லாத நிலையில் நீங்கள் சொர்க்கத்தை நோக்கி இழுக்கப்பட்டால் கூட அது உங்களுக்கு துன்பமயமாகத்தான் இருக்கும்.

இப்போது உங்களை தரதரவென்று இழுத்துச் செல்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். எங்கே போகிறோம் என்று உங்களுக்குத் தெரியாத பட்சத்தில் அது மிகப்பெரிய வேதனையாகத்தான் இருக்கும். உங்களைக் கொண்டு போய் விடுகிற இடம் ஓர் அழகிய கடற்கரையாகக் கூட இருக்கலாம்.

ஆனால் அந்தப் பயணம் நரக வேதனையைக் கொடுக்கும். ஏனெனில் விழிப்புணர்வுடன் செய்யப்பட வில்லை என்றே ஒரே காரணம்.

அகப்பார்வை தொடர்பாக குர்ஆன் கூறும் வாசகங்கள்...

மக்காவில் வாழ்ந்த இறை நிராகரிப்பாளர்களின் அகப் பார்வையற்ற நிலை பற்றி குர்ஆன் இப்படி கூறுகின்றது.

"வானங்களிலும், பூமியிலும் எத்தனையோ அத்தாட்சிகள் உள்ளன.(எனினும்) அவர்கள் அதை புறக்கணித்தவர்களாகவே, அவற்றின் அருகே நடந்து செல்கின்றனர்.(12:105)

அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளை மட்டுமல்ல அல்லாஹ்வின் ரசூலையும் அகப்பார்வையில் பார்க்காமல் அபூ லஹப் அபூ ஜஹில் போன்ற நிராகரிப்பாளர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அப்துல்லாஹ்வின் மகனாக பார்த்தார்கள். தோல்வி அடைந்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அல்லாஹ்வுடைய ரசூலாக அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் அகப்பார்வையுடன் பார்த்தார்கள். வெற்றியடைந்தார்கள் .

மன மெய்யியல் 21

(சின்னப் பிரச்சனை Vs பெரியப் பிரச்சனை)



அது ஒரு கிராமம். ஒரு நாள் கிராமத்துக்கு ஜென் துறவி ஒருவர் வந்தார். ஊர் மக்களில் பலர், "என் பிரச்னைகள் எல்லாம் ஒழிய வேண்டும்! நான் விரும்புவது எல்லாம் நடக்க வேண்டும்! இது மட்டும் நிறைவேறினால் என் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும்" என்றெல்லாம் துறவியிடம் சொன்னார்கள்.

எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக்கொண்ட துறவி, அடுத்த நாள் அந்தக் கிராமத்தில் ஓர் அசரீரியை ஒலிக்கச் செய்தார். "நாளை பகல் பன்னிரண்டு மணிக்கு இந்தக் கிராமத்தில் ஓர் அதிசயம் நடக்க இருக்கிறது. ஆம், உங்களின் பிரச்னைகளையெல்லாம் ஒரு கற்பனையான கோணிப்பையில் போட்டுக் கட்டி எடுத்துக்கொண்டு போய் ஆற்றின் அடுத்த கரையில் போட்டுவிடுங்கள்.

பிறகு, அதே கற்பனைக் கோணிப் பையில் வீடு, நகை, உணவு என்று எதை நீங்கள் ஆசைப்பட்டாலும் அதில் போட்டு வீட்டுக்குக் கொண்டுவருவதாகக் கற்பனை செய்யுங்கள்! உங்கள் கற்பனை பலிக்கும்!"

'இந்த அசரீரி உண்மையா? இல்லையா?' என்பதைப் பற்றி ஊர் மக்களுக்கு ஒரே குழப்பம். என்றாலும், அசரீரியான குரல் அவர்களுக்குப் பிரமிப்பை உண்டாக்கியது.

'அது சொன்னபடி செய்து, பிரச்னைகள் எல்லாம் தொலைந்து, நாம் ஆசைப்பட்டதெல்லாம் கிடைத்தால் நன்மைதானே. அசரீரி வாக்குப் பொய்த்துப் போனாலும் நஷ்டம் ஏதும் இல்லையே! அதனால் அசரீரி சொன்னபடியே செய்துதான் பார்ப்போமே!' என்று..

அடுத்த நாள் நண்பகல், ஊர்மக்கள் தங்களின் பிரச்னைகளை மூட்டைக்கட்டிக் கொண்டுபோய் ஆற்றின் அடுத்த கரையில் போட்டுவிட்டு பங்களா, வைர நெக்லஸ், கார் என்று தாங்கள் சந்தோஷம் என்று கருதிய அனைத்துப் பொருட்களையும் கற்பனை மூட்டையில் கட்டியெடுத்துக்கொண்டு ஊர் திரும்பினார்கள்!

திரும்பியவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கித் திக்குமுக்காடிப் போனார்கள். ஆம், அசரீரி சொன்னது அப்படியே பலித்துவிட்டது! கார் வேண்டும் என்று நினைத்தவரின் வீட்டு முன் நிஜமாகவே கார் நின்றிருந்தது. மாடிவீடு வேண்டும் என்று கேட்டவரின் வீடு, மாடிவீடாக மாறியிருந்தது. எல்லோருக்கும் சந்தோஷம் பிடிபடவில்லை! ஆனால், அந்தச் சந்தோஷம் கொஞ்சம் நேரம்தான்!

தங்களைவிட அடுத்த வீட்டுக்காரன் அதிக சந்தோஷமாக இருப்பது போல் ஒவ்வொருவருக்குமே தோன்றியது. ஏன் என்று விசாரிக்கத் தொடங்கினார்கள். அடுத்த கணம் கவலை மீண்டும் அவர்களின் காலை வந்து கட்டிக்கொண்டுவிட்டது.

"ஐயையோ,நாம் ஒற்றை வடம் தங்க செயின் கேட்டோம். அதுதான் கிடைத்தது. ஆனால், அடுத்த வீட்டுப் பெண் ரெட்டை வடம் செயின் கேட்டு வாங்கிவிட்டாளே! நாம் வீடுதான் கேட்டோம்.

ஆனால், எதிர் வீட்டுக்காரன் சலவைக்கல் பதித்த பங்களா வேண்டும் என்று கேட்டு வாங்கிவிட்டானே... நாமும் அதுபோலக் கேட்டிருக்கலாமே! நல்ல சந்தர்ப்பம் கிடைத்தும் நழுவவிட்டுவிட்டோமே!" என்று கவலைப்பட்டவாறே மீண்டும் அந்தத் துறவியைச் சந்தித்துப் புலம்பத் தொடங்கிவிட்டார்கள். மறுபடி அந்த ஊரை விரக்தி ஆக்கிரமித்தது.

'பிரச்னைகள் இருந்தால் சந்தோஷமாக இருக்க முடியாது'என்றுதான் பலரும் நினைக்கிறார்கள்.பிரச்சனைகளை சந்தோஷத்தோடு முடிச்சு போட்டு பார்க்காதீர்கள். பிரச்சனைகள் எல்லோர் வாழ்விலும் இருக்கும். பிரச்சனைகள் ஒருபுறம் இருந்து விட்டுப் போகட்டும் நான் சந்தோஷமாக இருப்பேன் என்று ஒவ்வொருவரும் உற்சாகமாக இருக்க வேண்டும்.

அபூஹுரைரா {ரலி} அவர்கள் ஒரு சில பேரீத்தம்பழங்களை கையில் எடுத்துக் கொண்டு அண்ணல் நபி ﷺ அவர்களிடம் வந்து,

"யா ரஸூலல்லாஹ்..!இந்த போரீத்தம்பழங்களில் பரக்கத் ஏற்பட துஆ செய்யுங்கள் என்று கூறினார்கள்.

அதை பெற்றுக் கொண்டு நபி ﷺஅவர்கள் துஆ செய்து விட்டு,இதை ஒரு பையில் போட்டு வைத்துக் கொள்.உனக்கு தேவைப்படுகிறபோது அதில் உன் கரத்தை நுழைத்து எடுத்துக்கொள். ஆனால் அதை திறந்து பார்க்கக் கூடாது என்று கூறினார்கள். '

அதை பெற்றுக் கொண்ட அபூஹுரைரா (ரலி) அவர்களும் அதை பயன்படுத்தி வந்தார்கள்.தான் போகின்ற பயணங்களிலும், போர்க்களங்களிலும் அதை எடுத்துச்செல்வார்கள்.தானும் சாப்பிடுவார்கள், தன் தோழர்களுக்கும் கொடுப்பார்கள். இப்படியே பல வருடங்கள் ஓடின.

ஹஜ்ரத் உஸ்மான் {ரலி} அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட தினம் தான் அந்தப் பை அவர்களிடமிருந்து தொலைந்து போனது. {திர்மிதி}

அபூஹுரைரா (ரலி) அவர்கள் இது பற்றி கூறும்போது ,"எல்லோருக்கும் கலீபா

ஷஹீதாக்கப்பட்டது வருத்தம் என்றால், எனக்கு என் பேரீத்தப் பழ பை தொலைந்து சேர்த்து இரண்டு வருத்தம் "

இது குறித்து ஹதீஸ் விரிவுரையாளர்கள் கூறுவதாவது : முஸ்லிம்களுக்குள் குழப்பமும் பிரச்சனையும் ஏற்பட்டால் அல்லாஹ்வுடைய பரக்கத் எடுக்கப்பட்டு பிடுங்கப்படும்.

நபி ﷺஅவர்களின் காலத்தில் கிடைத்த அந்தப் பை ;

அபூபக்கர் {ரலி} அவர்களின் ஆட்சி காலம் 2 வருடம்.

உமர் {ரலி}அவர்களின் ஆட்சி காலம் 10 வருடம்.

உஸ்மான் {ரலி}அவர்களின் ஆட்சி காலம் 12 வருடம்.ஆக சற்று ஏறக்குறைய 25 வருடங்கள் அந்த பேரீத்தம்பழங்களை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

தானும் உண்டு மற்றவருக்கும் கொடுத்திருக்கிறார்கள்.அத்தனை வருடங்கள் கடந்த பிறகும் அது தொலைந்து போனதே தவிர தீர்ந்து போகவில்லை.இது தான் பரக்கத்தின் அடையாளம்.

நபி ﷺஅவர்கள் தங்கள் வாழ்வில் பல்வேறு கட்டங்களில் பரக்கத்தை நினைவு படுத்தியிருக்கிறார்கள்.அதற்காக துஆ செய்திருக்கிறார்கள். தங்களுடைய தோழர்களுக்காக துஆ செய்யும் போதும் அதிகாமாக இந்த பரகத்தை வழியுறுத்தி துஆ செய்தார்கள்.

அடுத்து பிரச்சனை தீருவதற்கு ,

"ஒரு தோழர் நபி ﷺஅவர்களிடம் வந்து: "யா ரஸூலல்லாஹ்..! உலகம் என்னை விட்டும் விரண்டு ஓடுகிறது. என்னை புறக்கணித்து செல்கிறது.என் கஷ்டம் நீங்கி என் குடும்பத்தை காப்பாற்ற வழி சொல்லுங்கள் என்று கேட்ட பொழுது,

நபி ﷺஅவர்களிடம் கேட்டார்கள்: " மலக்குமார்களின் தொழுகை விட்டு இன்னும் எதைக் கொண்டு படைப்புகளுக்கு ரிஸ்க் வழங்கப்படுகிறதோ அந்த தஸ்பீஹை விட்டு நீ எங்கே சென்றாய் ? என்று கேட்டு விட்டு சொன்னார்கள். தினமும் ஃபஜ்ரு உதயமாகி பஜ்ர் தொழுகை தொழுவதற்குள்

سبحان الله وبحمده سبحان الله العظيم أستغفر الله

(சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம் அஸ்தஹ்பிருல்லாஹ்)

என்ற திக்ரை 100 முறை தினமும் ஓதி வந்தால் உலகம் உங்களிடம் சரண்டர் அடைந்து விடும்.

இதைக் கேட்டு அந்த மனிதர் சென்று விட்டார். அதை ஓதினார். சிலநாட்கள் கடந்த பின் நபி இடம் வந்து சொன்னார். நபியே நான் இந்த அமலை செய்த பிறகு உலகத்தின் செல்வங்கள் என்னை முன்னோக்கி வந்து விட்டது. அது மிக நிறப்பமாகவும் இருந்தது எந்த அளவு என்றால் அந்த செல்வங்களை எங்கே வைப்பது என்றே எனக்கு தெரியவில்லை அந்த அளவுக்கு தந்து விட்டான் (நூல்: கஸாயிசுல் குப்ரா. இஹ்யா.)

சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம் என்பதன் முழு அர்த்தம் என்ன?

கண்ணியமிக்க அல்லாஹ்வை துதிக்கிறேன். அவனை போற்றி புகழ்ந்து துதி செய்கிறேன். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

இரண்டு வாக்கியங்கள் நாவுக்கு எளிதானவையாகும். நன்மை தீமை நிறுக்கப்படும் தராசில் கனமானவையாகும். அளவற்ற அருளாளனின் பிரியத்திற்குரியவையுமாகும்.

அவை "சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம்"

(புகாரி:6406)

மன மெய்யியல் 22

(எண்ண அலைகள்)



'என்ன வாழ்க்கை எப்போ பார்த்தாலும் பிரச்சனை பிரச்சனை... ச்சே.... இந்த சலிப்பை விரட்டி அடிக்கவும் தமக்கு தாமே உற்சாகத்தை ஊட்டிக்கொள்ளவும் நமக்கு உதவக்கூடிய புத்திதான் Auto Suggestion

" டேய் நாசர் ! உனக்குத் திறமை இருக்குடா. வேறு எவரை விடவும். இந்த வேலையை உன்னால் சிறப்பாகச் செய்ய முடியும்" - என்பது போல நாமே நம்மிடம் பேசிக்கொள்ளும்போது, நமது மனதில் உற்சாகம் பிறக்கும். நம் உடம்பிலும் உற்சாகம் தானாக ஊறும்! இந்த உற்சாகம்தான் Auto Suggestion.

நாம் உற்சாகமாக இருந்தால், தம் உடம்பிலிருந்து வெளிப்படும் ஒளி அலைகள் நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் உற்சாகப்படுத்தி விடும்! என்ன திடீர் என்று ஏதோ புரியாமல் பேசுகிறேன் என்று நினைக்கிறீர்களா? இல்லை' இது ஆன்மிகத்திலும் அறிவியலிலும் நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மை!

'நாம்' என்று நம்மைக் குறிப்பிட்டால் அதில் மூன்று 'நாம்'' இருக்கிறது.

ஒன்று தமது 'உடம்பு' என்ற நாம்!

இரண்டு நமது ''மனது' என்ற நாம்!

மூன்று தம்மைச் சுற்றி உடம்பு ஏற்படுத்துகிற 'அலைகள்' என்ற நாம்!

நாம் சாதாரணமாக சில பெரியவர்கள், சாலிஹின்களை பார்க்கும் போதும், அவர்கள் அருகில் அமர்ந்து இருக்கும்போது உங்களுக்கு ஏதோ இனம் புரியாத சக்தியையும், மனநிறைவையும், மன மகிழ்ச்சியையும் உணரமுடியும்.

ஆனால் சிலருடன் இருக்கும் போது இனம் புரியாத கவலை, பயம் , விரக்தி, ஏற்படுவதை உணரமுடியும். காரணம் அவர்களிடமிருந்து வெளிப்படும் எதிர் அலைகள் காரணம்.

இந்த ஒளி அலைகளைப் பற்றி புகழ்பெற்ற ஒரு 'ஜென்' கதை கூட உண்டு.

அவர் ஒரு துறவி' தன்னையும் உலகையும் முற்றிலுமாக உணர்ந்த மகான்! அவர் தினந்தோறும் காலைவேளையில் கடற்கரையில் உட்கார்ந்து தியானம் செய்வது வழக்கம்! அந்த வேளைகளில் 'சீகல்ஸ்' என்று சொல்லப்படும் கடல்பறவைகள் அந்த மகானின் பக்கத்தில் வந்து சந்தோஷமாக விளையாடும். சில பறவைகள் அந்த மகானின் தோளில்கூட உட்காரும்!

ஒருநாள் வழக்கம்போல கடற்கரைக்குத் தியானம் செய்யப் புறப்பட்ட அந்த மகானிடம் சிறுவன் ஒருவன், "உங்களைச் சுற்றிக் கடல்பறவைகள் வந்து விளையாடுகிறதே! எனக்கு ஒரு பறவையைப் பிடித்து வந்து தரக்கூடாதா?" என்று கெஞ்சினான்.

அந்தத் துறவியும், "சரி! ஒரே ஒரு பறவைதானே... பிடித்துக்கொண்டு வந்து தருகிறேன்" என்று சொல்லிவிட்டு கடற்கரைக்குத் தியானம் செய்யப் போனார்.

அன்று எல்லாப் பறவைகளும் அவரின் தலைக்கு மேலே பறந்து சென்றதே எந்தப் பறவையும் அவரை நெருங்கவில்லை! காரணம், அந்தத் துறவியின் உடம்பிலிருந்து வெளிப்பட்ட அலைகளைக் கொண்டே துறவியின் மனநிலையை பறவைகள் உணர்ந்து கொண்டன!

உலகில் நாம் காணும் அனைத்து பொருள்களும் அதிர்வுகள் என்கிற அலை ரூபங்களாக தான் இருக்கின்றன இந்த உண்மையை அணு விஞ்ஞானிகளும் கண்டறிந்து சொல்லி இருக்கிறார்கள். அணுவின் இயக்க தத்துவமே அதுதான்.

உங்களுக்கு தென்படும் அந்த வேலையை பெறுவதற்கான ஆற்றலை ஆழ்மனம் உங்களுக்கு கொடுக்கும். எதை சாதிக்க விரும்புகிறோமோ அதை சாதிக்க முடியும் என ஆழ்மனதில் முதலில் அழுத்தமான இமேஜை (உருவத்தை) ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

அதற்காண தீர்வு வழி முறைகள்: ஏதாவது ஒன்றை அடைய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் அது வெறும் ஆசையாய் இருப்பதானால் பயன் இல்லை. அந்த விருப்பமானது நிறைவேற்ற முயற்சி தேவை.

சரி முயற்சி செய்கிறோம். எப்போது அது சாத்தியப்படும். விரும்பியதை அடைய முடியும் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தால் மட்டும்தான் முயற்சியும் சாத்தியமாகிறது !

மின் அலைகள் பரவி சென்று பொருள்களை பாதிப்படைய செய்வது போல , நமது எண்ண அலைகளும் பரவி சென்று பொருள்களை பாதிக்கின்றன. அனைத்து பொருள்களும் அலை வடிவங்களாகத் தான் இயங்கி கொண்டிருக்கின்றன.

நமது எண்ணங்களும் அலை வடிவில் நம்மை சுற்றிலும் வியாப்பித்திருக்கின்றன. வலிமையான எண்ணங்களின் மூலம நம்மை சுற்றி உள்ளவர்களிடம் நம்மால் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

அந்த தாக்கம் நல்ல எண்ணங்கள் நேர் அலைகளால் நன்மையும், அந்த தாக்கம் தீய அலைகளால் கண்.திருஷ்டி பொறாமை போன்ற கெட்ட தீமைகளையும் ஏற்படுத்தும்.

கண்திருஷ்டி உண்டு என்பதற்கான குர்ஆனின் ஆதாரங்கள் :

(1) ومن شر حاسد إذا حسد

‘பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போது அவனின் தீங்கைவிட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்.’

(ஸுரதுல் பலக் 113:5) இவ்வாறு அல்லாஹ் பாதுகாப்புக் கேட்குமாறு பணித்துள்ளான்.

இப்னு கய்யிம் (ரஹ்) அவர்கள்: ‘கண்திருஷ்டி படக்கூடியவர்கள் அனைவரும் பொறாமைக் காரர்களாகும். ஆனால் பொறமைக்காரர்கள் அனைவரும் கண்திருஷ்டி

படக்கூடியவர்களல்லர்’ எனக் கூறுகிறார்கள். (தாதுல் மஆத் 4:167)

கண் திருஷ்டியால் கடுமையாக பாதிப்படைந்த ஸஹாபி

ஒருமுறை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெளியே செல்லும்போது ஸஹல்பின் ஹனீஃப் ரளியல்லாஹு அன்ஹு அவர்களும் மக்காவை நோக்கி உடன் நடந்து வந்தார்கள்.

ஒரு குறிப்பிட்ட இடம் வந்ததும், ஸஹல் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் குளித்தார்கள். மிக அழகிய உடல்கட்டும், வெண்மை நிறமுடைய ஸஹல் ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் உடல் வனப்பைக் கண்ட பனீ ஆத்தி குழுவைச் சேர்ந்த ஆமிர் பின் ரபிஆ ரளியல்லாஹு அன்ஹு, ‘இன்று போல் என்றும் முடிப் பொதிந்த கட்டான தேகத்தைக் கண்டதில்லை’ என்று கூறியதுதான் தாமதம், ஸஹல் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அப்படியே மயக்கமுற்று விட்டார்கள்.

இவ்விஷயம் உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. ‘நபியே! (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஸஹல் (ரளியல்லாஹு அன்ஹு) தலை தூக்க முடியாமல் அவதியுறுகிறார். அவர் விஷயத்தில் ஏதேனும் உபாயம் உண்டா?’ என (அங்குள்ளவர்கள்) கேட்டார்கள்.

‘இது சம்மந்தமாக யாரையேனும் நீங்கள் சந்தேகிக்கிறீர்களா?’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவ

‘ஆம்! ஆமிர் பின் ரபிஆ தான் அவரைப் பார்த்தார்’ எனக் கூறப்பட்டதும்,

‘உங்களின் சகோதரரை யாரேனும் எதற்காக கொல்ல வேண்டும்? உங்களை ஆச்சரியத்தில் அழ்த்திடவல்ல ஏதாவது ஒன்றை காண நேர்ந்தால் ‘பாரகல்லாஹ்’ என மொழிந்தால் போதாதா?’ என ஆமிர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி சற்று கோபமாகவே நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

பின் ஆமிர் பின் ராபிஆ ரளியல்லாஹு அன்ஹு அவர்களை, ‘ஸஹ்னுக்காக குளித்திடவும்’ என கட்டளையிட்டு, (அதன்பின்) ஆமிர் பின் ராபிஆ ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் முகம், இரு கைகள், இரு

முழங்கைகள், இரு முழங்கால்கள், இரு பாதங்களின் ஓரங்கள் ஆகிய உறுப்புக்களையும், அவர்களது ஆடையின் உள்ளேயும் கழுவப்பட்ட நீரை ஒரு பாத்திரத்தில் பிடித்து,

அந்த நீரை ஸஹல் ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் பின்புறத்திலிருந்து ஒருவர் தலையிலும், முதுகிலும் கொட்டி (தண்ணீர் பிடித்த) அப் பாத்திரத்தையும் தலைகீழாகக் கவிழ்த்துப் போடச் செய்தார்கள்.

இப்படிச் செய்ததும் ஸஹல் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் எவ்வித தீங்குமின்றி, தன் பயணத்தை மற்றவர்களுடன் தொடர்ந்தார்கள்' என்ற நிகழ்ச்சியை இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி, இமாம் அஹமதிப்னு ஹம்பல் ரஹ்மதுல்லாஹி அலைஹி, இமாம் நஸாயி ரஹ்மதுல்லாஹி அலைஹி, இமாம் இப்னு ஹிப்பான் ரஹ்மதுல்லாஹி அலைஹிஆகியோர் ரிவாயத்துச் செய்கின்றனர்.

மன மெய்யியல் 23

(பூனை என்ன விலை ? ஒரு கோடி ரூபாய் !)



பெரிய செல்வந்தன் வியாபார விஷயமாக வெளிநாடு போனவன் கப்பலில் ஊர் திரும்பிக் கொண்டிருக்கிறான் .

கப்பல் நடுக்கடலில் வந்துகொண்டிருக்கிறது . திடீர் என்று கடல் கொந்தளிக்கிறது. கப்பலையே கவிழ்த்து விடும் அளவுக்கு மலை போல் அலைகள் எழும்புகின்றன! சூறாவளி வீசியது !

"ஆண்டவா என்னை நீ பத்திரமாக கரை சேர்த்தால் என் பங்களாவை விற்று ஏழைகளுக்கு தானம் கொடுக்கிறேன் " என்று பதற்றத்தோடு வேண்டிக் கொள்கிறான் செல்வந்தன் .

கொஞ்ச நேரத்தில் எல்லோரும் ஆச்சரியப்படும்படியாக சுத்தமாக புயல் குறைந்து விடுகிறது . கடல் கொந்தளிப்பும் நின்றுவிடுகிறது . எந்தவித மாற்றமும் இல்லாமல் கப்பல் சுகமாய் பயணம் செய்து கரை சேர்க்கிறது .

செல்வந்தன் இப்போது நினைக்கிறான் "நமது பங்களாவே விற்று ஏழைக்கு தானம் கொடுப்பதாகக் அவசரப்பட்டு இறைவனிடம் பிரார்த்தனை செய்துகொண்டு விட்டோமே! என்ன செய்யலாம் ? "

ஊரை அடைந்த செல்வன் தனது பங்களாவை விற்கப் போவதாக அறிவிக்கிறான் . பணம் உள்ளவர்கள் எல்லாம் அந்த பங்களாவை வாங்க போட்டி போட்டுக் கொண்டு வீட்டின் முன் குவிகிறார்கள்.

அப்போது செல்வந்தன் சொல்கிறான் :

"என் பங்களாவின் விலை ஒரு ரூபாய் '' இதைக் கேட்டதும் கூடியிருந்த எல்லோருக்கும் அதிர்ச்சி ஆச்சரியம். அட , கடல் பயணம் இவனை பைத்தியக்காரன் ஆகிவிட்டதோ ?

அப்போது நமது செல்வந்தன் ஒரு நிபந்தனை வைக்கிறான் .

"என் பூனையை யார் வாங்குகிறார்களோ அவர்களுக்கு தான் என் பங்களாவை விற்பேன் "

"பூனை என்ன விலை ? "

"ஒரு கோடி ரூபாய் !

பங்களாவை வாங்க இருந்தவர்கள் குழம்பிப் போகிறார்கள் .ஆனால் பங்களா நிச்சயம் ஒரு கோடி ரூபாய் போதுமானதுதான் என்பதால் வந்திருந்தவர்களில் ஒருவர் பங்களாவை ஒரு ரூபாய்க்கும் பூனையை ஒரு கோடி ரூபாய்க்கும் வாங்கிக் கொள்கிறார்.

பணத்தை வாங்கிக் கொண்ட நமது செல்வந்தன் ஒரு பிச்சைக்காரனுக்கு அந்த ஒரு ரூபாயையும் கொடுத்துவிட்டு,

ஆண்டவனிடம் சொல்கிறான் : "கடவுளே நான் உன்னிடம் வேண்டிக் கொண்டபடி என் பிரார்த்தனையை சரியாக நிறைவேற்றி விட்டேன். பங்களா விற்ற பணத்தை ஏழைக்கு தானம் செய்து விட்டேன் ! "

وَاِذَا غَشِيَهُمْ مَّوْجٌ كَالظُّلَلِ دَعَوُا اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ۚ فَلَمَّا نَجّٰىهُمْ اِلَى الْبَرِّ فَمِنْهُمْ مُّقْتَصِدٌ ؕ وَمَا يَجْحَدُ بِاٰيٰتِنَاۤ اِلَّا كُلُّ خَتَّارٍ كَفُوْرٍ

(கப்பலில் செல்லும்) அவர்களை, மலைமுகடுகளைப் போன்ற அலை சூழ்ந்து கொள்ளுமானால், அல்லாஹ்வுக்கே வழிபட்டு அந்தரங்க சுத்தியுடன் அவனிடம் பிரார்த்திக்கின்றனர்;

ஆனால் அவன் அவர்களைக் காப்பாற்றிக்கரைசேர்த்து விட்டால், அவர்களில் சிலர் நடுநிலையாக நடந்து கொள்கிறார்கள் - எனினும் மிகவும் நன்றி கெட்ட, பெருந்துரோகிகளைத் தவிர வேறு எவரும் நம் அத்தாட்சிகளை நிராகரிப்பதில்லை. (குர்ஆன் : 31:32)

அதைக்கூட இதைக் கொடு என்று இறைவனா நம்மிடம் கேட்கிறான் ? நாம் தான் இறைனிடம் பிரார்த்தனை என்ற பெயரில் "எனக்கு அதை கொடு ! நான் உனக்கு இதை கொடுக்கிறேன்! " என்று சதா நச்சரித்துக் கொண்டிருக்கிறோம் .

எனக்கு ரெண்டு லட்சம் ரூபாய் கொடுத்தால் உன் உண்டியலில் 2000 ரூபாய் போடுகிறேன் என்று இறைவனிடம் கமிஷன் பிசினஸ் பேசுகிறோம்.

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு அருளினார்கள் :

(அல்லாஹ் மறுமை நாளில் ஓர் அடியானை அழைத்து ஆதம் உடைய மகனே! நான் உலகில் நோயாளியாக இருந்தேன். நீ என்னைப் பார்க்க வரவில்லை என்று சொல்வான்.

அதற்கவன், இறைவா! நீ உலக மக்களின் நாயகன் அல்லவா? நான் உன்னை நோய் விசாரிக்க எவ்வாறு வருவது? என்று அவன் அல்லாஹ்விடம் கேட்பான்.

அதற்கு அல்லாஹ், எனது இன்ன அடியான் நோயாளியாக இருந்தான். அவனை நீ பார்க்கவில்லை. நீ அவனைப் பார்த்திருந்தால் அவனிடம் என்னைப் பெற்றிருப்பாய் என்பதை நீ அறியவில்லையா? என்று சொல்வான்.

ஆதம் உடைய மகனே! நான் உலகில் உன்னிடம் உணவு கேட்டு வந்தேன். நீ எனக்கு உணவு தரவில்லை என்று சொல்வான்.

அதற்கு அந்த அடியான் நீ உலக மக்களின் நாயனாயிருக்கும் நிலையில் உனக்கு உணவு தருவது எவ்வாறு? என்று கேட்பான்.

அதற்கு அல்லாஹ், எனது இன்ன அடியான் உன்னிடம் வந்து உணவு கேட்ட போது நீ கொடுக்கவில்லை என்பதை அறியவில்லையா? என்று கேட்டபின் நீ அவனுக்கு உணவு வழங்கியிருந்தால் அதை என்னிடம் பெற்றிருப்பாய் என்று கூறுவான்.

ஆதம் உடைய மகனே! தாகத்துக்காக நீர் கேட்டு வந்தேன். நீ எனக்கு தரவில்லை என்று சொல்வான்.

அதற்கு அந்த அடியான், நீ உலக மக்களின் நாயனாயிருக்கும் நிலையில் உனக்கு நான் நீர் தந்து தாகம் தீரப்பதெவ்வாறு என்று சொல்வான்.

அதற்கு அல்லாஹ், என்னுடைய இன்ன அடியான் உன்னிடம் நீர் கேட்டு வந்தான். நீ கொடுக்கவில்லை. நீ அவனுக்கு கொடுத்திருந்தால் என்னிடம் அதைப் பெற்றிருப்பாய் என்று கூறுவான். ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம் ஹதீது எண்: 2569 (ஹதீது எண் சரி பார்க்கவும்)

இதையே பைபிள் மத்தேயு 25:35-40-ல்

"பசியாக இருந்தேன், எனக்கு உணவு கொடுத்தீர்கள்; தாகமாக

இருந்தேன், என் தாகத்தைத் தனித்தீர்கள்; அந்நியனாக இருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; ஆடை இல்லாதிருந்தேன். எனக்கு ஆடை கொடுத்தீர்கள், வியாதியாக இருந்தேன், என்னன விசாரிக்க வந்தீர்கள்; சிறைப்பட்டிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்.

அப்பொழுது, நீதிமான்கள் அவருக்கு மறுமொழியாக ஆண்டவரே. நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்கு உணவு கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை ஆடையில்லாதவராகக் கண்டு உமக்கு ஆடை கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் சிறையிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்.

அதற்கு ராஜா மறுமொழியாக: " மிகவும் எளியவராகிய என் சகோதரர்களான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்! "என்பார்

மன மெய்யியல் 24

(உன்னை நீயே கவனி !)



ஒரு மன்னரின் ரதம் இமயமலை நோக்கி சென்று கொண்டிருந்தது. வாழ்வை வெறுத்த அவருக்கு தற்கொலை எண்ணம் அதிகரித்தது.

வழியில் ஒரு மனிதர் மரத்தடியில் தியானத்தில் இருந்தார். எளிமையான அவரது முகம் தாமரை போல மலர்ந்திருந்தது கண்டதும் அவர் ரதத்தை நிறுத்தினார்.

கண்களைத் திறந்த அந்த மனிதர், 'என்ன வேண்டும்?' எனக் கேட்டார்.

'காசியின் மன்னர் நான்! செல்வம் எல்லாம் இருந்தும், ஏதுமில்லாதது போல மனம் வாடுகிறேன். எளிமையாக இருந்தாலும் உங்களின் பிரகாசமான முகம் என்னை ஈர்க்கிறது. சாக முடிவெடுத்த நிலையிலும், உங்களிடம் சற்று நேரம் பேசத் தோன்றுகிறது. அதனால் நின்று விட்டேன்" என்றார் மன்னர்.

மன்னரின் பேச்சைக் கேட்டாலும், அந்த மனிதரின் பார்வை முழுவதும் மன்னரின் கால்களை நோக்கியிருந்தது. மன்னருக்குச் சிறுவயது முதல் கால் களை ஆட்டும் பழக்கம் உண்டு. அந்த மனிதர் தனது கால்களையே பார்க்கிறார் என்பதை அறிந்ததும் சட்டென அசைப்பதை நிறுத்தினார் மன்னர்.

'மன்னா..! எவ்வளவு காலமாக இந்த பழக்கம் உள்ளது?" எனக் கேட்டார் அவர்.

'நினைவு தெரிந்த நாள் முதல்..." என்றார்.

"இப்போது ஏன் நிறுத்தி விட்டாய்?" என்று கேட்டார் அவர்.

"நீங்கள் என் கால்களையே உற்று கவனித்தீர்கள்" என்றார்.

"பார்த்தாயா! மற்றவர் உன்னைக் கவனிக்க வேண்டுமென கருதுகிறாய். பிறரைச் சார்ந்தே வாழ ஆசைப்படுகிறாய். உலகத்தைப் பற்றி கவலைப்படாதே. உன் கால்களை நான் கவனித்ததால், நீண்டநாள் பழக்கத்தைக் கூட நிறுத்தி விட்டேன் என்கிறாய். இனி உன்னை நீயே கவனிக்க தொடங்கு. எதையெல்லாம் நிறுத்த வேண்டும் என்பது தெரிய வரும்" என்றார்.

மன்னரின் மனதில் ஒளிக்கீற்று படர்ந்தது. பணிவோடு, " தாங்கள் யார்?" என்று கேட்டார்.

"புத்தர்" என்றார் அந்த மனிதர் காலில் விழுந்து வணங்கினார். தன்னைத் தானே கவனிப்பதே வாழும் கலை என்பதை அறிந்ததும், மன்னரின் ரதம் அரண்மனை நோக்கி திரும்பியது.

யார் சிறந்த நிர்வாகியாக இருக்க முடியும் ?

ஒரு வாகனத்தை ஓட்டுவது எப்படி என்று முதலில் உங்களுக்கு தெரிந்திருந்தால்தானே அதை அடுத்தவருக்கு சொல்லித் தர முடியும் ?

மற்றவர்களை நிர்வாகிக்கும் திறனை நீங்கள் முழுமையாகப் பெற வேண்டுமென்றால், அடிப்படையில் உங்களை அல்லவா முதலில் நிர்வாகிக்க தெரிந்திருக்க வேண்டும்? உங்கள் உடலை, மனதை , உணர்ச்சிகளையெல்லாம் திறமையாக கையாளக் கற்றுக் கொண்ட பின்தானே நீங்கள் மற்றவர்களை நிர்வாகிக்கும் முனையலாம் ?

வீட்டு எஜமான் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு காபி இயந்திரத்துடன் போராடிக் கொண்டிருப்பதை அவர் வீட்டில் வேலை செய்யும் பெண்மணி கவனித்தாள்.

அந்த இயந்திரத்தை எப்படி பொருத்துவது என்று பல குறிப்புகள் பிரஞ்சு மொழியில் அச்சடிக்கப்பட்டு இருந்தது. அதன்படி செய்து பார்த்து விட்டேன் பொருத்த முடியவில்லை இயந்திரத்தில் ஏதோ கோளாறு என்று நினைக்கிறேன் என்றார் எஜமான்.

பணிப்பெண் பக்கத்தில் வந்தாள், ஒரே முயற்சியில் அதே இயந்திரத்தை மிக சுலபமாக பொருத்திவிட்டாள்.

" எப்படி ? "என்றார்.

"எனக்கு எழுத படிக்க தெரியாது ஐயா, அதனால் குழம்பிக் கொள்ளவில்லை " என்றாள் அவள்.

மனிதன் தன்னை அறியும் படி வைப்பதும் தன்னை அறிய விடாமல் வைப்பதும் மனது தான். எனக்கு எல்லாம் தெரியும், என்னைவிட அறிவாளிகள் யாருமில்லை என்ற ஆணவத்தை உண்டாக்குவதும், கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு என்ற அறிவை உணர்த்துவதும் அந்த மனது தான்.

தன்னை அறிய வேண்டிய மனிதன் முதன் முதலில் வெல்ல வேண்டிய மிகப் பெரிய எதிரி தன் மனது.

மனதை நன்றாக அறிந்து கொண்டவன் தான் உலகை வெல்ல முடியும், எதையும் வெல்ல முடியும் என்பது நபிகள் நாயகம் ஸல்லலாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் அமுத வாக்காகும்.

தன்னை அறிந்து கொண்டால் நிச்சயம் அல்லாஹ்வை அறிந்து கொள்வான்.

நான், நீ, அவன் என்ற அகங்காரம், மமதை முதலில் நம்மில் இருந்து நீங்க வேண்டும் எல்லாம் இறைவனுக்கு மட்டும்தான் சொந்தம் என்ற நினைவு உள்ளத்தில் பிரகாசிக்க வேண்டும்.

மனதில் குற்றம் இல்லாதவனாக இருத்தலே எல்லா அறங்களிலும் அடிப்படையாகும். மனக்குற்றத்தோடு செய்பவை உலகை ஏமாற்றும் ஆரவாரத்தனமே ஆகும். ஆனால் மனது கலங்கப்படாது இருக்குமானால் அந்த உணர்வு கூடப் பரிசுத்தமாக ஆகிவிடுகிறது.

இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்:

மனிதன் உயர்வதற்கும் அவன் தாழ்வதற்கும் தன்னைத் தானே அறியாமல் இருப்பதே அடிப்படை காரணமாகும். தன்னை அறிந்து அல்லாஹ்வில் அழிந்தவன் நேர்மையான உள்ளம் கொண்டு நேரிய வழியில் செல்கின்றான்.

நற்பண்புகளையும் உயர்ந்த குணங்களையும் தன்னுல் உண்டாக்கி கொள்கின்றான். நல்ல காரியங்களை விரும்பிச் செய்கின்றான்.

தன்னை அறியாதவன் தீய உள்ளம் கொண்டவன் நேர் எதிரானவன் அவனிடம் உயர் குணங்களையும் நற்பண்புளையும் எதிர்பார்க்க முடியாது. நேரிய வழியும் அதன் உயர்வும் அவனுக்கு தெரியாது.

மன மெய்யியல் 25

(மோசடி)



ஒரு போக்கிரி தன் இரண்டு நண்பர்களுடன் ரயில் நிலையத்துக்கு வந்தான். மூவருக்கும் சேர்த்து ஒரே பயணச்சீட்டு வாங்கினான் . அவனுக்குப் பின்னால், கிராமத்திலிருந்து வந்திருந்த மூன்று பேர் இதைக் கவனித்தனர்.

ஒற்றை டிக்கெட்டில் எப்படி மூவர் பயணம் போக முடியும் ? என்று அவர்களுக்குப் பிரமிப்பாக இருந்தது. ரயிலில் போக்கிரியை கிராமத்தினர் கவனித்துக் கொண்டிருந்தனர்.

டிக்கெட் பரிசோதகர் வருவதைப் பார்த்ததும். போக்கிரி அவன் நண்பர்களும் சேர்ந்து ஒரே டாய்லெட்டுக்குள் போய் ஒளிந்துகொண்டனர். மற்றவர்களுடைய பயணச் சீட்டுக்களை சரிபார்த்துவிட்டு, பரிசோதகர் பாய்லெட் கதவைத் தட்டினார்.

"உள்ளே யார்? டிக்கெட் ப்ளீஸ்" என்றார்.

வெளியில் ஒரு கை டிக்கெட்டுடன் நீண்டது. அவர் அதை சரிபார்த்து விட்டுப்போய்விட்டார். அப்புறம் உள்ளேயிருந்து மூவரும் வெளியில் வந்து உட்கார்ந்துகொண்டார்கள்.

கிராமத்திலிருந்து வந்தவர்களுக்கு போக்கிரிகளின் தந்திரம் புரிந்துவிட்டது. 'ஆஹா! பிரமாதமான ஐடியாவாக இருக்கிறதே' என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டனர்.

ஊர் திரும்பும் நாள் வந்தது. அந்த கிராமத்தினர் மூவரும் சேர்ந்து ஒரே ஒரு டிக்கெட் வாங்கினர். பின்னாலேயே தன் இரு நண்பர்களுடன் அதே போக்கிரியும் வந்தான். ஆனால், இந்த முறை அவர்கள் ஒரு டிக்கெட் கூட வாங்காமல் ரயில் ஏறுவதை கிராமத்தவர்கள் பார்த்தனர்

அவர்களுக்குக் குழப்பமாகிவிட்டது. பரிசோதகரை இந்த போக்கிரிகள் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள் என்று அவர்களுக்குப் புரியவே இல்லை.

டிக்கெட் பரிசோதகர் வருவதைப் பார்த்ததும். அந்த கிராமத்தினர் மூவரும் ஒரே டாய்லெட்டில் போய் ஒளிந்துகொண்டார்கள்.

போக்கிரி தன் நண்பர்களுடன் எழுந்தார். கிராமத்தினர் ஒளிந்து கொண்ட டாய்லெட்டுக்கு எதிர்ப்புறம் இருந்த டாய்லெட்டுக்குள் நண்பர்கள் இருவரும் போய்விட்டார்கள். கிராமத்தினர்கள் ஒளிந்திருந்த டாய்லெட் கதவை நம்ம போக்கிரி தட்டினான்.

"யார் உள்ளே? டிக்கெட் ப்ளீஸ்" என்றான்.

பரிசோதகர் தட்டுறார் என்று நினைத்து உள்ளேயிருந்து ஒரு கை டிக்கெட்டுடன் நீண்டது. வெளியே காத்திருந்த போக்கிரி அந்த ஒரு டிக்கெட்டை வாங்கிக்கொண்டு. எதிர் பாய்லெட்டுக்குள் போய்விட்டான்.

அடுத்தவர் போல் செய்து பார்த்தால் அதே போல் நமக்கும் கிடைத்து விடுமா ? போக்கிரி மாதிரி செய்யப் பார்த்து, கையில் இருப்பதையும் இழந்து நின்ற கிராமத்தவர்கள் கதிதான் வந்து நேரும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் ஏமாற்றுகின்றானோ அவன் என்னைச் சார்ந்தவன் அல்ல. (நூல்கள்: முஸ்லிம் 147, திர்மிதீ 1236)

"மோசடி செய்பவனுக்கு மறுமை நாளில் அவனுடைய மோசடியை வெளிச்சமிட்டுக் காட்டும் முகமாக அடையாளக் கொடி ஒன்று நட்டப்படும். இது இன்னாரின் மகன் இன்னாரின் மோசடி' என்று கூறப்படும்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரி 6178)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாவது: மோசடி செய்யும் ஒவ்வொருவனுக்கும் ஒரு அடையாளக் கொடி உண்டு. அது மறுமையில் அவனது புட்டத்திடம் நட்டப்படும். (நூல்: முஸ்லிம் 3271)

முஸ்லிமின் அடுத்த அறிவிப்பில் அவனுடைய மோசடிகளுக்குத் தக்கவாறு அது உயர்த்தப்படும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இடம் பெற்றுள்ளது.

எனவே வல்ல அல்லாஹ்வுக்குப் பயந்து ஏமாற்றுதல், மோசடி செய்தல் ஆகியவற்றிலிருந்து முழுவதுமாக விலகி உண்மையாளராக நாம் திகழ வேண்டும்.

மன மெய்யியல் 26

(கற்பைப் பற்றி பேசப்படுபோதெல்லாம் அற்புதங்களும் பேசப்படுகின்றன !)



பெண்களின் கற்பைப் போற்றாதார் இவ்வுலகில் எவருமில்லை. "கற்புடைய பெண் இரத்தினத்தைவிட மேலான மதிப்புடையவள்" என்று பைபிள் மறை முழக்குகின்றது.

நம் இந்திய திருநாட்டில் கற்புநெறியுள்ள பெண்களை மிகவும் உயர்வாக கண்ணியமாக இலக்கியத்திலும் பாடப்பட்டுள்ளது

சாவித்திரியின் கணவன் சத்யவானின் உயிரை எமன் பறித்தபோது, சாவித்திரி துக்கத்தில் மூழ்கி, தன் கணவனை மீண்டும் உயிர்ப்பிக்க அவனிடம் வேண்டினாள். அவனுடைய வழியைத் தடுத்தாள், அவனை நகர அனுமதிக்கவில்லை

"நீங்கள் என் கணவரின் உயிரைத் திருப்பிக் கொடுங்கள் அல்லது என் உயிரையும் எடுத்துக் கொள்ளுங்கள். என் கணவர் இல்லாமல் என்னால் வாழ முடியாது;

.

சாவித்திரியின் கற்புநெறியில் உறுதியுடன் இருந்ததால் எமன் சத்யவானை மீண்டும் உயிர்ப்பித்தார்.கற்பு சக்தியால் தான் இறந்த கணவனை உயிர்ப்பிக்க முடிந்தது !

மற்றொரு சிறந்த பெண் சந்திரமதி. அவள் தனது கணவர் ஹரிச்சந்திரா மற்றும் மகனுடன் ஒரு காட்டைக் கடக்கும்போது, திடீரென காட்டுத் தீ பற்றி எரிந்தது, அது அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருந்தது.

அப்போது சந்திரமதி, “நான் உண்மையாகவே கற்புடைப் பெண்ணாகவும், என் வாழ்நாள் முழுவதும் தர்மத்தைக் கடைப்பிடித்து வந்தவளாகவும் இருந்தால், இந்தக் காட்டுத் தீ அணையட்டும்” என்று வேண்டினாள். தீயும் அணைந்தது,

இப்படி சீதை, சந்திரமதி, தமயந்தி, சாவித்திரி, கண்ணகி என பல கற்புடைய பெண்கள் இருந்தனர் என்கிற வரலாற்றை இலக்கியமாக வடிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகரை கற்பின் வலிமையால் கண்ணகி பற்றி எரிய வைத்தாள் என்றால் பற்றி எரியும் காட்டை சந்திரமதி கற்பின் வலிமையால் தீயை அணைத்தாள்.

கற்பைப் பற்றி பேசப்படுபோதெல்லாம் அற்புதங்களும் பேசப்படுகின்றன !

ஸ்பானிய பேராசிரியர் செர்வாண்டிஸ், "கற்புடைப் பெண்டிர் போன்று விலைமதிப்புள்ள ஆபரணம் இந்த உலகில் வேறொன்றுமில்லை” என்று புகழ்பாடுகின்றார்!

ஆங்கிலக் கவிஞர் சாஸரோ, "தங்கத்தைவிட மேலானது என்ன ? சூரிய காந்தம். சூரியகாந்தத்தைவிட மேலானது என்ன ? அறிவு, அறிவை விட மேலானது என்ன? பெண். கற்புடைய பெண்ணைவிட மேலானது என்ன ? ஒன்றுமே இல்லை” என்று தாமே வினா எழுப்பி விடைபகர்ந்து வந்து பின்னர் கையை விரிக்கின்றார்.

"கற்பை இழந்தவள் வேறு எந்த இழிசெயலையும் செய்யத் தயங்கமாட்டாள்' என்று மற்றோர் அறிஞன் எடுத்துரைக்கின்றான்.

ஆதலின் கற்பென்பதை எவ்வளவு விலை மதிக்க முடியாத ஆபரணமாக இறைவன் தங்களுக்கு அளித்துள்ளான் என்பதை ஒவ்வொரு பெண்ணும் அறிந்து செயலாற்ற வேண்டும். அதற்குச் சிறிதேனும் மதிப்பளியாது தங்களின் இச்சையை எவ்வாறாவது நிறைவு செய்வதற்காகப் பல்லைக் காட்டிப் பசப்பித் திரியும் ஆணினத்திடம் பெண் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். இதற்கு அவளிடம் இருக்க வேண்டியது மன அடக்கம் தான்.

ஆண்களின் இதயத்தைவிடப் பெண்களின் இதயம் அதிகம் பாதிக்கப்பெறுகிறது. ஆனால் கௌரவம் என்பதானது அந்தக் காதல் வேகத்தைத் தணிக்கின்றது" என்று என்ப ஓர் அறிஞன் கூறினான்.

எனவேதான் பெண்ணினத்திற்கு இறைவன் அச்சம். நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நான்கு தனித் தன்மைகளை நல்கினான். அவையே அவர்களின் காமத்தைத் தவிர்க்கும் கொறடாவாக விளங்குகின்றன. அவற்றை மட்டும் இறைவன் நல்கியிராவிட்டால் உலக நிலையே வேறுவிதமாக மாறியிருக்கும்.

கற்பு என்பது பெண்களுக்கு மட்டும்தானா ? ஆண்களுக்கு இல்லையா ? ஆண்களுக்கும் உண்டு என்பதாக இறைவன்...

"நிச்சயமாக (1)முஸ்லிம்களான ஆண்களும், பெண்களும்; (2) நன்னம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும்; (3) இறைவழிபாடுள்ள ஆண்களும், பெண்களும்; (4) உண்மையே பேசம் ஆண்களும், பெண்களும்; (5) பொறுமையுள்ள ஆண்களும், பெண்களும்; (6) (அல்லாஹ்விடம்) உள்ளச்சத்துடன் இருக்கும் ஆண்களும்,பெண்களும்; (7)தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும்; (😎நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும்; (9) தங்கள் வெட்கத்தலங்களை (கற்பைக்) காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும்; (10)அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் ஆண்களும், பெண்களும் -ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் சித்தப்படுத்தி

இருக்கின்றான். (குர்ஆன் 33:35)

இவ்வசனத்தில் ஆண் பெண்களுக்குரிய பத்து சிறப்பு அம்சங்கள் கூறப்பட்டு அவற்றிற்காக அவர்கள் பெறவிருக்கும் பலன்களும் அறிவிக்கப்படுகின்றன.

இதில் (9) வதுதாக "தங்களின் மறைவிடங்களை பாதுகாத்துக்கொள்ளும் ஆண்களுக்கும், பாதுகாத்துக்கொள்ளும் பெண்களுக்கும்' என்று கூறுவதின் இருபாலருக்கும் அவசியம் என்பதை அல்லாஹ் மூலம் கற்பொழுக்கம் ஆண் - பெண் வலியுறுத்துகிறான். அதிலும் பெண்களுக்கு முன்பாக ஆண்களை குறிப்பிட்டிருப்பதை எவரும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

மேற்கூறிய வசனம் அருளப்படுவதற்குரிய காரணங்கள்

உம்முஸலமா (ரலி) அறிவிக்கிறார்கள்.

ஒரு சமயம் நபி (ஸல்) அவர்களை நோக்கி, 'திருக்குர்ஆனில் ஆண்கள் பற்றி கூறப்படுவது போல் பெண்கள் பற்றி ஏன் கூறப்படுவதில்லை" என்று கேட்டேன். ஒரு நாள் பெருமானார் அவர்கள் மிம்பர் (படி) மேல் நின்று கொண்டு இந்த வசனத்தை இரைந்து ஓதியது எனக்கு அதிர்ச்சியையே தந்தது. (முஸ்னத் இமாம் அஹ்மது)

மற்றொரு ஹதீதில், அன்சாரிப் பெண்ணான ஹஜ்ரத் உம்மு இமாரா (ரலி) அவர்கள். பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, 'எல்லாம் ஆண்களுக்கே அல்லாமல் பெண்களுக்கு (திருக்குர்ஆனில்) எதுவும் கூறப்படுவதை நான் காணவில்லையே" என்று கூறினர். அப்பொழுது இல்வசனம் இறக்கப்பட்டுள்ளது. (திர்மிதி)

"விபசாரியும், விபசாரனும் - இவ்விருவரில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள்; மெய்யாகவே, நீங்கள் அல்லாஹ்வின் மீதும், இறுதி நாள் மீதும் ஈமான் கொண்டவர்களாக இருந்தால். அல்லாஹ்வின் சட்டத்(தை நிறைவேற்றுவ)தில், அவ்விருவர் மீதும் உங்களுக்கு இரக்கம் ஏற்பட வேண்டாம்; இன்னும் அவ்விருவரின் வேதனையையும் முஃமின்களில் ஒரு கூட்டத்தார் (நேரில்) பார்க்கட்டும். (குர்ஆன் : 24:2)

இவ்வசனத்தின் மூலமாக கூறி,கற்பு நெறி தவறும்போது இருபாலரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை தெளிவு படுத்துகின்றான்.

ஃகாத்திமிய்யா என்ற வமிசத்தை சார்ந்த பெண்ணொருத்தி திருமணம் முடித்த பின் விபச்சாரத்தில் ஈடுபட்டு விட்டு, "யா ரசூல்லாஹ், நான் தகாத உறவில் ஈடுபட்டு விட்டேன்" என்று கூறியபோது அப்பெண்மணியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கல்லெறிந்து கொல்லச் சொன்னார்கள்.

இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்:

"மாஇஸ் இப்னு மாலிக் அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் வந்(து தாம் விபசாரம் புரிந்துவிட்டதாக வாக்குமூலம் அளித்)தபோது, அவரிடம் நபி(ஸல்) அவர்கள், '(அவளை) நீர் முத்தமிட்டிருக்கலாம்! அல்லது (கண்ணாலோ கையாலோ) சைகை செய்திருக்கலாம்! அல்லது (ஆசையுடன்) பார்த்திருக்கலாம்!' என்றார்கள்.

அவர், '(அவ்வாறெல்லாம்) இல்லை; இறைத்தூதர் அவர்களே!' என்று கூறினார். நபி(ஸல்) அவர்கள், சாடைமாடையாகக் கேட்காமல் 'அவளுடன் நீர் உடலுறவு கொண்டீரா?' என்று (வெளிப்படையாகவே) கேட்டார்கள்.

அவர், 'ஆம்' என்று கூறினார். அப்போதுதான் அவருக்குக் கல்லெறி தண்டனை வழங்கும்படி நபி(ஸல்) அவர்கள் உத்தரவிட்டார்கள். ஸஹீஹ் புகாரி : 6824.

கற்பொழுக்கத்திற்காக தன்னை காத்து கொண்ட ஆண் பெண்களுக்கு இருபாலருக்கும் இறைவன் உதவுவது குறித்து குர்ஆனில் ...

கற்பொழுக்கத்திற்கு பெயர் போனவர்கள் ஹளரத் மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். எந்த அந்நிய ஆணையும் சந்தித்திராதவர்கள். ஆனால், கணவன் இல்லாத இவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஈன்றெடுத்தபோது ஊர்மக்கள் தூற்றினார்கள்.

அப்போது தொட்டில் குழந்தையாக இருந்த ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை பேச வைத்து மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கற்பொழுக்கத்தை நிரூபித்தான் ஏக இறைவன்.

அதுபோலவே யூஸூஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தன்னை நாடி வந்த அரசியிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்கிறார்கள். ஒழுக்க சீலராக நடந்து கொள்கிறார்கள். ஆனால், தன் ஆசைக்கு இணங்காத யூஸூஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின்மீது அவப்பெயரை அரசி ஏற்படுத்துகிறார்.

இந்த நேரத்தில் அரசியின் குடும்பத்தை சார்ந்த ஒரு தொட்டில் குழந்தையை பேச வைத்து யூஸூஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பத்தினித்தனதை இறைவன் நிலைநாட்டினான்.


மேற்கண்ட இருபாலரரின் கற்பைப் பற்றிய நிகழ்வுகளில் பேச முடியாத தொட்டில் குழந்தைகள் பேசுகின்றன.

இங்கும் கற்பைப் பற்றி பேசப்படுபோதெல்லாம் அற்புதங்களும் பேசப்படுகின்றன !

இது சற்று சிந்திக்க வேண்டிய விஷயம்

மன மெய்யியல் 27

(மது)



"மது அருந்தும்போது படபடப்பு குறைந்து, கவலைகள் மறந்து அமைதியாகத் தூங்குகிறேன். தினம்தோறும் சிறிது மது அருந்தி வந்தால். இதய நோய் வராது என்று டாக்டர்கள் சொல்லியிருப்பதாகப் படித்தேன். இது உண்மைதானா?"

'தினம் ஒரு ஆப்பிள் என்று சொன்னவர்கள் இப்போது அதை மது என்று மாற்றிவிட்டார்களா?'

உண்மையில், மது அருந்தும்போது என்ன நடக்கிறது? உங்களுக்குள் ஒரு வித ரசாயன மாற்றம் நிகழ்ந்து, உங்கள் பரபரப்பைக் குறைக்கிறது. அதை அமைதி என்று நீங்கள் நினைத்துக் கொள்கிறீர்கள். ஒரு கோப்பை மது அருந்தி இவ்வளவு அமைதி வந்தால், ஒரு பீப்பாய் குடித்தால், பன்மடங்கு அமைதி அல்லவா வர வேண்டும்? குடித்துப் பாருங்கள். என்ன ஆகும்?

உண்மையில் மது உங்களை அமைதிப்படுத்த வில்லை. மந்தமாக்குகிறது. நீங்கள் வாழப் பிரியப்படுகிறீர்களா, இல்லையா நினைவற்றுக் கிடப்பதா வாழ்க்கை?

மற்ற நேரத்தில், அமைதியாக, கண்ணியமாக இருக்கும் பல மனிதர்கள் மது அருந்தியவுடன் செய்யும் ஆர்ப்பாட்டத்தை நீங்கள் கவனித்ததில்லையா? மது உள்ளே போனதால் கட்டுப்பாடு இழந்து செய்யப்பட்ட குற்றங்கள் பற்றி சிறைத் தண்டனை பெற்றவர்களிடம் கேளுங்கள். சொல்வார்கள்.

மது உங்களுக்கு நல்லது செய்கிறதா, கெட்டது செய்கிறதா என்பதை நீங்களே கவனியுங்கள்.

உங்களைப்பற்றிய கவனம் உங்களுக்கு இருப்பதால்தானே வாழ்வதை உணர்கிறீர்கள்? வாழ்வதைத் தீவிரமாக்க வேண்டுமென்றால், அதுபற்றிய விழிப்பு உணர்வைத் தீவிரமாக்க வேண்டும்தானே?

மது போன்ற எந்த போதைப் பொருளும் உங்கள் விழிப்பு உணர்வைத் தீவிரமாக்குகிறதா? மந்தமாக்குகிறதா ? என்று யோசியுங்கள். அறிந்தே விழிப்பு உணர்வைத் தாழ்த்துகிறீர்கள் என்றால். முழுமையாக வாழாமல், அரைகுறையாகத்தானே வாழ்கிறீர்கள்?

உடல் என்பது உங்கள் கற்பனைக்கு அப்பாற்பட்ட மிக அற்புதமான இயந்திரம். அதை எப்போதும் அமைதியாக வைத்திருந்தே அதிகத் திறனுடன் இயக்க முடியும். அதற்கு முழுமையான விழிப்பு உணர்வு தேவை. அவ்வளவுதான்.

வருத்தம். விரக்தி, கோபம், குழப்பம் போன்ற உணர்ச்சிகளைப்

போலவே. மதுவும் அந்த விழிப்பு உணர்வை மங்கச் செய்துவிடும்.

ஆனந்தமாயிருப்பது என்பதுதான் எந்த உயிருக்கும் இயல்பானது. அப்படித்தான் நீங்கள் படைக்கப்பட்டிருக்கிறீர்கள். தேவையில்லாத எண்ணங்களால் மனதை நிரப்பிக் குப்பை மேடாக்கிக்கொண்டு. குடித்தால் அமைதி கிடைக்கும் என்று நினைப்பது எப்பேர்ப்பட்ட முட்டாள்தனம்!

ஆனால் குடிப்பதையே வாழ்க்கையாகக் கொண்டு, எழுத்தறிவில்லாத, காட்டு மிராண்டிகளைப் போல் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு சமுதாயம் தன் கையாலே மதுப் பானைகளை உடைத்தெறியும் அளவிற்குப் பெரும் மறுமலர்ச்சி அரபு தேசத்தில் உருவானது.

இந்தக் கருத்தை நாம் மக்களிடம் கூறினால் இந்த மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய அந்தச் சீர்திருத்தவாதி யார்? அவர் என்ன மருத்துவம் செய்தார்? அவர் சாதாரண ஆளாக இருக்க முடியாது என்றெல்லாம் வியந்து கேட்பார்கள்.

அரபியர்களிடத்தில் ஏற்பட்ட இந்த மறுமலர்ச்சிக்கு, குர்ஆன் அவர்களுக்கு அளித்த அற்புதப் பயிற்சியே காரணம். இந்தப் பயிற்சி தான் அவர்களுக்கு மதுவின் மீது இருந்த மோக நோய் தீர சிறந்த மருந்தாக இருந்தது.

எடுத்த எடுப்பிலே மதுவை யாரும் பயன்படுத்தக் கூடாது என்று குர்ஆன் கட்டளையிடவில்லை. மதுவை ஒழிப்பதற்காக வேறுபட்ட கால கட்டங்களில் வெவ்வேறு கோணங்களில் மதுவைப் பற்றி குர்ஆன் மக்களுக்கு எச்சரித்தது. மது நல்ல பொருள் அல்ல என்ற கருத்தை முதலில் குர்ஆன் முன்வைத்தது.

பேரீச்சை மற்றும் திராட்சைக் கனிகளிலிருந்து மதுவையும், அழகிய உணவையும் தயாரிக்கிறீர்கள். விளங்கும் சமுதாயத்திற்கு இதில் சான்று உள்ளது. (குர்ஆன் 16:67)

இந்த வசனம் மது தடை செய்யப்படுவதற்கு முன்னால் இறங்கிய வசனம். இந்த வசனத்தில் இறைவன் உணவு மற்றும் மது ஆகிய இரண்டையும் பற்றிப் பேசுகிறான்.

இரண்டு பொருட்களைப் பற்றி பேசும் போது ஒன்றை மட்டும் சிறந்தது என்று கூறினால் இன்னொன்று சிறந்ததல்ல என்றக் கருத்து வரும். எனவே உணவு, மது ஆகிய இரண்டில் உணவு தான் அழகானது; சிறந்தது. மது சிறந்ததல்ல என்றக் கருத்தை முதலில் முன்வைக்கிறான். இந்நேரத்தில் மது அருந்தக் கூடாது என்று குர்ஆன் தடை விதிக்கவில்லை.

இதன் பிறகு மதுவில் கேடு தான் அதிகமாக இருக்கிறது என்று திருக்குர்ஆன் தெளிவாக உணர்த்தியது. என்றாலும் மதுவைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கட்டளையை குர்ஆன் இப்போதும் இடவில்லை.

மது மற்றும் சூதாட்டம் பற்றி (நபியே !) உம்மிடம் கேட்கின்றனர். அவ்விரண்டிலும் பெரும் கேடும், மக்களுக்குச் சில பயன்களும் உள்ளன. அவ்விரண்டின் பயனை விட கேடு இவ்வுலகிலும், மறுமையிலும் மிகப் பெரியது" எனக் கூறுவீராக! (குர்ஆன் 2:219)

இதன் பிறகு தொழுகைக்கு வரும் போது போதையுடன் வரக்கூடாது என்று குர்ஆன் கட்டளையிட்டது. ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுவது கடமையாக்கப்பட்டுள்ளது.

தொழுகைக்கு போதையில்லாமல் வர வேண்டும் என்றால் குறைந்தது தொழுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாவது மது அருந்தாமல் இருக்க வேண்டும். இதை ஒரு நாளைக்கு ஐந்து முறை கடைப்பிடிக்கும் போது எப்போதும் போதையில் திளைத்தவர்கள் சிறந்த பயிற்சிக்கு உட்படுத்தப்படுவார்கள். போதையின்றி வாழ்வதற்கு பழகிக் கொள்வார்கள்.

எனவே தான் மனித இயல்பை அறிந்த இறைவன் மதுவை முற்றிலும் தடுத்து விடாமல் தொழுகை நேரத்தில் மட்டும் அருந்த வேண்டாம் என்று உத்தரவு பிறப்பித்தான்.

நம்பிக்கை கொண்டோரே! போதையாக இருக்கும் போது நீங்கள் கூறுவது உங்களுக்கு விளங்கும் வரை தொழுகைக்கு நெருங்காதீர்கள்! (குர்ஆன் 4:43)

இந்த வசனம் இறங்குவதற்குப் பின்வரும் சம்பவம் காரணமாக இருந்தது.

அலீ (ரலி) மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகிய இருவரையும் அன்சாரிக் குலத்தைச் சார்ந்த ஒருவர் விருந்துக்கு அழைத்திருந்தார். அவ்விருவருக்கும் மதுவை குடிக்கக் கொடுத்தார். (இச்சம்பவம்) மது தடை செய்யப்படுவதற்கு முன்பு (நடந்தது).

அலீ (ரலி) அவர்கள் (போதையுடன்) "குல் யா அய்யுஹல் காஃபிரூன் என்ற சூராவை ஓதி மக்களுக்கு மஃக்ரிப் தொழ வைத்தார். (போதையின் காரணத்தினால்) தொழுகையில் தவறுதலாக ஓதிவிட்டார்.

அப்போது தான், "நம்பிக்கை கொண்டோரே! போதையாக இருக்கும் போது நீங்கள் கூறுவது உங்களுக்கு விளங்கும் வரை தொழுகைக்கு நெருங்காதீர்கள்!' (4:43) என்ற வசனம் இறங்கியது. அறிவிப்பவர்: அலீ (ரலி) நூல்: அபூதாவூத் 3186

இறுதிக் கட்டமாக மதுவை முற்றிலும் புறக்கணிக்க வேண்டும் என்று குர்ஆன் கட்டளையிட்டது.

நம்பிக்கை கொண்டோரே! மது, சூதாட்டம், பலிபீடங்கள், (குறி கேட்பதற்கான) அம்புகள், ஆகியவை அருவருப்பானதும், ஷைத்தானின் நடவடிக்கையுமாகும். எனவே இதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்! வெற்றி பெறுவீர்கள்!

மது மற்றும் சூதாட்டம் மூலம் உங்களுக்கிடையே பகைமையையும், வெறுப்பையும் ஏற்படுத்தவும், அல்லாஹ்வின் நினைவை விட்டும், தொழுகையை விட்டும் உங்களைத் தடுக்கவுமே ஷைத்தான் விரும்புகிறான். எனவே விலகிக் கொள்ள மாட்டீர்களா?

(குர்ஆன் 5:90)

எத்தனையோ சட்டங்கள் ஏட்டளவில் இருக்கின்றன. மக்களில் எவரும் இந்தச் சட்டங்களை மதிப்பதும் இல்லை. பொருட் படுத்துவதும் இல்லை. ஏனென்றால் யாருமே கடைப்பிடிக்க முடியாத அளவிற்கு மிகக் கடினமாக இச்சட்டங்கள் இருக்கின்றன.

சட்டங்கள் இடுவது முக்கியமல்ல. எப்போது, எப்படிச் சட்டம் இயற்றினால் பலன் ஏற்படும்? என்ற தூர நோக்குப் பார்வையில் சட்டங்களை இயற்ற வேண்டும். மக்களின் மனநிலைகளை அல்லாஹ் முற்றிலும் அறிந்திருப்பதால் இத்தகைய வழிமுறையைக் கையாண்டுள்ளான்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுவதாவது: "எடுத்த எடுப்பிலேயே நீங்கள் மது அருந்தாதீர்கள் என்று வசனம் அருளப்பட்டிருந்தால் மக்கள் நாங்கள் ஒரு போதும் மதுவைக் கைவிட மாட்டோம் என்று கூறியிருப்பார்கள். (ஆகவே தான் அல்லாஹ் படிப்படியாகச் சட்ட விதிகளைக் கூறும் வசனங்களை அருளினான்.) புகாரி 4993

இஸ்லாம் என்பது உண்மையான ஆன்மீகம். மனிதனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் கலந்து வழி காட்டும் மார்க்கம். மறுமை வாழ்க்கையை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு மறுமைக்காகத் தான் இவ்வுலகத்தில் வாழ வேண்டும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஆழமாகப் பதித்தது.

எனவே இஸ்லாத்தை நேசித்து ஏற்றுக் கொண்ட நபித்தோழர்கள் மதுவின் சுகத்துக்கு அடிபணியாமல் மதுவை விடப் பன்மடங்கு நேசித்த குர்ஆனின் கட்டளைக்கு உடனே பணிந்தார்கள்

மன மெய்யியல் 28

(எண்ணங்களுக்கு வலிமை உண்டா?)



விக்கிரமாதித்தன் கதையில், நாடு ஆறு மாதம்; காடு ஆறு மாதம் ஆளும் வரம்பெற்ற விக்கிரமாதித்தன், காட்டுக்கு புறப்படுகிறான். அவரை காடு வரை வழியனுப்பும் பொருட்டு உடன் செல்கிறான் பட்டி இருவரும், நகரைவிட்டு காட்டை நெருங்கினர்.

அங்கு பெண் ஒருத்தி தலைவிரிகோலமாக உடையிலும் சீர் இல்லாது கலாப்பழம் பறித்துகொண்டு இருந்தாள். அதைக் கண்ட மன்னன், பட்டியைப் பார்த்து, 'பார்த்தாயா பட்டி! ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஏதும் இல்லாமல் உடையிலும் சீர் இல்லாது தலைவிரிகோலமாகக் கலாப்பழத்தை பறித்து தின்னுகின்ற இவளை பார்ப்பதற்கே வெறுப்பாக இருக்கிறதே! இவள் பெண்ணா? இல்லைப் பேயா ? பட்டியிடம் கூறினான்.

அந்தப் பெண்ணின் இடத்தை நெருங்கியதும் பட்டி அந்தப் பெண்ணைப் பார்த்து, 'நம் நாட்டு மகாராஜா விக்கிரமதித்தன் இறந்துவிட்டாரே உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

அவளோ மிகுந்த அலட்சியத்தோடு, 'அவர் இறந்தால் எனக்கென்ன? இருந்தால் எனக்கென்ன?' என்று சுருக்கமாக பதிலுரைத்து அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

விக்கிரமாதித்தனுக்கு, தான் உடன் இருக்க இறந்துவிட்டதாக பட்டி சொன்னதும், அதற்கு அந்தப் பெண்ணின் பதிலும் கோபத்தையும் ஆச்சர்யத்தையும் தந்தன. தான் இறந்து விட்டதாக பட்டிக் கூறியதை வினவியபோது பட்டி, 'சற்று பொறுங்கள் அரசரே!' என்று சொல்லிவிட்டு இருவரும் சிறிது தூரம் நடத்தனர்.

அங்கே வயதான முதியவர் ஒருவர், காட்டில் உள்ள விறகு. சுள்ளிகளைப் பொறுக்கி அதை சுமையாகக் கட்டித் தலைமேல் சுமந்தபடி தள்ளாடி வருவதைக் கண்ட மன்னன் பட்டியிடம்.

'பார்த்தாயா பட்டி! தள்ளாத வயதிலும் உழைத்து உயிர் வாழ விரும்பும் இந்தப் பெரியவரைக் கண்டால், என் மனம் இரக்கம் கொள்கிறது' என்று கூறினான்.

விறகு சுமையை சுமந்துகொண்டு வரும் முதியவரை நெருங்கியபோது பட்டி பெரியவரைப் பார்த்து, 'இந்த நாட்டு மன்னர் விக்கிரமாதின் இறுத்துவிட்டாரே.. தெரியுமா உங்களுக்கு ? " என்று வினவினான்.

பட்டி கூறியதைக் கேட்ட மாத்திரத்தில் தலைமீது இருந்த விறகுச் சுமையை கீழே போட்டுவிட்டு, 'மகாராஜா இறந்துவிட்டாரா எங்களைப் போன்ற ஏழைகளுக்குத் தெய்வமாக இருந்து காத்து உதவி வந்த மன்னர் போய்விட்டாரா? இனி, என் போன்றவர்களுக்கு யார் உளர்' என்று புலம்பி அழுதார். அவருக்கு பட்டி ஆறுதல் சொல்லி அனுப்பிவிட்டு இன்னும் சிறிது தூரம் நகர்ந்து சென்றனர்

விக்கிரமாதித்து, பட்டியின் புதிர்களுக்கு விடை தெரியாது. 'பட்டி, நான் இருந்துவிட்டதாக அந்தப் பெண்ணிடம் தெரிவித்தபோது, என்னை அலட்சியமாகவும் வெறுப்பாகவும் பேசிவிட்டாள். ஆனால் முதியவரோ, அழுது புலம்பினாரே. என்ன காரணம் என்று வினவினான்.

அதற்கு பட்டி, 'மன்னரே நீங்கள் அந்தப் பெண்ணைப் பற்றி வெறுப்பாக எண்ணிணீர்கள். அந்த எண்ணமானது எண்ண அலைகளாக தவழ்ந்து சென்று அவளுடைய மனதைத் தாக்கியது. அவளுடைய மனதும் அதற்கேற்ற வெறுப்பு எண்ணங்களையே தோற்றுவித்தன. அதன் வெளிப்பாடுதான் அவள் உங்களைப் பற்றி அலட்சியமாக பேசிவிட்டாள்.

ஆனால் முதியவரைப் பற்றி நீங்கள் எண்ணிய எண்ணங்கள் நல்லவையாக, உயர்வாக இருந்ததால், அவர் உங்களைப் பற்றிய நல்லதோர் அபிப்ராயத்தைக் (இரக்கத்துக்கு இரக்கம் காட்டுதல்) கொண்டிருந்தார்' எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கதையிலிருந்து ஒருவருடைய எண்ணமானது மற்றொருவரைத் தாக்கும் என்பதைத் தெரிந்துகொண்டோம். நாம் ஒருவரைப் பற்றி நல்ல விதத்தில் எண்ணி இருந்தால், அவர் தம்மைப் பற்றியும் நல்ல விதமான அபிப்பிராயத்தையே கொண்டிருப்பார் என்று பொருள்படுகிறது.

'எண்ணம் என்பது மாபெரும் சக்தி" எனக் கூறுகின்றன உளவியல் மற்றும் ஆன்மிகத் துறை மனோதத்துவ ஆராய்ச்சியாளர்களின் கருத்தும் இதுவே.

எண்ணங்கள் பற்றி மெஸ்மர் குறிப்பிடும்போது, 'ஒவ்வொரு மனிதனும் தன்னத்தனியன் அல்ல. மனதால் ஒருங்கிணைந்த மாபெரும் சமுதாயத்தின் ஓர் அங்கம். ஒருவனைத் தூண்டும். எண்ணம் மற்றவர்களையும் அறிந்தோ அறியாமலோ தூண்டுகிறது.

ஒருவர் மற்றொருவரைப் பற்றி எண்ணினால் அந்த எண்ணம் நொடியில் எண்ணப்பட்டவரை விரைந்து சென்று அடைகிறது. எண்ணங்கள், காட்சியில் உருவம் உள்ளவை' என்கிறார் –

மேலும், 'அனைத்து எண்ணங்களும் காலம், தேசம், மொழி என்ற தடைகளை மீறி எவரையும் தாக்கும் வலிமை உடையன. ஒருவரின் நுட்பமான கருத்து, தொலை உணர்வால் சதாசர்வ காலமும் இடைவிடாமல் மற்றவர்களுக்கு பரவிக்கொண்டே இருக்கிறது.

இயற்கையின் எல்லா சாம்ராஜ்யங்களும் நுட்ப காந்த இழைகளால் இணைந்துள்ளன. பிரபஞ்சத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு நட்சத்திரத்துக்கும் இடையே நுட்ப இசைவுகள் உள்ளன.

எண்ணம், மின்சாரத்தைவிட மிக வேகமாக பரவுகிறது. தூய நோக்கத்தில் ஏவப்பட்ட உங்கள் எண்ணம் என்னைத் தொடுவதைப் போலவே என் எண்ணங்களும் மனத்த வந்தடைகின்றன' என்கிறார் மெஸ்மர்.

முஹம்மத் இப்னு முன்கதிர் (ரஹ்) அவர்களின் மரண வேளையில் இருந்தபோது, அவர்களின் முகம் மிகவும் பிரகாசமாக இருப்பதை கண்டு காரணம் கேட்கப்பட்டது.

அதற்கு அவர்கள்,என்னிடம் சிறந்த இரு குணங்கள் உண்டு. அந்த சிறந்த குணங்களுடன் என் இறைவனான அல்லாஹ்வை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என்றார்கள்.

1. "எனக்கு தேவையில்லாத விஷயம் எதுவாக இருந்தாலும் நான் அதில் தலையிடமாட்டேன்.

2. எல்லோரைப்பற்றியும் என் மனதில் நல்ல அபிப்ராயத்தை ஏற்படுத்திக் கொள்வேன்" என்றார்கள்

மன மெய்யியல் 29

(வன்முறை)



சீஸிலி நாட்டைச் சேர்ந்த கொடுரமான மாஃபியா தலைவன் அமெரிக்காவின் குற்ற உலகில் கோலோச்சிக் கொண்டிருந்தான் ஒரு கட்டத்தில் அவன் குழுவைச் சேர்ந்தவர்களில் யாரோ அவனுக்கு வந்து சேர வேண்டிய பணத்தை ரகசியமாகக் கையாடிக் கொண்டிருப்பதாக அவனுக்குச் சந்தேகம் வந்தது.

அதைப்பற்றி நோடியாக விசாரிக்க அவன் அமெரிக்காவுக்குப் பறந்து வந்தான்; ஆனால், ஆங்கிலம் தெரியாததால், மொழிபெயர்ப்பாளன் ஒருவனைத் தன் அருகில் வைத்துக்கொண்டான்.

சந்தேகப் பட்டியலில் இருந்த பதினைந்து ஆட்களை அவன் ஒவ்வொருவராக உள்ளே அழைத்து, துப்பாக்கியை முகத்துக்கு நேராக ஆட்டி, "என் பணத்தை நீ கையாடினாயா?" என்று மிரட்டிக் கேட்டான்.

அது மொழி பெயர்க்கப்பட்டது. ''ஐயோ இல்லை” என்று இலைபோல் நடுங்கிக்கொண்டே வந்தவர்கள் ஆங்கிலத்தில் சொன்னார்கள். அந்த பதில்களும் மொழி பெயர்க்கப்பட்டு மாஃபியா தலைவனிடம் சொல்லப்பட்டது.

கடைசி ஆள் வந்தான் “ஆமாம். தலைவா உங்களுக்குச் சேர வேண்டிய பணத்தை நான் கையாடியது உண்மை. ஆனால், அதில் ஒரு டாலர்கூட செலவு செய்யவில்லை. பணத்தை பத்துப் பெட்டிகளில் அடைத்து. என் தாயின் கல்லறை அருகில் புதைத்து வைத்துள்ளேன். என்னை மன்னித்துவடுங்கள்"

மொழிபெயர்ப்பாளன் மாஃபியா தலைவனிடம் இப்படி மொழி பெயர்த்தான்: "இந்த மாங்கா மடையனுக்கு என்னைச் சுட்டுத் தள்ளும் தைரியம் இருக்கிறதா?"

டுமீல் . இதில் யார் வன்முறையாளன் ?

இன்றைக்கு வெற்றிகரமான தேசங்கள் எல்லாமே ஆயுதங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. உலகின் மிகப் பெரிய வணிகமே ஆயுதங்கள் தயாரிப்பதும், அவற்றை விற்பனை செய்வதும்தான்.

ஏன் எந்தவொரு தேசத்திலும் ஆயுதங்களுக்காக அரசாங்கங்கள் பெரும் நிதி ஒதுக்குகின்றன? உங்களிடம் ஆயுதங்கள் இருந்தால்தான் அடுத்த தேசம் உங்களை அமைதியாக இருக்கவிடும். நிராயுதபாணியாகவே இருந்தால் எல்லோரும் ஏறி மிதித்துக் கொண்டு போய் விடுவார்கள்.

இயற்கையின் படைப்பில் நத்தையும், ஆமையும் அஹிம்சை என்றால், அதன் ஓடுகளில் வன்மம் இருப்பதில் தப்பில்லை !

உங்கள் பார்வையில் அமைதியாகத் தோன்றும் எதுவும் உண்மையில், அமைதியாக இல்லை. தென்றல் வீசும் தோட்டத்தைக் கூட மேலோட்டமாகப் பார்த்து முடிவு செய்வது தவறு.

தோட்ட பூமிக்குக் கீழே சென்று பாருங்கள். வேர்களுக்கும், புழுக்களுக்கும். மண்ணுக்கும் மற்ற பல உயிரினங்களுக்கும், அங்கே மிகப் பெரிய போர் நடந்துகொண்டிருக்கிறது !

கணத்துக்கு கணம் அங்கே பல லட்சம் உயிர்கள் மரித்துக் கொண்டிருக்கின்றன. பல லட்சம் உயிர்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன !

ஆழமாக யோசித்தீர்களென்றால். வன்முறை என்பதும் வாழ்க்கை இல்லை. அமைதி என்பதும் வாழ்க்கை இல்லை. அது பலவற்றின் புரிந்து கொள்ள முடியாத கலவை !

உயிரற்ற பொருட்களின்மீது கூட, நாம் வன்மத்தோடு நடந்து கொள்ளக்கூடாது.

சுவரின் மீது எச்சிலைத் துப்புவது கூட ஒருவிதமான வன்மம்தான். நாற்காலியை வேகமாகத் தூக்கி அதற்கு வலிக்கும்படி இழுப்பது கூட ஒருவிதமான வன்மம்தான்

புத்தகத்தின் பக்கங்களை மடக்குவதுகூட அதைக் கிள்ளுவதற்குச்

சமமாகும். செருப்பை வேகமாகக் கழற்றி எறிவதுகூட அதை உதாசீனப்படுத்துவதன் பொருள்தான்.

ஒரு செடியைத் பிடுங்கும்போதும் இலையைத் தேவையில்லாமல் பறிக்கிறபோதும், ஒரு நாயைக் கல்லால் அடிக்கிற போதும் நாம் வன்முறையாளர்களாக மாறுகிறோம்.

இப்படிச் சின்னச்சின்ன செயல்களின் மூலமாகக் கூட வன்மம் ஊற்றெடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாது.

படகில் ஒரு ஓட்டையின் மூலம் உள்ளே நுழைந்த தண்ணீரை இன்னொரு துளையின் மூலம் வெளியே அனுப்பி விட முடியாது.

"லாஸ்ட் சப்பர்" என்னும் ஓவியத்தை லியானார்டோ டாவின்சி தீட்டுகிறபோது நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

ஒருவன் மீது நிறையக் கோபம் கொள்ளுகின்ற சூழல் டாவின்சிக்கு ஏற்பட்டது. மிகக் கடுமையாக அவனை ஏசி திட்டி விட்டு திரும்ப வந்து ஓவியத்தைத் தொடர்ந்தார்.

ஏசு கிறிஸ்துவை வரைகின்றபோது அவர் எவ்வளவு முயன்றும் தன்னுடைய ஓவியத் திறமையைச் செலுத்தியும் அத்த ஓவியம், நிறைவு தரவில்லை.

முயன்று முயன்று தோற்றார் தோற்றுத் தோற்று உணர்ந்தார் உணர்ந்து உணர்த்து வருந்தினார்.

தான் ஏசி திட்டிய அந்த மனிதனை அழைத்து அவனுக்குப் பழங்களையும் இனிப்புகளையும் தந்து மன்னிப்புக் கேட்டார்.

அவன் முகத்தில் மலர்ச்சியைக் கண்டார். தன் மீது அவன் கொண்டிருந்த வருத்தம் நீங்கியதைக் கண்டார். மேகம் விலகித் தெரிகிற நிலவுபோல் அவன் முகம் நிறைவால் மின்னியதைக் கண்டார். தூரிகை எடுத்து ஓவியத்தைத் தொடர்ந்தார்.

உலகம் புகழும் உன்னத ஓவியம் அவரது கைகளால் தீட்டப்பட்டது.ஏசு கிறிஸ்துவின் கருணை வழிகின்ற கண்கள் அவரது கைகளில் அடங்கியது.

நாம் அன்புமயமாக மாறுகிறபோது, நம் எதிரே இருப்பவர்களும். அன்புமயமாக மாறுவார்கள். நாம் புன்னகைக்கிறபோது, எதிரே வருபவனும் புன்னகைத்தே தான் தீருவான்.

அப்போதுதான், உலகம் முழுவதிலும் இருக்கின்ற வன்முறைகள் வன்மங்கள் குறையும்.

இதை நாம் உயிரற்ற பொருட்களின் மீதும், வாய் இல்லாத ஜீவன்களின் மீதும் காட்ட முற்படுவோமேயானால் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடாவிட்டால், தண்ணீர் ஊற்றவாவது முன் வருவோமேயானால், ஒவ்வொருவர் இதயத்திலும் நம்பிக்கை முளைக்கும். அன்பு கிடைக்கும்.

மன மெய்யியல் 30

(எல்லாமே கற்பனைதானா ?)



எல்லாமே கற்பனைதானா ? கற்பனை என்பது என்ன என்று நாம் கொஞ்சம் சிந்திக்க,இன்று உலகம் அடைந்திருக்கும் அத்தனை முன்னேற்றத்திற்கும் காரணம். நாம் கற்பனை செய்ததை தான்

இன்றைய விஞ்ஞானத்தின் வளர்ச்சி, கலையின் வெளிப்பாடு, நமது கட்டடக்கலை, நமது அழகியல் ஆகிய அனைத்துமே மனத்தின் நீட்சி - எண்ணங்களின் நீட்சி - இப்படி இருந்தால் எப்படி என்று யோசித்ததன் விளைவு, அந்த யோசனையைச் செயலாக்கமாக மாற்ற மேற்கொண்ட முயற்சி...

Imagination என்று சொல்வப்படுகின்ற ' கற்பனையை 'நாம் அப்பொழுதெல்லாம் கற்பனை என்று சொல்வதில்லை.

Visualization - தொலைநோக்குப் பார்வை

Vision தீர்க்க தரிசனம்

Creative thinking ஆக்கபூர்வமான சிந்தனை

Inventive thinking - கண்டுபிடிப்புச் சிந்தனை - என்று வகைப்படுத்துகிறோம்.

நம்முடைய ஆளுகைக்குள் இருக்கின்றபோது எண்ணங்களின் நீட்சியைக் கற்பனை என்று சொல்வதில்லை.

ஆனால், எப்போது நாம் எண்ணங்களின் சக்திக்குள் அடைபட்டுப் போகிறோமோ, அதன் சக்திக்குள் அடங்கிப் போகிறோமோ, அப்போதுதான் அதைக் 'கற்பனை' என்கிறோம்.

கற்பனை என்கிறபோது இருப்பவற்றை வித்தியாசப்படுத்தி, வேறு மாதிரி எண்ணிச் சிந்திப்பது கற்பனையல்ல. அது விஞ்ஞானம் தொலைநோக்கி என்கிறோம்

இல்லாதவற்றை, இல்லாத திறமைகளை இருப்பதுபோல எண்ணிக்கொள்வது கற்பனை.

ஒரு நாள் இராமநாதபுரம் மாவட்ட பாம்பன் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ஆசிரியர் சிவசுப்பிரமணிய ஐயர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அது விமானத்தைப் பற்றிய பாடம். பாடத்தை நடத்தி முடித்துவிட்டு மாணவர்களிடம், "விமானம் எப்படி வானில் பறக்கிறது என்பதைப் பற்றி சரியாக புரிந்து கொண்டீர்களா?' என்று கேள்வி கேட்டார்.

வகுப்பில் நிசப்தம் நிலவியது. மாணவர்களுக்குப் புரியவில்லை என்பதை ஆசிரியர் புரிந்து கொண்டார். அவரது வகுப்பறை நேரம் முடிந்ததால், மாலையில் உங்களுக்கு நான் மீண்டும் பாடம் நடத்துகிறேன் என்று சொல்லி விட்டு கிளம்பினார்.

அன்று மாலை மாணவர்களை அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அருகாமையில் இருந்த கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். கடற்கரையில் மாணவர்களை நிற்க வைத்து, கடலிலும் கரையிலும் மீன்களை கொத்தித் தின்ன வந்திருந்த பறவைகளை உற்று நோக்கச் சொன்னார்.

பறவைகள் கால்களால் சிறிது தூரம் நடந்து சென்று, பின்னர் அவற்றின் இறக்கைகளை மேலும் கீழும் அழுத்தி பறப்பதை, விமானம் ஓடுதளத்தில் இருந்து வானத்தை நோக்கி பறப்பதைப் போல் வர்ணித்தார். பின்னர், பறவை தனது வாலை அசைப்பதன் மூலம் அது செல்ல வேண்டிய திசையை நோக்கிச் செல்வதை கூர்ந்து கவனிக்கச் செய்தார்.

பாம்பன் கடற்கரை மணலில் அத்தனை மாணவர்களும் பறவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஒரு மாணவன் மட்டும் அந்த பறவைகள் போலவே கற்பனை விமானத்தில் பயணமானான்.

அவனது எண்ணங்களெல்லாம் அந்த விமானத்தை ஓட்டுகின்ற ஒரு விமானி போல தன்னை சித்திரித்துக் கொண்டான். அவனது கற்பனை உலகில் அவன் ஒரு விமானி. அந்தக் கற்பனையை, ஒரு ராக்கெட் விஞ்ஞானியாகி நிறைவேற்றினான். தனது தள்ளாத வயதிலும் சுகாய் 30 ரக விமானத்தில் விண்ணில் ஒரு சிட்டுக் குருவி போல் மேலும் கீழும் பறந்து மகிழ்ந்தான்.

"அனைத்துமே கற்பனைதான். கற்பனைதான் வாழ்க்கையில் வரப்போகும் வசந்தங்களின் முன்னோட்டம்' என்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் வரிகளுக்கேற்ப தனது கற்பனையால் வாழ்வின் சிகரம் தொட்டவர் நம் நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம்.

அவர், தான் உயர்ந்ததோடு இந்தியர் ஒவ்வொருவரும் உயர வேண்டுமென்பதற்காக "கனவு காணுங்கள்' என்று அறைகூவல் விடுத்தார்.

கற்பனை, சிந்தனையின் தனித்தன்மை; ஒரு மகாசக்தி; அது வளமான வாழ்விற்கு அஸ்திவாரம். கற்பனைதான் இந்த உலகின் வளர்ச்சி. அது ஒரு நிஜமில்லாத நிஜம்; நிழலைப் போன்ற ஓர் உண்மை.

கற்பனைத் திறன் முன்னேற்றங்களுக்கு அடிப்படையான திறன்; இந்த உலகையே ஆட்சி செய்கின்ற திறன். கலைஞர்களிடமும், அறிஞர்களிடமும், சாதனையாளர்களிடமும் உருவாகும் கரு தான் கற்பனை.

அமெரிக்க நாட்டின் பிரபல கல்வி நிபுணர் ப்ரெஸ்காட் லெகி என்பவர் "மனிதன் தோல்வி அடைவதற்குக் காரணம் அவனது கற்பனையில் தோல்வி சித்திரத்தைக் காண்பதுதான்' என்கிறார்.

தோல்வி பற்றிய கற்பனை மனத் தடைகளை ஏற்படுத்தி நிச்சயம் தோல்விக்கு வழிவகுக்கிறது. மாறாக வெற்றியடைவது போல் கற்பனை செய்து, அதற்காக உயிருள்ள மனச்சித்திரங்களை உருவாக்கி, அதனை அகக் கண்களிளே தினமும் காணும்போது வெற்றி நிச்சயமாகிறது.

ஹார்வர்டு பல்கலைக் கழகத்தினுடைய புகழ் பெற்ற உளவியலாளர் வில்லியம் ஜேம்ஸ், "உலகில் நடைபெற்ற சரித்திர நிகழ்வுகள் எல்லாம் கற்பனைச் சித்திரத்தின் மூலம்தான் அரங்கேறி இருக்கின்றன என்பதை இந்த உலகம் நினைவூட்டிக் கொண்டிருக்கிறது' என்றார்.

ஆம்! இந்த உலகில் நித்தமும் நம்மை வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கும் கின்னஸ் சாதனைகள் அனைத்தும் இதற்குச் சான்றுகள்.கற்பனை வளம் கொண்டவர்கள், அறிவுத்திறன் மிக்கவர்கள். ஆக்கப்பூர்வமான கற்பனை வளத்தை விரிவுபடுத்துகிறவர்கள், வாழ்வில் நம்பிக்கையானவர்கள்.

இம்மையில், இவ்வுலகில் எல்லாமே கற்பனையில் உதித்துதான் உருவாக்கம் பெற்று வலம் வந்து கொண்டிருக்கின்றன ! ஆனால் மறுமையில் இறைவன் படைத்து நமக்கு தர இருக்கும் சொர்க்கத்தைப் பற்றி குர்ஆனில் ....


இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'எந்தக் கண்ணும் பார்த்திராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனிதரின் உள்ளத்திலும் (கற்பனையிலும்) உதித்திராத இன்பங்களை என் நல்லடியார்களுக்காக நான் (சொர்க்கத்தில்) தயார்படுத்தி வைத்துள்ளேன்' என்று அல்லாஹ் கூறினான்.

நீங்கள் விரும்பினால், 'மனிதர்கள் எவரும் தமக்காக மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கண் குளிர்ச்சி (தரும் சொர்க்கத்து இன்பங்)களை அறிய மாட்டார்கள்' என்னும் (திருக்குர்ஆன் 32:17) இறைவசனத்தை ஓதிக் கொள்ளுங்கள். என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். புகாரி : 3244

மன மெய்யியல் 31

(வாழ்க்கையின் அலங்காரம்)



இரவீந்திரநாத் தாகூர் , மே 7, 1861- ஆகஸ்ட் 7, 1941) புகழ் பெற்ற வங்காள பல்துறையறிஞர் ஆவார்.

இவர் கீதாஞ்சலி எனும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் ஆவார். இந்த கவிதைத் தொகுப்பிற்காக இவர் 1913-ல் இலக்கியத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றார்.

தாகூரின் படைப்புகள் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது. இருந்த போதிலும் இவரின் படைப்புகளில் இருந்த நேர்த்தியான உரைநடையும், கவிதையின் மாயத் தன்மையும் வங்காளத்திற்கு மட்டுமல்லாது அனைத்துத் தரப்பிற்கும் பொருந்தக் கூடியதாக இருந்தது.

இரவீந்திரநாத் தாகூரைப் பொறுத்தவரை, அவருடைய குடும்பமே கலைஞர்களைக் கொண்டது. அவருடைய சகோதரர்கள் சிறந்த ஓவியர்கள். ஒரு சகோதரர் மிகச் சிறந்த ஞானி.

மரக்கிளைகளிலிருந்து இறங்கி வந்து அணில்கள் இந்த ஞானியின் முட்டிகளில் ஏறி விளையாடும். பறவைகள் அவருடைய கைகளின் மீது வந்து சிறகடித்து இறங்கும்.

தாகூருடைய கவிதை மிகவும் எளிமையானது; அது ஆடம்பரமில்லாமல், அலங்காரமில்லாமல் உண்மையை நோக்கிப் பயணம் செய்கின்ற தெளிந்த நீரோடையாய்த் தென்படுகிறது.

தன் கவிதை ஒன்றில் இயல்பாய் ....

இளவரசனின் ஆடைகளையும், தன் கழுத்தைச் சுற்றி விலை யுயர்ந்த ஆபரணங்களையும் அணிந்து இருக்கும் குழந்தை, விளையாடுவதில் இருக்கின்ற அனைத்து மகிழ்ச்சியையும் இழந்து விடுகிறது.

அந்த உடை அது ஒவ்வொரு அடி வைக்கின்றபோதும் இம்சையாக இருக்கின்றது. எங்கே தன்னுடைய துணி புழுதியில் பட்டுவிடுமோ என்கிற பயத்தில் அசைவதற்குக்கூட அச்சப்பட்டு அது உலகத்திலிருந்து விலகியே இருக்கிறது.

தாகூருடைய இந்தக் கவிதை மகத்தானது மனிதன் பல அலங்காரங்களை அணிந்துகொண்டு பெருமைப்படுகிறான். ஒவ்வொரு முறை ஓர் அலங்காரத்தைச் சேர்த்துக் கொள்ளும் போதும் அவன் சுதந்தரம் பறிபோகிறது என்பதை அவன் மறந்துவிடுகின்றான். அவனால் சகஜமாக இருக்க முடியவில்லை

எதை அழகு என்று நினைக்கின்றானோ அதுவே ஆபத்தாக முடிகின்றது.

எதை அலங்காரம் என்று நினைக்கின்றோமோ அதுவே இடைஞ்சலாக முடிகின்றது. நாம் சேர்த்து வைக்கின்ற பணம் சொத்து, தமக்குப் பின்னால் தொங்கிக்கொண்டு இருக்கும் படிப்புகள். நம் முன்னால் ஒட்டிக்கொண்டு இருக்கும் பட்டங்கள் இவை அனைத்துமே பாதுகாப்பு என்று கருதிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் அவையே நம்முடைய பயத்துக்குக் காரணமாகவும் இருக்கின்றன.

ஏனென்றால், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அவற்றை இழந்துவிடலாம் என்கின்ற அபாயம் காத்து இருக்கின்றது. அடுத்த தலைமுறைக்கு அவற்றை இன்னும் விரிவுபடுத்தித் தர வேண்டுமே என்கின்ற சுவலையும் சேர்ந்து கொள்கின்றது.

புதிய உடைகளை அணிந்த குழந்தை எப்படி மற்ற குழந்தைகளோடு மண்ணில் விளையாட 'முடியவில்லையோ, அதைப் போல சகஜமான வாழ்க்கைக்குச் செல்ல முடியாமல் நாம் தடுமாறுகிறோம். நிகழ்காலத்தைப் பயத்திலும், கவலையிலும் தொலைத்து விட்டு எதிர்காலத்தைக் கேள்விக்குறி ஆக்கிக்கொண்டிருக்கின்றோம்.

நாம் எவற்றைப் பாதுகாப்பு என்று நினைக்கிறோமோ அவைதான் நம்மைப் பாதுகாப்பின்மைக்கு அழைத்துச் செல்கின்றன. நாம் எதைச் சேமிப்பு என்று நினைக்கிறோமோ, அவையே பெரிய இழப்பின் அடையாளங்களாகவும் ஆகிவிடுகின்றன. நம் ஒவ்வொரு சேமிப்பின் போதும், நாம் தொலைத்தவை நினைவுக்கு வருகின்றன.

மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது பொருள்களில் இல்லை: சகஜமாய் வாழ முடிவதில் அது அடங்கியிருக்கிறது. கவலைகள் இல்லாமல் பயம் இல்லாமல் வாழ்கிற வாழ்க்கை ஒரு கொண்டாட்டமாக இருக்கிறது.

நம் ஆபரணங்கள் எல்லாம் ஒரு வகையில் நம்மைப் பிணைக்கின்ற சங்கிலிகள் குழந்தையின் சந்தோஷம் புழுதியில் இறங்கி மற்ற குழந்தைகளோடு விளையாடுவதில்தான் உள்ளது. அதைப் பொருத்த வரை ஆபரணங்களுக்கு அங்கே மரியாதை இல்லை. குழந்தைப் பருவத்தில் குழந்தைத் தனத்தைத் தொலைத்தவர்கள் வாலிபப் பருவத்தில் குழந்தைத்தனத்துடன் நடந்து கொள்கிறார்கள்

குழந்தை என்பது வெறும் பருவம் மட்டுமல்ல அது ஒரு குறியீடு எல்லோரிடமும் ஒரு குழந்தை இருக்கிறது. வாய்ப்புக் கிடைக்கிறபோதெல்லாம் துள்ளிக் குதிக்கிறது.

தாகூருடைய இந்தக் கவிதை வாழ்க்கையைப் பற்றிய ஓர் உயர்ந்து விமரிசனம். மகத்தான வாழ்க்கை என்பது சாதாரணமாக வாழ்வது சாதாரணமாக வாழ்வது என்பது இயல்பாக வாழ்வது பிரயத்தனங்கள் இன்றி வாழ்வது.

வாழ்வின் அலங்காரம் குறித்து குர்ஆனில் இறைவன் …

مَنْ كَانَ يُرِيْدُ الْحَيٰوةَ الدُّنْيَا وَ زِيْنَتَهَا نُوَفِّ اِلَيْهِمْ اَعْمَالَهُمْ فِيْهَا وَهُمْ فِيْهَا لَا يُبْخَسُوْنَ

எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டும்) விரும்பினால், அவர்கள் செயலுக்குரிய பலனை இவ்வுலகத்திலேயே நாம் முழுமையாகக் கொடுத்து விடுவோம். அதில் அவர்கள் குறைவு செய்யப்பட மாட்டார்கள். (குர்ஆன் : 11:15)

اِنَّا جَعَلْنَا مَا عَلَى الْاَرْضِ زِيْنَةً لَّهَا لِنَبْلُوَهُمْ اَ يُّهُمْ اَحْسَنُ عَمَلًا

பூமியிலுள்ளவற்றை நாம் அதற்கு அலங்காரமாக்கி வைத்தது அவர்களில் எவர்கள் நல்ல நடத்தையுள்ளவர்கள் என்பதை நிச்சயமாக நாம் சோதிப்பதற்காகவே. (குர்ஆன் : 18:7)

اَلْمَالُ وَ الْبَنُوْنَ زِيْنَةُ الْحَيٰوةِ الدُّنْيَا وَالْبٰقِيٰتُ الصّٰلِحٰتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَّخَيْرٌ اَمَلًا

(ஆகவே) பொருளும் மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரங்களே (அன்றி நிலையானவையல்ல.) என்றுமே நிலையான நற்செயல்கள் தாம் உங்கள் இறைவனிடத்தில் நற்கூலி கிடைப்பதற்கு மிக சிறந்ததும், நல்ஆதரவு வைப்பதற்கு மிக சிறந்ததும் ஆகும். (குர்ஆன் : 18:46)

وَلَا تَمُدَّنَّ عَيْنَيْكَ اِلٰى مَا مَتَّعْنَا بِهٖۤ اَزْوَاجًا مِّنْهُمْ زَهْرَةَ الْحَيٰوةِ الدُّنْيَا ۙ لِنَفْتِنَهُمْ فِيْهِ وَرِزْقُ رَبِّكَ خَيْرٌ وَّاَبْقٰى

(நபியே!) அவர்களில் சிலருக்கு சுகமனுபவிக்க நாம் கொடுத்து இருப்பவற்றின் பக்கம் நீங்கள் உங்களுடைய பார்வையைச் செலுத்தாதீர்கள். இவை யாவும் இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களே!

அவர்களைச் சோதிப்பதற்காகவே (நாம் இவைகளை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம்.) ஆனால், உங்கள் இறைவன் உங்களுக்குக் கொடுத்திருப்பதோ மிக்க மேலானதும் நிலையானதுமாகும். (குர்ஆன் : 20:131)

மன மெய்யியல் 32

(சமாதி நிலை)



'சமாதி நிலை'யைப் பற்றி ஆன்மிகத்தில் அடிக்கடி பேசப்படுகிறது. சமாதி என்றால் என்ன ?

' சமா ' என்றால் அமைதி: வேறுபாடுகளற்ற நிலை , சாந்தம் என்று பல அர்த்தங்கள் சொல்லலாம். 'தி' என்பது புத்தியைக் குறிக்கிறது.

சீனாவில் ஒரு ஜென் குரு இருந்தார். அவர் மிகச் சிறந்த ஓவியர். இதைக் கேள்விப்பட்ட பேரரசன் அவரை அரண்மனைக்கு வரவழைத்தான்.

"உங்கள் ஓவியம் என் அரண்மனையை அலங்கரிக்க வேண்டும்" என்று விண்ணப்பித்தான்.

''எனக்கென்று தனியே ஓர் அறை வேண்டும்" என்றார் குரு. சகல வசதிகளுடன் ஓர் அறையை அரண்மனையில் அவருக்கு ஒதுக்கினான் அரசன்.

அடுத்தடுத்த மாதங்களில் ஓவியம் எவ்வளவு தூரம் வந்திருக்கிறது

என்று பார்க்கப் போனான். குரு ஒரு சின்னக் கோடுகூட இழுத்திருக்கவில்லை.

மூன்று வருடங்கள் என்னைத் தொந்தரவு செய்யாமல் தனிமையில் விடு என்றார் குரு

பேரரசன் வேறு வழியின்றி சம்மதித்தான்.

மூன்று வருடங்கள் முடியும் நாள் வந்தது. அடக்க முடியாத ஆவலுடன் அரசன் ஓவிய அறைக்குச் சென்றான். மொட்டையாக ஒரு பாதையை வரைந்திருந்தார் ஜென் குரு.

அரசனுக்கு மிக ஏமாற்றமாக இருந்தது.

"பாதை என்றால். அது அரண்மனைக்கோ, கோவிலுக்கோ தோட்டத்துக்கோ சென்றடைய வேண்டும். ஓவியத்தை அப்படி பூர்த்தி செய்திருந்தால், அழகாய் இருந்திருக்குமே ? இந்தப் பாதை எங்கே செல்கிறது என்றே புரியவில்லையே என்று அவன் பொறுமையின்றிக் கேட்டான்.

ஜென்குரு புன்னகைத்தார். அந்தப் பாதையில் நுழைந்தார் மறைந்தார். திரும்பி வரவேயில்லை

இப்படி பிரபஞ்சத்துடன் உயிர் ஒன்றிக் கலப்பதுதான் சமாதி நிலை ஞானப்பாதையில் பயணம் செய்யும் ஒவ்வொருவரும் ட நினைக்கும் நிலை சமாதி நிலை.

"ஹயாத்திலும், வபாத்திற்குப்பாலும் அவுலியாக்கள் கராமத்துச் செய்ய சக்தி பெற்று இருக்கின்றார்களா ? மவுத்தாகிப் போனவைகளை அவர்களால் ஹயாத்தாக்க முடியுமா ? "என்று இமாம் ஷைகு முஹம்மது கலீலீ (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்டது.

அதற்கு " அவர்கள் கராமத்து செய்ய அவுலியாக்கள் சக்தி பெற்றிருக்கிறார்கள். மவுத்தாகிப் போனவைகளை ஹயாத்தாக்கவும் அவர்களால் முடியும் " என்று அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். இதன் விபரம் பதாவாகலீலீ 1 -வது பாகம் 79 -வது பக்கத்தில் காணப்படுகிறது.

ஹஜ்ரத் தக்கலை பீர் முஹம்மது அப்பா அவர்கள் காலத்தில் திருவனந்தபுரத்தை ஆண்டு வந்த முத்துச்சாமி தம்பிரான் பீர் அப்பா அவர்கள் சகவாசத்தில் சிறிது காலம் இருந்து பெரிய ஞானி மகானாகிவிட்டர் .

தன் சற்குரு பீர் அப்பா அவர்களை அரச குடும்பத்தினர் பெரிதும் கண்ணியப்படுத்தி மரியாதையோடு உபசரிப்பதை பெரிதும் விரும்பினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அரண்மனயில் அடுத்த வாரத்தில் இளவரசராக பட்டம் சூட்டுவதற்கு நியமிக்கப்பட்ட அரச குமாரனுக்கு திடீரென நோய் உண்டாயிற்று . ராஜ வைத்தியம் செய்தும் பலனில்லாமல் இளவரசன் உயிர் துறந்தான் .

அரச அவையும் சமஸ்தானம் துக்கத்தில் ஆழ்ந்தன. முத்துச்சாமி தம்பிரானோ "என் சற்குரு அப்பா அவர்கள் அருகில் இருந்திருந்தால் , என் மகன் நோயில் இருந்து காப்பாற்றபட்டிருக்கலாம் " என்று புலம்ப ஆரம்பித்து விட்டார் .

தகனக் கிரியைக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்தச் சமயத்தில் பீர் முஹம்மது அப்பா அவர்கள் அரண்மனைக்குள் திடும் என்று பிரவேசமாக நுழைந்தார்கள். அரச குடும்பத்தாரின் பரிதாப நிலையைக் கண்டு மனமிரங்கினார்கள் .

"முத்துச்சாமி தம்பிரானே , ஞானியான உமக்கு விசனம் வேண்டாம்" என்று அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள் .

பின்பு இளவரசன் பிணமாகக் கிடந்த மாடத்திற்குள்ளே சென்று எல்லோரையும் வெளியே போகச் செய்து , கதவை அடைத்துக் கொண்டு, பிணத்துடன் தனிமையாக இருந்தார்கள் .

சற்று நேரத்திற்குள் அப்பா அவர்கள் சரீரம் முழுவதும் வியர்த்து வடிந்தவர்தளாய் , இறந்து போன இளவரசனை உயிர் பெற்றெழச் செய்து , தன்னுடன் ஒன்றாக அழைத்து வந்து , அரசனது கையில் ஒப்புவித்து,

"இனி நீர் எம்மைப் பார்ப்பது அரிது "என்று கூறி மறைந்தும் விட்டார்கள் . இதுவும் சமாதி நிலையா ?

அரசர் தம்பிரான் , அப்பா அவர்களைக் கண்டு கொள்வதற்கு எவ்வளவோ பிரயாசை எடுத்துத் தேடியும் அப்பா அவர்கள் கிடைக்கவே இல்லை.

அதன் பின் சற்றேறக்குறைய நூறு வருடங்களுக்குப் பிறகு அப்பா அவர்கள் வந்து சேர்ந்தார்கள் .அப்பா அவர்கள் முந்நூறு வருட காலம், ஜீவித்திருந்ததாய் சரித்திரம் கூறுகின்றது.

ஆதாரம் :- இவ்வரலாற்றை உரையுடன் அப்பா அவர்கள் எழுதிய "ஞானமணிமாலை " யில் ஜீவி சரிதைப் பகுதியில் காணலாம்.

மன மெய்யியல் 33

(நித்தமும் ஜீவிதம், நித்தமும் மரணம்)



ஒருவர் பெயரைக் குறிப்பிட்டு 'அவர் இறந்து விட்டார்'

என்கிறோம்.'மறைந்துவிட்டார்' என்கிறோம். காலமாகி விட்டார், இயற்கை எய்திவிட்டார்' என்கிறோம்.

சிவ பதம் அடைந்து விட்டார் என வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்' என்று அஞ்சலட்டை அடிக்கிறோம். சிவபதம் அடைத்தால் மகிழ்ச்சியல்லவா அடைய வேண்டும்! ஏன் வருத்தப்பட வேண்டும் ?

ஒருவர் ஒரேயடியாகவா மரணம் அடைகிறார். ரோஷி ஃபிலிப் (Rshi Philip Kapaleu) சொல்கிறார்: 'நாம் ஒரேயடியாக மரணம் அடைவதில்லை. ஒவ்வொரு நாளுமே மரணமடைகிறோம்' என்று,

நம் காதலை ஒருவர் புறக்கணிக்கும்போது நாம் கொஞ்சம்

செத்துப்போவதில்லையா?

தம்மை ஒருவர் அலட்சியப்படுத்தும்போது நாம் சிறிது சிதைந்து

விடுவதில்லையா? தமக்கு நெருங்கிய ஒருவர் இறக்கும்போது நமக்குள் ஒரு பகுதி அவரோடு இறந்து போகவில்லையா?

ஓர் இடத்தைவிட்டுப் பிரிகிற போதும், நட்பைவிட்டு நகர்கிற போதும்.

விவாகரத்து நிகழ்கிற போதும், நெருங்கியவர்கள் தளர்கிற போதும்,

ஏற்படுகிற இழப்பு என்னும் வெற்றிடம் 'இறப்பு' என்னும் வகையைச் சார்ந்ததுதானே ?

ரோஷி சொல்வது இன்னொன்று கண்ணுக்குத் தெரியாமல் ஒவ்வொரு பருவம் முடிகிறபோதும் நாம் மரணம் அடைகிறோம்

அவர் சொல்வது ஒன்றும் புதிதல்ல, நம் தமிழர்கள் குண்டலகேசியில

பாளையாம் பருவம் செத்தும்

பாலனாம் தன்மை செத்தும்

காளையாம் பருவம் செத்தும்

காமுறும் இளமை செத்தும்

மீளுமின் வயதும் இன்னே

மேல்வரு மூப்புமாகி

நாளும் நாம் சாகின்றோமால்

நமக்கு நாம் அழாததென்னே”

என்று ஏற்கெனவே சொல்லி வைத்த விஷயம்தான் ஆனால், நாம் உரக்கச் சொல்லத் தவறிவிட்டோம்.

... ஆனால் இஸ்லாம் தூங்கும்போதெல்லாம் மரணிக்கிறோம் என்பதை குர்ஆன் மூலம் இறைவன் நமக்கு சொல்லி காட்டி இருக்கிறான்.

தூக்கம் என்பது சிறு மரணம் என்பதற்காக தூங்காமல் விழித்திக் கொண்டே இருக்க முடியுமா? நாம் தூங்குவதுபோல மரணிப்போம். விழித்து எழுவதுபோன்று மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவோம். தூங்குவதும் விழித்து எழுவதும் நம் வாழ்வின் அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருக்கும் செயல்பாடுகள்.

இங்கிலாந்து நாட்டில் உள்ள புகழ்பெற்ற பல்கலைகழகத்தில் எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் பிரிவின் தலைவராக பணியாற்றுபவர் தான் டாக்டர் அலிசன். தூக்கம், மரணம் இவற்றைப் பற்றி பல ஆய்வுகள் செய்த இவர், இறுதியில் தம்முடைய எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் சாதனங்களின் உதவியுடன் ஆய்வு நடத்தினார்.

இந்த ஆய்வின் முடிவில் ‘ஒரு ஆணோ, பெண்ணோ உறங்கும்போது ஏதோ ஒன்று மனித உடலிலிருந்து வெளிச் செல்கிறது என்றும், எப்பொழுது திரும்புகிறதோ வந்தவுடன் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது என்றும், ஆனால் மரணத்தின் நிலையிலோ அந்த ஏதோ ஒன்று திரும்ப வருவதில்லை’ என்று கண்டறிந்தார்.

அதே நேரத்தில் திருக்குர்ஆனையும் ஆய்வு செய்த இவர், பல வசனங்கள் இன்றைய அறிவியலோடு ஒத்துப் போவதையும் பின்வரும் வசனம் அவரின் ஆய்வு முடிவை மெய்ப்பித்திருப்பதையும் அறிந்து பெரும் வியப்பிற்குள்ளானார். அந்த வசனம் இதுதான்.

"அல்லாஹ், உயிர்களை அவை மரணிக்கும் போதும்,

மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்து விட்டானோ அதை(த் தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான்.

மீதியுள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணைவரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான் — சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு நிச்சயமாக அதில் அத்தாட்சிகள் இருக்கின்றன”- (அல்குர்ஆன்: 39:42)

மன மெய்யியல் 34

(நொடிக்கு நொடி முழுமையாக வாழுங்கள்)



சூரியன் மறையும் நேரத்தில் ஓர் அடர்ந்த காட்டுக்கு ஒருவன் வந்தான். அவன் இரவுக்குள் அந்தக் காட்டைக் கடக்க வேண்டும். அவனிடம் ஓர் அரிக்கன் விளக்கு மட்டுமே இருந்தது. அந்த விளக்கின் வெளிச்சம் மூன்றடி தூரம் வரை தான் எட்டும் அவன் இந்தச் சின்ன விளக்கைக் கொண்டு பெரிய காட்டை எப்படிக் கடப்பது என மலைத்து ஓர் ஓரமாக அமர்ந்து அழ ஆரம்பித்தான்.

அப்போது அவ்வழியாக வந்த பாதயாத்திரிகர்கள் அவன் துக்கத்திற்கான காரணத்தைக் கேட்டதும் சிரித்துக்கொண்டே சொன்னார்கள்: இரண்டடி தூரம் வெளிச்சத்தை உமிழும் அரிக்கன் விளக்குக் கூட போதுமே நீ முன்னால் செல்லச் செல்ல ஒளியும் உன்னோடு முன்னேறுமே!"

அவனும் அப்படியே விடிவதற்குள் இலக்கை அடைந்தான்.

உயர்ந்த இலக்கை அடைவது என்பது ஒரேயடியாக நிகழ்வது இல்லை. ஒவ்வோர் அடியையும், ஒவ்வொரு நொடியையும், ஒவ்வொரு படியையும் உன்னிப்பாக உற்றுநோக்குவதில் அது அடங்கியிருக்கிறது.

இந்த நொடியைச் சரியாகப் பயன்படுத்தாமல் அடுத்த மணியை முழுமையாகப் பயன்படுத்த முயலக் கூடாது. விழிப்புணர்வு இல்லாதவர்கள் பிடிபட்டு விடுவார்கள்.

கற்பனை உலகிலேயே சிலர் இருக்கிறார்கள் - அவர்கள் அறுபது வயதில் எப்படித் தாங்கள் இருக்க வேண்டும் எனத் திட்டம் போடுவார்கள் ஆனால் இருபது வயதுதான் இருக்கும் - இருபத்து ஒன்றாவது வயதில் எப்படி நடக்க வேண்டும் என்று திட்டம் எதுவும் அவர்கள் கைகளில் இருக்காது.

அதுபோலத் தான் கல்லூரிப் படிப்பை எப்படிச் செம்மையாக முடிப்பது என்பது பற்றி எதுவும் சிந்திக்காமல் வேலைக்குப் போகும்போது எப்படி உடையணிவது என்ற கற்பனையில் மூழ்குவார்கள்.

கையில் பணம் சேர்வதற்கு முன்பே எப்படிச் செலவழிக்கலாம். என வரைபடம்

வைத்திருப்பார்கள். இன்னும் நிலமே வாங்கியிருக்க மாட்டார்கள். ஆனால், வீடு எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும் என முடிவு செய்திருப்பார்கள்.

இவர்கள் கனவு உலகத்திலிருந்து மீண்டு நனவு உலகத்திற்கு வரும்பொழுதெல்லாம் அதிர்ச்சி அடைந்து விடுவார்கள். உண்மை இவர்களுக்கு உச்சி வெயில், கனவுகளே இவர்களுக்கு நிலா வெளிச்சம்.

நாளைக்கு என்ன செய்வது என்றுகூட அல்ல இன்று என்ன செய்ய வேண்டும் என்பதையும் யோசிப்பதுதான் சரியான திட்டமிடல்.

மாடி ஏறுகிறவன் எந்த மாடிக்குச் செல்ல வேண்டும் என்பதை மட்டும் கருத்தில் வைத்திருந்தால் மட்டும் போதாது. அடுத்த படியின் மீது கவனத்தை வைக்க வேண்டும். அடுத்த படியின் மீது கண் வைக்காமல் மூன்றாவது மாடிக்குப் போக நினைப்பவர்கள் முதல் படியைக் கூட கடக்க முடியாது.

உயர்ந்த எல்லையையும் தியானிக்க வேண்டும். அடுத்த அடியையும் யோசிக்க வேண்டும்.

மிகப் பெரிய ஆபத்து வருவதாக இருந்தாலும், இந்த நொடிப் பொழுதில் நீங்கள் செய்ய வேண்டிய நல்ல காரியத்தை செய்யாமல் தள்ளிப்போடாதீர்கள்.

நபி (ஸல்) அறிவிக்கிறார்கள் : 'உங்களில் ஒருவரின் கையில் மரச்செடியொன்று இருக்கும் நிலையில் மறுமை வந்து விட்டது என்றிருந்தாலும் அவர் அச்செடியை (அக்கணமே) நாட்டிவிடட்டும்' (ஆதாரம் : அஹ்மத்)

புதைக்கப்பட்ட ஒவ்வொரு விதையும் தான் விருட்சமாக வளர்வதற்கு ஒவ்வொரு கணப்பொழுதினிலும் அது வளர்த்துக் கொண்டுதான் இருக்கிறது !

உங்களுக்கு கிடைத்த ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் எவ்வளவு சிறப்பாக சந்தோஷமாக வாழ முடியுமோ, அவ்வளவு சந்தோஷமாக வாழ்ந்துவிடுங்கள்

மன மெய்யியல் 35

(நகைச்சுவை)



சிரிக்கின்றபோது மட்டும்தான் நாம் அந்தக் கணத்தில் இருக்கிறோம் சிரிப்பு நம்மை நிகழ்காலத்திலேயே நிறுத்திவிடுவதால், சிரிப்பு தியானத்திற்கு நிகராக இருக்கிறது!

மனிதன் சிரிக்கின்றபோது அவன் சக்தி கூடுகின்றது. கோபப்படும்போது அவன் சக்தி விரயமாகிறது !

சிரிக்கின்றபோது மனிதன் குழந்தையைப் போல் மாறி விடுவதால், அழகு மிளிர்கிறது. அவன் கோபப்படும்போது, உக்கிரமடைந்து அவன் பயங்கர சைத்தானாக தோன்றுகிறான் !

சிரிப்பு தானாக வருவது; புன்னகை நாமாகப் புரிவது எல்லா உயிர்களும் புன்னகை புரிய முடியும் -

பூ- செடியின் புன்னகை , கூவுதல் - குயிலின் புன்னகை , அலை- கடலின் புன்னகை- தென்றல் - காற்றின் புன்னகை, நிழல் - மரத்தின் புன்னகை, வாலாட்டுதல்- நாயின் புன்னகை, தோகை விரித்தல்- மயிலின் புன்னகை -

மனிதனால் மட்டும்தான் சிரிக்க முடியும் - வாய்விட்டு மெய் மறந்து!

நகைச் சுவையில் மூன்று வகை உண்டு.

1 தன்னைத் தாழ்த்திக்கொண்டு மற்றவர்களைச் சிரிக்க வைப்பது -

2. அடுத்தவர்களைத் தாழ்த்திச் சிரிக்க வைப்பது,

3 தன்னையும் அடுத்தவர்களையும் மேன்மைப்படுத்தும் படி சிரிக்க வைப்பது.

எந்த நகைச்சுவை மனிதனுடைய மனதையும், எண்ணங்களையும் மேன்மைப்படுத்த முடியுமோ, அதுவே உண்மையான நகைச்சுவை ஆரோக்கியமான நகைச்சுவை.

தனக்குள் சிரிப்பவன் ஞானி .

தனக்குத்தானே சிரிப்பவன் பைத்தியம்.

தன்னை மறந்து சிரிப்பவன் ரசிகன்.

தன்னை நினைத்துச் சிரிப்பவன் காதலன்.

பிறரைப் பார்த்துச் சிரிப்பவன் கர்வி.

பிறருக்காகச் சிரிப்பவன் கயவன்.

பிறர் நோகச் சிரிப்பவன் கொடியவன்.

பிறர் காணச்சிரிப்பவன் கோமாளி.

சிரித்துக் கொண்டே வெற்றி பெறுபவன் மதியூகி.

வெற்றி பெற்றாலும் சிரிக்காதவன் கர்ம யோகி.

சிரிப்பு மனிதனுடைய உயிர்த்துடிப்பைக் காட்டுகிறது - சிரிப்பு ஒன்றுதான் மனிதனை மற்ற உயிர்களிலிருந்து உயர்த்திக் காட்டுகின்றது - மேலும் சிரிப்பு உயர்ந்த அறிவாற்றலைக் காட்டுகிறது. நுண்ணிய அறிவு இருப்பவர்களால்தான் உடனடியாகச் சிரிக்க முடியும் !

அழகின் சிரிப்பு என்றான் பாரதிதாசன். துன்பம் வரும் வேளையிலே சிரிங்க... என்றான் வள்ளுவன். சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே... என்றான் கண்ணதாசன். சிரிப்பு பாதி அழுகை பாதி சேர்ந்ததல்லவா மனித ஜாதி... என்றான் பொதுவுடைமை கவிஞன். வாய் விட்டு சிரிச்சா நோய் விட்டு போச்சு..என்றான் தமிழ் மூதறிஞன்.

"சிரிப்பு" என்பது சிநேகத்திற்கான முதல் தூது. இறுக்கமான சூழ்நிலையை இணக்கமாக்க உதவுவது. மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பகிரங்க அடையாளமே சிரிப்பு.

சிரிக்கத் தெரிந்த ஒரே இனம் மனித இனம் தான். ஆரோக்கியத்திற்கான பல்வேறு சுவைகளில் "நகைச்சுவை"யும் ஒன்று.

"நிச்சயமாக அவனே (மனிதனை) சிரிக்க வைக்கிறான்"

(குர்ஆன் 53:43).

சிரித்து மகிழ்வோடு இருப்பதனால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறைகிறது என்பது ஜப்பான் பல்கலைக்கழக சமீபத்திய ஆய்வு. மேலும் இது இரத்த அழுத்தத்தை குறைத்து நரம்பு மண்டலத்திற்கு புத்துயிர் அளித்து தசை பிடிப்புகளை தளர்த்தி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதுடன் இருதயத்தையும் பலப்படுத்துகிறது என்பது நிபுணர்களின் கூற்று.

ஒரு மனிதன் தனியாக இருப்பதை விட பலருடன் கலந்து இருக்கும் போது வாய் விட்டு சிரிப்பதற்கு முப்பது மடங்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒரு குழந்தை ஒரு நாளில் சராசரியாக 300 முறை சிரிக்கிறதாம். (வளர்ந்து வாழ்வை ஏற்றுக்கொள்ளும் போது சிரிக்கவே முடியாது என்பதனாலோ என்னவோ?) வளர்ந்த மனிதனும் கூட ஒரு நாளில் சராசரியாக 17 முறை சிரிப்பதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

100 முறை சிரித்தால் அது 15 நிமிடங்கள் வேகமாக சைக்கிள் ஓட்டுவதற்கு சமம் எனவும் நிபுணர்கள் கூறுகின்றனர். (நன்றி: தினமணிக்கதிர் 20.7.2003).

பிறரைப் புண்படுத்திச் சிரித்து மகிழும் போக்கை (Caustic Humour) இஸ்லாம் முழுமையாக தடை செய்யும் அதே நேரம் எவர் மனதையும் நோகடிக்காத பண்பான ஆரோக்கியமான நகைச்சுவையை (Compassionate Humour) இஸ்லாம் வரவேற்கிறது.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் ஏறிச்செல்ல ஒரு வாகனம் கேட்டார். அதற்கு நபியவர்கள் உம்மை ஒட்டகத்தின் குட்டியின் மீது ஏற்றிவிடுகிறேன் என்றார்கள்.

அதற்கு அம்மனிதர் இறைதூதர் அவர்களே! ஒட்டகக்குட்டியை வைத்து நான் என்ன செய்வது? என்று கேட்டதற்க்கு எந்த ஒட்டகமும் தாய் ஒட்டகத்தின் குட்டித்தானே என்றார்கள் (புன்னகை பூக்க). அறிவிப்பவர்: அனஸ் (ரலி) நூல்: அபூதாவூத், திர்மிதி).

சிரிக்க காசு கேட்கும் சிடுமூஞ்சியாகவும் இல்லாமல், எப்போதும் சிரித்துக்கொண்டே இருக்கும் இளிச்சவாயனாகவும் இல்லாமல் நடுநிலையோடு சிரிப்பதையே (புன்னகை) மார்க்கம் வலியுறுத்துகிறது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு போதும் ஒரேயடியாக தமது உள் நாக்குத் தெரியும் அளவுக்கு சிரிக்க நான் கண்டதில்லை. அவர்கள் (பெரும்பாலும்) புன்னகை புரிபவர்களாகவே இருந்தார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), நூல்: புகாரி

அத்தி பூத்தாற்ப்போல் வெகு அரிதாக உள் நாக்கு, கடவாய்ப் பல் தெரியும் அளவுக்கு நபி (ஸல்) அவர்கள் சிரித்தும் உள்ளார்கள்.

ஒரு கிராமவாசி தன் நெஞ்சில் அடித்தவராக நபி (ஸல்) அவர்களிடம் வந்து நான் ரமலான் நோன்பு வைத்திருக்கும் போது என் மனைவியிடம் உடலுறவு கொண்டுவிட்டேன் என்றார்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் ஓர் அடிமையை விடுதலை செய் அல்லது தொடர்ந்து இரண்டு மாதங்கள் நோன்பு வை அல்லது 60 ஏழைகளுக்கு உணவளி என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதரே! இவை எதற்கும் நான் சக்தி பெற மாட்டேன் என்று கூறினார்.

15 ஸாவு அளவுள்ள பேரித்தம் பழம் கொண்டு வந்து இவரிடம் கொடுங்கள் என தோழர்களிடம் சொன்னார்கள். அவ்விதம் கொடுக்கப்பட்டது. இவற்றை தர்மம் செய்துவிடு என்றார்கள்.

இறைத்தூதர் அவர்களே! என்னை விடவும் தேவையுடையோர் யாருமேயில்லையே என்றார்

அப்போது தான் நபி (ஸல்) அவர்கள் கடவாய் பற்கள் தெரியும் அளவுக்கு சிரித்தார்கள். அறிவிப்பவர்:அபூ ஹுரைரா (ரலி), புகாரி, முஅத்தா

பிரச்சனைகளை ஏன் போர்க்களத்தை கூட புன்சிரிப்புடன் தான் எதிர்கொள்வார்கள் நபி (ஸல்) அவர்கள் (ஆதாரம்: புகாரி)

காயங்களோடு சிரிப்பது அவ்வளவு எளிதல்ல;

அப்படி சிரிக்க பழகிக் கொண்டால்,

எந்த காயமும் அவ்வளவு பெரிதல்ல !

மன மெய்யியல் 36

(துன்பங்களும் நமக்கு நன்மையே !)



ஒரு புத்திசாலி குதிரையின் மீது சவாரி செய்துகொண்டிருந்தான். ஒருவனின் வாய்க்குள் சிறிய பாம்பு நுழைவதைக் கண்டான். உடனே அவன் அருகில் சென்று அந்தப் பாம்பைப் பயமுறுத்தி வெளியே செல்ல வைச்சு நினைத்தான். ஆனால், அதற்குள் அந்தப் பாம்பு தூங்கும் மனிதனின் வாய்க்குள் நுழைந்துவிட்டது.

புத்திசாலியின் நுண்ணறிவு அவன் என்ன செய்ய வேண்டும் என்பதை உணர்த்தியது. அவன் அந்தத் தூங்குபவனுக்குக் கடுமையான அடிகளையும், குத்துகளையும் கொடுத்தான். அவன் எழுந்து வேகமாக ஓடி ஒரு மரத்துக்கடியில் ஒளிந்து கொண்டான்.

அந்தக் குதிரை வீரன் தரையில் கிடந்த சில அழுகிய பழங்களை எடுத்து உடனே தின்னுமாறு தன் வாளை காட்டி மிரட்டி வற்புறுத்தினான்; அவனும் உண்டான்.

அந்த வழிப்போக்கன் அலறியவாறே “நீ ஏன் என்னை இப்படித் தாக்குகிறாய்? நான் என்ன தவறு செய்தேன்? என் மேல் உனக்கு என்ன கோபம்? உன்னுடைய வாளால் என்னைக் கொன்றுவிடு உன் முகத்தைப் பார்க்காதவனே மிகச்சிறந்த பாக்கியசாலி” என்று பரிதாபமாகக் கூறினான்.

அவன் ஒவ்வொரு முறை ஒவ்வொரு சாபம் இட்ட போதும் அவனை அடித்து ஓடும்படி விரட்டிக்கொண்டே இருந்தான் குதிரை வீரன். கொஞ்ச நேரம் கழித்து அந்தக் குதிரைவீரன் துரத்திய துரத்தலில் அந்த வழிப்போக்கன் சாப்பிட்ட அழுகிய ஆப்பிள்கள் அவனுக்கு வாந்தியை வரவழைத்தன.

அவன் சாப்பிட்டவைகள் எல்லாம் வெளியே வந்து விழுந்தபோது அதில் ஒரு சின்ன பாம்பும் கிடப்பதை அவன் பார்த்தான். அதைப் பார்த்தவுடன் அவன் குதிரைவீரன் முன்பு மண்டியிட்டு அவனை நன்றியோடு நோக்கினான்.

இதுவரை எண்ணற்ற சொற்களால் சபித்தவன் அவனை வாயார வாழ்த்தினான். “நீ என்னிடம் சொல்லியிருந்தால் உன்னை நான் திட்டி இருக்க மாட்டேன்” என்று வருந்தினான்.

அதற்கு அந்தக் குதிரைவீரன் “நான் என்ன செய்வது? நான் உண்மையைச் சொல்லியிருந்தால் அந்த நேரமே மாரடைப்பால் நீ மரித்திருப்பாய். பாம்பின் தன்மைகளைச் சொல்லியிருந்தால் நீ மயங்கியிருப்பாய். எவ்வளவு தைரியமானவனும் பயந்தே மரித்து விடுவான்.

நான் உன் வாய்க்குள் பாம்பு நுழைந்ததை சொல்லியிருந்தால், நீ அந்த அழுகிய ஆப்பிள்களைச் சாப்பிட்டிருக்க மாட்டாய். உனக்கு வாந்தியும் வந்திருக்காது தீ என்னைச் சபிக்கும் போதெல்லாம் இந்த மனிதன் உயிர் பிழைக்க வேண்டுமென்றுதாக

நான் கடவுளிடம் வேண்டினேன்"

இதைக் கேட்டதும் அந்த வழிப்போக்கன் மிக்க மகிழ்ச்சியில் நின்றான். அவனுக்கு நன்றி சொல்லச் சொற்கள் கிடைக்காமல் தடுமாறினான்.

இப்படித்தான் நமக்கு வரும் துன்பங்கள் குறுவாளோடும், குத்தும் கத்தியாக தாக்க வருகின்றன. பின்புதான் தெரிகிறது அவைகள் நம்மைக் காக்க வந்த ஆயுதங்கள் என்று !

சில நேரங்களில் நமக்குத் துன்பங்கள் வரும்போது நாம் நொடிந்து போகிறோம். எனக்கு மட்டும் ஏன் இந்தத் துன்பம் என்று பதைபதைக்கிறோம். நம்மைச் சுற்றி இருப்பவர்கள் எல்லாம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் எனக்கு மட்டும் ஏன் துன்பம் வந்தது? என்று நினைத்துக் கொள்கிறோம்.

ஆனால், நம்முடைய துன்பம் வேறு ஒரு பெரிய துன்பத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுவதற்காக என்பதை உணர்வதில்லை. காலம் கழிகிறது. அதற்குப்பின் நடந்து போனவற்றை நினைத்து அவை நம்மை மேம்படுத்தியிருக்கின்றன என்பதை உணருகின்றோம்.

நமக்கு ஏற்பட்ட தடை இன்னொரு வகையில் உதவியிருக்கிறது என்று நிறைவு கொள்ளுகிறோம். நாம் பாரமாகக் கருதினோமோ அது நம்மை சமப்படுத்தும் துலாபாரமாகச் செயல்பட்டிருக்கிறது என்பதை உணருகிறோம். ஆனாலும் அடுத்த முறை ஏதேனும் துன்பம் வந்தால் மறுபடியும் பழைய மாதிரியே நாம் சிந்திக்கின்றோம்.

நமக்கு வாழ்க்கை சமதளத்தில் நடக்கின்ற பயணமாக இருக்க வேண்டும் என்பதே விருப்பம். சின்ன கல் தென்பட்டாலும் அதைப் பெரிய மலையாக நாம் நினைத்துக் கொள்கிறோம். ஆனால், இந்த ஒவ்வொரு துன்பமும் நம்மைத் தொடர்ந்து பக்குவப்படுத்திக் கொண்டே இருக்கிறது என்பதை நாம் அறிவதில்லை.

ஆற அமர்ந்து இந்தத் துன்பம் ஏன் வந்தது யோசித்தால்கூட அதற்கும் காரணம் நாமே என்று தெளிவாகத் தெரியும் ஏனென்றால் சாலையோரமாய் அயர்ந்து . தூங்கியதனால்தான் வழிப்போக்கன் வாயில் சின்ன பாம்பு நுழைந்தது.

நாம் துயரத்தைத் திசைத் திருப்ப நினைக்கும் போதெல்லாம் அது அதிகரிக்கவே செய்கிறது. துன்பத்தைத் தாண்டி மேலே செல்ல முற்படும்போது நமக்கான வழிகள் தென்படுகின்றன.

"நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

ஒரு முஸ்லிமைத் தைக்கும் முள் உள்பட அவருக்கு நேரிடும் துன்பம், நோய், துக்கம், கவலை, தொல்லை, மனவேதனை ஆகிய எதுவாயினும் அதற்குப் பதிலாக அவருடைய பாவங்களிலிருந்து சிலவற்றை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை.(புகாரீ 5642)

அதாஉ பின் அபீரபாஹ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது :

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் "சொர்க்கவாசியான ஒரு பெண்மணியை உங்களுக்குக் காட்டட்டுமா?'' என்று என்னிடம், கேட்டார்கள். நான், "ஆம்; (காட்டுங்கள்)'' என்று சொன்னேன்.

அவர்கள், இந்தக் கறுப்பு நிறப் பெண்மணி தாம் அவர். இவர் (ஒரு நாள்) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, "நான் வலிப்பு நோயால் (அடிக்கடி) பாதிக்கப்படுகிறேன். அப்போது என் (உடலிலிருந்து ஆடை விலகி) உடல் திறந்து கொள்கின்றது. ஆகவே, எனக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்'' என்றார்.

அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "நீ நினைத்தால் பொறுமையாக இருக்கலாம். (இதற்குப் பதிலாக) உனக்குச் சொர்க்கம் கிடைக்கும். நீ விரும்பினால் உனக்குக் குணமளிக்கும்படி அல்லாஹ்விடம் நான் பிரார்த்திக்கிறேன்'' என்று சொன்னார்கள்.

இந்தப் பெண்மணி, "நான் பொறுமையாகவே இருந்து விடுகிறேன். ஆனால், (வலிப்பு வரும்போது ஆடை விலகி) என் உடல் திறந்து கொள்கிறது. அப்படித் திறந்து கொள்ளாமல் இருக்க அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்'' என்று சொன்னார்.

அவ்வாறே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்பெண்ணுக்காகப் பிரார்த்தனை செய்தார்கள். புகாரீ 5652)

ஒரு முஸ்லிம் சொர்க்கத்துக்குச் செல்ல நல்லறங்கள் காரணமாக அமைவது போல், துன்பங்களைச் சகித்துக் கொள்வதும் சொர்க்கம் செல்வதற்கான காரணமாக அமைந்துள்ளது என்பதற்கு இந்த நபிமொழி சான்றாக அமைந்துள்ளது.

மன மெய்யியல் 37

(முத்துமணி மாலைக்கு மணற் வீடுகள்)



பணத்தை ஈட்ட வேண்டும் என்று பணத்தாலேயே தங்கள் உலகத்தை நிர்மாணித்துக் கொள்பவர்கள் யாரைப் பார்த்தாலும். அவர்களால் தங்களுக்கு என்ன ஆதாயம் என்று சிந்திக்க ஆரம்பித்து விடுவார்கள்.

அவர்களுக்கு மனைவியும், மகன்களும் கூட வெறும் சாதனங்கள்: அவர்கள் புன்னகை மட்டுமல்ல: கண்ணீரும் கூட கணக்கிடப்பட்டே செலவழிக்கப்படும்.

நாம் அவர்களிடம் இருந்து ஓர் ஆணியைக் கூட இரவலாக பெற முடியாது. ஆனால்,அவர்கள் ஒரு பட்டறையையே நம்மிடம் இருந்து பறித்து விடுவார்கள்.

ஒருவர் பணக்காரர் தான் இறந்து போவதாகவும், சொர்க்கத்திற்குச் செல்வதாகவும் கனவு கண்டார்.

அந்தக் கனவில் சொர்க்கத்தில் ஓர் அழகான வீதி வழியாக அவர் நடந்து போய்க் கொண்டிருந்தார். அந்த வீதியிலிருந்த ஒவ்வொரு வீடுமே மாளிகையாக மலர்த்திருந்தது. அதில் ஒரு வீடு மிகவும் தேர்த்தியாக இருந்தது.

அவர் "அந்த வீடு யாருடையது?" என்று கேட்டார். அது அவருடைய பணியாளர்களில் ஒருவனுடையது என்று அவருக்குச் சொல்லப்பட்டது.

அவர் "என்னுடைய வேலையாளுக்கே இவ்வளவு பெரிய மாளிகை என்றால், என்னுடையது எவ்வளவு பெரியதாக இருக்கும்" என்று இறுமாப்புடன் சென்றார்.

அடுத்ததாக ஒரு சின்ன வீடு வந்தது. அந்த வீதி முழுவதும் சிறு சிறு வீடுகள் விரவிக்கிடந்தன.

"நீ அந்தக் குடிசையில் வசிக்கப் போகிறாய்" என்று அவரிடம் சொல்லப்பட்டது.

அவருக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது. "நான் இந்த எலிப்" பொந்திலா குடியிருக்கப் போகிறேன்?" என்று ஆத்திரப்பட்டார்.

சொர்க்கத்தின் பொறுப்பாளர்கள் அவரிடம் சொன்னார்கள்: "நாங்கள் என்ன செய்ய முடியும்? நீங்கள் பூமியில் வசிக்கும் போது எந்தப் பொருட்களை இங்கே அனுப்புகிறீர்களோ அவற்றைக் கொண்டுதான் நாங்கள் தங்களுக்காக வீடுகளைக் கட்டுகிறோம்."

களவில் இருந்து அவர் விழித்துக்கொண்டார். அன்றிலிருந்து அவர் பணத்தை பூஜிக்கவில்லை. அது தேவையானது என்பதோடு அதன் எல்லையை நிர்ணயித்துக் கொண்டார். அவர் மகிழ்ச்சியோடு இருந்தார். நிம்மதியாகக் காலத்தைக் கழித்தார்.

ஹஜரத் புஹ்லூல் தானா (ரஹ்) அவர்கள் ஒரு நிறைவான (மஜ்தூப்) தீவிர இறை நேசராக இருந்தார்கள் கலீஃபா ஹாரூன் ரஷீத் காலத்தில் பாக்தாத்தில் இருந்து வந்தார்கள்.

ஒரு நாள் மாலை அந்தி சாயும் நேரத்தில் கலீஃபா ஹாரூன் ரஷீத் தன் மனைவி ஜுபைதா காத்தானுடன் டைகரீஸ் நதி (தஜ்லா நதி) நதிக்கரையோரம் உலாவச் சென்றார் அங்கு புஹ்லூல் தானா (ரஹ்) அவர்கள் ஈரமான ஆற்று மண்ணில் மணல் வீடுகள் கட்டிக் கொண்டு இருந்தார்கள்

அதைப் பார்த்த ஜூபைதா "பாபா, தாங்கள் என்ன செய்து கொண்டிடுக்கிறீர்கள் ? "

"நான் சுவனத்தில் வீடு கட்டிக் கொண்டிருக்கிறேன்."

" இந்த வீடுகளைத் தாங்கள் விற்பனை செய்வீர்களா ? "

"ஆமாம்.ஒரு வீட்டின் விலை உமது கழுத்தில் கிடக்கும் முத்துமாலை"

உடனே ஜூபைதா முத்துமாலையை கழற்றிக் பாபாவிடம் கொடுத்து விட்டார்.

புஹ்லூல் மாலையை வாங்கிக் கொண்டு "செல்லுங்கள் இதுதான் உம்முடைய சுவனமாளிகை' " என்றார்கள்

இதைப் பார்த்துக் கொண்டிருந்த கணவர் ஹாரூன் ரஷீத் தன் மனைவியிடம் "ஒரு மஜ்தூபிடம் விலை மதிப்பற்ற உன்னுடைய முத்து மாலையையைக் கொடுத்து விட்டாயே... நீ ஒரு சரியான முட்டாளாக இருக்கிறாய்" என்று சற்று கோபப்பட்டார்.

அன்று இரவு உறக்கத்தில் கலீஃபா ஹாருன் ஒரு கனவு கண்டார். சொர்க்கத்தில் அவர் உலாவிக் கொண்டிருக்கும் போது மிக உயரமான அழகான முத்துக்களால் ஆன ஒரு மாளிகையைக் கண்டார். அதன் அழகில் அவர் அப்படியே சொக்கி நின்று விட்டார் அதன் வாயிலில்,"ஜூபைதா காத்தூன் " என்று பொறிக்கப்பட்டிருந்தது

ஹாரூன் , அட நம்ம மனைவியின் மாளிகைதானே என்று உள்ளே நுழைய முயற்சிக்கும் போது ஒரு வானவர் அவரைத் தடுத்து " இது ஜூபைதா காத்தூனுடைய மாளிகை நேற்றுதான் தம்முடைய முத்துமாலையை விலையாகக் கொடுத்து வாங்கிக்கிறார். அவர் இதனுள் நுழையாதவரை வேறு யாருக்கும் நுழைய அனுமதி இல்லை" என்றார்


ஹாரூன் ரஷீத் திடுக்கிட்டு எழுந்து டைக்ரீஸ் நதிக் கரைக்கு விரைந்தார்.அங்கு புஹ்லூல் தானா (ரஹ்)அவர்கள் நிறைய வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்தார்.

ஹாரூன் அவரிடம் "பாபா எனக்கும் ஒரு வீடு தாருங்கள் அதற்குரிய தொகையைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார்.

புஹ்லூல் புன்னகைத்தபடி "சுவனத்தில் எவர்கள் முத்து மாளிகையைக் காணவில்லையோ அவர்களுக்கே நாம் இந்த வீடுகளை விற்பனை செய்வோம். எவர்கள் சுவனத்து முத்து மாளிகையைக் கனவில் கண்டார்களோ அவர்களுக்கு நாம் ஒருபோதும் இந்த வீடுகளை விற்பதில்லை" எனக் கூறி விட்டு சென்று விட்டார்.

மன மெய்யியல் 38

(திருந்துவதற்கு வாய்ப்பு கொடுங்கள் !)



விக்டர் ஹியூகோ எழுதிய 'ஏழைபடும் பாடு' என்கின்ற புதினத்தில் நாற்பத்தாறு வயதுவரை சிறையில் கழித்த ஜீன் வால்ஜின் என்கின்ற மனிதன் சிறையில் தன் கள்ளங் கபடமற்ற தன்மையை எல்லாம் இழந்து கடுமையாகவும், கொடூரமாகவும் மாறி விடுதலையாகிறான்.

அவன் மீது குத்தப்பட்ட முத்திரை அழியாததால் அவன் செல்கிற அவனுக்குப் படுக்கக்கூட இடம் மறுக்கப்படுகிறது.

அவனுக்கு 'மாண் சிஞ்சூர் மிரியன்' என்கின்ற பாதிரியார் தைரியமாகப் படுக்க இடம் கொடுக்கிறார். அவருடைய வீட்டிலேயே வெள்ளி சாமான்களைத் திருடிக்கொண்டு வெளியேறுகிறான். ஆனால், போலீஸ்காரர்களிடம் மாட்டிக் கொள்கிறான். அவர்கள் அந்தப் பொருட்களோடு அவனை அந்தப் பாதிரியாரிடமே அழைத்து வருகிறார்கள்.

பாதிரியார் அவனிடம் சிரித்துக்கொண்டே, "ஆகா! நீங்கள் திரும்பவும் வந்து விட்டீர்களா? மிகவும் மகிழ்ச்சி - நான் உங்களிடம் கொடுத்த இரண்டு மெழுகுவர்த்திப் பீடங்களை எடுத்துக் கொள்ளவில்லையே என்று கூறி அவைகளையும் அவனிடம் கொடுத்து, அவனை போலீஸிடமிருந்து தப்புவிக்கிறார்.

போலீஸ்காரர்கள் சென்ற பிறகு அவனிடம் "நல்லவனாக வாழ்வதற்காக மட்டுமே இந்த வெள்ளியைப் பயன்படுத்த வேண்டும்" என்று சத்தியம் செய்து உறுதிமொழி வாங்கிக் கொள்கிறார்.

பல ஆண்டுகள் சிறை வாழ்க்கை செய்யாததை ஒரு பாதிரியாரின் பரிவான சொற்கள் செய்து விடுகின்றன . தனக்கு அடைக்கலம் தந்தவர் வீட்டிலேயே திருடியது குறித்து நினைத்து வெட்கப்படுகிறான். வேதனையடைகிறான் அவனுடைய இரு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் மூலம் அவன் கடந்த காலத்தைக் கழுவுகிறான்.

பின் மனந்திருந்தி அவனுடைய வியர்வைத் துளிகளால் எதிர்காலத்தைப் பூஞ்சோலையாக ஆக்கிக் கொள்கிறான்.

தண்டனை என்பது குற்றவாளியை வருத்துவதற்காக அல்ல. வருந்துவதற்காக, திரிப்பதற்காக அல்ல, திருந்துவதற்காக. 'இனி இந்தத் தவறு நிகழாது' என்று உறுதி அவர்கள் உள்ளத்தில் உதிக்க வேண்டும்.

சின்னக் குழந்தைகள் தவறு செய்தால் முதல் முறையில் அவர்கள் முதுகில் தட்டாதீர்கள். இரண்டாவது முறை செய்யும்போது அவர்களுக்கு நயமாக எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் அந்தத் தவறை ஒருபோதும் செய்யமாட்டார்கள் என்று டாக்டர் ஸ்பாக் சொல்கிறார்.

நாம் எல்லாருக்கும் ஒரு வாய்ப்புத் தரவேண்டும். உணர்தல் நிகழ்கின்ற உள்ளங்கள் பண்பட வாய்ப்பிருக்கிறது.

"யோவான் 8:7-9

7 அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி,

நியாயத் தீர்ப்பில் அவர் “உங்களில் யார் குற்றமில்லாதவனோ அவன் முதலில் கல்லெறியக்கடவன்” என்று கூறினார். இயேசு நியாயப்பிரமாணத்தின் ஒரு வாக்கியத்தைக் கூட மாற்றாமல் அதை முழுமையாக எடுத்துரைத்தார். அந்த விபச்சாரி மரணத்துக்குப் பாத்திரமானவள் என்பதை அவர் ஏற்றுக்கொண்டார்.

இயேசு தன்னுடைய செயலின் மூலமாக விபச்சாரியையும், அதேவேளையில் பக்தியுள்ளவர்களையும் நியாயம் தீர்த்தார். முதலில் கல்லெறிவதன் மூலம் அவர்கள் தங்கள் குற்றமின்மையை நிரூபிக்க வேண்டும் என்று சவால் விட்டார். இதன்மூலம் அவர்களுடைய பக்திமான்கள் என்ற முகத்திரையை அவர் கிழித்தெறிந்தார்.

எந்த மனிதனும் பாவமில்லாதவன் அல்ல. நாம் அனைவருமே பெலவீனமானவர்கள், சோதனைக்கும் தோல்விக்கும் உட்பட்டவர்கள். இறைவனுக்கு முன்பாக ஒரு பாவிக்கும் பக்திமான்போல காணப்படும் நடிப்புக்காரனுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

நாம் அனைவருமே அவரைவிட்டு விலகி கெட்டுப் போனோம். யாரெல்லாம் நியாயப்பிரமாணத்தின் ஒரு கட்டளையை மீறினார்களோ அவர்கள் அனைத்துக் கட்டளைகளையும் மீறியவர்களும், நித்திய அழிவுக்குப் பாத்திரவான்களாகவும் இருக்கிறார்கள்.

8 அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார்.

பரிசேயர்கள் அந்த விபசாரம் செய்த பெண்ணைக் குற்றம் சாட்டியபோது இயேசு குனிந்து தன்னுடைய கைவிரல்களால் தரையில் எழுதத் தொடங்கினார். அவர் என்ன எழுதினார் என்று நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை அன்பு என்றும் புதிய கட்டளையை எழுதியிருக்கலாம்.

9 அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்.

யோவான் 8: 9-11


9 அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்.

10 இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார்.

11 அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார் "

மன மெய்யியல் 39

(இறைமையைத் தொட்டவர்கள் தங்களைத் தாங்களே மறந்து போவார்கள் !)



வாச்சஸ்பதி மிஸ்ரா என்பவர் பாமதி என்ற வேதாந்த நூலை எழுதினார். ஒரு நாள் அவர் எழுதிக்கொண்டிருக்கும் போது யாரோ ஒரு பெண்மணி விளக்கு அணைகின்ற தருணத்தில் திரியைத்தூண்டி எண்ணெய் ஊற்றி விட்டுச் செல்வதைப் பார்த்தார்.

“யார் நீ?”என்று கேட்டார்

அதற்கு அந்தப் பெண்மணி, “நான் உங்களைத் திருமணம் செய்து 20 வருடங்களாகிறது. நீங்கள் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இருக்கின்ற இடத்திற்கு உணவையும், தேவையான பொருட்களையும் நான் கொண்டு வந்து வைக்கிறேன். ஒரு முறை கூட நீங்கள் என்னைக் கவனித்தே இல்லை.

ஆனால், எழுதுவதிலேயே தீவிரமாக இருப்பதால் நீங்கள் என்னைக் கவனிக்கவில்லை என்பதை அறிவேன்.இன்று கூடத் திரி அணைகின்ற தறுவாயில் இருந்து நீங்கள் எழுதுவது தடைபட்டதால்தான் என் முகத்தைப் பார்த்தீர்கள். இத்தனை வருடங்களாக நான் முன்கூட்டியே விளக்கிற்கு எண்ணெய் வார்த்ததால் உங்களுக்கு அது தெரியவில்லை" என்று சொன்னாள்.

இலட்சியவாதிகள்தான் உலகம் விடியும் ஒளியை ஓயாமல் உமிழ்பவர்கள். அவர்கள் இலக்கோ இலக்கில்லாமல் இருப்பதே.

ஹதீஸ் புகாரி எழுதிய இமாம் புகாரி அவர்கள் 16 லட்சம் ஹதீஸ்களை சேகரித்துள்ளார்கள், அவைகளில் 7275 ஷஹீஹான ஹதீஸ்களை நமக்கு தொகுத்துத் தந்துள்ளார்கள். இவைகளை மூன்று முறை சரி பார்த்துள்ளார்கள்.

"ஒரு தினம் புகாரி இமாம் அவர்கள் ஒரு தோட்டத்திற்கு பகல் உணவுக்காகச் சென்றார்கள். அங்கு ழுஹர் தொழுகைக்குப் பின் நபில் தொழ ஆரம்பித்தார்கள்.

தொழுது முடிந்த பின் தனது அங்கியின் ஓரத்தை உயர்த்தி இதனுள் ஏதோ ஒன்று இருப்பது போலிருக்கின்றது.சற்றுப் பாருங்கள் என்று அருகிலுள்ளவர்களிடம் கூறினார்கள்.

அங்கியை அகற்றிப் பார்த்தபோது ஒரு தேள் அங்கிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அது 16 விடுத்தம் தீண்டியிருந்தது.

தேள் முதல் முறை தீண்டியதும் தொழுகையை நிறுத்தியிருக்கலாம் என்று யாரோ ஒருவர் இமாமவர்களிடம் கேட்ட போது,

“நான் ஒரு சூறாவை ஓதிக் கொண்டிருந்தேன். அதனை முடிக்கு முன் தொழுகையை நிறுத்தி விட என் மனம் இடம் கொடுக்கவில்லை என்றார்கள்” (ஆதாரம் : கஸ்தலானி, பாகம் 01, பக்கம் 21)

ஹதீஸ் முஸ்லிம் எழுதிய இமாம் முஸ்லிம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மரணம் தொடர்பாக கூறப்படும் நிகழ்வு விசித்திரமானதாகும் என்று ஹாபிழ் இப்னு ஹஜர் அஸ்கலானி ரழியல்லாஹு அன்ஹு கூறுகின்றார்கள்.

ஒரு தினம் ஹதீஸ் மஜ்லிஸில் ஒருவர் ஒரு ஹதீதைப் பற்றிப் கேட்க, அதற்கு அவர்களால் பதில் கூற முடியாது போய்விட்டது. இல்லம் வந்து தனது நூற்களுள் அந்த ஹதீதைத் தேடினார்கள்.

பக்கத்தில் ஒரு கூடையில் பேரீத்தம் பழத்தையும் வைத்துக் கொண்டு பேரீத்தம் பழத்தை சுவைத்துக் கொண்டே தேடுதலில் கவனம் செலுத்தினார்கள்.

ஹதீதின் தேடுதலில் மூழ்கியிருந்தே இமாமவர்கள் பேரீத்தம் பழத்தை அளவுக்கு மிஞ்சி புசித்து விட்டார்கள். ஹதீஸ் கிடைக்கும்போது கூடை காலியாகி விட்டது.

இதுவே அவர்களின் மௌத்திற்கு காரணமாகியது. ஹிஜ்ரி 261 ரஜப் பிறை 24-ல் ஞாயிறு அன்று வபாத்தானார்கள். நைஷாப்பூரில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

இறைமையைத் தொட்டவர்கள் தங்களைத் தாங்களே மறந்து போவார்கள்

மன மெய்யியல் 40

(எதிரிகளும் நமக்குத் தேவை !)



நாம் ஒவ்வொருவரும் வயது, அறிவு, பொருளாதார பின்புலம், வாழும் சூழ்நிலை, வாழ்க்கையைப் பற்றிய கண்ணோட்டம் போன்றவற்றில் வேறுபடுகிறோம்.

இதனால், சமூகத்தில் நம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அந்தஸ்து அடையாளங்கள் உருவாகிவிடுகின்றன.இது இயற்கையானதும், தவிர்க்க முடியாததுமாகும். இதன் காரணமாக நம்மிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

நம்முடைய வாழ்க்கையில் எதிரிகள் தொல்லை என்பது எல்லா காலகட்டத்திலும் நிச்சயம் இருக்கும். பொதுவாழ்வில் எவ்வளவு பெரிய தலைவராக இருந்தாலும் எதிர்த்து கேள்வி கேட்பவர், தவறுகளை சுட்டிக் காட்டுபவர் இல்லையென்றால் அவரால் நல்ல தலைவராக பரிமளிக்க முடிவதில்லை.

அதனால், எதிரிகளின் தொல்லை தனிமனித வாழ்விலும், தொழிலிலும் தவிர்க்க முடியாதவை. நமக்கு இசைவான கருத்துகளை கொண்டவர்கள் நமது நண்பர்களாகவும், எதிர்மறை கருத்து கொண்டவர்கள் எதிரிகளாகவும் உருவாகிறார்கள். நண்பரை எதிரியாக்கிக்கொள்வதும், எதிரியை நண்பராக்கிக் கொள்வதும் நமது அணுகுமுறையில்தான் இருக்கிறது.

நாம் நம்முடைய எதிரியை பலவீனமாகக் கருதக்கூடாது. அவனிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எப்பொழுதும் யாரிடம் பேசினாலும், கனிவாகவும், மரியாதையுடனும் பேசுவது அவசியம்.

நண்பர்கள் மட்டும் நமக்கு நல்லது செய்வதில்லை. பல சமயங்களில் நமது எதிரிகளும் நமக்கு நல்லது செய்கிறார்கள். நாம்தான் அவர்கள் மேல் உள்ள வெறுப்பில் அவர்களுடைய வார்த்தைகளை மதிப்பதில்லை.

நம்மை விட நமக்கு வேண்டாதவர்களுக்குத்தான் நம்மைப் பற்றி அதிகமாகத் தெரியும். நமது குறைகளை நேருக்கு நேர் நம்மிடம் சொல்வது எதிரிகளுக்கு மட்டுமே சாத்தியம். நம்முடைய நண்பர்கள் சில விஷயங்களைச் சொன்னால் நாம் வருத்தப்படுவோம் என்று நினைத்து, அவற்றை நம்மிடம் சொல்லாமலே விட்டுவிடுவார்கள்.

நாம் ஒரு செயலை செய்ய நினைக்கும் போது, அதற்கு பல தடைகளை எதிரிகள் உருவாக்குவார்கள். இதனால் நாம் நினைத்ததை சரியாகச் செய்ய முடியாது. எதிரி நம் கண்ணுக்கு தெரிந்தவராக இருந்தால், நம்மால் எதிர்த்து போராட முடியும். நம் கண்ணுக்கே தெரியாத எதிரிகளை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அதனால், மனிதர்களை இனம் கண்டு நாம் பழக வேண்டும்.

நம்மைவிட நம் எதிரி புத்திசாலியாக இருக்கலாம். அதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். நம்மைப் பற்றிய உண்மையான விமர்சனங்களை எதிரிகளால் மட்டுமே தர முடியும். எதிரிகளின் கருத்துகளை வெளிப்படையாக நம் மனம் அங்கீகரிக்காது. என்றாலும் அவர்களுடைய கருத்துகளை நாம் பரிசீலிக்க வேண்டும்.

நமது உடலில் காய்ச்சல் வரும்போது, நமது ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் நோய்த்தொற்றுகளை எதிர்த்துப் போராடுகின்றன. அதன் விளைவாக விரைவில் நாம் குணமாகி விடுகின்றோம்.

இயற்கையாகவே நம் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியே நம்மை நோயிலிருந்து குணப்படுத்துகிறது. எனவே, நம் வாழ்வில் எதிர்ப்புகள் இயல்பானவை. அவற்றை எதிர்த்து பயணிக்கும் திறமை நமது உடலுக்கும், மனதுக்கும் தேவை.

ஒவ்வொரு வினைக்கும் அதே ஆற்றலுடைய எதிர்வினை உண்டு என்கிறது அறிவியல். நமது முயற்சிகளுக்கு எதிர்ப்புகள் வருவதை தவிர்க்க முடியாது.

நம் வினையும், அதற்கான எதிர்வினையும் சேர்ந்துதான் நமது செயல்பாடுகளை தீர்மானிக்கின்றன.

மின்சாரத்தில் நேர் மின்னாற்றலும், எதிர் மின்னாற்றலும் சேர்ந்தால்தான் மின்னாற்றல் கிடைக்கிறது. அது போலவே, நாம் நமது செயல்களில் வெற்றி பெறுவதற்கு எதிரிகள் தேவை. விளையாட்டுப் போட்டிகளில் கூட எதிர் அணி இருந்தால்தான், நம் திறமைகளை மேலும் வெளிக் கொண்டுவர நாம் முயல்வோம்.

அது போல்தான் நமது அன்றாட வாழ்விலும். நம்மை நாமே செழுமைப்படுத்திக் கொண்டு, செதுக்கிக் கொள்ள எதிரிகள் தேவை என்பதை இனியாவது நாம் உணர்ந்து கொள்வோம். எதிரிகளை வென்று வாழ்வில் முன்னேறுவோம்.

இன்று நம்மை நேசிப்பவர்கள், நாளை அதிகம் வெறுக்கக் கூடியவர்களாக மாறலாம்: அதிகம் வெறுக்கக்கூடியவர்கள், நாளை அதிகம் விரும்பக்கூடியவர்களாகக் கூட ஆகலாம். அதாவது எதிரியும் ஒரு நாள் நண்பனாவான், நெருங்கிய நண்பனும் ஒரு நாள் எதிரியாவான். இதுதான் வாழ்க்கைச் சக்கரம். எனவே, எதுவும் நிலையானதல்ல.

நெருக்கமானவர்கள் போற்றும்படி வாழ வேண்டும், எதிரிகள் குறை காண முடியாத அளவிற்கு செம்மையாக வாழ வேண்டும். அதுவே அர்த்தமுள்ள வாழ்க்கை, பயனுள்ள வாழ்க்கை.ஒருவர் நல்லவர், நம்பகமானவர், வாய்மையாளர் என்று அறியப்பட முக்கியமான இரு தரப்பினரின் சான்றிதழ் தேவை.

ஒன்று, அவருக்கு மிக நெருக்கமானவர்கள் தரும் சான்றிதழ். ஒருவரைப் பற்றிய உண்மை நிலையை சரியாக அறிந்தவர்கள் அவருக்கு நெருக்கமாக வாழ்கின்ற மனைவி, கணவன், பிள்ளைகள், உறவினர், நண்பர், அண்டை வீட்டார், பணியாட்கள் ஆகியோரே.

தூரத்தில் இருப்பவர்களுக்கு ஒருவரைப் பற்றி மேலோட்டமாகத்தான் தெரியும். அவரது திறமைகள், ஆற்றல்கள், சேவை, தியாகம் ஆகியவை பற்றி அவர்கள் அறிந்திருப்பார்கள். ஆனால் அவரைப் பற்றிய நுணுக்கமான விஷயங்கள் நெருக்கமானவர்களுக்கே தெரியும்.

நெருக்கமானவர்களை அடுத்து, எதிரிகள் தரும் சான்றிதழும் முக்கிய இடத்தைப் பெறுகிறது. எதிரிகள் எப்போதும் குறை காண்பதிலேயே கவனமாக இருப்பார்கள். துப்பறியும் அதிகாரி போல துருவித்துருவி குறைகளை ஆராய்வார்கள். 'எப்போது இவன் தவறு செய்வான்' என்று காத்திருப்பார்கள்.

எனவே ஒருவரது எதிரி அவரை நல்லவர் என்றால் அது அவருக்கு கிடைக்கும் மிகப்பெரும் விருதாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவ்விரு தரப்பினரிடம் இருந்தும் மிக எளிதாக நற்பெயர் பெற்றார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவரது நாற்பதாவது வயதில்தான் இறைத்தூதராக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டார். சாதாரண மனிதராக வாழ்ந்து கொண்டிருந்த ஒருவர், திடீரென தம்மை இறைத்தூதர் என்று அழைக்க ஆரம்பித்தால் எவர்தான் நம்புவர்?

ஆனால் அவரது மனைவி கதீஜா, உற்ற நண்பர் அபூபக்கர், உதவியாளர் ஜைத், மருமகன் அலி இன்னும் அவருக்கு மிக நெருக்கமான தோழர்கள் எவ்வித கேள்வியுமின்றி அவரை இறைத்தூதராக ஏற்றுக்கொண்டனர்.

ஏனெனில் நபிகள் நாயகம் (ஸல்) ஒருமுறை கூடப் பொய் சொல்லி அவர்கள் கேட்டதில்லை. நபிகள் நாயகத்தின் வாய்மையிலும், நேர்மையிலும் அவர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

மக்கா நகர மக்களும் அவரது வாய்மையில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தனர். இறை மார்க்கத்தை மக்களுக்கு அறிவிப்பதற்காக அக்கால முறைப்படி, மக்காவிலுள்ள ஸபா குன்றின் மீது ஏறி நின்று மக்களை நோக்கி நபியவர்கள் கேட்பார்கள் ,

“மக்களே! இம்மலைக்குன்றின் பின் புறமுள்ள கணவாயில் உங்களைத் தாக்க குதிரை வீரர்கள் காத்திருக்கின்றார்கள் என நான் கூறினால் நம்புவீர்களா?” எனக் கேட்பார்.

மக்கள் ஒரே குரலில், “ஆம், நம்புவோம், நீர் பொய்யுரைத்து நாங்கள் கேட்டதில்லை” என்று நபிகள் நாயகத்தின் நேர்மைக்கு சான்று பகர்ந்தனர்.

இனி, எதிரிகள் நபிகள் நாயகத்தின் நேர்மைக்கு வழங்கிய சான்றுகளை பார்ப்போம்.

நபிகள் நாயகம் போதித்த “ஒன்றே குலம், ஒருவனே தேவன்” என்ற கோட்பாட்டை மூர்க்கத்தனமாக எதிர்த்தவர்கள், அவரை நோக்கி ‘சூனியக்காரர், கவிஞர், பைத்தியக்காரர்’ என்று கூறினார்களே தவிர, அவரைப் பொய்யர் என்று ஒருபோதும் தூற்றியதில்லை. அவரது வாய்மை குறித்து எந்த சந்தேகத்தையும் கிளப்பியதில்லை.

நபிகளாரின் பரம எதிரியான அபூஜஹல், ஒருமுறை நபிகளாரை நோக்கி, “முஹம்மதே! நீர் பொய்யர் அல்ல, நீர் கொண்டு வந்துள்ள செய்திதான் பொய்யானது” என்றார்.

நபிகள் நாயகத்தின் இன்னொரு எதிரி, நபிகளாரின் நேர்மைக்கு வழங்கும் சான்றைப் பார்ப்போம்.

இஸ்லாத்தை ஏற்கும்படி ரோமானியப் பேரரசர் ஹெராகுலியஸ் என்பவருக்கு நபிகள் நாயகம் கடிதம் எழுதினார்கள்.

சக்கரவர்த்தியாகிய தனக்கே கடிதம் எழுதத் துணிந்த முஹம்மத் எப்படிப்பட்டவர் என்பதை அறிய ஹெராகுலியஸ் விரும்பினார்.

அவ்வேளையில் மக்காவிலிருந்து ரோம தேசத்திற்கு வணிகராக வந்திருந்த நபிகள் நாயகத்தின் கடும் பகைவரான எதிரி அபூசுப்யான் என்பவரை அழைத்து மன்னர் விசாரணை செய்தார்.

ஹெராகுலியஸ்: ‘எத்தகைய மக்கள் முஹம்மதை பின்பற்றுகின்றனர்? ஏழைகளா?, செல்வாக்கு மிக்கவர்களா?’

அபூசுப்யான்: பலவீனமானவர்களும், கதியற்றவர்களும்.

ஹெராகுலியஸ்: அவர்கள் எண்ணிக்கை பெருகி வருகிறதா, குறைந்து வருகிறதா?

அபூசுப்யான்: பெருகி வருகிறது

ஹெராகுலியஸ்: அவர் எப்போதாவது பொய்யுரைத்தது உண்டா?

அபூசுப்யான்: இல்லை

ஹெராகுலியஸ்: அவர் மோசடி செய்ததுண்டா?

அபூசுப்யான்: இதுவரை இல்லை, இனிமேல் என்ன செய்வார் என்பதை பார்க்க வேண்டும்.

ஹெராகுலியஸ்: அவர் உங்களுக்கு என்ன போதிக்கிறார்?

அபூசுப்யான்: ஒரே இறைவனை வணங்க வேண்டும், அவனைத் தொழ வேண்டும், நேர்மையாக இருங்கள், உண்மை பேசுங்கள், உறவினர்களின் உரிமைகளை வழங்கி விடுங்கள்.

இதனைக் கேட்ட ஹெராகுலியஸ் “தம் சொந்த விஷயத்தில்கூட பொய் சொல்லாத மனிதர், மத விஷயத்தில் ஏன் பொய் சொல்லப் போகிறார்?” என்று வியந்து கூறினார்.

ஆக, நபிகள் நாயகத்தின் வாழ்க்கைக்கு நெருக்கமானவர்களும் சான்று பகர்ந்தார்கள், எதிரிகளும் சான்று பகர்ந்தார்கள். நபிகள் நாயகத்தின் வெற்றிக்கு அவரது வாய்மையான வாழ்க்கையும் முக்கிய காரணமாகும்.

தொடக்கத்தில் அவரது கொள்கைகளை தீவிரமாக எதிர்த்தவர்களும் காலப்போக்கில் அந்த எதிர்ப்பை கைவிட்டனர். காரணம் என்னவெனில் நபிகள் நாயகம் போதிக்கும் கொள்கைகள் அவரது சுயநலத்திற்காக அல்ல, மாறாக மனித குலத்தின் மேன்மைக்காகவே என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

நமது வாழ்க்கையும் நபிகள் நாயகத்தின் வாழ்க்கையைப் போன்றே அமைய வேண்டும். நெருக்கமானவர்கள் போற்றும்படி வாழ வேண்டும், எதிரிகள் குறை காண முடியாத அளவிற்கு செம்மையாக வாழ வேண்டும். அதுவே அர்த்தமுள்ள வாழ்க்கை, பயனுள்ள வாழ்க்கை.

M Ahmed Kabeer

மாஷா அல்லாஹ்
நாற்பது தொடர்களுமே மிகவும் உபயோகமாகவும் பிரயோஜனமாகவும் இருந்தது
அல்ஹம்து லில்லாஹ்.
அல்லாஹ் உங்கள் இல்மில் பரகத் செய்வானாக,
பாரகல்லாஹ்.
அறிய பல தகவல்களையும் உணர்வுபூர்வமான விஷயங்களையும் தந்தமைக்கு
வாழ்த்துக்கள்.
எல்லாம் வல்ல அல்லாஹ்
உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உடல் (ஆஃபியத்) ஆரோக்கியத்தையும்,
நிம்மதியையும்
மகிழ்ச்சியையும்
நிறப்பமாக தந்து,
எல்லா விதமான கவலைகள் கஷ்டங்கள் நஷ்டங்கள் சஞ்சலங்கள் துக்கங்கள்
நோய்நொடிகள் அனைத்தையும் நீக்கீ,
நிம்மதியான
மகிழ்ச்சியான
சந்தோஷமான வாழ்க்கையை இம்மையிலும் மறுமையிலும் நஸீபாக்கி,
ஜன்னத்துல் ஃபிர்தௌஸ் எனும் சொர்கத்தில் உயர்ந்த அந்தஸ்த்தில் சேர்பானாக ஆமீன்.
மிக்க நன்றிகள் ஹாஜியார்
ஜஸாகல்லாஹ்.
தொடர்ந்து ""தொடரட்டும்"" உங்கள் சிறப்பான தொடர்
இன்ஷா அல்லாஹ்.

Ismail Ismail

இத்தொடர்

பெருமானார் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் சிறப்பை கொண்டு முத்தாய்ப்பாக நிறைவுற்றது சிறப்பு...

Last but not least..

Rahmath Rajakumaran

Ismail Ismail அதற்காகவே இந்தப் பதிவை நிறைவுப் பதிவாக தனிக் கவனம் செலுத்தி பதிப்பித்தேன்

மன மெய்யியல் 41

(வெகுளியும் தந்திரமும்)



பைபிளில் ஒரு வாசகம் வருகிறது. புறாக்கனைப் போல வெகுளியாகவும், பாம்புகளைப் போல தந்திரமாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் அந்த வாசகம்

புறாக்களைப் போல கள்ளங்கபடம் இல்லாமல் இருப்பவன் எப்படி பாம்பைப் போலத் தந்திரத்துடன் இருக்கமுடியும் என்கின்ற கேள்வி எழுவது இயல்பே.

புறாக்களைப் பாருங்கள் அவை எவ்வளவு மென்மையாக இருக்கின்றன.அவற்றின் கண்களில் எவ்வளவு சாந்தம் இருக்கிறது. இதுவரை நாம் யாரையாவது புறா கொத்தி கேள்விப்பட்டிருக்க

முடியுமா?

காகங்கள் கொத்துவதுண்டு சொல்லப்போனால் காகங்களுக்கு ஞாபக சக்தி அதிகம். மற்ற பறவைகளைக் காட்டிலும் அதிகமான நாட்கள் காகங்கள் உயிர் வாழ்கின்றன.

தன் கூட்டைக் கலைத்தவனை அவை மறப்பதில்லை. எத்தனை ஆண்டுகளானாலும் நினைவில் வைத்துக் கொண்டு அவனைத் தாக்க முயற்சி செய்யும்.

காகத்தின் எந்தக் குஞ்சாவது மனிதர்கள் கையில் அகப்பட்டதைப் பார்த்தால் அந்தக் குஞ்சை அவை சாகடித்து விடுகின்றன.

ஒருவேளை பலவீனமான இந்தக் குஞ்சுகள் இன்னொரு மனிதனின் கைகளில் அகப்பட்டால் மிகவும் மோசமான தாக்குதலுக்கு உள்ளாகி இறப்பதைக் காட்டிலும், நம் அலகுகளால் இறந்துபோகட்டும் என்று நினைக்கின்ற காரணமோ என்னவோ!

புறாக்கள் சமாதானச் சின்னங்களாக இருக்கின்றன.

ஆனால், காகங்கள்தான் கூடி வாழ்வதற்கு இலக்கணமாக இருக்கின்றன.

ஆனாலும் சமாதானத்தின் சின்னமாகப் புறாக்கள் இருப்பதற்குக் காரணம், காகத்தின் கண்களில் ஒரு குரோதம் தெரிகின்றது. ஒரு வன்மம் தெரிகின்றது. காகங்கள் யாரையும் நம்புவதும் இல்லை.

குர்ஆனில் கூட காகங்கள் மூர்கத்தனமான பறவையாகத்தான் காட்டியிருக்கிறான்.

(சண்டையிட்டு தான் கொன்ற) தன் சகோதரரின் பிரேதத்தை எவ்வாறு மறைக்க வேண்டும் என்பதை அவருக்கு அறிவிப்பதற்காக அல்லாஹ் ஒரு காகத்தை அனுப்பி வைத்தான். அது (அவருடைய சகோதரரின் உடலை எவ்வாறு மறைப்பது என்பதை அவருக்குக் காண்பிப்பதற்காகப் ஒரு காகம் மற்றொரு காகத்தோடு சண்டையிட்டு கொன்று, கொல்லப்பட்ட காகத்தை புதைப்பதற்காக) பூமியைத் தோண்டிற்று. (இதனைக் கண்ட) அவர் "அந்தோ! இந்தக் காகத்தைப்போல் (சொற்ப அறிவுடையவனாக) நான் இருந்தாலும் என் சகோதரரின் சவத்தை நான் மறைத்திருப்பேனே! (அதுவும்) என்னால் முடியாமல் போய்விட்டதே!" என்று (அழுது) கூறித் துக்கத்தில் ஆழ்ந்து விட்டார்.(குர்ஆன் : 5:31)

மனிதனை நம்பி அவன் காலைச் சுற்றித் திரிகின்ற கோழிகள், மாமிசத்திற்காக மனிதனுக்கே பலியாகின்றன. மனிதனைச் சிறிதும் நம்பாத காகங்கள் நெடுநாட்கள் உயிர் வாழ்கின்றன. இந்த உலகத்தில் நம்பிச் சாவதும், நம்பிக்கையின்மையால் வாழ்வதும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

புறாக்கள் அன்புமயமானவை. வளர்ப்பவர்களை நம்புபவை. அன்புமயமானவர்களின் தோள்களில் கூட அமரக்கூடியவை. யாரையும் காயப்படுத்தாதவை.தியாகத்திற்குப் புறாக்களைக் காட்டிலும் பொருத்தமான உதாரணம் இல்லை

பாம்பு என்பது ஆதம் ஹவ்வா இருந்த சுவனத்தில் சைத்தான் நுழைய முடியாது இருந்தபோது சைத்தான் காற்றாக மாறி பாம்பின் பல்லிடுக்கில் மறைந்து இருந்து கொண்டு,சுவனத்தில் நுழைந்தான். இதனால்தான் பாம்பிற்கு விஷம் அதன் பற்களில் இறைவன் அமைத்தான். இதன் காரணத்தால் பாம்பு ஒரு கோபச் சின்னமாகச் சித்திரிக்கப்படுகிறது.

நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வெள்ளத்திலிருந்து மக்களை காப்பாற்றி கப்பலில் பயணித்தார்கள் மக்களும் ஏனைய உயிரினங்களும் கப்பலில் தொடர்ந்து ரொம்பவும் காலம் கடற்பயணம் செய்தார்கள் .

அப்பொழுது வானவில் பல்வேறு வண்ணங்களுடன் காட்சி அளித்ததை கண்டதும் கப்பலிலிருந்தவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மழையே நிறுத்துவதாக இறைவன் தங்களுடன் செய்துகொள்ளும் உடன்பாடு அது என்று அவர்கள் அந்த வானவில்லின் வர்ண தோற்றத்துக்கு தங்களுக்குள்ளே விளக்கம் விளக்கம் கூறிக் கொண்டார்கள்.

அதன் பின் நூஹ் (அலை) அவர்கள் உலகின் நிலையை பார்த்து வருமாறு முதலில் கோழியை அனுப்பி வைத்தார்கள் . ஆனால் அது அங்குமிங்கும் சிதறிக் கிடப்பதாக பொறுக்கித் என்பதிலேயே இன்பம் கண்டு திரும்பி வரவே இல்லை. அது கண்டு அவர்கள் அதனை சபித்தனர் இதன் காரணமாக கோழிக்கு சிறகு இருந்தும் அது பறக்கும் தன்மையை இழந்துவிட்டது என்று கூறப்படுகிறது

அதன்பின் நூஹ் (அலை) அவர்கள் அப்பணிக்கு காகத்தை அனுப்பி வைத்தனர் . அதுவோ அங்குமிங்கும் கடந்த பிணங்களைக் கொத்தி தின்பதிலேயே இன்பம் கண்டதனால் அதுவும் திரும்பி வரவே இல்லை.

அதுகண்டு நூஹ் (அலை) அவர்களுக்கு ஏற்பட்ட வெஞ் சினத்திற்கு அளவே இல்லை அதனையும் சபித்தார்கள் . இதன் காரணமாக காகம் மக்களை கண்டு அஞ்சுகிறது என்றும் அது பிணத்தைத் தின்கிறது என்றும் கூறுவர்.

அதன்பின் அப்பணிக்கு புறாவை அனுப்பி வைத்தார்கள். அது தன் சின்னஞ்சிறு அழகில் ஒலிவ மரத்தின் ஒரு சிறு இளம் தளிரை கொண்டு வந்தது . அதை கண்டதும் வெள்ளம் வடிந்துவிட்டது என்பதையும் அதன் காரணமாக மரத்தின் உச்சியில் தண்ணீர் மட்டத்திற்கு மேல் நீட்டிக் கொண்டிருக்கிறது என்பதை பாக்கியம் பெற்ற ஒலிவ மரத்தை தவிர்த்து வேறு எல்லா மரங்களும் அழிந்து விட்டன என்பதையும் அவர்கள் விளங்கிக் கொண்டார்கள்.

விரைந்து சென்று இதனைக் கொண்டு வந்ததற்காக அவர்கள் அப்புறாவை வாழ்த்தி அதன் மீது ஏற்பட்ட அன்பின் பெருக்கால் அதன் கழுத்தைச்சுற்றி ஒரு வளையத்தை அணிவித்தார்கள் . அதோடு அது மனிதர்களின் அன்பை பெற்று வாழவேண்டும் என்றும் இறைஞ்சினார்கள் . எனவே அது மனிதர்களுக்கு தகவல் செய்திகளை சேர்க்கும் பொருட்டு அதன் உள்ளுணர்வில் உணர்வை ஏற்படுத்தினான் இறைவன் .

இன்றும் தொடரும் புறா விடு தூதாக புறாவின் கால்களில் கடிதங்களைக் கட்டி அனுப்பும் அஞ்சல் சேவை உலகிலேயே இப்போது இந்தியாவின் ஒடிஷா மாநிலத்தில் மட்டும்தான் தொடர்கிறது. ஒடிஷா காவல்துறையில் இன்னமும் 50 புறாக்களுக்குத் தகுந்த பயிற்சியும், உணவும் அளித்து இதற்காகவே வளர்த்துவருகின்றனர்.

பைபிள் சொல்கிறது: எப்போது நீ புறாவாக இருக்க வேண்டும் எப்போது நீ பாம்பாக இருக்க வேண்டும் என்பதை நீயாக தீர்மானித்துக் கொள்ள வேண்டாம். உன்னுடைய சூழல் அதை தீர்மானிக்கட்டும்.

மன மெய்யியல் 42

(மனதை ஆட்டுவிக்கும் சக்திகள்)



மன மெய்யியல் பற்றி ஹாசிட் கதை ஒன்று உண்டு. ஒரு "ராபி ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தான்

அந்த வழியே வந்த ஓர் இளைஞனை அழைத்து " நீ தெருவில் போகும்போது ஒரு பை கீழே கிடப்பதைப் பார்க்கிறாய். அதை எடுத்துப்பார்த்தால் அதிலே நிறையப் பணம் இருப்பதைக் காண்கிறாய் அப்போது நீ என்ன செய்வாய் ? " என்று கேட்டார்

அதற்கு அவன் உடனே "அப்படி ஒரு பையை ஒரு நிமிடம் நான் வைத்திருந்தால் கூட தவறு அல்லவா? எனவே உடனே உரியவர்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் ஒப்படைத்துவிடுவேன்" என்று சொன்னான்

அதற்கு அந்த ராபி, "நீ ஒரு முட்டாள்" என்று சொன்னார்.

அடுத்ததாக "அந்தத் தெருவில் வந்த இன்னொரு இளைஞனை அழைத்து அதே விஷயத்தைச் சொல்லி "நீ என்ன செய்வாய்" என்று கேட்டார்.

அதற்கு அந்த இளைஞன் "நான் பையை எடுத்துப் பார்ப்பேன் பையில் பணம் இருப்பதைக் கண்டதும், சுற்றும் முற்றும் பார்ப்பேன் ஒருவரும் நான் எடுத்ததைக் கவனிக்கவில்லை என்றால், நானே அதை வைத்துக்கொள்வேன்" என்று சொன்னான்

அந்த ராபி, " நீ ஒரு பேராசைக்காரன்" என்று திட்டி அனுப்பினார்

அடுத்ததாக வந்த இளைஞனிடம் அதே கேள்வியைக் கேட்ட போது, அவன் சிறிது நேரம் யோசித்தான். அவனிடமிருந்து உடனடியாகப் பதில் வரவில்லை. சற்று நேரம் கழித்து. "நான் பையை எடுக்கும்போது ஒரு வேளை எனக்குள் ஒரு கெட்ட எண்ணம் ஏற்படுமேயானால், அதை நானே வைத்துக் கொள்வேன்.

மாறாக, இறைமை என்னை ஆசிர்வதித்தால், அந்த நொடியில் இறைமை என்னை முழுவதுமாக ஆட்கொண்டால், நிச்சயம் நான் அதை அபகரித்துக் கொள்ளாமல் உரியவர்களிடம் சேர்க்க முயற்சிகள் செய்வேன்" என்றான்.

அதைக்கேட்டதும் ராபி, "நீ உண்மையான ஞானி!" என்று சொன்னார்.

இந்தக் கதை பொருள் பொதிந்த ஒன்று.

நிறைய நேரங்களில் உலகத்திற்காக நாம் ஒன்றைப் பேசிக் கொண்டிருக்கிறோம்.நாம் வெளியே ஒன்றைப் பேசும்போதெல்லாம் நம் உள் மனது வேறொரு மாதிரி சிந்தித்துக் கொண்டிருக்கின்றது.

நாம் ஆசைகளை வைத்துக்கொண்டு வேண்டாமென்று சொல்கிறோம். அவற்றை ஒத்துக் கொள்கிறபோது அவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்கின்ற எண்ணம் ஏற்படுகிறது. இவற்றையும் மீறி நாம் வாழ்கிற வாழ்க்கை ஒரு போலித் தனமாகவே இருக்கிறது.

ராபியின் கேள்வியில் மிகுந்த சூட்சுமம் இருக்கிறது. அவர் சொன்னவை மிகவும் சிந்திக்கத் தக்கன.

முதலில் நுழைந்தவன் அந்தப் பையை ஒப்படைத்து விடுவேன் என்று ஒரு கணமும் யோசிக்காமல் சொன்னது, அவன் உண்மையிலேயே தன்னை சுயபரீட்சார்த்தம் செய்து சொன்னவை அல்ல. அப்படிச் சொன்னால் அவனை நல்லவன் என்று கருதிக் கொள்வார்கள் என்று நினைத்து சொல்லப்பட்டது அது. எதையும் சிந்தித்துப் பார்க்காமல் சற்று என்று வெளிவருகின்ற வார்த்தையில் ஆழமோ அர்த்தமோ இருக்க முடியாது.

ஒரு நிமிடம் கூட வைத்திருக்காமல் கொடுத்துவிடுவேன் என்று அவன் சொன்னதும் சரியான காரணம் அல்ல. ஏனென்றால் உரியவனைக் கண்டுபிடிக்கும் வரை அந்தப் பொரும் நம் கைவசம்தான் இருந்ததாக வேண்டும். அதற்குள் அவன் மனம் பலவாறாக சிந்திக்கும். அது உரியவர்களைப் போய்ச் சேருகிறதா என்பதைத் தெரிந்துதான் ஒப்படைக்க முடியும்.

இரண்டாமவன், தானே வைத்துக்கொள்வேன் என்று சொன்னான். அவன் உலகத்தைப் பற்றிச் சிந்திக்காத சுயநலக்காரன் அவன் வாழ்க்கையும் அப்படித்தான்; அபகரிப்பில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சம்பவங்களின் தொகுப்பாக இருந்திருக்க வேண்டும்

ஆனால், மூன்றாவதாகச் சந்தித்த நபர் உண்மையானவன் அவனிடம் துளியும் போலித்தனம் இல்லை, சுயநலமும் இல்லை,

மனித மனம் ஒவ்வொரு நொடியில் ஒவ்வொரு மாதிரி மாறுகிறது. வாய்மையாக இருப்பவனே ஒரு நேரத்தில் கடினமானவனாகக் காணப்படுகிறான். அது அந்த நேரத்தைப் பொறுத்தது.

மூன்றாம் நபர் இறைமையின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறான் அந்தப் பொருளைக் கையகப்படுத்தக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறான்.

அதே நேரத்தில் தான் உடனடியாகக் கொடுத்துவிடுவதாகச் சொல்லி மற்றவர்களை நம்ப வைக்க முயற்சி செய்யவில்லை. தன்னைக் கெட்ட எண்ணம் ஆட்கொள்ளாமல் இருந்தால் அதைக் கொடுத்து விடுவேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிற போதே அவன் தீய எண்ணத்தை விட்டவனாக உருமாறுகின்றன்.

எப்போது ஒருவன் எந்த நிலையில் தான் எப்படிச் செயல்பட முடியும் என்று

நினைக்கிறானோ அந்த நொடியில் அவன் மனம். விழிப்புணர்வு பெற்றதாக மாறிவிடுகிறது.

இந்த சம்பவங்களின் தொகுப்பை இஸ்லாம் மிக அழகாக நமக்கு படம் பிடித்து காட்டுகிறது.

எல்லோரும் பெண்கள்தாம். ஆனால் ஒருவன் திருமணத்தின் மூலமே ஒரு பெண்ணைத் தனக்குரியவளாக ஆக்கிக்கொள்ள முடியும். இது இறைவன் வகுத்த நியதி. இந்த நியதியை மீறுவதும் பார்வையால் ஏற்படுகின்ற விளைவுதான். இதற்கு ஆண், பெண் என்ற பாகுபாடும் இல்லை. இருவரும் ஒருவரையொருவர் ஈர்க்கின்றனர். இருவரும் தம் பார்வையால் மதியிழக்கின்றனர். எல்லை மீறுகின்றனர். இதை யாரும் மறுத்துப் பேச முடியாது.
.

இதனால்தான் ஆண், பெண் இருவருமே தத்தம் பார்வையைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் எனத் திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது. பெண்ணுக்குக் கட்டளையிட்டு விட்டு ஆணைக் கட்டுப்பாடின்றி விட்டு விடவில்லை. இருவருக்குமே சமநிலையில் சட்டம் சொல்கிறது திருக்குர்ஆன். பார்வைதான் பாவத்திற்குக் காரணம் என்று பின்வரும் நபிமொழி உரைக்கிறது.

நபி (ஸல்) அவர்கள், அலீ (ரலி) அவர்களைப் பார்த்து, "அலீயே, உம் பார்வையை மீண்டும் மீண்டும் என ஆக்காதீர். (எதார்த்தமாகப் பார்க்கும்) முதல் பார்வை உம்முடையது. அடுத்த(டுத்த) பார்வை உமக்குரியது இல்லை (அது ஷைத்தானுடையது)" என்று கூறினார்கள். (நூல்கள் : அபூதாவூத், திர்மிதீ)

அவர் (நபி யூஸுஃப் அலை அவர்கள்) எந்தப் பெண்ணின் வீட்டில் இருந்தாரோ, (அந்தப் பெண்) அவள் அவர்மீது விருப்பங்கொண்டு, கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு (தன் விருப்பதிற்கு இணங்குமாறு) “வாரும்” என்று அழைத்தாள் -

(அதற்கு அவர் மறுத்து,) ”அல்லாஹ் (இத்தீய செயலிலிருந்து) என்னைக் காத்தருள்வானாக; நிச்சயமாக (உன் கணவர்) என் எஜமானர், என் இடத்தை அழகாக (கண்ணியமாக) வைத்திருக்கிறார் - அநியாயம் செய்பவர்கள் நிச்சயமாக வெற்றி பெற மாட்டார்கள்” என்று சொன்னார்.

ஆனால் அவளோ அவரைத் திடமாக விரும்பினாள்; அவரும் தம் இறைவனின் ஆதாரத்தைக் கண்டிராவிட்டால், அவள் மீது விருப்பம் கொண்டே இருப்பார்;

இவ்வாறு நாம் அவரை விட்டுத் தீமையையும், மானக்கேடான செயல்களையும் திருப்பிவிட்டோம் - ஏனெனில் நிச்சயமாக அவர் நம் தூய்மையான அடியார்களில் ஒருவராக இருந்தார். (குர்ஆன்: 12: 23,24)

மன மெய்யியல் 43

("இன்று புதிதாய்ப் பிறந்தோம்!")



"இன்று புதிதாய்ப் பிறந்தோம்!"-பாரதியின் அற்புத வரிகள் இவை.

புதிதாகப் பிறப்பது என்பது ஒவ்வொரு நாளும் நடக்க வேண்டும் இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு நொடியும் அது நிகழ வேண்டும்.

பிறப்பது என்பது வெறும் நிகழ்வு அல்ல. அது ஒரு புதிய பரிமாணம் - மறுமலர்ச்சி - (Transformation) பிறப்பு என்பது இறப்பை உள்ளடக்கியது.

இறக்கத் தெரிந்தவர்களால் மட்டுமே பிறக்கவும் முடியும். பிறக்கின்ற போது நம்மிடம் ஏற்கெனவே இருந்தவை எல்லாம் அழிந்துபோய் இருக்கவேண்டும். நம் உள்ளத்தில் இருக்கின்ற வன்மம், குரோதம், பயம், வெறி மதிப்பீடு ஆகிய அனைத்துமே இறந்தால்தான் நாம் புதிதாகப் பிறக்க முடியும்.

புதிதாகப் பிறப்பது என்பது உயிரியல் ரீதியாக நடக்கக் கூடியது அல்ல. உடலோடு தொடர்பு கொண்டதும் அல்ல. ஒவ்வொரு நொடியிலும் முந்தைய நொடியிலிருந்து முற்றிலும் வேறாக நமது உடல் மாறுகிறது.

சில அணுக்கள் அழிகின்றன. சில அணுக்கள் வளர்கின்றன. சில செல்கள் சேர்கின்றன. சில செல்கள் பிரிகின்றன. அப்படிப் பார்க்கிறபோது நாம் ஒவ்வொரு நொடியிலும் பிறக்கிறோம்.

ஒவ்வொரு நொடியிலும் இறக்கிறோம். காற்றை உள்ளிழுக்கின்ற போது நாம் உயிர்வாழ்வது தொடருகிறது என்று சொன்னால்- அந்தக் காற்றை வெளிவிடும்போது நாம் வாழுகின்ற ஒவ்வொரு நொடியும் குறைந்து போகிறது.

ஆக பிறப்பும், இறப்பும் ஒரே விகிதத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இன்று புதிதாகப் பிறப்போம் என்று சொன்னால், இதுவரை இருந்த பழையவற்றை எல்லாம் சுழற்றி எறிந்துவிட்டுப் புதிய சிந்தனையோடு புறப்பட்டு வருவது.

காலையில் நம்மீது படுகின்ற சூரியக் கதிர்கள் மகிழ்ச்சியைத் தருவதற்குக் காரணம் அவை புதிய ஒளிகள், புதிய கதிர்கள் நேரம் செல்லச் செல்ல அவை பழமை அடைகின்றன. அந்தப் பழமையின் உக்கிரம் நடுப்பகலில் நம்மை வருத்துகிறது.

நாம் அதிகமான வெப்பத்தை உணர்கின்ற நேரம் விஞ்ஞான ரீதியாக நண்பகல் இல்லை என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். 3 மணி முதல் 5 மணி வரைதான் பூமி உள்ளிழுத்த வெப்பத்தைப் பிரதிபலிக்கும் (Irradiation) நேரம். ஆக, அந்த நேரத்தில்தான் அதிக வெப்பம் இருக்கிறது என்று அறிவியலார் புள்ளிவிவரங்களைச் சொல்லுகிறார்கள்.

மலர், மொட்டில் இருந்து விரிகின்றபோது அதன் பிறப்பு நிகழ்கின்றது. அப்போது விரிந்த மலர் மிகுந்த அழகாக இருக்கிறது. நேரம் ஆக ஆக, அதன் இதழ்கள் வாட ஆரம்பித்து விடுகின்றன. அதன் மலர்ச்சி மறைய ஆரம்பிக்கின்றது.

எவனொருவன் தினமும் பிறக்கத் தெரிந்து வைத்திருக்கிறானோ அவன் எப்போதும் திருப்தியுடன் இருக்கின்றான். அவன் ரத்த ஓட்டத்தில் இளமை இருக்கிறது. அவனுடைய பார்வையில் குழந்தைத்தனம் இருக்கிறது.

நீங்கள் குழந்தையின் கண்களைப் பாருங்கள்.அவை கண்மணிகளைத் தாண்டி மிகுந்த வெண்மையாக இருக்கும். காரணம், இன்னும் அவைகளில் அழுக்குப் படியவில்லை புதிதாக முளைக்கின்ற பற்கள் முத்துப்போல் வெண்மையாக இருக்கின்றன.

காரணம், இன்னும் அவற்றில் கறை படியவில்லை. '

முனை மழுங்கும்போதெல்லாம், கூராய்த் தீட்டும் போதெல்லாம் அந்த நுனி புதிய பிறப்பை அடைகிறது.

முத்தைய நிகழ்வுகளைப் பழங்கதைகளைப் பேசி இறந்த காநினைவுகளில் தன்னை இழக்கின்றன மனிதர்களால் நிச்சயமாக புதிதாகப் பிறக்க முடியாது. புதிதாகப் பிறக்கின்றபோது தான் என்கின்ற தன்மையை இழக்க வேண்டும். தன்னுடைய என்கின்ற தன்மையை இழக்க வேண்டும்.என்னுடைய என்று சொல்கின்றவன் இறந்துபோய்க் கொண்டிருக்கிறான்.

இன்று புதிய உலகம், புதிய வானம், புதிய காற்று, புதிய மனம் புதிய மனிதர்கள் என்று தன்னை விரிவுபடுத்திக் கொள்பவன் முதுமை அடைவதே இல்லை. அவன், காலச் சக்கரத்தின் இருக்குகளில் அகப்பட்டுக் கொள்ளாமல் வெளியே எகிறி, புத்துணர்ச்சியோடு வாழ்க்கையை ஒவ்வொரு நாளும் தொடங்குகிறான்.

புதிதாகப் பிறக்கிறவன் அந்த நொடி இனிமையானது, உண்மையானது என்று

நினைக்கிறான். அவன் சந்திக்கின்ற மனிதர்களை அப்போது மட்டுமே சந்திப்பதைப்போல் பார்க்கிறான். நீங்கள் நினைத்துப்பாருங்கள்.

ஒவ்வொருவரும் அப்போது மட்டுமே பிறப்பதாக எண்ணிப் பாருங்கள். அவர்களிடம் உங்களுக்குக் கோபம் இருக்காது. பயம் இருக்காது. -மகிழ்ச்சி மட்டுமே மேலோங்கும்.

இஸ்லாம் புதியதாய்ப் பிறப்பதைப் பற்றி சொல்லும்போது, "அன்று பிறந்த பாலகன் போல் " என்ற உவமானத்தை சொல்லித் தருகிறது .அன்று பிறந்த பாலகன் என்றால், எந்த பாவமும் செய்யாத ஜீவன்.

மனிதன் கடந்தகாலத்தில் செய்த பாவங்களால்தான் அவன் இதயம் மரணித்துப் போய் இருந்தது. அவன் இறைவனிடத்தில் பாவமன்னிப்பு கேட்கும் போது, அவன் பரிசுத்தம் அடைந்து அன்று பிறந்த பாலகன் போல் ஆகிறான்

"என் உள்ளத்தில் அல்லாஹ் இஸ்லாத்தை ஏற்கும் எண்ணத்தை ஏற்படுத்தியவுடன் நபி (ஸல்) அவர்களிடம் சென்று “உங்கள் கையை விரியுங்கள்! உங்களிடம் பைஅத் (உறுதி மொழி) எடுக்க விரும்புகிறேன்” என்று கூறினேன்.

நபி (ஸல்) அவர்கள் கையை நீட்டியதும் என் கையை நான் மடக்கி கொண்டேன்.

அதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள்: “அம்ரே! உனக்கு என்ன நேர்ந்துவிட்டது” என்று கேட்டார்கள்.

“ஒரு நிபந்தனையின் அடிப்படையிலேயே நான் பைஅத் செய்வேன்” என்று நான் கூறினேன்.

“என்ன நிபந்தனை?” என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

“(என் பாவங்கள்) மன்னிக்கப்பட வேண்டும் (என்பதே நிபந்தனை)” என்று நான் கூறினேன்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் “இஸ்லாத்தை ஏற்பது அதற்கு முன்னுள்ள பாவங்களைத் தகர்த்து விடுகிறது; ஹிஜ்ரத் செய்வது அதற்கு முன்னுள்ள பாவங்களைத் தகர்த்து விடுகிறது; ஹஜ் அதற்கு முன்னுள்ள பாவங்களைத் தகர்த்து விடுகிறது என்பதை நீர் அறிந்திடவில்லையா?” என்று கேட்டார்கள். அறிவிப்பவர் : அம்ருபின் ஆஸ் (ரலி) நூல் : முஸ்லிம்"

நம் பாவங்கள் இன்று மன்னிக்கப்படும் பொழுதெல்லாம் நாம் இன்று புதிதாய்ப் பிறக்கிறோம்.

மன மெய்யியல் 44

(ஆன்ம பலம்)



தவறு செய்வது மனித இயல்பு. ஆனால் அதற்கு மற்றவர்களைப் பொறுப்பாக்கி அதில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள தப்ப நினைப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அது ஈனத்தனம்.

அதேபோல் தன் தவறுகளை நியாயப்படுத்துவதில் எந்தப் பயனும் இல்லை-மனம் எப்போதும் சமாதானம் சொல்கிறது. இதனால் யாரும் தன்னுடைய குறைபாடுகளை ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை.

நம் மொழியிலேயே இப்படிப்பட்ட மனநிலை பிரதிபலிப்பதைக் காணலாம். நாமாகக் சுல்லில் மோதி 'கல் இடித்துவிட்டது. என்கிறோம் - ஓர் இடத்தில் நிரந்தரமாக அமர்ந்திருக்கும் உயிரற்ற கல் எப்படி இடிக்க முடியும்?

முள் குத்திவிட்டது என்கிறோம்.

கதவு காயப்படுத்திவிட்டது என்கிறோம்.

அரிவாள் வெட்டிவிட்டது என்கிறோம்

கத்தி அறுத்துவிட்டது. என்கிறோம் -

செருப்பு கடித்துவிட்டது என்கிறோம்

இப்படியெல்லாம் உயிரற்ற பொருள்களின் மீது பொறுப்பைக் கழற்றித் அதன் மீது தொங்கவிட்டு விடுகிறோம் - இதே உணர்வை மனிதர்களின் மீதும் சுமத்துகிறபோது பிரச்சினை ஆரம்பிக்கின்றது.

நாம் வெற்றி பெற்றால் அதற்கு நாம் பொறுப்பு - நாம் மட்டுமே பொறுப்பு-ஆனால் தோல்வியடைந்தால் அதற்கு மற்ற எல்லோரும். பொறுப்பு என்கிற மனநிலை நம் எல்லோருக்குமே இருக்கிறது.

அதைப் போலவே ஒரு நிறுவனத்தில் ஒரு வெற்றிகரமான செயல் நடந்துமுடிந்தால்.

"நான்தான் இந்த யோசனையைத் தெரிவித்தேன்

நான்தான் இந்தத் திட்டத்தைத் தயாரித்தேன்

நான்தான் இதை நிறைவேற்றினேன்,

நான்தான் இதைச் செயல்படுத்த உதவினேன் -

நான்தான் இதற்கு ஆலோசகராக இருந்தேன்.

நான்தான் இரவுபகலாக உழைத்தேன்"

என்று ஒவ்வொருவராகப் போட்டிபோட்டுக் கொள்வார்கள்.

நாம் தவறு செய்வது இயற்கை. ஆனால், எப்பொழுது நாம் 'தவறு' என்று உணர்கிறோமோ, எப்போது நாம் அதை ஏற்றுக் கொள்கிறோமோ, அந்த நொடியிலேயே அத்தவறில் இருந்து நாம் விடுதலையடைகிறோம் என்பதை நாம் உணர மறுக்கிறோம்.

ஓர் ஆழ்ந்த சுயபரிசோதனை இதற்குத் தேவைப்படுகிறது. ஆங்கிலத்தில் அதை 'introspection' என்று குறிப்பிடுகிறார்கள்.

தவறுகளைப் பகிரங்கமாக ஒத்துக்கொள்கிறபோதே அந்தத் தவறும் மறைந்துவிடுகிறது. ஏனென்றால், அதற்கு அசாத்தியத் துணிச்சலும், பரந்த மனப்பான்மையும் தேவைப்படுகிறது.

செங்கல்லை உடைப்பதும், ஓடுகளை உடைப்பதும், பனிக் கட்டிகளைப் பாளம் பாளமாக வெட்டிச் சாய்ப்பதும் பலம் என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், உண்மையில் "ஆன்ம பலம் " தான் மிகவும் முக்கியம். தவறுகளை ஏற்றுக் கொள்கிறவர்களுக்குத்தான் ஆன்ம பலம் தோன்றுகிறது.

இலங்கை **Fathima Zumla** பதிவிலிருந்து ....

இது ஒரு உண்மைச் சம்பவம்.

திருமணம் முடித்த பின்பும் அந்நிய பெண்களோடு தொடர்பு வைத்திருக்கும் ஆண்களுக்கு இது ஒரு சிறந்ததும் படிப்பினையானதுமான பதிவு.

அவள் ஒரு ஆலிமா. இன்றும் கூட பெண்களுக்கான குர்ஆன் மத்ரஸா ஒன்றில் பணிபுரிகிறாள். திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளுக்கு தாயான அவளுக்கு வயது இருபத்தாறு ஆகும்.

ஒருநாள் இவள் தனது மாணவிகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது இவளது மனதில் ஒரு தப்பான எண்ணம் தோன்றுகிறது. அதுதான் தான் விபச்சாரம் செய்தால் என்ன என்று....! அவளுக்குப் புரியவில்லை, அந்த கெட்ட எண்ணம் தனக்கு ஏன் ஏற்படுகிறது என்று அவளுக்கு நிஜமாகவே புரியவில்லை.

தன் மனதில் ஏற்படும் இந்த தீய எண்ணம் ஷைத்தானின் தூண்டுதலே என எண்ணி இஸ்திஃபார் செய்தவளாக இருந்தாள். ஆனால் அவளது உள்ளத்தில் அந்த எண்ணம் அடிக்கடி வந்து மேலோங்கியே இருந்தது.

அழுதாள். தொழுதாள். அல்லாஹ்விடம் கையேந்தி இந்த அசிங்கமான அருவறுப்பான சிந்தனையிலிருந்து தன்னைப் பாதுகாக்குமாறு வேண்டினாள். ஆனாலும் அவளது மனதில் அந்த சிந்தனை மறைந்தபாடில்லை.

ஒருநாள் தன் கனவனிடம், "வாருங்கள் நாம் உம்றாவுக்குச் சென்று வருவோம்" எனக்கூறி இரண்டு பேரும் உம்றாவுக்குச் சென்றனர், அங்கும் அவளது அந்த சிந்தனை அவளை வாட்டி வதைத்தது. தன் கணவனிடம் இதைப் பற்றிக் கூறினாள்.

கணவனும் மௌனமானான். உம்றாவிலிருந்து இரண்டு பேரும் வீடு திரும்பினர். ஆனாலும் அவளது உள்ளத்தில் அந்த நினைவு அவளைச் சித்திரவதை செய்தது.

மாணவிகளுக்குப் பாடம் நடத்துவதிலும் கவனக் குறைவு ஏற்பட்டது..சில நாட்கள் மத்ரஸாவுக்குப் போகாமல், தாய் வீட்டுக்குச் சென்று பழைய நினைவுகளோடு வாழலாம் என நினைத்து தன் கனவனிடம் அனுமதி கேட்டாள். அவனும் நல்லது உன் கூட நானும் வருகிறேன். எனது அலுவலகத்தில் எனக்கு அவசர வேலை கொஞ்சம் இருக்கிறது இரண்டு நாட்களில் முடிந்து விடும். அதன் பிறகு போகலாம் என்றதும் அவளும் சரி என்று கூறினாள்.

மறுநாள் பொழுதுவிடிந்தது...ஆச்சரியம் ! இப்போது அவள் மனதில் அந்த அசிங்கமான எண்ணம் தோன்றவில்லை..தான் வழமை போல் இருப்பதை உணர்ந்தாள். அவளுக்கு இப்போதும் புரியவில்லை, அந்த கெட்ட எண்ணம் தனக்கு ஏன் இப்போது ஏற்படவில்லை என்று நிஜமாகவே அவளுக்குப் புரியவில்லை.

தன் மாணவிகளிடம் அல்குர்ஆனின் ஓதல்களை மீட்டிப்பார்க்கும் எண்ணமும், மீட்டல் செய்யும் மாணவிகளின் பெயரும் அவளுக்கு இப்போது ஒன்றன்பின் ஒன்றாய் நினைவுக்கு வந்தன. தனது மனது இயல்பான நிலையிலிருப்பதைக் கண்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினாள். தன் கனவனிடம் இதைக் கூறினாள்.

அவளது கணவன் அழுது கொண்டே கூறினான் :

" உனது மனதில் அந்தத் தீய எண்ணம் தோன்ற நானே காரணம். என் நண்பன் ஒருத்தனின் வீட்டுக்கு நான் சென்றிருந்தேன், அப்போது அங்கு ஒரு பெண்ணைக் கண்டேன். அவள் அவனது வீட்டு வேலைக்காரி. அவள்மீது நான் ஆசைப்பட்டேன். எனது போன் நம்பரை அவளிடம் கொடுத்து உனக்கு என்ன தேவையிருந்தாலும் என்னிடம் கேள் என்று கூறிவிட்டு வந்தேன்.

அவளுக்கு உதவி செய்வது என் நோக்கமில்லை. ஆனால் அவளோடு பேசி என் மனதிலிருக்கும் ஆசையை அவளிடம் சொல்லி, அவளை அடைந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அப்படிக் கூறினேன்.

ஒருநாள் எனக்கு அவள் போன் செய்து தனது போனுக்கு ரீசார்ஜ் செய்யுமாறு கூறினாள். அதற்கான பணத்தை தன் எஜமானிடம் வாங்கித் தருவதாகவும் கூறினாள்.

அன்றிலிருந்து நான் அவளோடு பேசத் தொடங்கினேன். என் மனதெல்லாம் அவளை அடைந்து கொள்ளும் எண்ணமே இருந்தது.

ஆனால், நீ உன் மனதிலிருந்த அந்த அசிங்கமான எண்ணத்தைச் சொன்னபோது, என் உள்ளத்தை அது குத்தியது. நான் செய்யப் போகும் தீமையின் பிரதிபலனின் முதல் அடையாளம் அது என்பதை உணர்ந்தேன். அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டேன் இஸ்திஃபார் செய்தேன். இப்படியான உணர்வுகள் என்னுள்ளத்தில் இனி வரக்கூடாது என என் இறைவனிடம் மன்றாடினேன்.

அல்லாஹ் என் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான், இதோ எனது மொபைல் சிம்மை உடைத்து விட்டேன் என்று அழுதவனாக தான் தன் மனைவிக்கு செய்த துரோகத்துக்காக அவளிடமும் மன்னிப்புக் கேட்டான்.

மனம் திருந்திய தன் கணவனை மடியில் சாய்த்து தலையை கோதியவளாக எம்மிருவரையும் அந்தப்பாவத்திலிருந்து பாதுகாத்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் என அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டார்கள் அந்த தம்பதிகள்.

யா அல்லாஹ் எங்களனைவரையும் மன இச்சையிலிருந்து தீய எண்ணத்தின்பால் பாவம் செய்வதிலிருந்தும் பாதுகாத்தருள்வாயாக !

உண்மையில் "ஆன்ம பலம் " தான் மிகவும் முக்கியம். தவறுகளை ஏற்றுக் கொள்கிறவர்களுக்குத்தான் ஆன்ம பலம் தோன்றுகிறது.

اَلزَّانِىْ لَا يَنْكِحُ اِلَّا زَانِيَةً اَوْ مُشْرِكَةً وَّ الزَّانِيَةُ لَا يَنْكِحُهَاۤ اِلَّا زَانٍ اَوْ مُشْرِكٌ‌ وَحُرِّمَ ذٰ لِكَ عَلَى الْمُؤْمِنِيْنَ

(கேவலமான) ஒரு விபச்சாரன் (தன்னைப் போன்ற) ஒரு விபச்சாரியை அல்லது இணைவைத்து வணங்கும் ஒரு பெண்ணை அன்றி (மற்றெவளையும்) திருமணம் செய்துகொள்ள முடியாது. (அவ்வாறே) ஒரு விபச்சாரி (கேவலமான) ஒரு விபச்சாரனை அல்லது இணை வைத்து வணங்கும் ஓர் ஆணையன்றி (மற்றெவனையும்) திருமணம் செய்துகொள்ள முடியாது. இத்தகைய திருமணம் நம்பிக்கையாளர்களுக்குத் தடுக்கப்பட்டிருக்கின்றது. (குர்ஆன் : 24:3)

மேற்கண்ட பதிவுக்கேற்ற குர்ஆன் வசனம்

மன மெய்யியல் 45

(நமக்குள் இருக்கும் அந்நியன்)



லியோனார்டோ டாவின்ஸி (Leonardo-da-vinci) தன்னுடைய 'Last supper' என்கிற ஓவியத்தை வரைந்து கொண்டிருந்தார்- அது அவருடைய 'Master piece'.

பலருடைய உணவருந்தும் அறையில் அந்த ஓவியம் தொங்கிக் கொண்டிருப்பதை நீங்கள் காணலாம்.

லியோனார்டோ அந்த ஓவியத்தை வரைந்து கொண்டிருக்கும்போது இயேசுவைப் ஓவியமாக தீட்டுவதற்கு ஒரு model ஐத் தேடிக் கொண்டிருந்தார்.

வெகுநாட்கள் தேடிய பிறகு, அவருக்கு ஒரு சர்ச்சில் Pietro Bandinelli என்கிற இளைஞன் கிடைத்தான். அவன் மிக அழகாக இருந்தான். அவன் முக அமைப்பும், வசீகரமும், தேஜஸூம், தொங்கி படியும் தலைமுடியும் அவன் இயேசுவாக அழகை ஒளிரச் செய்தன.

இயேசுவை ஓவியமாகத் தீட்டிய பின்னும், பல ஆண்டுகள் அந்த Last supper' ஓவியம் முற்றுப் பெறாமல் இருந்தது காரணம், அனைத்துச் சீடர்களையும் வரைந்து முடித்த பிறகும் இயேசுவைக் காட்டிக் கொடுத்த Judas Iscariot ஐ இன்னும் வண்ணமாகத் தீட்டாததால், அந்த ஓவியம் பூரணத்துவம் அடையாமல் இருந்தது.

லியோனார்டோ டாவின்ஸி, பாவங்களால் இறுகிய முகத்தோடு பரட்டைத்தலையுடன் திரிந்திருந்த ஒரு மனிதனை அவர் தேடிக் கொண்டிருந்தார்.

இறுதியாக, ரோம் நகரில் எதிர்பாராத ஒரு பிச்சைக்காரனை அவர் கற்பனை செய்திருந்த ஜூடாஸ் தோற்றத்துடன் அவனைப் பார்த்தார். அவனுக்குப் பணம் கொடுத்து அவனைக் கொண்டுவந்து அமர்த்தி அவன் படத்தை வரை ஆரம்பித்தார்.

“உன் பெயர் என்ன?" என்றார்.

"தான் Pietro Bandinelli பல வருடங்களுக்கு முன்பு உங்கள் ஓவியத்திற்கு இயேசுவாக நான்தான் model செய்தேன்" என்றான்.

ஒவ்வொரு மனிதனிடமும் இயேசுவும் உண்டு; யூதாலயும் உண்டு-- அவனிடம் சில நேரங்களில் இயேசும் வெளிப்படுகிறார். பல நேரங்களில் அவனுக்குள்ளிருக்கும் யூதாஸூம் வெளிப்படுகிறான்.

"Jackyll and Hide" - என்கிற ஒரு நாவல் மிக அழகானது.

உலகத்திற்கு மிகவும் நல்லவராக இருக்கும் Jackyll இரவு நேரங்களில் கெட்டவராக Hide ஆக வெளிப்படுவார் - Hide கெட்டவர். Jackyill எவ்வளவுக்கு எவ்வளவு நல்லவரோ அவ்வளவுக்கவ்வளவு Hide கெட்டவர்

தன்னிடமிருக்கும் கசப்பை வெளிப்படுத்த அவருக்கு Hide என்ற அந்த இன்னொரு வடிவம் தேவைப்பட்டது. நாவலின் கடைசியில் Jackyill ஐ சாகடித்து விட்டு Hide ஆகவே இருந்துவிடுகிறார்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் பெரிய கொடைவள்ளல். அவரிடம், "எப்படி உங்களால் தர்மம் அதிகமாக செய்யமுடிகிறது ?"

" மனம் கொடுக்க வேண்டும் என்றவுடன் உடனே கொடுத்துவிட்டேன். மனம் சற்று யோசிக்க ஆரம்பித்தால், கொடுப்பதில் குறைவு வந்து விடும். அல்லது கொடுக்க தடுத்துவிடும். எனவே தர்மம் செய்ய நாடினால் உடனடியாக கொடுத்து விடுவேன்" என்றாராம்.

"இஸ்லாமிய வரலாற்றிலே பத்ர் யுத்தம் மிகப் பிரபலமானதும் பெரிய யுத்தமும் ஆகும். இப்படியான பெரியதோர் யுத்தத்தை வெற்றிகரமாக முடித்து திரும்பும் போது...

நபிகள் கோமான் (ஸல்லலாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நாம் சிறிய யுத்தத்தில் இருந்து பெரிய யுத்தம் அளவில் மீண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள்.

சஹாபாக்கள் அதிர்ச்சியுடன், " நாயகமே எத்தனை உயிர் தியாகம். எவ்வளவு பெரிய யுத்தம் இதை முடித்து நாம் திரும்பிக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்க யாரஸூலல்லாஹ்! சிறிய யுத்தம் என்று சொல்கின்றீர்கள் என கேட்க,

பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள். "வாளேந்தி போராடுவது பெரிய யுத்தமல்ல; தனது நப்ஸ் என்ற மனோ இச்சையுடன் போராடுவதே பெரிய யுத்தம்" என்று சொன்னார்கள்.

இதிலிருந்து மனோ இச்சையை கொள்வதே பெரிய யுத்தம், அதை செய்பவரே உயர்வான ஷஹீத் என்பது ஹதீஸ் மூலம் எமக்கு தெளிவாகி விட்டது.

அவ்லியாக்கள் என்பவர்கள் இறை நேசத்தை பெற்ற நன்மக்கள். அவர்கள் தமது மனோ இச்சையை அழிக்காமல் அவனை நெருங்கி இருக்க முடியாது.

அப்படி மனதோடு போராடி அதை வெல்லாதவர் ஒரு இறை நேசராக இருக்க முடியாது.

அப்படி இரண்டு யுத்தத்தில் வெற்றி கொண்டவர்களே அல்லாஹ்வின் இறைநேசர்களாகிய வலிமார்கள் என்று கருதப்படும்.


கூண்டில் கிளியிருப்பது போல் மனிதனிலேயே தங்கியுள்ள நப்ஸு எந்த நேரத்தில் எந்த உருவத்தில் தீமை செய்யும் என்பதை அறிந்து கொள்ள முடியாது, சொல்லப்போனால், அந்த நப்ஸு ஆன்மாவுக்கு அந்நியன்'

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்: "உனது பகைவர்களில் உனக்கு மிகவும் கொடிய பகைவன் யாரெனில் உனது இரண்டு விலாவுக்கும் இடையிலுள்ள நப்ஸ் ஆகும்" என்று கூறியுள்ளார்கள்.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் நல்லவனும் அன்னியோன்னியமாக இருக்கிறான். கெட்டவனும் அந்நியனாக இருக்கிறான்

மன மெய்யியல் 46

(அழகும், அவலட்சணமும்)



சீன தத்துவ ஞானி லாவோட்சு அழகைப் பற்றிக் குறிப்பிடுகின்ற போது "அழகை எப்போது அழகு என்று உணருகிறோமோ அப்போதே அவலட்சணமும் ஆரம்பமாகி விடுகிறது" என்று குறிப்பிடுகின்றார்.

ஒன்றை நாம் அழகு என்று சொன்னால் அழகற்ற ஒன்றும் இருக்க வேண்டும் என்பது பொருள்..

ஒன்றை இனிமை என்று வரையறுத்தால் இனிமையற்றதும் இருக்க வேண்டுமென்பது பொருள்.

ஒன்றை ஒளி என்று சொன்னால், ஒளியற்ற தன்மையும் இருக்க

வேண்டும் என்பது சூட்சுமம்.

அழகு என்பதை நாம் வரையறுத்தால் அவலட்சணம் என்பதையும் நாம் வரையறுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

'ஒன்றை அழகு என்று பெருமையாகப் புகழ்ந்தால், இன்னொரு நேரத்தில் எதையாவது ஒன்றை அவலட்சணம் என்று கூறி முகம் சுளிக்க வேண்டியதாக இருக்கும்.

உண்மையிலேயே அழகு என்பதோ, அவலட்சணம் என்பதோ இயற்கையில் இல்லை.அதற்கான இலக்கணங்களை நாம்தான் வரையறை செய்கிறோம். பார்ப்பவர்கள் விழிநிலையில் அதைப் பற்றிய கருத்து 'அவலட்சணமாக இருக்கலாம்.

ஒருவருக்கு அருவருப்பைத் தருவது இன்னொருவருக்கு அழகைத் தரலாம்.காரணம், ஒவ்வொருவரும் ஓர் அகராதியைத் தன் கைகளில் வைத்திருக்கிறார்கள்.

மஜ்னு, லைலை கறுப்பு அழகியை மனதார காதலிக்கிறார். அவள் மோகத்திலே நாளெல்லாம் 'லைலை.. லைலை.'.. என்று பிதற்றிக் கொண்டு அலைகிறார் .

அவரது நண்பர்கள் அவரை மக்காவுக்கு கூட்டிச்சென்று இறை வணக்கத்தில் ஈடுபடுத்தினால், லைலைலின் போதை குறையும் என்று மஜ்னுவை மக்காவிற்குக் கூட்டிச்சென்று கஃபாவை காட்டுகிறார்கள்.

மஜ்னு கஃபாவைப் பார்த்ததும், " கஃபா கறுப்பாக என் லைலை மாதிரியே அழகாக இருக்கிறது ! " என்றாராம்.

"லைலை என்ன அவ்வளவு அழகாக ?" என்று கேட்டதற்கு, லைலைவின் அழகை காண்பதற்கு மஜ்னுவின் கண்கள் வேண்டும் "- உண்மை தானே !

மஜ்னு ஒருமுறை ஒட்டகத்தில் ஏறி லைலாவின் ஊருக்கு போகிறார் . போகும் வழியெல்லாம் லைலாவின் நினைவு வழிகிறது. காதலின் ஆழ்ந்த மயக்கத்தில் இருக்கும் மஜ்னுவை ஏற்றிக்கொண்டு ஒட்டகம் வேறு எங்கோ சென்றுவிடுகிறது !

விழித்துப் பார்க்கும் மஜ்னு, ஒட்டகத்தை நிறுத்திவிடுகிறார். இனிமேல் சரிவராது என கீழே இறங்கி லைலாவின் ஊருக்கு நடக்க ஆரம்பித்துவிடுகிறார்.

வழிப்பாதையில் வந்தவர்கள் கேட்கிறார்கள், அதற்கு மஜ்னு "எனக்கு தான் லைலா மீது காதலே தவிர, ஒட்டகத்திற்கு அல்ல" என்கிறார்.

அழகு என்றும் ஆபத்து என்பதையும் மறந்துவிடக் கூடாது என்பதற்கு சிறுகதையை சொல்றேன்.

கலைமான் ஒன்று குளத்திற்குச் சென்று தண்ணீர் குடித்தது. அப்பொழுது தண்ணீரில் தெரிந்த தன் வடிவத்தைப் பார்த்தது.

" ஆ! எவ்வளவு அழகான கொம்புகள் எனக்கு உள்ளன. இந்தக் கொம்புகள் என் அழகை மேலும் அழகுபடுத்திக் காட்டுகின்றன. எல்லோரும் பெருமையுடன் என்னைப் பார்க்கிறார்கள்' என்று நினைத்தது.

அதே நேரத்தில் தண்ணீரில் தெரிந்த தன் கால்களைப் பார்த்தது. '"அட ! இந்தக் கால்கள் எவ்வளவு மெலிந்து அவலட்சணமாக உள்ளன. இப்படிப்பட்ட கால்கள் இல்லாவிட்டால், நான் இன்னும் பேரழகுடன் விளங்குவேனே'" என்று ஏங்கியது.

அப்பொழுது சிங்கம் ஒன்று அங்கே வந்தது. அதைக் கண்ட மான் ஓட்டம் பிடித்தது. சிங்கம் அதைத் துரத்தத் தொடங்கியது.

சமவெளியைக் கடந்து காட்டிற்குள் நுழைந்தது மான். அங்கிருந்த புதர்களில் அதன் கொம்பு சிக்கிக் கொண்டது. தன் கொம்புகளை விடுவிக்க மான் முயற்சி செய்தது. ஓட முடியாமல் தவிப்புடன் நின்ற மானின் மீது பாய்ந்தது சிங்கம்.

தான் சாகப் போவதை உணர்ந்த மான் '"எப்படிப்பட்ட முட்டாள் நான். என் கால்களை அவலட்சணம் என்று இகழ்ந்தேன். என் கொம்புகள் மிகுந்த அழகானவை என்று மகிழ்ந்தேன்.

அவலட்சணமான கால்கள் விரைந்து ஓடி என்னைக் காப்பாற்ற முயற்சி செய்தன. அழகான கொம்புகள் என் ஓட்டத்தைத் தடுத்து என் சாவுக்குக் காரணமாகிவிட்டன" என்று தன்னைத்தானே நொந்து கொண்டு இறந்தது. நீங்கள் ரொம்பவும் சீரியஸாக சிந்திக்க வேண்டிய விஷயம் இது !

உலகின் ஆக அவலட்சணமான நாய்களுக்கான போட்டி அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் நடைபெற்றுள்ளது

இங்கிலிஷ் புல்டாக் ரகத்தைச் சேர்ந்த ஸா ஸா (Za Za).9 வயது ஸா ஸா வுக்கு உலகின் ஆக அவலட்சணமான நாய் என்ற பட்டம் கிடைத்தது. பரிசு தொகை 1500 டாலர்!

மன மெய்யியல் 47

(இழப்பிலிருந்தும் ஞானம்)



ஒரு ஜென் துறவியுடைய குடிசையின் கூரை அருகிலிருந்த அடுப்பின் நெருப்பு பொறிப்பட்டு முழுவதுமாக எரிந்து போனது. அக்கம்பக்கத்தில் இருந்தவர்களெல்லாம் ஜென் துறவி மீது இறக்கப்பட்டு, ஆறுதல் சொல்ல ஆரம்பித்தனர்.

" அப்பாடா இத்தனை நாட்கள் நிலவை மறைத்திருந்த என் குடிசையின் கூரை இப்போது எரிந்து விட்டது " என்று அவர் மகிழ்ச்சியுடன் சொல்லி, அவர்களை வழியனுப்பி வைத்தார் .

இழந்ததற்காக வருத்தப்படாமல், அடைந்ததற்காக அதுவும் இழந்ததன் மூலம் அடைந்தற்காக மகிழ்ச்சியடைபவன்தான் விழிப்புணர்ச்சி உடையவன்.

வருத்தப்படுவதால் , இழந்தது திரும்பக் கிடைப்பதில்லை. இறந்த காலத்திற்காக நிகழ்காலத்தை ஏன் தொலைக்க வேண்டும் ?

நிகழ்காலத்திலேயே தன்னை நிறைத்துக் கொண்டிருப்பவனால்தான் கூரை எரிந்தற்காக வருத்தப்படாமல், வானம் வசப்பட்டதற்காகக் குதூகலிக்க முடியும் .

கூரை எரிந்து போனது ஒன்றும் மகிழ்ச்சியான அனுபவமல்ல.

இந்த நொடி சத்தியமானது. இப்போது முழு நிலவு தெரிகிறது. இந்த நொடியில் இந்தக் கணத்தில் வாழ்பவன்தான் ஒவ்வொரு வினாடியிலும் இன்பமாக வாழ்கிறான் .

கௌதுல் ஆலம் முகையதீன் அப்துல் காதிர் ஜிலானி (ரஹ்) அவர்கள்

ஒரு தடவை அவர்கள் முகம் பார்க்க பயன்படுத்தி வந்த கண்ணாடியே உடைத்து விட்ட, அவர்களின் ஊழியன் நடுக்கத்துடன் அவர்களின் முன் வந்து, அச்செய்தியை எடுத்துரைத்த பொழுது, "தன்னையே தான் பார்த்துக் கொள்ள உதவும் அது உடைந்தது நல்லதே ஆகும் என்று கூறினார்கள்"

ஆனால் சூஃபியாக்கள் இம்மாதிரி நிகழ்வுகளைக் கடக்கும் போது, தன் மனதை (நப்ஸைப்) பார்க்கிறார்கள்.

சூஃபியாக்களின் தலைவர் கௌதுல் ஆலம் முகையதீன் அப்துல் காதிர் ஜிலானி (ரஹ்) அவர்கள், ஒரு நாள் தம் இல்லத்தில் அமர்ந்திருக்கும் பொழுது, ஒருவர் வந்து அவர்களின் வியாபாரக் கப்பல்கள் புயலில் சிக்கிக் கொண்டதாக கூறினார்.

அது கேட்ட அவர்கள் "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறினார்கள் .

அடுத்தநாள் மற்றொருவர் வந்து, " புயலில் சிக்கிய தங்களின் கப்பல்கள் தப்பித்துக் கொண்டது " என்று கூறினார். அது கேட்டு அவர்கள் "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறினார்கள் .

இவ்விரு நிகழ்ச்சிகளையும் கண்டு பெரிதும் வியப்புற்ற ஒருவர் அவர்களை நோக்கி, " தங்களின் கப்பல்கள் புயலில் தப்பிய செய்தி அறிந்து "அல்ஹம்துலில்லாஹ்" என்று தாங்கள் கூறியதை புரிந்து கொண்டேன். ஆனால் நேற்று ஒருவர் வந்து, " தங்களின் கப்பல்கள் புயலில் சிக்கிக் கொண்டன " கூறியபொழுது ,தாங்கள் அதற்கு "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறியதுதான் எனக்கு புரியவில்லை என்று கூறிய பொழுது,

"கப்பல்களை இழந்ததற்காகவோ அவற்றை மீளப் பெற்றதற்காகவோ இறைவனை புகழவில்லை.இழப்புச் செய்தி அறிந்து என் மனம் சிறிதேனும் துன்புறாது இறை நாட்டத்தை இனிமையுடன் ஏற்றுக்கொண்டது கண்டு, இறைவனை புகழ்ந்து, அவனுக்கு நன்றி செலுத்தினேன்.


இரு எதிர்மறையான நிலைகளிலும் இறைவனின் சித்தமே தன் சித்தம் எனக் கொள்ளும் மனநிலையை எனக்குத் தந்த இறைவனை நான் என்றென்றும் புகழ்ந்து கொண்டு இருப்பேன்" என்று அவர்கள் கூறினார்கள்

وَلَنَبْلُوَنَّكُمْ بِشَىْءٍ مِّنَ الْخَـوْفِ وَالْجُـوْعِ وَنَقْصٍ مِّنَ الْاَمْوَالِ وَالْاَنْفُسِ وَالثَّمَرٰتِ‌ؕ وَبَشِّرِ الصّٰبِرِيْنَۙ

நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம்; ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக! (அல்குர்ஆன் : 2:155)

மன மெய்யியல் 48

(இல்ஹாம் என்கிற உள்ளுணர்வு)



நம் எல்லாருக்கும் எதிர்காலம் குறித்த ஓர் உள்ளுணர்வு இருக்கிறது. அது உள்ளே ஒரு குரலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தில் இன்னர் வாய்ஸ் (Inner voice) என்று அழைக்கப்படுகின்ற மனத்தின் குரலை, உள்ளுணர்வின் ஒலியைத் தெளிவாகக் அது நம்மை வழி நடத்துவதைக் காணலாம்.

சில நேரங்களில் நம்முடைய ஆழ்ந்த உள்ளுணர்வில் படிந்த படிமங்களையும், பிம்பங்களையும் நாம் உள்ளுணர்வின் குரலாகக் கருதிக் கொள்கிறோம்.

எந்தவிதமான வலிமையான பழைய பதிவுகளும் இல்லாமல், சலனமற்ற அலைகளற்ற கடலாக நாம் காத்திருந்தால், நம் உள்ளுணர்வு கூறும் மெல்லிய ஓசைகள் துல்லியமாக ஒலிக்கும்.

நாம் குழந்தைகளாக இருந்தபோது பெற்றோர்களிடமிருந்தும், மற்றோர்களிடமிருந்தும் நமக்குச் சொல்லப்பட்ட வரிகள் நம் மனத்தில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. அவை நம்மைப் பல நேரங்களில் சுய சிந்தனையற்றுச் செய்து விடுகின்றன !

உள்ளே உள்ள குரலைக் கேட்க முடிந்தவர்கள் தூய்மையானவர்களாக இருக்கிறார்கள். சமூகத்தின் ஒழுக்க நெறிகளையும் மீறி அவர்கள் நேர்மை பட்டொளி வீசிப் பறக்கிறது.

அவர்கள் யாருக்காகவும் தங்களை மாற்றிக் கொள்ளாமல் தங்களுடைய

உள்ளுணர்வுக்காகவே தங்களைப் பட்டை தீட்டிக் கொள்கிறார்கள்.

உள்ளே உள்ள குரல் முன்கூட்டியே சில நிகழ்வுகளை நமக்குத் தெரியப்படுத்தும். நாம் உஷாராகி விடலாம். கடைசி நேரத்தில் சில செயல்களை நாம் மாற்றியமைப்போம். திடீரென்று பயணம் போகவேண்டாம் என்று தோன்றும்.

பின்னர் வீட்டில் இருந்தது நல்லது என்று தெரியும். கடைசி நிமிடத்தில் ஒரு நிறுவனத்தில் பணம் போட வேண்டாம் என முடிவு செய்வோம். அது மோசடி நிறுவனம் எனத் தெரிய வரும் 'நல்லவேளை! ஏமாறவில்லை' என்று திருப்திப்படுவோம்.

இஸ்லாம் உள்ளுணர்வை, இல்ஹாம் - உள்மனத்தூண்டல் என்கிறது.

"இல்ஹாம் உள்ள ஒருவன் அறிவை வைத்துக் கொண்டு செயல்பட்டால் (அது தொடர்பான) புரியாத அறிவுகளையும் அல்லாஹ் சொல்லிக்கொடுப்பான். இது நபிகளாரின் வாக்கு.

ஒருவன் எதைப்பற்றி சிந்திக்கிறானோ, அந்த சிந்தனை அடிமனத்தில் இறங்கி அவனுக்குத் தேவையான செய்தியை தேடிக்கொண்டிருக்கும். எப்போது accurate thought ஏற்படுகிறதோ அப்போது divine force அங்கு கலக்கும்,

அப்படி கலந்த பிறகு எதற்கான விடையைத் தேடிக் கொண்டிருக்கிறானோ அந்த விடை அவன் உள்ளத்திலிருந்து வெளிவரும். இதற்கு “இல்ஹாம்” – இறை உதிப்பு என்று பெயர்.

மேலும் அவன் எந்த மொழியில் சிந்திக்கிறானோ அந்த மொழியிலேயே வரும், மாறுபட்ட மொழியில் வராது. எதைப் பற்றி சிந்திக்கிறானோ அதைப் பற்றிய செய்தி வரும். அதற்கு மாறுபட்ட வேறொன்று வராது என்கிறார்கள் தத்துவவாதிகள்.

ஆனால் சூஃபி ஞானிகளோ, " அகவிழிப்பு ‘கஷ்ஃப்’ என்றும், உள்ளுணர்வு ‘இல்ஹாம்’ என்றும் சொல்லப்படும் விஷயங்களுக்கான பயிற்சிகளையே சூஃபித்துவம் வழங்குகின்றது " என்கிறார்கள்

சிந்தனைப் பயிற்சி என்பது அதில் முக்கியத்துவம் உடையது அல்ல. ஏனெனில் உள்ளுணர்வின் அனுபவத்தால் அடையப்படும் மெய்ஞ்ஞானத்தை நீங்கள் ஒருபோதும் சிந்தனை செய்வதால் அடைய முடியாது.

எவ்வளவு சிந்திக்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டே அல்ல. முராக்கபா என்னும் தியானமும், முஷாஹதா என்னும் அகவிழிப்புமே மோட்சத்திற்குரிய ஆதாரங்களாகும்.

நபிமார்கள்கள் " வஹீ " மூலம் இறைவனிடமிருந்து ஆன்மீக அறிவைப் பெற்றனரோ அதைப்போன்று வலிமார்களாகிய இவர்களும்" இல்ஹாம்" என்னும் மன உதிப்பு மூலம் இறைவனிடம் இருந்து ஆன்மீக அறிவைப் பெற்றனர்

பாயஸீத் பிஸ்தாமீ (ரஹ்) அவர்களும் "நீஙகளெல்லாம் இறக்கக் கூடிய மனிதர்களிடமிருந்து அறிவைப் பெறுகின்றீர்கள் நாங்களோ பிறப்பு இறப்பு இல்லாத இறைவனிடம் இருந்து அறிவைப் பெறுகின்றோம் " என்று கூறுகிறார்கள்.

சுஃப்யான் தௌரீ (கிபி 715 - 778) வாழ்ந்த மாபெரும் சூஃபி மஹான்.

தௌரீ என்பது இட்ட பெயரல்ல , திட்டிய பெயர் . ஆமாம், ஒருநாள் பள்ளிவாசலுக்குள் மறதியாக இவர் இடது காலை முன் வைத்து உள்ளே போக, " மாடே (யா..தௌரீ) என்று ஒரு அசரீரி கேட்டது.

உடனே சுஃப்யான் மயங்கி கீழே விழுந்து விட்டார் .பின் எழுந்த இவர் தன்னைத் தானே, "தௌரீ ...தௌரீ ...(ஓ.. மாடே ., .மாடே) என்ன காரியம் செய்து விட்டாய் !"என்று தன்னைத் தானே கடிந்து கொண்டார். அன்றிலிருந்து இவருக்கு "தௌரீ " என்ற பெயர் புகழ்பட ஆயிற்று. அந்த சூஃபி ஞானியும் ' மாடு' என்று தன்னைச் சொல்லிக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இப்படித்தான் சூஃபியாக்கள் தங்களின் நடவடிக்கைகள் அனைத்தையுமே அகவிழிப்பு- ‘கஷ்ஃப்’ என்றும், உள்ளுணர்வு- ‘இல்ஹாம்’ என்றும் சொல்லப்படும் கட்டளைக்காகவே கட்டுண்டு காத்திருக்கிறார்கள். அதன்படி செய்கிறார்கள். ஜெயம் பெறுகிறார்கள்.

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَالَّذِيْنَ هَادُوْا وَالنَّصٰرٰى وَالصّٰبِـِٕيْنَ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَعَمِلَ صَالِحًـا فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும் எவர்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் உண்மையாகவே நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்கின்றார்களோ அவர்களுடைய கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் அவர்களுக்கு நிச்சயமாக உண்டு. மேலும், அவர்களுக்கு எவ்விதப் பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (குர்ஆன் : 2:62)

Noor Saffiya

இல்ஹாமின் நிலையில்
இதயத்தின் ஓசையும்
இறையில் பேசும்.விதம்
இரசூலில் நனையும் அழகு
உதிக்கும் உடையோனிலே

உன்னத கவி பிறப்பாய்
உடலும் உயிரும் புதுபிறப்பாய்
உரை நூலாய் ஊறிடும்

Ismail Ismail

இல்ஹாம் .

Not only in decision making but also in reading others mind..

நிறைய அனுபவம் இருக்கிறது.

Both plus and minus... 🙄🙄

மன மெய்யியல் 49

(கசிந்தது கருணை)



கருணை என்பது கண்களில் இருந்து ஊறுகின்ற உணர்வு அல்ல. அது இதயத்தில் இருந்து கசிய வேண்டும்..

ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒருமுறை படகில் சென்று கொண்டிருந்தபோது கரையை நெருங்குகின்ற தருணம், வலியால் துடித்தார். அவர் முதுகை மூடியிருந்த துணியை விலக்கியபோது காயங்கள் காணப்பட்டன. அதுவரை இல்லாத காயங்கள் எப்படி வந்தன ? அவர் வலியில் முனகியபடியே கரையைச் சுட்டிக் காட்டினார்.

அந்தக் கரையில் ஓர் அப்பாவி மனிதனை சிலர் அடித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு சக மனிதனை சில வன்முறையாளர்கள் அடிப்பதைப் பார்க்கின்ற போதே கருணை கசிந்த காரணத்தால்தான் ராமகிருஷ்ண பரமஹம்சர் முதுகு முழுவதும் ரத்தம் கசிந்தது.

இரக்கம் கசிந்தால்தான்,இதயம் வலித்தால்தான்,ரத்தம் கசிய முடியும் அதைத்தான் ஆங்கிலத்தில் 'எம்பதி' என்று கூறுவார்கள்.

நாம் அடுத்தவர்கள் காயம் படும்போது ரத்தம் சிந்த வேண்டியதில்லை. கண்ணீர் சிந்தினாலே போதும். அவர்கள் வலியில் துடிக்கும் போது, அவர்கள் கைகளை ஆறுதலாகப் பிடித்துக்கொண்டிருந்தாலே போதும். இதுவரை நாம் யாருடைய கைகளையாவது அன்போடு நம் கைகளின் மீது வைத்திருக்கிறோமா?

நம் குழந்தையின் கைகளை அல்லது பெற்றோர்களின் கைகளை அமைதியாக மலர்களைப் பற்றுவது போல மௌனமாகப் பற்றிக் கொண்டு கண்களால் மட்டுமே அன்பைப் பரிமாறி ஒரு நிமிடமேனும் அவர்கள் அதிர்வுகளோடு நாம் ஒத்துப் போயிருக்கிறோமா?

இங்கே பழகுவது என்பது பேசுவது மட்டும்தான். அன்பு என்பது வார்த்தைகள் மட்டும்தான். உண்மை என்பது சொற்களின் அலங்காரம் தான். அதைத் தாண்டி நம்மால் சிந்திக்க முடிந்ததில்லை.

இஸ்லாமிய வரலாற்றில் ....

அகழ் மற்றும் குறைழா போர்களுக்குப் பின் நபி (ஸல்) அவர்கள் பல குழுக்களையும், படைப்பிரிவுகளையும் எதிரிகளிடமிருந்து முஸ்லிம்களைப் பாதுகாக்க நபி(ஸல்) அவர்கள் 'நஜ்த்' பகுதியை நோக்கி குதிரைப் படையொன்றை அனுப்பினார்கள்.

தன்னை இறைத்தூதர் என்று வாதிட்ட பொய்யன் முஸைலமா, நபியவர்களைக் கொல்வதற்காக யமன் நாட்டிலிருந்து ஸுமாமா இப்னு உஸால் என்பவரை அனுப்பினான். நபிகளார் அனுப்பிய அந்தப் படையினர் 'பனூ ஹனீஃபா' குலத்தைச் சேர்ந்த ஸுமாமா இப்னு உஸாலை கைது செய்து கொண்டு வந்தார்கள்.

பள்ளிவாசலின் தூண்களில் ஒன்றில் அவரைக் கட்டிப் போட்டார்கள். நபி(ஸல்) அவர்கள் அவரிடம் வந்து, “ஸுமாமாவே! உன் விஷயத்தில் நான் சொல்லப்போகும் முடிவைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?” என்று கேட்டார்கள்.

அவர், “நான் நல்லதே கருதுகிறேன். முஹம்மதே! நீங்கள் என்னைக் கொன்றால், மரண தண்டனை விதிக்க வேண்டிய ஒருவனையே கொல்வீர்கள். ஆனால் என்னை மன்னித்து எனக்கு விடுதலை அளித்தால் உங்களுக்கு நான் விசுவாசியாக, காலம் காலமாகக் கடமைப்பட்டவனாகிவிடுவேன். நீங்கள் செல்வத்தை விரும்பினால் நீங்கள் விரும்புவதைக் கேளுங்கள், நான் தருகிறேன்' என்று பதிலளித்தார். எனவே, நபிகளார் அவருக்கு எந்தத் தீர்ப்பும் வழங்காமல் சென்றுவிட்டார்கள்.

மறு நாளும் நபி(ஸல்) அவர்கள் ஸுமாமாவிடம் அதே கேள்வியைக் கேட்டார்கள்.

அதற்கு அவர், தங்களிடம் நான் ஏற்கெனவே கூறியது தான்: நீங்கள் எனக்கு மன்னிப்பு அளித்து உபகாரம் செய்தால் நன்றியுள்ளவனுக்கே உபகாரம் செய்கிறீர்கள்' என்றார். அன்றும் நபி(ஸல்) எதுவும் சொல்லாமல் விட்டுவிட்டார்கள்.

மறுநாளுக்கு அடுத்த நாள் வந்தபோது, “ஸுமாமாவே!' நீ என்ன கருதுகிறாய்?” என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

அவர், 'நான் ஏற்கெனவே தங்களிடம் சொன்னதைத்தான் கருதுகிறேன்' என்று பதிலளித்தார். நபி(ஸல்) அவர்கள், 'ஸுமாமாவை அவிழ்த்துவிடுங்கள்' என்று கூறினார்கள்.

உடனே ஸுமாமா பள்ளிவாசலுக்கு அருகிலிருந்த பேரீச்சந் தோட்டத்திற்குச் சென்று குளித்துவிட்டு, பள்ளிவாசலுக்கு வந்து, “வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு ஒருவருமில்லை என்று நான் உறுதி கூறுகிறேன். மேலும், முஹம்மது, இறைத்தூதர் என்றும் நான் உறுதி கூறுகிறேன்” என்று மொழிந்துவிட்டு,

“முஹம்மதே! அல்லாஹ்வின் மீதாணையாக! இன்றுவரை உங்கள் முகத்தைவிட என்னிடம் வெறுப்புக்குரிய முகம் பூமியில் வேறெதுவும் இருக்கவில்லை.ஆனால், இன்று உங்களுடைய முகம் எல்லா முகங்களிலும் எனக்கு மிகவும் பிரியமானதாக ஆகிவிட்டது.

அல்லாஹ்வின் மீதாணையாக! இன்றுவரை உங்கள் மார்க்கத்தைவிட என் வெறுப்புக்குரிய மார்க்கம் வேறெதுவும் இருக்கவில்லை. ஆனால், இன்று மார்க்கங்களிலேயே எனக்கு மிகவும் பிரியமானதாக உங்கள் மார்க்கம் ஆகிவிட்டது.

அல்லாஹ்வின் மீதாணையாக! உங்கள் ஊரைவிட எனக்கு வெறுப்பான ஊர் வேறெதுவும் இருந்திருக்கவில்லை. ஆனால், இப்போது உங்கள் ஊரே எனக்கு மிகவும் பிரியமான ஊராகிவிட்டது. உங்கள் குதிரைப்படையினர் என்னைப் பிடித்துக் கொண்டுவிட்டார்கள்' என்று சொல்லிவிட்டு,

'மேலும் நான் இப்போது மக்காவிற்குச் சென்று உம்ரா செய்ய விரும்புகிறேன். அனுமதிப்பீர்களா?” என்று கேட்டார்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஸுமாமா உம்ரா செய்ய அனுமதியளித்தார்கள். ஸுமாமா மக்காவிற்குச் சென்றபோது அங்கே ஒருவர் அவரிடம், 'நீ மதம் மாறிவிட்டாயா?' என்று கேட்டதற்கு

ஸுமாமா(ரலி), 'இல்லை. அல்லாஹ்வின் மீதாணையாக! நான் மதம் மாறவில்லை. மாறாக, இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுடன் இணைந்து இறைவனுக்குக் கீழ்ப்படியும் முஸ்லிமாக மாறிவிட்டேன். அல்லாஹ்வின் மீதாணையாக! நபி(ஸல்) அவர்கள் அனுமதி தரும்வரை என்னுடைய நாடான யமாமாவிலிருந்து ஒரு கோதுமை தானியம் கூட மக்காவாசிகளான உங்களுக்கு வராது' என்று கூறினார்கள்.

இதனால் அவதிக்குள்ளான குறைஷிகள் நபி(ஸல்) அவர்களுக்குக் கடிதம் எழுதினர். அதில் தங்களின் இரத்த பந்தத்தைக் கூறி, ஸுமாமா தங்களுக்கு வரும் தானியங்களைத் தடுக்காமல் இருக்க நபியவர்கள் அவருக்குக் கடிதம் எழுதுமாறு கேட்டுக் கொண்டனர்.

கருணையே வடிவான நபி(ஸல்), குறைஷிகளின் கோரிக்கையை நிறைவேற்றினார்கள். ஸஹீஹ் புகாரி 5:64:4372, 2:44:2422, அர்ரஹீக் அல்மக்தூம்

திருக்குர்ஆனில் அல்லாஹ் : "அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர்; (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள்;

எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்திவிடுவீராக; அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக; தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும்; பின்னர் (அவை பற்றி) நீர் முடிவு செய்து விட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப்பேற்படுத்துவீராக! - நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பேற்படுத்துவோரை நேசிக்கின்றான்". (குர்ஆன் : 3:159)

மன மெய்யியல் 50

(மகிழ்ச்சியைத் தேடி)



அல்ஸிபேடஸ் (Alcibades) என்கின்ற கிரேக்கன் எந்தக் குறுக்கு வழியிலும் காரியம் சாதிப்பதில் வல்லவன். தந்திரங்கள் செய்து தன்னுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்பவன். அவனை யாரும் நேசிக்கவில்லை.

அல்ஸிபேடஸ் பற்றி சாக்ரடீஸிடம் கேட்டார்கள்: "அல்ஸிபேடஸ் எத்தனையோ ஊருக்குச் செல்கிறான். நிறைய சம்பாதிக்கிறான். ஆனால், அவன் ஏன் மகிழ்ச்சியோடு இருப்பதில்லை?"

அதற்கு சாக்ரடீஸ், "அவன் எங்குச் சென்றாலும் தன்னையும் தன்னுடன் எடுத்துச் செல்கிறான். அதனால்தான் மகிழ்ச்சியோடு இருப்பது இல்லை."

நாம் ஊட்டிக்குப் போகலாம்; கொடைக்கானலுக்குப் போகலாம்; குடகுக்குச் செல்லலாம்; குலுமனாலிக்குச் செல்லலாம்; பாபநாச பொதிகை மலை முகட்டிற்கும் போகலாம் ,ஆனால் நம்மை விட்டுவிட்டுப் போக முடியுமா?

அதாவது நமது அபிப்பிராயங்களை, கவலைகளை, ஏற்கெனவே மனத்தில் பதிந்த பதிவுகள் என்று சொந்த ஊரில் உள்ளதையெல்லாம் மூட்டைக்கட்டி சுமந்துகொண்டு செல்வதனால்தான் அங்கேப் போய் சொந்த ஊருக்குத் திரும்புவதே சுகம் என்று சுவரில் அடித்த பந்தாய்த் திரும்பி வருகிறோம்.

நாம் தெளிவாகவும், நிகழ்காலத்தில் நிறைத்துக் கொள்பவர்களாகவும், சின்னச் சின்ன நிகழ்வுகளிலும் திருப்தி அடைபவர்களாகவும் இருந்தால், ஒரு பூவின் மலர்ச்சிக்கும், ஒரு பறவையின் பாடலுக்கும், ஒரு

கன்றின் துள்ளலுக்கும் சந்தோஷப்படுபவர்களாக இருந்தால் அந்த மகிழ்ச்சி - நாம் இருக்கும் இடத்திலேயே கிடைக்கும். இறுதிநாள் வரை கிடைக்கும்.

பெரும்பாலானவர்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியில்லை என்பதை அறியமுடிகிறது. இதற்கு காரணம் மகிழ்ச்சியைக் குறித்த அவர்களின் கண்ணோட்டம் தான் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சிலர் பணத்தால் மகிழ்ச்சியைப் பெறலாம் என்று எண்ணுகிறார்கள். அந்த பணத்தைத்தேடி இருக்கும் சந்தோசத்தைக்கூட தொலைத்துவிடுகிறார்கள்.

வேறு சிலர் அதிகாரத்தால் செல்வாக்கால் மகிழ்ச்சியைப் பெறலாம் என்று எண்ணுகிறார்கள். அதற்காக காலத்தையும் பொருளாதாரத்தையும் பெருமளவு செலவழித்து வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறார்கள்.

இன்னும் சிலர் ஆரோக்கியம் தான் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு முக்கியம் என்று கூறி அதையே குறிக்கோளாக வைத்துள்ளார்கள்.

உண்மையில் மகிழ்ச்சி என்பது மனிதனின் உள்ளத்தோடும், ஆன்மாவோடும் தொடர்புடையதாகும். அதற்கும் மேற்கூறிய காரணங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை. எனவே நாம் பணமும்,பதவியும் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மகிழ்ச்சியாக இருக்கமுடியும்.

அல்லாஹ்வின்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் :

வாழ்க்கை வசதிகள் அதிகமாக இருப்பது செல்வமன்று; மாறாகப் போதுமென்ற மனமே (உண்மையான) செல்வமாகும். அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா(ரலி) நூல் ஸஹீஹுல் புஹாரி 6446

செல்வமும் மகிழ்ச்சிக்கான காரணங்களில் ஒன்று தான் எனவே தான் அல்லாஹ் வாழ்க்கைத் தேவையின் ஒன்றாக செல்வத்தையும் வைத்துள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான், ”கால் நடைகளையும் அவனே படைத்தான்; அவற்றில் உங்களுக்குக் கதகதப்பு(ள்ள ஆடையனிகளு)ம் இன்னும் (பல) பலன்களும் இருக்கின்றன; அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கிறீர்கள். நீங்கள் அவற்றை (மேய்த்து) மாலையில் ஓட்டி வரும்பொழுதும், (மேய்ச்சலுக்காக) காலையில் ஓட்டிச் செல்லும்பொழுதும் அவற்றில் உங்களுக்கு (மகிழ்ச்சியும்) அழகும் இருக்கிறது. (அல்குர்ஆன் 16:5,6)

இதுமாதிரி இயற்கையோடு இயந்த வாழ்வில்தான் மகிழ்ச்சி இருக்கிறது என்கிறது குர்ஆன்.

ஸஅது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினர்கள்:

நான்கு விஷயங்கள் மனிதனுக்கு மகிழ்ச்சியைத்தருவதாகும்

1) நல்ல மனைவி,

2) விசாலமான வீடு,

3) நல்ல அண்டை வீட்டுக்காரர்,

4) நல்ல வாகனம் நான்கு விஷயங்கள்.

நூல் ஸஹீஹ் இப்னு ஹிப்பான் 4032

மன மெய்யியல் 51

(உயர்ந்த இலட்சியம்)



அரேபிய ராபி சாதிக் ஒரு கதை கூறுவதுண்டு.

காட்டுக்குப் பக்கத்தில் சென்றுகொண்டிருந்த ஒருவன் ஒரு புலி. ஒரு மானை வேட்டையாடுவதைப் பார்த் தான்.அப்போது தூரத்தில் ஒரு நரியும் இருந்தது அது வெறுமனே படுத்திருந்தது,

புலி வேட்டையாடி, தனக்கு வேண்டிய உணவைத் தின்றுவிட்டுச் சென்றவுடன் மீதமிருந்த அந்த மானை அந்த நரி மகிழ்ச்சியோடு தின்றுவிட்டுத் திரும்பியது.

அதைப் பார்த்த அவன் எதுவுமே செய்யாமல் - அந்த நரிக்கு இறைவன் அருளுவதைப் போல நமக்கும் அருள்வார் என்று எதுவுமே செய்யாமல் - யாராவது உதவி செய்வார்கள் என்று அமர்ந்திருந்தான் அப்போது வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது:

'மடையனே! நீ நரியைப் பின்பற்றாதே புலியைப் பின்பற்று' என்றது அந்தக் குரல்.

நாம் யாரை உதாரணமாக எடுத்துக்கொள்கிறோம் என்பது தான் மிகவும் முக்கியம். நாம் தவறு செய்பவர்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்கிறோமே தவிர, மன்னிப்பவர்களை எடுத்துக் கொள்வது இல்லை.

தானம் செய்பவர்களை எடுத்துக்கொள்வதில்லை மாறாக தானம் பெறுபவர்களை எடுத்துக்கொள்கிறோம்.

காப்பாற்றுகிறவர்களை உதாரணங்களாக எடுத்துக் கொன் வதில்லை காப்பாற்றப்படுபவர்களை உதாரணங்களாக எடுத்துக் கொள்கிறோம்.

கொடுப்பதற்காகக் கையை உயர்த்துபவர்களை உதாரணமாக எடுத்துக்கொள்வதில்லை. மாறாகப் பெறுவதற்காகக் கையை ஏந்துபவர்களை எடுத்துக்கொள்கிறோம்.

உயர்வான இலக்கை விட்டு, எளிமையான இலக்கைத் தேர்ந்தெடுக்கிறோம்.

நாம் தவறு செய்கிறபோதெல்லாம் மற்றவர்கள் எல்லாம் யோக்கியமா? என்று கேட்டு, நம்மை நாமே திருப்திப்படுத்திக் கொள்கிறோம்.

'சாதிக்` கூறுவதைப்போல், இயற்கை புலியையும் முன் வைத்திருக்கிறது, நரியையும் முன் வைத்திருக்கிறது. புலியைப் பின்பற்றுபவர்கள் உயர்ந்து நிற்கிறார்கள்

நரியைப் பின்பற்றுபவர்கள் எச்சிலுக்காகவும் எச்சத்திற்காகவும் காத்துக் கிடக்கிறார்கள். புலிகளை மகிழ்விப்பதற்காகச் சில நேரங்களில் அவர்கள் புகழவும் செய்வார்கள் அடிகளை வருடவும் செய்வார்கள்.

ஆனால் இலட்சியவாதிகள் தங்களின் உயர்வான இலட்சியத்தை அடைவதற்காக தங்கள் வாழ்நாளெல்லாம் இலட்சியம் வெற்றி பெறவே வாழ்கிறார்கள். இறைவனும் அவர்களின் உயர்வான இலட்சியத்திற்குரிய வழிதடத்தை அவர்கள் விரும்பியவாறு அமைத்தும் கொடுக்கிறான்.

"நஜ்முத்தீன் அய்யூப் இராக்கின் திக்ரீத் நிலப்பகுதியை ஆண்டு வந்து சிற்றரசர், இஸ்லாமிய ஆட்சியாளர்.

திருமணம் செய்யாமல் காலதாமதம் செய்து கொண்டு இருந்தார்கள் ஒரு நாள் அவருடைய மூத்த சகோதரர் அஸதுத்தீன் என்பவர் தம் சகோதரர் நஜ்முத்தீன் அய்யூபியை அணுகி "ஏன், இன்னும் திருமணம் செய்யாமல் காலதாமதம் செய்து வருகின்றீர்கள்? என்று கேட்டார்.

அதற்கவர், ”எனக்கான சரியான துணை இன்னும் அமையவில்லை, ஆகையால் தான் காலதாமதம் செய்து வருகின்றேன்” என்றார்கள்.

அப்படியானால், உமக்காக நான் பெண் பார்க்கின்றேன்! ஸல்ஜூக்கிய மன்னர்களின் குடும்பத்தில் பார்க்கட்டுமா? இல்லை, அப்பாஸிய மன்னர்களின் குடும்பத்தில் பெண் பார்க்கட்டுமா? என்று அரசக் குடும்பம் என்ற மிடுக்கோடு நஜ்முத்தீன் அய்யூபியிடம் கேட்டார்கள்.

அப்போது, நஜ்முத்தீன் அவர்கள் அரசக் குடும்பப் பெண்கள் எல்லாம் எம் இலட்சியத்திற்கு தோதுப் படமாட்டார்கள். ஆகவே, எனக்கான சரியான துணையாகவும் அவர்கள் இருக்கமாட்டார்கள் என்றார்கள்.

பேரரசர்களின் குடும்பப் பெண்களே உங்களுக்கு பொருத்தமான துணையாக அமையாது எனும் போது எங்கிருந்து உமக்கு பொருத்தமான துணையைத் தேடுவது? என ஆச்சர்யம் விலகாமல் அஸதுத்தீன் நஜ்முத்தீன் அய்யூபியிடம் கேட்டார்.

என் துணைவி எப்படி இருக்க வேண்டும்? என்று நான் மிகப் பெரிய லட்சியக் கனவோடு தேடிக் கொண்டிருக்கின்றேன்.

இதோ! சொல்கின்றேன் கேள் என் சகோதரரே! எனக்கு மனைவியாக வருகின்றவள், என் கையைப் பற்றிப் பிடித்து என்னை (நாளை மறுமையில்) சுவனச் சோலைக்குள் அழைத்துச் செல்பவளாய் இருக்கவேண்டும்.

அவள் மூலம் ஆண் வாரிசு ஒன்று கிடைக்க வேண்டும். அந்த வாரிசை ஒழுக்க மாண்புள்ளவனாகவும், மாபெரும் குதிரை வீரனாகவும் வளர்த்து ஆளாக்கி, அந்த வாரிசின் மூலம் இந்த உம்மத்தின் மிகப் பெரும் பாக்கியமான பைத்துல் முகத்தஸ் சிலுவைப் படை வீரர்களிடம் இருந்து மீட்கப்பட்டு மீண்டும் முஸ்லிம்கள் வசம் ஆக வேண்டும் !

இது தான் நான் தேடிக்கொண்டிருக்கும் என் வாழ்க்கைத் துணைவிக்கான தகுதி” என்று கூறினார்கள்.

இதுகேட்ட அஸதுத்தீன் “இப்படியான லட்சிய வேட்கை கொண்ட பெண்ணை எங்கு சென்று தேடுவது? என்று ஆச்சர்யம் மேலிட வினவினார்.

அதற்கு, நஜ்முத்தீன் அவர்கள் “யார் அல்லாஹ்வுக்காக தூய எண்ணம் கொள்வாரோ அல்லாஹ் அவருக்கு உதவி செய்வான்” என்று பதில் கூறினார்கள்.

இந்த உரையாடல் நடைபெற்ற சில நாட்களுக்குப் பின்னர் திக்ரீத்தின் பகுதியில் பிரபல்யமாகியிருந்த ஒரு ஷைகிடம் நஜ்முத்தீன் அய்யூபி அவர்கள் வந்தார்கள்.

சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது, திரைக்கு அப்பால் இருந்து ஒரு பெண்மணி ஷைகிடம் சிறிது நேரம் பேச அனுமதி வேண்டினார்.

ஷைக் அவர்கள் அப்பெண்மணியின் குரலை வைத்து அடையாளம் கண்டு கொண்டு, அனுமதி வழங்கிய பின் ”பெண்ணே! உம்மைப் பெண் பார்க்க ஓர் இளைஞரை நான் நேற்று வரச் சொன்னேனே நீ ஏன் அவரை திருமணம் செய்ய மறுத்து விட்டாய்? என்று கேட்டார்கள்.

அதற்கு அப்பெண் “ஷைக் அவர்களே! அந்த இளைஞர் அழகானவர் தான், அந்தஸ்து உடையவர் தான் ஆனாலும் பேசிப் பார்த்ததில் எனக்கான சரியான துணையாக அவர் இல்லை, என் லட்சியத்திற்கும், என் கனவிற்கும் உகந்தவராய் அவர் இல்லை ஆகவே, அவரை திருமணம் செய்ய மறுத்து விட்டேன்” என்று பதில் கூறினாள் அப்பெண்மணி.

அப்படி என்னம்மா உன் கனவும், லட்சியமும்? என்று ஆச்சர்யத்தோடு வினவினார்கள் ஷைக் அவர்கள்.

அப்பெண்மணி “என் வாழ்க்கையைத் துணையாக வரும் என் கணவர் இவ்வுலகில் மாத்திரமல்ல நாளை மறுமையில் சுவனத்திலும் என் துணையாக இருக்க வேண்டும். அவரே என்னை சுவனத்திற்குள் அழைத்துச் செல்ல வேண்டும்.

அவர் மூலம் ஆண் வாரிசு ஒன்று கிடைக்க வேண்டும். அந்த வாரிசை ஒழுக்க மாண்புள்ளவனாகவும், மாபெரும் குதிரை வீரனாகவும் வளர்த்து ஆளாக்கி, அந்த வாரிசின் மூலம் இந்த உம்மத்தின் மிகப் பெரும் பாக்கியமான பைத்துல் முகத்தஸ் சிலுவைப் படை வீரர்களிடம் இருந்து மீட்கப்பட்டு மீண்டும் முஸ்லிம்கள் வசம் ஆக வேண்டும் !

இது தான் என கனவும், லட்சியமும் என் வாழ்க்கைத் துணைவருக்கான தகுதியும் ஆகும்” என்று கூறினார்.

இதைக் கேட்ட நஜ்முத்தீன் அய்யூபி அவர்கள் மகிழ்ச்சியில் அல்லாஹு அக்பர் என்று கூறி விட்டு, நாம் தேடிய தகுதியோடும் நம்மைப் போன்ற கனவோடும், லட்சியத்தோடும் நாம் வாழ்கிற ஊரிலேயே அல்லாஹ் நமக்கான ஜோடியைப் படைத்திருக்கின்றான் என்ற உணர்வோடு ஷைக் அவர்களிடத்தில்,

“ஷைக் அவர்களே! இந்தப் பெண்ணையே நீங்கள் எனக்குப் பேசி திருமணம் செய்து வையுங்கள்!” என்று கூறினார்கள்.

அதற்கு ஷைக் அவர்கள், நஜ்முத்தீன் நீர் நாடாளும் ஓர் ஆட்சியாளர், அப்பெண்ணோ உனக்கு நேர் எதிரான நிலையில் வாழும் ஓர் ஏழை” எப்படி இது சாத்தியமாகும் என்று வினவினார்கள்.

ஒரு வழியாக ஷைக் அவர்களின் முயற்சியால் இருவருக்கும் திருமணமும் நடந்தேறியது.

அந்த கனவுத்தம்பதியருக்கு, லட்சியத்தம்பதியருக்கு பிறந்த மாவீரர் தான் பைத்துல் முகத்தஸை மீட்டெடுத்த அபுல் முளஃப்ஃபர் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி ஆவார்கள்."

Vali Poakkan Parathesi

மிகப்பெரிய வரலாற்று தகவல்

மாபெரும் போர் வீரர் கருணையின் இளவரசர்

யூசுப் ஸலாவுதீன் இஃபனு அய்யூப் அவர்களுக்குப் பின்னால் இப்படி ஒரு வரலாறு இருப்பதை தாங்கள் அருமையாக கட்டுரை எழுதி உள்ளீர்கள் வாழ்த்துக்கள்

Mohamed Farook

சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள்,விலாயத்தின் வேந்தர் குத்பு நாயகம் முஹையத்தீன் அப்துல் காதர் ஜெய்லானி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களின் முரீது என்று ஒரு செய்தியும் உண்டு...

மன மெய்யியல் 52

(அறிவார்ந்த மாணவர்)



இன்றைய மாணவர்கள் துடிப்பானவர்கள் - அவர்களிடம் துணிவும் கிளர்ந்தெழும் மனப்பான்மையும் நிறைந்து கிடக்கின்றன. சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டு தீரவேண்டும் என்கிற திணிப்பு அவர்களிடம் செல்லுபடியாகாது.

அவர்கள் சுயமாகச் சிந்தித்துக் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுக்குத் திருப்தியான பதில் வரும் வரை அவர்கள் இடுவதாக இல்லை.

பள்ளியில் பாடம் நடத்துவதற்கு முதல் நாளே அந்தத் தலைப்பில் இணையத்தில் உள்ள செய்திகளைப் படித்து விட்டுக் குறுக்குக் கேள்வி கேட்கிறார்கள் சில மாணவர்கள். ஆசிரியர்களும் தங்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தை அவர்கள்

உருவாக்குகிறார்கள்.

ஓர் ஆசிரியர் கல்வியே மேம்பட்டது என்று ஒரு கதை சொன்னார்.

ஓர் ஊரில் ராமன், சோமன் என்ற இருவர் இருந்தனர். ராமன் கல்வியை விரும்பினான். சோமன் செல்வத்தை விரும்பினான். இருவரும் நண்பர்கள் ஒன்றாக வெளிநாடு சென்றார்கள். ராமன் கல்வி கற்றான்; சோமன் செல்வம் ஈட்டினான். இருவரும் திரும்பி வந்தனர்.

வழியில் திருடர்கள் வந்து சோமனின் செல்வத்தை வழிப்பறி செய்து விட்டார்கள். இருவரும் சொந்த ஊருக்குப் போனார்கள். ராமனின்அறிவை வியந்து, அவனை அரசர் அமைச்சராக்கினார். வயிற்றுப் பிழைப்புக்காக சோமன் அவனிடம் பணியாளாகச் சேர்ந்தான்.

ஆசிரியர் கூறவந்த கருத்து - 'கல்வியை யாரும் களவாட முடியாது' என்பதுதான்.

"வெள்ளத்தால் போகாது - வெந்தணலால் வேகாது

வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது

கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது

கள்ளர்க்கோ மிகவரிது -

காவலுக்கோ மிக எளிது

கல்வியென்னும் உள்ளத்தே பொருளிருக்க

உலகெலாம் பொருள் தேடி உழல்வதேனோ?"

என்கிற தமிழ்ப்பாடலை நாம் நினைவுகூறலாம்.

இந்தக் கதையைத் தேர்விலும் ஆசிரியர் கேட்டிருந்தார்.மாணவன் ஒருவன் எழுதினான்:

"ராமு கல்வியைக் கற்றான். சோமு செல்வம் சேர்த்தான். சேர்த்த செல்வத்தைக் கேட்பு வரை வோலையாக (Account payee draft) மாற்றித் தன்னிடம் வைத்துக் கொண்டான்.

வந்த கள்வர்கள் பணம் ஏதுமில்லாததால் ஏமாற்றத்துடன் திரும்பிவிட்டார்கள்.

ஊருக்கு வந்த சோமு சொந்த ஊரிலேயே பெரிய வியாபாரம் செய்து பணக்காரனானான். ராமுவைத் தன்னிடம் குமாஸ்தாவாக வைத்துக் கொண்டான்" என்று

இன்றைய மாணவர்கள் கட்டுச்சோறு கட்டித் தந்தால் அதைச் சுமந்து செல்லத் தயாராக இல்லை. அவர்கள் அந்த நொடியில் வாழவே விரும்புகிறார்கள். எல்லாவற்றையும் விமரிசனத்திற்கு உட்படுத்துவதற்கு அவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள்.

அவர்களுக்கு யானைப் பசிக்கு நாம் காகிதச் சோளங்களைப் போட்டால் அது கட்டுபடியாகாது. அவர்தம் ஆற்றலுக்குத் தேவையான தீனியைத் தர நாம் முன்வர வேண்டும் என்று ஆசிரியர் உலகம் சிந்திக்கிறது.

அறிவுக்கு சோதனை அக்காலத்தில் கூட நபிமார்கள் அடங்கிய சபையோரால் பரிசோதிக்கப்பட்டது என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கிறதா ? சொல்றேன்.

"உலகமே இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்பை உணர்ந்திருந்த போதும், சில மடையர்கள் அவர்களை குறை கூறிக்கொண்டு இருந்தார்கள். இவ்வாறு ஒரு அறிஞர் எந்நேரமும் இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் இஹ்யாவு உலூமித்தீனை குறை கூறிக்கொண்டே இருந்தார்.

ஒரு நாள் இஹ்யாவு உலூமித்தீன் கிதாபை கையில் எடுத்துக்கொண்டு தான் படித்து கொடுக்கும் மத்ரஸாவுக்கு வந்தார். தன் மாணவர்களை பார்த்து, “என் கையில் இருப்பது என்ன?” என்று கேட்டார்.

அதற்கு அந்த மாணவர்கள், “இஹ்யாவு உலூமித்தீன்” என்றார்கள். அதற்கு அந்த அறிஞர் கூறினார்: “நேற்று இரவு நான் ஒரு கனவு கண்டேன். அதில் இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் என்னிடம் வந்து, என்னை கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களிடம் இழுத்துக் கொண்டு போய்,

“அல்லாஹ்வின் ரஸூலே! இவர் எனது நூலான இஹ்யாவு உலூமித்தீனை குறை கூறுகிறார். நான் அதில் நீங்கள் சொல்லாத ஒரு வார்த்தையாவது சொல்லி இருக்கிறேனா?” என்று கேட்டார்கள்.

அதற்கு எங்கள் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள், ‘இல்லை’ என்று கூறிவிட்டு, நான் குறை சொன்னதற்காக எனக்கு 70 கசையடி கொடுக்க நபியவர்கள் சொன்னார்கள்” என்று இதை கூறி விட்டு,

அந்த அறிஞர் தனது சட்டையை திறந்து காட்டினார். அவரின் உடலில் இரவில் பட்ட கசையடிகளின் தழும்பு அப்படியே இருந்தது. இதிலிருந்து இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) என்ற மாபெரும் மார்க்க அறிஞரின் சிறப்பையும், கண்ணியத்தையும் நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

மேலும் இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் சிறப்பையும், அறிவுத் திறனையும் மிகவும் அழகாக எடுத்துக்காட்ட ஷாதுலி தரீக்காவின் ஸ்தாபகர் இமாம் அபுல் ஹஸன் ஷாதுலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் தான் கண்ட ஒரு அருமையான கனவை தெரிவிக்கின்றார்கள்:

“ஒருநாள் பைத்துல் முகத்தஸ் பள்ளியில் நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஒரு கனவு கண்டேன்.

பள்ளிவாசலின் வெளியே ஹரத்தின் நடுவில் சிம்மாசனம் ஒன்று போடப்பட்டிருந்தது. மக்கள் கூட்டம், கூட்டமாக அங்கு வந்து நின்றுக் கொண்டிருந்தார்கள். அப்போது நான் அந்த சிம்மாசனத்தை பார்த்தேன். அங்கே எங்கள் பெருமானார் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் அந்த சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார்கள்.

அங்கே இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்), மூஸா (அலைஹிஸ்ஸலாம்), ஈஸா (அலைஹிஸ்ஸலாம்), நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) ஆகிய நபிமார்கள் அனைவரும் தரையில் அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் பேசுவதை நான் கவனித்துக் கேட்டேன். ஸைய்யதுனா மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களிடம் “உங்கள் உம்மத்திலுள்ள உலமாக்கள் பனீ இஸ்ராயீல்களின் நபிமார்களைப் போன்றவர்கள் என்று கூறினீர்களே, எவ்வாறு” என்று கேட்டார்கள்.

உடனே எங்கள் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் “இதோ” என்று இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களை சுட்டிக் காட்டினார்கள்.

இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) தனது இடத்திலிருந்து எழுந்து பணிவோடு நின்றார்கள். அப்போது நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார்கள்.

அதற்கு இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் 10 பதில்கள் அளித்தார்கள். உடனே நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் “நான் கேட்டதோ ஒரே ஒரு கேள்வி. ஆனால் உங்கள் பதிலோ பத்தாக இருக்கிறதே” என்று கூறினார்கள்.

அதற்கு இமாம் அவர்கள் சொன்னார்கள். “நீங்களும் இதைப்போன்று தானே செய்தீர்கள். “மூஸாவே உமது வலது கையில் இருப்பது என்ன?” என்று ஒரே ஒரு கேள்வியைத்தானே அல்லாஹ் அஸ்ஸவஜல் உங்களிடம் கேட்டான்.

அதற்கு இது என் கைத்தடி என்று ஒரே பதிலில் சொல்லி இருக்கலாமே! ஆனால் நீங்களோ இது என் கைத்தடி, இதன் மீது நான் சாய்ந்துக் கொள்வேன், இதன் மூலம் என்னுடைய ஆடுகளுக்கு இல்லை, குலைகளை பறிப்பேன், இன்னும் இதன் மூலம் எனக்கு பல பிரயோசனங்கள் இருக்கின்றது என்று பல பதில்கள் அளித்தீர்களே!” என்று இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் பதில் கொடுத்தார்கள். (தப்ஸீர் ரூஹுல் பயான் பாகம் – 1, பக்கம் – 230)

இந்நிகழ்வை மற்றொரு கோணத்திலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

மாமேதை கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் ஓர் இரவு அயர்ந்த உறக்கத்தில் நபி மூஸா (அலை) அவர்களைக் கனவில் கண்டார்கள்.

அப்பொழுது மூஸா அலை) அவர்கள் உன்பெயரென்ன எனக் கேட்க, என் முஹம்மதிப்னு முஹம்மதிப்னு முஹம்மத் என பதிலுரைத்தார்கள்.

அதாவது, என் பெயர் முஹம்மது, என் தந்தையின் பெயரும் முஹம்மது இவ்வாறே என் பாட்டனார் பெயரும் முஹம்மதே என நபி மூஸா (அலை) அவர்களின் வினாவிற்கு பதில் கொடுத்தார்கள்

மூஸா (அலை), அவர்கள் முகம் மாறியவர்களாக கஸ்ஸாலி (ரஹ்) அவர்களைப் பார்த்து, நான் உன் பெயரை மட்டும் தானே கேட்டேன். நீ

உன் தந்தை பாட்டனார் அனைவரின் பெயரையும் சொல்கிறாயே? எனக் கேட்டார்கள்.

இதைக் கேட்ட இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் அருமை நபியே! அல்லாஹ் உங்களிடம் பேசினான். உன் கையில் இருப்பது என்னவென்று? அதற்கு தாங்கள் குச்சி என்று மட்டும் தான் பதில் சொல்லியிருக்க வேண்டும். அதுதான் நியாயம். அதை விட்டு விட்டு அதில் நான் என் ஆட்டுமந்தைகளுக்கு இலை பறித்துப் போடுவேன். வேறு சில அறிய சாதனைகளை இந்த குச்சி மூலம் நான் ஆற்று(செய்)வேன் என அதன்

பிரயோஜனங்களை எல்லாம் கூறி ஒரு நீண்ட உரையாடலே ஆற்றினீர்களே அதன் காரணத்தை சொன்னால் நீங்கள் கேட்பதற்கு பதில் தருவேன் எனக் கூறுகிறார்கள்

நபி மூஸா (அலை) அவர்கள் " நான் என்னை படைத்த நாயனிடம் பேச சந்தர்ப்பம் கிடைக்காதா ஏங்கி என கொண்டிருந்த தவித்துக் வேளையில் என்னிடம் பேசினான். இவ்வாறு கிடைத்திருக்கும் அறிய வாய்ப்பை ஒரே வார்த்தையில் பதில்கூறி முடித்துக் கொள்வதா கிடைத்த வாய்ப்பில் நிறைய பேச வேண்டுமென்றே நீண்ட பதில் கூறினேன். என்றார்கள்

உடனே, இமாம் கஸ்ஸாலி (ரஹ்)அவர்கள், இதே நிலையில் தான் நானும் உள்ளேன். ஒரு நபியை இறைத்தூதரை கனவில்கண்டு அவரோடு. பேசும் வாய்ப்பை பெற்ற நான் என் பெயர் முஹம்மது என்று ஒரே வார்த்தையில் பதில் கூறி அவரோடு பேசும் சந்தர்ப்பத்தை முடித்துக் கொள்வதா? எனவே தான் என் தந்தை இன்னும் பாட்டனார் பெயரையும் என் இணைத்துச் சொன்னேன். என பதில் கொடுத்தவுடன் மூஸா (அலை) அவர்களின் முகம் மலரத் துவங்கியது

மன மெய்யியல் 53

(இலக்கியமும், இசையும், உங்கள் மனமும்)



எல்லாவற்றையும் கணக்குப் பார்த்து கணக்குப் பார்த்து வாழ நேர்ந்தால் நம் வாழ்க்கை சுவையற்றுப் போய்விடும்; சப்பிப் போட்ட மாங் கொட்டையைப் போல. இதனால் என்ன பயன்?' அதனால் என்ன பயன்?' என்று கேட்டால் பல இனிய நிகழ்வுகள் நம்மை விட்டு விலகிப் போய் விடும் !

'இசையால் என்ன பயன்?'

'இலக்கியத்தால் என்ன பயன்?'

'கவிதையால் என்ன பயன் ?

கட்டுரையால் என்ன பயன் ?

'தென்றலால் என்ன பயன்?'

.....என்றெல்லாம் நாம் கையில் உணரும்படியான பயன்களை மட்டுமே கருத்தில் கொண்டு கேள்விகள் கேட்டால், வாழ்க்கை எலும்புக் கூடாகச் சதைப்பிடிப்பற்று நாம் ஜீவித்திருப்போம்.

இசையோ, இலக்கியமோ நேரடியாகப் பயன் தராவிட்டாலும், மறைமுகமாக நம்மை செழுமைப்படுத்தி செம்மையாக்கி நம் வாழ்வின் ஆழத்தை அதிகரிக்கின்றன. அழகியலற்ற வாழ்வு முடிவற்ற பாதாளம்போல நாளடைவில் நம் வாழ்வு முறையே நம்மை பயமுறுத்தி விடும்.

மனிதன் சோற்றால் அடித்த பிண்டம் அல்ல ; உணவு மட்டுமே மனிதனுக்குப் போதுமானதல்ல - மனிதன் ரொட்டித் துண்டுகளால் மட்டுமே ஜீவித்திருப்பதில்லை - என்று பைபிள் கூறுவது மிகவும் ஆத்மார்த்தமானவை.

மொழி இன்றி இலக்கியம் இல்லை. உலகில் 2796 மொழிகள் உள்ளன. அவற்றில் இலக்கிய இலக்கணம் பெற்றவை 600 மொழிகள்தான். பல மொழிகளுக்கு வரி வடிவம் கிடையாது. மொழி உருவான பின்னர் தான் இலக்கியம் உருவாகிறது. அதுவரை எல்லாம் வாய்மொழியாக தலை முறையாக தலை முறையாக வருகின்றன.

இலக்கியம் என்றால் மொழியில் எழுதப்பட்டுள்ள எல்லா வகையான படைப்புகளும் இலக்கியத்தின் வரைமுறையில் சேர்க்கலாம். புனைக் கதைகள் தானென்று இல்லை. ஒருவர் அறிவியல் கட்டுரை எழுதினாலும், இசைப்பதற்காக கவிதை ஒன்றை எழுதினாலும், அதுவும் மொழி சார்ந்த இலக்கியமே.

தமிழில் இவ்வாறு பல்வேறு இலக்கியங்கள் கொட்டிக் கிடக்கின்றன. உலகிலேயே தமிழ் மொழியில் தான் நீதி சார்ந்த இலக்கியங்கள் அதிகமாக உள்ளன.மொழியும் கலாச்சாரமும் ஒருங்கே இணைந்தவை. இலக்கியங்கள் , அந்த மொழி சார்ந்த கலாச்சாரத்தினை பதிவு செய்கின்றன.

திருவள்ளுவர் எழுதிய திருக்குறளினை நாம் படித்து 2000 ஆண்டுகளுக்கு முந்திய தமிழர் கலாச்சாரத்தினை அறிந்துக் கொள்ள முடிகிறது. இலக்கியம் இல்லையெனில், இது சாத்தியமல்ல.

ஆனால், மொழியால் உருவான இலக்கியம், பின்னர் மொழிக்கு செறிவூட்டி, மொழியை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்கிறது.

இது எவ்வாறெனில், செங்கற்களால் ஆன, செங்கல் சூளையில், புதிதாக செங்கற்கள் உருவாக்கப்படுவதைப் போல், மொழியினால் உருவான இலக்கியங்கள், புதிதான வார்த்தைகளை மொழிக்கு சேர்த்து மொழியை வளப்படுத்துகின்றன.

சேக்ஸ்பியர் தனது நாடகங்கள் மூலமாக, பல்வேறு வார்த்தைகளை ஆங்கிலத்திற்கு கொடையாக வழங்கியுள்ளார். இவ்வாறாக, மொழியும் இலக்கியமும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. ஒவ்வொன்றின் வளர்ச்சியும் மற்றதை வளர்க்கிறது.

இசையைக் கேட்பவர்கள் , இலக்கியம் படிப்பவர்கள் மற்றவர்களை விடவும், அதிக கருணையுள்ளம் கொண்டவர்கள் என பல்வேறு ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. '

பல்வேறு கதாபாத்திரங்களைப் படித்து, அவர்களின் உணர்வுகளைப் புரிந்துக் கொண்டவர்கள், மற்றவர்களை விடவும், அதிக கருணையுள்ளம் கொண்டவர்களாகவும், சமூகத்தில் எளிதில் பழகுபவர்களாகவும் உள்ளனர். உதாரணமாக ...

ஹஸ்ரத் ருபய்யிஃ பின்த் முஅவ்வித் (ரலியல்லாஹு அன்ஹா) கூறினார்கள்:

எனக்கு திருமணம் நடந்த பின்னர், நபிகள் நாயகம் ﷺஅன்னவர்கள் என்னிடம் வந்தார்கள். எனக்கருகில் இப்போது நீங்கள் (ஹதீஸின் இரண்டாவது அறிவிப்பாளர்) அமர்ந்து இருப்பது போல் (அத்தகைய தூரத்தில்) என் விரிப்பின் மீது அமர்ந்தார்கள்.

அப்போது சில சிறுமிகள் பத்ர் போரில் ஸஹீதான முன்னோர்களை புகழ்ந்து பாடி கஞ்சிராக்களை (தஃப்) அடித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு சிறுமி, “எங்களிடையே இறைத்தூதர் இருக்கிறார். அவர் நாளை நடக்கவிருப்பதையும் அறிவார்” என்று கூறினாள்.

உடனே நபிகள் நாயகம் ﷺஅன்னவர்கள் இதை விட்டு விட்டு நீ முன்பு சொல்லி கொண்டிருந்ததை சொல்” என்றார்கள். நூல்: ஸஹிஹுல் புகாரி 5147, அபூதாவூத், திர்மிதி

இங்கு கவனிக்க வேண்டியது, எல்லா இசையும் கூடாது என்று இருந்தால், நபிகள் நாயகம் ﷺஅன்னவர்கள் அச்சிறுமிகளை இசையோடு பாட வேண்டாம் என்று தடுத்து இருப்பார்கள்.

ஆனால், அன்னவர்கள் தமது பணிவின் காரணமாக அந்த வார்த்தைகளை கூற வேண்டாம் என்றும் மாறாக முதலில் இசையோடு பாடிக்கொண்டு இருந்ததை போல பத்ர் யுத்தத்தில் மரணித்த தியாகிகளை புகழ்ந்து பாடும்படியும் கூறி அனுமதித்து உள்ளார்கள்.

ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் கூறுகிறார்கள்:

புஆஸ் எனும் போரின் போது அன்சாரிகள் ஒருவரை ஒருவர் நோக்கிப் பாடிய பாடல்களை இரு அன்சாரிச் சிறுமிகள் என்னருகில் பாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது (என் தந்தை) அபூபக்ர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் என்னிடம் வந்தார்கள். (உண்மையில்) அவ்விரு சிறுமியரும் பாடகியர் அல்லர். (இதைக் கண்ட) உடனே அபூபக்ர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், 'இறைத் தூதரின் இல்லத்திலேயே ஷைத்தானின் இசைக் கருவிகளா?' என்று (கடிந்து) பேசினார்கள்.

இது நடந்தது ஒரு பெருநாள் அன்றாகும்.

அப்போது நபிகள் நாயகம் ﷺஅவர்கள், '(அவ்விருவரையும் விட்டு விடுங்கள்). அபூபக்ரே! ஒவ்வொரு சமுதாயத்தாருக்கும் பண்டிகை நாள் ஒன்று உண்டு. இது நமது பண்டிகை நாள்' என்று கூறினார்கள். நூல்: ஸஹிஹ் முஸ்லிம் 1619

அன்னை ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் தனக்கு நெருங்கிய ஒருப் பெண்ணை அன்சாரித் தோழர்களில் ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.

(அப்போது) நபிகள் நாயகம் ﷺஅன்னவர்கள் ஆயிஷாவிடம், 'திருமணம் நடத்துகிறாய். கேளிக்கை ஏதும் இல்லையா? அன்சாரிகளுக்கு கேளிக்கைப் பார்ப்பது மிகவும் விருப்பமானதாச்சே!' என வினவினார்கள். - ஹழ்ரத் உர்வா (ரலி) ஸஹிஹுல் புகாரி.

ஒருமுறை நபிகள் நாயகம் ﷺஅன்னவர்களிடம் ஒருவர் வந்து (திருமணத்தில்) இசைப்பதையும், கேளிக்கை நடத்துவதையும் அனுமதித்துள்ளீர்களா? என வினவினார்.

அதற்கு, 'ஆம்! அது திருமணம்தானே! விபச்சாரமல்லவே!' என நபிகள் நாயகம் ﷺஅன்னவர்கள் பதில் கூறினார்கள். அறிவிப்பவர்: ஹழ்ரத் ஸாயிப் பின் யஸீத் (ரலி)

நூல்: தப்ரானி, பத்ஹுல் பாரி, பாகம் 11, பக்கம் 133"

கவிஞர்கள் நிறைந்த மக்கத்து வாழ் மாந்தர்கள் பேசினால் கவிதையாக இருக்கும், சண்டை பிடித்தால் கவிதையில் தான் சண்டை போடுவார்கள், யாரையாவது திட்டி வசைபாடினால் கவிதையில் தான் அதையும் செய்வார்கள், எவரையாவது போற்றிப் புகழ நினைத்தால் கவிதையில் அவர்களை குளிப்பாட்டுவார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இறை வேதம் இறங்கினால் அவ்வேதம் சாதாரண தரத்தில் இருக்க முடியாது. கண்டிப்பாக கவிதைகளையே மிஞ்சுகின்ற தரத்தில் தான் அமைந்திருக்க வேண்டும். அதனால் தான் இறைவனின் திருமறை இறங்கிய போது யாராலும் அதற்கெதிராக மூச்சுக் கூட விட முடியவில்லை.

முடியாது என்று வரும் போது அவர்கள் கையில் எடுத்த கடைசி ஆயுதம் இவரும் தேர்ந்த கவிஞர் தான் என்று நபியவர்களைப் பார்த்தே சொல்ல ஆரம்பித்தார்கள்.

ஏதாவது ஒன்றை எழுதவோ அல்லது எழுதியதைப் படிக்கவோ தெரியாத நபியவர்களுக்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டதற்கான காரணம் திருமறைக் குர்ஆனின் உயர்ந்த நடை.

எதிரிகளின் இந்த விமர்சனங்களுக்கு இறைவன் இப்படி பதில் சொன்னான்."இவருக்கு (முஹம்மதுக்கு) கவிதையை நாம் கற்றுத் தரவில்லை. (அது) அவருக்குத் தேவையுமில்லை.(36-69)

நபித் தோழர் ஹஸ்ஸான் பின் ஸாபித் அவர்கள் மிகப் பெரிய கவிஞராக இருந்தார்கள். இவர் நபியவர்களின் கவிஞர் என்றே அறியப்பட்டுள்ளார். கவிதை எழுதுவது முற்றிலும் தவறானது என்றிருக்குமானால் நபியின் கவிஞர் என்று இவர் அழைக்கப்பட வேண்டிய தேவை என்ன இருக்கிறது?

பராஉ (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள், (பனூ குறைழாநாளில் கவிஞர்) ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களிடம்,இணைவைப்பவர்களைத் தாக்கி வசைக்கவி பாடுங்கள். ஜிப்ரீல் உங்களுடன் (உறுதுணையாக) இருப்பார்என்று கூறினார்கள். (புகாரி – 4123, 4124)

இணை வைப்பாளர்களை தாக்கி வசைக்கவி பாடும் படியும் அப்படி பாடும் போது ஜிப்ரீல் (அலை) என்ற வானவர் ஹஸ்ஸான் அவர்களுக்கு உதவியாக இருப்பார் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

நல்ல கவிதைகள், இணை வைப்பை எதிர்க்கும் வகையில் உள்ள கவிதைகள் அனுமதிக்கப் பட்டதுதான் என்பது இதிலிருந்து தெளிவாக விளங்குகிறது.

ஷரீத் பின் சுவைத் அஸ்ஸகஃபீ (ரலி) அவர்கள் கூறினார்கள் :ஒரு நாள் நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் (அவர்களது வாகனத்தில்) அமர்ந்திருந்தேன்.

அப்போது அவர்கள், “உமய்யா பின் அபிஸ் ஸல்த்தின் கவிதைகளில் ஏதேனும் உமக்குத் தெரியுமா?”என்று கேட்டார்கள்.

நான் “ஆம் (தெரியும்)”என்றேன். “பாடு”என்றார்கள். உடனே நான் ஒரு பாடலைப் பாடினேன்.

“இன்னும் பாடு”என்றார்கள். பிறகு இன்னொரு பாடலைப் பாடினேன்.

“இன்னும் பாடு”என்றார்கள். இவ்வாறே அல்லாஹ்வின் தூதருக்காக நூறு பாடல்களைப் பாடிக் காட்டினேன்.(முஸ்லிம் –4540)

உமய்யா பின் அபிஸ் ஸல்த்தின் கவிதைகள் இஸ்லாமியக் கருத்துக்கு உட்பட்டவையாக இருந்த காரணத்தினால் தான் நபியவர்கள் அவற்றைப் பாடச் சொன்னார்கள். அவருடைய கவிதைகளில் 100 கவிதைகளை ஒரே நேரத்தில் ஷரீத் பின் சுவைத் அஸ்ஸகஃபீ (ரலி) அவர்கள் பாடிக்காட்டியிருக்கிறார்கள். சற்று சிந்திக்க வேண்டிய விஷயம்

சும்மா எதற்கெடுத்தாலும் ஹராம், ஷிர்க், குப்ர் என்று கத்துவதைக் கொண்டு இதயத்தை இரும்பாக்காமல், இரவு நேரத்தில் அழகான மெல்லிசையைக் கேளுங்கள். அற்புதமான கவிதையை படியுங்கள். அறிவுபூர்வமான கட்டுரையை படியுங்கள். மனம் அமைதி பெறும்.

மன மெய்யியல் 53

(உயிரோட்டமான செயல்கள் மரணிப்பதில்லை)



தொழுகைக்கு மக்களை அழைக்க பாங்கு வாசகங்கள் முடிவானதும் மதீனாவில் தம்முடைய மஸ்ஜிதில் பாங்கு சொல்லும் உன்னதப் பணிக்கு நபியவர்கள் பிலாலை நியமித்தார்கள். சுபுஹுடைய பாங்கு சொல்வார்கள். பொழுது புலரும். அவருக்குத் துணையாளர் அப்துல்லாஹ் பின் உம்மி மக்தூம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தஹஜ்ஜத்துடைய பாங்கு சொல்வார்கள்.

ஒவ்வொரு தொழுகைக்கும் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அழைப்பு விடுத்து, விடுத்து, அவரது இனிய குரல் மதீனாவிலும் நபித்தோழர்கள் மத்தியிலும் எந்தளவிற்குப் பிரசித்தமானது என்றால், பாங்கோசை என்றால் அது பிலால் என்றாகிப்போனது.

இன்றும் உலகின் சில பகுதிகளில், பள்ளிவாசல்களில் தொழுகைக்கு அழைப்பு விடுக்கும் முஅத்தின்களை அறிமுகமில்லாத எவரேனும் சந்தித்து, ‘என்ன தொழில் செய்கின்றீர்கள்?’ எனக் கேட்டால், ‘மஸ்ஜிதில் பிலால் ஆக இருக்கின்றேன்!’ என்று பெருமையுடன் குறிப்பிடும் அளவிற்குப் புகழ் பெற்றுவிட்டது அவரது பெயர்.

மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாளன்று கஅபாவின் கூரையின்மீது ஏறி நின்று பாங்கு சொல்வதற்கு நபியவர்கள் பிலாலைத்தாம் பணித்தார்கள்.முதன் முதலில் மக்காவில் பாங்கோசையை முழங்கியவரும் அவரே.

ஒருமுறை அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அனுமதி வாங்கி வேறொருவர் பாங்கு சொன்னபோது, சற்று நேரம் கழித்து ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, ‘ஏன் இன்னும் பாங்கு கூறவில்லை? ' என்று வினவினர்.

'வேறொருவர் இன்று பாங்கு கூறினாரே!’ என்றனர் அண்ணல். அது கேட்ட ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், ‘பிலாலின் பாங்கு அர்ஷு வரைக்கும் கேட்குமே. இன்று கேட்கவில்லையே என்றுதான் வினவினேன்’ என்றனர்.

நபிகள் நாதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘அரேபியாவில் நானே முதல் முஸ்லிம். அபினீசியாவில் பிலாலே முதல் முஸ்லிம்’ என்று இவர்களை அவர்கள் புகழ்ந்து கூறினர்.

"உமர் (ரலி)அவர்கள், நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள், யா ரசூலல்லாஹ்! பிலாலுடைய பாங்கு சரியில்லை என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். பிலால் "அஷ்ஹது" என்பதற்குப் பதிலாக, "அஸ்ஹது" என்று சொல்கிறார்.

பிலால் அவர்கள் அப்படித்தான் பாங்கு சொல்லுவார்கள் என்று நபியவர்களுக்கும் தெரியும். உமையா என்பவனிடம் பிலால் அவர்கள் அடிமையாக இருந்தபொழுது, அவர்களின் நாவில் நெருப்புக் கங்கை வைத்து சுட்டு வேதனை செய்தான் உமையா. அதிலே பாதிக்கப்பட்ட அவர்களின் நாவிலே "ஷீன்" வராது.

"உமரே! அதற்கு என்ன செய்யலாம்?"என நபியவர்கள் கேட்டார்கள்.

"யா ரசூலல்லாஹ்! வேறு முஅத்தினை மாற்றிவிடலாம்" என்று துணிந்து சொல்லிவிட்டார்கள். இந்த வார்த்தையை வேறு யாரும் சொல்லியிருந்தால் நபியவர்கள் பெரிதாக எடுக்கமாட்டார்கள். உமர் அவர்கள் ஒரு ஆலோசனையை கொண்டுவந்தார்கள் என்றால், அதற்குப் பிறகு அல்லாஹ் அதையே சட்டமாக கொண்டு வந்து விடுவான்.

எனவே, ஒருவேளை இது அல்லாஹ்வின் கருத்தாக இருக்குமோ என நபியவர்கள் எண்ணினார்கள்.

சரி, கூப்பிடுங்கள் பிலாலை. பிலால் (ரலி) வந்தார்கள்.

"இனி நீங்கள் பாங்கு சொல்லவேண்டாம்" என்று சொன்னவுடன்,"சரி நாயகமே" என்று பிலால் அவர்கள் போய்விட்டார்கள்.

இரவு அனைவரும் தூங்குகிறார்கள். இரவு நீண்டுகொண்டே செல்கிறது ! தஹஜ்ஜத் நேரம் கடந்து வெளிச்சம் வரவேண்டும். நபியவர்கள் வானத்தின் வெளிச்சத்தைப் பார்க்கிறார்கள். வானம் வெளிச்சம் தரவில்லை. மீண்டும் தஸ்பீஹ் செய்கிறார்கள். வெளிச்சம் வரவில்லை.

இரவு நீண்டுகொண்டே செல்வதால் உமர் அவர்கள் பயந்தவர்களாக பள்ளியை நோக்கி ஓடிவருகிறார்கள். அல்லாஹ்வின் வஹீயை எதிர்பார்த்து நபியவர்கள் இரண்டு ரகஅத் தொழுதுவிட்டு ஸலாம் கொடுத்தபொழுது, வலது பக்கத்தில் வந்து உட்கார்ந்திருந்தவர்கள் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் !

" யா ரசூலல்லாஹ் ! இரவு நீண்டுகொண்டே போகிறதே என்றா நினைக்கிறீகள் ? இல்லை நாயகமே, இரவை பிலாலுக்காக அல்லாஹ் நிறுத்தி வைத்திருக்கிறான் நாயகமே!

ஒவ்வொரு நேர பிலாலின் பாங்கிற்காக ஒவ்வொரு மலக்குமார்களும் ஏங்கிக் கிடப்போம் நாயகமே! --இனி பிலால் பாங்கு மேடையில் ஏறினால் மட்டுமே பூமியில் பகல். இல்லையென்றால், பகலே பூமிக்கு இல்லை என்று அல்லாஹ் சொல்லிவிட்டான் நாயகமே! உங்கள் முடிவை மாற்றுங்கள் நாயகமே!

சொல்லிவிட்டு ஒரு வார்த்தைச் சொன்னார்கள்,

"யா ரசூலல்லாஹ்! அல்லாஹ் தன் சட்டத்தையே உடைக்கிறான். இனி பிலால் 'ஸீன்' என்று சொன்னாலே, அல்லாஹ்விடம் 'ஷீன்' நாயகமே.!"

துடித்துப்போன ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், பிலால் எங்கே? எனத் தேடுகிறார்கள். பிலால் அவர்கள் வீட்டிற்கு கூடச் செல்லாமல், மஸ்ஜிதுன் நபவியிலே சுஜுதில் அழுது கொண்டிருக்கிறார்கள்,


"யா அல்லாஹ்! நான் என்ன பாவம் செய்தேன் ? இந்த உலகத்தில் பாக்கியங்கள் பறிக்கப்படுவதற்கு பாவங்கள் காரணமாக இருக்கும்? என்று பலவாறு புலம்பி அழுகிறார்கள்.

நபியவர்கள் நடந்த நிகழ்வை சொன்னதும் பிலால் (ரலி) அவர்கள் மகிழ்ச்சி அடைந்து, பாங்கு சொன்னார்கள். பின் பொழுது இனிதே புலர்ந்தது !

இக்லாஸ் என்ற உயிரோட்டத்துடன் செய்யப்படும் எந்த செயல்களும் இறைவனின் அர்ஷயைத் போய் தட்டும். அந்த செயல்கள் காலம் கடந்தும் மரணிப்பதில்லை !

மன மெய்யியல் 54

(பிரசாரம் என்றுமே ஓயாது)



கலீல் கிப்ரானுடைய கதைகள் ஆழமானது , மன மெய்யியலில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. இவருடைய கதைகள் மனமெய்யியலை சொல்லும் பதிவுகள் ஏராளம்

ஒரு நகரத்தில் நாய் ஒன்று இருந்தது. அது திடீரென மெய்ஞ்ஞானமடைந்தது. மற்ற நாய்களிடம், “நீங்கள் குரைப்பதை நிறுத்துங்கள். தேவையில்லாமல் குரைப்பதாலேயே நம் ஆற்றலில் பெரும்பகுதி வீணாகி விடுகிறது" என்று போதனை செய்தது.

குரைப்பதை நிறுத்துவது நாய்களுக்குக் கடினம். எப்படி நம்மால் பேசுவதை நிறுத்த முடிவதில்லையோ, அதைப் போலவே நாய்களுக்கும் குரைக்காமல் இருக்க முடிவதில்லை.

நாம் பேசுவது நாய்களுக்குக் குரைப்பதைப் போலத் தோன்றினாலும் தோன்றுமோ?

அவை அந்த அறிவுரை வழங்கும் அறிவுஜீவி நாயிடம், "நீங்கள் ஒரு மாபெரும் அறிவுஜீவி நாய். நீங்கள் சொல்வது எல்லாமே மெய்தான். ஆனால், நாங்களெல்லாம் சாமானிய நாய்கள் எங்களால் உங்களை மாதிரி மௌனமாகத் தியானம் செய்ய முடிவதில்லை."

சாமானிய நாய்கள் அந்த அறிவுஜீவி நாயை அவதாரமாகக் கருதின. ஆனால், அவற்றின் புகழுரைக்கேற்பவே அந்த அறிவுஜீவி நாயும் தன் வார்த்தையைக் காப்பாற்றி, குரைக்காமலே இருந்து வந்தது. பிரசாரம் பலனளிக்காமல் போனாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல், தொடர்ந்து தன் மௌனப் பணியைத் திறமையாக செய்து வந்தது.

தன்னைப் போலச் சாதாரண நாய்களால் இருக்க முடியவில்லை என்கிற குற்றவுணர்வை சாமானிய நாய்களுக்கு ஏற்படுத்திவிட்ட திருப்தி அறிவுஜீவி நாய்க்கு வந்தது !

ஓர் அமாவாசை இரவு.

சாமானிய நாய்களெல்லாம் ஒன்றுசேர்ந்து முடிவு எடுத்தன.

"நம்முடைய அவதார புருஷர் கூறுவதை இந்த ஓர் இரவாவது நாம் குறைக்காமல் இருக்க கடைபிடிப்போம். அவர் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்கவில்லையே என்கிற வருத்தம் அவருக்கு ஏற்பட வேண்டாம். தாங்கள் செய்துகொண்ட சங்கல்பத்திற்கிணங்க அன்று இரவு ஒரு நாய் கூடக் குரைக்கவில்லை !

அறிவு ஜீவி நாய்க்கோ ஆச்சரியம். அது தெருத் தெருவாய் ஓடி கவனித்தது. நாய்கள் குரைக்கிற இடமெல்லாம் ஓடி ஓடிப் பார்த்தது எந்த நாயும் குரைக்காதது கண்டு சந்தோஷப்பட வேண்டும் அல்லவா? ஆனால், இல்லை. அது சந்தோஷப்பட வில்லை.முதலில் ஏமாற்றமாயிருந்தது. பின் வருத்தப்பட்டது.

நேரமாக நேரமாகத் தன் அறிவு ஞானப் பணியை நாய்களுக்கு மத்தியில் செய்ய முடியவில்லையே என்கிற வேதனையும் கூடவே அதற்கு ஏற்பட்டது. மேலும் அதனால் தன் ஆற்றாமையை தாங்க முடிவில்லை.

ஓர் இருண்ட மூலைக்குச் சென்று எந்த நாயும் இல்லாத இடத்தில் தானே நன்கு சப்தமிட்டு குரைத்தது !

ஒரு நாய் குரைத்து விட்டதைக் கேட்டதும் அக்கணமே மற்ற நாய்கள் 'இனி பிரச்சினையில்லை' என்று நினைத்தன. யார் குரைத்தது என்கிற உண்மை அவற்றிற்குத் தெரியாது. அவை ஒவ்வொன்றாகக் கட்டுப்பாட்டை உடைத்து, குரைக்க ஆரம்பித்தன. இப்பொழுது அவை குரைப்பது முன்பைக் காட்டிலும் மிக தீவிரமாக இருந்தது.

பின் அறிவுஜீவி நாயும் தன்னுடைய பழைய போதனையை சாமானிய நாய்களுக்கு மத்தியில் சந்தோஷத்தோடு ஆரம்பித்தது.

போதிக்கிற பலரும் தாம் போதிக்கிற சுகத்திற்காகப் போதிக்கிறார்களே தவிர திருந்த வேண்டும் என்பதற்காக அல்ல; - அவர்கள் திருந்திவிட்டால் நாமும் நம் பிரச்சாரத்திற்கும் வேலை இல்லாமல் போய்விடுமே என்கிற பயமும் அவர்களுக்கு உண்டு.!


இதை ஆறிவு ஜீவி நாம்தான் என்று எண்ணி அறபோதனை செய்பவர்களும், மற்றவர்களைக் காட்டிலும் இறைக்கட்டளையான தொழுகையை நாம்தான் தவறாமல் நிறைவேற்றுகிறோம் என்று எண்ணுபவர்களும் நன்கு கவனிக்க வேண்டும்.

ஓர் ஊரில் குடிப்பதை நிறுத்துபவர்களுக்குப் பரிசு வழங்க ஆரம்பித்தார்கள். நாளடைவில் அங்கு மது அருந்துபவர் எண்ணிக்கை அதிகமானது. காரணம்

விசாரித்தபோது விவரம் தெரிந்தது. இதுவரை ஊரில் குடிக்காதவர்களெல்லாம் குடிக்க ஆரம்பித்தனர். சில நாட்களில் குடிப்பதை நிறுத்தி, நாமும் பரிசு பெறலாம் என்பதற்காக ஊரில் உள்ள அத்தனை பேர்களும் குடிக்க ஆரம்பித்தார்கள்.

மன மெய்யியல் 55

(சொல்)



அண்மையில் ஒரு நூலில் வாசிக்க நேர்ந்தது.

ஒரு பொறுப்பற்ற சொல் சச்சரவை ஏற்படுத்தும்.

ஒரு குரூரமான சொல் ஒரு வாழ்வை சிதைக்கக்கூடும்.

ஒரு கசப்பான சொல் காழ்ப்புணர்வை ஏற்படுத்தலாம்.

ஒரு முரட்டுச் சொல் மரணத்தை உண்டாக்கலாம்.

ஒரு மனமுறிவான சொல் மண உறவை துண்டிக்கலாம்

ஒரு கருணையான சொல் பாதையைச் செப்பனிடலாம்.

ஒரு மகிழ்ச்சியான சொல் நாளையே வெளிச்சமாக்கலாம்.

ஒரு நேரத்திற்குகந்த சொல் இறுக்கத்தைத் தளர்த்தலாம்.

ஒரு அன்பான சொல் காயத்தை ஆற்றி ஆசீர்வதிக்கலாம்.

ஒரு பாசமான சொல் பந்தத்தை பலப்படுத்தலாம்.

ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும் எனவே சொற்களை மிகவும் கவனமாக பயன்படுத்த வேண்டும்.

ஒரே ஒரு சொல்லால் மற்றவர்கள் வாழ்வு மாறுகின்ற அளவுக்குச் சொற்களில் சூத்திரம் அடங்கியிருக்கின்றது. அதனால் தான் மொழியைக் கையாளுவதில் லாகவமும், பக்குவமும் தேவைப்படுகிறது. ஒரே ஒரு காற்புள்ளியை மாற்றிப்போட்டால் பொருளே மாறிப் போய்விடும்.

காற்புள்ளியை மாற்றி ஒருவரின் உயிரையே காப்பாற்றிய வரலாறு கூட உண்டு. ஸாரினா மரியா (Czarina Maria) என்கிற பெண்மணி தன் கணவர் அலெக்ஸாண்டர் ஒரு குற்றவாளியைச் சிறைக்கு அனுப்ப "மன்னிக்க முடியாது, சைபீரியாவுக்கு அனுப்புக!" (Pardon impossible, to be sent to Siberia) என்பதை மாற்றி "சைபீரியாவுக்கு அனுப்ப முடியாது, மன்னிக்க" எனத் திருத்தி விடுவித்த கதை வரலாறு ஆனது.

"கோவலன் தன் செல்வத்தை எல்லாம் மாதவியிடம் இழந்து விட்டு கண்ணகியை தேடி வருகிறான். கண்ணகி அவனை மன்னித்து ஏற்றுகொள்கிறாள்.

கண்ணகி அவனை அமர வைத்து பானகம் கொடுக்கிறாள். வெட்கத்துடனும் குற்ற உணர்வோடும் அமர்ந்திருக்கிற கோவலன் அவள் முகம் பார்க்க முடியாமல் அவள் காலை பார்க்கிறான்.

"என்ன இந்த சிலம்பும் வேண்டுமா, அவிழ்த்து தருகிறேன் என்கிறாள்" கண்ணகி.

"இல்லை நாம் மதுரை மா நகர் சென்று ஏதேனும் வாணிபம் செய்து பிழைக்கலாம் என்கிறான்" கோவலன்.

சரி என்று கண்ணகியும் புறப்பட இருவரும் மதுரையை நோக்கி நடை பயில்கிறார்கள். யாரோ ஒரு வணிகர் வீட்டில் தங்குகிறார்கள். கண்ணகி கோவலனிடம் தன் சிலம்பை கொடுத்து இந்த சிலம்பை விற்று காசு வாங்கி வாணிகம் செய்யுங்கள் என்கிறாள்.

சிலம்பை எடுத்துக்கொண்டு ஒரு பொற்கொல்லரிடம் போய் கோவலன் அந்த சிலம்பை கொடுத்து பணம் கேட்கிறான்.

அப்பொற்கொல்லன் அரசியின் சிலம்பை திருடியவன். தான் தப்பிக்க சூழ்ச்சி செய்து அவன் கோவலனை அமர செய்துவிட்டு அரசினிடம் போய் இந்த சிலம்பை அரசனிடம் காட்டி 'அரசே சிலம்பை திருடிய கள்வன் இவனே" என்று கோவலன் மீது பழி சுமத்துகிறான்.

அரசன் 'நெடுஞ்செழியனும் 'அவனை கொண்டு வா' என்று கூற , காவலாட்கள் அதை 'கொன்று வா என காதால் கேட்டு" கோவலனை வெட்டி கொலை களத்தில் கொன்று விடுகின்றனர்.

தன் கனவனை குற்றவாளி என்று கொலை செய்யப்பட்டதை சேதியாக கேட்டு தலைவிரி கோலமாக கண்ணகி அரசனிடம் போய்

'உன் சிலம்பில் என்ன இருக்கும் என கேட்க

அரசனும் "அதில் முத்து பரல்கள் இருக்கும்" என்று கூற

கண்ணகி தன்னிடம் மீதம் இருக்கும் சிலம்பை தரையில் அடித்து அதிலிருக்கும் மாணிக்க கற்களை காட்ட , தவறை உணர்ந்த நெடுஞ்செழியன் உடனடியாக தன் அரியணையிலேயே மரணமடைகிறான். அவன் மனைவி கோப்பெருந்தேவியும் உடனடியாக மரணமடைகிறாள்."

" கொண்டு " வா அவனை, என்ற சொல், "கொன்று" வா அவனை என்பதாக கேட்டு, அந்த ஒரு சொல் கொன்றது

ஒரு சொல்லைச் சொல்லும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எழுதும்பொழுது இன்னமும் உன்னிப்பாக இருக்க வேண்டும். நாம் எழுதிய கடிதம் சிலரது கல்லாப்பெட்டிகளில் 'கரன்சி' நோட்டுகளைப் போலப் பாதுகாக்கப்பட நேரிடலாம்.நம் வார்த்தைகள் சொல்வெட்டுகளாக இருந்தால் அவை கல்வெட்டுகளைப் போலப் பாதுகாக்கப்படும்.

யார் யார், எதை எதை, எந்தெந்த இடத்தில் சொல்ல வேண்டுமோ, அதை அதை, அந்தந்த இடங்களில் சொன்னால் மட்டும்தான் அது நிறைவேறும்.

எவர் எதைச் சொன்னாலும் அது எடுபடுவதில்லை. அதற்கு ஒரு தகுதி வேண்டும். அதிகாரத்தில் இருப்பவர்கள் சொல்லும் சொற்கள் வேறு, சாமானிய மனிதர் சொல்லும் சொற்கள் வேறு. அவை, சொல்ல வேண்டியவர்கள், சொல்ல வேண்டிய இடத்தில், சொல்லும் முறையில் சொன்னால் மட்டும் மதிக்கப்படுகின்றன.

இந்தச் சிந்தனையின்றி பேசுபவர்கள், சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள். அது அரசியலோ, திரை உலகமோ, சமுதாயக் களமோ, உறவுகளோ, எல்லா நிலைகளிலுமே இந்த சிக்கல் நிலவுகிறது. இந்நிலை, சிலரை நீதிமன்றம்வரைகூட இட்டுச் செல்கிறது. இடம், பொருள் காலம் அறிந்து பேசாத பேச்செல்லாம் பேச்சு என்றே சொல்ல முடியாது.

கர்மவீரர் காமராசர் அவர்கள், முழுநேர, மற்றும், மாலை நேர கல்லூரி படிப்புமுறையை கொண்டுவந்தது பற்றிய ஒரு நிகழ்வு உள்ளது.

காமராசர் அவர்களும், வழக்கறிஞர் டி.சீனிவாசன் அவர்களும் நல்ல நண்பர்கள். ஒரு நாள், சீனிவாசன் அவர்கள், காமராசர் அவர்களிடம், தனது மகனுக்கு, சென்னை மாநிலக் கல்லூரியில் வேதியல் துறையில் முதுகலை பட்ட படிப்புக்கு இடம் வாங்கித் தருமாறு கேட்டார்.

"இதற்காகவா நான் முதலமைச்சர் ஆனேன்" என்று காமராசர் அதிரடியாகச் சொன்னதும்,

அந்த வழக்கறிஞர், சிறிது கவலையுடன், இல்லை, அந்த படிப்புக்கு மொத்தமே 15 இடங்கள்தான் உள்ளதாம் என்று கூறினார்.

உடனே காமராசர், அந்த கல்லூரியைத் தொடர்பு கொண்டார். கல்லூரி நிர்வாகம் பல்கலைக்கழகத்தைச் சுட்டிக்காட்டியது. எனவே, பல்கலைக்கழகத்தைத் தொடர்பு கொண்டார் காமராசர்.

முதன்மைச் செயலரை அழைத்து, 15 பேருக்குத்தான் இடம் என்றால், மற்றவர்கள் எப்படி படிப்பது, நாடு எப்படி முன்னேறும், அந்த பையன் நிறைய மதிப்பெண்கள் வாங்கியிருக்கான், அவனுக்கு ஓர் இடம் கொடுங்கள் என்று சொன்னார்.

அதற்கு அந்த செயலர், ஐயா, அந்த வேதியல் படிப்பு ஆய்வுக்கூடத்தில், 15 மாணவருக்கு மட்டுமே போதுமான கருவிகள் உள்ளன. அந்தப் பையனுக்கு இடம்கொடுக்க வேண்டுமென்றால், ஏற்கனவே சேர்த்த ஒரு மாணவனை நான் நீக்க வேண்டிவரும் என்று சொன்னார்.

அதற்கு காமராசர் அவர்கள், அதென்னப்பா ஆய்வுக்கூடம்? என்று கேட்டார்.

ஐயா, வேதியல் படிக்கும் மாணவர்கள், வகுப்பில் மூன்று மணி நேரம், ஆய்வுக் கூடத்தில் மூன்று மணி நேரம் படிப்பார்கள் என்று சொன்னார்.

அப்படியா, மாணவர்கள் மூன்று மணி நேரம் ஆய்வுக்கூடத்தில் இருக்கையில், வகுப்பறையில் யார் இருப்பார்கள் என்று கேட்டார் காமராசர்.

அது காலியாகத்தான் இருக்கும். ஆய்வுக்கூடமும் அதேபோல்தானே இருக்கும் என்றார் செயலர்.

சரிப்பா.. மேலும் 15 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். 15 பேர் மூன்று மணி நேரம் ஆய்வுக்கூடத்தில் இருக்கையில், மற்ற 15 பேர் வகுப்பறையில் இருக்கட்டும், அந்த 15 பேர் வகுப்பறையில் இருக்கையில், மற்ற 15 பேர் ஆய்வுக்கூடத்தில் இருக்கட்டும் என்றார் காமராசர்.

அதற்கு அந்த செயலர், "ஐயா அப்படியெல்லாம் செய்ய முடியாது, ஏனெனில் அப்படியொரு கல்வி ஆணை கிடையாது" என்று சொன்னார்.

உடனே காமராசர் அவர்கள், " நான் சொல்கிறபடி ஒரு தாளில் எழுதிக்கொண்டு வா, நான் கையெழுத்துப் போடுவதுதான் கல்வி ஆணை " என்றார்.

அவ்வாறு வந்த படிப்புமுறைதான் ஷிப்ட் படிப்பு முறை. காலை நேர கல்லூரி, மாலை நேர கல்லூரி என்று சொல்கிறார்கள்.

காமராசரின் நண்பர் வழக்கறிஞர் டி.சீனிவாசனின் ஒரு சொல் வென்றது.

Aysha Kudhus Faizee

அருமை

வார்த்தைகளை சிந்தித்து பேசவேண்டும் ,

ஆத்திரத்திற்காக பேசும் வார்த்தைகள்

உறவுகளுக்குள் விரிசலை ஏற்படுத்தக்கூடும் ,

சிலநேரம் சந்தோஷத்தில்கூட சிலர் வார்த்தைகளை தவறவிட்டுவௌ சிக்கிக்கொள்கிறார்கள்

சிலநேரங்களில் ஒருவர் மற்றவர் பற்றிய

ஒரு விஷயத்தை சாதாரணமாக பேசியிருப்பார்

அதைக்கேட்டுக்கொண்டிருந்த நபர்

பேசப்பட்ட நண்பரிடம் உன்னை இப்படிப்பேசிவிட்டார்

என்று சொல்கிறபோது

அந்த சொல் பகையுணர்வுக்கு வழிவகுத்துவிடுகிறது

அங்கே ஒரு ஆரோக்கியமான நட்பு கசந்துபோகிறது .....

குடும்பங்களுக்குள்ளும் இதுபோன்ற

வன்மச்சொல் மனக்கசப்பை உண்டாக்கிவிடுகிறது .....!

மன மெய்யியல் 56

(நல்லவனா ? கெட்டவானா ?)



என்னைச் சந்தித்த ஒருவர் “நான் நல்லவனா? கெட்டவனா?” என்று திடீரென கேட்டார். நான் நிலைகுலைந்து போனேன்.

"நீங்கள் இரண்டும்தான்" என்றேன்.அவருக்குச் சற்று ஏமாற்றம்.

'உங்களைப் போல உத்தமன் யாரும் உண்டோ?' என நான் சொல்வேன் என்று அவர் எதிர்பார்த்து இருப்பார் போல இருக்கிறது.

நல்லவருக்கு நல்லவராக இருப்பவர்தானே கெட்டவர்க்குக் கெட்டவராகவும் இருப்பார்? அப்போ அவர் நல்லவரா ? கெட்டவரா ? இன்னும் அந்த குழப்பம் எனக்கிருக்கிறது.

ஒருவர் எல்லோருக்கும் நல்லவராக இருக்க முடியுமா? எல்லா நேரங்களிலும் நல்லவராக இருக்க முடியுமா?

ஒரு மேஜை நல்லதாக இருக்கலாம். ஒரு மனிதன் இருக்க முடியுமா?

அழகான ஓவியத்தைக் கூட எல்லோரும் ஒரே மாதிரி ஏற்றுக் கொள்வதில்லையே! விமர்சனங்கள் இருக்கிறதே !

அது சரி - நல்லது, கெட்டது என்று ஏதாவது இருக்கிறதா? அதற்கு இலக்கணங்கள்தான் உண்டா? மிகச் சுவையாக இருக்கிற பழமே கொஞ்சநாள் சுவைக்காமல் விட்டுவிட்டால் கெட்டு அழுகிப் போய்விடுகிறது. அந்தப்பழம் நல்லதா ? கெட்டதா ?

"நல்லதும் இல்லை. கெட்டதும் இல்லை; நம் சிந்தையே அப்படி உருவகப்படுத்துகிறது.“There is nothing good. Nothing bad Thinking makes it so" என்கிறார் ஷேக்ஸ்பியர்.

நல்லது கெட்டது என்றெல்லாம் நாமே நமக்குள்ளேயே இலக்கணங்களை வகுத்துக்கொள்கிறோம்.

நாம் நல்லவரா கெட்டவரா என்பதை மற்றவர்களால் எப்படிப் பரிசீலனை செய்ய முடியும்? நம்மிடம் உள்ள அவர்களுக்குத் தெரியாத பல முகங்கள் நமக்கு மட்டும் பரிச்சயமானவையாக இருக்கின்றனவே. அவற்றை என்ன செய்யப் போகிறோம்?

இது பற்றிய ஒரு உண்மை நிகழ்வை இறைவன் குர்ஆனில் குறிப்பிடுகிறான்.

திருக்குர்ஆனில் ‘அல் அஃராஃப்’ (சிகரங்கள்) என்ற அத்தியாயத்தில் சில வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அதில் ஒரு வசனத்தில் ‘பல் ஆம் இப்னு பாஊர்’ என்ற அறிஞரைப்பற்றிய தகவல் இடம்பெற்றுள்ளது.

கொடுங்கோல் அரசன் ஃபிர்அவ்ன், மூஸா நபி அவர்களையும், அவரது கூட்டத்தாரையும் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கி துன்புறுத்தினான். அல்லாஹ்வின் வல்லமையால் ஃபிர்அவ்னும் அவனது படைகளும் கடலில் மூழ்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டனர். அதன்பின்னர் நபி மூஸா (அலை) அவர்கள் தலைமையில் மக்கள் அமைதியாய் வாழ்ந்திருந்த காலம் அது.

அப்போது எகிப்தை சுற்றியிருந்த மற்ற நாடுகளில் உள்ளவர்கள் நபி மூஸா (அலை) அவர்ககள் கொண்டு வந்த தவ்ராத் வேதத்தையும், ஏக இறைவன் அல்லாஹ் மட்டுமே என்ற கொள்கையையும் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அதோடு நபி மூஸா (அலை) அவர்ககளை பின்தொடர்ந்த மக்களுக்கும் தொல்லைகள் கொடுத்தனர்.

அந்த மக்களின் அட்டூழியத்தை அடக்குவதற்காக அவர்கள் மேல் போர் தொடுக்க வேண்டும் என்ற கட்டளையை மூஸா நபிக்கு இறைவன் பிறப்பித்தான். இதன்படி முதலில் அவர் மிஸ்ரு என்ற நாட்டின் மீது படையெடுத்துச்சென்று போர் புரிந்து வெற்றி கொண்டார். அடுத்து, மூஸா நபிகள் போர் தொடுக்க திட்டமிட்ட நாடுகளில் ஒன்று ‘கன்ஆன்’.

நபி மூஸா (அலை) அவர்கள் தன் நாட்டின் மீது படையெடுத்து வந்தால் தன்னை சிறை பிடிப்பதோடு, தன் நாட்டையும் கைப்பற்றிக் கொள்வார் என்று அந்த நாட்டு மன்னன் பயந்தான்.

இதையடுத்து கன்ஆன் நாட்டு மன்னன் சதி ஆலோசனை செய்தான். அவன் மந்திரிகளை அழைத்துப்பேசினான். அப்போது மந்திரிகள், தங்கள் ஊரில் வசிக்கும் "பல்ஆம் இப்னு பஊரா" என்ற இஸ்லாமிய மார்க்க அறிஞரும், மிகப்பெரும் ஞானியுமான அவரைப்பற்றி மன்னனிடம் தெரிவித்தனர்.

வேதத்தை தெளிவு பெற கற்றறிந்த மார்க்க மேதையாகவும், வழிபாடுகளை தவறாது நிறைவேற்றும் பக்திமானாகவும் பல்ஆம் ஞானி விளங்கினார். இவரது பக்தியை மெச்சிய அல்லாஹ், அவருக்கு ‘இஸ்முல் அஹ்லம்’ என்ற உயர்ந்த அந்தஸ்த்தை வழங்கி கவுரவப்படுத்தியிருந்தான்.

இதன் மூலம், தனக்கு எது தேவை என்றாலும் அதைத்தருமாறு இறைவனிடம் அவர் இஸ்முல் அஹ்லத்தை சொல்லிப் பிரார்த்தனை செய்தால் போதும், உடனே அவருக்கு அது கிடைத்துவிடும். அத்தகைய உயர்ந்த அந்தஸ்த்துதான் இஸ்முல் அஹ்லம் என்பது.

பல்ஆம் இதை பயன்படுத்தி இறைவனிடம் தனது தேவை மட்டுமின்றி பிற மக்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றினார். இவரது ஆற்றலைப் பற்றி கேள்விப்பட்ட அந்த ஊரைச் சுற்றி வாழும் மக்கள் அவரை சந்திக்க திரண்டு வந்தனர். பலர் அங்கேயே தங்கியிருந்து அவரிடம் மார்க்க கல்வியும் கற்று வந்தனர். அந்த அளவிற்கு சிறந்த அறிஞராக மிகப் பெரும் அந்தஸ்த்தோடு வாழ்ந்து வந்தார்.

இத்தனை சிறப்பு மிக்க அவரைப்பற்றி மந்திரிகள், மன்னனிடம் எடுத்துக் கூறினார்கள். மேலும், இஸ்முல் அஹ்லம் என்ற சிறப்புத்தன்மை பல்ஆம்மிடம் உள்ளது. இதனால், நபி மூஸா (அலை) அவர்களுக்கு எதிராக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுமாறு அவரிடம் சொல்ல வேண்டும். அதை ஏற்று அவர் பிரார்த்தனை செய்தால்தான் நபி மூஸா (அலை) அவர்களின் படைகளிடம் இருந்து நாம் தப்பிக்க முடியும் என்று மந்திரிகள் மன்னனிடம் தெரிவித்தனர்.

இதையடுத்து, மன்னனும் மந்திரிகளும் அறிஞர் பல் ஆம் வீட்டுக்குச் சென்றனர். அவரிடம், நபி மூஸா (அலை) அவர்கள் மூலம் தன் ஆட்சிக்கு வர இருக்கிற ஆபத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்த ஆபத்திலிருந்து கன்ஆன் நாடு காப்பாற்றப்பட வேண்டும் என்றால்,நபி மூஸா (அலை) அவர்களுக்கு எதிராக நீங்கள் இஸ்முல் அஹ்லத்தை பயன்படுத்தி இறைவனிடம் துஆச் செய்ய வேண்டும்’ என்று தெரிவித்தனர்.

ஆனால், பல்ஆம் இதை ஏற்க மறுத்து இவ்வாறு கூறினார்:

“ நபி மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபி. அவர் தந்ததுதான் இந்த தவ்ராத் வேதம். அதனை ஓதி செயல்படுத்தி வந்ததால்தான் எனக்கு இஸ்முல் அஹ்லம் என்ற சக்தியே இறைவனால் கொடுக்கப்பட்டது. அப்படி இருக்க நான் எப்படி அந்த நபிக்கு எதிராக துஆச் செய்ய முடியும் ? மேலும் அது எப்படி அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்படும் ? எல்லோருக்கும் நன்மை செய்கின்ற நல்ல துஆக்கள் தான் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்படும். என்று சொல்லி மறுத்துவிட்டார்.

மன்னனும் அவரை தன் வழிக்கு கொண்டு வர எவ்வளவோ முயற்சி செய்தும் பலன் கிடைக்கவில்லை. எனவே குறுக்கு வழியில் அவரை வீழ்த்த திட்டமிட்டனர்.

பல்ஆம் சிறந்த ஞானியாக இருந்த போதிலும் தனது அழகான மனைவி மீது அவருக்கு மோகம் அதிகமாக இருந்தது. அந்த பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினான் மன்னன்.

இதையடுத்து அந்தப்பெண்ணை அழைத்து, தனது திட்டத்தை விவரித்தான். அந்தப் பெண்ணுக்கு, அவள் விரும்பிய அத்தனை பரிசுப் பொருட்களையும் அளவில்லாமல் கொடுத்து ‘பல்ஆமை,நபி மூஸா (அலை) அவர்களுக்கு எதிராக துஆச் செய்ய சம்மதிக்க வைக்க வேண்டும்’ என்று கேட்டுக்கொண்டான்.

அந்தப்பெண்ணும், பரிசுப் பொருட்களுக்கு மயங்கி, தன் கணவன் தன் மீது வைத்திருக்கும் மோகப் பலவீனத்தை பயன்படுத்தி அவரின் உறுதியை குலைத்தாள், மனதை கலைத்தாள். பெண்ணாசையில் மதிமயங்கிய பல்ஆம், மூஸா நபிகளுக்கு எதிராக இறைவனிடம் பிரார்த்தனை செய்ய முன்வந்தார்.

நல்ல செயலுக்காக கொடுக்கப்பட்ட ஒரு சக்தியை தவறாக பயன்படுத்த முன்வந்ததால் அது இறைவனுக்கு கோபம் மூட்டியது. உடனே பல்ஆம்முக்கு அளித்த சிறப்புத்தன்மையை அவரிடம் இருந்து இறைவன் அகற்றினான்.

அது மட்டுமல்லாமல், நபி மூஸா (அலை) அவர்களுக்கு எதிராக பிரார்த்தனை செய்ய ஒப்புக்கொண்ட அவரது நாக்கு மிக நீளமாக வளர்ந்தது. நாயின் நாக்கு எப்படி நீளமாக வெளியே தொங்கிக்கொண்டு இருக்குமோ, அப்படி அவரது நாக்கு வாய்க்கு வெளியே தொங்கியது. இந்த நிகழ்வு குறித்து திருக்குர்ஆனில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது:

“(நபியே!) நீங்கள் அவர்களுக்கு (“பல்ஆம் இப்னு பாஊர்” என்னும்) ஒருவனுடைய சரித்திரத்தை ஓதிக்காண்பியுங்கள். அவனுக்கு நாம் நம்முடைய அத்தாட்சிகளைக் கொடுத்(து கண்ணியமாக்கி வைத்)திருந்தோம்.

எனினும் அவன் (பாம்பு தன் சட்டையை விட்டு வெளியேறுவதைப் போல) அதிலிருந்து முற்றிலும் வெளியேறிவிட்டான். ஆகவே, சைத்தான் அவனைப் பின்தொடர்ந்து சென்றான்; (அவனுடைய சூழ்ச்சிக்குள் சிக்கி) அவன் வழிதவறி விட்டான்”. (குர்ஆன் 7:175)


‘நாம் எண்ணியிருந்தால் நம் அத்தாட்சிகளின் காரணமாக அவனை நாம் உயர்த்தியிருப்போம். எனினும் அவன் இவ்வுலக வாழ்க்கையை நிரந்தரம் என எண்ணி தன் சரீர இச்சையை பின்பற்றிவிட்டான். அவனுடைய உதாரணம் ஒரு நாயின் உதாரணத்தை ஒத்திருக்கிறது’ (குர் ஆன் 7:176).

இந்த வசனங்களின் மூலம் அல்லாஹ் கோடிட்டு காட்டுவது என்னவென்றால், மார்க்க அறிவில் சிறந்தவர்களும், மேதைகளும் கூட உலக இன்பங்களில் குறிப்பாக மண்ணாசை, பெண்ணாசை போன்றவற்றில் சிக்கி தங்கள் கவனத்தை சிதறடித்தால் அவர்கள் நல்லவர்களாக இருந்தாலும், நிச்சயமாக அது அவர்கள் கெட்டு வழிகேடர்களாக

மாறுவார்கள் .

மன மெய்யியல் 58

(கையில் இல்லை கையெழுத்து)



கையொப்பம் போடத் தெரிந்தவர்களையெல்லாம் நாம் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகக் கருதுகிறோம்.

செய்தித்தாள் ஒன்றில் ஒரு நிறுவனம் விளம்பரம் கொடுத்திருந்தது: "ஒரே மாதத்தில் எழுதப் படிக்கக் கற்றுத்தருகிறோம். விவரத்திற்குக் நீங்கள் கைப்பட எழுதுங்கள்!" (?)

ஒரு பள்ளியில் மாணவர்களுக்கு விடைத்தாளை விநியோகித்து விட்டு ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து “விடைத்தாளைத் தந்திருக்கிறேன் ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்'

ஒரு மாணவன் மட்டும் எழுந்து “என் தாளின் மீது ஏதோ நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். அது என்னவென்று புரியவில்லை?" என்றான்.

ஆசிரியர் அவன் விடைத்தாளை வாங்கிப்பார்த்து விட்டு "தெளிவான கையெழுத்தில் விடை எழுதுக என எழுதியிருக்கிறேன்' என்று விளக்கம் கொடுத்தார் (?)

கையெழுத்து, விடையைப் படிக்கும் முன்பே நம் விடைத தாள் நம்மைத் திருத்துபவருக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறது.

“என் கையெழுத்து அழகாக இல்லையே” என்று யாரும் கவலைப் படவேண்டியதில்லை. விழிப்புணர்வும், முயற்சியும் இருந்தால் ஒவ்வோர் எழுத்தையும் செம்மைப்படுத்தி, நம் கையெழுத்து அதிகப் புரிதலை உண்டாக்கும்படி செய்ய முடியும்.

இடக் கையால் எழுதப் பழகுவதும் கூட வலக் கையால் எழுதும்போது சிறப்பாக எழுத உதவும். எழுத்தாளர் சுஜாதா இரண்டு கைகளை தனித்தனியாகப் பயன்படுத்தி தனித்தனியாக எழுதப் பழகி இருக்கிறார்.

கையெழுத்து என்பது நம் எண்ணங்களை மட்டுமல்ல; மன நிலையையும் கூட வெளிப்படுத்துகிறது. கைகுலுக்கும் போது உள்ளங்களை மட்டுமல்ல. உள்ளமும் மென்மையானதா என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

சுகமான சூழலில் எழுதப்படும் போது அழகாக வருகிற எழுத்தே சோகமாக இருக்கும்போது பொலிவிழந்த விடுகிறது. இந்த காரணங்களால்தான் கையெழுத்து கட்டுரையை மன மெய்யியலில் சேர்த்திருக்கிறேன்.

எழுதும்போது எழுத்தை மட்டுமே கவனித்தால் அது மேம்பட வாய்ப்பு உண்டு கையெழுத்து என்பது கையில் இல்லை. அதனால்தான் இடக்கையில் நாம் நன்றாகப் பழகினால் வலக்கை எழுத்தைப் போலவே இருக்கும்.

உண்மையில் நாம் நமது கையினால் எழுதுவதால் அதன் பெயர் கையெழுத்து என்றாகிறது. ஆனால் அந்த கையெழுத்து, ஒவ்வொருவரின் மூளை இடும் கட்டளைப்படிதான் அமைகிறது என்கிறது விஞ்ஞானம் . இந்தக் கையெழுத்து இப்படித்தான் அமைய வேண்டும் என்பதை தீர்மானிப்பது ஒவ்வொருவரின் மூளைதானே தவிர கரங்கள் அல்ல , அதற்கு ஏற்ற வகையில்தான் கை செயல்படுகிறது.

கையை இழந்து ஒருவர் கால்களில் எழுத ஆரம்பித்தாலும் அவர்கள் எழுத்து ஏற்கெனவே கையால் எழுதிய எழுத்தைப் போலவே இருக்கும். இதனால்தான் கையெழுத்து நம் கையில் இல்லை மூளையில் பதிவான பதிவுகளில்தான் இருக்கிறது என்பதற்கு இதுவே ஆதாரமாகும் .

ஒருவர் எழுதும் கையெழுத்தை வைத்தும், கூட அவரது வாழ்க்கை முறையை, எதிர் காலத்தை துல்லியமாக அறிய முடியும் என்பதை மிகச் சிலரே தெரிந்து வைத்திருக்கிறார்கள். இந்த கலைக்கு ஆங்கிலத்தில் 'கிராபாலஜி' (Graphology) என்று பெயர்.

இந்த கையெழுத்து ஆராய்ச்சிக் கலை, பேப்பர் கண்டறியப்பட்ட காலத்திலேயே பிரபலமானது. கி.பி. 1782-ம் ஆண்டு இஸ்ரேல் நாட்டில் அன்னா கோரன் என்ற பெண்மணி, இந்தக் கையெழுத்து ஆராய்ச்சிக் கலை பற்றிய ஒரு நிறுவனத்தை நிறுவினார். இன்றும் அந்த நிறுவனம் இயங்கி வருகிறது.

ஒருவர் தங்களது கையெழுத்தை எந்த மொழியில் எழுதினாலும், அந்த எழுத்துகளின் வடிவங்களை வைத்து, அந்த நபரின் இயல்பான குணாதிசயங்களையும், அவரது எதிர்காலத்தையும் வெகு துல்லியமாக கண்டறிய முடியும் இவ்வாறு அவர்கள் எழுதும் நிலையை வைத்தே ஒருவரின் தலையெழுத்தை கூறிவிடுவதே இந்தக் கலையின் சிறப்பம்சம் என்கிறார்கள்.

ஓர் அலுவலகத்திற்கு வந்த புதிய வாடிக்கையாளர் ஓர் அதிகாரியின் மேசையின் மீது இருந்த குறிப்பைப் பார்த்து அசந்த போனார். ஏனென்றால் அது அவ்வளவு அழகான கையெழுத்துகளால் எழுதப்பட்டிருந்தது.

"இதை யார் எழுதியது?" என்றார் வாடிக்கையாளர் முக மகிழ்ச்சியுடன் கேட்டார்.

"நான்தான் எழுதினேன்" என்றார் அந்த அதிகாரி.

“இவ்வளவு அழகான எழுத்தால்தான் நீங்கள் இவ்வளவு பெரிய அதிகாரியாக ஆகியிருக்கிறீர்கள்" என்று பாராட்டினார்.

பிறகு "கீழே மிகவும் அசிங்கமாக ஒன்றும் புரியாமல் இரண்டு வரி எழுதியிருக்காங்களே திருஷ்டிப் பரிகாரம் மாதிரி அது யார் எழுதியது ?

“அவர்தான் என்னுடைய மேலதிகாரி" என்றார் அவர்.

கிராபாலஜி' (Graphology) கூறிய கருத்துக்கு எதிர்மறையான கருத்துகளும் தெரிவிக்கப்படுகிறது. ஒருவரின் கையெழுத்து வைத்து அவர்களின் வாழ்கை நிர்ணயிக்கப்படுகிறது என்பதெல்லாம் யூகம்தானே தவிர, உண்மை அல்ல. இது ஒரு மூடநம்பிக்கை.

கையெழுத்து நன்றாக இல்லாத யாரோ கிளப்பிவிட்ட புரளியாக இருக்கலாம்.

இன்னும் ஒரு நூறு இருநூறு வருடங்களில் நாம் கைகளினால் எழுதுவதற்கான வாய்ப்புகள் முற்றிலும் குறைந்துவிடும். பள்ளி முதல் கல்லூரி மற்றும் அதற்கு பின்னரும் கூட மென்பொருள் வழியே எழுதுவதுதான் நடைமுறையில் இருக்கும். காகிதம் மற்றும் பேனா போன்றவற்றை மியூசியமில் மட்டுமே காணும் சூழல் ஏற்படலாம்.

ஏற்கனவே கணினி மொழி அறியாதவர்கள் எழுத்தறிவற்றவர்களாக பார்க்கும் சூழல் உருவாகி வருகிறது. எனவே இனிவரும் காலங்களில் எல்லோருடைய கையெழுத்தும் நீங்கள் திரையில் படித்துக் கொண்டிருக்கிறீர்களே அதனை போன்றுதான் இருக்கும். அப்போது எப்படி தலையெழுத்து கையெழுத்தை பொருத்து அமையும்?!

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முதல் கையெழுத்துப் பிரதி மகாத்மா காந்தி அவர்களின் கையெழுத்து. அவர் கோட்சே என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இரண்டாவது, மூன்றாவது கையெடுத்துப் பிரதி பிரான்ஸ் பேரரசன் நெப்போலியன் அவரது காதலி ஜோசபைனுக்கு எழுதிய காதல் கடிதம். அந்த நெப்போலியனை தனித்தீவில் சிறை வைத்து ஆர்செனிக் விஷம் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து கொலை செய்யப்பட்டார் .

இந்த கையெழுத்துப் பிரதியில் அவர்கள் வாழ்ந்த வாழ்வும், மறைந்த செய்தியும் சொல்லுகிறதா ? நீங்கள் சொல்லுங்கள்

இப்போது கூறுங்கள் இது மூடநம்பிக்கை தானே ?

மன மெய்யியல் 59

(சாகும் கலை)



வாழ்வது மட்டுமல்ல; சாவதும் கூட ஒரு கலைதான்.

மரணத்தை எதிர்கொள்வது மிகப்பெரிய துணிவு. பலருக்கு அது வருவதில்லை. திடீரென வந்து விடுகின்ற மரணத்தைப் பற்றிப் பிரச்சினையில்லை. ஆனால், மெதுவாக நோய்வாய்ப்பட்டு உடல் சுருங்கி மரணம் நிகழும்பொழுது அது சாதாரணமானதாக இருப்பதில்லை.

மனமெய்யியலின்படி மனிதர்கள் ஒவ்வொருவரும் மரணத்தை எதிர்நோக்க தன்னை ஐந்து நிலைகளில் தயார்படுத்திக் கொள்கிறார்கள்.

1) முதலாவது மறுத்தல் (Denial) தனக்கு மரணம் வராது என்று மறுப்பது.

சிலர் தன் உடலைப் பரிசோதனை செய்துகொள்ளவே மறுப்பார்கள். சர்க்கரை வியாதிக்கான அத்தனை அறிகுறியும் இருப்பவர்கள் ஆரம்பத்தில் ரத்தப் பரிசோதனையைச் செய்து கொள்ள மறுப்பார்கள். தான் நன்றாக இருப்பதாகச் சாதிப்பார்கள் தன் குடும்பத்தில் யாருக்குமே இருந்ததில்லை என்று வலியுறுத்துவார்கள். தான் இனிப்பே சாப்பிடுவதில்லை என்று வாதிடுவார்கள்.

2) அடுத்த நிலை இரண்டாவது நிலை அது கோபம் (Anger).

ஒரு கட்டத்தில் தனக்கு மரணம் நிகழும் என்று தெரிந்தவுடன் அது கோபமாக மாறும். தன்னுடைய இந்த நிலைக்கு மற்றவர்கள்தான் காரணம் என்று அடுத்தவர்களைப் பழிக்குள்ளாக்குவார்கள். அவர் களைத் தூற்றுவார்கள். இன்னும் சொல்லப்போனால் ஆரோக்கியமாக இருப்பவர்கள் மீதெல்லாம் கூட கோபம் வரும். அடுத்தவர்களுக்கும் தனக்கு வந்திருக்கும் வியாதி வரவேண்டும் என்கிற எண்ணம்கூடச் சிலருக்கு ஏற்படும்.

3) மூன்றாவது பேரம் பேசுதல் (Bargaining)

இன்னும் கொஞ்ச நாள் வாழவேண்டும் என்ற ஆசை ஏற்படும். நிறைவேறாத கடமைகள் எல்லாம் கண்முன் வந்து பயமுறுத்தும் மரணத்தை எவ்வளவு தள்ளிப் போட முடியும் என்பதில் மனம் நிலைத்து நிற்கும்.

4) நான்காவது நிலை - சோர்வு (Depression)

இனி வேறு வழியில்லை என்ற எண்ணம் அளவற்ற சோர்வைத் தரும். வாழ்க்கை பிடிப்பற்றுப் போய்விடும். மரணத்திற்கு முன்பே பலர் நடைபிணமாக ஆகிவிடுவார்கள்.

5) ஐந்தாவது நிலை - அதுவே இறுதிக் கட்டம் - ஏற்றுக் கொள்ளுதல்

(Acceptance)

இந்நிலையில் மனம் மரணத்தைச் சந்திக்கத் தயாராகி விடுகிறது. ஆத்மா அழிவதில்லை என ஆன்மிகம் பேசியும், வாழ்க்கை நிலையற்றது எனத் தத்துவம் பேசியும், தன்னைக் காட்டிலும் குறைந்த வயதில் மரணமடைந்தவர்கள் குறித்து திருப்திப்பட்டும் மனத்தயாரிப்பு செய்துகொள்ள மனிதன் பக்குவப்பட்டு விடுகிறான்.

ஆனால், நபித்தோழர்கள் மரணத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்

அவர்கள் இவ்வுலக வாழ்வு நிரந்தரமில்லை. மறுமை வாழ்வே நிரந்தரமானது என்பதை உணர்ந்தார்கள். மரணத்தை நேசித்தார்கள்

'முஃதா' என்பது ஷாம் நாட்டின் பல்கா மாநிலத்தின் கீழ் பகுதியிலுள்ள ஓர் ஊர். இங்கிருந்து பைத்துல் முகத்தஸ், இரண்டு நாட்கள் நடக்கும் தொலைதூரத்தில் உள்ளது.

நபி (ஸல்) அவர்கள் புஸ்ராவின் மன்னருக்குக் கடிதம் ஒன்றை எழுதி அல்ஹாரிஸ் இப்னு உமைர் அல்அஸ்தி (ரழி) அவர்களிடம் கொடுத்தனுப்பினார்கள். ஆனால், போகும் வழியில் பல்கா மாநிலத்தின் கவர்னராக இருந்த ஷுரஹ்பீல் இப்னு அம்ரு அல்கஸ்ஸானி என்பவன் அவரைக் கைது செய்து கொன்று விட்டான்

தூதர்களைக் கொலை செய்வது அரசியல் குற்றங்களில் மிகக் கடுமையானதாகும். பகிரங்கமாகப் போருக்கு அழைப்பு விடுப்பதைவிட தூதரைக் கொலை செய்வது மிகக் கொடிய ஒன்றாக கருதப்பட்டது.

தனது தூதர் கொல்லப்பட்ட செய்தியை அறிந்தவுடன் நபி (ஸல்) பெரும் கவலைக்குள்ளானார்கள். 3000 வீரர்கள் கொண்ட பெரும் படை ஒன்றைத் தயார் செய்து அவர்களிடம் போரிட அனுப்பி வைத்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் இப்படைக்கு முதலாவதாக ஜைது இப்னு ஹாஸாவை (ரழி) தளபதியாக ஆக்கிவிட்டு 'ஜைது கொல்லப்பட்டால், ஜஅஃபர் தளபதியாக இருப்பார். ஜாஃபரும் கொல்லப் பட்டால் , அப்துல்லாஹ் இப்னு ரவாஹா தளபதியாக இருப்பார். அவரும் கொல்லபட்டால் , உங்களுகிடையே ஆலோசனை செய்து அடுத்த தளபதியை தேர்ந்தெடுங்கள் "என்று கூறி வெள்ளை நிறக் கொடியை ஜைது இப்னு ஹாஸா (ரழி) கையில் கொடுத்தார்கள். (ஸஹீஹுல் புகாரி)

இதை பார்த்துக்கொண்டிருந்த நும்மான் என்ற யூதர் "இதற்கு முன் உண்டான நபிமார்கள் யாரேனும் ஒருவர் கொல்லப்படுவார் என்று கூறினால் அவர் கொல்லப்படுவது உறுதி எனவே உங்கள் நபி கூறியவாறு நீங்களும் கொல்லப்படுவது உறுதி " என்று ஹஜ்ரத் ஜைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களிடம் கூறினார் .

அதற்கு ஜைத் (ரலி) அவர்கள் எப்போது நாயகத்தின் கரத்தை நான் பிடிதேனோ அப்போதே அவர்கள் சொல்லும் அனைத்தும் உண்மை என்பதை நான் நம்பிக்கை கொண்டவன். நீங்கள் என்ன புதிதாக கண்டுபிடித்துவிட்டீர்கள்? என்றார்கள் .

அந்த யூதர், ' கொல்லப்படுவோம் என்று தெரிந்துமா போருக்கு செல்கிறீர்கள் ' என்றார் .

ஜைத் (ரலி) "ஆம். இதை விட வேறு என்ன சிறப்பு எமக்கு வேண்டும் ? " என்று சொல்லிக் கொண்டே போருக்கு தயாரானார்கள் .

அனைவர்களும் போருக்கு சென்று விட்டார்கள். மறுநாள் வெள்ளிக்கிழமை அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜும்ஆ பேருரை நிகழ்த்துகிறார்கள்.மக்களை பார்க்கும்போது அங்கே அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் அமர்திருக்கிறார்கள் .

தொழுகை முடிந்தவுடன் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை அழைத்து போருக்கு செல்லவில்லையா ? என்று கேட்கிறார்கள்.

" நாயகமே ! என்னிடம் வேகமாக செல்லும் குதிரை இருக்கிறது .நான் அவர்களோடு சென்று சேர்ந்துவிடுவேன் .எனக்கு பின் இன்னொரு தளபதி என்று நீங்கள் சொன்னதிலிருந்து இப்போரில் நான் ஷஹீத் ஆகிவிடுவேன் என்று உறுதியாக நம்புகிறேன். எனவே கடைசியாக ஒருமுறை உங்கள் பின் நின்று தொழு வேண்டும் என்ற ஆவலில் இருந்துவிட்டேன் நாயகமே" என்று கூறினார்கள் .

நாயகம் ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "என்ன காரியம் செய்து விட்டீர்கள் ரவாஹா..! எப்போது போருக்கு செல்லுங்கள் என்று கூறினேனோ அப்போதே சென்றிருக்க வேண்டாமா? என்று கேட்டு அனுப்பி வைக்கிறார்கள் .

முஸ்லிம்கள் 3 ஆயிரம் பேர் எதிரிகள் 2 லட்சம் பேர் அன்றைய வல்லரசான ரோமானியப் பேரரசு இப்படிப்பட்ட மிகப்பெரும் படையை திரட்டி இருந்தது .

ஸஹாபா பெருமக்கள் ஆலோசனை செய்தார்கள் .

எதிரிகளின் பலம் தெரியாமல் நாயகம் (ஸல்) அவர்கள் நம்முடன் குறைந்த வீரர்களை அனுப்பி இருக்கலாம். இன்னும் சில வீரர்களை நாம் கேட்போம் என்று ஆலோசிக்கிறார்கள் .

காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் உணர்ச்சிகரமான ஒரு உரையை மக்கள் முன் நிகழ்த்துகிறார்கள் .

"அல்லாஹ்வும் ரசூலும் நம்மை சோதிக்கிறார்கள் . வெற்றி தோல்வியை பற்றி சிந்திப்பது நமது கடமை அல்ல .'போரிடுங்கள்' என்று சொன்னால் போரிட வேண்டும். அதுதான் நமது கடமை . இறைவனுக்காக

போரிடுகிறோம். உண்மைக்காக போரிடுகிறோம் .வெற்றியும் தோல்வியும் இறைவனின் கையிலல்லவா இருக்கிறது" என்று கூறினார்கள்

அதன் பிறகு நடந்த போரை மதீனாவில் இருந்து கொண்டு நாயகம் ஸல்லால்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நேரடியாக கண் முன்னே நடப்பதை போல (கிட்டத்தட்ட பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் நடக்கும் போரை) வர்ணனை செய்கிறார்கள்

" இதோ ஜைத் (ரலி) அவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள்.அவர்களின் உயிர் தங்க கட்டிலில் வைத்து வானவர்கள் தூக்கி செல்கிறார்கள் .

இப்போது ஜஅஃபர் (ரலி) அவர்களின் கரத்தில் இஸ்லாமிய கொடி இருக்கிறது அவர்களும் கொல்லப்பட்டுவிட்டார்கள். அவர்களின் உயிரும் தங்க கட்டிலில் வைத்து வானவர்கள் தூக்கி செல்கிறார்கள் .

அடுத்து இஸ்லாமிய கொடி ரவாஹா (ரலி) அவர்களின் கரத்தில் இருக்கிறது அவர்களும் கொல்லப்பட்டு விட்டார்கள் அவர்களின் உயிரும் தங்க கட்டிலில் வைத்து வானவர்கள் தூக்கி செல்கிறார்கள் . ஆனால் அவர்களின் கட்டிலின் ஒரு முனை மட்டும் வளைந்து இருக்கிறது .

அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் தவறு செய்யவில்லை .கடைசியாக ஒரே ஒரு முறை நாயகத்தின் பின் நின்று தொழ வேண்டும் என்ற ஆசையினால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்ன உடனே போருக்கு செல்லவில்லை .அதன் காரணத்தினால் அவர்களின் கட்டிலின் ஒரு முனை மட்டும் வளைந்து இருக்கிறது

பிறகு, தளபதியாக நியமிக்கப்படாமலேயே காலித் இப்னு வலீத் அதைக் கையிலெடுத்துள்ளார்.அவருக்கு வெற்றியளிக்கப்பட்டு விட்டது. வீர மரணத்தினால் பெரும் பேற்றினை அடைந்து விட்டார்கள். ஷஹாதத் எனும் பெரும்பேறு அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. அதைவிட அவர்கள் நம்முடன் இருப்பது மகிழ்ச்சிக்குரியதல்ல …”

இதைக் கூறியபோது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

Rahmath Rajakumaran

இரண்டாம் படைத்தளபதி

அடுத்து இஸ்லாமியப் படையின் கொடியை ஜஅஃபர் (ரழி) கையில் எடுத்துக் கொண்டு மின்னலாகப் போர் புரிந்தார். போர் உச்சக்கட்டத்தை அடைந்தவுடன் தனது ‘ஷக்ரா’ என்ற குதிரையிலிருந்து கீழே இறங்கி, படைக்குள் புகுந்து எதிரிகளின் தலைகளை வாளால் சீவலானார்.

அவரது வலது கை வெட்டப்பட்டு விட்டது. கொடியை இடது கையில் பிடித்தார். இடது கையும் வெட்டப்படவே புஜத்தால் பிடித்தார். பின்பு எதிரி ஒருவனால் கொல்லப்பட்டு வீரமரணம் எய்தினார். அவரை ரோமைச் சேர்ந்த எதிரி ஒருவன் இரண்டாக பிளந்து விட்டான் என்று வரலாற்றில் கூறப்படுகிறது.

அல்லாஹ் அவர்களுக்கு வெட்டப்பட்ட இரு கரங்களுக்குப் பகரமாக சுவனத்தில் இரண்டு இறக்கைகளை வழங்கினான். அதன் மூலமாக அவர்கள் தாங்கள் நாடிய இடமெல்லாம் சுற்றித் திரிகிறார்கள். இதனை முன்னிட்டே இவர்களுக்கு ‘ஜஅஃபர் அத்தய்யார்’ (பறக்கும் ஜஅஃபர்), ‘ஜஅஃபர் துல்ஜனாஹைன்’ (இரு இறக்கைகளை உடைய ஜஅஃபர்) என்றும் கூறப்படுகிறது.

இப்னு உமர் (ரழி) அறிவிக்கிறார்கள்: “வெட்டப்பட்டுக் கிடந்த ஜஅஃபரை நான் பார்த்தேன். அவரது உடம்பில் ஈட்டி மற்றும் வாளின் 50 காயங்கள் இருக்கக் கண்டேன். அதில் எந்தக் காயமும் உடம்பின் பிற்பகுதியில் இல்லை.” (ஸஹீஹுல் புகாரி)

மற்றொரு அறிவிப்பில் இப்னு உமர் (ரழி) கூறியதாக வருவதாவது: “நானும் ‘முஃதா’ போரில் கலந்து கொண்டேன். போர் முடிந்த பிறகு ஜஅஃபர் இப்னு அபீதாலிப் (ரழி) அவர்களின் உடலைத் தேடினோம். அப்போது கொல்லப்பட்டவர்களில் இருந்த அவர் உடலில் 90க்கும் மேற்பட்ட அம்பு மற்றும் ஈட்டிகளின் காயங்கள் இருந்தன.” மற்றொரு வழியாக வரும் இதே அறிவிப்பில் “அந்த அனைத்துக் காயங்களும் அவரது உடலின் முன்பகுதியில்தான் இருந்தன” என்று வந்துள்ளது. (ஸஹீஹுல் புகாரி)

மன மெய்யியல் 60

(பலவீனமே பலம்)



சிறுவன் ஒருவன் ஜூடோ பயில விரும்பினான். அவனுக்கோ ஒரு விபத்தினால் இடது கை போய்விட்டது. எனினும் இந்தக் குறையைப் பொருட்படுத்தாமல், சீனாவில் குரு ஒருவர் அவனுக்குப் பயிற்சி அளிக்க ஒப்புக் கொண்டார்.

தினமும் பயிற்சி அளித்தார் குரு. ஆனால் ஒரே ஒரு குத்து வித்தை தான் சொல்லிக் கொடுத்தார், நான்கைந்து மாதங்கள் சென்றன. அப்போதும் அதே பயிற்சிதான். சிறுவனுக்கோ ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் தொடர்ந்து பயிற்சி மேற்கொண்டான்.

ஒரு நாள் சிறுவன் குருவைக் கேட்டே விட்டான்.அவரும், "இந்த ஒரு குத்து போதும் உனக்கு" என்று சொல்லிவிட்டார்.

நாட்கள் கடந்தன. குரு சிறுவனைப் போட்டிக்கு அனுப்பினார். ஒரு கையுடன் மட்டும் வந்த சிறுவனைப் பார்த்து பலரும் அற்பமாய் எண்ணினர்.

ஆனால், அவன் தன்னை விட பலசாலிகளை எல்லாம் ஆக்ரோஷமாய் எதிர் கொண்டு அவர்களை யெல்லாம் வீழ்த்தி விட்டான். எல்லோருக்கும் ஆச்சர்யம். சிறுவனுக்கும்.

"எப்படி குருவே என்னால் ஒருகையை வைத்துக் கொண்டு, ஒரே ஒரு குத்துப் பயிற்சியை மட்டும் கற்று வெற்றி பெற முடிந்தது?" என்று கேட்டான்.

குரு சொன்னார்:

"இரண்டே காரணங்கள் தான். ஒன்று, நீ பயிற்சி செய்தது ஜூடோவிலேயே மிகவும் கடினமான குத்து.

இரண்டு, உன் பலமான குத்தை எதிராளி தடுக்க வேண்டும் என்றால், குத்தக் கூடிய உனது இடது கையை எதிராளி பிடித்து மடக்க வேண்டும். உன்னிடம் அது இல்லை. எது உனக்கு பலவீனமோ அதுவே உனக்கு பலம் "

நண்பர் ஒருவர் : "உங்களுடைய பலமாக எதையும், உங்களுடைய பலவீனமாக எதையும் கருதுகிறீர்கள்? "

கவனமாக படியுங்கள்: "என் பலவீனம், எது என்பதை நான் நன்கு அறிவேன் என்பதும் ;அதை யாரிடமும் நான் சொல்லமாட்டேன் என்பதும் என் பலம் "

"அப்போ பலவீனம்?"

"அதான் சொன்னேனே?"

"சொல்லலயே!"


"சொல்ல மாட்டேன்னு சொன்னேனே"

"முயல் ஆமையை ஜெயிக்குமா ? ஆமை முயலை ஜெயிக்குமா?"

"முயலாமையை நீ ஜெயித்தால் தான் வெற்றி உனக்கு

மன மெய்யியல் 61

(மூன்று திருடர்கள்)



பணக்காரன் ஒருவன் காட்டு வழியாகச் சென்றுகொண்டிருந்தான் திடீரென்று மூன்று திருடர்கள் வந்து அவனைச் சுற்றி வளைத்து அவனிடம் இருந்தவற்றையெல்லாம் பறித்துக் கொண்டனர். அதற்குப் பிறகு அவர்களில் ஒருவன் “இவனை விட்டு வைப்பதால் என்ன லாபம்? கொன்று விடுவோம்" என்று கூறி அவனை வெட்டுவதற்காக அருகில் சென்றான்

இரண்டாவது திருடன் “இவனை வெட்டுவதால் எந்தப் பயனும் இல்லை. கயிற்றினால் கட்டி இங்கேயே விட்டுவிடலாம். அப்போது இவனால் காவல்துறைக்குத் தகவல் தர முடியாது” என்றான்.

அப்படியே அந்தத் திருடர்கள் அவனை நன்றாகக் கட்டிப் போட்டுவிட்டு அந்த இடத்திலிருந்து சென்றார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு மூன்றாவது திருடன் தனியாக அந்த இடத்திற்குத் திரும்பி வந்தான் பணக்காரனின் அருகில் சென்று,

"உனக்கு மிகவும் துன்பம் ஏற்பட்டுவிட்டது அல்லவா? நான் உன் கட்டை அவிழ்த்து விடுகிறேன்” என்று கூறிக் கட்டை அவிழ்த்து விட்டான். பிறகு பணக்காரனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு, அவனுக்கு வழிகாட்டியவாறே சென்றான். நெடுஞ்சாலை வந்ததும் “நீ இந்த வழியாகச் சென்றால் சுலபமாக உன் வீட்டை அடைந்து விடலாம்" என்றான்.

“அது எப்படி ஐயா, நீங்களும் என்னுடன் வாருங்கள். எனக்கு எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறீர்கள்” என்றான் பணக்காரன்.

அதற்கு அவன் "நான் அங்கு வர முடியாது. வந்தால் காவல்துறையினரிடம் பிடிபட்டு விடுவேன்” என்று கூறிச் சென்று விட்டான்.

"இவனை விட்டு வைப்பதால் என்ன லாபம்? இவனைக் கொன்று விடு" முதல் திருடன்தான் தமோ குணம் - தமோ குணத்தால் அழிவு உண்டாகிறது.

ரஜோகுணம் - இரண்டாவது திருடனைப்போல மனிதனை

உலக வாழ்க்கையில் கட்டி வைக்கிறது.

சத்வகுணம் மூன்றாவது குணம் - அதுவே இறை நெறியைக் காட்டுகிறது. கருணை, தர்மம், பக்தி முதலானவை சத்வ குணத்திலிருந்து தான் வருகின்றன. - என்று திருடர்கள் கதையைக் கூறி ராமகிருஷ்ண பரமஹம்சர் தாமச - ராஜச - சத்வ குணங்களைப் பற்றி விளக்குகிறார்.

ஒரு மனத்தின் மூன்று குணங்களை மூன்று திருடர்களாக உருவகப்படுத்துவதை, இஸ்லாம் சற்று ஆழமாக விவரிவாக ஒரு மனம் - அதற்கு ஏழு குணங்களாக (நஃப்ஸ்) ஆக பாவிக்கிறது

"நஃப்ஸின் 7 வகைகள் :

1) அம்மாரா 2) லவ்வாமா 3) முல்ஹிமா 4) முத்மயின்னா 5) ராளியா

6) மர்ளிய்யா 7) காமிலா

1) அம்மாராவின் தன்மைகள்: கஞ்சத்தனம், மனக்கோட்டை, பேராசை, பெருமை, பொறாமை, விளம்பர மோகம், மதிமயக்கம்.

2) லவ்வாமாவின் தன்மைகள்: பச்சாதாபம், சிந்தனை சுயநலம், தற்பெருமை, எடுத்துக் காட்டுதல்.

3) முல்ஹிமாவின் தன்மைகள்: தர்மசிந்தை, உள்ளதைக் கொண்டு போதுமாக்குதல், கல்வி, பாவமன்னிப்பு கோருதல், பொறுமை,

செவா உணர்வு.

4) முத்மயின்னாவின் தன்மைகள்: தவக்குல், சகிப்புத்தன்மை, வணக்க வழிபாடு, நன்றியுணர்வு, திருப்தி.

5) ராளியாவின் தன்மைகள்: பற்றற்றவாழ்க்கை, மனத்தூய்மை, பேணுதல், தேவையற்றதை விட்டும் ஒதுங்கிக்கொள்ளுதல், வாக்குறுதியை காப்பற்றுதல்.

6) மர்ளியாவின் தன்மைகள்: நற்குணம், அல்லாஹ்வுக்காகவே வாழ்வது, கிருபை காட்டுதல், அல்லாஹ்வின் அன்பை அடைய முயலுதல், அல்லாஹ்வின்ஆற்றல் குறித்து ஆய்வு செய்தல், அல்லாஹ்வின் களாவை முழுசாகப் பொறுந்திக் கொள்ளுதல்.

7) காமிலாவின் தன்மைகள்: அம்மாராவில் உள்ள தன்மைகளை விட்டு முற்றும் நீக்கம் பெற்று,

லவ்வாமாவிலுள்ள சுயநலம் தற்பெருமை, எடுத்துக் காட்டுதல் என்ற விஷயங்களை விட்டும் நீங்கி பச்சாதாபம், சிந்தனை,

முல்ஹிமாவில் உள்ள தர்மசிந்தை, உள்ளத்தைக் கொண்டு போதுமாக்குதல், கல்வி, பாவமன்னிப்பு கோருதல், பொறுமை, செவா உணர்வு.

முத்மயின்னாவில் உள்ள தவக்குல் சகிப்புத்தன்மை, வணக்கவழிபாடு, நன்றியுணர்வு, திருப்தி.

ராளியாவில் உள்ள பற்ற வாழ்க்கை, மனத்தூய்மை பேணுதல், தேவையற்றதை விட்டும் ஒதுங்கிக் கொள்ளுதல், வாக்குறுதியை காப்பற்றுதல்.

மர்ளியாவிலுள்ள நற்குணம், அல்லாஹ்வுக்காகவே வாழ்வது, கிருபை காட்டுதல், அல்லாஹ்வின் அண்மையை அடைய முயலுதல். அல்லாஹ்வின்ஆற்றல் குறித்து ஆய்வு செய்தல், அல்லாஹ்வின் களாவை முழுசாக பொருந்திக் கொள்ளுதல்.

இவ்வாறு நப்ஸின் முந்திய ஆறு வகைகளையும் கடந்து, நப்ஸூடன் யுத்தம் செய்து, வெற்றி கொண்டு காமிலா என்ற ஏழாவது நப்ஸின் தன்மைகளை முழுமையாக அடைந்து கொண்டவர்கள் தான் குதுபுக்கள் (ஹௌதுகள்) முக்தார்கள், அவ்த்தாதுகள், அன்வார்கள், உரஃபாக்கள், அக்பார்கள், புதலாக்கள், நுஜபாக்கள், நுகபாக்கள் எனும் அவ்லியாக்கள்.

மன மெய்யியல் 62

(ஒப்பந்த நியதி)



நான்கு திருடர்கள் கூட்டாக பொன்னும் பொருளும் திருக்கொண்டு வந்தார்கள். அவைகள் அனைத்தையும் ஒரு நோண்டியில் போட்டு நிரப்பி வைத்தார்கள் அதைப் பத்திரமாக ஓர் இடத்தில் வைக்க ஆசைப்பட்டார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வோர் இடந்தை சொன்னார்கள் ஒருவர் கூட மற்றொருர் யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை ஏனெனில் ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லாமல் இருந்தனர்.

கடைசியாக நால்வரில் ஒருவன், நாம் வழக்கமாகம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோமே, ஒரு கிழவி வீட்டில் அவளிடம் அதைக் கொடுத்து லைப்போம் நல்ல கிழவி. பத்திரமாகக் காப்பாற்றி வைப்பாள். நாம் நால்வரும் ஒன்றாகச் சேர்ந்து போய் கேட்டால் மட்டுமே தோண்டியைக் கொடுக்கச் சொல்லி அவளிடம் சொல்லுவோம்" என்றான்.

மற்ற மூலரும் நாலாமலன் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். நால்வரும் பாட்டியிடம் போனார்கள். "பாட்டி, நாங்கள் நால்வரும் பல நாடகளாக உழைத்துப் பாடுபட்டுக் கொஞ்சம் பொருள் சேர்த்திருக்கிறோம். அதை இந்தத் தோண்டியில் போட்டு வைத்திருக்கிறோம்.

இன்னும் சிறிது காலம் இந்த ஊரில் தங்க வேண்டியுள்ளது. அதற்குப் பிறகு இந்த ஊரை விட்டு நாங்கள் சென்று விடுவோம். அதுவரை இந்தத் தோண்டியைப் பத்திரமாகக் காப்பாற்றி வைத்திருந்து நாங்கள் நால்வரும் வந்து கேட்கும் போது கொடுக்கவும்.

ஆனால் ஒரு நிபந்தனை நாங்கள் நால்வரும் வந்து கேட்டால் தான் நீ இந்தத் தோண்டியைத் தர வேண்டும் தனியாக யார் வந்து கேட்டாலும் நீ கொடுக்கக் கூடாது ஏனென்றால் இதில் உள்ள பொருள் அனைத்தும் எங்கள் நால்வருக்கும் சொந்தம்' என்றார்கள்.

பாட்டியும் தோண்டியை வாங்கி வைத்துக் கொண்டு அவர்கள் சொன்னவாறே நால்வரும் வந்து கேட்கும்போது தோண்டியைத் தருவதாகக் கூறினாள்,

சில நாட்கள் சென்றன.

ஒரு நாள் பாட்டி வீட்டில் நால்வரும் சாப்பிட்டு விட்டுச் சற்று தூரத்தில் இருந்த ஒரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது அந்த வழியாக மோர் விற்கும் பெண்மணி ஒருத்தி மோர் பானையுடன் வந்தாள். அவளைப் பாத்த்தும் திருடர்களில் ஒருவன், "அண்ணே தாகமாக இருக்கிறது. மோர் சாப்பிடலாமா' என்று கேட்டான்.

மற்றவர்கள் சரி என்று கூறவே,மோர்க்காரியைக் கூப்பிட்டு ஆளுக்கு ஒரு குவளை வாங்கிச் சாப்பிட்டனர். அண்ணே, மோர் நன்றாக இருக்கிறது. இந்த அம்மாளிடம் இருக்கும் மொத்த மோரையும் வாங்கி வைத்துக் கொண்டால், தாகம் எடுக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கலாம்" என்றான் ஒருவன், அது சரி, மொத்த மோரையும் வாங்குவதற்கு நம்மிடம் பானை எதுவும் இல்லையே"

என்றான்

ஒருவன் "ஏன் நாம் வழங்கமாகச் சாப்பிடும் பாட்டியிடம் ஒரு தோண்டி வாங்கி வரச் சொல்லுவோம்' என்று சொல்லி மற்றொரு திருடன் தன் பக்கதில் இருந்த திருடனிடம், "நீ போய்ப் பாட்டியிடம் ஒரு தோண்டி வாங்கி வா" என்றான்.

பாட்டி வீட்டிற்குச் சென்ற திருடனின் மனதில் அந்த நொடியில் ஒரு சூழ்ச்சி தோன்றியது. பாட்டியிடம், "பாட்டி நாங்கள் உன்னிடம் கொடுத்து வைத்தோமே, அந்தத் தோண்டியை வாங்கி வரச் சொன்னார்கள்" என்றான்..

"உன்னிடம் எப்படித் தர முடியும்? நீங்கள் நால்வரும் வந்து கேட்டால், நானே கொடுக்கச் சொன்னீர்கள். இப்போது நீ மட்டும் தனியாக வந்து கேட்கிறாயே" என்றாள் பாட்டி.

"என் பேச்சில் நம்பிக்கையில்லையா பாட்டி ? அதோ அந்த மரத்தடியில் தான் எங்கள் நண்பர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். நீ வேண்டுமானால் கொஞ்சம் வெளியே வா. அவர்களையே சொல்லச் சொல்கிறேன்" என்றான் அந்தத் திருடன்

பாட்டி குடிசைக்கு வெளியே வந்தாள்.

திருடன் மரத்தடியில் உட்கார்ந்திருக்கும் மூன்று திருடர்களைப் பார்த்து, "பாட்டி தர மாட்டேனென்கிறாள்" என்று உரக்கக்

கத்தினான்.

மரத்தடியில் உட்கார்ந்திருந்த மூவரும் ''அவனிடம் கொடுத்தனுப்பு பாட்டி" என்றார்கள்,

பாட்டி, "தோண்டியா?" என்று கேட்டாள்.

"ஆமாம் பாட்டி தோண்டிதான். சீக்கிரம் கொடுத்தனுப்பு" என்று மூவரும் பாட்டிக்குக் கேட்கும் படியாகக் கத்தினார்கள்.

பாட்டி உள்ளே சென்று பொன்னும் பொருளும் அடங்கிய தோண்டியைக் கொண்டு வந்து ஏமாற்றுக்காரத் திருடனிடம் கொடுத்தாள்.

தோண்டியை வாங்கிக்கொண்ட ஏமாற்றுக்காரத் திருடன் வேறு வழியாக ஓடியே போய் விட்டான்.

வெகுநேரமாகியும் அனுப்பிய ஆள் வராததால் சந்தேகமடைந்த மற்ற மூவரும் பாட்டியின் வீட்டுக்கு வந்தார்கள் 'எங்கே அவன்"? என்று பாட்டியிடம் கேட்டார்கள்.

*அவன் அப்போதே தோண்டியை வாங்கிக் கொண்டு போய் விட்டானே!" என்றாள் பாட்டி

"எந்தத் தோண்டி?' என்றான் மூவரில் ஒருவன்.

"ஏன்? நீங்கள் என்னிடம் கொடுத்து வைத்த தோண்டியைத்தான் வாங்கிக் கொண்டு போனான்' என்றாள் பாட்டி.

இதைக் கேட்டதும் திருடர்கள் மூவரும் பாட்டியை கோபத்துடன் அதெப்படி நீ அவனிடம் தோண்டியைக் கொடுக்கலாம்? நால்வரும் ஒன்றாக வந்து கேட்டால் தானே நீ கொடுக்க வேண்டும். இப்படி எங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டாயே! அதனால் இந்த நஷ்டத்தை நீதான் ஈடு செய்ய வேண்டும்" என்று கூச்சல் போட்டனர்.

பாட்டி அதற்கு மறுக்கவே அவளை நீதிபதியிடம் அழைத்துச் சென்று முறையிட்டனர்.

வழக்கைக் கேட்ட நீதிபதி, 'பாட்டி செய்தது தான் தவறு. ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்திற்கு மாறாக ஒருவனிடம் தோண்டியைக் கொடுத்ததால், அவள் தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும்" என்று தீர்ப்பளித்தார்.

வழிநெடுக புலம்பியபடியே பாட்டி நடக்க, வழியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனான மரியாதை இராமன் அழுது கொண்டே வரும் பாட்டியிடம் நடந்ததைக் கேட்டறிந்தான். நடந்தவை முழுவதையும் கேட்டறிந்த மரியாதை இராமன் 'இது என்ன அநியாயமான தீர்ப்பு, இது சரியல்ல" என்று தனது கருத்தை தெரிவித்தான்...

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அரசாங்க சேவகர்கள் மன்னரிடம் அப்படியே இந்தச் செய்தியைத் தெரிவித்துவிட்டனர்.

அரசன் மரியாதை இராமனை அழைத்து 'தமது அரசவையில் கொடுக்கப்பட்ட தீர்ப்பையே நீ விமர்சனம் செய்தாயாமே! சரி நீ தீர்ப்பு சொல்லியிருந்தால் இந்த வழக்கில் என்ன தீர்ப்பு சொல்லியிருப்பாய்?" என்று கேட்டார்-

"அரசே, நான்கு பேரும் ஒன்றாக வந்து கேட்டால் தானே பாட்டி அந்தத் தோண்டியைக் கொடுக்க வேண்டும். இதுதானே ஒப்பந்தம் ? ஆனால் இப்பொழுது மூன்று பேர் தானே வந்து தோண்டியைக் கேட்கிறார்கள். இவர்கள் மூவரும் போய் நாலாவது ஆசாமியையும் தம்முடன் கூட்டிக் கொண்டு வரட்டும். அப்பொழுது பாட்டி நிச்சயம் அவர்கள் கொடுத்த தோண்டியைத் திரும்பக் கொடுத்து விடுவாள்' என்றான்.

சிறுவன் மரியாதை ராமன் அளித்த தீர்பபை கேட்டு மன்னர் மிகவும் வியந்து போனார். ராமனை அப்பொழுதே அரசவை நீதிபதியாக நியமித்தார்.

ஒப்பந்தப் பிரச்சனைக்கு தீர்வு அந்த ஒப்பந்தத்திலேயே இருக்கும் என்பது ஒப்பந்த நியதி !

ஹுதைபியா உடன்படிக்கை ஒப்பந்தத்தில் இணை வைப்பவர்களான குறைஷியர்கள் " குறைஷிகளில் யாராவது தன் பாதுகாவலரான நெருங்கிய உறவினரின் அனுமதி இன்றி தப்பித்து, முஹம்மதிடம் வந்து சேர்ந்தால் முஹம்மது அவரை குறைஷிகளிடம் திருப்பி அனுப்பி விட வேண்டும். ஆனால் முஹம்மதிடம் உள்ளவர்கள் யாராவது தப்பித்து குறைஷிகளிடம் வந்துவிட்டால், அவர் முஹம்மதிடம் திருப்பி அனுப்ப மாட்டார் " என்று அநியாயமாக குரைஷியர்களுக்கு சாதகமாக ஒப்பந்தம் போட்டனர்.

அமைதி விரும்பும் நபி (ஸல்) அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

பின்பு முஸ்லிமான சில பெண்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவில் உள்ள முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டனர். அவர்களின் உறவினர்கள் ஹுதைபியா உடன்படிக்கையின் படி அவர்களை தங்களிடம் திருப்பி அனுப்புமாறு கேட்டுக் கொண்டனர்.

"ஒப்பந்தத்தில் ஆண் என்ற சொல்லையே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. எனவே பெண்கள் இதில் கட்டுப்பட மாட்டார்கள் என்று காரணம் காட்டி நபியவர்கள் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்கள்.

மேலும் அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்:

ஈமான் கொண்டவர்களே! முஃமினான பெண்கள் ஹிஜ்ரத் செய்து (நாடு துறந்தவர்களாக) உங்களிடம் வந்தால், அவர்களை நீங்கள் பரிசோதித்துக் கொள்ளுங்கள்; அல்லாஹ் அவர்கள் ஈமானை நன்கறிந்தவன்;

எனவே அவர்கள் முஃமினான (பெண்கள்) என நீங்கள் அறிந்தால், காஃபிர்களிடம் அவர்களைத் திருப்பியனுப்பி விடாதீர்கள்; ஏனெனில், அந்த பெண்கள் அந்த ஆண்களுக்கு அனுமதிக்கப்பட்டவர்களில்லை. அந்த ஆண்கள் இந்தப் பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டவர்களில்லை. (ஆனால், இப் பெண்களுக்காக) அவர்கள் செலவு செய்திருந்ததை அவர்களுக்குக் கொடுத்து விடுங்கள்;

அன்றியும் நீங்கள் அப்பெண்களுக்குரிய மஹரை கொடுத்து அவர்களை விவாகம் செய்து கொள்வது உங்கள் மீது குற்றமில்லை;


மேலும் நிராகரித்துக் கொண்டிருக்கும் பெண்களின் விவாக பந்தத்தை நீங்கள் பற்றிப்பிடித்துக் கொள்ள வேண்டாம்; அன்றியும், நீங்கள் செலவு செய்திருந்ததை (அவர்கள் போய்ச் சேருவோரிடம்) கேளுங்கள்; (அவ்வாறே ஈமான் கொண்டு உங்களிடம் வந்து விட்டோருக்காகத்) தாங்கள் செலவு செய்ததை அவர்கள் (உங்களிடம்) கேட்கலாம் -

இதுவே அல்லாஹ்வுடைய கட்டளையாகும்; உங்களிடையே அவன் (இவ்வாறே) தீர்ப்பு வழங்குகிறான் - மேலும், அல்லாஹ் நன்கறிந்தவன்; ஞானம் மிக்கவன். (அல்குர்ஆன் : 60:10)

ஒப்பந்தப் பிரச்சனைக்கு தீர்வு அந்த ஒப்பந்தத்திலேயே இருக்கும் என்பது ஒப்பந்த நியதி ! நீதிமன்றங்கள் அநேக வழக்குகள் ஒப்பந்தத்தில் உள்ள சிறிய வார்த்தைகளை உன்னிப்பாக கவனித்து அவ்வழக்கை வெற்றி பெறச் செய்கிறார்கள்.

மன மெய்யியல் 63

(கொடுப்பது)



ரவீந்திரநாத் தாகூர் தன்னுடைய கீதாஞ்சலியில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்

நாம் வீதியில் நின்றுகொண்டிருந்தபோது, தேவாதி தேவன் வலம் வந்தான்.அவன் எல்லோரிடமும் கைகளை ஏந்திக்கொண்டே வலம் வந்தான். நான் என் பைக்குள் கையை விட்டேன். அதில் கொஞ்சம் தானியங்கள் இருந்தன. அவற்றில் இரண்டு மணிகளை மட்டும் அவன் கைகளில் போட்டுவிட்டு, மீதமிருந்த தானியங்களை என் பைகளில் போட்டேன்.

அப்படி அவனுக்கு போடுகிறபோது கூட அந்த இரண்டு தானிய மணிகளைக் கொடுக்க வேண்டி இருக்கிறதே என்ற சந்தேகத்தோடு அவற்றைப் போட்டேன். அவன் சிரித்துக் கொண்டே சென்று விட்டான்.

அவன் சென்றபிறகு நான் என் கால்சட்டைப் பைக்குள் கையை விட்டு மணிகளை வெளியில் எடுத்தேன். அதில் இரண்டு மணிகள் மட்டுமே தங்க மணிகளாக மாறி இருந்தன !

அப்போது நான் நினைத்துக் கொண்டேன். கையிலிருந்த அனைத்துத் தானியங்களையும் அவனிடம் போட்டிருக்கக் கூடாதா என்று.

தாகூரின் இந்தக் கவிதையும், குல்ஜிப் உடைய கூற்றும் ஒத்துப்

போவதைக் காணலாம்.

"நீ எதைத் தருகிறாயோ அதுதான் உன்னுடையது" என்று குல்ஜிப் குறிப்பிடுகிறார்.

எந்த மணிகளைத் தந்தாரோ அந்த மணிகள் மட்டுமே தங்க மணிகளாக மாறி இருந்தன.

நாம் எதைத் தருகிறோமோ, அது பன்மடங்காகத் திரும்பி வருகிறது.

எதைப் பதுக்கி வைக்கிறோமோ மக்கி, புழுத்துப் போகிறது. நாம் கொடுக்கக் கொடுக்க நீரூற்றுப் போல் நம்மிடம் அன்பு ஊறுவதைப் போல ஆஸ்தி ஊறுகிறது.

"மக்காவில் ஒரு சிறந்த வணிகராக அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) இருந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தைத் தனது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டதால், மக்கத்து குரைஷிகளால் முஸ்லிம் வியாபாரிகளிடம் பொருள்கள் வாங்காமல் எதிர்ப்பும், கொடுமைகளும் செய்ய ஆரம்பித்ததால், மற்ற நபித் தோழர்களைப் போலவே அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்களும் கடுமையான கஷ்டத்திற்கு ஆளானார்.

இந் நிலையில் நபி (ஸல்) அவர்கள் அவரை அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்து போக உத்தரவு அளித்தார்கள். இறைவனுடைய திருப் பொருத்தத்திற்காக நாடு துறந்து சென்ற முதல் முஸ்லிம்கள் குழுவில் பன்னிரண்டு ஆண்களில் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்களும் இருந்தார்கள். மேலும் நான்கு பெண்களும் இருந்தனர். இவர்களுக்கு தலைவராக உஸ்மான் இப்னு அஃப்பான் (ரழி) இருந்தார்கள்.

வியாபாரக் கப்பல்களில் ஏறி அபீஸீனியாவிற்கு புறப்பட்டு சென்றார்கள். அங்கு இராண்டவது வந்த குழுவினர்களும் அபீஸீனியாவில் பிரச்சனைகள் இன்றி வாழ்ந்து வந்தனர். மதீனாவிற்கு நபி(ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து சென்ற பின்னர் அபீஸீனியாவில் இருந்த தோழர்கள் மதீனாவுக்கு சென்றார்கள்.

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்துசென்ற பொழுது அவர்கள் வெறுங்கையுடன் தான் சென்றார்கள். எந்தவித பொருளாதாரமும் அவர்களிடம் இல்லை.

இந்த நிலையில், ஸஃது இப்னு ரபீஆ அன்ஸாரீ (ரழி) என்ற நபித் தோழருடன் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்களை சகோதரராக நபி (ஸல்) அவர்கள் இணைத்து வைத்தார்கள். அவரை வரவேற்றுக் கண்ணியப்படுத்திய ஸஃது இப்னு ரபீஆ அன்ஸாரீ (ரழி) அவர்கள் கூறினார்கள் :

"சகோதரரே! இறைவன் என்மீது அளவற்ற அருட்கொடைகளைச் சொறிந்துள்ளான். இந்த மதீனாவிலேயே நான் தான் மிகப் பெரிய செல்வந்தனாகவும் இருக்கின்றேன்.

இப்பொழுது என்னிடம் இரண்டு மிகப் பெரிய தோட்டங்களும், இரண்டு மனைவிகளும் இருக்கின்றார்கள். இந்த இரண்டு தோட்டங்களில் எது உங்களுக்கு மிகவும் பிடித்தமாக இருக்கின்றதோ அதனையும், இரண்டு மனைவிகளில் உங்களுக்குப் பிடித்த மனைவி ஒருவரையும் நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள்.

நீங்கள் தேர்ந்தெடுக்கின்ற தோட்டத்தை உங்கள் பெயரிலும், நீங்கள் தேர்ந்தெடுக்கின்ற மனைவியை நான் விவாகாரத்தும் செய்து தருகின்றேன், அவளது இத்தா தவணை முடிந்ததும் நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறினார்கள்.

நீங்கள் இப்பொழுது என்னுடைய இஸ்லாமிய சகோதரராக இருப்பதின் காரணமாக உங்களது வாழ்வில் நல்லனவற்றை நாடுவதும், ஒரு இஸ்லாமிய சகோதரன் என்ற முறையில் உங்களது தேவையை நிறைவேற்றி வைப்பதற்கு இஸ்லாம் நமக்குக் காட்டித் தந்திருக்கின்ற வழிமுறையும், சமூகக் கடமையுமாகும் என்று கூறினார்கள்.

ஆனால், கண்ணியமும், சுயமரியாதையும் கொண்ட அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்கள் தனது சகோதரரின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள மறுத்ததுடன், அவர் கூறினார் :

"அல்லாஹ் உங்கள் மீது அருள்புரிவானாக! இன்னும் உங்களது உடமைகளிலும், உங்களது குடும்பத்தினர் மீதும், உங்களது குழந்தைகளின் மீது அருள் பாலிப்பானாக! உங்களது செல்வங்கள் உங்களிடமே இருக்கட்டும். முதலில் எனக்கு வணிகச் சந்தைக்கான வழியைக் காட்டுங்கள். எனது வாழ்வாதாரத்தை நானே தேடிக் கொள்கின்றேன். உங்களுக்கு ஒரு பாரமாக நான் இருக்க விரும்பவில்லை என்றுகூறினார்கள்.

அதன் பின்பு வணிகச் சந்தைக்கான வழியை அறிந்து கொண்ட அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்கள், தனது வியாபாரத்தை அங்கு தொடங்கினார்கள். அவர் எப்பொழுது தனது சொந்த வியாபாரத்தைத் தொடங்கினாரோ அப்பொழுதிலிருந்து இறைவன் அவரது வியாபாரத்தின் மீது அருட்கொடைகளைச் சொறிய ஆரம்பித்தான்.

அங்கு நெய், மாவு ஆகியவற்றை வாங்கி விற்பனை செய்த இவர்கள் விரைவில் பெரும் வணிகரானார்கள். குறைந்த ஆதாயத்திற்கே இவர்கள் பொருள்களை விற்றார்கள். ஒரு முறை இவர்கள் நூறு ஒட்டகைகளை விற்றபொழுது ஒட்டகை கட்டிய கயிறுகளைத் தவிர இவர்களுக்கு அவற்றின் மூலம் வேறு இலாபம் கிடைக்கவில்லை.

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்களின் வியாபாரத்தில் இறைவன் தனது பூரண அருட்கொடைகளை வழங்கியிருந்தான். அவர் கனவிலும் நினைத்திராத அளவுக்கு அவரது செல்வ வளங்கள் அதிகரித்துச் சென்றன. அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்கள் ஒருகல்லைத் தொட்டாலும் அது தங்கமாக மாறி விடும் என்று சொல்லுமளவுக்கு அவர் ஆரம்பித்த அத்தனை வியாபாரங்களிலும் இறைவன் தனது அருள் மழையைப் பொழிந்து கொண்டிருந்தான்.

வியாபாரத்தை அடுத்து, விவசாயத்திலும் அதிகக் கவனம் செலுத்தினார். மிகப் பரந்த அளவில் விவசாயத்தை ஆரம்பித்த அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்களுக்கு, கைபரில் ஒரு பெரிய நிலத்தையே நபி (ஸல்) அவர்கள், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்களுக்கு வழங்கினார்கள். இத்தனை சொத்துக்களில் இருந்து வரக் கூடிய வருமானத்தை அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக அவர் செலவிடுவதற்காக என்றுமே தயங்கியதில்லை, அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு சமயம், 700 ஒட்டகங்கள் நிறைய வணிகப் பொருட்களுடனும், தானியங்களுடனும் மதீனமா நகரத்துக்குள் நுழைந்த பொழுது, அந்த வணிகக் கூட்டத்தின் வருகையால் மதீனா நகரமே அதிர்ந்து கொண்டிருந்தது.

இந்த சலசலப்பை செவியுற்ற அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள், இந்த மதீனாவிற்கு என்ன நேர்ந்து விட்டது, ஒரே சலசலப்பாக இருக்கின்றதே! என்று தனது பணிப் பெண்ணிடம் கேட்கின்றார்கள்.

அப்துர்ரஹ்மானின் 700 ஒட்டகங்கள் வணிகப் பொருட்களுடன் மதீனா நகருக்குள் நுழைந்து கொண்டிருப்பதாகவும், அதன் காரணமாகத் தான் இந்த சலசலப்புக்கள் என்று அவருக்குக் கூறப்பட்டது.

இதனைக் கேட்ட அன்னை ஆயிஷா (ரழி)அவர்கள், நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கின்றேன் : ''அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்கள் சுவனத்தில் நுழையும் பொழுது, தவழ்ந்த நிலையிலும், குதித்துக் குதித்தும் நுழைவார்கள்;" என்று கூறினார்கள்.

இதனைக் கேள்விப்பட்ட அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்கள், அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடம் வந்து அன்னையவர்களிடம், " நீங்கள் இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றீர்களா என்று கேட்டார்கள்.

அன்னையவர்களும் ஆம்! எனச் சொன்னதும்,

"நபி (ஸல்) அவர்களின் திருவதனங்களால் தனக்கு அறிவிக்கப்பட்ட இந்த

நன்மாராயத்திற்காக, அல்லாஹ்வின் பெயரால் இந்த வணிகப் பொருட்களையும், அதனைச் சுமந்து வந்திருக்கின்ற இந்த 700 ஒட்டகங்களையும் நான் இந்த முஸ்லிம் உம்மத்தின் நல்வாழ்வுக்காக தானமாகக் கொடுக்கின்றேன்" என்று கூறி, அத்தனை பொருட்களையும் ஒட்டகங்களையும் தானம் செய்து விட்டார்கள்.

Facts Behind ·

Follow

கொடுப்பார்க்குக் குறைவு இல்லை,

அள்ள அள்ள ஊறுவதும், அள்ளுவதற்கு இல்லாதிருப்பதும் இறை நியதி. இதில் மாற்றமேது.


கையை விரித்து விடாதீர், கையைக் கழுத்தில் கட்டிக் கொள்ளவும் வேண்டாம் என்ற நடைமுறை இறை கூற்றில் எத்துனை விளக்கம். உலகுள்ளவும்

நில்லாது மறுமையிலும் கூட பத்தாக வரும். அல்லாஹ் வாக்கு மாறாதவன் அல்லவா!

அல்ஹம்துலில்லாஹ்!

மன மெய்யியல் 64

(பயிற்சியும், முயற்சியும்)



சுய முயற்சியில் வாழ்க்கையின் குறிக்கோளை அடைவது குறித்து, சாமுவல் ஸ்மைல்ஸ் (Self-Help) என்ற புத்தகத்தில் ....

ஒரு புதிய பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு விருப்பம் மட்டும் போதாது. நிலையான பயிற்சியின் மூலமே ஒன்றை வளர்த்துக் கொள்ளவும், வலுப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

பண்டைய கிரேக்கத்தில் டெமாஸ்தனீஸ் கி.மு.384-ல் அவர் பிறந்தார். சிறந்த பேச்சாளர். வாக்கு வன்மையை நன்குணர்ந்தவர் அவர். 'இந்த நாட்டு அரசனுடைய அதிகாரத்தை விடவும் என் பேச்சு ஆற்றல் மிக்கது' என்று ஒரு சமயம் அவர் குறிப்பிட்டதுண்டு

டெமாஸ்தனீஸ் சிறுவனாக இருந்தபோது திக்குவாய் பிரச்னையில் அவதிப்பட்டார். கோர்வையாக நாலு வார்த்தை பேச முடியாது. அடிக்கடி நோய்வாய்ப்பட்டு, உடலும் பலவீனமாக இருந்தது. பையன்கள் அவரை நோஞ்சான் என்று கிண்டலடித்தனர். ஆனாலும், அவருக்குள் குறிப்பிடத்தக்க ஏதேனும் ஒன்றைச் செய்து புகழ்பெற வேண்டும் என்கிற வேட்கை இருந்தது.

தாம் ஒரு பேச்சாளராகி மக்களின் கவனத்தைக் கவர்வது என்று அவர் தீர்மானித்தார். ஆனால், அந்த வகையில் பல தடைகளை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், திக்கிப் பேசும் பழக்கத்தில் அவருக்கு பேச்சு தடுமாறியது. ஒரே மூச்சில் ஒரு நீண்ட வாக்கியத்தை அவரால் பேசமுடியாது. எனினும், இடைவிடாத பயிற்சியின் மூலம் தடைகளை அவர் கடந்தார்.

ஒரு மருத்துவரின் ஆலோசனைப்படி சிறுமணியளவிலான கூழாங்கற்களைத் தம்முடைய வாயில் அடக்கிக் கொண்டு அவர் பேசினார். வார்த்தைகளை தெளிவாக, உரத்த குரலில் பேசிப் பழகினார். குன்றுகளின் உச்சிக்கு ஏறிச்செல்வது, சரிவில் இறங்கி வருவது என்று பயிற்சி செய்தார். இதனால் ஆழ்ந்து சுவாசிப்பதன் மூலம் நீண்ட சொற்றொடர்களைப் பேசும் ஆற்றல் பெற்றார்.

தினமும் கடற்கரையில் நின்றுகொண்டு, அலைகளின் ஓசையையும் மிஞ்சுகிற குரலில் அவர் பேசிப் பழகினார். கிரேக்க புராணங்களையும், சட்ட ஒப்பந்தங்களையும் படித்து வந்தார். ஒரு நாளில் பதினாறு மணி நேரத்தைப் படிப்பதிலேயே அவர் செலவிட்டார்.

டெமாஸ்தனீஸைக் காண யாராவது வந்தபடி இருப்பார்கள். ஆனால், அவர்களைச் சந்திப்பது தம்முடைய வாசிப்புக்கு இடையூறாக இருக்கும் என்று அவர் கருதினார். நிலவறையில் தனியாக அமர்ந்து படிப்பார். அவ்விதமாய் ஆற்றல்மிக்க விதத்தில் உரைநிகழ்த்துவதற்கு அவர் கற்றார்.

நிலைக்கண்ணாடி முன் நின்று ஏற்ற முகபாவங்களுடனும், அங்க அசைவுகளுடனும் பேசிப் பார்ப்பார். தவஞானி போல் மூன்றாண்டு காலத்தைத் தனிமையில் கழித்த பின் அவர் அறிவுக்களஞ்சியமாய் வெளிப்பட்டார்.

ஓயாமல் மணிக்கணக்கில் பேசக்கூடிய பேச்சாளர்கள் இருக்கிறார்கள். என்ன பேசுகிறோம் என்று அவருக்கும் தெரியாது. என்ன பேசுகிறார் என்று கேட்பவர்களுக்கும் புரியாது. ஆனால், டெமாஸ்தனீஸின் பேச்சு சொல்வளமும், பொருட்செறிவும் கொண்டது.

கிரேக்க அரசன் பிலிப் இப்படிக் குறிப்பிடுவான், 'நீங்கள் உலகத்தையே வெற்றி கொள்ளலாம். ஆனால், டெமாஸ்தனீஸிடம் பேச்சில் தோற்றுப்போவீர்கள்' என்று. உங்களிடம் பொறுமையும், விடாமுயற்சியும் இருந்தால் எந்தத் திறமையையும் உங்களால் மேம்படுத்திக்கொள்ள முடியும்.

"மனிதனை மற்ற உயிரினங்களை விட வேறுபடுத்திக் காட்டும் மகத்தான சக்திகள் இரண்டு.1 பேச்சாற்றல். 2 எழுத்தாற்றல்.இந்த இரு ஆற்றல்களும் மனிதனைத் தவிர வேறு எந்த உயிரினத்திற்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணல் நபி ﷺஅவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் முதன் முதலில் பேனாவைப் படைத்தான். (திர்மிதி :ஹதீஸ் : 3319)

இந்தப் பேனா விதியை எழுதிய பேனாவாகும். பேனா என்பது எழுத்துலகின் அஸ்திவாரம். அல்லாஹ்வினுடைய முதல் படைப்பு என்று வருகின்ற போது பேனா படைப்பாற்றல் மிக்கது என்று தெரிகிறது.

பேனாவிலிருந்து வெளிப்படும் எழுத்துக்கள் எழுச்சி மிக்கது, உயிர்ப்பிக்கும் சக்தி மிக்கது. உலகின் சரித்திரத்தை எழுதக்கூடியது மட்டுமல்ல, சரித்திரம் படைக்கக் கூடியது. உலகின் வரலாற்றை நிர்ணயிக்கக் கூடியது.

எழுத்தாற்றல் என்பது மக்களின் மனதையும் மாற்றி, ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி பெரும் அரசியல் புரட்சியை உண்டு பண்ணக்கூடியது என்பதற்கு இன்று நடக்கும் நிகழ்வுகள் சான்றாக இருக்கிறது.

நூன்; எழுதுகோல் மீதும் இன்னும் (அதன் மூலம்) அவர்கள் எழுதுவதின் மீதும் சத்தியமாக! குர்ஆன் (68:1.)

(யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திரு நாமத்தைக் கொண்டு ஓதுவீராக. குர்ஆன் (96:1)

“அலக்” என்ற நிலையிலிருந்து மனிதனைப் படைத்தான்.குர்ஆன் (96:2)

ஓதுவீராக: உம் இறைவன் மாபெரும் கொடையாளி.குர்ஆன் (96:3)

அவனே எழுது கோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான்.குர்ஆன் (96:4)

இது திருக்குர்ஆனின் ஆரம்ப வரிகளாகும். முதல் வசனம் பேச்சாற்றலையும் நான்காவது வசனம் எழுத்தாற்றலையும் எடுத்து இயம்புகிறது. முதல் வசனம் மெஞ்ஞானத்தையும் இரண்டாவது வசனம் விஞ்ஞானத்தையும் எடுத்துரைக்கிறது.

இஸ்லாத்தையும், வேதத்தையும் இந்த இரு ஆற்றல் கொண்டு உலகில் பரப்ப வேண்டும்.அவ்வாறே விஞ்ஞானத்தையும் மெஞ்ஞானத்தையும் கொண்டு பரப்புரை செய்ய வேண்டும் என்பது ஆரம்பமாக இறங்கிய வேத வாக்கியங்கள் வெளிப்படுத்தும் கட்டளைகளாகும். இந்த இரு ஆற்றலும் மகத்தான சக்தி கொண்டது.

அல்லாமா தஃப்தாஸானி (ரஹ்) என்று மாபெரும் எழுத்தாளர் இருந்தார். (இவர்கள் எழுதிய பல நூட்கள் அரபி பல்கலைக்கழகத்தில் பாடப் புத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது) அவரின் மீது நடவடிக்கை எடுக்க அந்த கால அரசரே தயங்கினார். ஏன் என கேட்ட போது, " எனது வாள் முனை ஆட்சி செய்யாத பகுதிகளிலெல்லாம் அவரது பேனா முனை ஆட்சி செய்கிறது" என்று பதிலளித்தார்.

அது போல பேச்சாற்றலும் பேரற்புதமானது. நபி மூஸா (அலை) அவர்கள் தனது சகோதரர் ஹாரூன் (அலை) அவர்களுக்கும் நபித்துவம் வழங்க வேண்டும் என பரிந்துரை செய்தார்கள்.அதற்கு அவர்கள் சொன்ன காரணம் அவரது பேச்சாற்றல் தான்.

இன்னும்: “என் சகோதரர் ஹாரூன் - அவர் என்னை விடப் பேச்சில் மிக்க தெளிவானவர்; ஆகவே என்னுடன் உதவியாய் நீ அவரை அனுப்பி வைப்பாயாக! என்னை அவர் மெய்ப்பிப்பார். நிச்சயமாக, அவர்கள் என்னைப் பொய்ப்பிப்பார்கள் என்று நான் பயப்படுகிறேன்” (என்று கூறினார்). குர்ஆன் (28:34)

(அல்லாஹ்) கூறினான்: “நாம் உம் தோள்புஜத்தை உம் சகோதரரைக் கொண்டு வலுப்படுத்துவோம்; நாம் உங்கள் இருவருக்குமே வெற்றி யளிப்போம்; ஆகவே, அவர்கள் உங்களிருவரையும் நெருங்கவும் முடியாது; நம்முடைய அத்தாட்சிகளைக் கொண்டு, நீங்களிருவரும், உங்களைப் பின்பற்றுவோரும் மிகைத்து விடுவீர்கள்"குர்ஆன் (28:35)


நபித்துவம் என்பது முயற்சியால் கிடைக்கும் பாக்கியமல்ல, அத்தகைய நபித்துவம் இங்கு ஒருவரின் பேச்சாற்றலுக்காக வழங்கப்படுகிறது என்றால், இதன் மூலம் பேச்சாற்றலின் சிறப்பை உணர்ந்து கொள்ளலாம்.

பேச்சாற்றல் கொண்டு நபித்துவத்தின் தோள்கள் வலுப்படுத்தப் பட்டுள்ளது. அது இருந்தால் வெற்றி நிச்சயம், எதிரிகள் நம்மை நெருங்க முடியாது என்பதெல்லாம் பேச்சாற்றலின் பெருமை களையும் பலத்தையும் பறைசாற்றுகிறது.

ஒரு புதிய பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு விருப்பம் மட்டும் போதாது. நிலையான பயிற்சியின் மூலமே ஒன்றை வளர்த்துக் கொள்ளவும், வலுப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

மன மெய்யியல் 65

(எல்லோருக்குமே இரண்டு மனம் உண்டு)



நாம் எல்லோருமே இரண்டு மனங்களை வைத்திருக்கிறோம்.

ஒரு மனம் நாமே உருவாக்கிக் கொண்ட சிறிய மனம் அகங்காரம், ஆசை, கோபம், அச்சம் ஆகிய உணர்வுகளைப் பல்வேறு விகிதங்களில் பதிவு செய்து நாம் உருவாக்கிக் கொண்டிருக்கும் சிறிய மனத்தையே நாம் உண்மையான மனம் என்று கருதிக் கொண்டிருக்கிறோம்.

இரண்டாவது மனம் நம்மோடு வந்த பிரபஞ்ச மனம். சொல்லப்போனால் பிரபஞ்ச மனத்திலிருந்துதான் நாமே வந்தோம்.

நாம் வெறும் சாட்சியாக நின்று, எண்ணங்களற்று, பற்றற்று ஒன்றைக் கவனிக்கும்போது அது செயல்படுகிறது !

இன்னும் சொல்லப்போனால் நம் வீட்டிற்குள் எரியும் விளக்கை அணைத்தால்தான் வெளியே பரவிக்கொண்டிருக்கும் பூரண நிலவொளி அறைக்குள் ஊடுருவ முடியும்.

அதைப்போலச் சிறிய மனம் செயல்படாதபோதுதான் பிரபஞ்ச மனத்தை நாம் தரிசிக்க முடியும். பயிற்சி இல்லாமலேயே சில நேரம் நம் சிறிய மனம் செயல்படாமல் இருக்கின்றது. அப்போது தான் நம்மை யறியாமல் பிரபஞ்ச மனத்திற்குள் பிரவேசித்து நம் எண்ணத்தைக் கூட அடுத்தவர்களுக்குச் சொற்களில்லாமலேயே நாம் உணர்த்தி விடுகின்றோம்.

நாம் 'தண்ணீர் வேண்டும்' என எண்ணும்போதே ஒருவர் தண்ணீர்க் குவளையுடன் நம்மிடம் வருவார். இது எதேச்சையாக நிகழ்ந்தது இல்லை. நம் பிரபஞ்ச மனம் செயல்பட்டிருக்கிறது எனப் பொருள்.

பிரபஞ்சமனம் செயல்படும்போது காலம், இடம் ஆகியவை மறைந்துவிடுகின்றன. பிரபஞ்சமனம் செயல்படும் போது நாம் உச்சக்கட்ட விழிப்புணர்வில் வீற்றிருக்கிறோம்.

நாம் சிறிய மனத்தை அமைதிப்படுத்தினால் அது உதிர்ந்து போகிறது. அப்போது பிரபஞ்சமனம் தன்னறிவாய், தன்னுணர்வாய் செயல்படுகிறது. இந்தப் பெரிய மனம் தனக்குத் தானே அடையும் அனுபவங்கள் மூலம் தன்னையே விரிவுபடுத்திக் கொள்கிறது. இந்தப் பெரிய மனத்தின் விரிவாக்கத்தால் ஏற்படும் இன்பம்தான் பேரின்பம்,

நம் மனம் பெரிதாக விரியும் பொழுதுதான் நம்முடைய உலகமும் விரிவடைகிறது. அப்பொழுது உலகில் உள்ள எல்லாப் பொருட்களும் நமக்குள் ஒரு பகுதியாக ஆகிவிடுகின்றன.

அனைத்து உயிரினங்களும், நீங்கள் உட்பட முழு பிரபஞ்சமும் கணினி நிரலாக்க மொழிகள் போன்ற நிரலாக்க குறியீடுகளால் ஆனது. (எழுதப்பட்ட விதியைப் போல) மேலும் அனைத்து உயிரினங்களின் உருவாக்கத்திற்கும் பின்னால் ஒரு புரோகிராமர் இருக்கிறார். மிக உயர்ந்த நனவான பிரபஞ்ச மனதைக் கொண்ட பிரபஞ்சத்தின் இருப்பு அந்த படைப்பாளர்.

எல்லாவற்றின் பின்னும் தொடர்ந்து வளர்ந்து வரும் உயர்ந்த அறிவார்ந்த உணர்வு மனம் உள்ளது. பல பிரச்சனைகளை உணர்ந்து தான் தீர்க்க முடியும்.

மைண்ட் (மனம்) என்பது கணினி மென்பொருளைப் போலவே நிரலாக்கக் குறியீட்டால் இயக்கப்படும் மிக உயர்ந்த தரமான மென்பொருளாகும். இந்த மென்பொருளுக்குப் பின்னால் ஒரு டெவலப்பர் அல்லது புரோகிராமர் இருக்கிறார். எதுவும் தற்செயலாக உருவாக்கப்படவில்லை.

பிரபஞ்ச மனதை பலர் சந்தேகிக்கிறார்கள். தங்கள் மனதை இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளாத அல்லது அறியாதவர்களுக்கு, பிரபஞ்ச மனதின் இருப்பைப் புரிந்துகொள்வது அல்லது அறிவது, அதன் இருப்பை உணர்ந்து கொள்வது உண்மையில் கடினம்.

மனதை மனத்தால் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு அவதானமான ~ உணர்வு ~ உண்மை , போதுமான அளவு வளர்ந்த குருட்டு நம்பிக்கை இல்லாத மனம் தேவை.

இந்த மிக எளிய சான்றுகள் அண்ட- மனம் இருப்பதைப் புரிந்து கொள்ள மிகவும் உதவியாக இருக்கும்

நமக்கு உள்ளேயும் வெளியேயும் சிதறிக் கிடக்கும் அந்த உயர்ந்த புத்திசாலித்தனமான மனம் இருப்பதற்கு பல சான்றுகள் உள்ளன, அதை உணர போதுமான அளவு வளர்ந்த நனவான மனம் வேண்டும். ஆனால் அது வழக்கமான கருத்துகளின்படி கடவுளாக இருக்கட்டும்

நம் மனம் எண்ணங்களை உருவாக்கி, உடல் அணுக்களை குறிப்பிட்ட அலைவரிசையில் அதிரச் செய்து, பிரபஞ்ச அணுக்களின் தன்மையை மாற்றி தனக்கு தேவையானதை வடிவமைத்துக் கொள்கிறது.

இதிலிருந்து மனிதன் தான் இயற்கையால் கட்சிதமாக வடிவமைக்கப்பட்ட மேம்பட்ட சக்தி என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

மனக் கட்டுப்பாடு பற்றி நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த பின்வரும் பிரார்த்தனை !

“அல்லாஹ்வே! உன் அருளை நான் வேண்டுகிறேன். கண்சிமிட்டும் நேரம்கூட என்னை என் மனதில் கட்டுப்பாட்டில் விட்டுவிடாதே. என் விவகாரங்கள் அனைத்தையும் சீர்படுத்துவாயாக. உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை”

“உள்ளங்களைப் புரட்டக்கூடியவனே ! என் உள்ளத்தை உன் மார்க்கத்தின் மீது நிலைபெறச் செய்வாயாக” இதுவும் நபியவர்கள் அடிக்கடி கேட்ட பிரார்த்தனைகளுள் ஒன்று.


قيصر سيد

பிரபஞ்சமனம் செயல்படும்போது காலம், இடம் ஆகியவை மறைந்துவிடுகின்றன. பிரபஞ்சமனம் செயல்படும் போது நாம் உச்சக்கட்ட விழிப்புணர்வில் வீற்றிருக்கிறோம்.

💖💖💖

மன மெய்யியல் 66

(அந்த இரண்டு வரி)



"வாழ்க்கையில் எதுவும்

சொல்லிவிட்டு

வருவதில்லை ;

ஆனால் ,

வந்த எதுவும்

எதையும் சொல்லிக்

கொடுக்காமல்

விடுவதில்லை "

- இதுதான் மன மெய்யியலின் சாரம்சம்

சர். வில்லியம் ஆஸ்லம். கனடாவின் மிகவும் புகழ்ப்பெற்ற மருத்துவர்களில் ஒருவர்,

ஆனால் மாணவப் பருவத்தில் பதட்டமும், மன உளைச்சலும் அவரை வேதனைக்குள்ளாக்கி இருந்தன. மாண்ட்ரீல் நகர் மருந்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் தமது வருங்காலம் குறிக்க கவலையால் அவர் பாதிக்கப்பட்டார். வருத்தமும், ஐயமும் , நிச்சயமற்ற தன்மையும் அவரை வாட்டியெடுத்தன.

ஆண்டு நிறைவுத் தேர்வுக்குப் பல தடிமனான புத்தகங்களை அவர் படித்து முடித்தாக வேண்டும். இனி வரும் நாட்களை எப்படி எதிர்கொள்ளப்போகிறோம் என்று திகைத்துப் போனார் அவர்.

தேர்வை முன்னிட்டு பல நூறு தகவல்களை மூளையில் பதித்தாக வேண்டிய நிலை . அப்படியே தேர்வில் வெற்றிபெற்றாலும், வேலை கிடைப்பதில் பிரச்னை. சொந்தமாகத்தான் தொழில் செய்ய வேண்டியிருக்கும் என்றொரு நினைப்பு. அதற்கு முதலீடு தேவைப்படுமே.

எல்லாத் தொழிலிலும் போட்டி. மருத்துவத் தொழிலிலும் போட்டி இருக்கவே செய்தது. ஆக அவரைக் கவலைப்படுத்த அநேகக் காரணங்கள் இருந்தன.

தற்செயலாக, தாமஸ் கார்லைல் எழுதிய புத்தகம் ஒன்றில் காணப்பட்ட கருத்து அவரைக் கவர்ந்தது.

" நம்முடைய வேலை தொலைதூரத்தில் மங்கலாகக் காணப்படுகிறவைகளைக் காண முயற்சிப்பதல்ல. எது கண்ணெதிரே பளிச்சென்று தெரிகிறதோ அதைக் கையில் எடுப்பதுதான் "

- இந்த இரண்டே வரி கருத்து ஆஸ்லரை சோர்வில் இருந்து விடுவித்தது .வாழ்க்கையின் யதார்த்தைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தது.

"வாழ்க்கை என்றால் ஈடுபாடு. ஈடுபாடு இல்லாத இடத்தில் வாழ்க்கையும் இல்லை"

"வாழ்க்கை உங்களுக்கு வெளியே இல்லை. நீங்கள்தான் வாழ்க்கை !"

"வாழ்வதை விட இங்கு செய்வதற்கு ஒன்றுமில்லை.

வாழ்க்கையே மேலோட்டமாய் வாழ்வதும், ஆழமாய் வாழ்வதும் உங்கள் கையில் !

வாழ்க்கை ஆஸ்லம் அவரை குறிப்பிடத்தக்க நபராக மாற்றுகிற வேலையை அது செய்தது. தமக்குத் தேவையான அகத் தூண்டலை அவர் பெற்றவிட்டார். செயலாற்றும் திறனும், மனவலிமையும் கொண்ட ஒரு மனிதனாகத் தம்மை தாமே வடிவமைத்துக் கொண்டார்.

புகழ் பெற்ற ஜான் ஹாப்கின்ஸ் கல்விக் கழகத்தின் வளர்ச்சிக்கு ஆஸ்லர் காரணமாக இருந்திருக்கிறார்.

நான்கு பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றும் கவுரவம் அவருக்குக் கிடைத்தது. பிரிட்டிஷ் அரசு பல விருதுகளும், பதக்கங்களும் வழங்கி அவரைக் கவுரவித்தது.

ஆஸ்லர் ஒரு சமயம் 'ஏல்' (yale) கலைக்கழக மாணவர்களிடையே பேசும்போது இப்படிக் குறிப்பிட்டார். "ஒரு பிரபலமான எழுத்தாளர், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர், தத்துவ வாதி என்றெல்லாம் நான் புகழ்பெற்றிருப்பதால் என்னை ஒரு பிறவி மேதையாய் எண்ணிக்கொண்டு விடாதீர்கள். இந்த மருத்துவத் துறைப் பார்த்து ஆரம்பத்தில் பயந்தவன் நான். என்னுடைய அறிவுத்திறன்கள் மிகச் சாதாரணமானவை'

வெற்றிக்கான உந்துதலைப் பெற

ஒற்றைச் சொல்லே போதுமானது'

மன மெய்யியல் 67

(மரணம்)



ஒரு மீனவ இளைஞனைப் பார்த்துக் கேட்டார்கள்:

"கடல் இவ்வளவு ஆபத்தான இடமாயிற்றே எப்படித் துணிச்சலுடன் நீங்கள் மீன் பிடிக்கப் போகிறீர்கள்?"

"என்ன செய்வது நாங்கள் மீன் பிடித்தால்தான் உணவு உண்ணமுடியும்."

"அது சரி. உன் தந்தை எப்படி இறந்தார்?"

'அவர் மீன் பிடிக்கச் செல்லும்போது புயலில் இறந்தார்"

''உன் தாத்தா?"

"என் தாத்தா ஒருமுறை அலையில் மாட்டிக்கொண்டு கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டார்."

"இவ்வளவு நடந்த பிறகும் எப்படி உன்னால் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல முடிகிறது?"

அவன் திரும்பக் கேட்டான் "உங்கள் தந்தை எப்படி இறந்தார்?"

"நோய்வாய்ப்பட்டு படுக்கையில்"

"உங்கள் தாத்தா எப்படி இறந்தார் ?"

"அவரும் படுக்கையில்"

"உங்கள் கொள்ளுத் தாத்தா எப்படி இறந்தார் ?"

"அவரும் படுக்கையில்."

"இப்படிப் பரம்பரையே படுக்கையில் இறந்திருக்கிறார்கள். அப்புறம் எப்படித் தினமும் தைரியமாக நீங்கள் படுக்கப்போகிறீர்கள்?" என்று அவன் பதிலுக்குக் கேட்டான்.

மேலும்,மீனவ இளைஞன் சிரித்துக் கொண்டே நக்கலாக...

படுத்துட்டு இருக்கும் போதே மரணம் வந்தால் பரவாயில்லை !

ஆனால், மரணம் வரும்வரை படுத்துட்டு இருக்கிறதுதான்

கொடுமையிலும் கொடுமை !

ஆபத்தான வாழ்க்கையை வாழும் யாரும் ஆபத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால், பார்க்கிற மற்ற எல்லோருக்கும் அவர்களுடைய ஆபத்தான வாழ்க்கைதான் நினைவுக்கு வருகிறது.

தாவூத் (அலை).வணக்க வழிபாட்டுக்காக, யாரும் தொந்தரவு செய்து விடாமல் வணக்க வழிபாட்டில் மிக கவனத்தோடு, அந்த திக்ரிலே தொழுகையிலே மூழ்கி இருப்பார்கள்.

திடீரென்று ஒரு மனிதர் வருகிறார். அப்போது தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நீங்கள் யார் ? என்று கேட்கிறார்கள்.

வந்தவர் கூறுகிறார்: "மன்னர்களை நான் பயப்படமாட்டேன். அவர்களின் அரண்மனை, கோட்டை கொத்தளங்கள் எதுவும் என்னை தடுத்து நிறுத்தாது. நான் யாரிடமும் லஞ்சம் வாங்க மாட்டேன்.

அப்போது தாவூத் அலைஹி வஸல்லம் சொல்கிறார்கள்; " அப்படி என்றால் நீங்கள் மலக்குல் மவுத் ஆக தான் இருக்க வேண்டும் என்று

நீங்கள் எங்கிருந்த போதிலும் மரணம் உங்களை அடைந்தே தீரும். மிகப் பலமான உயர்ந்த கோட்டை கொத்தளத்தின் மீது நீங்கள் இருந்த போதிலும் சரியே. (அல்குர்ஆன் 4 : 78)

வாழ்க்கை ஒரு கேள்வி

யாரும் விடை தர முடியாது !

மரணம் ஒரு விடை

யாரும் கேள்வி கேட்க முடியாது !

மரணத்திற்குப் பயந்து எங்குதான் ஓடலாம் ? ஒழிக்கலாம் ? மரணம் எங்கிருந்தோ வருவதில்லை. அது நம்மிலேயே இருக்கிறது.

மரணம், அவன் செருப்பு வாரை விட மிக அருகில் இருக்கிறது (என்பது அவனுக்குத் தெரிவதில்லை) புகாரி : 3926


ஜனனம் இறைவனின் படைப்பு   மரணம் இறைவனின் அழைப்பு

இடைப்பட்ட வாழ்க்கை

மானுடர் நடிப்பு !

மன மெய்யியல் 68

(நீதிக்கதைகள் - சொர்க்கமும் நரகமும்!)



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"கஞ்சனுக்கும், தர்மம் செய்பவனுக்கும் உதாரணம் இரண்டு மனிதர்களைப் போன்றதாகும்.

மார்பிலிருந்து கழுத்து வரை இரும்பு அங்கிகளை அவ்விருவரும் அணிந்திருக்கின்றனர். தர்மம் செய்பவர் தர்மம் செய்யும் போதெல்லாம் அவரது அங்கி உடல் முழுவதும் விரிந்து விரல்களை மறைத்துக் கால்களை மூடி, தரையில் இழுபடுமாறு விரிவடையும்.

கஞ்சன் செலவு செய்யக் கூடாது என்று எண்ணும் போதெல்லாம் அங்கியின் ஒவ்வொரு வளையமும் அதற்குரிய இடத்தை நெருக்கும். அவன் அதை விரிக்க முயன்றாலும் விரியாது.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-1444

மேற்கண்ட நபி மொழியை நீதிக் கதைகள் மிக எளிதாக நமக்கு காட்சிப் படுத்துகிறது .

ஒரு ஊரில் ஒரு கருமி வாழ்ந்து வந்தான். அவன் மிகப் பெரிய பணக்காரன். ஆனால் யாருக்கும் உதவ மாட்டான். அவனுக்கு சொர்க்கத்தையும் நரகத்தையும் காண ஆசை வந்தது.

ஒருநாள் அவனது கனவில் ஒரு பெரியவர் தோன்றினார். அவனை சொர்க்கத்துக்குக் கூட்டிச் செல்வதாகக் கூறினார். அவனும் அவருடன் சென்றான்.

முதலில் அவனை நரகத்துக்குக் கூட்டிச் சென்றார். அங்கு உணவு நேரத்தில் பெரிய பெரிய அண்டாக்களில் சாதம், குழம்பு மற்றும் சுவைமிக்க பதார்த்தங்களும் இருந்தன. அவரவர்களுக்கு தட்டுகள் கொடுக்கப்பட்டு, சுவைமிக்க உணவு பரிமாறப்பட்டது.

எல்லோருக்கும் நாவில் எச்சில் ஊறியது. ஆனால்...அந்தோ பரிதாபம்! அனைவராலும் கையை நீட்டி உணவுப் பொருளை எடுக்க முடிந்ததே தவிர, கையை மடக்கி, வாய்க்கு அந்த உணவைக் கொண்டு செல்ல முடியவில்லை!

எனவே அறுசுவை உணவு எதிரே இருந்தும் அவர்களால் உண்ண முடியவில்லை. அவர்களுக்குப் பசியோடு ஆத்திரமும் சேர்ந்து கொண்டது.

அனைத்து அண்டாக்களையும் கீழே தள்ளிவிட்டு. அவற்றிலுள்ள உணவை வீணாக்கினர்.பின்னர், தாங்க முடியாத பசியானால் உட்கார்ந்து அழுதனர். இப்படி அழுதுகொண்டே இருந்தனர்.

பின்னர், அந்தப் பெரியவர் அந்தக் கருமியை சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கும் அதோபோல அண்டாக்கள் அருமையான சாப்பாடு நிறைய வைக்கப்பட்டிருந்தது.

அங்கு இருந்தவர்களுக்கும் கையை நீட்ட முடிந்தது. ஆனால் தங்கள் வாய்க்கருகே கொண்டு செல்ல கையை மடக்க முடியவில்லை. ஆனால், அவர்களில் ஒருவர் தனது நீட்டிய கையினால் இனிப்பு வகைகளை எடுத்து எதிரே இருந்தவர் வாயருகில் நீட்டினார்.

மடக்கத்தானே முடியாது? கையை நீட்டி எதிரே இருப்பவரின் வாயில் ஊட்டமுடியுமல்லவா? இப்படியே அனைவரும் ஒருவருக்கொருவர் ஊட்டி மகிழ்ந்தனர். அனைவரின் வயிறும் நிரம்பியது.

கருமி கனவிலிருந்து மீண்டான். ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதே சொர்க்கம் என்பதை அவன் புரிந்து கொண்டான். தான் மட்டும் சுகமாய் வாழ நினைப்பது நரகம் என்பதை உணர்ந்தான். அன்றிலிருந்து அவன் அனைவருக்கும் உதவிகள் பல புரிந்து நல்வாழ்வு வாழ்ந்தான்.

இக்கருத்தைத்தான் மேற்கூறிய நபிமொழியும் உணர்த்துகிறது

மன மெய்யியல் 69

(கொடுங்கள்... அந்த நொடியிலேயே கொடுத்து விடுங்கள்)



ஒரு முறை, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும், பஞ்ச பாண்டவர்களில் ஒருவரான அர்ஜுனனும், பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, தானத்தில், தர்மத்தில், யார் சிறந்தவர், உயர்ந்தவர், என்ற விவாதம் எழுந்தது.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் , " சந்தேகமே வேண்டாம். கர்ணன் தான் கொடை வள்ளல்களில் தலை சிறந்தவர்", என்றார் .

அர்ஜுனன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே கண்ணன் ,

"உனக்கு சந்தேகம் என்றால், இப்போதே என்னுடன் வா. நான் அதை நிரூபித்துக் காட்டுகிறேன்", என்று சொல்லி, இருவரும் கர்ணனின் மாளிகைக்குச் சென்றனர்.

அப்போது, கர்ணன் எண்ணெய்க் குளியல் செய்வதற்காக, எண்ணெய் நிரப்பியிருந்த தங்கக் கிண்ணங்களைக் கையில் வைத்திருந்தான்.தன் அரண்மனைக்கு வருகை தந்த, ஸ்ரீ கிருஷ்ணர் , அர்ஜுனன் இருவரையும் அன்போடு வரவேற்றான்.

கர்ணனின், ஒப்பற்ற வள்ளல் தன்மையை, அபரிமிதமான கொடைச் சிறப்பை, தெரியப்படுத்த எண்ணி,ஸ்ரீ கிருஷ்ணர் , கர்ணனிடம் , தனக்கு அந்த தங்கக் கிண்ணங்களைக் கொடுக்கச் சொல்லி கேட்டார் .

உடனே, "இல்லை" என்று சொல்லும் வழக்கமே இல்லாத கர்ணன், தன் இடது கையில் இருந்த கிண்ணங்களை , ஸ்ரீ கிருஷ்ணரிடம் இடது கையாலேயே கொடுத்து விட்டான்.

ஆச்சரியத்திலிருந்து அர்ஜுனன் மீள்வதற்குள், கண்ணன் விடாமல், " என்ன கர்ணா ! இப்படித்தான், இடது கையால் தானம் செய்வதா ? ", என்று கர்ணனிடம் வினவ,

கர்ணன் , "ஆமாம். அது சரி இல்லை என்று எனக்குத் தெரியும். ஆனால், கிண்ணங்களை இடது கையிலிருந்து, வலது கைக்கு மாற்றிக் கொண்டு, தானம் கொடுக்க முனைந்திருந்தால், அந்த சிறு கால இடைவெளியில், தர்ம சிந்தனை மாறி விடுமோ, அதனால் கொடுக்க வேண்டாம் என்று தோன்றிவிடுமோ, என்று பயந்து, அந்த நொடியே தானம் செய்ய விழைந்தேன் " என்று கண்ணனிடம் உரைத்து, தன் தவறுக்கும் வருத்தம் தெரிவித்தான்.

இப்பொழுது, கண்ணன் , அர்ஜுனனை பொருள் பொதிந்த பார்வையுடன் பார்க்க, அர்ஜுனனுக்கு, அனைத்தும் புரிந்தது.

இதைத் தான், "வலது கை கொடுப்பதை , இடது கை அறியாமல் கொடுப்பது",

" கர்ணன் " திரைப்படத்திலும், " வலது கை கொடுப்பதை , இடது கை அறியாமல் வைத்தவன் கர்ண வீரன் ", என்று இந்த உயர்வான குணத்தையே, போற்றியிருப்பார்கள்.

வலது கரம் செய்ததை இடது கரம் அறியாத விதத்தில் இரகசியமாக செய்வது சிறப்பிற்குரியதாகும் என்று இஸ்லாம் கூறுகிறது.

தர்மம் செய்யும் போது அல்லாஹ்வின் திருப்தி மட்டுமே நோக்கமாக இருக்கவேண்டும். எனவேதான் தர்மம் செய்வதை வலியுறுத்தியுள்ள நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரகசியமாக தர்மம் செய்பவரை 'வலக்கரம் செய்யும் தர்மத்தை இடக்கரம் அறியாதவாறு தர்மம் செய்பவர்' என வர்ணித்துள்ளார்கள்.

"வேறு எந்த நிழலும் இல்லாத அந்த நாளில் ஏழு பேருக்கு அல்லாஹ் தன் நிழலிருந்து நிழல் தருகிறான். வலது கை தருவதை இடது கை அறியாது மறைத்து தருபவர் அந்த ஏழு பேரில் ஒருவர்' என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புகாரி)

அல்லாஹுதஆலா கூறுகிறான்:

"யார் தங்கள் பொருள்களை (தான தர்மங்களில் இரவிலும், பகலிலும் இரகசியமாகவும் பகிரங்கமாகவும் செலவு செய்கின்றார்களோ அவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடத்தில் நற்கூலி இருக்கிறது. (அல்குர்ஆன் 2:274)

மன மெய்யியல் 70

(சோதனை)



ஒரு ஊரில் சலவைத் தொழிலாளி ஒருவர் இருந்தார்.அவரிடம் வயதான கழுதை ஒன்று இருந்தது. அதற்கு வயதாகிப் போனதால் பொதி சுமக்கச் சிரமப் பட்டது.நடக்கவும் சிரமப் பட்டது. ஒருநாள் தொழிலாளி தன்

கழுதையுடன் சென்று கொண்டிருந்த போது கழுதை வழியில் இருந்த பாழடைந்த கிணற்றுக்குள் விழுந்து விட்டது.

எப்படியாவது அந்தக் கழுதையைத் தொலைத்து விட நினைத்திருந்த தொழிலாளி இதுதான் சமயமென்று நினைத்தார்.கழுதையை மேலே தூக்கிவிடாமல் அப்படியே கிணற்றில் புதைத்து விடுவோம் என அருகில் இருந்தவர்களைக் கூப்பிட்டார்.

கழுதை அப்படியே புதைந்து போகட்டும் என்று எல்லோருமாகச் சேர்ந்து மண்வெட்டி கொண்டு வந்து அருகிலிருந்த மண்ணை வெட்டிக் கிணற்றுக்குள் தள்ளினர்.

ஆரம்பத்தில் தன் மீது விழும் மண்ணைக் கண்டு திகைத்த கழுதை பின்பு சுதாரித்துக் கொண்டது.தனக்கு நேரும் துன்பத்தை எண்ணி வருந்திக் கொண்டிருந்தால் பயனில்லை ஏதாவது செய்து தப்பிக்க வேண்டும் என நினைத்தது.

தன் மீதும் விழும் மண்ணை உடம்பைச் சிலிர்த்து உதறியபடியே கொஞ்சம் கொஞ்சமாக அடி எடுத்து வைத்து வெளியே வர முயற்சித்தது.

மேலே இருந்தவர்களும் மண்ணை வெட்டிப் போட்டுக் கொண்டேயிருந்தனர். தப்பிக்க வேண்டுமென்ற குறிக்கோளே பிரதானமாக இருந்ததால் கழுதையும் வேகமாக மண்ணை உதறி விட்டபடி மேலே ஏறி வந்து விட்டது.

தொழிலாளியும் கழுதையின் விடாமுயற்சியில் வியந்து மனமிறங்கி தன்னுடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தான்.

மனிதர்களாகிய நமக்கும் பல விதங்களில் சோதனைகளும் துன்பங்களும் வந்து சேரலாம்.அதையே நினைத்து உழன்று கொண்டிராமல், வந்த சோதனையில் இருந்து தப்பிக்க அச்சோதனையிலேயே வழியும் இருக்கக் கூடும். எனவே சோதனையை விட்டு மீண்டு வர முயற்சி செய்வதே புத்திசாலித்தனம்.

திருக்குர்ஆனில் சோதனைக் குறித்து இறைவன் :

" இன்னும் மனிதர்களில் (ஓர் உறுதியும் இல்லாமல்) ஓரத்தில் நின்று கொண்டு அல்லாஹ்வை வணங்குகிறவனும் இருக்கிறான் - அவனுக்கு ஒரு நன்மை ஏற்படுமாயின் அதைக் கொண்டு அவன் திருப்தியடைந்து கொள்கிறான்.

ஆனால் அவனுக்கு ஒரு சோதனை ஏற்படுமாயின், அவன் (தன் முகத்தை) அல்லாஹ்வை விட்டும் திருப்பிக் கொள்கிறான். இத்தகையவன் இம்மையிலும், மறுமையிலும் நஷ்டமடைகிறான் - இதுதான் தெளிவான நஷ்டமாகும்". (அல்குர்ஆன் 22:11)

மேற்கூறிய அல்லாஹ்வின் வசனத்திலிருந்து நாம் பெறவேண்டிய படிப்பினை யாதெனில், அல்லாஹ் இந்த உலக வாழ்கையைச் சோதனைக் களமாக ஆக்கியிருக்கின்றான்.

இந்த உலகத்தில் வாழும் மக்களை நல்லவர்கள், கெட்டவர்கள் எனத் தரம் பிரித்துப் பார்க்க அனைவரையும் தன் சோதனைக்கு உட்படுத்துகின்றான்.

இச்சோதனைகளில், கடைசிவரை அவன் கட்டளைக்கு மாறு செய்யாமல் யார் பொறுமை கொள்கிறார்களோ அவர்களுக்கு நல்லடியார்கள் என சான்று பகர்ந்து மறுமையில் சொர்க்கத்தில் நுழையச்செய்வான்.

மனிதர்களில் பலர் இறை வணக்கத்தை சரியான முறையில் நிறைவேற்றுபவர்களாகவும், நல் அமல்கள் புரிபவர்களாகவும், தனிமையிலும் அல்லாஹ்வை அஞ்சக் கூடியவர்களாகவும் இருக்கலாம்.

இது போன்ற சூழலில் தமக்கு ஒரு இடர் சோதன வந்தால் அதைத் தாங்கிக் கொள்ளாமல் அல்லாஹ்வின் மீது அதிருப்தி காட்டுவது போல, தான் செய்து கொண்டிருக்கும் நல்ல செயல்களிலிருந்து பின்வாங்கி விடுகிறார்கள். இவர்கள் மனதில் ஷைத்தான் மிக எளிதில் ஊடுருவி மறுமையில் அவரை நரகத்தில் தள்ளிவிட அனைத்து ஏற்பாடுகளையும் செய்கிறான்.

அல்லாஹ் சிலர்களுக்கு மரணத்தை விதித்துச் சோதிக்கின்றான். சிலருக்கு செல்வங்களை பெருக்கியும், சிலருக்குச் செல்வங்களைக் குறைத்தும், சிலருக்கு நோயைக் கொண்டும், சிலருக்கு ஆரோக்கியத்தைக் கொண்டும் கூட சோதிக்கிறான்.

சிலருக்கு தாம் எதிர்பார்த்த விளைவுக்கு மாற்றமான முடிவைக் கொண்டும், சிலருக்கு உடலில் குறைபாடுகளுடனும் படைத்தும் பலவாறு சோதிக்கின்றான்.

சோதனைகள் எல்லோருக்கும் பொதுவானவையே. ஆதம் (அலை) முதல் முஹம்மது(ஸல்) வரை நபிமார்களும் இன்னும் இறைநேசர்களும் அல்லாஹ்வின் சோதனைக்கு ஆளானவர்களே.

அல்லாஹ் தன் திருமறையில் பல்வேறு நபிமார்களிகன் வரலாறுகளைக் கூறுகின்றான். அதில் எல்லா நபிமார்களும் சோதனைக்குட்படுத்தப் பட்டுள்ளனர் என்பதை தெளிவாக அறிய முடிகிறது.

தூதுத்துவத்தைச் சொல்ல வந்த நபிமார்களை, அல்லாஹ் சொல்லெண்ணாத் துன்பங்களுக்கும், இன்னல்களுக்கும் இடர்படுத்திச் சோதித்தான். எனினும் அவர்கள் அல்லாஹ்வின் மீது திடமான நம்பிக்கையை வைத்திருந்தனர். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தூதுத்துவப் பணியை செம்மையென நிறைவேற்றினார்கள்.

" உங்களுக்கு முன்னே சென்று போனவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் உங்களுக்கு வராமலேயே சுவர்க்கத்தை அடைந்து விடலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

அவர்களை (வறுமை, பிணி போன்ற) கஷ்டங்களும் துன்பங்களும் பீடித்தன. "அல்லாஹ்வின் உதவி எப்பொழுது வரும்" என்று தூதரும் அவரோடு ஈமான் கொண்டவர்களும் கூறும் அளவுக்கு அவர்கள் அலைகழிக்கப்பட்டார்கள்.

"நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி சமீபத்திலேயே இருக்கிறது" (என்று நாம் ஆறுதல் கூறினோம்) (குர்ஆன் 2:214)

நபி (ஸல்) அவர்களும், 'இறைவா! நான் இயலாமையிலிருந்தும், சோம்பலிலிருந்தும், கோழைத்தனத்திலிருந்தும், மூப்பிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன்.

மேலும், வாழ்வின் சோதனையிலிருந்தும், இறப்பின் சோதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.

மேலும், புதைகுழியின் வேதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்' என்று பிரார்த்திப்பது வழக்கம். அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி), நூல்: புகாரி

நமக்கு வரும் சோதனைகளில் இருந்து விடுபடுவது எப்படி? என்ற சிந்தனை ஏற்படுவதுண்டு. இதற்கான வழிகாட்டிகள் திருக்குர்ஆனிலும், மேற்கூறிய நபிமொழியிலும் உள்ளன.

"(சோதனைக்குள்ளாகும்) அவர்கள் தங்களுக்கு எத்தகைய துன்பம் ஏற்பட்டபோதிலும் 'நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம். நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம்' எனக் கூறுவார்கள்" என்று திருக்குர்ஆன் (2:156) தெரிவிக்கின்றது.

கழுதை தன்னை புதைப்பதற்கு அதன் மீது போடப்பட்ட மணலை அது படிக்கட்டாக்கி புதைகுழியிலிருந்து வெளிவந்த மாதிரி, நமக்கு வந்த சோதனைகளையெல்லாம் தாண்டி வெளிவரவேண்டும்.தடைகள் பயமுறுத்துகிறபோது, அவற்றைத் தயங்காமல் உடைத்தெறியுங்கள். கடக்க முடியாத தடையென்று எதுவுமே இல்லை.

மன மெய்யியல் 71

(மனம் பேசும் மௌன மொழிகள் (இல்ஹாம்))



புலன்களின் வாயிலாக பேசப்படுவது மனித மொழி

புலன்களுக்கு அப்பால் பேசப்படும் மொழி, மௌனம்

மனம் இழந்த நிலை தான் மௌனம். மௌனத்தில் இறைவன் உங்களுடன் பேசுவான் ஏனென்றால், மௌனம், இறைவனின் மொழி

இறைவனின் படைப்பில் அற்புதத்திலும் அற்புதம் ஒன்று உண்டென்றால், அது, மனிதன் என்னும் உயிரினம்.. கண்களுக்கு தெரியும் சரீர அமைப்பு. கண்ணுக்கே தெரியாத உள்ளமும் உணர்வுகளும் கொண்ட மனித மனம். இந்த இரண்டையும் சுமக்க சரீரம் என்னும் மனித கூடு.

இந்த பூலோகத்தில் பிறந்து, வாழ்ந்து, இறந்து, நொடிப்பொழுதில், தான் எங்கிருந்து வந்தானோ அதே இடத்திற்கு பயணப்பட்டு விடுகிறான் மனிதன். வாழ்ந்த வாழ்க்கையின் சுவடுகள் நொடிப்பொழுதில் அடியோடு மறைந்து விடுகிறது. செய்த பாவ புண்ணியங்களை மட்டும் எடுத்துக்கொண்டு , ஆத்மா, அடுத்த நிலைக்கு பயணப்பட்டு விடுகிறது.

இறைவன் மனிதனை படைத்ததோடு நின்று விடாமல், அவன் வாழ்வதற்கு மனம் என்ற ஒன்றையும் கொடுத்து, மனதின் சாம்ராஜ்யத்தில் அவனையே சக்ரவர்த்தியாக வாழ வைத்தான்.

ஒவ்வொரு மனிதனுக்கும், அவனுடைய மனதுடன் அவன் மட்டுமே பேசும் சக்தியையும் கொடுத்தான். மனமும் மனிதனும் பிரிக்கவே முடியாத இரு சக்திகளாக, நொடிப்பொழுதும் வாழ்க்கை என்ற பெயரில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மனமும் மனிதனும் பேசிக்கொள்ள ஒரு மொழி வேண்டாமா?. நிச்சயம் வேண்டும். மனிதன் மனதுடன் பேசவும், மனம் மனிதனுடன் பேசவும், இறைவன் மனதுக்கும் மனிதனுக்கும் ஒரு மொழியை கொடுத்தான். அதுதான் மௌன மொழி.

மனிதன் படைத்த மொழிகளுக்கு இலக்கணம் உண்டு. எழுத்துக்களின் எண்ணிக்கை உண்டு. வரம்பு உண்டு. மனித உணர்வுகளை பிரதிபலிக்க மனிதன் எழுத்துக்களை கூட்டி, வார்த்தைகளை உருவாக்கினான். ஒவ்வொருவரின் புலமைக்கும் கற்பனைக்கும் ஏற்ப, மொழி ஆளுமையை வார்த்தை ஜாலங்களில் காட்டினான் மனிதன் .

ஆனால், இறைவன் படைத்த மௌன மொழிக்கு எல்லைகள் கிடையாது . வார்த்தைகள் கிடையாது. மனிதனின் உணர்வுகளை மட்டுமே அடிப்படையாக வைத்து, மனிதன் மனதுடனும், மனம் மனிதனிடமும் மட்டுமே பேசும்மொழி. அதுதான் “மனம் பேசும் மௌன மொழி”.

மனம், மௌன மொழியில் மனிதனுடன் பேசிக்கொண்டே இருக்கும். ஒவ்வொரு மனிதனின் சிந்தனையும் ஓய்வே இல்லாமல் உதயமாகிக்கொண்டே இருக்கும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், ஒரு குளத்தில் கல் எறிந்தால், முதலில் ஒரு சிறு வட்டம் உருவாகும். அந்த ஒரு சிறு வட்டம், பெரிய பெரிய வட்டமாக வியாபிக்கும். பிறகு, அந்த வட்டம் குளத்தின் கரையை எட்டி விடும் .

இதே போல், ஒரு சிறு வட்டமாக உருவாகும் மனிதனின் சிந்தனை, பெரியதாக வியாபிக்கும் பொழுது, மனம் என்னும் குளத்தின் கரையை தொடும் பொழுது, மனம், மௌன மொழியில் அந்த மனிதனுடன் பேச ஆரம்பிக்கும். உங்கள் அனுபவத்தில் நீங்களும் மனம் உங்களுடன் பேசுவதை உணர்ந்திருக்கலாம்.

மௌன மொழி, தனிமையில் மட்டுமே பேசப்படும் மொழி. மனிதனும் மனமும் தங்களுக்கான தனிமையில் பேசிக்கொள்ளும் மொழி அது. இறைவன் உள்ளத்தையும் உணர்வையும் கொண்ட இந்த மனித சரீரத்தை பிறக்க வைத்தான்.

உடலும் உயிரும் கொண்ட சரீரம் பிறந்தவுடன், மனம் என்ற ஒன்று, பிறந்த சரீரத்துடன் ஒட்டிக்கொள்கிறது. இந்த மனம் எப்படி தோன்றியது?. எங்கிருந்து தோன்றியது.? எப்படி தன்னை சரீரத்துடன் இணைத்து கொள்கிறது. ? இறைவனின் அற்புத படைப்பில் விடை தெரியாத கேள்விகளில் இதுவும் ஒன்று.

அந்த எல்லையில்லாத பிரபஞ்சமே நொடிப்பொழுதில் படைக்கப்படும் பொழுது, மனிதன் என்ற படைப்பை உருவாக்க எவ்வளவு நேரம் ஆகி விடப்போகிறது இறைவனுக்கு?

"வானங்களையும் பூமியையும் படைத்தவன் (கேவலம்) அவர்களைப் போன்றவர்களைப் படைக்கச் சக்தியற்றவனா? நிச்சயமாக அவனே மிகப்பெரிய படைப்பாளனும் மிக நன்கறிந்தவனும் ஆவான் "

(குர்ஆன் : 36:81)

" (மனிதர்களே!) நீங்கள் பலமான படைப்பா? அல்லது வானமா? அவன்தான் அவ்வானத்தைப் படைத்தான்". (குர்ஆன் : 79:27)

இப்பொழுது, மனம் எப்படி சரீரத்துடன் ஐக்கியமாகிறது என்பதை கொஞ்சம் புரிந்து கொள்வோம்.

உங்களுக்கு ஒரு உதாரணம் வாயிலாக, இந்த மனம் என்னும் அற்புதத்தை புரிய வைக்க முயல்கிறேன். நமக்கெல்லாம் நன்றாக தெரிந்த வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இந்த மூன்றையும் எடுத்து கொள்வோம்.

உங்களில் பல பேருக்கு வெற்றிலை போடும் பழக்கம் இருக்கலாம். வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு- இந்த மூன்றையும் கலந்து வாயில் போட்டு மெல்லும் பொழுது சிவப்பு நிறம் தோன்றுகிறதே .

இந்த சிவப்பு நிறம் எங்கிருந்து வந்தது? சுண்ணாம்பில் இருந்தா ? வெற்றிலையில் இருந்தா ? அல்லது பாக்கில் இருந்தா? உங்களால் சொல்ல முடியுமா? சொல்ல முடியாதல்லவா ? இந்த மூன்றின் கலவை ஏற்படும் பொழுது சிவப்பு நிறம் தோன்றிவிடுகிறது. இதே போல் தான், உடல், உயிர் தோன்றியவுடன், மனம் வந்து உடலுடன் ஐக்கியமாகி விடுகிறது.

மனம் பேசும் மொழி எவ்வளவு வீரியம் மிக்கதோ, அவ்வளவு வீரியம், மனம் பயணிக்கும் மனோ வேகத்திற்கும் உண்டு. ஒளி, ஒலியை காட்டிலும் அசாத்திய வேகத்தில் பயணிக்கக்கூடியது மனம். நினைத்த மாத்திரத்தில் பிரபஞ்சத்தின் எல்லையையே தொட்டு விடும் சக்தி படைத்தது. மனோ வேகம். இனி. மனம் பேசும் மௌன மொழியை பற்றி கொஞ்சம் சிந்திப்போம்.

மூன்று சந்தர்ப்பங்களில் மனம், மனிதனுடன் மௌன மொழயில் பேசும்.

முதலில், மனிதனின் சிந்தனை மனதை வியாபித்து விளிம்பில் நிற்கும் பொழுது , மனம், மௌன மொழியில் பேச ஆரம்பிக்கும் இந்த மௌன மொழியின் ஆழம் தான், சிந்தனையயை செயலாக்குகிறது.

இரண்டாவது சந்தர்ப்பம், மனிதன் ஒரு தவறை செய்யும் பொழுது, சமுதாயம் கொடுக்கும் தண்டனையை, “அந்த தண்டனை சரியே”, என்று மனம் ஏற்கும் பொழுது, மௌன மொழி பேசும். செய்த தவறை நினைத்து வருந்தும் பொழுது, மனம் பேசும் ஆறுதல் மொழிதான், அந்த மௌன மொழி.

மூன்றாவது சந்தர்ப்பம், சமுதாயம் தனக்கு அநீதி இழைக்கும் பொழுது , மனிதனுக்கு மனம் கூறும் சமாதானமும் ஆறுதலும் தான் அந்த மௌன மொழி.

வாழ்க்கை என்று சொல்லும் பொழுதே, அது பல மனிதர்களின் கட்டமைப்பில் உருவாக்கப்படும் சமுதாயம் என்பது நம் எல்லோருக்குமே தெரியும்.

சமுதாயத்திற்கு என்று வரையறை, கட்டுப்பாடுகள், வாழ்க்கை நெறிமுறைகள், சட்டதிட்டங்கள், எல்லாமே உண்டு. இந்த கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட்டு வாழ்பவன் தான் மனிதன். இது தான் சமுதாய வாழ்க்கை என்று ஆனது.

ஆனால், சமுதாய வாழ்க்கையில், எல்லா நேரங்களிலும் மனிதனுக்கு நியாயம் கிடைத்து விடுகிறதா ? இல்லையே! சமுதாய வாழ்க்கை, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது, மனிதன் உருவாக்கிய மொழிகள் மட்டுமே இங்கு சமுதாயத்தை ஆளுகின்றன.

சமுதாய வாழ்க்கையில் போராடியும் கிடைக்காத நீதி, நியாயம், மனிதனின் மனம் என்னும் சாம்ராஜ்யத்தில், கற்பனையில் அவனுக்கு கிடைத்து விடுகிறது. ஒரு மனிதனின் ஏமாற்றங்களுக்கும் கோபங்களுக்கும் வடிகாலாக இருப்பது மனித மனம் மட்டுமே . மனிதன், அவனுடைய மனதுடன் கேட்டு பெறும் நீதி, நியாயம் எல்லாமே, தனி மனிதனை பொறுத்த வரை சரி. .

இங்கு, கற்பனைக்கும் எல்லையில்லை.தண்டனைக்கும் வரையறை இல்லை. தன் நியாயப்படி, தனக்கு அநீதி இழைத்த ஒவ்வொருவருக்கும், தனக்கும், நீதி கேட்டு போராடும் நீதி மன்றம் தான், மனித மனம்.

இங்கு. ஆளுமையில் இருப்பது மௌனத்தில் பேசப்படும் மௌன மொழி மட்டுமே. சமுதாய நீதி மன்றத்தில் நடக்கும் போராட்டத்தில், வாதியும் ஜெயிக்கலாம். பிரதிவாதியும் ஜெயிக்கலாம்.

ஆனால், மனம் என்னும் நீதி மன்றத்தில், வாதி மட்டுமே வெற்றி பெறுவான். பிரதிவாதி எப்பொழுதுமே தோற்றுத்தான் போவான். அப்படியானால், மனம் என்னும் நீதி மன்றத்தில், நீதியே கிடையாதா என்று நீங்கள் கேட்கலாம்.

ஒரு தனி மனிதன் நியாயம் என்று நினைப்பது, சமுதாயத்தை பொறுத்தவரை அநியாயமாக இருக்கலாம் . ஆனால், அவனை பொறுத்தவரை அது நியாயமே .

மனிதனுக்கு எதுவெல்லாம் சௌகரியமோ, அதையெல்லாம் மனம்சொல்லிக்கொண்டே இருக்கும். “நீ நல்லவன்”, என்று மனம் சொல்லுவதை மனிதன் அப்படியே நம்புவான். மனிதனும் அதைத்தானே சமுதாயத்திடம் இருந்து எதிர்பார்க்கிறான் ?

அவன் நல்லவன் என்பதற்கான காரணங்களையும் மனம் சொல்லிக்கொண்டே இருக்கும். இப்படி, சமுதாயத்தில் தனக்கு ஏற்படும் காயங்களுக்கு போடும் மருந்து தான், மனம் பேசும் மௌன மொழி.

இந்த புதிய தொடரை துவங்கும் நானும் இதற்கு விதி விலக்கல்ல. எவ்வளவோ சந்தர்ப்பங்களில், என் மனம், எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு மருந்து போட்டிருக்கிறது. எனக்கு ஏற்பட்ட என் அனுபவம், உங்களில் பலருக்கும் ஏற்பட்டிருக்கலாம்.

ஒவ்வொரு நாளும் , வாழ்க்கையில் நாம் பேசும் வார்த்தை மொழிகளை எவ்வளவோ கேட்டுவிட்டோம். சிறிது காலத்திற்கு நம் மனம் பேசும் மௌன மொழியை கேட்போமே !

மன மெய்யியல் 72

(அரபும், தமிழும்)



மனமும் மொழியும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு இடையிலான உறவு பல ஆண்டுகளாக உளவியல், மொழியியல், தத்துவியல் போன்ற துறைகளில் ஆய்வு செய்யப்பட்டு இரண்டுமிடையே ஒரு வலுவான தொடர்பு உள்ளது என்பது இப்போது பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அதே நேரத்தில் நமது மன நிலைகளும் அனுபவங்களும் மொழியைப் பயன்படுத்தும் விதத்தை வடிவமைக்கின்றன என்பதையும் கண்டுள்ளனர்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் இரண்டு மொழிகள் ஒன்றொடொன்று கலந்து புதிய புதிய சொற்களை வடிவமைப்பதும் அதற்கு தக்கவாறு மனமும் வளைந்து கொடுப்பதைக் கண்டு நம் மனமே பிரமிக்க வைக்கிறது !

தமிழில் அழகு என்பது இனிய என்கின்ற எல்லா பொருட்களையும் குறிக்கும் 'அழகு' என்கின்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் ஒவ்வொருவர் இதயத்திலும் ஒவ்வொரு விதமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இளைஞனின் உள்ளத்தில் அழகு என்ற சொல் ஒரு யுவதியையும், கவிஞனின் உள்ளத்தில் அழகு என்ற சொல் ஒரு சோலையையும், கலைஞனிடம் சித்திரத்தையும், பறவைநேசர்களிடம் அது ஒரு பறவையையும், கட்டடக் கலைஞனிடம் ஒரு நெடிதுயர்ந்த கட்டடத்தையும், பிரதிமைகளாக உருவாக்கிக் காட்டும் திறன் பெற்றது.

நந்தி என்பவர் அழகுக்கு இணையான இனச் சொற்களைப் பட்டியலிட்டிருக்கிறார்.

அலங்காரம், அணி, அருமை, அமைதி, அமுதம், ஆபரணம். இனிமை, இசைவு, இணக்கம், உயர்ச்சி, ஒளி, ஜோதி, கவர்ச்சி, கம்பீரம், காந்தி, காந்தம், கிருபை, குணம், குளிர்ச்சி, சாந்தகம், சிங்காரம், சீலம், சீர்மை, சுந்தரம், செல்வம், செல்லம், செம்மை, செல்வி, செழிப்பு, சொக்கு, சொகுசு, சோபனம் சௌந்தரம், திரள், தூய்மை, நேர்த்தி பண்பு, பருவம், புனிதம், புதுமை, பூரிப்பு, பூரணம், பெருமை, பொலி(மை)வு, மதிப்பு, மதர்ப்பு, மென்மை,

மேன்மை,லட்சணம் வாவண்யம், வனப்பு, வசீகரம், விசித்திரம்....என அந்தப் பட்டியல் நீளுகிறது.

ஆனாலும் இவை எதுவும் 'அழகு' என்ற சொல்லுக்கு ஈடாக முடியாது. ஏனென்றால் அந்தச் சொல்லே மிகவும் அழகானது அழகு பரிமாறுயவனுக்கே போதையூட்டும் அதிசயமது,

நம் கற்பனைகளின் எல்லை நம் அனுபவத்திற்கேற்ப விரிய அந்தச் சொல் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

தமிழைப் போன்றே அரபி மொழியின் சொல்வளம் வியக்கத்தக்கது. ஆண்டு என்பதற்கு 24 சொற்களும், ஒளி என்பதற்கு 21 சொற்களும், இருள் என்பதற்கு 52 சொற்களும், கதிரவன் என்பதற்கு 29 சொற்களும், நீர் என்பதற்கு 170 சொற்களும், ஒட்டகம் 1000 சொற்களையும், வாள் 1000 சொற்களையும் கொண்டுள்ளது அரபி மொழி.

தமிழர்களுக்கும் அரபிகளுக்கும் இடையே நிலவிய கலாசார, வணிக மற்றும் சமய உறவுகள் பல நூற்றாண்டுகளைக் கடந்து நிற்கின்றன. கி.மு. 178 இல் தமிழகம் வந்த அகதார்சைட்ஸ் என்ற கிரேக்கப்

பயணி, தென் தமிழகத்தில் நஹகூஷிங்ஹ என்று ஓர் ஊர் இருந்ததாகவும், அங்கு அரபிகளுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்ததாகவும் குறிப்பிடுவார்.

கடலோர தமிழகத்தில் அரபுலக வணிகர்களின் குடியேற்றம் பற்றிய சான்றுகள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம்,மணிமேகலை உள்ளிட்ட இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன.

இந்தியாவை அரபி மொழியில் அல்-ஹிந்த் என அழைக்கிறோம். அரபு மக்கள் தங்களின் பெண் குழந்தைகளுக்கு ஹிந்த் என பெயரிடும் முறை இன்றும் நிலவுகிறது.

நமது தாய் மொழி தமிழைப் போலவே அரபியும் ஒரு செம்மொழியாகும். அரபிக்கும் தமிழுக்குமான உறவு இன்றைக்கு மிகவும் நெருக்கமானதாகும். தமிழ்ச் சொற்களோடு இரண்டறக் கலந்த சொற்களாகிவிட்டன.

அரபிச் சொற்கள் சுமார் 1500 க்கும் மேற்பட்ட அரபுச் சொற்கள் தமிழோடு இரண்டறக் கலந்திருக்கின்றன. உதாரணமாக, அமல், இனாம், கஜானா, ஜாமின், கைதி, ஜில்லா, தாலுக்கா, தாசில்தார், நகல், மகஜர், மசோதா, மராமத்து, ஜப்தி, வசூல், தகராறு, பாக்கி, வாரிசு, தாக்கல், மைதானம், கடுதாசி, ரசீது, மாமூல், வகையறா என இவைகளைக் குறிப்பிடலாம்.

மேலும் ...அமல், இனாம், கஜானா, ஜாமின், கைதி, ஜில்லா, தாலுகா, தாசில்தார், நகல், மசோதா, மராமத்து, ஜப்தி, மகஜர், மகசூல், வசூல், தகராறு, பாக்கி, வாரிசு, தாக்கல், மைதானம், கடுதாசி, ரசீது, மாமூல் வகையறா, பரவாயில்லை, ஜோராக, நாசூக்காக, இலாயக்கான முதலிய சொற்றொடர்களும் தமிழ் மொழியின் பேச்சு வழக்கில் உள்ளன.

அரபி மொழி ஓர் இந்திய மொழி என்பது பலரும் அறியாத, வியப்பான கூற்றாகும். இந்திய அரசின் 2001-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் அரபி மொழியை தங்களின் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர்.

சரியாக கூறப்போனால் 51,728 இந்தியர்கள் அரபி மொழியை தாய் மொழியாகக் கொண்டுள்ளனர்.சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மவ்லானா அபுல்கலாம் ஆசாத்தின் தாய்மொழியும் அரபியே.

நான்காயிரம் அடிகளைத் தாண்டும் அரபிக் கவிதைகளை இயற்றி, அரபிகளே வியந்து போற்றும் வகையில் பங்களிப்புச் செய்துள்ள சதகத்துல்லாஹ் அப்பாவும், தைக்கா சாகிபு வலியும் தமிழர்களே.

அரபிக் கவிதைகளை இயற்றிய பல கவிஞர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக, கேரளாவைச் சேர்ந்தவர்களாக, இதர இந்திய மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இவர்கள் தங்கள் பங்களிப்பு மூலம் அரபி மொழியை வளப்படுத்தியுள்ளனர்.

உலக அரங்கில் அரபி மற்றும் இஸ்லாமிய இலக்கியங்களில் முத்திரைப் பதித்த ஷிப்லி நுஃமானி, ஷாஹ் வலியுல்லாஹ், குலாம் அலி ஆஜாத் பில்கிராமி ஆகியோர் இந்தியர்களே.

அரபி மொழியின் எழுத்துகள் அழகிய வடிவைப் பெற்றிருப்பதோடு அதன் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், அம்மொழியினை விரும்பிப் படிப்பவர்களை எளிதில் ஆட்கொண்டு விடுகிறது. தமிழ் மொழியைப்போல் அரபி மொழியும் செம்மொழியாக விளங்குகிறது. அரபி எழுத்துகள் வலது புறமிருந்து இடது புறமாக எழுதப்படுகின்றன.

கடந்த மார்ச் 28 முதல் 31 வரை சவுதி அரேபிய அரசின் கலாச்சாரத் துறை சார்பாக அந்நாட்டின் தமாம் நகரில் அரபுக் கவிஞர் மாநாடு நடந்தது.

திருக்குறளை அரபு மொழியில் மொழிபெயர்த்த முனைவர் ஜாஹிர் உசேன், தமிழ்நாடு சோஷியல் அண்டு வெல்ஃபேர் சங்கத்தின் முயற்சியால் அம்மாநாட்டில் கலந்துகொண்டார்.

திருக்குறளின் இன்பத்துப் பாலிலிருந்து 40 குறள்களை அவர் தமிழில் வாசிக்க, அருகே இருந்த அரேபியக் கவிஞர் அலி அத்தாபா அதற்கான மொழிபெயர்ப்பை அரபு மொழியில் வாசிக்க, அரங்கமே திருக்குறளின் மகிமையில் அரபுலகம் மயங்கி நின்றது !

ஆக, அரபி மொழி என்பது அன்னிய மொழியல்ல. அது நம்மோடு கலந்து விட்ட, நம்மை விட்டுப் பிரிக்க முடியாத மொழியாக இன்று திகழ்கிறது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் இரண்டு மொழிகள் ஒன்றொடொன்று கலந்து புதிய புதிய சொற்களை வடிவமைப்பதும் அதற்கு தக்கவாறு மனமும் வளைந்து கொடுத்து நமக்கு விளக்கமளிப்பதைக் கண்டு நம் மனமே பிரமிக்க வைக்கிறது

மன மெய்யியல் 74

(மனதினில் நீங்கா இடம்பிடித்த கவிதைகள்)



எல்லா கவிதைகளும் ஆழ்மனதில் படிவதில்லை. அப்படிப் படிந்தால் அது என்றைக்கும் நினைவில் இருக்கும். எப்போழுதோ படித்த திருக்குறள் நினைவுக்கு வருகிறது. ஆத்தி சுவடி நினைவுக்கு வருகிறது. வழிபாட்டு பாடல்கள் சில நினைவுக்கு வருகிறது.

சிறு வயதில் பாடிய கிள்ரு (அலை) பைத் இன்றும் நினைவில் இருக்கிறது. ஜெய்சீலி டிச்சர் பாடலாக சொல்லிக் கொடுத்த வாய்பாடு 10 ம் ஞாபகத்தில் இருக்கிறது திரைபட கவிதைகள் எப்படி நினைவுக்கு வருகிறது. கவிதையின் சில வரிகளாவது நினைவுக்கு வருகிறது. எழுதியவரின் பெயரும் நினைவுக்கு வருகிறது.

அதே போல சித்தர்களின் பாடல்கள் மேலோட்டமாக , ஏதோ விளையாட்டுத் தனமானவைப் போல் தோன்றும். அது மேலோட்டமாகப் பார்க்கும்போது ஒரு பொருளையும், ஆழ்ந்து ஆராயும் போது மற்ற பொருளையும் ஆன்மிகத்தின் உச்சத்தை தொடும். அவ்வாறு ஆழ்ந்து ஆராய்ந்து அதன் பொருளை அறிய ஞானிகளால் மட்டுமே முடியும்.

சித்தர்களின் பாடல்களின் பொருளை அறிய அதனை விட மெல்லிய மனம் அதிர்வில் மனதை வைக்க வேண்டும்.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்

நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி

கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

இது கடுவளி சித்தர் எழுதிய பாடல். இது மேலெழுந்த வாரியாக பார்க்கும்போது, நந்தவனத்தில் இருந்த ஆண்டி ஒரு பைத்தியக்காரன் போல நமக்கு தோன்றும். குயவனை நான்கு, ஆறு மாதமாக வேண்டி கேட்டு பெற்ற தோண்டியை கூத்தாடி உடைத்து விட்டான் என்று தோன்றும்.

ஆனால் ஆழ்ந்து நோக்கும் போது, இது மிகப்பெரிய தத்துவத்தை உள்ளடக்கிய பாடல். இங்கு

நந்தவனம் = உலகு

ஆண்டி= ஆன்மா

நால் ஆறு மாதம்= 4+6 பத்து மாதங்கள் தாயின் வயிற்றிலிருந்த கருவறை

குயவன் = இறைவன்

தோண்டி= மனிதப் பிறவி

அதாவது ஆன்மாவானது, பத்து மாதங்கள் தாயின் கருவறையில் இருந்து, இறைவனின் கருணையினால் மனிதப் பிறவி எடுக்கிறது.

ஆனால், வேண்டி பெற்ற இந்த மனிதப் பிறவியின் அருமை தெரியாமல், ஆன்மாவானது உலக இன்பங்களில் சிக்கிக் கொண்டு, உலக இன்பங்களில் மூழ்கி மனிதப்பிறவியை முடித்து விடுகிறது.

மனிதப் பிறவி என்பது மிகவும் அரிதான ஒருபிறவி. பல்வேறு பிறவிகளை கடந்த மனிதன், மனிதப் பிறவியை அடைந்து உள்ளான். இதைத்தான் ஔவையார் மிக எளிதாக புரியும் வகையில் பின் வருமாறு கூறுகிறார்கள்.

" அரிது அரிது, மானிடராய்ப் பிறத்தல் அரிது

மானிடராய் பிறந்த காலையின்

கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறத்தல் அரிது

கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறந்த காலையின்

ஞானமும் கல்வியும் நயத்தல் அறிது

ஞானமும் கல்வியும் நயந்த காலையும்

தானமும் தவமும் தான் செய்தல் அரிது

தானமும் தவமும் தான் செய்ததாயினும்

வானவர் நாடி வழி பிறந்திடுமே!"

இத்தகைய மதிப்பு வாய்ந்த மனிதப் பிறவியை மனிதன் கூத்தாடி கூத்தாடி அதாவது ஐம்புலன்களின் புலன் மயக்கத்தில் சிக்கிக்கொண்டு மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை இழந்து இறைவனை அடையாமல் இவ்வுலக வாழ்வை பெரிதென எண்ணுகிறார்களே என்று வருத்தப்படுகிறார் கடுவளி சித்தர்.

மேற்கண்ட பாடல் எத்தனை எளிமையாக எழுதப்பட்டு, மனிதன் ஆழ்மனதில் ஆழமாக அழகாக பதிகிறது ! இதே மாதிரி சினிமாப் பாடல்தானே என்ற நினைக்கும் போது இலக்கிய தரம் வாய்ந்த பாடல்களும் எழுதப்பட்டு மக்கள் மனதினில் நீங்கா இடம் பெற்றுள்ளன.

அத்திக்காய் காய்காய்

ஆலங்காய் வெண்ணிலவே

இத்திக்காய் காயாதே

என்னுயிரும் நீயல்லவோ

என்ற கண்ணதாசனின் பாடலைப் பலரும் கேட்டிருப்பீர்கள். இதை வெறும் சினிமாப்பாட்டு என்று மட்டும் நினைத்துவிடாதீர்கள். சங்ககாலத்துப் பாடல் ஒன்றிலிருந்து சில வரிகளை எடுத்து கண்ணதாசன் திரையிசையில் கலக்கிய பாடல். இதை சினிமாவில் போடுகிறேன் என்றதற்கு எம் எஸ் வி கண்ணதாசனை விடவில்லை. இதெல்லாம் மக்கள் ரசிக்க மாட்டார்கள் என்று புறந்தள்ளிவிட்டார்.

கண்ணதாசன் கண்களில் கண்ணீர். "அடடா கண்ணதாசா இதுக்கெல்லாம் அழலாமா சரி சரி போடலாம் விடு" என்று எம் எஸ் வி சம்மதித்திருக்கிறார் இந்தப் பாட்டில் வரும் காய்களை உற்றுக்கவனியுங்கள். அவற்றுள் வேறு அர்த்தங்கள் பொதிந்துள்ளன. இது மிகமிக இலக்கியத்தரம் வாய்ந்த சினிமாப் பாடல். அதனால் எனக்கு மிக மிகப் பிடித்தபாடல்.

தமிழ்க் கவிதை இலக்கியத்தில் ஒரு சுவாரசியமான விசயம் சிலேடை. இரு பொருளைத்தரும் ஒரு சொல் அல்லது வரி அல்லது பாடல்தான் சிலேடை. நேரடியாக ஒரு பொருளும் மறைமுகமாக இன்னொரு பொருளும் அந்தப் பா வகைக்குள் ஒளிந்துகிடக்கும். இதற்கு உதாரணமாய் எத்தனையோ பாடல்களைச் சொல்லலாம். அதில் ஒன்றுதான் இந்த அத்திக்காய் காய் காய்.

அந்த சங்ககாலப்பாடலில் வருவது சில காய்கள்தான். ஆனால் அதைத் தழுவி கண்ணதாசன் எழுதிய திரையிசைப்பாடலில் ஏகப்பட்ட காய்கள். கொத்தவால் சாவடிக்குள் நுழைந்துவிட்டதைப் போல கமகமக்கும்

அத்திக்காய்

ஆலங்காய்

இத்திக்காய்

கன்னிக்காய்

ஆசைக்காய்

பாவைக்காய்

அங்கேகாய்

அவரைக்காய்

கோவைக்காய்

மாதுளங்காய்

என்னுளங்காய்

இரவுக்காய்

உறவுக்காய்

ஏழைக்காய்

நீயும்காய்

நிதமுங்காய்

இவளைக்காய்

உருவங்காய்

பருவங்காய்

ஏலக்காய்

வாழக்காய்

ஜாதிக்காய்

கனியக்காய்

விளங்காய்

தூதுவழங்காய்

மிளகாய்

சுரைக்காய்

வெள்ளரிக்காய்

சிரிக்காய்

கொற்றவரைக்காய்

தனிமையிலேங்காய்

எத்தனைக் காய்கள் பாருங்கள். இத்தனையையும் கொண்டு கண்ணதாசன் எழுதிய அருமையான பாடல்தான் அத்திக்காய் காய் காய். இதோ முழுப்பாடலும். பாடலை முதலில் பாடிப்பார்த்துக்கொள்ளுங்கள். பிறகு ஒவ்வொரு வரியையும் நாம் அலசுவோம்.

அத்திக்காய் காய்காய்

ஆலங்காய் வெண்ணிலவே

இத்திக்காய் காயாதே

என்னுயிரும் நீயல்லவோ

கன்னிக்காய் ஆசைக்காய்

காதல்கொண்ட பாவைக்காய்

அங்கேகாய் அவரைக்காய்

மங்கை எந்தன் கோவைக்காய்

மாதுளங்காய் ஆனாலும்

என்னுளங்காய் ஆகுமோ

என்னை நீ காயாதே

என்னுயிரும் நீயல்லவோ

இரவுக்காய் உறவுக்காய்

எங்கும் இந்த ஏழைக்காய்

நீயுங்காய் நிதமுங்காய்

நேரில் நிற்கும் இவளைக்காய்

உருவங்காய் ஆனாலும்

பருவங்காய் ஆகுமோ

என்னை நீ காயாதே

என்னைப்போல் பெண்ணல்லவோ

இத்திக்காய் காயாதே

என்னுயிரும் நீயல்லவோ

(அத்திக்காய்)

ஏலக்காய் வாசனைபோல்

எங்கள் உள்ளம் வாழக்காய்

ஜாதிக்காய் பெட்டகம்போல்

தனிமை இன்பம் கனியக்காய்

சொன்னதெல்லாம் விளங்காயோ

தூதுவழங்காய் வெண்ணிலா

என்னை நீ காயாதே

என்னுயிரும் நீயல்லவோ

(அத்திக்காய்)

உள்ளமெலாம் மிளகாயோ

ஒவ்வொருபேச் சுரைக்காயோ

வெள்ளரிக்காய் பிளந்ததுபோல்

வெண்ணிலவே நீ சிரிக்காயோ

கோதை எனைக் காயாதே

கொற்றவரைக்காய் வெண்ணிலா

இருவரையும் காயாதே

தனிமையிலேங்காய் வெண்ணிலா

(அத்திக்காய்)

இப்படித்தான் ஒரு அரசியல் பிரமுகர்

"நல்ல தமிழில் எழுதிக் கொண்டிருந்த கவிஞர் காய்களை வைத்து பாடல் எழுத ஆரம்பித்து விட்டார்"

என்று கிண்டலடித்து மேடையில் பேசினார்.

"அத்திக்காய் , ஆலங்காய், இந்தக் காய், அந்தக் காய், மிளகாய், கோவக்காய் என்று எழுதித் தள்ளுகிறார் "

என்று விமர்சித்தார். கவிஞர் விமர்சனத்திற்கு பதிலடி கொடுத்தார்.

""நான் காய்களைப் பற்றி எழுதுகிறேன் என்று சில அறியாதவர்கள் பேசி வருகிறார்கள்.அத்திக்காய் என்ற ஒரு காய் உண்டு. மறுக்கவில்லை. நிலவுகாயும் நேரம்.நாயகன் நிலவைப் பார்த்து நிற்க, நாயகி 'அத்திக்காய் காய் காய்' என்று பாடுகிறாள்.


அத்திக்காய் என்றால் அந்த திசையில் காய் என்று பொருள். நிலா காய்கிறது சொல்வதை காய் என்று எழுதினேன். அதே போல கன்னிக்காய் என்றால் நாயகியை குறிக்கிறது. ஆசைக்காய் அவளுடைய ஆசையைக் குறிக்கிறது.

பாவைக்காய் என்பது பாவை பெண் (பாகற்காய் அல்ல) . கோவைக்காய் என்றால் கோ மன்னன் (கோவைக்காய் அல்ல) .மாதுளங்காய் என்றால் மாது + உள்ளம் மாதுளம் என்பது பொருளாகிறது.

இது போல் வாழ்க்காய் (வாழை அல்ல),பேச்சு + உரைக்காயோ (சுரைக்காய் அல்ல) , கொற்றவன் + அவரை காய் (அவரைக்காய் அல்ல) இப்படி வார்த்தைகளை எப்படித் தான் தேடிப் பிடித்தாரோ கவிஞர்.

மன மெய்யியல் 75

(திருமணம்)



(கலீல் ஜிப்ரானின் , தீர்க்கதரசி கவிதையில்....)

(பின்பு இறைவன் ஆதமை நோக்கி:) “ஆதமே! நீரும், உம் மனைவியும் சுவர்க்கத்தில் குடியிருந்து, நீங்கள் இருவரும் உங்கள் விருப்பப் பிரகாரம் புசியுங்கள்; ஆனால் இந்த மரத்தை (மட்டும்) நெருங்காதீர்கள்; (அப்படிச் செய்தால்) நீங்கள் இருவரும் அநியாயம் செய்தவர்கள் ஆவீர்கள்” (என்று அல்லாஹ் கூறினான்). (குர்ஆன் : 7:19)

மீண்டும் அல்மித்ரா கேட்டாள்:

"குருவே, திருமணம் என்றால் என்ன ?"

அவர் சொல்லத் துவங்கினார்:

"நீங்கள் ஒன்றாகவே பிறந்தீர்கள். என்றென்றைக்கும் ஒன்றாகவே இருப்பீர்கள்.

மரணத்தின் வெள்ளைச் சிறகுகள் உங்கள் நாள்களைச் சிதறடிக்கும் வரை நீங்கள் ஒன்றாகவே இருக்கப் போகிறீர்கள்.

ஓ, நீங்கள், கடவுளின் மௌன நினைவிலும் ஒன்று சேர்ந்தே இருப்பீர்கள்.

ஆனால், உங்கள் ஒன்றிணைப்பின் நடுவே இடைவெளி இருக்கட்டும்.

வானுலகின் காற்றுகள் உங்கள் இருவருக்கும் இடையில் நடனமாடட்டும்.

ஒருவரையொருவர் காதலியுங்கள். ஆனால், காதலின் கைதியாகி விட வேண்டாம்.

உங்கள் ஆன்மாக்களின் கரைகளில் கடல் அசைந்து கொண்டிருக்கட்டும்.

ஒருவர் குவளையை மற்றவர் நிரப்புங்கள். ஆனால், ஒரே

கோப்பையிலிருந்து குடிக்காதீர்கள்.

ஆளுக்கொரு ரொட்டித் துண்டைப் பகிர்ந்து கொள்ளுங்கள், ஆனால், ஒரே துண்டை இருவரும் உண்ண வேண்டாம்.

ஒன்றுசேர்ந்து, ஆடிப் பாடி ஆனந்தமாய் இருங்கள். என்றாலும், உங்கள் தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

யாழின் நரம்புகள் தனித்தனியே இருந்தாலும், அவை மீட்டப்படுகையில் ஒரே இசையைத்தான் எழுப்புகின்றன.

உங்கள் இதயங்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள். ஆனால், ஒருவருடையதை மற்றவரே வைத்துக் கொள்ள அனுமதிக்காதீர்கள்.

உங்கள் இதயங்களில் வாழ்வின் கை மட்டுமே இருக்க வேண்டும்.

ஒன்றாகச் சேர்ந்து நில்லுங்கள். ஆனால், மிக நெருக்கமாக அல்ல.


கோயிலின் தூண்கள் இடைவெளி விட்டுத்தானே நிற்கின்றன.

தேக்கு மரமும், சைப்ரஸ் மரமும், ஒன்றின் நிழலில் மற்றொன்று வளராது."

(மேற்கூறிய திருக் குர்ஆன் (7:19) வசனத்தை கலீல் ஜிப்ரான் தன் கவிதையில் சொல்லவில்லை. ஆனால் என் மனம் இந்த வசனத்தைப் பதிவு செய்ய சொன்னது. வசனத்திற்குரிய விளக்கமாகத்தான் இந்த கவிதையின் ஒவ்வொரு வரியையும் நான் பார்க்கிறேன் . மறுபடியும் மேற்கண்ட திருக்குர்ஆன் வசனத்தை உள்வாங்கி படியுங்கள். கலீல் ஜிப்ரான் தெரிவார்)

மன மெய்யியல் 76

(புத்தகங்கள்)



மன மெய்யியலின் தலை வாயில் புத்தகங்கள் என்றால் அது மிகையாகாது.

புரட்டும்போது நம்மையே புரட்டிப் போடுகின்ற வல்லமை புத்தகங்களுக்கு உண்டு. அவை நம்மைப் புதிய அனுபவத்திற்கு அழைத்துச் செல்கின்றன.

இந்த பிரபஞ்சத்திலேயே மிக மிக அற்புதமான உபகரணம் நம் எல்லாரிடமும் இருக்கிறது. அதை உபயோகிக்கவும் நம்மிடமே சாவியும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்தச் சாவிதான் புத்தகம் என்ற அற்புதம்.

மனிதன் கண்களுக்குத் தெரிகிறான். அவன் மனம் கண்களுக்குத் தெரிவதில்லை. புத்தகம் கண்களுக்குத் தெரிகிறது. அதில் உள்ள கருத்துகள் படிக்காமல் நமக்குத் தெரிவதில்லை.

மனம் பயன்பாட்டுக்கு வரும்போது, உலகில் பலப் பல முன்னேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. புத்தகங்களைப் படிக்கும்போதும் பலப்பல முன்னேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன

மனதில் பல கோடி விஷயங்கள் மறைந்து இருக்கின்றன. புத்தகங்களிலும் பல கோடி விஷயங்கள் மறைந்து இருக்கின்றன. இந்த இரண்டும் வேறு வேறா அல்லது ஒன்றா என்றால் ஒன்றுக்குள் ஒன்றாகவே இருக்கின்றன; இயங்குகின்றன.

நல்ல மனதைத் திறக்க பயன்படுத்த ஒரு நல்ல புத்தகம் தேவைப்படுகிறது. நல்ல புத்தகம் ஒன்றை உருவாக்க, திறக்க பயன்படுத்த ஒரு நல்ல மனம் தேவைப்படுகிறது.

நல்ல புத்தகங்களைப் படித்தவன் நல்ல மனம் படைத்தவனாக இருக்கிறான். நல்ல மனம் படைத்தவன் நல்ல புத்தகங்களை உருவாக்குகிறான்.

நல்ல மனதிற்கும் நல்ல புத்தகங்களுக்கும் இடையே பல கோடி மக்கள் புத்தகம் என்றால் என்ன என்று உணராமலேயே , தெரிந்து கொள்ளாமலேயே வாழ்ந்து மறைகிறார்கள்.

நமது நாட்டில் கல்வி மனிதனின் அடிப்படை உரிமையாக இருக்கும்போது, 2018- இன் யுனெஸ்கோ கணக்கெடுப்பின்படி, 287 லட்சம் படிக்காத வயது முதிர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்றால் என்ன செய்வது?

நல்ல மனிதர்களைத் தெரிந்து கொள்ள நமக்குப் புத்தகங்கள் உதவுகின்றன. நல்ல புத்தகங்களைத் தெரிந்து கொள்ள நல்ல மனிதர்கள் உதவுகிறார்கள்.

புத்தகங்களை மனம் திறக்காமல் பயன்படுத்த முடியாது. ஒன்றைத் திறக்கும்போது மற்ற ஒன்றும் தானே திறக்கிறது. ஒன்றை மூடும்போது மற்ற ஒன்றும் தானே மூடுகிறது !

உலகத்திலேயே சராசரியாக தலை ஒன்றுக்கு அதிகப் புத்தகங்களை வாசிப்பவர்கள் அமெரிக்கர்களோ, ஐரோப்பியர்களோ அல்லர். ஐஸ்லாந்தைச் சார்ந்தவர்கள்தான் அதிகம் படிக்கிறார்கள்.

உலகத்திலேயே முதல்முதலாக அச்சடிக்கப்பட்ட புத்தகம் கட்டன்பர்க்கினுடைய பைபிள்தான். ஆனால், அவர் கடனில் மூழ்கியதால் அதைப் பதிப்பிக்க முடியாமல் இறந்துபோனார். இன்னமும் உலகத்திலேயே மிக அழகான புத்தகமாக அது கருதப்படுகிறது.

அதை 1898-ஆம் ஆண்டு ஒருவர் 15000 டாலர்களுக்கு வாங்கி ஒரு மத நிறுவனத்திற்கு அன்பளிப்பாகத் தந்தார். அதே பிரதி 1978-ஆம் ஆண்டு 2 மில்லியன் டாலர்களுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

சார்லஸ் டார்வின் தன்னுடைய பரிணாம வளர்ச்சிப் புத்தகத்தை அதிகமாக வாங்க மாட்டார்கள் என நினைத்து 1250 பிரதிகள் மட்டும் பதிப்பித்தார். ஆனால், அவை அனைத்தும் முதல்நாளே விற்றுத் தீர்ந்தன.

உலகத்தில் அதிகமான நாடகங்களை எழுதியவர் லோப் டி.வெகா என்கின்ற எழுத்தாளர். அவர் 2200 நாடகங்கள் எழுதினார்.

ஜார்ஜ் பைரன் எழுதிய 'கோர்ஸைர்' என்கின்ற கவிதைப் புத்தகம் ஒரே நாளில் 30000 பிரதிகள் விற்றன.

உமர்கய்யாம் ஒரு கவிஞர் மட்டுமல்ல; யூக்ளினுடைய ஐந்தாவது சூத்திரத்தில் அதிக உழைப்பைச் சிந்தி நாற்கரத்தின் வலது கோணத்தை மிகுதியாக ஆராய்ச்சி செய்தவர் அவர்.

இருப்பதிலேயே மிகவும் போரடிக்கக்கூடிய புத்தகம் "பை"(22/7) யினுடைய மதிப்பைக் கணக்கிட்டு கில்லட் மற்றும் போயர் கொண்டு வந்த 400 பக்கங்கள் அடங்கிய புத்தகம்தான்.

வெப்ஸ்டருடைய நீள உரை கொண்ட உச்சரிப்புப் புத்தகம்தான் இதுவரை அதிகமாக விற்று சாதனை படைத்திருக்கின்ற புத்தகம். அது 10 கோடிக்கும் அதிகமாக சரித்திரம் படைத்திருக்கிறது.

புத்தருடைய வைர சூத்திரம்தான் பிளாக் பிரிண்டிங் மூலம் அச்சிடப்பட்ட மிகப் பழைமையான புத்தகம். அது கி.பி 868- ஆம் ஆண்டு சீனத்தில் தயாரானது.

ஒவ்வொரு வீட்டிலும் சமையலறையைப் போலப் புத்தக அறையும் அவசியம். புத்தகங்களைப் பராமரிப்பது இன்னொரு கலை இரவல் தந்தவற்றை விடாமல் துரத்தி திரும்பப் பெறுவது சிலருக்கே சாத்தியமான வைராக்கியப் பண்பு.

ஆஸ்லிட் என்கின்ற விமர்சகருடைய நண்பர்கள் அவரிடமிருந்து புத்தகங்களை இரவல் வாங்குவார்கள் ஆனால் திரும்ப வராது அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி விஜயம் செய்யும்போது 'நான் என் நூல்நிலையத்தைப் பார்வையிடத் தான் வந்தேன்' என்று அவர் கூறுவதுண்டு.

நாம் புத்தகத்திற்குக் கொடுக்கும் விலை அதன் அச்சுக் கூலியே தானே தவிர அதன் அனுபவத்திற்கு அல்ல. திருக்குறளை 10 ரூபாய்க்கு வாங்குகிறோம் என்றால் அது திருவள்ளுவருக்கான விலை அல்ல அதிலிருக்கும் ஒவ்வொரு குறளுமே விலைமதிப்பற்ற அனுபவமாகும். புத்தகத்தை நிறுத்துப் பார்த்து வாங்க முடியாது.

கல்வி சில நேரங்களில் சிந்தையில் இருக்கும். சில நேரங்களில் நாவில் இருக்கும் . இன்னும் சில வேளைகளில் விரல்களால் எழுதும் எழுத்தில் இருக்கும் .

ஆக , சிந்தனை , சொல் , எழுத்து ஆகியன சார்ந்ததாகக் கற்றல் அமையும் . எழுத்து இருந்தால் முந்திய இரண்டும் இருக்கவே செய்யும் ;

கலீபா உமர் (ரலி) அவர்கள் எழுத்தால் கல்வியை சிறையிடுங்கள் என்று கூறினார்கள். அனஸ் (ரலி) அவர்கள் - ஹாக்கிம், முஸன்னப் இப்னு அபீஷைபா

எழுத்தறித்தவன் இறைவனவான். எனவே அவனே தான் உண்மையான படைப்பாளி.

மன மெய்யியல் 77

(உயர்ந்த பிரார்த்தனை)



நபி (ஸல்) அவர்கள், முஆத்பின் ஜபல் (ரலி) அவர்களை ஏமன் தேச ஆளுநராக நியமித்து, வழியனுப்பும் போது, ‘முஆதே! அநீதி இழைக்கப்பட்டவனின் பிரார்த்தனைக்கு பயந்து கொள்ளும். ஏனெனில், அவனுக்கும் இறைவனுக்கும் மத்தியில் எந்தத் திரையுமில்லை’ என்று கூறினார்கள்”. (அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி), நூல்: புகாரி)

"உனது உறவை வெட்டியவனோடு நீ ஒட்டிக்கொள்.

உனக்கு அநீதமிழைத்தவனை மன்னித்து விடு.

உனக்கு தீங்கு செய்தவனுக்கும் நீ உபகாரம் செய்”

இதையும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹுஅ அலைஹி வஸல்லம் அவர்கள்தான் கூறினார்கள்.

மேற்கண்ட இரு நபிமொழிகளும் சூஃபி மஹான் இப்ராஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்கள் வாழ்வில் ஒரு சேர பயன்படுத்தினார்கள். இதுதான் வியப்பான விஷயம்!

ஒரு நாள் ஒரு ராணுவ வீரன் ஊருக்கு வெளியே வந்து கொண்டிருந்தான்.

அங்கே சூஃபி மஹான் இப்ராஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்களை வழியில் கண்டு “மக்கள் குடியிருப்பு எங்கே இருக்கிறது ? எனக் கேட்டான்.

அதற்கு சூஃபி மஹான் அவர்கள் கப்ருஸ்தானை (கல்லறையை)க் காட்டி, "அதோ அது தான்" என்று சொன்னார்கள்.

அவனுக்கு கோபம் வந்தது. "நான் கப்ருஸ்தானைக் கேட்க வில்லை மக்கள் வசிக்கக்கூடிய பகுதியைக் கேட்கிறேன்" என்று சொன்னான்.

"அது தான் உண்மையில் மக்கள் குடியிருப்பு" என திரும்பவும் சொன்னார்கள். கோபத்தில் சூஃபி மஹான் அத்ஹம் அவர்களை அவன் கடுமையாக அடித்து விட்டான்.

அந்த வேகத்தோடு அவன் நகருக்கு வருகிறான். அப்போது நகரத்தில் உள்ள மக்கள் சூஃபி மஹான் அத்ஹம் அவர்களை உற்சாகத்தோடு வரவேற்றார்கள்.

அதுகண்டு அதிர்ச்சியுற்ற குதிரை வீரன் "நாம் நைய்யப்புடைத்த

இந்த மனிதருக்கு இவ்வளவு வரவேற்பா? அப்படியென்றால் இவர் யார்? "

"இவர் தான் பல்க் நாட்டின் பேரரசராக இருந்து முடி துறந்த இறைஞானி இப்ராஹீம் பின் அத்ஹம் " என்று சொல்லப்பட்டது.

அப்போது வேதனைப்பட்டு, நானிக்குருகி சூஃபி மஹானிடத்தில் சென்று மன்னிப்பு கேட்டான்.

"நீங்கள் யார் என்று தெரியாமல் தவறு நடந்து விட்டது. என்னிடம் நீங்கள் உங்களைப் பற்றி கேட்கும்போது "அடிமை" என்று சொன்னீர்கள்? அதனால் நடந்த விபரீதம் அல்லவா இது! ஏன் அப்படிச் சொன்னீர்கள்?

அதற்கு இறைஞானி அவர்கள், "அடிமையா? எனக்கேட்டீர் ஆம் " என்றேன். "யாருக்கு அடிமை ? என்று நீங்கள் கேட்கவில்லையே, கேட்டிருந்தால் அல்லாஹ்வுக்கு அடிமை என்று சொல்லியிருப்பேன்" என்றார்கள்.

"என்னை மன்னித்து எனக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும்" என கண்ணீர் மல்க கரைந்துருகி கேட்ட போது,

"என்னை அடிக்கத் தொடங்கிய போதே உன்னை மன்னித்து உனக்கு சொர்க்கம் கிடைக்க பிரார்த்தனை செய்து விட்டேன்" என்று சொன்னார்கள்.

அவன் உங்களுக்கு அநியாயம் செய்திருக்க அவனுக்காக இப்படியொரு பிரார்த்தனையா ?எனக் சூஃபி மஹானிடம் கேட்கப்பட்ட போது,

"அவன் மூலமாக எனக்குத் தீங்கு ஏற்பட்டது உண்மைதான். அதற்காக நான் மன்னிக்கவில்லை யெனில், பாதிக்கப்பட்ட என்னால் அவனுக்குத் தீங்கு ஏற்படும் அல்லவா ? அவன் தீங்கு செய்தற்காக நான் வருத்தப்பட்டால், இருவருக்கும் மத்தியில் என்ன வித்தியாசம்?

மேலும், நான் பொறுமையாக இருந்ததால் எனக்கு அவன் மூலம் சொர்க்கத்தில் பதவி உயர்வு கிடைகும்போது, எனக்கு விளைவித்த தீங்கின் காரணமாக அவனுக்கு நரகம் கிடைக்கக் கூடாதல்லவா ?

எனவே நான் அவனுக்காக உடனேயே அவன் செய்த பாவங்களை மன்னிக்க வேண்டி பிரார்த்தனை புரிந்தேன் என்றார்கள். இதுதான் இறைநேசர்களின் பண்பு.

மன மெய்யியல் 78

(தீர்ப்புகள் திருத்தப்படலாம்)



மன மெய்யியலில் ஒரு வழக்குத் தீர்ப்பு சொல்வது என்பது மனத்திற்கும் , மனசாட்சிக்கும் இடையே ஏற்படும் உச்சக் கட்ட போராட்டம். நீதியை நிலை நாட்ட தீர்ப்புகள் திருத்தப்படலாம்.

குலோத்துங்க பாண்டியன் காலத்தில், திருப்புத்தூரில் இருந்து அந்தணர் ஒருவர் மனைவி, குழந்தையுடன் மதுரை வந்து கொண்டிருந்தார். வழியில் மனைவிக்கு தாகம் எடுத்ததால், ஒரு ஆலமரத்தடியில் அமர வைத்து விட்டு, தண்ணீர் எடுக்கச் சென்றார்.

அப்போது மரக்கிளையில் சிக்கியிருந்த ஒரு அம்பு, காற்றில் அசைந்து, கீழே விழுந்ததில் பெண்ணின் வயிற்றில் குத்தி உயிரைக் குடித்தது.

அந்தணர் வந்து பார்த்த சமயத்தில், அந்தப் பக்கமாக வேடன் ஒருவன் வேட்டையாடிக் கொண்டிருந்ததைக் கண்டார். அவன் விட்ட அம்பு தான், தன் மனைவி மீது பட்டு இறந்து கிடப்பதாக நினைத்த அந்தணர், குலோத்துங்க பாண்டியனிடம் புகார் அளித்தார்.

விசாரணை ஆரம்பமானது. அந்தணரின் அனுமானத்தை உண்மையெனக் கருதிய மன்னனும் வேடனைச் சிறையிலிட உத்தரவிட்டான்.

நான் கொலை செய்யவில்லை. இது சத்தியம் என்று வேடன் அழுதான். செய்வதறியாத மன்னன் கோவிலுக்குச் சென்று சொக்கநாதரிடம் முறையிட்டான்.

அப்போது அசரீரியாக, "குலோத்துங்கா! வணிகர் வீதியில் ஒரு திருமணம் நடக்க இருக்கிறது. அந்தணருடன் அங்கு வந்தால் தெளிவு கிடைக்கும், என அசரீரி கேட்டது.

அதன்படியே, அரசன் மாறுவேடம் பூண்டு சென்றான்.

அங்கே எமதூதர் இருவர் பேசுவதைக் கேட்டான். இந்த மாப்பிள்ளையின் உயிரைக் கொண்டு வர, எமன் உத்தரவு போட்டிருக்கிறாரே! எப்படி உயிரைக் கவர்வது? என்று ஒருவன் கேட்க,

அடுத்த தூதன் பதில் சொன்னான்: " ஆலமரத்தில் சிக்கியிருந்த அம்பைக் காற்றால் அசைத்துக் கீழே தள்ளி, பெண்ணைக் கொன்றோமே! அதைப் போலச் செய்யலாம். இங்கிருக்கும் கன்று ஈன்ற பசுவை மேள, தாளச் சத்தத்தில் அறுத்துக் கொண்டு ஓடச் செய்வோம். அதுவே அவனை முட்டிக் கொன்று விடும், என்றான்.

அவர்கள் சொன்னபடியே கயிறை அறுத்துக் கொண்ட பசுவும் ஓடி, மணமகனை முட்டிக் கொன்றது. மன்னனும், அந்தணரும் இதைக் கண்டு உண்மையை உணர்ந்தனர்.

பாண்டியன் சிறைக்கு ஓடோடி வந்து, வேடனே! உன்னை அறியாமல் தண்டித்தேன். என் பிழையைப் பொறுத்துக் கொள், என்றான்.

வேடன் விடுதலை அடைந்தான். திருவிளையாடல் புராணத்திலுள்ள இந்த வரலாற்றின் மூலம், தவறு செய்யாதவர்களை ஆட்சியாளர்கள் தண்டித்தாலும், ஆண்டவன் கைவிடுவதில்லை என்பது தெளிவாகிறது.

ஆனால் இஸ்லாம் ஒரு வழக்கிற்கு தீர்ப்பு வழங்க அது மன மெய்யியலை நாடச் சொல்கிறது என்பதற்கு ஆதாரமாக ஒரு நிகழ்வு

நபி (ஸல்) அவர்கள், முஆத்பின் ஜபல் (ரலி) அவர்களை ஏமன் தேச ஆளுநராக நியமித்து, வழியனுப்பும் போது, ‘முஆதே! அநீதி இழைக்கப்பட்டவனின் பிரார்த்தனைக்கு பயந்து கொள்ளும். ஏனெனில், அவனுக்கும் இறைவனுக்கும் மத்தியில் எந்தத் திரையுமில்லை’ என்று கூறினார்கள்”. (அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி), நூல்: புகாரி)

நபி (ஸல்) அவர்கள், முஆத்பின் ஜபல் (ரலி) அவர்களை ஏமன் தேச ஆளுநராக நியமித்து, வழியனுப்பும் போது, ஹஸரத் முஆதைப் பார்த்து," எதை அடிப்படையாக வைத்து மார்க்கத்தை மக்களுக்கு விளக்குவீர்கள் " என நபி (ஸல்) அவர்கள் கேட்கிறார்கள்.

ஹஸரத் முஆது இப்னு ஜபல் (ரலி) :

"நான் மக்களுக்கு மத்தியிலே அல்லாஹ்வுடைய ரசூலே இறைவனால் வழங்கப்பட்டிருக்கக் கூடிய திருமறையை அடிப்படையாக வைத்து மார்க்கம் சொல்லுவேன். தீனைச் சொல்லுவேன். சட்டங்களுக்கு தீர்வை கொடுப்பேன். தீனுடைய அடிப்படை குர்ஆனுடைய அடிப்படையில் நான் எடுத்துச் சொல்லுவேன் "

நபி (ஸல்) அடுத்து கேள்வி கேட்கிறார்கள்.

"ஃபஇன்லம் தஜித் ஃபீ கிதாபில்லாஹ் இறை வேதத்திலே ஒரு விஷயத்திற்கு விளக்கத்தை நீ பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் என்ன செய்வீர் என்று கேட்கிறார்கள்? "(இறை வேதத்திலே இல்லை என்று சொல்லவில்லை. இருக்கலாம் அதை நீ தேர்ந்தெடுக்க முடியாமல் போகலாம். உன்னுடைய விளக்கத்திற்கு வராமலும் போகலாம் இறை வேதத்திலே நீ தேடக் கூடிய பிரச்சனைக்கு தீர்வு நீ பெற்றுக் கொள்ளவிட்டால் பெற்றுக் கொள்ளாவிட்டால்) என்ன செய்வீர் என்று கேட்கிறார்கள்.

முஆது இப்னு ஜபல் சொல்கிறார்கள் :

" நாயகமே உங்களுடைய வழி முறை முன்னால் இருக்கிறது நீங்கள் காட்டிக் கொடுத்த தெளிவுரைகள் என்னிடத்தில் இருக்கிறது. அதை அடிப்படையாக வைத்து மக்களுக்கு நான் எடுத்துச் சொல்லுவேன் என்று ஹஸரத் முஆது இப்னு (ரலி) எடுத்துச் சொல்லுகிறார்கள்.

" என்னுடைய வழி முறையிலும் உங்களுக்கு அந்த வழி காட்டுதல் கிடைக்காமல் போனால் என்ன செய்வீர்கள் ? "

"என்னுடைய ஆய்வை வைத்து அறிவை வைத்து சிந்தனையை வைத்து அந்த மார்க்கப் பிரச்சனைக்கு தீர்வு கூறுவேன். மார்க்கத்தை மக்களுக்கு மத்தியிலே எடுத்துச் சொல்லுவேன்.

முஆது இப்னு ஜபல் (ரலி) அவர்களுடைய நெஞ்சை தட்டிக் கொடுத்து சொன்னார்கள். அல்ஹம்துலில்லாஹ் அல்லதீ வப்பக லிரசூலி ரசூலில்லாஹ் மாயுஹிப்பு ரசூலுஹு அவ் கமா கால ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

"அல்லாஹ்வுடைய ரசூலாகிய நான் எந்த வழியை பிரியப்பட்டேனோ பொருந்திக் கொள்கிறேனோ அந்த வழியை விளக்கிக் கொடுத்த அந்த அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும்.

ரசூலான தனது ரசூலுக்கு இந்த வழி முறைகளை விளக்கி கொடுத்து அல்லாஹ் இந்த தீனுடைய வழிமுறைகளை பூர்த்தி செய்வதற்குண்டான வழி முறைகளைச் சொல்லிக் கொடுத்தானே இப்படி ஒரு சிந்தனையை எனது சமுதாயத்தில் போட்டானே எனது ஸஹாபிக்கு இப்படி சரியான பதிலை சொல்லக் கூடிய வாய்ப்பை கொடுத்தானே அந்த அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புகழ்ந்தார்கள்.

மன மெய்யியல் 79

(வாய் இல்லாதவைகளின் சாட்சி)



குற்றம் குறித்து விசாரிக்க சாட்சிகளிடம் விசாரணை நடைபெறும் என்பது பொதுவான விஷயம் ஆனால் மன மெய்யியல் இதுவரை பதிவு செய்யப்படாத விஷயம் வாய் இல்லாத ஜீவன் மற்றும் வாய் இல்லாதவைகளின் சாட்சி,

லக்னோ, : உத்தரபிரதேசத்தில் பெண்ணை கொலை செய்த வழக்கில் கிளியின் சாட்சியால் இருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

உ.பி,யின் ஆக்ராவைச் சேர்ந்த விஜய் சர்மா மனைவி நீலம் சர்மா. 2014 பிப்., 20ல் கணவர் குழந்தைகளுடன் வெளியே சென்ற போது, தனியாக இருந்து நீலம் சர்மா கொலை செய்யப்பட்டார். கணவர் திரும்பி வந்து பார்த்த போது கொலை செய்தவர்கள் வீட்டிலிருந்து எந்த பொருட்களையும் கொள்ளையடிக்காமல் சென்றது சந்தேகத்தை அதிகப்படுத்தியது.

இந்நிலையில் விஜய் சர்மா வீட்டில் அவரது மனைவி நீலம் வளர்த்த கிளி, அவர் இறந்த பின் சாப்பிடாமல் அமைதியாக இருந்துள்ளது.

இதைக் கவனித்த விஜய் சர்மா ஒருவேளை கிளி கொலையாளி நேரில் பார்த்திருக்கலாம் என சந்தேகப்பட்டுள்ளார்.

கொலை தொடர்பாக சந்தேகப்படும் சில நபர்களின் பெயர்களை கிளியிடம் ஒவ்வொன்றாக கூறியுள்ளார்.தன் மருமகன் ஆசு பெயரைக் கூறியபோது கிளி ஆவேசம் அடைந்து ஆசு, ஆசு எனக் கத்தியுள்ளது.

இதுகுறித்து விஜய் சர்மா போலீசாரிடம் தெரிவித்துள்ளார். அப்போதும் அந்த கிளி ஆசு பெயரை சொல்லும்போது மட்டும் ஆவேசத்துடன் கத்தியது.

இதையடுத்து போலீசார் அவர்களுக்குரிய பாணியில் ஆசுவிடம் விசாரணை மேற்கொண்டனர். இதில் தன் நண்பர் ரோணியுடன் சேர்ந்து நீலம் சர்மாவைக் கொலை செய்ததை ஒப்புக்கொண்டார்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி முகமது ரஷீப், குற்றம் சாட்டப்பட்ட ஆசு, ரோணிக்கு ஆயுள் தண்டனையும், தலா ரூ. 72 ஆயிரம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

இதென்ன பிரமாதம் வாய் இல்லாத ஜீவனான கிளி சாட்சி சொன்னதை வாயே இல்லாத மனித உறுப்புகள் சாட்சி சொல்லும் அதுவும் அவனுக்கு எதிராக !

உடல் உறுப்புகளின் சாட்சி

நாம் செய்யும் செயல்கள் யாருக்கும் தெரியாது என்று பலரும் பல்வேறு காரியங்களில் ஈடுபடுகிறார்கள். திரை மறைவில் தைரியமாக தப்பும் தவறுமான காரியங்களில் இறங்குகிறார்கள். இத்தகையவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். எந்தக் கை, கால்களை வைத்து தீயகாரியங்களைச் செய்கிறார்களோ அவை மறுமையில் தாங்கள் செய்த காரியங்களைப் பற்றி பேசும்.

உலகில் நாம் நினைப்பது போன்று பேசுவதற்கு நாவைப் பயன்படுத்துகிறோம். மறுமையிலோ நாக்கு உலகில் தான் பேசியவற்றை எல்லாம் வெளிப்படுத்தும். நாம் நல்ல காரியங்களைச் செய்தவர்களாக

இருப்பின் நமது உடல்களும் நல்ல வகையில் சாட்சியமளிக்கும். கெட்ட காரியங்களை செய்திருப்பின் கெட்ட விதத்தில் சாட்சியமளிக்கும்.

இதுவே உங்களுக்கு எச்சரிக்கப்பட்ட நரகம். “நீங்கள் (ஏக இறைவனை) மறுத்துக் கொண்டிருந்ததால் இன்று இதில் கருகுங்கள்!” என்று கூறப்படும். இன்றைய தினம் அவர்களின் வாய்களுக்கு முத்திரையிடுவோம். அவர்கள் செய்து கொண்டிருந்தது பற்றி அவர்களின் கைகள் நம்மிடம் பேசும்; கால்கள் சாட்சி கூறும். (குர்ஆன் 36:63,65)

அவர்களின் நாவுகளும், கைகளும், கால்களும் அவர்களுக்கு எதிராக அவர்கள் செய்தவை குறித்து சாட்சியமளிக்கும். அன்றைய தினம் அவர்களது உண்மையான கூலியை அவர்களுக்கு அல்லாஹ் கொடுப்பான். அல்லாஹ் உண்மையானவன்; தெளிவு படுத்தக்கூடியவன் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

(குர்ஆன்:24:24, 25.)

அல்லாஹ்வின் பகைவர்கள் நரகை நோக்கித் திரட்டப்படும் நாளில் அவர்கள் வகைப்படுத்தப்படுவார்கள். முடிவில் அவர்கள் அங்கே வந்ததும் அவர்களுக்கு எதிராக அவர்களின் செவியும், பார்வைகளும், தோல்களும் அவர்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி சாட்சி கூறும். “எங்களுக்கு எதிராக ஏன் சாட்சி கூறினீர்கள்?” என்று அவர்கள் தமது தோல்களிடம் கேட்பார்கள்.

“ஒவ்வொரு பொருளையும் பேசச் செய்த அல்லாஹ்வே எங்களையும் பேசச் செய்தான். முதல் தடவை அவனே உங்களைப் படைத்தான். அவனிடமே திரும்பக் கொண்டு வரப்பட்டுள்ளீர்கள்!” என்று அவை கூறும்.

உங்கள் செவியும், பார்வைகளும், உங்கள் தோல்களும் உங்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்காமலிருக்க (அவற்றுக்குத் தெரியாமல்) நீங்கள் மறைத்ததில்லை. நீங்கள் செய்தவற்றில் அதிகமானவற்றை அல்லாஹ் அறிய மாட்டான் என்று நினைத்தீர்கள். இதுவே உங்கள் இறைவனைப் பற்றி உங்களது எண்ணம். அது உங்களை அழித்து விட்டது. எனவே நஷ்டமடைந்தோரில் ஆகிவிட்டீர்கள்

(குர்ஆன்:41:19-23.)

இறையில்லம் (கஅபாவிற்கு) அருகில் குறைஷியரில் இருவரும் ஸகீஃபியரில் ஒருவரும் (ஆக மூன்று பேர் ஓரிடத்தில்) ஒன்றுகூடினர். அவர்களின் வயிறுகளில் கொழுப்பு நிறைய இருந்தது. இதயங்களில் சிந்தனை குறைவாக இருந்தது.

அவர்களில் ஒருவர், “நாம் பேசுவதை அல்லாஹ் கேட்கிறான் என்று நீங்கள் கருதுகின்றீர்களா?” என்று கேட்டார். மற்றொருவர், “நாம் சப்தமாகப் பேசினால் அவன் கேட்கின்றான்.

நாம் இரகசியமாகப் பேசினால் அவன் கேட்பதில்லை” என்று பதிலளித்தார்.


(அவர்களில்) இன்னும் ஒருவர், “நாம் சப்தமிட்டுப் பேசும்போது அவன் கேட்பானெனில் நாம் இரகசியமாகப் பேசும் போதும் அவன் கேட்கத்தான் செய்வான்” என்று கூறினார்.

அப்போது அல்லாஹ், “உங்கள் செவியும், பார்வைகளும், உங்கள் தோல்களும் உங்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்காமலிருக்க (அவற்றுக்குத் தெரியாமல்) நீங்கள் மறைத்ததில்லை” எனும் வசனங்களை (41:22) அருளினான். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) நூல்: புகாரி-4817

மன மெய்யியல் என்பது ஒரே மனம் ஒரே மெய் என்று வகுத்துதான் இதுவரை ஆராயப்பட்டு வருகிறது. ஆனால் குர்ஆன் மனித உறுப்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனித்தனி மனம் , தனித்தனி நிகழ்வுகளை சாட்சியாக சொல்கிறது . இது மன மெய்யியல் இதுவரையிலும் பதிவு புதிய விஷயம்

மன மெய்யியல் 80

(விளையும் பயிர்)



ஃபிரடெரிக் ஏங்கெல்ஸ் (நவ 8-1820) ஒரு செல்வாக்கு மிகுந்த ஜவுளி தயாரிப்பாளருடைய மகன். அப்போது அவருக்கு ஆறு வயது. அவருடைய தந்தை தன்னுடைய பாரம்பரியச் சொத்தை மகனுக்கு உணர்த்துவதற்காகத் தன்னுடைய தொழிற்சாலையைச் சுற்றிக் காண்பித்தார்.

அதைப் பார்த்ததும் `இவ்வளவு பெரிய தொழிற்சாலை நமக்கு வரப்போகிறதா ? என்று மகன் மகிழ்வான் என்று அவர் எதிர்பார்த்தார்.

ஆனால் அவரோ அதிர்ச்சியடைந்தார் தன் வயது ஒத்த பல குழந்தைகள் அங்கே பரிதாபமாகப் பணிபுரிவதைப் பார்த்தார். தன்னுடைய உணர்வுகளை இறுகிய முகத்தால் மறைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார்.

தன்னுடைய அம்மாவிடம், "நானும் சீக்கிரம் தொழிற்சாலைக்குப் போய் வேலை செய்யச் செல்ல வேண்டுமா?" என்று கேட்டார். அதற்கு அவருடைய தாய் "வேண்டாம் கண்ணே! அந்தத் தொழிற்சாலை தம்முடையதுதான்" என்றார்.

அதற்கு ஃபிரடெரிக் எங்கெல்ஸ் "அந்தக் குழந்தைகள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்களா?" என்று கேட்டார்.

"இல்லை ஃபிரடெரிக் உன்னைப்போல் அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை. ஆனால் அது குறித்து உன் சின்ன மண்டையைப் போட்டுக் குழப்பிக்கொள்ளாதே யாராலும் அதை மாற்ற முடியாது"

அன்று இரவு முழுவதும் எங்கெல்ஸ் தூங்கவே இல்லை. அடுத்த நாள் காலையில் தாய் வந்து எழுப்பியபோது, "அம்மா! ஒருவேளை நான் மாற்ற நினைத்தால் என்ன ஆகும்?" என்று அவர் கேட்டார்.

அன்று வேரூன்றிய எண்ணம்தான் அவரை பொதுவுடமைக் கொள்கைகளை நோக்கி ஈர்த்தது. உலகத் தொழிலாளர்களை ஒன்று சேர்க்க முனைப்பை ஏற்படுத்தியது. விஞ்ஞான சோசலிசத்தை ஃபிரடெரிக் ஏங்கெல்ஸ், கார்ல் மார்க்ஸுடன் சேர்ந்து உருவாக்க முடிந்தது.

ஒரு நாள் சில சிறுவர்கள் சேர்ந்து மரத்தின் மீது ஏறி விளையாடி கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு விளையாடும் சிறுவன் ஒருவனின் தாத்தா சிறுவர்கள் விளையாடுவதை கவனித்தார் .....

மரத்தில் இருந்து தவறி விழுந்தால் ஆபத்து என்று எண்ணி சிறுவர்களே மரத்தின் மீது ஏறாதீர்கள். அதில் ஒரு பேய் இருக்கிறது அது உங்களை கடித்து கொன்றுவிடும் என்றார்.

உடனே அனைத்து சிறுவர்களும் இறங்கினர். அடுத்த நாள் அந்த தாத்தாவின் பேரன் மட்டும் விளையாடி கொண்டிருந்தான். உடனே அவனது நண்பர்கள் வந்து "நேற்று தான்டா உங்க தாத்தா இங்கு பேய் இருக்குன்னு சொன்னார். அப்புறம் ஏன் மரத்தில் ஏறினாய் ? என்றனர்.

அவனோ, "இங்கு எந்த பேயும் இல்லை அப்படி இருந்தால் என்னை எப்பவோ கடித்து இருக்கும். தாத்தா நாம் கீழே விழுந்து விடுவோம் என்ற பயத்தில கூறினார்".

"சரி, அப்போ உன் தாத்தாவிடம் இங்கு பேய் இல்லை கூறுவோம் வா ! என்று அழைத்தனர். அவன் வேண்டாம் டா அவரை எதிர்த்து பேசினால் அவர் மனம் கஷ்டப்படும் என்றார்.

அந்த சிறுவர் வேறு யாருமில்லை கடவுளைக் காட்டு என்று ஞானி இராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் தைரியமாக கேட்டவர். ஏராளமான இளைஞர்களுக்கு முன்னோடியாக இருந்த சுவாமி விவேகானந்தர்.

ஒரு நாள் அன்னை உம்மு பர்வா அடுப்பினில் பெரும் விறகுக்கட்டை களோடு சிறுசிறு சுள்ளிகளையும் வைத்து நெருப்பு மூட்டியதைக் கண்ட 6 வயது பாலகர் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியதைக் கண்ட தாயார் பதறிப் போய் பசியால் வடிகிறானோ என்றெண்ணி வாரி முத்தமிட்டு "மகனே! இன்னும் சொற்ப நேரத்தில் சமையல் முடிந்துவிடும் அழாதே " என்ற போது ,

"பசிக்காக அழவில்லையம்மா..தாங்கள் அடுப்பிலே பெரும் விறகுக்கட்டைகளோடு சிறுசிறு சுள்ளிகளையும் வைத்து நெருப்பு மூட்டியதைக் கண்டதும், மறுமையில் இவ்வாறுதானே பாவம் புரிந்த பெரிய மனிதர்களுடன், பாவமிழைத்த சின்னஞ் சிறார்களையும் இறைவன் நரக நெருப்பில் தள்ளுவான் என்ற எண்ணம் என் உள்ளத்தில் மிகைத்துவிட்டது. நானும் அச்சிறுவர்களில் ஒருவனாக ஆகிவிடக் கூடாதே என் என் குலையெல்லாம் நடுங்கியது அதன் காரணமாக என்னை அறியாமல் என் கண்கள் அழுதன என்றனர்

உடனே அந்த தாய் "மகனே அழாதே அளப்பெரும் அருளாளனாகிய அல்லாஹ் உன்னை கவனம் புகச் செய்வான்' என்றார்

அந்த சிறுவர்தான் உலகம் போற்றும் இமாம் ஜாபர் சாதிக் (ரஹ்) அவர்கள்.

மனமெய்யியல் வயது வரம்பில்லாமல் வளரும் சிறு பிராயத்திலே இயங்க ஆரம்பிக்கிறது.நல்ல போதனையை பெற்றவர்கள் அறிவாளிகளாகவோ, ஆன்மிகவாதிகளாகவோ திகழ்கிறார்கள்.

மன மெய்யியல் 81

(மணி இஸ் ஆல்வேஸ் அல்ட்டிமேட் சார்)



கிரீஸில் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த ஒரு படகில் 500க்கும் மேற்பட்ட அகதிகள் இருக்கிறார்கள். அந்த படகு நடுக்கடலில் மூழ்கி விடுகிறது. காப்பாற்ற நாதியில்லை. ஒரு செய்தியாக கூட எங்கும் வரவில்லை. எந்த மீடியாவும் கண்டுக்கொள்ளவில்லை. காப்பாற்றுவதில் துரிதம் காட்டப்படவில்லை.

எத்தனை பேர் உயிரோடு இருக்கிறார்கள் எத்தனை பேர் இறந்தார்கள் என்று தெரியாது. ஏன் இவ்வளவு அலட்சியம் ?

ஏன்னா அவங்ககிட்டலாம் பணம் கிடையாது.

அதே சமயத்தில் தான் டைட்டனிக் நீர்முழ்கிக் கப்பலும் காணாமல் போனதாக தகவல் வந்தது. உடனே உலக நாடுகள் அடிச்சி புடிச்சி உதவ வந்தது. இரவு பகலென்று பாராமல் தேடுதல் வேட்டை நடந்தது. ஐய்யய்யோ! 96 மணி நேரம் தான் ஆக்ஸிஜன் உள்ளே இருக்கிறது என்று பதறியது.

உலகத்தில் உள்ள அட்வான்ஸ்ட்டு டெக்னாலஜிகள் எல்லாம் மின்னல் வேகத்தில் வரவழைக்கப்பட்டு தேடுதல் வேட்டை நடந்தது. உலகில் உள்ள இண்டு இடுக்கில் உள்ளவர்களெல்லாம் அவர்களை காப்பாற்ற வேண்டுமென வேண்டிக்கொண்டார்கள்.

என்ன காரணம்?

ஏன்னா உள்ளே மாட்டுனது பணக்காரர்கள்,. மணி இஸ் ஆல்வேஸ் அல்ட்டிமேட் சார். இரண்டு பக்கமுமே விலை மதிப்பில்லாத உயிர்கள் தான். ஆனால் காசு தான் யார் வாழணும் யார் வாழக்கூடாதுன்னு முடிவு பண்ணியிருக்கு.

சின்னவயதில் அம்புலிமாமாவில் படித்த கதை இன்றும் ஈரமாய்

இருக்கிறது.

மிகப்பெரிய செல்வந்தர் ஒருவரிடம் உதவிகேட்டு ஒருவன் போனான். அவர் அவனை இன்முகத்தோடு வரவேற்றார். தன்னுடைய சொத்து விவரத்தையெல்லாம் கூறினார். தன்னுடைய தொழில்கள், நிலபுலன்கள், வசதி வாய்ப்புகள் எல்லாவற்றையும் பட்டியலிட்டார். அவனை ஒவ்வொரு அறையாக அழைத்துச் சென்று காட்டினார்,

பின்வழியாகப் புழக்கடைக்கு அழைத்துச் சென்று, "உங்களிடம் நான் காட்டிய அனைத்தையும் என் சொந்த உழைப்பால், யாரிடமும் ஒரு பைசாக் கூட வாங்காமல் சுயமாகச் சம்பாதித்துத்தான் வாங்கினேன். எனவே, நீங்களும் எதையும் இலவசமாக வாங்காமல் சுயமாகச் சம்பாதித்து முன்னேறுகின்ற வழியைப் பாருங்கள்" என்று கறாராகப் பேசி வழியனுப்பி வைத்தார்.

ஆனால் ...

கீழக்கரை வள்ளல் சீதக்காதிக்கு இறுதி நாள் நெருங்கிற்று. அவர் தாம் இறப்பது உறுதி என தம் மெய்யுணர்வால் உணர்ந்தார். உடனே சுற்றத்தாரை வரவழைத்தார். அவர்களிடம், நான் இறந்தவுடன் என் கை விரலில் உள்ள மோதிரத்தை கழற்ற வேண்டாம். அத்துடன் என்னை அடக்கம் செய்து விடுங்கள்!'' என்று வேண்டிக் கொண்டார்.

சீதக்காதியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அப்படியே சிறிது காலம் கடந்தது.சீதக்காதியிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்த புலவர் பெருமான் படிக்காசுத் தம்பிரான் கீழக்கரைக்கு வந்தார். வள்ளல் இறையடி அடைந்ததை அறிந்தார். தாங்க முடியாத துயரம் அடைந்தார். அவருடைய சமாதியை அடைந்தார்.

அதன் முன் நின்று, வள்ளலே! நீ புகழ்க் கம்பம் நாட்டி வைத்தாய்! சவக்குழியில் நுழைந்தாய்! என்ன செய்வோம்! திரு மகளும், கலைமகளும், நிலமகளும், நாமும் இருந்து என்ன பயன்? கொடை மிகுந்த கோமானாகிய நீ இறந்த போது புலமையும் செத்து விட்டதன்றோ? வள்ளலாகிய நீ திரும்பி வந்து மீண்டும் இந்த உலகில் பிறந்தாலன்றி புலவர்களுக்கு பிழைக்க வழியே இல்லை. என்ன செய்வோம்?'' என்று பலவாறாகப் புலம்பினார்.

அப்போது இறையருளால் சமாதிக் குழி பிளந்தது! மோதிரம் அணிந்த கை விரல் வெளியே வந்தது !

மோதிரக் கையைக் கண்ட புலவர், இம்மோதிரத்தைக் கழற்றி அணிந்து கொள்க!'' என்று வள்ளல் உணர்த்திய குறிப்பு என கருதினார். அதை ஏற்று அணிந்தார்.


கற்பக கையால் நம் பாட்டைக் கேட்டு கனிந்து அளித்திட்ட இம்மோதிரமானது தமிழ்ப்பாட்டின் சுவையொன்றும் அறியாத அற்பரிடம் சென்று, தா எனக் கை நீட்டிக் கேட்காதே என்று சொன்னது போல தோன்றிற்று!' என்று அதன் குறிப்பை பாட்டொன்றின் வாயிலாக புனைந்துரைத்தார்.

அன்று முதல் தமிழ் கூறும் நல்லுலகத்தில் உள்ள அனைவரும் சீதக்காதியைச், செத்தும் கொடுத்தான் சீதக்காதி!'' என்று புகழ்ந்து கூறினர்.இந்த பொன்மொழி, தமிழ்மொழி உள்ள அளவும் சீதக்காதியின் புகழைக் கூறிக் கொண்டே இருக்கக் கூடிய ஒன்றாகும்.

இந்த சம்பவங்களின் மனிதர்களை மன மெய்யியலில் எதைச் சொல்லி சேர்ப்பது ?

மன மெய்யியல் 82

(கருணை என்பது ஞானம்)



மத்தவங்களுக்காக வாழுறதுல ஒரு தனி சுகம் இருக்கிறது என்பதை உணர்த்தும் ஒரு உண்மைச் சம்பவம்

`கருணையைவிடப் பெரிய, எந்த ஞானத்தை உங்களால் அடைந்துவிட முடியும்?' - என்று கேள்வியெழுப்புகிறார் தத்துவமேதை ரூஸோ. கருணை என்பது ஞானம். அது தியானத்தாலோ, யோகத்தாலோ கிடைப்பதல்ல; அன்பு செய்வதால் கிடைப்பது;

ஈ. எறும்பு உள்பட சக உயிர்களை நேசிக்கத் தெரிந்த மனப் பக்குவத்தால் கிடைப்பது; அழும் குழந்தையைத் தூக்க ஓடும் தாய்மை உள்ளம் வாய்க்கப் பெற்றவர்களுக்குக் கிடைப்பது. அப்படிப்பட்ட ஞானம் பெற்றவர்கள் உலகமெங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதிகம் அறியப்படாமல், புகழ் வெளிச்சம் கொஞ்சம்கூடத் தங்கள் மேல்பட விடாமல், ஏதோ ஒரு மூலையில் சத்தமில்லாமல், இந்தச் சமூகத்துக்குத் தங்களால் ஆன சேவையைச் செய்துகொண்டே இருக்கிறார்கள். அந்த அரிய மனிதர்களில் ஒருவரின் உண்மை சம்பவம்.

62 வயதைக் கடந்த அந்த முதியவரின் தோளில் ஓர் ஆறு வயதுக் குழந்தை கிடக்கிறது. மருத்துவமனையால் `இனி பிழைக்காது' என்று கைவிரிக்கப்பட்ட குழந்தை அது. லட்சக்கணக்கானவர்களில் ஒருவரை பாதிக்கும் மிக மோசமான மூளை பாதிப்பு அந்தக் குழந்தைக்கு ஏற்பட்டிருந்தது. அது, ஒவ்வொரு விநாடியையும் வலியோடு கடக்கவேண்டியிருந்தது. கைகளும் கால்களும் பக்கவாதம் தாக்கிச் செயலிழந்திருந்தன.

முதியவர் முகமது பஸீக் (Mohamed Bzeek) குழந்தையைத் தட்டிக்கொடுக்கிறார்; ஆதுரமாக அதன் முதுகைத் தடவிக்கொடுக்கிறார்: கை, கால் விரல்களை அன்போடு வருடிக்கொடுக்கிறார். அவர் எதிர்பார்ப்பெல்லாம், `இந்தக் குழந்தை, வாழ்க்கையில் தான் தனியாக இல்லை என்று உணர வேண்டும். அவ்வளவுதான்.'

`இந்தப் பிஞ்சுக் குழந்தையால பார்க்க முடியாது, கேட்க முடியாதுனு எனக்குத் தெரியும். ஆனாலும் விடாம இதோட பேசிக்கிட்டு இருக்கேன். இவளைத் தூக்கிவெச்சுக்குறேன், விளையாடுறேன், தொட்டுத் தொட்டுப் பேசுறேன். ஏன்னா, இவளுக்கும் உணர்வு இருக்கு; உயிர் இருக்கு. இவ ஒரு மனுஷி...' என்று குறிப்பிட்டிருக்கிறார் முகமது பஸீக்.

அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்திலிருக்கும் அஸுசா (Azusa) நகரில் வசிக்கிறார் இந்த முதியவர். கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக அவருடைய முழுநேரத் தொழிலே மருத்துவமனைகளால் கைவிடப்பட்ட, மிக மோசமான நோயால் பாதிக்கப்பட்ட, இறப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கும் குழந்தைகளுக்குத் தன்னால் இயன்ற ஆதரவைக் கொடுப்பதுதான்.

லிபியாவிலிருந்து கலிஃபோர்னியாவுக்கு இடம்பெயர்ந்தவர் பஸீக். அங்கே டான் (Dawn) என்ற பெண்ணைச் சந்தித்தார். திருமணமும் செய்துகொண்டார். 80-களின் தொடக்கத்தில் டான் சில குழந்தைகளுக்கு வளர்ப்புத் தாயாக இருந்தார். ஒரு கட்டத்தில் இருவருமே உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுவது என்று முடிவு செய்துகொண்டார்கள்.

கலிஃபோர்னியாவிலிருக்கும் ஏதோ ஒரு மருத்துவமனை. யாரோ ஒருவர் போனில் அழைக்கிறார்..`இங்கே ஒரு குழந்தைக்கு மிக மோசமான நோய். அதைப் பார்த்துக்குறதுக்கு ஹோம் ஏதாவது இருக்கா?' என்று கேட்டால், அவர்களின் நினைவுக்கு வருவது முகமது பஸீக்கின் முகம்தான்.

மேலை நாடுகளில் குழந்தையை வளர்க்க வளர்ப்புப் பெற்றோர் (Foster Parents) இருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் பஸீக்கும் டானும் வகுப்புகள் எடுத்தார்கள். உடல்நலமில்லாத குழந்தையை எப்படிக் கையாள்வது, குழந்தை மரணமடைந்தால் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையெல்லாம் சொல்லிக் கொடுத்தார்கள். டான், கலிஃபோர்னியா மாகாணத்தில் `வளர்ப்புப் பெற்றோர்களில் மிக முக்கியமானவர்' என்கிற பெயரெடுத்தார்.

1991-ம் ஆண்டில் அவர்கள் வளர்த்த ஒரு குழந்தையைப் பறிகொடுத்தார்கள். அப்போதுதான், `இனி மிக அபாயகரமான நிலையிலிருக்கும் குழந்தைகளை மட்டும் அரவணைத்துக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தார்கள். ஆனால், அந்த வேலை அத்தனை சுலபமாக இல்லை.

பெற்றோர்களே `இந்தக் குழந்தை நமக்கு வேண்டாம்', `நம்மால் இந்தக் குழந்தையைப் பார்த்துக்கொள்ளவே முடியாது' எனப் புறக்கணிக்கிற குழந்தைகளிடம் வாஞ்சையோடு, பாசத்தைக் கொட்டிச் சீராட்டுவது சாதாரண காரியமில்லை. ஆனால், வருடம் முழுக்க முகமது பஸீக்கின் வீட்டின் கதவு குழந்தைகளுக்காகத் திறந்தே கிடந்தது.

பஸீக் ஒரு பேட்டியில் குறிப்பிட்டார்... `உங்களை நீங்க எவ்வளவு நேசிக்கிறீங்களோ, அந்த அளவு நேசத்தைக் குழந்தைகிட்ட காட்டணும். அந்தக் குழந்தைகளெல்லாம் கடுமையான நோயால பாதிக்கப்பட்டிருக்காங்கனு எனக்குத் தெரியும். அவங்க சீக்கிரமே இறக்கப் போறாங்கங்கிறதும் தெரியும். ஒரு மனிதப் பிறவியா என்னால என்ன முடியுதோ அதைச் செய்றேன், மற்றதை கடவுள்கிட்ட விட்டுர்றேன்...'

முகமது பஸீக்குக்கும் அவர் மனைவி டானுக்கும் ஆடம் (Adam) என்கிற ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்குப் பிறவியிலேயே எலும்பில் ஒருவிதமான நோய். `ட்வார்ஃபிஸம்' (Dwarfism) என்றார்கள்; கூடவே வளர்ச்சிக் குறைவும் இருந்தது. எளிதில் உடைந்து போகும் அளவுக்கு பலவீனமாக இருந்தன குழந்தையின் எலும்புகள். எந்த அளவுக்கு என்றால், டயாப்பரை மாற்றினால்கூட எலும்பு முறிந்துவிடும் அளவுக்கு பலவீனம். ஆடமை, அவனின் பலவீனங்களோடு அப்படியே ஏற்றுக்கொண்டார் பஸீக்.

2015-ம் ஆண்டு, டான் உடல்நலக் குறைவால் இறந்து போனார். டானின் இறப்பு பஸீக்கைக் கொஞ்சம் கலங்கவைத்தாலும், அவருடைய சேவையை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. அதோடு தன் மகன் ஆடமையும் அவரே பார்த்துக்கொண்டார். ஓர் ஆண்டுக்கு மிக மோசமான உடல்நிலையோடு குறைந்தது 12 குழந்தைகளாவது பஸீக்கிடம் வருகிறார்கள். அவரும் கனிவோடு, தன் இரு கைகளையும் நீட்டி அவர்களை அரவணைத்துக்கொண்டே இருக்கிறார்.

இவரின் சேவை பத்திரிகைகளில் செய்தியாக வந்த பிறகு, இணையதளத்தில் இவருக்கு உதவுவதற்கென ` GoFundMe' என்ற பக்கம் உருவாக்கப்பட்டது. கடந்த 2017-ம் ஆண்டு நவம்பர் வரை அவருக்கு நன்கொடையாக வந்து சேர்ந்த தொகை 5 லட்சம் டாலர்!

முகமது பஸீக்கிடம் பலரும் கேட்கும் கேள்வி ஒன்று உண்டு. `நீங்க ஏன் இந்த வேலையைச் செய்யணும்?' அவரிடம் அதற்கு எளிமையான பதில் இருந்தது. `இந்தக் குழந்தைங்க பார்க்கவோ, பேசவோ, மற்றவர்களோட தொடர்புகொள்ளவோ முடியாத நிலையில இருந்தாலும், இவர்களுக்கு உயிர் இருக்கு. இவங்களுக்கு யாரோ ஒருத்தரோட அன்பு தேவைப்படுது. நான் அவங்ககிட்ட, `உங்களுக்கு ஓ.கே -ன்னா உங்களுக்காக நான் இருக்கேன்'னு சொல்றேன். அவங்க சரின்னு சொல்றாங்க. நாங்க சேர்ந்து அவங்களோடு வாழ்கிறோம்.'

இரக்கமும், கருணையும் இறைவனின் அழகிய குணங்களில் உள்ளவையாகும். மனிதனுக்கு மனிதன் இரக்கம் காட்டும்போது அவன் இறைவனின் அழகிய குணங்களில் ஒன்றை வெளியே காட்டுகின்றான் என்று பொருள். பிற உயிர்களிடத்தில் கருணை காட்டுவது என்பது மனித இயல்போடு இணைந்த ஒன்றாகும்.

"மண்ணிலுள்ள மனிதர்கள் மீது நீங்கள் இரக்கம் காட்டினால் விண்ணிலுள்ள இறைவன் உங்களுக்கு இரக்கம் காட்டுவான்'' என்பது இஸ்லாமியக் கோட்பாடு அதை பஸீக் நன்கு உணர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

மன மெய்யியல் 83

(அதிர்ஷ்டம் என்னும் ஒரு மாயச் சொல்.)



மனமெய்யியலில் குருட்டுத்தனமான ஓர் எண்ணம் அதிர்ஷ்டம் . நாம் சிலரைப் பார்க்கலாம். 'எனக்கு அதிர்ஷ்டமே இல்லையென்று அலுத்துக் கொள்வார்கள். உலகில் முன்னேறியவர்கள் எல்லோருமே அதிர்ஷ்டத்தினால் மட்டுமே முன்னேறினார்கள் என்று சப்பைக்கட்டு கட்டுவார்கள்.

அதிர்ஷ்டம் என்பது ஒருவருடைய கடின உழைப்பையும், முயற்சியையும், ஆற்றலையும் எளிதில் மறுதலித்துவிடும் ஒரு மாயச் சொல்.

இன்னும் சிலரோ அதிர்ஷ்டத்தையே நம்பிப் பிழைப்பவர்கள். கடைசி நேரத்தில் ஏதாவது அதிசயம் நிகழ்ந்து தன் வாழ்க்கை வளமாகி விடாதா என்று எண்ணுபவர்கள். அவர்கள் எது நடந்தாலும் "எனக்கு இப்போது நேரம் சரியில்லை" என்று சமாதானப்படுத்திக்

கொள்பவர்கள்.

எப்பொழுதாவது நடந்த ஒன்றை வாழ்க்கை முழுவதற்கும் விரித்துப் பரப்புவதில் பயனில்லை என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

இன்னும் ஒரு சிலரோ தங்களால்தான் மற்றவர்களுக்கு அதிர்ஷ்டம் என்று நினைப்பவர்கள். 'நான் பிறந்த பிறகுதான் என் குடும்பம் முன்னேறியது'. 'நான் உங்களைத் திருமணம் செய்த பிறகுதான் உங்களுக்குச் செல்வாக்கு வந்தது' என்று அலட்டிக் கொள்பவர்கள் எத்தனை பேர்.

அதிர்ஷ்டம் கடைசிநேரத்தில் கதவைத் திறந்துவிடுமே தவிர; அதுவே கட்டடத்தையும் கட்டி முடித்துவிடாது. இங்கு காக்கைகள் உட்காரப் பனம்பழம் விழுந்த காரணத்தினாலேயே, ஏறிப் பறிக்க ஆள் தேவையில்லை என்று முடிவு செய்துவிடுபவர்களே ஏராளம்.

ஒருநாள் எதேச்சையாக நடந்தது தினமும் நடக்கும் என எதிர்ப்பார்ப்பது முட்டாள்தனம்.

பரிசுச்சீட்டை நம்பியே பணத்தைத் தொலைத்தவர்களும்,சூதாட்டத்தின் மூலம் சம்பளத்தையே இழப்பவர்களையும் நாம் பார்க்கிறோம். அவர்கள் விட்ட பணத்தை விட்ட இடத்திலேயே தேடும் முயற்சியில் அனைத்தையுமே பறிகொடுத்துப் பரிதவிப்பவர்கள்.

"நான் படித்த நான்கு கேள்விகளே தேர்வுக்கு வந்தால் நான் நேர்ச்சியடைந்துவிடுவேன்' என்று அதிர்ஷ்டத்தையே எண்ணி பரீட்சைக்குப் போகிறவர்கள் ஏதேனும் ஒரு கட்டத்தில் இடறி விழுவார்கள்.

அதிர்ஷ்டத்தினால் மட்டுமே முன்னேறியதாக நாம் நினைப்பவர்களிடம் ஏதேனும் ஒரு நல்ல குணம் இருக்கும். அந்தப் பண்புதான் அவர்களை உயர்த்தியிருக்குமே தவிர: அதுவே முக்கிய காரணியாக இருக்குமே தவிர அதிர்ஷ்டம் காரணமல்ல !

இஸ்லாத்தைப் பொருத்த வரை ...நல்ல காரியங்கள் நடத்துவதற்கு நல்ல நேரம் பார்ப்பது பிற சமூகத்தவர் பின்பற்றும் பழக்கம். இஸ்லாத்தில் நல்ல நேரம் கெட்ட நேரம் என்று நேரத்தில் எந்த வித்தியாசமும் இல்லை. காலண்டரைப் பார்த்துக் காலநேரம் பிரிப்பது அறிவுக்கு ஏற்ற செயலும் அல்ல. அல்லாஹ்வுக்கு உகந்த செயலும் அல்ல.

நேரம் காலம் பார்த்து நடத்தப்பட்ட எத்தனையோ திருமணங்கள் விவகாரத்தில் தொடங்கி விவாகரத்தில் முடிந்திருக்கின்றன. காலமும் நேரமும் அவர்களுக்கு கைகொடுக்வில்லை.

ஒரு குறிப்பிட்ட நேரத்தைத் தேர்ந்தெடுத்து 'முகூர்த்த நேரம்' என்று பிற சமூகத்தவர் குறிப்பிடுவதை முபாரக்கான நேரம் என்று அரபியில் குறிப்பிடுவதால் மட்டும் இஸ்லாமிய அங்கீகாரம் பெற்று விட்டதாக ஆகிவிடாது.

"பூமியில் உள்ளவர்களில் பெரும்பாலோரை நீர் பின்பற்றுவீரானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டு வழிகெடுத்து விடுவார்கள். (ஆதாரமற்ற) வெறும் யூகங்களைத்தான் அவர்கள் பின்பற்றுகிறார்கள் - இன்னும் அவர்கள் (பொய்யான) கற்பனையிலேயே மூழ்கிக்கிடக்கிறார்கள்". (குர்ஆன் : 6:116)

பசிக்கும்போது உணவருந்த எவரும் பஞ்சாங்கம் பார்ப்பதில்லை.

பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருக்கும் தாய் தன் குழந்தையைப் பெற்றெடுக்க நல்ல நேரம் பார்த்துக் காத்திருப்பதில்லை

உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு சிகிச்சை அளிக்க எந்த மருத்துவரும் கால நேரம் பார்த்துக் காத்திருப்பதில்லை.

ரயில் பயணங்கள் ராகு காலத்தில் ரத்து செய்யப்படுவதில்லை. எமகண்டம் பார்த்து எந்த விமானமும் காத்திருப்பதில்லை.

வாழ்க்கையில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் பிறந்த குழந்தையைக் காரணம் காட்டி 'இது பிறந்த நேரம் சரியில்லை' என்று சொல்வதும் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டால் வீட்டுக்கு வந்த மருமகளைக் காரணம் காட்டி 'இவள் வந்த நேரம் சரியில்லை' என்று சொல்வதும், தொடங்கிய காரியம் தோல்வி அடைந்தால் 'ஆரம்பித்த நேரம் சரியில்லை' என்று சொல்வதும் மிகப் பெரும் பாவம் என்பதை உணர வேண்டும்.

சிலர் நீண்ட காலமாக வறுமையிலும் - சிரமத்திலும் இருந்திருப்பார்கள் அதன் பிறகு அல்லாஹ் அவர்களுக்கு பொருளாதார வசதியை அதிகரித்திருப்பான். அந்தக் கால கட்டத்தில் பிறந்த குழந்தையைக் காரணம் காட்டி 'இது பிறந்த அதிர்ஷ்டம்' என்று சொல்வார்கள். இதுவும் தவறு தான்.

அல்லாஹ் வழங்கிய அருள் என்பதை மறந்து குழந்தையை அதிர்ஷ்டம் என்று நம்புவதும் தவறு. எல்லாக் குழந்தையையும் சமமாகக் கருதாமல் ஒரு குழந்தையை மட்டும் அதிர்ஷ்டக் குழந்தை என்று கருதுவதும் தவறு.

வாழ்க்கையில் ஏற்படும் வெற்றியும் தோல்வியும் - அல்லாஹ்வின் நாட்டப் படியே ஏற்படுகின்றது என்று ஈமானில் உறுதி வேண்டும்.நினைத்த காரியம் நடக்காமல் போவதும் தொடங்கிய காரியம் தோல்வி அடைவதும் இதைவிடச் சிறந்ததை நமக்குத் தருவதற்காகவோ அல்லது இதன் மூலம் ஏற்படவிருந்த ஆபத்திலிருந்து நம்மைக் காப்பதற்காகவோ இறைவனுடைய ஏற்பாடாக இருக்கக் கூடும் என்று எண்ணவேண்டும்.

அதை விட்டு விட்டு காலத்தின் மீதும் நேரத்தின் மீதும் பழி சுமத்துவது பெரும் பாவம். காலம், ஏமாற்றம் அடைந்தவர்களுக்கு நல்ல மாற்றத்தையும், முயற்சித்தவர்களுக்கு நல்ல முடிவையும், நம்பிக்கை கொண்டவர்களுக்கு நல்ல வழியையும் நிச்சயம் தரும்

ஏனெனில் இறைவன் கூறுகிறான். "காலத்தை ஏசாதீர்கள் நானே காலமாக இருக்கிறேன்'' -(ஹதீஸ்குத்ஸி)

இறை நம்பிக்கை நமது உள்ளத்தில் ஆழமாகப் பதிய வேண்டும். அப்போது தான் கால நேரத்தின் மீதுள்ள நம்பிக்கை நம்மை விட்டு மறையும். ஒவ்வொரு நாளின் 24 மணி நேரமும் நல்ல நேரமே! ஒவ்வொரு ஆண்டின் 365 நாட்களும் நல்ல நாட்களே!

நமது பேச்சும் செயலும் நல்லவையாக இருக்க வேண்டும். இது தான் முக்கியம்.'ஒரு போதும் அல்லாஹ் விதித்ததைத் தவிர (வேறு எதுவும்) எங்களை அணுகாது. அவன் தான் எங்களுடைய பாதுகாவலன்' என்று (நபியே) நீர் கூறும். மூமின்கள் அல்லாஹ்வின் மீதே முழு நம்பிக்கை வைப்பார்களாக! (அல் குர்ஆன் 9 51)

இரண்டு பிச்சைக்காரர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். முதல் பிச்சைக்காரர் சொன்னார்; "நான் மட்டும் ஒரு நிமிடம் முன்னால் பிறந்திருந்தால் ராஜாவாகி இருப்பேன்"


இரண்டாமவர் கேட்டார்: "நீ எப்ப பிறந்தாய்?"

முதலாமவர் சொன்னார்: "நான் 1960 ஆம் வருடம் ஜனவரி மாசம் 10ஆம் தேதி காலை 8.00 மணிக்குப் பிறந்தேன். நீ எப்ப பிறந்தாய்?"

இரண்டாமவர் சொன்னார்: "1960 ஆம் வருடம் ஜனவரி மாசம் 10 ஆம் தேத் காலை 7.59 மணிக்கு !

மன மெய்யியல் 84

(குறை காண்பதில் இன்பம் அடைகிறவர்கள்)



ஒருமுறை சாக்ரட்டீஸ் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து அவருடைய நண்பரைப் பற்றி ஏதோ கூற முயன்றார்.

உடனே சாக்ரட்டீஸ் அவரிடம் , ” என் நண்பரைப் பற்றி என்னிடம் கூறினால் அதற்கு முன் 3 கேள்விகளை உங்களிடம் கேட்பேன்.

மூன்று கேள்விக்கும் 'ஆம் ' என பதில் இருந்தால் மட்டுமே நீங்கள் அவரைப் பற்றி கூறலாம்”என்றார்.

சாக்ரட்டீஸ் முதல் கேள்வியை கேட்டார் “அவர் செய்த செயலை நேரடியாகப் பார்த்துவிட்டு தான் அவரைப் பற்றி கூறுகிறாயா ?” என்று கேட்டார்.

''இல்லை '' என பதில் சொன்னார்.

”அவரைப் பற்றிய நல்ல விஷயத்தைக் கூறப்போகிறாயா? ” என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டார்.

"இல்லை" என பதில் சொன்னார்.

”அந்த நண்பரைப் பற்றி என்னிடம் கூறினால் யாராவது பயனடைவார்களா ?" என்ற மூன்றாவது கேள்வியைக் கேட்டார்.

இதற்கும் இல்லை என்றே பதில் வந்தது.

“யாருக்கும் பயனில்லாத, நல்ல விஷயமுமில்லாத, நேரடியாக நீங்கள் பார்க்காத, என் நண்பரைப் பற்றிய சம்பவத்தை தயவு செய்து என்னிடம் கூறாதீர்கள்” என்றார்.

அடுத்தவர்களின் எழுத்திலும், இலக்கியத்திலும் குறை கண்டு பிடிப்பதில் சில பேர் அளவு கடந்த சிரமமுடையவர்களாக இருப்பார்கள். குறையைக் கண்டுபிடிக்கக் கூடாது என்பதல்ல.குறை கண்டு பிடிப்பதே வேலையாக இருக்கக் கூடாது.

சிலருடைய சுபாவமே அப்படியிருக்கும் ஒரு புத்தகம் படித்தால் ஒரு திருமண அழைப்பைப் படித்தால் கூட பிழை சட்டென்று அவர்களின் கண்களில் பட்டுவிடும். அந்தப் பிழைகளைப் பெரிதாகச் சொல்லுவர்.

பிழைகளைச் சுட்டிக்காட்டி பெரியவர்கள் திருத்துவது என்பது வேறு. ஆனால், இலக்கியம் படைத்தவனை விட பிழை கண்டுபிடித்து விட்டதால், தான் அந்த படைப்பாளி விட பெரியவனாகி விடுகிறோம் என்பதற்காக பிழையைக் கணடுபிடிக்கிறவர்களும் உண்டு.

இது பற்றி ஓர் அயர்லாந்து நாட்டு, எழுத்தாளர் ரொபட் லின்ட் என்பவர் ஓர் அருமையான ஆங்கில கட்டுரையை எழுதியிருக்கிறார்.

20ம் நூற்றாண்டின் மத்தியில் இறந்துபோன அவர் பல அருமையான அங்கதச் சுவை நிறைந்த கேலியும், கிண்டலும், குத்தலும் நிறைந்த பல கட்டுரைகளை எழுதியவர். அவர் “இன்ட்ரேஸ் ஒப் மிஸ்டேக்” அதாவது “குறை காண்பதில் இன்பம் அடைகிறவர்கள்” என்பவர்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

எடுத்துக்காட்டாக ரொபர்ட் லின்ட் ஒரு விமர்சகரைப் பற்றி குறிப்பிடுகிறார். ஷேக்ஸ்பியரை அவர் எப்படி விமர்சனம் செய்கிறார் என்றால், ஒத்தெல்லோ நாடகம் பற்றி ஒரு விமர்சனம். ஒத்தெல்லோ நாடகம் எழுதப்பட்ட அந்த நேரத்தில் அந்த விமர்சகர் எழுதுகிறார்.

"ஷேக்ஸ்பியர் குறிப்பிடுகிற ஒத்தெல்லோவின் காலத்தில் வெனிஸ் நகரத்தில் மூர் இனத்தைச் சார்ந்தவர்கள் யாருமே கிடையாது. ஆனால் ஷேக்ஸ்பியர், ஒத்தெல்லோவை மூர் இனத்தைச் சார்ந்தவன் என்று காட்டியிருக்கிறார். எனவே ஷேக்ஸ்பியருடைய வரலாற்று அறிவு எவ்வளவு குறைவானதாக இருக்கிறது பார்த்தீர்களா? என்று சொல்லி அந்த விமர்சகர் கொண்டாட்டமாக எழுதுவதை ரொபர்ட் லின்ட் குறிப்பிடுகிறார்.

ஒரு வேளை இந்த விமர்சகர் எழுதுவது சரியாகக் கூட இருக்கலாம். அந்த நேரத்திலே மூர் இனத்தைச் சாராதவர்கள் இருக்கலாம். அது ஒரு பிழை தான் ஷேக்ஸ்பியர் அந்த ஒரு குறிப்பைத் தவறவிட்டுவிட்டார் என்று எழுதலாமே தவிர, ஷேக்ஸ்பியருக்கு வரலாற்று அறிவே கிடையாது. இவரெல்லாம் நாடகம் எழுத வந்துவிட்டார் பாருங்கள்? என்று விமர்சனம் செய்வது நியாயம் தானா என்று ரொபர் லிண்ட் கேட்கிறார்?

ஏனென்றால் ஒத்தெல்லோவிலே இன்னும் எத்தனையோ அழகான உரையாடல்கள், காட்சியமைப்புகள் எல்லாம் இருக்கின்றன. ஒத்தெல்லோ என்ற நாடகத்தை உலகமே பாராட்டி ரசிக்கிறது. அந்தப் பகுதிகளையெல்லாம் விட்டுவிட்டு இந்த ஒரு சின்னப் பிழையை இவர் இவ்வளவு சிரமப்பட்டு தேடியிருக்கிறாரே என்பது ரொபர்ட் லின்ட்டுடைய வாதம்.

அதாவது நம்முடைய பழைய திருவிளையாடல் படத்தில் பாட்டெழுதி பிழைக்கிறவர்களுமுண்டு. பாட்டில் குறைகண்டே பிழைக்கிறவர்களுமுண்டு என்று தர்மி பேசுகின்ற வசனங்களும் போல நமக்கு இந்தக் கட்டுரை நினைவுக்கு வருகிறது.

ஆனால் குறைகளைக் கொண்டாடக் கூடாது. அதுதான் அடிப்படையான செய்தி. பிழைகளை திரிபுபடுத்தக் கூடாது. பிழைகளைக் காண்பதில் பேரின்பம் அடையக் கூடாது. இலக்கியம் படைப்பது பேரின்பமே தவிர, இலக்கியத்தில் பிழைகாண்பது பேரின்பமலல்ல.

ஏதேனும் ஓரிடத்திலாவது ஒரு சின்னப் பிழை நேர்ந்திருக்காதா என்று தேடித்தேடி, அதை எடுத்துக்காட்டி, அதன் மூலம் படைப்பாளியை விட தான் அறிவாளி என்பது போல காட்டிக் கொள்வது சரியான ஒரு விமர்சனமாக இருக்காது.

பிழைகளைக் கொண்டாடுகிற மனோபாவத்திலேயிருந்து நாம் விடுபட வேண்டும். நாம் படைப்பாளியாக இருக்க வேண்டும். படைப்பாளிகளை கண்ணியமாகவும் ஆக்கபூர்வமாகவும் விமர்சனம் செய்ய வேண்டும்.

பிறர் செய்யும் தவறைச் சுட்டிக் காட்டிவதில் இஸ்லாம் ஒரு படி மேலோங்கி அறிவுரை பகர்கிறது என்பதற்கு கீழ்கண்ட நிகழ்வு :

முஸ்லிம்கள் தொழுகைக்கு முன்பாக அங்க சுத்தம் செய்வதற்கு பெயர் ஒலு என்று பெயர். இதற்கென்று ஓர் ஒழுங்கு முறை உள்ளது.

இந்த ஒழுங்கு முறையைப் பின்பற்றாமல் தப்பும், தவறுமாக ஒலு செய்தவரிடம் நபிகளாரின் பேரர் இமாம் ஹசன் (ரலி) அவர்கள்,

"நான் செய்யும் ஒலுகில் ஏதேனும் தவறிருந்தால் தாங்கள் எனக்கு சுட்டிக் காட்டினால், என்னை நான் திருத்திக் கொள்வேன்" என்று கூறி தான் ஒலு செய்தனர்.

அந்த நபர் தான் செய்த ஒலுகில் தவறு இருப்பதை உணர்ந்து, இமாம் ஹசன் (ரலி) அவர்களிடம், "இனிமேல் தவறான முறையில் ஒலு செய்ய மாட்டேன்" . என்று கூறி,திருத்திக் கொண்டார் .

தவறு இருப்பதை நேரடியாக சுட்டிக்காட்டாமல், தான் செய்யும் செயலில் தவறு இருந்தால், தாங்கள் எனக்குச் சுட்டிக் காட்டுங்கள் என்று கூறுவதால், அவர் மனம் புண்படாமல் அதே நேரத்தில் அவருக்கு அறிவுரை வழங்கிய இமாம் ஹசன் (ரலி) எந்த மாதிரியான ஞான உபதேசம் என்பது புரிகிறதா ?

ஒரு நாள் ஒருத்தன் குயிலிடம் சொன்னான்,

"நீ மட்டும் கருப்பா இல்லைன்னா எவ்ளோ நல்லா இருக்கும்."

கடலிடம் சொன்னான், "நீ மட்டும்,உப்பா இல்லைன்னா எவ்ளோ

நல்லா இருக்கும்."

ரோஜாவிடம் சொன்னான், "உன்னிடம் முட்கள் இல்லைன்னா எவ்ளோ நல்லா இருக்கும்."


அப்போது அந்த மூன்றும் ஒன்று சேர்ந்து சொன்னது :

"ஏ..! மானிடா... உன்னிடம் மட்டும் பிறரின் குறை கண்டுபிடிக்கும் பழக்கம் இல்லைன்னா, எவ்ளோ நல்லா இருக்கும்."

பிறரிடம் குறை காணா மனிதன் என்றுமே அழகு தான்.

மன மெய்யியல் 85

(எளிமை என்னும் பெருந்தவம்)



வாழ்வியல் பண்புகளுள் ஒன்று எளிமை. எல்லாரும் நினைப்பதுபோல் எளிமையாய் வாழ்வது எளிமையானது இல்லை. ஆனால் அது கடினமானதும் இல்லை. அது இயல்பானது என்பதை மனமெய்யியல் நிரூபித்துக்கொண்டிருக்கிறது.

வழக்கம் ஒருமுறை காந்தியடிகள் காஷ்மீரத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார் வழியில் மழை பெய்யத் தொடங்கியது. அவரோ வழக்கம் போல் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அவரிடம் ஒருவர் "நீங்கள் ஏன் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்கிறீர்கள் ?" என்று கேட்டதற்கு, "ரயிலில் நான்காம் வகுப்பு என்று ஒன்று இருந்தால். நான் அதில்தான் நிச்சயம் பயணம் செய்வேன்" என்றார்.

அவ்வளவு எளிமையானவர். அவருடைய பெட்டியில் தண்ணீர் சொட்டலாயிற்று பெட்டி முழுவதும் தண்ணீர் பரவியது. ஒரு புகைவண்டி நிலையத்தில் கார்டு (Guard) அவரிடம் வந்து "தாங்கள் பெட்டி மாறி இருங்கள்" என்று கூறினார்.

காந்தியடிகள் "இந்தப் பெட்டியை என்ன செய்வீர்கள்" என்று கேட்டார்.

அவர் "தங்களுக்காக ஒரு பெட் டியைக் காலி செய்ய வைத்திருக் கிறேன். அதிலுள்ள பிரயாணிகளை இங்கே உட்காரச் செய்வேன்" என்றார்.

காந்தியடிகளோ "இந்தப் பெட்டியில் வேறு ஆட்கள் உட்கார முடியுமானால் நானே ஏன் உட்கார்ந்திருக்கக் கூடாது! என் சுகத்திற்காகப் பிறருக்குக் கஷ்டம் கொடுப்பானேன்?" என்றார்.

நாம் சுகப்பட்டால் போதும்; மற்றவர்கள் எக்கேடு கெட்டான

நமக்கென்ன என்கின்ற எண்ணம் நமக்கு உண்டு. இப்படி சுயநலத்து

இருப்பதால்தான் நாம் சாதாரண ஆத்மாக்களுடன் இருக்கிறோம்.

உமர் (ரலி) அவர்கள் ஆட்சிகாலத்தில் பாலஸ்தீன யூதர்களிடம் இருந்து வெற்றி பெற்று மீண்டும் இஸ்லாமியர் கைவசம் வந்து விட்டது.

அப்பொழுதைய பாலஸ்தீன வாசிகள் தங்களின் ஆட்சியாளர் உமர் அவர்களின் முகத்தை பார்க்க ஆசைபட்டு ஆர்வத்தில் இருந்தனர் மேலும் பாலஸ்தீனத்தின் சாவியை உமரிடமே நேரடியாக ஒப்படைப்போம் என்று கிளர்ச்சி செய்தனர்.

இதையறிந்த உமர் அவர்கள் தனக்கு துணையாக ஆட்சியின் பணியாளர் ஒருவரை அழைத்து கொண்டு பாலஸ்தீனம் புறப்பட்டு சென்றார்கள்.

உமர்(ரலி) அவர்கள் செல்லும் வழியில் தன் பணியாளரிடம் ஒரு குறிப்பிட்ட அளவை சொல்லி, (உ-ம்) அதாவது இரண்டு கிலோமீட்டர் அளவுக்கு ஒட்டகத்தில் நான் அமர்வேன். பின் நீ இரண்டு கிலோமீட்டர் நீ அமர்ந்து வா என்று ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்.

உமர் அவர்களே ஒட்டகத்தில் முழுவதுமாக அமர்ந்து வந்தாலும் யாரும் கேட்க முடியாது இருந்தும் சம உரிமையை பேணினார்கள்.

அவ்வாரே மாறி மாறி சுழற்சி முறையில் பயணித்து பாலஸ்தின எல்லையை நெருங்கிவிட்டார்கள்.

பாலஸ்தீன எல்லைக்குள் மக்கள் இருவழியிலும் பெருங்கூட்டமாக காத்து நின்றார்கள்.அவர்களை முஸ்ஸீம் தளபதி காலித் பின் வலீத் (ரலி) கட்டுபடுத்தி உமர் வரவை எதிர் நோக்கியிருந்தார்.

உமர் அவர்கள் பாலஸ்தீன எல்லைக்குள் நுழையும் நிலையில் உமர் அவர்களின் ஒட்டகத்தில் அமரும் தூரம் முடிந்து விட்டது,

உமர் அவர்கள் ஒட்டகத்தை பணியாளரிடம் தந்தார்.

பணியாளரோ, " தற்போது பாலஸ்தீன எல்லைக்குள் நுழைய இருக்கிறோம் நீங்கள் தொடர்ந்து அமருங்கள்" எனக் கூறினார்.

மேலும் மக்கள் காணும் போது நீங்கள் ஒட்டகத்தில் அமர்வதே சரியென்றார்.

ஆனால் உமர் அவர்களோ "நான் இங்கு ஒட்டகத்தில் மன்னனாக அமர்வதைவிட , நான் ஒப்பந்தத்தை மீறாத அடியானாக இறைவன் முன் நிற்க ஆசைபடுகிறேன். அதனால் மிகவும் களைப்பாக இருக்கும் நீ அமர்ந்து கொள்" என்று பணியாளர் அமர்ந்திருக்கக ஒட்டகத்தை பிடித்து கொண்டு பாலஸ்தினத்தில் புகுந்தார்கள்

மக்கள் அனைவரும் பணியாளரை மன்னரென நினைத்து மகிழ்ச்சியில் ஒட்டகத்தில் வீட்டிருப்பவரை பார்த்து மகிழ்ச்சி கொண்டார்கள்.

பாலஸ்தீன மக்கள், பணியாளரே மன்னன் என நினைக்க மற்றொரு காரணம் பணியாளரின் சட்டையில் மூன்று கிளிச்சல்கள் ஒட்டகத்தை பிடித்து வந்த உமரின் ஆடையிலோ 16 கிளிச்சல்கள் !

அங்கே இருந்த மக்கள் யாரும் இதற்கு முன் உமர் அவர்களை பாத்ததில்லை என்பதால் பணியாளரை மன்னனாக உறுதியாக்கி பார்த்தார்கள்

அங்கே முஸ்ஸீம் தளபதி காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஒட்டகத்தில் பணியாளர் அமர்ந்து உமர் நடந்து வருவதை கண்டதும் தன் உடைவாளை உருவிக் கொண்டு பணியாளரை வெட்டுவதற்காக விரைந்து வந்தார்

அதை கண்ட உமர் காலித் அவர்களை தடுத்து, "நீங்கள் வரம்பு மீற வேண்டாம் மேலும் ஒப்பந்தபடியே அவர் அமர்ந்து வருகிறார்" எனக் கூறினார்


அப்போது அங்கிருந்த மக்கள் உமரின் எளிமை, நேர்மை, தன்னடக்கம் அனைத்தையும் கண்டு, " இப்படி ஒருவர் ஆட்சியில் தாங்கள் குடிமக்கள் என்பதை நினைத்து பெருமைபடுகிறோம்" என்றனர்.

காந்தி முதல் கொண்டு, கெஜ்ரிவால் வரை உமர் (ரலி)

ஆட்சியைக் கொண்டு வருவேன் என்று சொல்கிறார்களே அதற்கு காரணம் அவர்களின் எளிமையும் , நேர்மையும்.

மன மெய்யியல் 86

(உங்கள் குழந்தை)



"ஜூலி ஹைன்ஸ், ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர். குழந்தைகள் உளவியல் தொடர்பாகவும், குழந்தை வளர்ப்பு தொடர்பாகவும் பல உரைகள், ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார். 'How to Raise an Adult' என்ற தலைப்பில் அவர் தொடர்ச்சியாக ஆற்றிவரும் Tedx உரைகள் சமூக வலைதளங்களில் மிகவும் பிரபலமானவை.

அவர், தான் பார்த்த வெற்றிபெற்ற குழந்தைகளிடம் இருந்த மிக முக்கியமான குணம் என்று 'குழந்தைகளின் அன்றாட வேலைகளை அவர்களே செய்துகொள்வதுதான்' என்கிறார். அவர்களுடைய அன்றாட சாதாரண வேலைகளைக்கூட அவர்களுக்குப் பதிலாக நாம் செய்துகொண்டிருந்தால் அவர்களுக்கு எப்படித் தன்னம்பிக்கையும், தைரியமும் வரும் என்று அவர் கேட்கிறார்.

தங்கள் வேலைகளை, அதுவும் எளிதான அன்றாட

வேலைகளிலிருந்து நேர்த்தியையும், ஒழுங்கையும், நேர மேலாண்மையையும் மிக எளிதாகக் குழந்தைகளால் கற்றுக் கொள்ள முடியும்.

அது மட்டும் இல்லாமல், அப்போது மற்றவர்களின் உதவியை, தேவையை, கஷ்டங்களை அவர்கள் புரிந்து கொள்ளத் தொடங்குவார்கள். அது அவர்களைப் பக்குவப்பட்டவர்களாக மாற்றும். தங்கள் இயல்புகள், குறைகள், போதாமைகள், விருப்பங்கள் என்று குழந்தைகள் தங்களைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்வதற்கும் அது உதவியாக இருக்கும்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகம், 700 பேரை நர்சரி பள்ளிக் காலத்திலிருந்து அவர்களின் 25 வயது வரை தொடர்ச்சியாகக் கவனித்து ஆராய்ச்சியை மேற்கொண்டது.

அதில் 25 வயதில் சிறப்பான ஆளுமை உடையவர்களாகவும், வெற்றிபெற்றவர்களாகவும் இருப்பவர்கள் சிறுவயதிலிருந்தே மற்றவர்களிடம் கனிவாகவும், மிக எளிமையாகப் பழகுபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள்.

சக குழந்தைகளுடன், மனிதர்களுடன் இணக்கமாகப் பழகும் திறன் அந்தக் குழந்தையை வெற்றிப் பாதையை நோக்கி மிகச் சுலபமாகக் கொண்டுசேர்க்கிறது என்கிறது அந்த ஆராய்ச்சி முடிவு.

ஆனால், இன்றைய கல்விச் சூழலில் பெற்றோர்களாகிய நாம் எந்த அளவுக்குக் குழந்தைகளிடம் இதை அனுமதிக்கிறோம் அல்லது சொல்லித்தருகிறோம்?

"அவனை/அவளைவிட நீ நிறைய மார்க் வாங்க வேண்டும்", "அவனை/அவளை நீ இந்தப் போட்டியில் நிச்சயம் ஜெயிக்க வேண்டும்", "அவனை/அவளை விட நீ நன்றாக டான்ஸ் ஆட வேண்டும்" எனச் சிறு குழந்தைகளின் மனதில், அவர்களின் நண்பர்களின் மீது ஒரு போட்டி மனப்பான்மையைத்தான் எந்நேரமும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

சக குழந்தைகளை எப்போதும் போட்டியாளராக நினைத்துக் கொண்டு வளரும் குழந்தைகளால் எப்படி அவர்களுடன் இணக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முடியும்?

அதே போல, “அவர்களோட என்ன பேச்சு? வந்து படி”, “பக்கத்து வீட்டுக்கெல்லாம் போகக் கூடாது” என எந்த நேரமும் நமது கைகளுக்குள்ளேயே குழந்தைகளை வளர்த்துவருகிறோம்."

எந்நேரமும் நமது கட்டுப்பாட்டிலேயே வளரும் குழந்தைகள், பழகும் திறனை முற்றிலுமாக இழக்கிறார்கள். முதன்முறையாக சமூகத்தைத் தனியாக எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் வரும்போது திணறிவிடுகிறார்கள்.

மனிதர்களைப் புரிந்துகொள்வதிலும், அவர்களுடன் நீடித்த உறவை ஏற்படுத்திக்கொள்வதிலும் ஏராளமான சிக்கல்களை முதல் முறையாகச் சந்திக்கத் தொடங்குகிறார்கள். அதுதான் அவர்களுடைய வாழ்க்கையின் மிகப் பெரிய சவாலாக அமைந்துவிடுகிறது.

சிறு வயதிலிருந்தே அவர்கள் மற்றவர்களுடன் பழகிக் கொண்டிருந்தால், மனிதர்களை எப்படி எதிர்கொள்ள, கையாள வேண்டும் என்பதை எளிதில் கற்றுக்கொண்டிருப்பார்கள். அது, வெற்றியை நோக்கிய பாதையில் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கும்.

உங்கள் வாழ்வில் நீங்கள் அடைய முடியாத உங்கள் ஆசைகளை உங்கள் குழந்தைகள் மூலம் அடைய நினைக்கிறீர்களா . ?

உங்கள் காலத்தின் சிறந்த படிப்பு அல்லது சிறந்த தொழில் என்று உங்கள் அறிவின்படி உங்கள் குழந்தைகளை இப்படித்தான் செய்ய வேண்டும் என்று நீங்கள் வற்புறுத்துகிறீர்களா ?

உங்களுக்காக கலீல் ஜிப்ரானின் அறிவுறை கவிதை

உங்கள் குழந்தை

உங்கள் குழந்தைகள்

உங்கள் குழந்தைகள் அல்ல

அவர்கள் வாழ்க்கை

தமக்கென்று வாழ வந்த

குழந்தைகள்

அவர்கள் உங்கள் மூலமாக

வந்திருக்கிறார்கள்

உங்களிடமிருந்தல்ல

அவர்கள் உங்களுடன்

இருந்தாலும் உங்களுக்கு

சொநதமானவர்கள் அல்ல

அவர்கள்

உங்களுடன் இருந்ததாலும்

அவர்கள் வேறு ஒரு படைப்பு

அவர்கள் வேறு ஒரு காரியத்திற்காக

இவ்வுலகில் வந்தவர்கள்

உங்கள் காரியத்திற்காக அல்ல

உங்கள் அன்பை நீங்கள்

அவர்களுக்குத் தரலாம்

உங்கள் எண்ணங்களை அல்ல;

அவர்களுக்கென்று

தனிச் சிந்தனை உண்டு

அவர்கள் உங்களுடன்

உங்கள் உலகில் இருந்தாலும்

அவர்கள் வேறு ஒரு உலகில்

வாழகிறார்கள்

அவர்கள் வாழும் உலகை

நீங்கள் தரிக்கலாம் ஆனால்

அவர்களின் உலகில்

நீங்கள் வாழ முடியாது

உங்கள் கனவுகளிலும் கூட

அவர்களைப் போலிருக்க

நீங்கள் முயலலாம். -ஆனால்

அவர்களை உங்களைப் போல

ஆக்க முடியாது

அவர்களின் உடல்களுக்குத்தான்

நீங்கள் பாதுகாப்பு தர முடியும்

அவர்களின் ஆன்மாக்ளுக்கு அல்ல

வாழ்க்கை

பின் திரும்பிச் செல்லாது

நேற்றுடன் இன்று

ஒட்டிக் கொள்ளாது

நீங்கள் வில்கள்

உஙகளிடமிருந்து எய்யப்பட்ட

உயிருள்ள அம்புகள்

உங்கள் குழந்தைகள்தான்

ஆனாலும்

உங்கள் குழந்தைகள் அல்ல

அவர்கள் தமக்கென்று வாழ வந்த

உங்கள் குழந்தைகள்

- கலீல் ஜிப்ரான்

மன மெய்யியல் 87

(அறிவுக்குக் கடிவாளம்)



நாம் ஒரு நிகழ்வின் நேர்மறையான (Positive) பக்கங்களை மட்டும் பரிசீலனை செய்பவர்களாக இருந்தால், வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக மாறிவிடும்.

எதிர்மறையான செய்திகளை மட்டுமே கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிப் பார்த்துக் கொண்டிருந்தால், நரம்புத் தளர்ச்சியும் இரத்தக் கொதிப்பும்தான் ஏற்படும்.

எதிர்மறையானதை மட்டும் பார்த்தால் உடலில் அமிலம் அதிகரித்து எதைக் கேட்டாலும் கோபம் வர ஆரம்பிக்கும். கோபம் பலவீனத்தின் சின்னம்

சிலர் தங்கள் அறிவைத் தேவையில்லாத இடத்தில் காட்டத்

துணிந்தால் நட்டம் அவர்களுக்குத்தான்.

ஒரு ரசாயன விஞ்ஞானி, உயிரியல் நிபுணர், மின்சாரப் பொறியாளர் ஆகியோரை மின் இருக்கையில் அமர்த்தி சாகடிக்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தண்டனையை நிறைவேற்றுபவன் ரசாயன விஞ்ஞானியிடம் "நீங்கள் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?" என்றான். அவர் “இல்லை" என்றதும் அவன் சுவிட்சை அழுத்தினான். ஆனால் மின்நாற்காலி வேலை செய்யவில்லை.

அந்த நாட்டின் ஒருமுறை தண்டனை நிறைவேற்றுப் படாவிட்டால், குற்றவாளி விடுவிக்கப்பட வேண்டும் எனவே ரசாயன விஞ்ஞானி விடுதலையானார்.

உயிரியல் நிபுணரும் மின்நாற்காலி வேலை செய்யாததால்

விடுவிக்கப்பட்டார்.

அடுத்தது மின்சாரப் பொறியாளர் மின்இருக்கைக்கு அழைத்து வரப்பட்டார். "உங்களுக்குச் சொல்லிக்கொள்ள ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டதும்,

அந்த மின்சாரப் பொறியாளர் “ஆமாம். அந்த சிவப்பு மற்றும் நீல வயர்களை ஒன்றாக இணைத்தால் இந்த நாற்காலி வேலை செய்யும்" என்றார்.

அதனால் கருகிப் போனார்.

எந்த இடத்தில் தவறு கண்டுபிடிக்கக்கூடாதோ, அங்கு கண்டு பிடித்ததால் அவர் உயிர் போனது. சில நேரங்களில் விடை

தெரித்தாலும் மௌனமாக இருப்பதுதான் உத்தமம்.

நிறைய விஷயம் தெரிந்தவர்கள் ஒன்றுமே தெரியாதது போல் சில

இடங்களில் அமர்ந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். இந்தக் கதையை படிக்கும்போது திருக்குர்ஆனிலும் அறிவுக்குக் கடிவாளம் போடக்கூடிய வசனங்களும் இருக்கிறது .

(திருக்குர்ஆனின் முஹ்கம், முதஷாபிஹாத் வசனங்கள்)

முஹ்கம் வசனங்கள் என்றால் என்ன ?

முதஷாபிஹாத் வசனங்கள் என்றால் என்ன ?

'அவன் தான் உம்மீது இவ்வேதத்தை இறக்கி வைத்தான். அதில் (கருத்துத் தெளிவுள்ள) 'முஹ்கமாத்" வசனங்களும் உள்ளன. அவைதான் இவ்வேதத்தின் அடிப்படையாகும்.

மற்றும் சில (பல கருத்துக்களுக்கு இடம்பாடான) 'முதஷாபிஹாத்"வசனங்களும் உள்ளன. எவர்களின் உள்ளங்களில் வழிகேடு இருக்கிறதோ அவர்கள் குழப்பத்தை நாடியும், இதன் (தவறான) விளக்கத்தைத் தேடியும் அதில் பல கருத்துக்களுக்கு இடம்பாடான வற்றைப் பின்பற்றுகின்றனர். அதன் யதார்த்தமான கருத்தை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியமாட்டார்கள்.

அறிவில் தேர்ச்சி பெற்றவர்களோ 'நாங்கள் அவற்றை நம்பிக்கை கொண்டோம். அனைத்தும் எங்கள் இரட்சகனிடமிருந்துள்ளவையே" என்று கூறுவார்கள். சிந்தனையுடையோரைத் தவிர மற்றவர்கள் நல்லுபதேசம் பெறமாட்டார்கள்." (3:7)

இந்த வசனத்தில் குர்ஆனில் மிகத் தெளிவான விளக்கமளிக்ககூடிய 'முஹ்கமான" வசனங்களும் இருப்பதாகவும் , அவ்வாறே மூடலான, பல அர்த்தங்களுக்கு இடம்பாடான, முடிவு இதுதான் என அறுதியிட்டுக் கூற முடியாத முதஷாபிஹத்தான வசனங்களும் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

குர்ஆனின் சில வசனங்களைப் பார்க்கும் போது முழுக்குர்ஆனும் தெளிவானது என்ற அர்த்தம் தொனிப்பது போல் இருக்கும்.

உதாரணமாக, 'அலிஃப், லாம், றா. (இது) வேதமாகும். இதன் வசனங்கள் தெளிவுபடுத்தப்பட்டு பின்னர் யாவற்றையும் அறிந்த, ஞானமிக்கவனிடமிருந்து அவை விபரிக்கப்பட்டுள்ளன."

குர்ஆன் (11: 01)

மற்றும் சில வசனங்களைப் பார்க்கும்போது முழுக் குர்ஆனும் முதஷாபிஹத்தானது என்ற அர்த்தம் தொனிப்பது போல் தோன்றும். உதாரணமாக,

''அல்லாஹ் மிக அழகான செய்தியை வேதமாக இறக்கி வைத்துள்ளான். அவை ஒன்றையொன்று ஒத்ததாகவும், திரும்பத் திரும்ப ஓதப்படுபவையாகவும் இருக்கின்றன.

தமது இரட்சகனை அஞ்சுவோரின் தோல்கள் இதனால் சிலிர்த்து விடுகின்றன. பின்னர் அவர்களது தோல்களும், அவர்களது உள்ளங்களும் அல்லாஹ்வை நினைவு கூர்வதன் பால் மென்மையடைகின்றன. இது அல்லாஹ்வின் நேர்வழியாகும்.

இதன் மூலம் தான் நாடுவோரை அவன் நேர்வழியில் செலுத்துகின்றான். அல்லாஹ் யாரை வழி கேட்டில் விட்டு விடுகின்றானோ அவனை நேர்வழியில் செலுத்துபவர் எவருமிலர்." (39:23)

ஆல இம்ரானின் ஏழாம் வசனம் (3: 7)முஹ்கமும் உண்டு, முதஷாபிஹாத்தும் உண்டு என்று கூறுகின்றது. இதை எப்படிப் புரிந்து கொள்வது என்ற குழப்பம் ஏற்படலாம்.

முதல் வசனத்தில் தெளிவுபடுத்தப்பட்ட வேதம் என்பது வசனங்களின் ஒழுங்கு உறுதித் தன்மை என்ற வகையில் எடுத்துக் கொண்டால் அல்குர்ஆனின் அனைத்து வசனங்களும் முஹ்கமானதுதான். தெளிவானது, உறுதியானதுதான்.

இரண்டாம் வசனத்தில் 'கிதாபன் முதஷாபிஹா" என்ற வசனம் ஒட்டுமொத்த குர்ஆனின் கருத்தையும் எடுத்துப் பார்த்தால் ஒன்றுக் கொன்று முரண்படாமல் ஒன்றை யொன்று ஒத்துச் செல்வதாக இருக்கும். அந்த வகையில் இந்த குர்ஆன் முதஷாபிஹத்தான வேதம் என்று இங்கே கூறப்படுகின்றது.

குர்ஆனில் முஹ்கமான வசனங்களும் உண்டு. முதஷாபிஹத்தான வசனங்களும் உண்டு எனக் கூறும் இந்த வசனத்தைப் பொறுத்தவரையில் குர்ஆனில் மாற்றுக் கருத்துக் கூற முடியாத முஹ்கமான வசனங்களும் உள்ளன.

பல கருத்துக்களுக்கு இடம்பாடான முதஷாபிஹத்தான வசனங்களும் உள்ளன. ஒரு வார்த்தை பல அர்த்தங்களைத் தரக்கூடியதாக அமைந்த வசனங்களை இந்த வகையில் சேர்க்கலாம்.

முஹ்கம், முதஷாபிஹாத் என்பனவற்றுக்கிடையில் சில வேறுபாடுகளை இப்படிக் கூறலாம்.

01.

முஹ்கமான ஆயத்துக்களின் முடிவு மிகத் தெளிவாக இரண்டாம் கருத்துக்கு இடமில்லாமல் இருக்கும்.

முதஷாபிஹத்தான வசனத்தின் முடிவு மூடலாக இருக்கும். சில அறிஞர்கள் சூறாக்களின் ஆரம்பத்தில் வரும் 'அலிப் லாம் மீம்"... போன்ற துண்டிக்கப்பட்ட எழுத்துக்களை அல்லாஹ் மட்டும் அறிந்த முதஷாபிஹத்தான வசனங்களாகக் குறிப்பிடுவர்.

02.

முஹ்கமான ஆயத்துக்களின் அர்த்தம் வெளிப்படையாக இருக்கும். பாவிக்கப்பட்ட வார்த்தை மூலம் அல்லது தஃவீல்-விளக்கத்தின் மூலம் அதை அறியலாம். ஆனால், முதஷாபிஹத் தான வசனங்களின் முடிவான அர்த்தத்தை அல்லாஹ் மட்டுமே அறிவான். உதாரணமாக துண்டிக்கப்பட்ட எழுத்துக்கள், மறுமை நிகழ்வு, தஜ்ஜாலின் வருகை, மறுமையின் அடையாளமான தாப்பதுல் அர்ழ் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

03.

முஹ்கம் என்றால் ஒரு அர்த்தத்தைத்தான் கொடுக்க முடியுமாக இருக்கும். முதஷாபிஹாத் என்றால் பல அர்த்தத்திற்கு இடம்பாடானதாக அமைந்திருக்கும்.

04.

மற்றும் சில அறிஞர்கள் முஹ்கமான ஆயத்துக்கள் தன்னளவில் தெளிவாக இருக்கும். வேறு விளக்கம் அதற்குத் தேவையாக இருக்காது. அல்லாஹ் ஒருவன் என்று கூறுங்கள் என்றால் இதன் பொருளும் முடிவும் தெளிவானது. இதற்கு வேறு விளக்கம் தேவைப்படாது.

முதஷாபிஹாத்தான வசனத்தின் விளக்கம் இதுதான் என்று அடித்துக் கூற முடியாது. ஒரு கோணத்தில் பார்த்தால் இப்படியும், மறு கோணத்தில் பார்த்தால் அப்படியும் விளக்கம் கூறக் கூடிய வகையில் அமைந்திருக்கும். ஆனால், அவை வேதத்தின் அடிப்படையாகவும் பின்பற்றத் தக்கதாகவும் இருக்காது!

இவ்வாறு முஹ்கம், முதஷாபிஹாத் என்பவற்றை அறிஞர்கள் பலரும் பலவாறு விளக்கியுள்ளார்கள். இந்த ஆயத்தில் முஹ்கம்தான் இந்த வேதத்தின் அடிப்படை என்றும் முதஷாபிஹாத் வசனங்களில் வழிகேடர்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் எச்சரிக்கை செய்யப்படுகின்றது.


இந்த எச்சரிக்கை உணர்வும் முஹ்கம், முதஷாபிஹாத் இரண்டுமே அல்லாஹ்விடமிருந்து வந்தவையே என்ற ஈமானும் அவசியம் என்று கூறப்படுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதஷாபிஹாத் வசனங்கள்தான் அறிவிற்குக் கடிவாளம்.

எந்த இடத்தில் தவறு கண்டுபிடிக்கக்கூடாதோ, அங்கு தவறை கண்டு பிடித்ததால்தான் மின்சாரப் பொறியாளர் உயிர் போன கதை மாதிரி, முதஷாபிஹாத் வசனங்களால் நம் ஈமான் பறிபோய்விடலாம். அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக !

மன மெய்யியல் 89

("சல்லடையினை நீரால் நிரப்பு" ? !)



ஒருஞானியின் சொற்பொழிவினை பக்தர்கள் பலர் கேட்டுக்கொண்டு இருந்தார்கள். அப்போது கேள்வி பதில் நேரம்.

ஒரு பக்தர் கேட்டார் "வாழ்வில் தினசரி நடக்கும் எதிர்மறை விளைவுகளில் இருந்து எப்படி விடுதலை அடைவது?" என்று.

ஞானி "இது போன்ற நேரங்களில் தியானம் செய்வதன் மூலம் உணர்வுகளை எப்படி நெறிப்படுத்தலாம்" என்பது பற்றி குறிப்பிட்டார்.

இறுதியாக "நீங்கள் இந்த உணர்தலை தியானத்தின்போது மட்டும் அடையாமல் வாழ்க்கையின் மற்ற கணங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். இந்த ஒட்டு மொத்தப் பயிற்சியே சல்லடையினை நீரால் நிரப்புவது போலத்தான்" என்று இறுதியாக அறிவுறுத்தினார்.

எல்லோரும் சென்று விட்டார்கள். ஆனால் ஒரு பக்தனுக்கு மட்டும் 'சல்லடையை எப்படி நீரால் நிரப்ப முடியும்?' எனும் கேள்வி எழுந்தது. இதற்கு விடை தேடி அவனால் காண முடியவில்லை.

மீண்டும் அவன் யோகியிடம் வந்தான். அவரிடம், "கோவிலுக்கு செல்வதன் மூலமும், மந்திர உட்சாடனைகள் மூலமும் அடுத்தவர்களுக்கு உதவுவதன் மூலமும் நான் நிம்மதி அடையலாம் என்று நினைத்து இருந்தேன்.

நீங்கள் சல்லடையில் நீர் நிரப்புவது போல பயிற்சி செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள். சல்லடையில் எப்படி நீரை நிரப்புவது? நீங்கள்தான் விளக்கிக் கூற வேண்டும்" என்று கேட்டான்.

உடனே அந்த ஞானி அவனையும் மற்றும் தனது சீடர்களையும் அருகில் இருந்த கடற்கரைக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு சென்றவுடன் பக்தன் கையில் ஒரு சல்லடை மற்றும் ஒரு குவளையினை கொடுத்து, "இப்போது சல்லடையில் நீரை நிரப்பு" என்றாராம்.

பக்தனும் நீரை வாரி வாரி சல்லடையின் மீது இறைத்தான். அது நிரம்பவில்லை.

உடனே ஞானி கூறினார், "நீ செய்யும் ஆன்மிகப் பயிற்சிகளும், உதவிகளும் இது போன்றதுதான். இதனால் மட்டும் சல்லடை நிரம்பாது" என்று கூறி அவனிடம் இருந்த சல்லடையினை வாங்கி கடலில் வீசி எறிந்தார்.

சல்லடை தண்ணீரில் விழுந்ததும் நீர் நிறைத்து அதனை மூழ்கடித்தது.

"இப்போது பார் அது தண்ணீரால் நிறைந்திருக்கிறது. இது போலத்தான் தெய்வீகத்திடம் நம்மை ஒப்படைத்திட வேண்டும். முழுமையாக ஒப்படைத்தவர்களிடம் தெய்வீக சக்தி இறங்குகிறது" என்றாராம்.

மூஸா (அலை) அவர்கள், பிர்அனுக்கு பல வருடங்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தை போதனை செய்து கொண்டிருந்தார்கள். இனி முடியாது இங்கு இருந்தால் பிர்அவ்ன் நம்மை அழித்து விடுவான் என்ற நிலை வந்த போதுதான் ஊரை விட்டு வேளியேறுகிறார்கள்.

இதனை அறிந்த பிர்அவ்னுடைய பட்டாளங்கள் பிர்அவ்னிடம் சென்று மூஸாவும் அவரோடு இருப்போரும் தப்பிச் செல்கிறார்கள். என்ற செய்தியைச் சொல்கிறார்கள்.

பிர்அவ்னும் அவனுடைய பட்டாளமும் மூஸா (அலை) அவர்களையும் பனூஇஸ்ரவேலர்களையும் பூண்டோடு அழித்து விட வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டு தன்னுடைய படையுடன் விரட்டிக் கொண்டு வருகிறார்கள்.

மூஸா (அலை) அவர்களும் பனூ இஸ்ரவேலர்களும் எப்படியாவது இவனுடைய இந்த அநியாயத்தில் இருந்த தப்பிக்வேண்டும் என்று திக்குத் திசையில்லாமல் ஓடுகிறார்கள். கடைசியில் அவர்கள் சங்கமித்த இடம் கடலாகும்.

பின்னால் பிர்அவ்னுடைய படையும் முன்னால் கடலும். இப்போது தான் அல்லாஹ் பற்றிய உறுதியான நம்பிக்கையும் சங்கமிக்கிறது.

அப்போது அவர்களை ஏற்றுக் கொண்ட பனூ இஸ்ரவேலர்கள் மூஸா (அலை) அவர்களைப் பார்த்து, மூஸாவே! நாம் இந்தக் கடலில் மூழ்கடிக்கப்படுவோம். இன்று தப்ப முடியாத நாள், வசமாக மாட்டிக் கொண்டோம்".என்று சொன்னபோது

"அப்படி நடக்காது. உங்களால் முடியாது என்று நினைக்கிறீர்களே இதுதான் உங்களின் ஈமான். இதுதான் உங்களுக்கு எனக்கும் உள்ள வித்தியாசம். சகல வல்லமையும் பொருந்திய என்னுடைய இறைவனால் இது முடியும். அவன் எனக்கு வழி காட்டுவான் என்று கூறி மூஸா (அலை) அவர்கள் உறுதியான நம்பிக்கையை அப்போது வெளிப்படுத்தினார்கள்.

அப்போது அல்லாஹ் அவர்களுக்கு வழிகாட்டினான். இது பற்றி திருமறைக் குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்.

"இரு கூட்டத்தினரும் நேருக்குநேர் பார்த்துக்கொண்டபோது “நாம் பிடிக்கப்பட்டு விடுவோம் என்று மூஸாவின்சகாக்கள் கூறினர். அவ்வாறில்லை. என்னுடன் என் இறைவன் இருக்கிறான். அவன் எனக்கு வழிகாட்டுவான்” என்று அவர்கூறினார்.

உமது கைத்தடியால் கடலில் அடிப்பீராக” என்று மூஸாவுக்கு அறிவித்தோம். உடனே அது பிளந்தது. ஒவ்வொரு பிளவும் பெரும்மலை போன்று ஆனது. அங்கே மற்றவர்களையும் நெருங்கச் செய்தோம்.

மூஸாவையும், அவருடன் இருந்த அனைவரையும் காப்பாற்றினோம். பின்னர் மற்றவர்களை மூழ்கடித்தோம். இதில் சான்று உள்ளது. அவர்களில் அதிகமானோர் நம்பிக்கை கொள்வோராக இருக்கவில்லை. உமது இறைவன் மிகைத்தவன்; நிகரற்ற அன்புடையோன். (அல்குர்ஆன் (26:62-68))"

திக்கற்ற நிலையில் நாம் இருந்தாலும் சரி. என்னுடைய இறைவனுக்கு முடியும் என்று நினைக்க வேண்டும். உளப்பூர்வமாக நம்ப வேண்டும். அதுதான் ஈமானிய உறுதியும் அல்லாஹ் பற்றிய அசைக்க முடியாத நம்பிக்கையுமாகும்.

இது முடியுமா? எப்படி சாத்தியப்படும்? என்று தப்பாக நினைத்து சில விசயங்களில் பொடுப்போக்குத் தனத்தை வெளிப்படுத்துகிறோம்.


அல்லாஹ்வின் வல்லமை பற்றி மூஸா (அலை) அவர்கள் எப்படி உறுதியாக நம்பினார்களோ, அப்படி நம்ப வேண்டும். அவனால் முடியாதது எதுவுமே இல்லை அவன் நமக்கு உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறான். எப்போது அவனிடம் நம்முடைய ஈமானிய உறுதியை வெளிப்படுத்துகிறோமோ அப்போது இது போன்ற அற்புத ஆற்றலுடைய அல்லாஹ்வின் உதவியைக் காணமுடியும்.

ஞானி சல்லடையைத் தூக்கி கடலில் எறிந்து, "இப்போது பார் அது தண்ணீரால் நிறைந்திருக்கிறது. இது போலத்தான் தெய்வீகத்திடம் நம்மை முழுமையாக ஒப்படைத்திட வேண்டும். அப்படி ஒப்படைத்தவர்களிடம் மட்டுமே தெய்வீக சக்தி இறங்குகிறது !

இது எத்தனை பெரிய உண்மை.

மன மெய்யியல் 90

(சுயம் வெளிப்பட்டே தீரும்)



நமது அன்றாட வாழ்க்கையில், "உன் சுய ரூபம் இப்பத்தான் எனக்கு புரியுது!" என இருவர் பேசிக்கொள்வதை கேட்டிருப்போம். அதன் ஆழ்ந்த அர்த்தம் என்ன தெரியுமா? என்றைக்காவது இது பற்றி யோசித்தது உண்டா?

ஒருவன் தனக்குள் தன்னை பற்றி என்ன நினைக்கிறானோ அதுவே அவனது சுயம். அவன் எந்தவொரு நினைவுக்கு சக்தி கொடுக்கிறானோ அந்த நினைவே அவனது சுயம் ஆகிறது. பிறப்பால் நாம் நமது தாய் தந்தையரின் நினைவை தான் நமது சுயமாக கொண்டிருக்கிறோம்.

நாம் வளர வளர இந்த சமுதாயம் சொல்லும் கருத்துக்களையும், மற்ற நபர்களின் அடையாளங்களையும் நாம் நமக்குள் சுமந்து கொண்டே இருப்பதனால், அவைகளை பொறுத்தே நம் சுயம் அமைகிறது.

நாம் இப்படி தான் இருக்க வேண்டும் என நமக்குள் ஒரு எண்ணத்தை கொண்டிருப்போம். அதற்கு தொடர்சியாக சக்தி அளித்துக் கொண்டே இருப்போம்.

இருப்பினும் இந்த சமுதாயத்திற்காகவோ ஏதோவொரு காரணத்திற்காகவோ நாம் நடிக்க வேண்டி இருக்கிறது. ஒரு கட்டத்தில் அவற்றையெல்லாம் பொறுத்து கொள்ள முடியாமல் நம் சுயம் வெளிப்படுகிறது. அது நல்ல விளைவுகளையும் கொடுக்கலாம், கெட்ட விளைவுகளையும் கொடுக்கலாம். நீங்கள் சுமக்கும் நினைவை பொறுத்தே அது அமையும். அது வெளிப்படும்.

அடிப்படையில் மனிதனின் சுயம் என்பது மனித நேயம் என்னும் அவனது நினைவுதான். நமக்குள் நாம் மட்டும் வாழ்வதுதான் சுயம். அப்படித்தானே ?

நமக்குள் நாம் மட்டும் வாழ்வது எப்படி? மற்றவர்களின் கருத்துக்களையும், அடையாளங்களையும் நீங்கள் உங்களுக்குள் சுமக்காமல் வாழ்வது தான் "நமக்குள் நாம் மட்டும் வாழ்வது".

நம்மில் எத்தனை பேர் இப்படி சுயத்தில் நிலைபெற்று வாழ்கிறோம்? மிகவும் சொற்பமானவர்களே சுயத்தில் நிலை பெறுகிறார்கள். மீதமுள்ளவர்கள் அடுத்தவர்களின் கருத்துக்களையும், அடுத்தவர்களின் அடையாளங்களையும் சுமந்து கொண்டே வாழ்ந்து பழகிவிட்டனர்.

இந்த பூமியில் உள்ள எல்லா உயிர்களுக்கும் அவை வாழ்வதற்கான தேவையான அனைத்து அறிவும் இயற்கையாகவே இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மனிதன் மட்டுமே அவனது சுயம் அறியாது எல்லா செயல்களையும் செய்து கொண்டிருக்கிறான். மற்றவர்களுக்காக நடித்து, தன்னை தானே ஏமாற்றி கொள்கிறான்.

இதை விளக்குவதற்கு நீதிக்கதை ஒன்று சொல்லப்படுகிறது

ஒரு கிராமத்துல பேராசைபிடித்த சலவை தொழிலாளி தன்னுடைய கழுதையோட வாழ்ந்து வந்தான். மிகவும் அதிகமான துணிகளை ஒரு மூட்டையாக கட்டி அந்த கழுதை முதுகில் ஏற்றி தினமும் நதிக்கரைக்கு துணிகளை துவைக்க போவான். அப்படி போற வழியில அவங்க ஒரு காட்டை கடக்க வேண்டியது இருந்துச்சு.

அதனால தினமும் அந்த சலவைத் தொழிலாளி இருட்டுறதுக்கு முன்பாக தன்னுடைய துணிகளை எல்லாம் துவைத்து கழுதையின் மேல் ஏற்றி வீட்டிற்கு திரும்ப வருவான். அவ்வளவு கடுமையாக வேலை செய்தாலும் அந்த கழுதைக்கு சாப்பிடுவதற்கு தீனி ரொம்பவே குறைவா தான் கிடைக்கும்.

அதனால அந்த கழுதை போகப்போக ரொம்பவே மெலிந்து போச்சு. அந்த சலவைத் தொழிலாளியும் கழுதை மெலிந்து போவதை கவனித்தான். ஒருநாள் தன்னுடைய வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு திரும்பி வரும்போது, வரும் வழியில் ஒரு புலி இறந்து கிடப்பதை அந்த சலவைத் தொழிலாளி பார்த்தான்.

உடனே அந்த சலவைத் தொழிலாளி மனசுல ஒரு திட்டம் தோன்றியது. அந்த புலியோட உடம்புல இருந்த தோலை உரித்து எடுத்து வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டான். அன்று இரவே அந்த கழுதைக்கு புலித்தோலை போத்தி பக்கத்து பார்லி தோட்டத்தில் அந்த கழுதையை மேய விட்டான்.

ரொம்பவே பசியில் இருந்த அந்தக் கழுதை வயலில் இருந்த எல்லாத்தையும் சாப்பிட்டிச்சு. இதே மாதிரி ரொம்ப நாள் தொடர்ந்துகிட்டே இருந்து. நாள் ஆக ஆக அந்த கழுதையும் நல்ல சாப்பிட்டு ஆரோக்கியத்துடன் குண்டாக ஆரம்பித்தது.

தன்னுடைய திட்டம் வெற்றியானதை நினைத்து அந்த சலவைத் தொழிலாளி ரொம்பவே சந்தோஷப்பட்டான். ஆனா ஒரு நாள் அந்த தோட்டத்தில் உள்ள விவசாயி தன்னோட தோட்டத்துல ஒரு புலி வந்து பார்லியை சாப்பிடுவதை பார்த்தார். அதை பார்த்த அவர் உண்மையிலேயே அந்த கழுதையை, புலி என்று நினைச்சு பயந்து ஓடிவிட்டார்.

இதே மாதிரி ஒரு நாள் அந்தக் கழுதை தோட்டத்தில பார்லி சாப்பிட்டுட்டு இருக்கும் போது தூரத்தில் ஒரு பெண் கழுதை கணைக்கும் சத்தம் கேட்டுச்சு. அதைக் கேட்டதும் இந்த ஆண் கழுதையும் திருப்பி கணைக்க ஆரம்பிச்சது. இதை கேட்டதும் அந்த விவசாயி ஓடி வந்து வெளியே பார்த்தார்.

புலித்தோல் போர்த்திட்டு வந்திருப்பது கழுதை தான் என்பதை தெரிந்து கொண்ட விவசாயி ரொம்பவே கோவப்பட்டார். உடனே அந்த விவசாயி கழுதை மேல இருந்த புலி தோலை அகற்றி விட்டார். அப்புறம் ஒரு கயிறை எடுத்து அந்த கழுதை கழுத்துல மாட்டி தன்னுடைய வயலில் கட்டிப்போட்டார்.

அன்றையிலிருந்து விவசாயிக்கு அந்தக் கழுதை சொந்தமாச்சு. தன்னோட குறுக்கு புத்தியினாலும் பேராசையினாலும் அந்த சலவைத் தொழிலாளி தன்னுடைய கழுதையே இழந்திட்டான்.

சுயம் வெளிப்பட்டே தீரும் .

மன மெய்யியல் 91

(பொய்த் தவ வேடம் மெய்ப்பொருளானது)



நன்னெறி கதைகளில் ஒன்று. ஒருமுறை திருடன் ஒருவன் சிம்மபுரி நாட்டு மன்னரின் அரண்மனைக்குள் திருடுவதற்காக சென்றான். அந்த சமயம் அரசர் தமது குலகுருவுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்ததை கண்டான்.

மறைவாக ஒளிந்திருந்து அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று அவன் கேட்டான். அரசன் குல குருவை பார்த்து "குருவே, நீண்ட நாட்களாக எனது மகளுக்கு திருமணம் ஆகாமல் இருப்பது எனக்கு மிகுந்த மன வேதனை தருகிறது" என்றான்.

உடனே குலகுரு அரசனை பார்த்து, "அரசே, கவலைப்படாதே பொழுது விடிந்ததும் நம் ஊரின் எல்லையில் உள்ள நதி கரைக்கு உன் காவலர்களை அனுப்பு அங்கு பல துறவிகள் தவம் செய்து வருகிறார்கள்.

அவர்கள் பாவம் ஏதும் செய்யாத மிகவும் நல்லவர்கள். அவர்களில் ஒருவர்தான் உன் மகளுக்கு ஏற்ற கணவர்" என்றார். மறைவில் இருந்து இதை கேட்டுக் கொண்டிருந்த திருடனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

"நாம் போய் நதிக்கரையில் துறவி போல் அமர்ந்து கொண்டால் காவலர்கள் நம்மை அரசனிடம் அழைத்து செல்வார்கள். அரசனும் தன் குலகுரு சொன்னபடியே அவருடைய மகளை எனக்கு திருமணம் செய்து கொடுத்து விடுவார்.

நான் அரசனின் மாப்பிள்ளை ஆகி விடுவேன். பிறகு இந்த திருட்டு தொழிலை விட்டு விடுவேன்" என்று நினைத்து துறவி போல் வேடம் அணிந்து கொண்டு உண்மையான துறவிகளுடன் சேர்ந்து தியானம் செய்வது போல் அமர்ந்திருந்தான்.

பொழுது விடிந்ததும் தன் குலகுரு சொன்னபடியே அரசன் சில காவலர்களை நதிகரைக்கு அனுப்பி அங்குள்ள துறவிளுள் ஒருவரை தம் மகளை திருமணம் செய்து கொள்ள வருமாறு கூறி அழைத்து வர சொன்னார்.

காவலர்களும் அரசனின் ஆணைப்படி நதிகரைக்கு சென்று அங்கிருந்த துறவிகளிடம் அரசர் தம் மகளை மணந்து கொள்ள அழைத்து வருமாறு கூறியதாக ஒவ்வொருவரிடம் கூறினார்கள்.

அனைத்து ஆசிகளையும் துறந்து, இறைவனடி சேர்வதற்காக தவம் புரியும் அந்த துறவிகள் காவலர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. காவலர்கள் இறுதியில் துறவி வேடம் அணிந்திருந்த திருடனிடம் வந்து, "சுவாமி, நீங்கள் தான் அருள் புரிய வேண்டும்.

எங்கள் அரசர் தமது மகளை இங்கிருக்கும் துறவிகளுள் ஒருவருக்கு திருமணம் செய்து கொடுக்க முடிவெடுத்துள்ளார். நாங்கள் இங்கிருக்கும் துறவிகள் அனைவரிடம் கேட்டுவிட்டோம். ஒருவரும் வருவதாக தெரியவில்லை, தாங்கள் ஆவது அருள் கூர்ந்து எங்களுடன் வந்து எங்கள் இளவரசியை திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்றனர்.

இதை கேட்ட துறவி வேடத்தில் இருந்து திருடன் சற்றும் நேரம் சிந்தித்தான். இங்குள்ள அனைத்து துறவிகளும் உண்மையான துறவிகள், நல்லவர்கள் அதனால்தான் இவர்களுடைய வேண்டுகோளை அவர்கள் ஏற்கவில்லை.

நாம் உடனே ஒப்புக்கொண்டால் நம் மீது மன்னர் சந்தேகப்படுவார், என்று மனதில் நினைத்தான். இச்சமயத்தில் நாமும் உண்மை துறவிகளைப் போல இருக்க வேண்டும் என்று எண்ணியவனாய் அமைதியாக இருந்தான்.

காவலர் வெகு நேரம் கெஞ்சியும் கேட்டும் துறவி வேடத்திலிருந்து திருடன் ஒன்றும் கூறாமலேயே மௌனமாக இருந்தான். பின்னர் காவலர்கள் அரண்மனைக்கு திரும்பி சென்று அரசனை பார்த்து, "அரசே, நதிக்கரையில் தவம் செய்யும் துறவிகள் எல்லோரிடமும் தாங்கள் கூறியதை சொன்னோம்.

ஒருவர் கூட எங்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. தனியாக உட்கார்ந்து இருக்கும் ஒரு துறவி மட்டும் ஒன்றும் கூறாமல் மௌனமாக இருக்கிறார். ஒருவேளை தாங்கள் நேரடியாக சென்று அழைத்தால் அவர் வருவார்" என்றனர்.

அரசனும் உடனே புறப்பட்டான். அரசன் துறவி வேடத்திலிருந்து திருடனைப் பார்த்து, "ஐயா, தாங்கள் அருள் கூர்ந்து என் மகளை திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்றான். அரசன் கூறியதை கேட்டதும் துறவி வேடத்தில் இருந்த திருடன் ஒரு கணம் சிந்தித்தான்.

இந்த நிலையில் உண்மையான துறவி, என்ன பதில் கூறுவார்? என்று நினைத்துப் பார்த்தான். உண்மையான துறவி ஒன்றும் கூறாமல் மௌனமாக இருப்பார் என்பதை அறிந்தான்.

அவனும் அவ்வாறே மௌனமாக இருந்தான். அரசன் தன்னாட்டில் பாதியை அவனுக்கு அளிப்பதாகவும் தன் மகளை மணந்து கொள்ளுமாறும் வேண்டினான். அப்பொழுதும் திருடன் உண்மையான துறவி போல் மௌனமாகவே இருந்தான்.

முடிவில் அரசன், "சுவாமி, என் மகளை தங்களுக்கு தருவதுடன் என் நாடு முழுவதையும் உங்களுக்கு தருவதாக கூறியும் தாங்கள் என்னுடன் வர சம்மதிக்காமல் இருப்பதிலிருந்து தாங்களே உண்மையான, நல்ல துறவி என்று கண்டு கொண்டேன்.

தங்களைப் போன்ற ஒருவரை நான் இல்லற வாழ்க்கைக்கு அழைத்ததே பெரும் பாவம்" எனக் கூறியபடி துறவி வேடத்திலிருந்த திருடனிடம் காலில் விழுந்து வணங்கினான்.

இதை கண்ட துறவி வேடத்தில் இருந்து திருடன் ஆழமாக சிந்திக்க தொடங்கினான். "நாம் உண்மையான, நல்ல துறவி இல்லை நல்லவர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த வேஷத்திற்கு இவ்வளவு மதிப்பு கிடைக்கிறது என்றால் உண்மையான நல்ல துறவியாக நாம் ஆகிவிட்டால் இதைவிட மிகப்பெரிய அளவில் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும் அல்லவா,

நாம் ஏன் உண்மையான துறவி ஆகிவிடக் கூடாது" இவ்வாறு சிந்தித்து திருடன் அன்று முதல் உண்மையான நல்ல துறவியாகவே மாறிவிட்டான்

அடுத்து அடர்ந்த காட்டின் நடுவே ஒரு கூடாரம் அதில் அழுக்கடைந்த முரட்டு கம்பளியை சுற்றிக் கொண்டு கழுத்தில் பெரிய ஜபமாலை, கையில் மற்றொரு ஜபமாலை விரல்களுக்கு இடையே நகர்ந்து கொண்டு உதடு முணுமுணுக்க அரை கண்ணறக்கத்தில் பெரிய தவஞானி கோலம்

"அடடே , கள்வர்கள் நிறைந்த காடாமே ., தெரியாம இந்த வியாபாரிகள் கூட்டத்தில் வந்து மாட்டிக் கொண்டேமே அதோ வழிப்பறி கொள்ளையர்கள் வந்து விட்டார்களே" என்று பெரும் பொருளுடைய வியாபாரி ஒருவர் பெரும் பொருளை எடுத்துக் கொண்டு கொள்ளையர் கூட்டத்திற்கு தெரியாமல் தப்பி ஓடி மேற்கண்ட கூடாரத்திறகுள் நுழைகிறார்

அதே தவஞானி அதே ஜப மாலை உச்சாடனமாக உதடுகள் முணுமுணுக்கிறது

"பெரியவரே - நான் ஒரு வியாபாரி இந்த காட்டில் கொள்ளையர்கள் எங்கள் வியாபாரி கூட்டத்தினரை குழ்ந்து கொண்டனர் அவர்களுக்குத் தெரியாமல் தப்பி வந்திருக்கிறேன் என் பெரும் பொருளை தாங்கள்தான் அவர்களிடமிருந்து காப்பாற்றி தரணும். "

"அதே அந்த மூலையில் போட்டுப் போ" என்ற சப்தம்

"சரி இந்த தவஞானி பார்த்துக் கொள்வார்"

கூடாரத்தை விட்டு வெளியேறியதும் , அதே கொள்ளையர் கூட்டம் கூடாரத்தை நோக்கி வந்ததும் பதறி அடித்து கூடாரத்தின் பின் பக்கம் வியாபாரி மறைந்து கொள்ள கொள்ளையர்கள் தாங்கள் கொள்ளையடித்த பொருட்களை அதே தவஞானியின் முன்னே குவிக்கிறார்கள்

அவர் தரம் பார்த்து பிரிக்கிறார் இதைக்கண்ட வியாபாரி , அடடே... கொள்ளையர் கூட்டத்திலிருந்து தப்பி அதன் தலைவனிடம் அல்லவா மாட்டிக் கொண்டோம். பொருள் போனால் போகுது உயிர் பிழைத்தால் போதும் என்று தப்பியோட நினைக்கையில் - ...

"வியாபாரியே உள்ளே வா "என்றதும் நெஞ்சம் படப்படக்க வியாபாரி உள்ளே செல்ல "அதோ இருக்கிற உன் பொருளை சரி பார்த்து விட்டு கொண்டு செல் , இனி இந்தக் காட்டில் எங்களைத் தவிர வேறு எந்த கொள்ளை கூட்டமும் இல்லை தாங்கள் தாராளமாக பயமில்லாமல் போகலாம் " என்றார் கொள்ளைக் கூட்டத்தின் தலைவரான அந்த வேடம் தறித்த தவஞானி

இந்த தவ ஞானி வேடம் தறித்தவ இவர் ஒரு நாள் , தன் காதலியைப் பார்ப்பதற்காக மதிலின் மீது ஏறிய பொழுது அவ்வழியே சென்ற வியாபாரி கூட்டத்தில் உள்ள காரி ஒருவர் குர்ஆனை எப்போதுமே சப்தமாக ஓதிக் கொண்டு பயணம் செய்பவர்.

பொய் தவ வேடம் அணிந்த கொள்ளையர் தலைவரின் காதில் காரி

அவர் ஓதிய குர்ஆன் வசனமான

"நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளங்கள் அல்லாஹ்வை நினைத்தும், அவன் இறக்கி வைத்த சத்திய (வசன)ங்களைக் கவனித்தும் பயப்படக் கூடிய நேரம் (இன்னும்) வரவில்லையா ? " குர்ஆன(57 : 16)

என்றதும் கொள்ளையர் தலைவரின் உச்சியைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கியது .

"யா அல்லாஹ் அந்த நேரம் இதோ இப்போதே வந்துவிட்டது" என்று அலறினார்

அந்த நிமிடமே மிகப் பெரிய உண்மையான சூஃபி ஞானி இந்த உலகத்திற்குக் கிடைத்தார் அவர் பெயர்தான்

" ஞானி புலைல் இப்னு இயால் (ரஹ்) அவர்கள்

மன மெய்யியல் 92

(மாறு வேஷம்)



மனித மனத்தின் முக்கியமான இயல்பு அது எப்போதுமே பிரிந்து பிரிந்துதான் இயங்குகிறது .

மரத்தைத் தறிக்க வேண்டுமென்றால் மனம் உளியாகவும் , சுத்தியலாகவும் ஒரே சமயம் மாறும்.

தன் மனம் ஒரு செயலை செய்யும்போது அச்செயலை வேறு ஒரு மனம் அதை வேடிக்கைப் பார்க்கிறது '

"ஒரு கிளி பழம் தின்கிறது.பிறிதொன்று அதைப் பார்க்கிறது " எத்தகைய கொடூரத்தை தான் செய்யும் போதும் தன்னில் ஒரு பகுதி அதில் ஈடுபடுவதில்லை என்பதை மனவியல் ஆய்வாளர்கள் நிரூபித்திக்கிறார்கள் .

தியானத்தில் கூட மனம் இரட்டை நிலை கொள்கிறது . ஒரு மனம் முனைகொண்டு ஆழம் நோக்கிச் செல்லும்போது , அதிலிருந்து பிரிந்தது போல இன்னொரு மனம் எங்கோ பரவி விரிந்து செல்கிறது .

இறைவனை முன் நோக்கி தொழும்போது கூட, நீங்கள் இன்னொரு மனதால் மற்றொன்றை சிந்தித்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

ஆகையால் மாறு வேஷம் போடுவது சாதாரண விஷயமல்ல ; போட்டிருக்கும் வேஷத்திற்கு தக்கவாறு மனதையும் மாற்ற வேண்டும். வேஷம் போட்டிருக்கும் மனிதனுக்கு அந்த ஒரு வேஷம்தான். ஆனால், அவனுடைய மனத்திற்கு இரட்டை வேஷம் போடத் தெரியவேண்டும் என்பதாக உளவியிலாளர்கள் கூறுகின்றனர்.

நபி தாவூது (அலை) அவர்கள் பனூ இஸ்ரவேலர்களின் அரசர். மாறுவேடம் பூண்டு மக்களை சந்தித்து அரசரைப் பற்றி மக்களிடம் விசாரித்து மக்கள் கூறும் குறைகளைக் களைந்து நிறைவாய் ஆட்சி செய்தார்கள்.

ஒருநாள் மனித உருவில் உலாவிய மலக்கு (வானவர்) ஒருவரை சந்தித்த நபி தாவூது (அலை) அவர்கள் வழக்கம்போல் அரசரைப் பற்றி அபிப்ராயம் கேட்டார்கள்.

"நற்குணமுடைய அரசரிடம் அரசுப் பணத்தில் வாழும் அற்ப குணம் உள்ளது. அதனை மாற்றிக் கொண்டால் மன்னர் மாட்சியுடைவர்" என்று அந்த வானவர் சாட்சி சொன்னார்.

இதையடுத்து நபி தாவூது (அலை) அவர்கள், தொழில் ஒன்றைக் கற்றிட அருளுமாறு அல்லாஹ்விடம் வேண்டினார்கள். உள்ளம் உருகிய வேண்டுதலை ஏற்ற இறைவன் "உருக்குச் சட்டை உருவாக்கி பொருளைப் பெருக்கி வாழும் பெருந்தொழிலை நபி தாவூது (அலை) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தான்.இந்நிகழ்ச்சியை குர்ஆனின் 34-11வது வசனத்தில் குறிப்பிடுகிறான்.

உமர் (ரலி) அவர்கள் தம்முடைய மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார், அவர் இரவு நேரங்களில் மாறுவேடத்தில், மதீனா நகரில், யாருக்காவது உதவி தேவைப்படுகிறதா என்று பார்ப்பதற்காகச் சுற்றி வந்தார்.

ஒருமுறை, இரவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, ஒரு பெண் பாத்திரத்தில் எதையோ சமைத்துக்கொண்டிருந்தபோது, அவளுடைய குழந்தைகள் அவளைச் சுற்றி அழுது கொண்டிருப்பதைக் கவனித்தார்.

இரண்டு நாட்களாக குழந்தைகள் பட்டினி கிடப்பதையும்,அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காகவே பானைக்கு தீ வைத்ததையும் அவர் பெண் மூலம் அறிந்து கொண்டார்.

அவர் உடனடியாக கருவூலத்திற்குச் சென்றார், மேலும் அந்தப் பெண்ணுக்குத் தேவையான அனைத்து உணவுப் பொருட்களையும் அவரே கொண்டு வந்தார். அவர் செல்லும் வழியில், அவருடைய வேலைக்காரன் ஒருவர் சுமையைச் சுமக்க முன்வந்தார், ஆனால் அவர் அவரைத் தடுத்து நிறுத்தினார்: நியாயத்தீர்ப்பு நாளில் நீங்கள் என் சுமையைச் சுமக்க மாட்டீர்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை இதற்கு முன் பார்க்காத அந்தப் பெண், உமர் (ரலி) அவர்களுக்குப் பதிலாக அல்லாஹ் உங்களை கலீஃபாவாக ஆக்கட்டும் என்று உரக்கப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

இதைக் கேட்ட ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழத் தொடங்கினார்கள், எதுவும் பேசாமல் அந்த இடத்தை விட்டுச் சென்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் மறுமை நாளில் (ஒரு மனிதரிடம்), “ஆதமின் மகனே! (மனிதா!) நான் நோயுற்றிருந்தபோது என்னை உடல்நலம் விசாரிக்க நீ வரவில்லையே (ஏன்)?” என்று கேட்பான். அதற்கு மனிதன், “என் இறைவா! நீயோ அகிலத்தாரின் அதிபதியாயிருக்க, உன்னை நான் எவ்வாறு உடல்நலம் விசாரிப்பேன்?” என்று கேட்பான்.

அதற்கு அல்லாஹ், “உனக்குத் தெரியுமா? என் அடியானான இன்ன மனிதன் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவனிடம் சென்று நீ நலம் விசாரிக்கவில்லை. தெரிந்துகொள்: அவனை உடல்நலம் விசாரிக்க நீ சென்றிருந்தால் அவனிடம் என்னைக் கண்டிருப்பாய்” என்று கூறுவான்.

மேலும் அல்லாஹ், “ஆதமின் மகனே! (மனிதா!) நான் உன்னிடம் உணவு கேட்டேன். ஆனால், நீ எனக்கு உணவளிக்கவில்லை” என்பான். அதற்கு மனிதன், “என் இறைவா! நீ அகிலத்தாரின் அதிபதியாயிருக்க, உனக்கு நான் எவ்வாறு உணவளிக்க இயலும்?” என்று கேட்பான்.

அதற்கு அல்லாஹ், “உனக்குத் தெரியுமா? உன்னிடம் என் அடியானான இன்ன மனிதன் உண்பதற்கு உணவு கேட்டான். ஆனால், அவனுக்கு நீ உணவளிக்கவில்லை. தெரிந்துகொள்: அவனுக்கு நீ உணவளித்திருந்தால் அ(தற்குரிய)தை என்னிடம் நீ கண்டிருப்பாய்” என்று கூறுவான்.

மேலும் “ஆதமின் மகனே! (மனிதா!) நான் உன்னிடம் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டேன். ஆனால், எனக்கு நீ தண்ணீர் தரவில்லை” என்று அல்லாஹ் கூறுவான். அதற்கு மனிதன், “என் இறைவா! நீயோ அகிலத்தாரின் அதிபதியாயிருக்க, உனக்கு நான் எவ்வாறு தண்ணீர் தர இயலும்?” என்று கேட்பான்.

அதற்கு அல்லாஹ், “என் அடியானான இன்ன மனிதன் உன்னிடம் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான். ஆனால், அவனுக்கு நீ தண்ணீர் கொடுக்கவில்லை. தெரிந்து கொள்: அவனுக்குக் குடிப்பதற்கு நீ தண்ணீர் கொடுத்திருந்தால் அ(தற்குரிய)தை என்னிடம் நீ கண்டிருப்பாய்” என்று கூறுவான். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். முஸ்லிம்-5021

வேஷம் போடுவது சாதாரண விஷயமல்ல ; போட்டிருக்கும் வேஷத்திற்கு தக்கவாறு மனதையும் மாற்ற வேண்டும். வேஷம் போட்டிருக்கும் மனிதனுக்கு அந்த ஒரு வேஷம்தான். ஆனால், அவனுடைய மனம் இரட்டை வேஷம் போடத் தெரியவேண்டும் என்பதாக உளவியிலாளர்கள் கூறுகின்றனர்.

இது குத்துபுஸ்ஸமான் அல் காஹிரிய்யு ஹலறத்து ஷெய்குனாப் புலவர் வலியுல்லாஹ் அவர்கள், ஹக்குத்த ஆலா பேரில் பாடிய

தோத்திரப்பா

காவலாய் நிற்கும் வல்லோன் கத்தனாய் ஜீவனெல்லாம்

ஆவலாய்ப் போற்றிவாழ்த்தி யதற்குணவளித்த கோமான் நாவினாலெழியோர் கேட்கும் நாட்டத்தின் படியேதந்து

தாவிலா ரஹ்மத்தாலே தற்காக்கும் பொருளதாமே

அறுவாஹ் ஆலமடங்கலுக்குமரிய பொருளாய் விளங்கி நிற்கும் திருவாயமையாய்ப் பேரொளியாய்த் திகழ்ந்துநாளும் பராபரிக்கும்

கருவாய்க்கருளி னுண்மணியாய்க் காட்சியருளும் ரஹ்மானே

உருவாய்த் துலங்கும் மன்னானே யுனது கிருபையருள்வாயே

நாடும் நாட்டம் பயனதுபோல் தனிகொள் ளாலமடங்கலையும் வீடிலாது காத்தளிக்கும் வேதப்பொருளே ரஹ்மானே

மோடுபெறவே படைத்தெவைக்கு முன்னுமிரணமிகக்கொடுத்து கூடுநின் றனடியார்கள் குறைகள் தீர்ப்பாய் காதிருவே

உனது கிருபைக்கடலிடத்தி லுதித்தமணியாய்த் தீனோர்கள்

தனது சேமப்பொருளாகுந் தாஸீம் நபியவர் பொருட்டாலே

கனதி யிலாஹீ நாயகனே கதியின் பயன் யாஹாபின்னா மனதுகலங்கு மொழியோர் கண்மருக்கந்தவிர்ப்பாய் ரஹ்மாளே

புவியில்விளங்கும் நபிமார்கள் புகழும்பொருட்டால் முன்னுள்ள அவுலியாக்கள் ஷுஹதாக் கரியபெரியோர் பொருட்டாலும்

துவமே முஹீத்தே தூயோனே துலங்கும் நாஸீறானவனே கவலைநீக்கி பலாய்களெல்லாம் காணாதகற்றாய் ரஹ்மானே

துன்பம் நீக்கி யறிவிளங்கும் தூயவேத மொருனானின்

இன்பமுனது பொருளாலேயினியயு ந்தன் பொருட்டாலே அன்புபுரியும் ஹபீபேயெம் ஆகத்துயிரே தய்யானே

வன்புமாற்றி நல்வரிசை வன்மையருள்வாய் ரஹ்மானே

உள்ளங்கலங்கி தத்தளித்தே யுணர்வுமயங்கி நின்னடியாச் வெள்ளங்கண்ணால் மிகஓடிவெருளுந் துயரமணுகாமற் கொள்ளுங்கிருபை மவுலானா குதாயேவதுதே ஙப்பாறே கள்ளநோய்கள் தங்கடங்கள் காப்பாய் காப்பாய் றஹ்மானே

வேதம் நிறைந்த சூரத்தொடும் விளங்குமாயத் ததனாலே

யோதும் பொருட்டால் முஃமின்களுள்ளம் பொருட்டாலாகையினால் போதம் பெருகுமுன்னுடைய புகழுஞ்சிறப்பின் ஆக்கிணையாற் காணும்பலாய்களணு காமற்காப்பாய் காப்பாய் றஹ்மானே

வள்ளல் மஹ்மூதெனும் நயினார் வழியிலொழுகி யுன்னுடைய விள்ளுமார்க்கந் தனையெடுத்து விளக்குந்தீனோ ராகையினால் தெள்ளுமறிவே மெய்ப்பொருளே தெளிவேயெங்கள் கண்மணியே

எள்ளு மாபத்தணுகாமல் இன்பம்புரிவாய் ரஹ்மானே

அடியார்செய்யும் பிழைகளெல்லாம் ஆளுமிறைனீபொறுட்பதல்லால்

படியோர் வேறயில்லை மன்னாபயனுயைனுமருள் வோனே நொடியோ னிபமைமறுமையிலு நீதியுடையோ னாகையினாற் கொடிய பலாய்களணுகாமற்குறைகள் தீர்ப்பாய் ரஹ்மானே

முன்னுநீயே யுடையபொருள் முழுதும் நீயே யாண்டருளும்.

பின்னும் நீயே யிரப்பையெல்லாம் பேணும்நீயே யன்றியில்லை என்னும்நீயே மென்மேலு மென்றும் நீயே நப்பாறே இன்னுமடியார்க்கொருதீங்கும் வராதருள்வாய் றஹ்மானே

தோத்திரப்பா முற்றிற்று.

மன மெய்யியல் 93

(காலத்தின் அருமை)



உலகம் எப்பொழுது தோன்றியது, மனிதன் எப்பொழுது தோன்றினான் என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருப்பதிலேயே நம் சக்தியும், காலமும் விரையமாகிக் கொண்டே இருக்கிறது.

ஆனால், ஒன்று மட்டும் உறுதி. அது என்னவென்றால், மனிதன் எப்பொழுது தோன்றினானோ அந்த நொடியே மனமும் தோன்றி விட்டது.எனவே காலத்திற்கும் மனித மனத்திற்கும் படைக்கப்பட்ட நாளிலிருந்தே ஒரு வித தொடர்பு இருந்து கொண்டே இருக்கிறது.

இதனால் காலத்தை ஒட்டியே அதன் அளவிட்டிலே தன் நிகழ்வை தொடர்பு படுத்தி பார்க்கிறான் மனிதன்.

ஒலிம்பிக்கில் பங்கு கொண்டு சில நொடிகள் முன்னதாக வந்து முதலிடம் பெறுபவருக்கும், சில நொடிகள் பின்னடைந்து முதலிடத்தைத் தவறவிட்டு அடுத்தடுத்த இடங்களைப் பெறுபவர்களுக்கும் காலத்தின் அருமை வெகுவாகத் தெரிந்திருக்கும்.

2012-இல் லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் "ஜமைக்கா' நாட்டைச்சேர்ந்த உசேன் போல்ட் என்பவர் 100 மீட்டர் ஓட்டத்தில் 9.63 விநாடிகளில் வந்து தங்கப்பதக்கம் பெற்று உலகின் அதிவேக

ஓட்டக்காரன் என்ற சாதனை படைத்ததும், அவரைத் தொடர்ந்து 9.75 விநாடிகளில் அதாவது சில மைக்ரோ செகண்டுகள் வித்தியாசத்தில் 2-ஆம் இடம் பெற்ற விளையாட்டு வீரருக்கும் காலம் எத்துணை உன்னதமானது என்பது நன்றாகவே தெரிந்திருக்கும்.

விபத்துக்குட்பட்ட ஒருவரைக் குறிப்பிட்ட நேரத்துக்குள் கொண்டு சேர்த்திடும் ஆம்புலன்ஸ் ஓட்டுநருக்கும், தக்க சமயத்தில் சிகிச்சையளித்து உயிர் காத்திடும் மருத்துவருக்கும் காலத்தின் அருமை வெகுவாகத் தெரிந்திருக்கும்.

கண்தானம் செய்து இறந்தவரின் கண்களைப் பெற்றுச்செல்ல உரிய அமைப்பினருக்குத் தகவல் கொடுத்து அவர்கள் விரைந்து வந்து அவரது கண்களைத் தானமாக எடுத்துக்கொண்டு போய் மருத்துவமனையில் தயார்

நிலையில் உள்ள நான்கு பேருக்குக் கண் மருத்துவர்களால் அறுவை சிகிச்சை செய்து பொருத்தி அவர்களது கண்களுக்கு ஒளியூட்ட முடிகிறது.

இந்த நிகழ்வுகள் ஆறு மணி நேரத்திற்குள் நடைபெற்றாக வேண்டும். காலம் தவறினால் பயனற்றதாகிவிடும்.

கோவில்களிலும், மசூதிகளிலும் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் வழிபாடு செய்யப்படுவதும்,

"நிச்சயமாக தொழுகை விசுவாசிகளின் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கிறது. (குர்ஆன் : 4:103)

திருமணம் போன்ற மங்கல காரியங்களுக்கு அழைப்பிதழில் நாள், நேரத்தைக்குறிப்பிட்டு உரிய நேரத்தில் அதனை நடத்திட முனைவதும் காலத்தின் அருமையை உணர்த்துபவையே.

மனிதனின் வாழ்க்கையில் பிறப்பு தொடங்கி இறப்புவரை ஒவ்வொரு நிகழ்வும் காலத்தே செய்யப்படுவதால் மட்டுமே

செம்மை அடைகிறது. காலத்தினாற் செய்யப்படும், அல்லது கிடைத்திடும் சிறு உதவிகள் கூட மிகப்பெரிய அளவில் நன்மைகள் தருவதாக அமைந்து விடுவதைக் காண்கிறோம்.

'வல்அஸ்ர்' காலத்தின் மீது...எனத் தொடங்கும் திருமறையின் 103 வது அத்தியாயத்தின் முதல் வசனம் காலத்தின் அருமையைக்காட்டும் அற்புதமான வசனமாகும்.. இவ்வாறு காலத்தை முன்னிறுத்தித் தொடங்கியிருப்பது மிகவும் சிந்தனைக்குரியதாகும்.

இச்சொல் அளவில் மிகச்சிறியதாக இருப்பினும் அது காட்டும் நுட்பமும் திட்பமும் மிக்க பொருள் வானைவிட விரிவானது. ஆணைப் பொருளாகிய காலத்திற்கும் அதைத் தொடர்ந்து நிறுவப்படும் கருத்துக்குமிடையே இழையோடுகின்ற தொடர்பினை காணும் போது நாம் வியந்து நிற்கிறோம். காலத்தின் அருமை பெருமைகளால் தான் காலத்தின் மீது ஆணையாக என இந்த அத்தியாயம் தொடங்குகிறது.

காலத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றலை இவ்வுலகில் எந்தப் பெருவீரனும், பேரரசனும் பெற்றிருக்கவில்லை. ஏழையும், ஏந்தலும், கோழையும், வீரனும், இளைஞரும் முதியவரும், ஆடவரும் பெண்டிரும் காலத்தின் ஆட்சிக்கு அடங்கியே ஆக வேண்டும்.

நாள் தோறும் மாறி வரும் சிறு பொழுதும் ஆண்டுதோறும் மீண்டுவரும் பெரும் பொழுதும் காலத்தின் அருமையையல்லவா ?

காலத்தின் பார்வையிலிருந்த எதனையும் நாம் மறைத்து விடமுடியாது.மனிதன் காலத்திற்கு அடங்கி நடக்கவேண்டுமே தவிர, காலம் ஒருபோதும் மனிதனுக்கு அடங்கி நடக்காது.

"காலமும் கடலலையும் எவருக்காகவும் காத்திராது" என்பது ஆங்கிலப்பழமொழி. "ஓரங்குலத் தங்கம் கொடுத்தாலும் ஓரங்குலக் காலத்தை விலைக்கு வாங்க முடியாது" என்பது சீனப்பழமொழி. "காலம் கண் போன்றது கடமை பொன் போன்றது" என்பது தமிழகப் பழமொழி.

குர்ஆன் 103 அத்தியாயத்தில் எடுத்ததும் துவக்கமே "மனிதன் நஷ்டத்திலிருக்கிறான்" என்ற தொடர் மனிதனுக்கு ஒரு வகை நடுக்கத்தைத் தருகிறது.

தன்னைப் படைத்த நாயனை மறந்து பொருளைத் தேடுவதிலும் மனைவி மக்களோடு உல்லாசமாக பொழுதைக் கழிப்பதிலும் ஈடுபடுவோரும், வல்ல நாயனின் வழியிலே நடவாது சுகபோகங்களிலே மூழ்கி நிற்போரும்

ஆடிப்பாடி குடித்துக் கும்மாளமடித்து சிற்றின்ப வேட்கையிலே தோய்ந்து கிடப்போரும் இறைவனை மறந்து அதிகாரத்திலே செருக்கோடு வீற்றிருப்போரும் காலத்தின் வன்மையான பிடியிலிருந்து ஒருபோதும் தப்ப முடியாது.

"காலம் வரும்போது இறைவனின் பிடி மிகவும் கடுமையானது" என்பதை 85: 12 என்ற குர்ஆன் வசனம் எச்சரிக்கிறது.

காலத்தின் அருமையும் அது உணர்த்தும் உண்மையும் உணராது புதைகுழியை சென்றடையும்வரை மனிதன் அதிகமதிகமாகச் செல்வத்தைத் தேடி குவித்து மகிழ எண்ணுகிறானே தவிர அவற்றை வழங்கிய வல்ல நாயனை எண்ணிப்பார்க்கவாே நன்றிப்பெருக்கோடு வணங்கி வழிபடவோ செய்யவில்லை

அவற்றிற்காக மறுமையில் விசாரிக்கப்படுவாேம் என்பதையும் மறந்து வாழும் மனிதன் பெரும் நஷ்டத்திலல்லவா உள்ளான் என்பதை மனிதன் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் கூறியதாக அறிவிக்கிறார்கள்:-

''ஆதமுடைய மகன் காலத்தைத் திட்டுகிறான். நானே காலமாக இருக்கிறேன். என்னுடைய கைகளில் இரவும் பகலும் உள்ளது'. அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி

மன மெய்யியல் 94

(வன்முறையின் மறுபக்கம் அன்புடைமை)



அசோகர் ஏன் புத்த மதத்தைத் தழுவினார் என்பதற்கு வழக்க சொல்லப்படுகின்ற சம்பவம் கலிங்கத்துப் போர்.

வெற்றி மட்டுமே மகிழ்ச்சியை விளைவித்துவிட முடியாது என்பதை போர் நடந்த மைதானத்தில் துண்டிக்கப்பட்ட தலைகளும், முண்டங்களும், வழித்தோடிய ரத்தங்களும். பிணங்களைத் தின்னப் போட்டி போட்ட விலங்குகளும் அவருக்கு உணர்த்தியதாக நாம் சரித்திரத்தில் படித்திருக்கிறோம்

போரின் நிகழ்வுகள் அவரைப் புனிதராக்கி இருக்கலாம். துறவியாக்கியிருக்கலாம். வாழ்விலிருந்து தலைதெறிக்க ஓட வைத்திருக்கலாம். ஆனால். அவரை ஏன் புத்த மதத்தைத் தழுவத் தூண்டியது என்பதற்கு அதற்கு முன்பே நடந்த சம்பவமே ஆதாரம் இருந்தது

ஆட்சி செய்கின்ற போது தன் மூதாதையரைப் போல மகத நாட்டை மிகுந்த கடுமையுடன் அசோகர் ஆட்சி செலுத்தினார்.அவருடைய தலைநகர் பாடலிபுத்திரத்தில் எல்லாரும் அச்சப்படும்படி ஒரு சிறை இருந்தது

அதற்குப் பெயர் 'அசோகர் நரகம்'

அதில் அடைக்கப்படுபவர்கள் யாரும் உயிருடன் திரும்பமுடியாது . திரும்பியதாகச் சரித்திரமும் இல்லை. திரும்பக் கூடாது என்பது ஐதிகமாகவும் இருந்தது.

தவறே இழைக்காத புத்த பிக்கு ஒருவர் தவறுதலாக அந்தச் சிறையில் அடைக்கப்பட்டு விட்டார். அவரைக் கொதிக்கும் உலைக் கலனில் தூக்கி எறிந்து கொடுமைப் படுத்தினார்கள். ஆனால் அவர் கொஞ்சம் கூட அசராமல் திடமாக நடந்துகொண்டார். அவரிடமிருந்து அழுகையும் வரவில்லை ஓலமும் எழவில்லை.

அதைப் பார்த்ததும் நடுங்கிப் போய் சிறை அதிகாரி அந்த அதிசயத்தை காண வருமாறு அசோகருக்கு அழைப்புவிடுத்தார்.

அசோகர் வந்தார். அதிசயப்பட்டார். வெகுநேரம் சிந்தனையில் ஆழ்ந்த அவர் அங்கிருந்து திரும்பிச் செல்லும் போது அந்தச் சிறை அதிகாரி அசோகரிடம் அந்தச் சிறைக்குள் வந்தவர்கள் யாரும் உயிருடன் திரும்பக்கூடாது என்கின்ற எழுதப்படாத விதி இருப்பதை அவருக்கு நினைவுறுத்தினார்.

அசோகர் அந்தச் சிறை அதிகாரியைக் கொதிக்கும் கலனில் போட உத்தரவிட்டார்!

அசோகரால் அந்த புத்த பிக்குவின் முகத்தை மறக்க முடியவில்லை. அத்தனை கொடுமையிலும் அவர் அசராமல் முகத்தில் புன்னகை தவழ காரணமாயிருந்த புத்தரின் போதனையை தேடிப் படித்தார்.

அந்தச் சிறைச்சாலையையே இடித்து விடும்படிக் கட்டளையிட்டார். அசோகர் நரகம் தரைமட்டமானது.

எப்போது ஒருவன் வன்முறையின் முனைக்குச் செல்கிறானோ அப்போது அவன்

அன்பிற்கே திரும்பி வரவேண்டியதாய் இருக்கிறது.நாம் பெறுகின்ற மகிழ்ச்சி நிலைக்க வேண்டுமென்றால் அது அடுத்தவர்களைத் துன்புறுத்துகின்ற காரணத்தால் நிகழ முடியாது என்பதை நாம் உணர முடியும்.

அல்லாஹ்வே! உமர் இப்னு கத்தாப் அல்லது அபூஜஹ்ல் இப்னு ஹிஷாம் ஆகிய இருவரில் உனக்கு விருப்பமானவரைக் கொண்டு இஸ்லாமை வலிமைப்படுத்துவாயாக!' என்று நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் வேண்டினார்கள்.

அவர்களில் அல்லாஹ்விற்கு மிக விருப்பமானவர் உமராக இருந்தார் என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத், அனஸ், இப்னு உமர் (ரழி) ஆகியோர் அறிவிக்கிறார்கள். உமர் இஸ்லாமைத் தழுவிய நிகழ்ச்சியை விவரிக்கும் அறிவிப்புகளை நாம் ஆய்வு செய்து பார்க்கும்போது உமரின் உள்ளத்தில் இஸ்லாம் படிப்படியாகத்தான் வேரூன்றியது என்பதை தெரிந்து கொள்ளலாம்.

அந்த அறிவிப்புகளைச் சுருக்கமாக நாம் பார்ப்பதற்கு முன் உமரிடம் இருந்த உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் முதலில் பார்ப்போம்.

உமர் நல்ல வலிமையும் கம்பீரமான இயல்பும் உடையவர். ஆரம்பத்தில் அவரால் முஸ்லிம்கள் பல வகையான தொந்தரவுகளை, எண்ணற்ற இன்னல்களை நீண்ட காலமாக அனுபவித்து வந்தனர். எனினும், அவரது உள்ளத்தில் பல மாறுபட்ட உணர்ச்சிகளின் போராட்டம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. ஒருபுறம் தங்களது மூதாதையர்கள் கடைபிடித்து வந்த சடங்குகளைப் பின்பற்றி அவற்றுக்காக வீறுகொண்டு எழுந்தார்.

மற்றொருபுறம், கொள்கையில் முஸ்லிம்களுக்கு இருந்த உறுதியையும் அதற்காக சோதனைகள் அனைத்தையும் அவர்கள் தாங்கிக் கொள்வதையும் பார்த்து ஆச்சரியமடைந்தார். மேலும், ஒரு நல்ல பகுத்தறிவுவாதிக்கு வரும் சந்தேகங்கள் அவருடைய உள்ளத்திலும் அவ்வப்போது தோன்றி மறைந்தன.

ஒரு வேளை இஸ்லாமிய போதனை மற்றவைகளைவிட தூய்மையானதாக, சரியானதாக இருக்கலாமோ என யோசிப்பார். அதனால்தான் அவருக்கு இஸ்லாமின்மீது கோபம் பொங்கி எழும்போதெல்லாம் உடனடியாக அடங்கியும் விட்டது.

உமர் இஸ்லாமைத் தழுவிய நிகழ்ச்சியை விவரிக்கும் அறிவிப்புகளை முறையாக இங்கு நாம் பார்ப்போம்.

ஓர் இரவில் தனது வீட்டுக்கு வெளியில் தூங்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. நேராக ஹரமுக்கு வந்து கஅபாவின் திரைக்குள் நுழைந்து கொண்டார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அங்கு தொழுது கொண்டிருந்தார்கள். தொழுகையில் நபி (ஸல்) அவர்கள் அத்தியாயம் அல்ஹாக்கா ஓத, அதன் வசன அமைப்புகளை ரசித்து உமர் ஓதுதலைச் செவிமடுத்தார்.

இதைத் தொடர்ந்து உமர் கூறுகிறார்:

"நபி (ஸல்) அவர்கள் ஓதுவதை கேட்டுக் கொண்டிருந்த நான் எனது எண்ணத்தில், 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இவர் கவிஞராக இருப்பாரோ! என்று என் உள்ளத்தில் கூற,

"இது, நிச்சயமாக (நம்மால் அறிவிக்கப்பட்டபடி) மிக்க சங்கை பொருந்திய ஒரு தூதரால் கூறப்பட்டதாகும்.

"இது,ஒரு கவிஞனுடைய சொல்லல்ல. எனினும்,(இதனை) நீங்கள் வெகு சொற்பமாகவே நம்பிக்கை கொள்கின்றீர்கள்"(குர்ஆன் 69:40, 41) என்ற வசனங்களை நபி (ஸல்) அவர்கள் ஓதினார்கள்.

அடுத்து இவர் 'ஜோசியக்காரராக இருப்பாரோ!' என்று என் உள்ளத்தில் நான் கூற,

"(இது) ஒரு ஜோசியக்காரனுடைய சொல்லுமல்ல. (எனினும், இதனைக் கொண்டு) வெகு சொற்பமாகவே நீங்கள் நல்லுபதேசம் அடைகின்றீர்கள். உலகத்தார்களின் இறைவனால் (இது) இறக்கப்பட்டுள்ளது" (குர்ஆன் 69:42, 43) என்ற வசனங்களை நபி (ஸல்) அவர்கள் ஓதினார்கள்,

அது சமயம் எனது உள்ளத்தில் இஸ்லாமை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. இது உமர் இதயத்தில் விழுந்த இஸ்லாமின் முதல் விதையாகும்.

எனினும், அறியாமைக் கால எண்ணங்களும் மூட பழக்க வழக்கங்களின் பிடிவாதமும், மூதாதையர்களின் மார்க்கத்தை உயர்வாக கருதி வந்ததும், அவரது உள்ளம் ஒத்துக் கொண்டிருந்த மகத்தான உண்மையை மறைத்திருந்தது. தனது உள்ளத்தில் பொதிந்து கிடந்த உணர்வைப் பொருட்படுத்தாமல் இஸ்லாமுக்கு எதிராக செயல்படுவதிலேயே தீவிரம் காட்டி வந்தார்.

நபி (ஸல்) அவர்களின் மீது அவருக்கிருந்த, அளவு மீறிய கோபத்தினால் வாளை ஏந்தி நபி (ஸல்) அவர்களின் கதையை முடித்துவிட வெளியேறினார். அப்போது நுஅய்ம் இப்னு அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் வழியில் அவரை சந்தித்து.

'உமரே நீ எங்கு செல்கிறாய்?' என்று கேட்க. 'நான் முஹம்மதை கொல்லச் செல்கிறேன்" என்றார்.

அதற்கு நுஅய்ம், ''நீ முஹம்மதை கொலை செய்துவிட்டு ஹாஷிம், ஜூஹ்ரஹ் இவ்விரு கிளையார்களிலிருந்து பயமின்றி தப்பித்து வாழ்வது எங்ஙனம்? என்று அச்சுறுத்தினார்.

அவரை நோக்கி 'நீ உனது மார்க்கத்தை விட்டுவிட்டு அவரது மார்க்கத்திற்கு சென்று விட்டதாகவே எனக்குத் தோன்றுகிறது' என்று உமர் கூறினார்.

அதற்கு நுஅய்ம் ''உமரே! ஆச்சரியமான ஒன்றை நான் உமக்கு சொல்லட்டுமா? உனது சகோதரியும் (அவரது கணவர்) உனது மச்சானும் உனது மார்க்கத்தை விட்டுவிட்டு முஹம்மதின் மார்க்கத்துக்குச் சென்று விட்டனர் என்று கூறியதுதான் தாமதம். அவ்விருவரையும் தண்டிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களை நோக்கி உமர் விரைந்தார்.

அப்போது அங்கு கப்பாப் (ரழி) அவர்கள் உமரின் சகோதரிக்கும் அவரது கணவருக்கும் தனது ஏட்டிலுள்ள 'தாஹா எனத் தொடங்கும் அத்தியாயம் தாஹாவின் வசனங்களை கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

உமர் வருவதை அறிந்த கப்பாப் (ரழி) வீட்டினுள் மறைந்து கொண்டார். உமரின் சகோதரியும் அந்த ஏட்டை மறைத்து விட்டார்கள். எனினும், உமர் வீட்டிற்கு அருகே வந்தபோது கப்பாப் (ரழி) கற்றுக் கொடுத்த சப்தத்தை கேட்டு விட்டார்.

வீட்டினுள் நுழைந்த உமர், 'உங்களிடம் நான் செவிமடுத்த இந்த மெல்லிய சப்தம் என்ன?' என்று கேட்டதற்கு

நாங்கள் பேசிக் கொண்டிருந்ததை தவிர வேறு எதுவும் இல்லை' என்று அவ்விருவரும் கூறினார்கள்.

அப்போது உமர் 'நீங்கள் மதம் மாறிவிட்டீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு அவரது மச்சான் 'உமரே! சத்தியம். உன்னுடைய மார்க்கத்தை தவிர வேறொன்றில் இருந்தால் உன் கருத்து என்ன?' என்று கேட்க.

உமர் கடுஞ்சினம் கொண்டு தனது மச்சானின் மீது பாய்ந்து அவரை பலமாகத் தாக்கி மிதிக்கவும் செய்தார். அவரது சகோதரி தனது கணவரை விட்டும் உமரை விலக்கினார். உமர் கடுமையாக தன் சகோதரியின் கன்னத்தில் அறைந்து அவரது முகத்தை ரத்தம் பீறிடக் காயப்படுத்தினார்.

கோபம் கொண்ட உமரின் சகோதரி, " உமது மார்க்கமல்லாத வேறொன்றில் உண்மை இருந்தாலுமா? (அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது.) அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாரும் இல்லை, முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று நான் சாட்சி கூறுகிறேன்' என்று உரக்கக் கூறினார்.

இது தன் சகோதரியின் ஆவேசமான கூப்பாடாக தெரியவில்லை ; ஆனால் அது ஆக்ரோஷமான உண்மையின் வெளிப்பாடாக உமருக்குப்பட்டது.

தனது கோபம் பலனற்றுப் போனதைக் கண்டு உமர் நிராசை அடைந்தார். தனது சகோதரிக்கு ஏற்பட்ட ரத்தக் காயத்தைப் பார்த்து அவருக்கு கைசேதமும், வெட்கமும் ஏற்பட்டது.

"உங்களிடமுள்ள இப்புத்தகத்தை எனக்குக் கொடுங்கள். நான் அதை படிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

அதற்கு அவரது சகோதரி ''நீ அசுத்தமானவர். நீர் எழுந்து குளித்து வாரும்'' என்று கூறி அதைத் தர மறுத்துவிட்டார்.

பிறகு குளித்து வந்தவுடன் திருமறையை கையிலேந்தி, 'பிஸ்மில்லார்ரஹ்மானிர்ரஹீம்' (அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்) என்று ஓதியவுடன்...

'ஆஹா! என்ன தூய்மையான பெயர்கள்' என்று கூறி, தொடர்ந்து 'தாஹா| என்று தொடங்கி பதினான்காவது வசனம் வரை ஓதி முடித்துவிட்டு 'இது எவ்வளவு அழகான சொற்கள்! எவ்வளவு இனிமையான வசனங்கள்! எனக்கு முஹம்மதைக் காட்டுங்கள்!' என்று கேட்டுக் கொண்டார்.

உமரின் பேச்சைக் கேட்ட கப்பாப் (ரழி) வெளியேறி வந்து,

'உமரே! நற்செய்தி பெற்றுக் கொள்ளுங்கள். வியாழன் இரவு, 'அல்லாஹ்வே! உமர் அல்லது அபூஜஹ்ல் மூலமாக இஸ்லாமுக்கு உயர்வைக் கொடு!' என்று நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்திருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் செய்த பிரார்த்தனை உங்கள் விஷயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று நான் உண்மையில் நம்புகிறேன்' என்றுரைத்தார்.

நபி (ஸல்) அவர்கள் ஸஃபா மலையில் உள்ள இல்லத்தில் இருந்தார்கள். உமர் தனது வாளை அணிந்து கொண்டு நபி (ஸல்) அவர்களின் வீட்டை நோக்கி வந்தார்.

உமர் கதவைத் தட்டியபோது ஒருவர் கதவின் இடுக்கின் வழியாக உமரை வாள் அணிந்த நிலையில் பார்த்து நபி (ஸல்) அவர்களுக்கு அச்செய்தியைக் கூறினார். அங்கிருந்தவர்கள் எல்லாம் ஒன்று கூடிவிட்டார்கள். மக்கள் 'உமர் வந்திருக்கிறார்' என்று கூறினார்கள்,

'ஓ! உமரா! (வந்திருக்கிறார்?) அவருக்கு கதவை திறந்து விடுங்கள்! அவர் நன்மையை நாடி வந்திருந்தால் அந்த நன்மையை நாம் அவருக்குக் கொடுப்போம்! அவர் தீமையை நாடி வந்திருந்தால் அவரது வாளாலேயே அவரை நாம் கொலை செய்து விடுவோம்!' என்று ஹம்ஜா (ரழி) கூறினார்கள்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் வீட்டின் உள்பகுதியில் வஹி (இறைச்செய்தி) வந்த நிலையில் இருந்தார்கள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு உமரை சந்தித்த நபி (ஸல்) அவர்கள் உமரின் சட்டையையும் வாளையும் பிடித்து அவரைக் குலுக்கி 'உமரே! நீ வழிகேட்டிலிருந்து விலக மாட்டாயா? வலீதுக்கு ஏற்பட்டதைப் போன்ற கேவலத்தையும், தண்டனையும் அல்லாஹ் உனக்கு இறக்க வேண்டுமா? அல்லாஹ்வே! இதோ உமர் இப்னு கத்தாப் வந்திருக்கிறார். அல்லாஹ்வே! உமரால் இஸ்லாமிற்கு உயர்வைக் கொடு!' என்று கூறினார்கள்.

உமர் (ரழி) அவர்கள் "அஷ்ஹது அல்(ன்)லாயிலாஹ இல்லல்லாஹ் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்'' என்று கூறி இஸ்லாமைத் தழுவினார். (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அல்லாஹ்வின் தூதர் நீங்கள் என்றும் சாட்சி கூறுகிறேன் என்பதே இதன் பொருளாகும்.)

இதனைப் பார்த்த வீட்டில் உள்ளவர்கள் தக்பீர் (அல்லாஹு அக்பர் - அல்லாஹ் மிகப் பெயரிவன் என்று) விண்ணை முட்டுமளவு முழங்கினர். அந்த சப்தத்தைப் பள்ளியில் உள்ளவர்களும் கேட்டார்கள்.

மன மெய்யியலில் வியக்கத்தக்க விஷயம் வன்முறையின் மறுபக்கம் அன்புடைமை - ஆனால் " உள்ளங்களை புரட்டக்கூடியவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் நிலை பெறச் செய்வாயாக! அறிவிப்பாளர் அனஸ் (ரலி) நூல் :திர்மிதி 2066 என்கிறது இஸ்லாம்

மன மெய்யியல் 95

(மரணத்தை மறவாதே !)



ஒரு பெண்ணின் கணவன் இறந்து விட்டான். அவளுக்கு இளம் வயது, ஒரே ஒரு குழந்தை இருந்தது. அவள் தனது கணவனுடன் சிதையில் குதித்து உடன்கட்டை ஏற விரும்பினாள். ஆனால் இந்த சின்ன குழந்தை அதை தடுத்து நிறுத்தி விட்டது. அவள் அந்த குழந்தைக்காக வாழ்ந்தாக வேண்டும்.

ஆனால் கொஞ்ச நாளில் இந்த சின்ன குழந்தையும் இறந்துவிட்டது. இப்போது பாதிப்பு அதிகமாகி விட்டது. அவள் கிட்டத்தட்ட பைத்தியமாகி விட்டாள். "என்னுடைய குழந்தையை திரும்பவும் உயிர்ப்பித்து தரக் கூடிய மருத்துவர் யாரேனும் இங்கு உண்டா ? நான் அவனுக்காகவே வாழ்ந்தேன். ஆனால் இப்போது எனக்கு எனது முழு வாழ்வும் இருளாகி விட்டது" என்று கேட்டு அலைந்து திரிந்தாள்.

அப்போது புத்தர் அந்த நகரத்தின் வழியே வந்தார். அதனால் மக்கள் அவளிடம், “எங்களுக்கு எந்த மருத்துவரையும் தெரியாது. ஆனால் இதோ புத்தர் வருகிறார். இது ஒரு சிறந்த தருணம் நீ உனது குழந்தையை தூக்கிக் கொண்டு புத்தரிடம் செல். நீ இந்த குழந்தைக்காவே உயிர் வாழ்ந்தாய் என்பதைக் கூறி இப்போது இது இறந்துவிட்டது என் மேல் கருணை காட்டுங்கள். இவனை உயிர்பித்து தாருங்கள் நீங்கள் ஞானமடைந்தவர் என்று கேள்" என்றனர்

ஆகவே அவள் புத்தரிடம் சென்றாள். இறந்த குழந்தையின் உடலை புத்தரின் காலடியில் கிடத்தி,"இவனை உயிர்பித்து தாருங்கள். உங்களுக்கு வாழ்வின் அனைத்து மர்மங்களும் தெரியும். நீங்கள் பிரபஞ்சத்தின் உச்சியை தொட்டு விட்டீர்கள். இந்த ஏழை பெண்ணுக்காக ஒரு சிறிய அற்புதத்தை நீங்கள் செய்யக் கூடாதா?" என்று வேண்டினாள்.

புத்தர். "நான் செய்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை!" என்றார்.

அவள், "அது எதுவானாலும் நான் செய்கிறேன்" என்றாள்.

புத்தர். "அப்படியென்றால் சரி, நிபந்தனை இதுதான். இந்த நகரத்தைச் சுற்றி வந்து யார் வீட்டில் இது வரை சாவு எதுவும் நடக்கவில்லையோ அந்த வீட்டிலிருந்து கொஞ்சம் கருஞ் சீரகம் விதைகள் வாங்கி வா." என்றார்,

அந்த கிராமத்தில் கருஞ் சீரகம் அறுவடை செய்து வந்தனர். எனவே புத்தர் அவளிடம், "இந்த நகரத்தை சுற்றி வந்து.".. என்றார்.

அந்த பெண்ணால் இதை புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் ஒரு வீட்டிற்கு சென்று கேட்டாள். அவர்கள், "கொஞ்சம் கருஞ்சீரகம் என்ன புத்தரால் உனது குழந்தைக்கு உயிர் தர முடியுமென்றால் ஒரு மாட்டு வண்டி நிறைய கருஞ் சீரகம் வேண்டுமானாலும் தருகிறோம்.

ஆனால் எங்களது குடும்பத்தில் ஒருவர் அல்ல, ஏகப்பட்ட பேர் இறந்து போயிருக்கின்றனர். காலங்காலமாக நாங்கள் இங்கிருக்கிறோம். தாத்தாவுக்கு தாத்தா, தாத்தாவுக்கு பாட்டி, தாத்தாவின் அப்பா, தாத்தாவின் அம்மா, தாத்தா, பாட்டி என எல்லோரும் இறந்து விட்டிருக்கின்றனர்.

நாங்கள் பலர் இந்த குடும்பத்தில் சாவதை பார்த்திருக்கிறோம். ஆதலால் இந்த கருஞ்சீரகம் பயன் இல்லை. எந்த குடும்பத்தில் இது வரை சாவு விழ வில்லையோ' என்பதுதானே புத்தரின் நிபந்தனை என்றனர்.

அது ஒரு சிறிய கிராமம். அவள் ஒவ்வொரு வீட்டிற்க்கும் சென்று கேட்டாள். அந்த கிராமத்தில் உள்ள எல்லோரும் கருஞ்சீரகம் தர தயாராக இருந்தனர். "எவ்வளவு கருஞ் சீரகம் வேண்டும் உனக்கு? ஆனால் அந்த நிபந்தனை அதுதான் சாத்தியமற்றதாக இருந்தது. எங்களுடைய குடும்பத்தில் பலர் இறந்திருக்கின்றனர்.

மாலையில் அவள் புத்தரின் நடவடிக்கை பற்றி உணர்ந்தாள். மேலும் அவளுக்கு உண்மையையும் புரிந்தது. பிறக்கும் யாவரும் இறந்தே தீருவர் என்பது அவளுக்கு புரிந்தது. குழந்தையை திரும்ப உயிர்பித்து என்ன பயன் அவனும் ஒருநாள் இறந்தே தீருவான். அதற்கு பதிலாக எது பிறப்பதும் இறப்பதும் அற்றதோ அந்த அழிவற்ற ஞானத்தை தேட வேண்டியதுதானே என்பதை உணர்ந்தாள்,

மாலையில் அவள் வெறும் கையுடன் திரும்பி வந்தாள். புத்தர், "எங்கே கருஞ் சீரகம் ?" என்று கேட்டார்.

அவள் சிரித்தாள். காலையில் அவள் அழுதவண்ணம் வந்தாள். இப்போது சிரித்தாள். அவள், "நீங்கள் தந்திரம் செய்து விட்டீர்கள், பிறக்கும் யாரும் இறக்கத்தான் வேண்டும். இந்த கிராமத்தில் மட்டுமல்ல, இந்த உலகத்திலேயே யாரும் இறக்காத குடும்பமே கிடையாது, அதனால் நான் எனது மகளை உயிர்பித்துத் தர கேட்கப் போவதில்லை,

உயிர்பித்து என்ன பயன்? - சில தினங்களுக்குப் பிறகு, அல்லது சில நாட்களுக்குப் பிறகு, அல்லது சில வருடங்களுக்குப் பிறகு அவன் திரும்பவும் இறந்துவிடுவான். வாழும் அத்தனை வருடங்களும் அவன் துயரத்திலும் துன்பத்திலும் எல்லா விதமான

வேதனைகளிலும் இருப்பான். அவனைத் திரும்பவும் வாழ்வுக்கு கொண்டு வராத உங்களது கருணை மிகவும் பெரியது.

குழந்தையை மறந்து விட்டேன். எனக்கு தீட்சை கொடுங்கள். பிறப்பும் இறப்பும் நிகழாத அழிவற்ற, அந்த உலகத்தினுள் நான் செல்ல எனக்கு தியானமென்னும் வழி காட்டுங்கள்." என்றாள்.

புத்தர், " நீ மிகவும் புத்திசாலியான பெண். நீ அதை உடனே புரிந்து கொண்டு விட்டாய் "என்றார்.

புத்தர் அந்த பெண்ணிற்கு தீட்சை கொடுத்தார். அவள் புத்தரின் ஞானமடைந்த சீடர்களில் ஒருவராக விளங்கினாள். அவளது தேடுதல் அத்தகையது. அவளுக்கு என்னுடைய கணவன் இறந்து விட்டான், என்னுடைய குழந்தை இறந்து விட்டது, இப்போது என்னுடைய முறை, எந்த கணமும் நான் இறப்புக்கு பலியாகி விடலாம். இந்த நேரமில்லை, எந்த நேரமும் மரணம் வரும். எனவே நான் முழுமையாக இந்த தேடுதலில் ஈடுபடவேண்டும்,

ஒவ்வொரு கணமாக நாம் எண்ணமாக இருக்கும்போது, மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு கணமும் நாம் உடலாக இருக்கும்போது நாம் இறப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்த உடலில் இருந்தும், மனதில் இருந்தும் விடுதலை ஆகி ஆத்ம சொருபமாக இருக்கும்போது நாம் ஜனன மரண எல்லைகளை உடைத்துக்கொண்டு விடுதலை பெறுகிறோம்.இதுதான் ஞான வழி

உணருதலை ஞானம் என்றும் (wisdom) அறிதலை அறிவு (Knowledge) என்றும் மன மெய்யியலாளர் கூறுகின்றனர்

"ஞானம் என்பது ஒரு பிரமாண்டமான அனுபவம் அல்ல. ஞானம் என்பது ஒரு எளிய அறிவுப் பூர்வமான புரிதல் மட்டுமே.

ஞானம் பெறுவதற்கு பயிற்சியும் தேவை இல்லை, முயற்சியும் தேவை இல்லை. ஒரு நொடிப்பொழுது போதும் இதனை உணர்ந்து கொள்வதற்கு.

ஞானம் என்பது நம் அறிவு தன் எல்லையை புரிந்து கொள்ளுவது. நம் அறிவு தனக்கு எங்கே வேலை இருக்கிறது. தனக்கு எங்கே வேலை இல்லை என்று புரிந்து கொள்ளுவதுதான் ஞானம்.

மன மெய்யியல் 96

(போரிடாமலே வெல்லுவோம் !)



"போர்க் கலை (The Art of War) என்பது கிமு 5 ஆம் நூற்றாண்டு அளவில் சீன போர் இயல் மேதை "சுன் த்சு" என்பவரால் எழுதப்பட்ட நூல் ஆகும். இந்நூல் போர்க் கலையில் பயன்படும் மூல உபாயங்களையும், உத்திகளையும் சிறப்பாக விவரிக்கிறது. உலகின் முக்கிய போர் நுட்ப நூல்களில் இதுவும் ஒன்று.

இந்நூல் தன் காலத்தின் போர் வியூகம், உத்தி போன்ற போர் சார்ந்த செயல்களையும், யுத்தத்திற்கு செல்லும் வீரர்களுக்கு போர் வெறியைத் தூண்டுவது, அதனையே முரசு கொட்டி உசுப்பேற்றுவது போன்றவைகளை அடிப்படையாகக் கொண்ட நூலாக விளங்கியது. இந்நூலை, இன்றும் அதன் போரியல் உள்நோக்குக்காக பலரும் வாசிக்கின்றனர்.

போரிட்டுப் பெறுகின்ற வெற்றியினும் மிகப்பெரிய வெற்றி போரிடாமலேயே பெறுவது. போரிடும்போது நாம் நம் கை ஓங்கியது என நிரூபிக்கிறோம். ஆற்றல் விரயம் ஆகாமலேயே பெறுகின்றபோது தான் அது சிறப்பாக இருக்க முடியும்.

போரிடுகிறபோது வெறுப்பும், கோபமும் சேர்ந்து கொள்கிறது. எதிர்த்திசையிலிருந்து வெளிப்படும் வன்ம அதிர்வுகள் அதிகரிக்கின்றன.

நாம் முஷ்டியை முறுக்காமலேயே எதிரேயிருப்பவர்களை வெல்வதுதான் சிறந்த வீரம்,

நம்மைப் பார்த்தவுடன் வணங்கத் தோன்றுமளவுக்குக் கம்பீரம் இருக்க வேண்டும்.

தன்னம்பிக்கையும், துணிவும், நேர்மையும் இருக்கும்போது வெளிப்படும் எண்ணங்களே நம்மை உயர்த்திக் காட்டும்.

ஒரு போரின் போதும் அலி (ரலி) அவர்கள் பகை வீரன் ஒருவனுடன் கடும்போர் புரிந்தனர். அப்பொழுது அவன் அவர்களை தன் நீண்ட வாளால் தாக்கினான்.

அந்த தாக்குதலை தடுத்து அவர்கள் மறு அடி கொடுத்தார்கள் .அந்த அடி அவனை கீழே விழ வைத்தது. அவனை கொல்ல அவர்கள் வாளை ஓங்கினார்கள்.

அப்போது அவன் அவர்களின் முகத்தில் எச்சிலை உமிழ்ந்தான். உடனே அவர்கள் தம் வாளை உரையுள் விட்டார்கள். அவனை விட்டு விலகி, தன் முகத்தில் வழிந்த எச்சிலை துடைத்தார்கள்.

அதைக் கண்டு அந்த பகைவீரன் வியப்படைந்தான் .அதன்பின் அவனை அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை !

அவன் ஆச்சரியத்துடன் கேட்டான் "உம் முகத்தில் நான் எச்சில் உமிழ்ந்த பிறகும் என்னை ஏன் சும்மா விட்டீர் ? என்று கேட்டான்.

அதற்கு அலி (ரலி) அவர்கள் :

"நண்பரே..! நீர் எச்சில் உமிழ்ந்த மறுகணம் நான் ஆத்திரப்படாவே செய்தேன். ஆனால் உம்மை துன்புறுத்த எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதை உணர்ந்தேன் .

ஏனெனில், அவ்விதம் நான் உம்மை துன்புறுத்துவது எனக்கு தனிப்பட்ட முறையில் நீ செய்த தீங்கு பழிவாங்குவது ஆகிவிடும். எங்களிடம் அல்லாஹ் ஒப்படைத்து இருக்கும் இந்த மார்க்கத்திற்கு நாங்கள் உயிரை கொடுக்கவோ எடுக்கவோ ஆயத்தமாக இருக்கிறோம் .

ஆனால் எங்களுக்கு தனிப்பட்ட முறையில் செய்யப்படும் தீங்காக நாங்கள் ஒருவருடைய உரோமத்தை கூட தொட தயாராக இல்லை.

நீ என் மீது எச்சிலை உமிழ்ந்த பிறகு உம்மை நான் கொன்றால் ,அது எனக்காக செய்தது ஆகிவிடும். அல்லாஹ்வின் பெயரை சொல்லி போரைத் துவக்கி விட்டு, எனக்கு செய்யப்பட்ட பாதகத்திற்காக பழி தீர்த்துக் கொள்வது இஸ்லாமிய வீரமாகாது" என்றார்கள்.

பகை வீரன் இஸ்லாத்தை தழுவினார் .

இது மன மெய்யியல் சம்பந்தப்பட்டது. இந்த போர்க்குணம் குறித்து எந்தப் போர் கலை நூற்களிலும் இதுவரையிலும் குறிப்பிடவில்லை

மன மெய்யியல் 97

(மனதை உருக்கும் ஒரு புகைப்படம்)



கெவின் கார்ட்டர்- உலக புகழ்பெற்ற புகைப்படக்காரர். எல்லா சிறந்த புகைப்படக்காரர்களைப் போன்றே இவருக்கும் நல்ல புகைப் படங்களை எடுக்க வேண்டுமென்ற ஆசையும் ஆர்வமும் இருந்தது. இந்த ஆர்வம் அவரை நாடு,நகரம்,கிராமம், காடு, மலை என்று கொண்டு சென்றது.

1993 இல் இந்த ஆர்வம் அவரைத் தனது சக புகைப்படப் பத்திரிக்கையாளர்களுடன். சூடானுக்குக் கொண்டு சென்றது. அப்போது சூடான வரலாறு காணாத பஞ்சத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.

குறிப்பாக சூடான தென்பகுதி மக்கள் உண்ண உணவின்றி, பருக நீரின்றி பசி, தாகத்தில் தவித்துக் கொண்டிருந்தனர். பசி பஞ்சத்தில் தவிக்கும் மக்களின் நிலைகளைக் காமிராவில் பதிவு செய்ய கெவின் தொலைதூர கிராமங்கள் வரை சென்றார்.

இறுதியாக அவர் முயற்சி கைகூடியது. ஒரு நாள் தன் காமிராவை தோளில் தொங்க விட்டுக் கொண்டு உள்ளத்தை உலுக்கக் கூடிய படத்துக்கான காட்சியைத் தேடியலைந்து கொண்டிருந்தபோது அப்படிப்பட்ட காட்சி தென்பட்டது.

பசி பஞ்சத்தால் அடிபட்ட நோஞ்சன் நிலையில் உள்ள ஒரு சிறுமிக்கு நடக்க கூட இயலாத நிலையில், எலும்புக் கூடு போன்ற தன்னுடலை தவழ்ந்து இழுத்துக் கொண்டு மெல்ல மெல்ல ஊர்ந்து செல்வதைக் கண்டார். அந்தச் ஐக்கிய நாடுகளின் சபையின் சபை சார்பாக அமைக்கப்பட்டு இருந்த உணவு வழங்கும் முகாமை நோக்கி தள்ளாடியபடி தவழ்ந்து கொண்டிருந்தது உண்மையிலேயே அது இதயத்தைப் பிழியக் கூடியதாக இருந்தது.

தோளில் இருந்து காமிராவை இறக்கி கோணம் பார்த்த கெவினுக்கு இன்னொரு வியப்பும் காத்திருந்தது. ஆம்; அந்த எலும்பும் தோலுமான சிறுமிக்கும் பின்னாலேயே சிறிது தொலைவில் ஒரு பிணம் தின்னிக்கழுகும் சிறுமியின் மீது பார்வையை நிலை நிறுத்தியது.

எப்போது சிறுமியின் உடலை விட்டு உயிர் பிரியும்; மீதியுள்ள அந்தத் தோலையும் அதைச் சுற்றி இருக்கும் சிறிது மாமிசத்தையும் எப்போது சாப்பிடலாம் எனக் காத்திருந்தது பிணம் தின்னிக்கழுகு.

கெவின் கேமரா லென்சை கண்ணுக்கு ஒத்திக் சிறுமியையும் கழுகையும் ஒரு பிரேமில் அடக்கிக் கொண்டு 'கிளிக்' செய்தார்.

இப்போது அவரது புகைப்படக்கருவியில் மிக அரிதினும் அரிதான படம் பதிவாகி விட்டது. இதை விற்றால் நல்ல விலை கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் காமிராவைத் தோளில் மாட்டிக் கொண்டு தனது வண்டியை

ஸ்டார்ட் செய்தார்! பறந்து விட்டார். இந்த அரிதான படத்தை 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிக்கைக்கு விற்று விட்டார்.

வரலாற்றில் இந்த ஒரு புகைப்படம், உலக அரசியலையே திரும்பி பார்க்க வைக்கும் என்று கெவினுக்கு அப்போது தெரியாது. அதே புகைப்படம் தனக்கு உயிர் கொடுத்தவரான கெவின் கார்ட்டரையும் காவு வாங்கியிருக்கிறது. இது ஏதோ அரசியல் காரணங்களுக்காக நடத்தப் பட்ட கொலை அல்ல. மனதை உருக்கி, தன்னை வஞ்சகனாக உணர வைத்து, உயிரையே குடித்த ஒரு சோகக் கதை.

இந்தப் புகைப்படம் 1993 மார்ச் திங்கள் 26 ஆம் தேதி நாள் காலை நாளிதழில் முதல் பக்கத்தில் வெளியானது. இந்தப் படத்தைப் பார்த்ததும் அசல் வாசகர்கள் பத்திரிக்கை அலுவலகத்திற்கு தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டனர்.

அனைவரும் ஒரே கேள்வியைத்தான் கேட்டனர். புகைப்படத்தில் உள்ள சிறுமி என்ன ஆனாள்? அவள் உயிருடன் பிழைத்தாளா அல்லது இறந்து விட்டாளா? இந்தக் கேள்விக்கான பதில் பத்திரிக்கையின் தொலைப் பேசி ஆப்ரேட்டரிடமோ படத்தை எடுத்த கெவின் கார்ட்டர்டமோ இல்லை.

1994,மே 23அந்த பெரும் கை தட்டல்களுக்கு இடையே கெவின் கார்ட்டர் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் பிரம்மாண்டமான அரங்கில் இந்த அரிதான புகைப்படத்திற்கான புலிட்சர் விருதைப் பெற்றுக்கொண்டார் இந்த விருது புகைப்படத் துறையில் நோபல் விருதுக்கு இணையானது.

விருது பெற்ற சில நாட்களுக்குப்பின் கெவின் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார். கெவினுக்கும் அங்கு இருந்த பிணம் தின்னிக் கழுகுக்கும் என்ன வேற்றுமை? இரண்டும் ஒரே விதமாகத்தான் செயல்பட்டுள்ளனர்.

'குறைந்தபட்சம் புகைப்பட நிபுனர் கெவின் அந்த சிறுமிக்கு ஒரு வாய் தண்ணீர் தந்து உயிரைக் காப்பாற்றி இருக்கலாம்; அல்லது தனது வலுவான கைகளினால் அந்தச் சிறுமியைத் தூக்கிச் சென்று உணவளிக்கும் அமைப்பு அலுவலகத்தின் வாயிலிலாவது சேர்த்து இருக்கலாம்; கல்லெடுத்து வீசி அந்தக் கழுகையாவது விரட்டி இருக்கலாம்; ஆனால் இவற்றில் எதையும் செய்யாமல் வெறும் ஒரு புகைப் படத்தை எடுத்தார்; அதை அதிக விலை தந்த பத்திரிக்கைக்கு விற்று விட்டார் என்று ஒருவர் மீது குற்றம் சாட்டியதுதான் காரணம்.

நாம் பல நேரங்களில் புகைப்படங்களைப் பார்க்கும் போது மிக எளிதாகக் கடந்து போய் இருப்போம். ஆனால் கெவின் கார்ட்டர் எடுத்த புகைப்படம் உலகில் உள்ள யாரையும் எளிதாகக் கடந்து போகும்படி அனுமதிக்கவில்லை.

சோகம், வலி, உயிருக்கான போராட்டம், பஞ்சம் என்ற ஒட்டு மொத்தத்தையும் ஒரு புகைப்படம் கண நேரத்தில் காட்சிப் படுத்தி இருக்கிறது. அந்தக் காட்சிதான் ஒரு நாட்டின் வறுமையை உலக நாடுகளுக்கு எடுத்துச் சென்ற ஒரு ஊடகமாகவும் மாறிப்போனது.

இரண்டு மாதப் பின் கடற்கரைக்கு அருகில் அவரது கார் நின்று கொண்டிருந்தது. அதில் அவர் பிணமாகக் கிடந்தார். அவருக்கு நேர்மையும், தூய உள்ளுணர்வும் இயற்கையில் ஈரமான இதயமும் அமையப் பெற்றிருந்ததால்தான் அவருக்குக் குற்ற உணர்வு தோன்றியது.கெவின் தற்கொலை செய்துகொண்டார்.

அவரது பிணத்திற்கு அருகில் காவல்துறைக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில் சில வரிகளே இருந்தன.

முதல் வரி " I am Really, Really Sorry...

நாம் எவராக இருந்தாலும் சரி நண்பர்களே..! நம்மிடம் மனிதம் இல்லை என்றால் நாமும் மிருகத்திற்கே ஒப்பாவோம் "

மன மெய்யியல் 98

(இடையரும் இடைத்தரகரும்)



ஜலாலுதீன் ரூமி (ரஹ்) அவர்கள் (ரூமி அவர்கள் இன்று பிறந்த தினம்) கூறிய உருவகக் கதை ஒன்று உண்டு.

ஓர் ஆடு மேய்க்கும் சிறுவன் பிரார்த்தனை செய்வதை மோசஸ் கேட்க நேர்ந்தது.

அவன் "கடவுளே! நான் உன்னுடைய சேவகனாக விரும்புகிறேன். கிழிந்த உன் காலணிகளைத் தைக்கவும், உன் தலைமுடியை சீப்பால் வாரி விடவும் நான் செய்வேன்.

உன்னுடைய துணிகளைத் துவைக்கவும், உன்னுடைய பேன்களைக் கொல்லவும் விரும்புகிறேன். உனக்குத் தினமும் பால் கறந்து தருவேன். உன் சின்னக் கைகளை முத்தமிடுவேன்.

உன் பாதங்களைத் தேய்த்து விடுவேன். நீ தூங்கும்போது உன் சின்ன அறையைப் பெருக்கி மெழுகுவேன்!"

இதைக் கேட்டதும் மோசஸுக்குக் கோபம் வந்தது. "நீ யாரிடம் பேசுவதாக நினைத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கத்தினார்.

அதற்கு அந்த இளைஞன், "நம்மைப் படைத்து வானமும், பூமியும்

தெரியும்படி செய்தவரிடம் பேசிக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

அதற்கு மோசஸ் "நீ பேசுவது நாத்திகம். நீ இப்படிப் பேசினால் வானத்தில் இருந்து ஒரு நெருப்புத்துண்டம் விழுந்து நம்மையெல்லாம் எரித்துவிடும்.

நீ சொல்லுகின்ற மாதிரி சேவைப்பணிகள் மிகப் பெரிய அருளாளனான ஆண்டவனுக்குத் தேவையில்லை. நீ ஏதோ உன்னுடைய தாய்மாமனிடம் பேசுவது போலல்லவா பேசுகிறாய்?

கடவுளுக்கு உடல் சம்பந்தப்பட்ட தேவைகள் இருப்பதைப் போலவும் நீ பேசுகிறாயே" என்று கடிந்து அவனுடைய அங்கி உடைகளைக் கிழித்து பாலைவனத்துக்குள் துரத்தினார்.

சிறிது நேரம் கழித்து வானத்திலிருந்து ஓர் அசரீரி கேட்டது. அது மோசசைப் பார்த்து "என்னுடைய சேவகனை ஏன் என்னிடம் இருந்து பிரிக்கின்றாய்? இணைக்க வந்தாயா? பிரிக்க வந்தாயா? நான் ஒவ்வொருவருக்கும் அவர்களுக்குரிய வெளிப்படுத்துதலைத் தந்திருக்கின்றேன்.

அவர்கள் தங்களுக்குள்ள முறையில் வழிபடும் போது நான் மகிழ்கிறேன். வேறொருவரைப் போல பாவனை செய்யும் போது அவர்களுக்குப் பழி வந்து சேருகிறது. இந்த இடையனுக்குத் தேனாக இருந்த வார்த்தைகளே உனக்கு விஷமாக இருக்கிறது நான் தூய்மைக்கும், தூய்மையற்ற தன்மைக்கும் அப்பாற்பட்டவன். இதயத்தின் சாரமே முக்கியம். வார்த்தைகள் வெறும் விபத்துதான்.

நான் எத்தனை சொற்களையும், கருத்துகளையும், அடைமொழிகளையும் தாங்கிக் கொள்வேன்? உண்மையான கசிந்துருகுதலே எனக்குத் தேவை. ஓர் உண்மையான நேசன் என்னைப் பற்றிப் பேசும்போது தவறு இழைத்தால் அவனைத் திருத்தாதே. அவன் வார்த்தைகளை என்னால் புரிந்து கொள்ள முடியும்."

ரூமியின் கதை எவ்வளவு அழகானது வழிபடுவதற்கு வரை முறைகள் இல்லை. நெறிமுறைகளும் தேவையில்லை. அன்பு ஒன்று ஐக்கியமானால், இறைமை மாணிக்கவாசகர் கூறுவது போல அரும் பெரும்

ஜோதியாகவும் மாறும். வள்ளலார் கூறுவதைப் போல அருட் பெரும் ஜோதியாகவும் மாறும். அதனால்தான் இறைமை அன்பெனும் பிடிக்குள் அடங்குகின்ற கடலாக இருக்கிறது.

டால்ஸ்டாய் போல சாஸ்திரங்கள் சொன்னபடி வழிபட்ட போதகர் கப்பலிலே பயணம் செய்தார். ஆனால் தங்களுக்குத் தோன்றியபடி வழிபட்ட மூன்று வயோதிக தீவுவாசிகள் தண்ணீரின் மீது ஓடி அவரைச் சந்தித்தார்கள்.

திபெத்தியக் கதை ஒன்று உண்டு ஒரு வயதான பெண்மணி இந்தியாவிற்கு வியாபாரம் செய்யச் சென்ற ஒருவனிடம் ஒரு துறவியின் ஞாபகார்த்தமாக எதையாவது கொண்டு வர வேண்டுகோள் விடுத்தாள்.

அவளது மூட நம்பிக்கையை நினைத்து மனத்தில் சிரித்துக்கொண்டு வருகின்ற வழியில் இறந்துகிடந்த ஒரு நாயின் தாடை எலும்பை பட்டுத் துணியால் மூடி அவளிடம் கொடுத்தான். அவளோ அதை முழு நம்பிக்கையோடு வாங்கி வணங்கினாள்


சில நாட்கள் கழித்து அந்த வியாபாரி அந்தப் பெட்டியில் இருந்து வெளிச்சக் கதிர்கள் வெளிவருவதைக் கண்டான்

நம்பிக்கை இருந்தால் எல்லா மொழிகளுமே அர்ச்சனை மொழிகள்தான். எல்லா உச்சரிப்புகளுமே மந்திர உச்சாடனம் தான்

(ஏழாவது அறிவு - வெ.இறையன்பு பதிவிலிருந்து)

மன மெய்யியல் 99

(எண்ணிக்கை முக்கியமல்ல; உறுதியான எண்ணம்தான் முக்கியம்)



எண்ணிக்கை முக்கியமா ? எண்ணம் முக்கியமா ? என்கின்ற கேள்வி வெகு நாட்களாக நம்மிடம் இருந்து வருகிறது எண்ணிக்கையே முக்கியம் என்றால் காகம் தான் நம்முடைய தேசிய பறவையாக இருக்க வேண்டும் என்று அறிஞர் அண்ணா ஒரு முறை குறிப்பிட்டார்.

ஒரு துளி தயிர் ஒரு பானைப் பாலை தயிராக்கிவிடும். ஒரு சொட்டு நறுமண திரவியம் ஓர் அறையை சுகந்தமாக்கிவிடும். ஒரு நல்ல மணமுள்ள மலர் தோட்டத்தையே அழகாக்கி விடும். எனவே நாம் தலைகளை எண்ண வேண்டிய தேவையில்லை. எத்தனை பேர் உண்மையிலேயே முழு ஈடுபாட்டுடன் கலந்து கொள்கிறார்கள் என்பது தான் முக்கியம்.

இஸ்லாமிய வரலாற்றில் முக்கிய நிகழ்வாக கருதப்படும் பத்ரு போர் ஹிஜ்ரி 2 ம் ஆண்டு ரமலான் 17ம் நாள் மதீனாவிலிருந்து சுமார் 150 கி.மீ தொலைவிலுள்ள பத்ரு என்னும் இடத்தில் பலம் குன்றிய சுமார் 313 பேர்கள் கொண்ட இஸ்லாமிய படைக்கும்...

பெரும் எண்ணிக்கையிலும் போர் தளவாடங்களுடன் இருந்த 1000 க்கும் மேற்பட்ட இறை நிராகரிப்பாளர்களுக்கும் மத்தியில் பத்ரு யுத்தம் நடைபெற்றது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், அல்லாஹ் இஸ்லாமிய படைக்கு பெரும் வெற்றியை வழங்கினான். இப்போரிலிருந்து பெற வேண்டிய படிப்பினைகள் 'எண்ணிக்கை முக்கியமல்ல; உறுதியான எண்ணமே முக்கியம்'

நீங்கள் தாழ்ந்த நிலையில் இருந்தபோது அல்லாஹ் 'பத்ரு'க் களத்தில் உங்களுக்கு உதவி செய்தான். எனவே நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அல்லாஹ்வை அஞ்சுங்கள்! (குர்ஆன் 3:123)

"எத்தனையோ சிறு படைகள், பெரும் படைகள் பலவற்றை அல்லாஹ்வின் விருப்பப்படி வென்றுள்ளன. சகித்துக் கொள்வோருடன் அல்லாஹ் இருக்கிறான்' என்றனர்.குர்ஆன் 2:249

நம்பிக்கை கொண்டு அதில் உறுதியாக இருந்தால் அல்லாஹ்வின் உதவியும் பாதுகாப்பும் நமக்கு கிடைக்கும்

பத்ரு போர் நடைபெறுவதற்க்கு முன் நபிகள் நாயகம் (ஸல்) துஆ செய்தார்கள் அதை அல்லாஹ் ஏற்றுக்கொண்டான்,

அப்போது வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், "நீங்கள் உங்கள் இறைவனிடம் பாதுகாப்புக் கோரியபோது "உங்களுக்குப் பின்னால் அணிவகுக்கும் ஆயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுக்கு நான் உதவி செய்வேன்' என்று அவன் உங்களுக்குப் பதிலளித்தான் (குர்ஆன் 8:9) எனும் வசனத்தை அருளினான் முஸ்லிம் 3261

எதிரிகளைக் எண்ணிக்கையில் குறைத்துக் காட்டியது ஏன்?

போர்க்களத்தில் சந்தித்துக் கொண்ட இரு அணியினருக்கும் எதிர்த் தரப்பைக் குறைந்த எண்ணிக்கையினராக அல்லாஹ் காட்டியதாக இவ்வசனத்தில் (8:44) கூறப்படுகிறது.

"நீங்களும் அவர்களும் (போரில்) சந்தித்தபோது அவன் உங்களுடைய பார்வையில் அவர்களுடைய எண்ணிக்கையைக் குறைவாகக் காண்பித்தான்; இன்னும் உங்கள் (தொகையை) அவர்களுடைய பார்வையில் குறைவாகக் காண்பித்தான் -

இவ்வாறு அவன் செய்தது, அவன் விதித்த ஒரு காரியத்தை அவன் நிறைவேற்றுவதற்காகவேயாகும் - அல்லாஹ்விடமே எல்லாக் காரியங்களும் சென்று முடிவடைகின்றன. (குர்ஆன் : 8:44)

அதாவது முஸ்லிம்களின் கண்களுக்கு எதிரிகளைக் குறைந்த எண்ணிக்கையினராகவும், எதிரிகளின் கண்களுக்கு முஸ்லிம்களைக் குறைந்த எண்ணிக்கையினராகவும் அல்லாஹ் காட்டினான்.

எதிரிகளின் கண்களுக்கு முஸ்லிம்களை அதிகமாகக் காட்டினால் எதிரிகளுக்குக் கலக்கம் ஏற்பட்டு அவர்கள் ஓட்டம் எடுத்திருப்பார்களே? ஏன் அப்படிச் செய்யவில்லை என்ற சந்தேகம் உங்களுக்கு எழலாம்.

போர் நடக்காமல் போர்க்களத்தில் இருந்து எதிரிகள் பின்வாங்கி ஓட்டம் பிடிக்க வேண்டும் என்பது அல்லாஹ்வின் நோக்கமாக இருந்தால் அவன் அப்படித் தான் செய்திருப்பான்.

போர் நடந்து, முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்பது அல்லாஹ்வின் நோக்கமாக இருந்தது. எதிரிகளின் எண்ணிக்கையை எதிரிகளுக்கு அதிகமாகக் காட்டினால் நாம் தான் வெற்றி பெறுவோம் என்ற உறுதி எதிரிகளுக்கு ஏற்படும். பின் வாங்காமல் களத்தில் இறங்குவார்கள்.

தங்களை விட எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாகத் தெரிந்தால் (முஸ்லிம்கள்) நாம் தோற்று விடுவோம் என்று அஞ்சி போரிடாமலே ஓட்டம் பிடித்து விடுவார்கள்.

போர் நடந்து ஆக வேண்டும் என்பது இறைவனின் திட்டமாக இருந்ததால் இரு தரப்பினருக்கும் மற்ற தரப்பினரைக் குறைத்துக் காட்டினான். இதனால் போர் செய்தே ஆகவேண்டும் நாம் தான் வெல்வோம் என்ற உத்வேகம் இரு தரப்புக்கும் ஏற்பட்டது.

ஆனால் இது போர் துவங்குவதற்கு முன்னர் இருந்த நிலையாகும்.

எதிரிகள் களத்தில் இறங்கிய பின்னர் அவர்கள் உள்ளங்களில் பீதியை ஏற்படுத்துவதற்காகவும், முஸ்லிம்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவதற்காகவும் நிலைமையை அல்லாஹ் தலைகீழாக மாற்றினான்.

போர் துவங்கும் முன்னர் இருந்தது போலவே போர் நடக்கும் போதும் எதிரிகள் முஸ்லிம்களின் கண்களுக்குக் குறைவாகவே தெரிந்தனர்!

ஆனால் , எதிரிகளின் கண்களுக்கு முஸ்லிம்களை இரு மடங்காக அல்லாஹ் காட்டினான். நாம் நினைத்தது தவறாகி விட்டதே என்ற கலக்கம் ஏற்பட்டு எதிரிகளின் மனஉறுதி குலைந்து போனது. இதனால் அவர்கள் தோல்வியைத் தழுவினார்கள்.

இதை 3:13 வசனத்தில் அல்லாஹ் சொல்லிக் காட்டுகிறான்.

(பத்ரு களத்தில்) சந்தித்த இரு சேனைகளிலும் உங்களுக்கு ஓர் அத்தாட்சி நிச்சயமாக உள்ளது; ஒரு சேனை அல்லாஹ்வின் பாதையில் போரிட்டது; பிறிதொன்று நிராகரிப்போராக இருந்தது;

நிராகரிப்போர் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவோரைத் தங்களைப்போல் இரு மடங்காகத் தம் கண்களால் கண்டனர்; இன்னும், அல்லாஹ் தான் நாடியவர்களுக்குத் தன் உதவியைக் கொண்டு பலப்படுத்துகிறான்; நிச்சயமாக, (அகப்) பார்வை யுடையோருக்கு இதில் திடனாக ஒரு படிப்பினை இருக்கிறது.(குர்ஆன் : 3:13)

எண்ணிக்கை முக்கியமல்ல; உறுதியான எண்ணம்தான் முக்கியம் இதைத்தான் இறைவன் நம்மிடம் எதிர்ப்பார்கிறான்

மன மெய்யியல் 100

(ஆதார நூற்கள்)



இந்த பதிவு முன்னுரையில் முதலில் “மனம் என்றால் என்ன” என்பது பற்றி விரிவாக காணலாம். மனம் குறித்து நிறைய தொடர் பதிவுகள் எழுதி என் தளத்தில் பதிந்துள்ளேன். இருந்தாலும் மன மெய்யியல் என்ற இந்தத் துறையும் சொல்ல வேண்டும் என்று தொடங்கி தொடர் மன மெய்யியல்,

மனம் என்பது இதயத்தில் காணப்படுவதாக பலர் கூறுகின்றனர். ஆனால், அது உண்மையல்ல, மனமானது மூளையுடன் தொடர்புடையது என்கிறார்கள் உளவியலாளர்கள்

நாம் ஐம்புலன்களால் உணர்பவற்றை மூளையே சிந்தித்து மனதின் செயற்பாடுகளை வெளிக்கொண்டு வருகின்றது. இது மூளையுடன் சம்பந்தப்பட்டது என தற்காலத்தில் மூளை நரம்பியல் ஆய்வுகளில் கூட நிரூபிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக மனம் என்பது நம் அனுபவங்கள் மூலமும், சமூக தாக்குதல்கள் மூலமும் மற்றும் நம்முடைய பரிணாம பயணத்தின் மூலமும் வடிவமைக்கப்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

மனமானது நான்கு பணிகளை செய்யும்போது நான்கு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

1. மனம்: சந்தேகம் எழும்போது மனதிற்கு மனம் என்ற பெயர். எதையும் உறுதியாக தீர்மானிக்க இயலாத குழப்பிய மனநிலை இது ஆகும்.

2. சித்தம்: பார்த்தவைகள், கேட்டவைகள், உணர்ந்தவைகள் என வாழ்க்கையில் பெறுகின்ற அனுபவங்கள் அனைத்தும் பதிவுகளாக மனதில் சேமிக்கப்படுகிறது. அந்த சேமிப்பு நிலையமாக திகழும் மனது சித்தம் எனப்படுகிறது.

3. புத்தி: ஒரு விடயத்தில் குழம்பிய நிலையில் உள்ள, சேமிப்பு நிலையமான சித்தத்தில் உள்ளவற்றை கொண்டு தெளிவடைதல். ஒருவேளை சித்தத்தில் தகவல் ஏதும் இல்லையென்றால், எவ்வாறு அந்த விடயத்தில் தெளிவடையும் மனமே புத்தி ஆகும்.

4. அகங்காரம்: மேற்கூறிய மூன்று படிநிலைகளின் மூலமாக ஒருவரை அல்லது ஒருப்பொருளை அறியும்போது அதாவது நான் என்ற உணர்வாக நிகழும்போது மனம் அகங்காரம் எனப்படுகிறது.

நவீன மனவியலாளர்கள் மனதை இன்னும் கூட விரிவாக சொல்லப்பட வேண்டி உருவாக்கப்பட்ட தத்துவம்தான் "மன மெய்யியல் " என்பது மனதின் தன்மை, மனம் சார்ந்த தொடர்புகள், மனச்செயற்பாடுகள்,

மனப்பொருள், நனவு நிலை மற்றும் பௌதீக உடல், மூளை இவற்றுக்கிடையேயான உறவுப் பற்றி கற்கும் மெய்யியலின் ஒரு பகுதி ஆகும்.

உளவியல் அல்லது மனோதத்துவம் சமூக அறிவியற் துறைகளுள் ஒன்றாகும். உளவியற் செயற்பாடுகள், நடத்தைகள் ஆகியவை பற்றிய அறிவியற் கல்வி ஆகும்.

மன அழுத்தம் என்பது :நமது தினசரி வாழ்க்கையில் ஒரு மாற்றத்தையே அல்லது நாம் சமாளிக்கும் திறமைக்கு சவாலாக மனதில் ஏற்படுகின்ற விரும்பத்தகாத உணர்வு மன அழுத்தம் எனப்படும்.

மன அழுத்தத்தின் வெளிப்பாடுகள் :

கோபம்

பயம்

வெறுப்பு

கவனமின்மை

கவலை

சந்தேகம்

மன அழுத்தத்திற்கான காரணிகள்

வாழ்வில் திடீரென ஏற்படும் எதிர்மறையான மாற்றம்.

நிர்ப்பந்தம்.

முரண்பாடுகள்.

கௌரவம்.

ஒப்பிடும் மனப்பான்மை.

எதார்த்தமில்லாத இலக்குகள்.

உறவு முறைகளில் விரிசல்.

ஒன்றுக்கு மேற்பட்ட ஆசைகள்.

மன அழுத்தத்தை குறைக்கும் வழிகள்

செய்யும் தொழிலை முழு ஈடுபாட்டுடன் செய்தல்.

அடுத்தவர் உணர்வுகளை மதித்தல்.

சுய ஒழுக்கம்.

தியானம்.

திறந்த மனதோடு ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை.

எளிதில் கோபப்படாதிருத்தல்.

சுயநலமின்றி செயற்படுதல்.

நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்ளல்.

இசைப் பாடல்களை இரசித்தல்.

இத்தனையும் கலந்து சொல்வதற்கு ஏதுவாக முன்னாள் நாம் படித்த சூஃபிக் கதைகள், நீதிக்கதைகள், தென்னாலி ராமன் கதைகள், நன்னெறி கதைகள், முல்லா நசிருத்தீன் கதைகள், ஜக்கிவாசுதேவ், சுகபோனந்தா, ஓஷோ போன்ற இன்னும் நிறைய புத்தகங்கள், .. (படத்தை பார்க்கவும்) (லைப்ரரியில் எடுத்த புத்தகங்கள் படத்தில் காட்டப்படவில்லை).போன்ற புத்தகங்களில் சொல்லப்பட்ட கதைகளை இஸ்லாமிய விளக்கத்துடன் சொல்ல வேண்டும் என்ற காரணத்திற்காக புஹாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களையும் பயன்படுத்தி, மனமெய்யியல் பதிவின் ஒவ்வொன்றிலும் இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகளை சொல்லி அநேக கட்டுரைகளை நிறைவு செய்துள்ளேன்.

இந்த சின்ன சின்ன புத்தகங்களையெல்லாம் ரயிலில், பஸ்ஸில் பிரயாணம் போகும்போது, நான் உட்கார்ந்து இருக்கும் இருக்கைக்கு தேடி வந்து பெரிய புத்தகக் கட்டை கொண்டுவந்து தருவார்கள்.

விலை ரூ 10 க்கு நான் விரும்பி தேர்ந்தெடுத்த இப்புத்தகங்கள்தான் அநேக எனது தொடர் பதிவுகளுக்கு உதவியிருக்கின்றன. அதே மாதிரி இந்த மெய்யியல் தொடர்பதிவுகளுக்கு இவைகள் ஏகமாக உதவியதில் அதை விற்பனை செய்த அந்த முகமறியாத அந்த சிறுவர்களை நன்றியுடன் இத்தருணத்தில் நினைவு கூறுகிறேன்.

மன மெய்யியல் தொடர்பதிவு இத்துடன் இனிதே நிறைவு பெறுகிறது.

ரஹ்மத் ராஜகுமாரன்

M Ahmed Kabeer

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு.

மன மெய்யியல் தொடர் மிகவும் உபயோகமாகவும் பிரயோஜனமாகவும் இருந்தது.

பலருடைய பல மன பிம்பங்களை வெளிப்படுத்திய படியும்,

பலருக்கு அவர்களுடைய மனதை அவர்களுக்கே வெளிச்சம் போட்டு காட்டும்படியும்,

இப்படியெல்லாம் இருக்கனும்

இப்படியெல்லாம் இருக்க கூடாது,

எப்படி எல்லாம் இருக்கனும்

எப்படி எல்லாம் இருக்க கூடாது என

எந்த சமரசமும் இல்லாமல் நெத்தியடி பதிவாக இருந்து மாஷா அல்லாஹ்.

நாற்பதாவது (நாற்பதா இருபதா என நினைவில் இல்லை) தொடரில் தாங்கள் தொடரை நிறுத்தியபோது,

தொடர்ந்து எழுதுங்கள் ஹாஜியார் என அடியேன் கோரிக்கை வைத்தபோது,

ஒன்னுத்துக்கும் ஆகாத இந்த அடியேனின் கோரிக்கையை ஏற்று,

இன்று முதல் செஞ்சுரி 100 பதிவு தொடரை நிறைவு செய்துள்ளீர்கள்.

மிக்க நன்றிகள் ஹாஜியார்.

இப்போதும் ஒரு கோரிக்கை உங்கள் முன்னால் மக்கள் சார்பாக வைக்கிறேன்.

கத் அஃப்லஹ மன் ஜக்காஹா

யார் தங்களுடைய உள்ளத்தை பரிசுத்தப்படுத்தி தூய்மை படுத்திக்கொள்கிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர்கள்

அல் குர்ஆன்.

அல்லாஹ் சொல்வதைப்போல மனதை பரிசுத்தப்படுத்த உதவும் மன மெய்யியல் தொடர் இன்னும் 100 தொடர்கள் தாங்கள் வழங்க வேண்டும் (இன்ஷா அல்லாஹ்).

என அன்பு வேண்டுகோள் வைக்கிறோம்.

அல்லாஹ் தங்கள் இல்மிலும் ஆரோக்கியத்திலும் பரகத் செய்து,

உங்களைக்கொண்டு இன்னும் இந்த சமுதாயம் பயன்பெற அல்லாஹ் உதவி செய்வானாக ஆமீன்.

Rahmath Rajakumaran

M Ahmed Kabeer எந்தவொரு பதிவும் இதுதான் முடிவு என்று ஒரு எல்லைக் கோட்டை காட்ட யாராலும் முடியாதுதான். மன மெய்யியல் தொடரைப் பொறுத்தவரை இன்னும் எண்ணிக்கை இல்லாத பதிவுகளாக சொல்லிக்கொண்டே போகலாம். இருப்பினும் மற்ற Subject களைப் பற்றி ஆய்வும் தேவை.

எப்போவோ நான் சொன்ன திருக்குர்ஆனின் இதயம் யாஸீன் தான் என்று சொன்னதை அருமை நண்பர் ஒருவர் அதைத் தொடராக போடச் சொல்லி வலியுறுத்தி யுள்ளார்.

இதயத்தின் செயல்முறைகளையும் , யாஸீன் சூராவில் சொல்லப்பட்ட விஷயங்களும் இதய செயல்பாட்டோடு ஒத்துபோகும் என்று என் அடி மனதிலிருந்து ஒரு பட்சி சொல்லிக் கொண்டே இருக்கிறது !

இருப்பினும் நேற்றிரவு புதியதாக Digital சுவர் கடிகாரம் தஹ்ஜத் தொழுகைக்கு நேரம் பார்க்க வசதியாக இருக்கும் என்று வாங்கி மாட்டும் போது சுமார் 5 அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்து இடதுகை ஆள்காட்டி விரல் நன்றாக மடங்கி, இரத்தம் கன்றிப் போய் வேதனையில் படுத்துள்ளேன். நல்லவேளை வலது கை ஆட்காட்டி விரல் பாதிக்கப்படவில்லை இதனைக் கொண்டு பதிவு எழுத முடிகிறது.

வலியும் மன வேதனையும் அந்த ஆய்வுக்கு பெரும் தடையாக இருக்கிறது . துஆ செய்யுங்கள் இரண்டொரு நாளில் சரியாகி, தயாராகி களம் காண வேண்டும்

QUICK NOTES ---: IT'S BEST TO USE A PENCIL

DATE THIS BOOK WAS MADE 29/09/2024 @ MOPH HEAD OFFICE 6;30PM